4

# திருக்குறள் சொற்பொருள் சுரபி

## Thirukkural Concordance



புலவர். என். வி. கலைமணி, எம். ஏ.,

# திருக்குறள் சொற்பொருள் சுரபி

# [Thirukkural Concordance]

புலவர் **என்.வி. கலைமணி**, எம்.ஏ.,

**வள்ளலார் நூலகம்**

34, பார்த்தசாரதி நகர், 2-வது தெரு,

ஆதம்பாக்கம், சென்னை - 600 088.

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | திருக்குறள் சொற்பொருள் சுரபி (Thirukkural Concordance) |
| ஆசிரியர் | : | புலவர் என்.வி. கலைமணி, எம்.ஏ., |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாளர் | : | புலவர் என்.வி.கலைமணி |
| பொருள் | : | திருக்குறள் சொற்பொருள் சுரபி |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| முதற்பதிப்பு | : | டிசம்பர் 2005 |
| நூலின் அளவு | : | 1/8 டெம்மி |
| நூல் வெளியீடு | : | வள்ளலார் நூலகம்<br>34, பார்த்தசாரதி நகர், 2-வது தெரு,<br>ஆதம்பாக்கம், சென்னை - 600 088.<br>அலைபேசி : 9283455951 |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கங்கள் | : | 272 |
| தாள் | : | வெள்ளைத் தாள் |
| பைண்டிங் | : | கார்டு போர்டு |
| விலை | : | ரூ. 90 |
| ஒளி அச்சு | : | லேசர் இம்ப்ரெஷன்,<br>சென்னை - 600 030.<br>தொலைபேசி : 2646 0021 |
| அச்சிட்டோர் | : | மல்ட்டி மீடியா கிராபிக்ஸ்<br>சென்னை - 600 024.<br>தொலைபேசி : 2481 6904 |

## உள்ளே உள்ளவை


1. பதிப்புரை : திருக்குறளுக்கென ஓரகராதி (Thirukkural Concordance) ..... 4
2. ஆசிரியர் எண்ணம் : திருக்குறளை எழுதிட திருவள்ளுவர் வெண்பாவை ஏன் தேர்ந்தெடுத்தார்? ..... 9
3. திருக்குறள் வடிவமைப்பில் திருவள்ளுவர் சிந்தனைகள் ..... 15
4. திருக்குறள் சொற்பொருள் சுரபி (Thirukkural Concordance) ..... 19
5. அறிஞர்கள் பார்வையில் திருக்குறளின் அருமை - பெருமைகள்! ..... 201
6. வள்ளல் பெருமானின் திருக்குறள் ஆய்வு ..... 202
7. தொல்காப்பியமும் - சங்க நூற்களும் : ..... 204 திருவள்ளுவர் பெருமானும்
8. திருக்குறளில் வடசொற்கள் எவை: கீதை, மனு, அர்த்த சாத்திரம் கலப்புள்ள நூலா திருக்குறள்? ..... 205
9. ஸூத்திர பாஷ்யத்தில் சங்கராச்சாரியார்! ..... 207
10. 'கபிலரகவல்'பற்றி திரு.வி.க. கருத்து ..... 208
11. திருக்குறள் ஞான மரம்! வாழை மரம்! திருக்குறள்பீடம் அழகரடிகள் ..... 209
12. பாவேந்தர் திருக்குறள் உரை ..... 214
13. திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மர் யார்? ..... 222
14. திருக்குறளுக்குரிய காரணப் பெயர்கள்; திருவள்ளுவருக்கு வழங்கும் பெயர்கள்; திருவள்ளுவருக்கு வடமொழி சூட்டிய பெயர் ..... 223
15. மலேசியா, உலக தமிழ்மறை ஆராய்ச்சி மாநாடு - 2005 திருக்குறள் போட்டியில் முதல் பரிசு பெற்றக் கட்டுரை ..... 224
16. இயற்கையோடு விஞ்ஞானம் இணைந்த நூல் திருக்குறள் - தந்தை பெரியார் ..... 241
17. உலக அற நூல்; திருக்குறள் - அறிஞர் அண்ணா ..... 243
18. திருக்குறளை அச்சேற்றிப் பதிப்பித்த ஞானப்பிரகாசர், அம்பலவாணர் வாழ்க! - முனைவர் இ. சுந்தரமூர்த்தி ..... 250
19. மண்ணில் விண்அல்லது வள்ளுவர் கூட்டுடமை - ஞா. தேவநேயப் பாவாணர் ..... 253
20. குறள் தமிழ் முதனூலா; தரும சாத்திர சாரத் திரட்டா? - நாவலர் சோமசுந்தர பாரதியார் ..... 261
21. திருவள்ளுவர் தமிழகத்தின் முதல் புரட்சியாளர் - முனைவர் சி. இலக்குவனார் ..... 267

# திருக்குறளுக்கென ஓரகராதி
# (Thirukkural Concordance)

## பதிப்புரை

தமிழுக்கு இலக்கணம் கூற வந்த தொல்காப்பியர் நூலில், அகராதிகளுக்குரிய பண்புகள் சொல்லப்படவில்லை. ஆனால், அகராதிக் கூறுகள் அதில் அமைந்துள்ளதை நம்மால் காண முடிகின்றது. அதெப்படி என்று கேட்கின்றீர்களா?

'அகர முதல் னகர இறுவாய்' என்று வரும் காப்பிய இலக்கணத் தொடர், தமிழ் மொழியின் அகர வரிசையின் ஆரம்பமும் - முடிவும் என நிரல் வரிசையால் உணரலாம்.

மொழி முதல், மொழி ஈறு, இடைநிலை எழுத்துக்கள் கூறும் பண்புகளைக் கொண்டு எழுத்து நிரலில் மேலும் சில கருத்துக்களை அறியலாம். ஆனால், சொற்பொருள் பற்றி, அதன் அகர முதலியைப் பின்பற்றி அனைத்துச் சொற்களுக்கும் பொருள் சொல்லப்படவில்லை.

திருவள்ளுவர் பெருமான்கூட, 'அகர முதல எழுத்தெல்லாம்' என்று தனது முதற் குறட்பாவைத் துவக்கி, 1330-வது குறளை முடிக்கும்போது 'ஊடுதல் காமத்திற்கு இன்பம், அதற்கு இன்பம் கூடி முயங்கப் பெறின்' என்றே முடிப்பதால், அவரது திருக்குறளிலும்கூட, அகர வரிசையின் துவக்கமும், முடிவும் அமையும் நிரல் வரிசையையும் காண முடிகின்றது.

திருக்குறளுக்கு உரை கூற வந்த பழம்பெரு ஆசிரியர்கள் தான்; 'பா' வரிசையைப் பின்பற்றி எல்லாச் சொற்களுக்கும் பொருள் கூறியுள்ளார்கள். காரணம், அவர்கள் உரைமேதைகள்! அதனால் தங்களது கடமையைச் சிறப்பாகச் செய்துள்ளார்கள் எனலாம்!

தொல்காப்பியத்திற்குப் பிறகு, 'ஆதி திவாகரம்', 'சேந்தன் திவாகரம்', 'பிங்கல நிகண்டு', 'சூடாமணி நிகண்டு', 'அகராதி' என்ற பெயராலேயே 'அகராதி நிகண்டு', 'உரிச்சொல் நிகண்டு', 'கைலாச நிகண்டு', 'பொருள் தொகை நிகண்டு', 'பொதிகை நிகண்டு', 'நாம தீப நிகண்டு' போன்ற நிகண்டுகள் சில வெளிவந்து சொற்களுக்குப் பொருள்கூறிட தொல்காப்பியம் நூல்தான் வழிகாட்டி இருக்கிறது எனலாம்.

இதற்கும் மேலாக, தமிழ்நாட்டிற்கு கிறித்துவ மதப் பிரச்சாரம் செய்ய ஐரோப்பியர் வந்தார்கள். அவர்களிலே முதன்முதலாக 1712-ஆம் ஆண்டில் வந்த **பார்த்லோமிய சீகன் பால்க்** என்பவர்தான் 'தமிழ் அகராதி' என்ற பெயரிலே அகராதியை எழுதினார்.

**வீரமா முனிவர் என்ற பெஸ்கி பாதிரியார்**, அடுத்தபடியாக 1732-ஆம் ஆண்டில் சதுர அகராதியை; பெயர், பொருள், தொகை, தொடை என்ற நான்கு வகைப் பெயரில் அகர வரிசையைப் பின்பற்றி முதன் முதலாக அற்புதமான ஒரு சதுர அகராதியை அச்சிட்டு தமிழர்க்கு வழங்கிய பெருமை அவருக்கே உண்டு.

தமிழ் - இலத்தீன், இலத்தீன் - தமிழ், தமிழ் - பிரெஞ்சு, தமிழ் - ஆங்கிலம் - போர்ச்சுக்கீசிய மொழி, இலத்தீன் - தமிழ் போன்ற அகராதிகளைப் பல மொழிகளில் எழுதி வெளியிட்டவர் யார் தெரியுமா? அதே **வீரமா முனிவர்**தான்!

இதற்குப் பிறகு 1779-ஆம் ஆண்டில், **ஃபெப்ரிசியஸ்** என்பவர், தமிழ் - ஆங்கில அகராதியும், **வின்சுலோ பாதிரியாரின்** ஆங்கில - தமிழ் அகராதி 1842-லும், 1862-ல் அவராலேயே தமிழ் - ஆங்கில - அகராதியும் எழுதப்பட்டு வெளிவந்தன. இவையெல்லாம், ஐரோப்பியர் தமிழ் மொழியைக் கற்பதற்குப் பேருதவியாக அமைந்தன.

**சதாவதானி, பண்டித நா. கதிரைவேற்பிள்ளையின்** 'தமிழ் சொல்லகராதி' 1904-ஆம் ஆண்டிலும், கலைக் களஞ்சியம் போல 'அபிதான சிந்தாமணி' என்ற பொருள் விளக்கம் கூறும் அகராதி ஒன்றும்; 1910-ஆம் ஆண்டில் வெளி வந்தது.

**பேராசிரியர் டி.எஸ். வையாபுரி பிள்ளை** தலைமையில், சென்னைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பேரகராதியை (Lexicon) 1936-ஆம் ஆண்டில் வெளியிட்டது. இதே காலக் கட்டத்தில் மதுரைத் தமிழ்ப் பேரகராதி வந்தது. இதன் பின்பு 1938-ஆம் ஆண்டில் - சொற் பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி ஒன்றும் வெளியிடப்பட்டது.

இவைகட்குப் பிறகு, இலக்கிய அகராதிகள் என்ற பெயரில், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பெரிய புராணம், பெருங்கதை, வில்லிபாரதம் போன்ற தமிழ் காப்பியங்களுக்குச் சொல்லடைவுகள் வெளி வந்தன. தேவாரம், வைணம் போன்ற சமைய நூல்களுக்கான அகராதி நூல்களும் வெளியிடப்பட்டன.

இவ்வாறு, மேலும் எண்ணற்ற பல்துறை அகராதிகள், தமிழ் மொழி வளர்ச்சிக்காக வெளிவந்த வண்ணம் இருந்தன. ஆனால், திருக்குறள் வளர்ச்சிக்காக, மாணவர்களும் மற்றப் பிரிவு மக்களும் எளிமையாகத் திருக் குறளைக் கற்றிடத் திருக்குறளுக்கென்று அகராதிகள் ஏதாவது வெளி வந்துள்ளனவா என்று தேடிப் பார்க்க வேண்டிய சூழ்நிலைதான் இன்று வரையும் உள்ளது.

தமிழ்த் தாத்தா என்று அழைக்கப்படுகின்ற **டாக்டர் உ.வே. சாமி நாதையர் நூலகம்** சென்னை மாநகரிலுள்ளது. அந்த நூலகத்துள் இன்று வரை வெளி வராத நூற்கள் எல்லாம் இருக்கின்றன. அகநானூறு அகராதி, தலக்குறிப்புகள், **திருக்குறள் பரிமேலழகர் அரும்பத அகராதி**, தேவார அருந்தொடரகாரதி, புலவர் வரலாறு, வாகட அகராதி போன்ற நூற்

களெல்லாம் அச்சு ஏறாமலேயே அந்த நூலகத்தில் அழுக்குக் குப்பைகளாகக் கிடக்கின்றன. என்றைக்கு நற்காலம் நேருமோ அவற்றைத் தூசு தட்டிட!

உலக மொழிகளில் ஒப்பியல் சொற்றொகை அகராதியை 1787-89ல் **பாலியஸ்** (Palias) என்பவர் எழுதினார். ஆசிய மொழிகளில் ஒப்பியல் அகராதியை 1868-ல் **ஹண்டர்** எழுதினார்.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை **கால்டுவெல்** எனும் வித்தகரால் சொற்பிறப்பு ஒப்பியற் கூறுகளோடு எழுதப்பட்டது. வடமொழிச் சொற்களின் வேர்களைத் தமிழில் காட்டிட **நீர்வேலி சங்கர பண்டிதர்,** 1908-ஆம் ஆண்டில் **'தாது மாலை'** எனும் பெயருடைய ஒரு நூலை ஆராய்ந்து எழுதினார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தவர்களால் பேரகராதி எழுதி வெளியிடும் ஆற்றலும் சிந்தனையுமிருந்தது. ஆனால், உலக மக்களது வாழ்வியல் சட்டமான திருக்குறள் எனும் பொது மறைக்கு ஒரு திருக்குறள் அகராதி எழுதாமல் விடப்பட்டது.

உலக மொழிச் சொற்களின் வேர், தமிழ் மொழியில் இருக்கிறது என்று ஆராய்ந்து எழுதிட ஈழத்துப் பேரறிஞர் **ஞானப் பிரகாசருக்கும், மொழி ஞாயிறு தேவநேயப் பாவணருக்கும்** நேரமிருந்தது; திருக்குறளுக்கு ஓர் அகராதியை எழுதிட அவர்களுக்கு நேரமில்லையே என்று ஒரு தமிழ் மகன் வருந்துவதில் என்ன தவறு?

தமிழ் மொழியிலே இருந்து இங்கிலீஷ் மொழிக்கு இரவல் சென்ற தமிழ்ச் சொற்களை ஆராய்ந்த **ஞானகிரி** எனும் மொழி வித்தகரால், 1972-ல் எழுத முடிந்தபோது, திருக்குறளுக்கென ஓர் சொற்பொருள் அகராதியைத் திரட்டிட முடியாததேன்?

திருக்குறளுக்கு மரபுரை எழுத முடிந்த பாவாணரால், மறைமலையடி களாரையும் தமிழகப் புலவர் குழு அறிவையும் மீறி, திருக்குறள் கி.மு. 3-ஆம் நூற்றாண்டின் நூலென ஆராய்ந்துக் கூற முடிந்த பாவாணரால், திருக்குறளுக்கு ஒரு சொற்பொருள் பட்டியல் எழுதாமல் போயிற்றே!, இது தமிழறமாகுமா?

பௌத்த மதச் சொற்களை தனியாகத் தொகுத்து, 1900-ஆம் ஆண்டில் வெளியிட்ட **டாக்டர் உ.வே. சாமிநாதையர்** எனும் தமிழ்த் தாத்தாவால், ஏன் திருக்குறளுக்கென ஓர் அகராதியைத் தொகுக்கலாம் என்ற அக்கரை உண்டாகவில்லை?

அட, இவ்வளவு ஏன்? **தமிழ் அறிஞரான யாகப்பப் பிள்ளை** என்பவர் 19-ஆம் நூற்றாண்டில் **"கடினச் சொல் அகராதி"** என்ற ஓர் அகராதியை வெளியிட்டார். அவரால் முடியாதா திருக்குறளுக்கு சொற்பொருள் அகராதி - ஒன்று எழுதிட?

**சுன்னாகம் குமாரசாமிப் பிள்ளை**, இருபதாம் நூற்றாண்டில் **'இலக்கியச் சொல் அகராதி'** எழுதுவதற்குச் சொற்களை தேடித் திரட்ட முடிந்ததல்லவா? ஏன் இயலவில்லை திருக்குறளுக்கு அகராதி தொகுக்க - நேரமில்லையா?

எல்லாமே போகட்டும், இந்தியா விடுதலை பெற்ற பின்பு, தமிழ் நாடு அரசு பல துறைகளில் பல கலைச் சொற்றொகைகளைத் தக்காரைக் கொண்டு வெளியிட்டது.

குறிப்பாகக் கூட்டுறவு சட்டம், புள்ளி விவரவியல், வருவாய் புள்ளியியல், வேளாண்மை போன்ற துறைகளுக் குரியச் **சிறப்புச் சொற்கள் துணையகராதி** வெளியிட்ட நேரத்தில், திருக்குறளும் தமிழ் வளர்ச்சி தானே, அதற்குரிய அகராதி ஒன்றை அரசு சார்பாக, தொண்டாக எண்ணி வெளியிட்டிருக்கலாம் இல்லையா? செய்ததா தமிழ்நாடு அரசு?

**வி.டி. பண்டிதர், மத்தியாசு, வேலாயுதம், கீ.. இராமலிங்கனார், கோ. முத்துப் பிள்ளை** போன்ற தனிப்பட்ட அறிஞர்கள், தாவரவியல், கணிதவியல், பொதுவியல், ஆட்சி சொல்லியல் போன்ற துறைக்கேற்ற கலைச் சொற்களையெல்லாம் திரட்டி அவரவர் செயலாண்மைக்கேற்ப செய்து தொண்டாற்றிய மனங்கள், திருக்குறள் அகராதி ஒன்றை உருவாக்குவோ்மே என்று பாடுபட அவர்களுக்கு முயற்சி ஏனெழவில்லை?

பழமொழிகளைத் தொகுத்தப் பலர், சில அகராதிகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள், **பெர்சிவல் பாதிரியார், இலாசரஸ், அனவர தநாயகம் பிள்ளை, நீலாம்பிகை அம்மையார், கோலார் பேராசிரியர் பெருமாள், திருமதி செயா மீனாட்சி சுந்தரம்** போன்றவர்களாவர். இவர்களுள் யாராவது ஒருவர் திருக்குறள் அகராதியைத் தொகுத்திருக்கலாம் இல்லையா? செய்யவில்லையே!

இவ்வளவு ஏன்? எதிர்ச் சொற்களுக்கென ஒரு அகராதி, அடுக்கு மொழிக்கென அகராதி, ஐம்பொறிகளுக்கான அகராதி, தெய்வங்களுக்குரிய அடைமொழி அகராதி, சிலேடை அகராதி, மக்கட் பெயர் அகராதி, இல்லப் பெயர் அகராதி, முசுலிம் பெயர்கள் அகராதி, இந்து மக்கள் பெயர் அகராதி போன்ற அகராதிகளை எல்லாம் தொகுத்து வெளியிட்ட தமிழ் மகானு பவர்கள்; தமிழ் மறையான திருக்குறளுக்கென ஒரு சொற்பொருள் அகராதி யைத் தொகுத்து வெளியிட ஊக்க உணர்வு இல்லையே! என்ன காரணமோ!

**இவை எல்லாவற்றையும் ஊடுருவி பார்த்த பின்புதான் நமது கண்களுக்கும், உணர்வுகளுக்கும் மேதை வீரமா முனிவர் தென்படு கிறார். அந்த மாமனிதர், தமிழ் மண்ணிலே பிறக்காதவர், தாய் மொழி யாக, தமிழை ஏற்க முடியாதவர், 1886-ஆம் ஆண்டில் திருக்குறளுக் காகத் தனி அகராதியையும், சொற்குறிப்பு அகராதியையும் தொகுத் தளித்தார் - தமிழ் இனத்தின் பெருமைக்கு!**

வீரமா முனிவருக்குப் பிறகு நமக்கு அடையாளமாகக் காட்சி தருபவர் **திரு. மார்க்க சகாயம் செட்டியார்** என்பவர். இவர், 1924-ஆம் ஆண்டில், திருக்குறள் என்ற பொய்யா மொழிக்கு, 'திருக்குறள் சொற் குறிப்பு அகராதி' என்ற நூலை இயற்றித் தமிழ் மறைக்குத் தொண்டாற்றினார்.

இவருக்குப் பின், திருக்குறள் சொல்லடைவு எனும் ஒரு முழுமை யான நூலை எழுதினார். அது சரி. சொல்லடைவு என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?

திருக்குறளில் அல்லது எந்த ஒரு நூலிலும் காணும் பெயர்கள், அருஞ்சொற்கள், அந்த சொற்கள் எங்கெங்கே, எப்படியெப்படி, ஏன், எதற்காகப் பயன்பட்டன என்ற இடங்களைக் குறிப்பிட்டுக் கூறி விளக்குவதற்குச் **"சொல்லடைவு"** என்று பெயர் ஆகும்.

இவ்வாறு வெளிவந்த சொல்லடைவு நூற்கள்தான், புறநானூற்றுச் சொல்லடைவு, சிலப்பதிகாரச் சொல்லடைவு, ஐங்குறு நூற்றுச் சொல்லடைவு, கம்பராமாயணம் சொல்லடைவு, பெரிய புராணம், பெருங்கதை, வில்லிபாரதம் மற்றும் கல்வெட்டுக்களைப் பற்றியும் வெளிவந்த சில சொல்லடைவு நூற்களாகும்.

இந்தக் காலக் கட்டத்தில், பல பொருள் விளக்க அகராதிகளுக்குரிய மேற்கோள் விளக்க அகராதிகளும் வெளிவந்தன. அவற்றுள் ஒன்று 'திருக்குறள் மேற்கோள் விளக்க அகராதி. இதனை இயற்றியவர் **தாமோதரன்** என்ற தமிழ்ப் பெருந்தகை ஆவார். இந்த அரிய நூல்கள் எல்லாம் இன்று புத்தக விற்பனைச் சந்தைகளில் உள்ளனவா என்றால், ஒரு நூல்கூட இல்லை; ஒரு கடையிலும் கிடைக்கவில்லை.

எனவேதான்,'அகராதிக் கலை' என்ற அரும் நூலில் . டாக்டர் **தா.வே. வீராசாமி** அவர்கள் குறிப்பிட்டுள்ள அரிய ஆய்வுகளை நாம் பொன்னே போல ஏற்றுக் கொண்டு; 'திருக்குறள் சொற்பொருள் சுரபி' என்ற இந்த நூலுக்குக் கிடைத்த சில ஆய்வுகளை இரு கையோடு ஏந்திக் கொண்டு எழுதினோம்.

இன்று வளர்ந்து வரும் அகராதியியல் (Lexicology) வளர்ச்சிக் கேற்றவாறு, திருக்குறளில் காணும் சொற்கள் அல்லது சொற்கூறுகள் குறித்து, தமிழியல் முறையிலும், அறிவியல் ஆய்வுக்கேற்பவும் பொருள், வடிவம், சொற்பயன்பாடு, சொல்லாக்கம், சொல் வரலாறு, சொற்கூறு ஆகியவற்றைக் கூர்ந்து நோக்கி, அகராதியியல் கண்டுரைத்த ஆய்வுகளைப் பயன்படுத்திக் கொண்டு, 'திருக்குறள் சொற்பொருள் சுரபி' (Thirukkural Concordance) என்ற இந்த சொற்பிறப்பு பட்டியலைத் தயாரித்துள்ளோம்.

கல்லாரும், கற்றாரும் திருக்குறளை அனைவரும் சுலபமாகப் படித்திட; ஆசிரியர் உதவியின்றிக் கற்றிட; மாணவ, மாணவியர்களும் படித்துப் பயன்பெற்றிட, எளிய தமிழில் எழுதப்பட்டுள்ள **''திருக்குறள் சொற்பொருள் சுரபி''** (Thirukkural Concordance) எனும் இந்த நூல் உதவியாக இருக்குமென் நம்புகிறோம். ஆசிரியர் பெருமக்களும் - பெற்றோர்களும் அன்பு கூர்ந்து இந்த நூலைப் பார்வையிட்டு கருத்துக் கூற வேண்டுகிறேன்.

அன்பன்

***வா. திருக்குறளார்***

# ஆசிரியர் எண்ணம்

## 'திருக்குறளை' எழுதிட திருவள்ளுவர் வெண்பாவை ஏன் தேர்ந்தெடுத்தார்?

தமிழ்ப் 'பா' வகைகளிலேயே மிகச் சுருங்கியது ஈரடிக் குறள் 'பா' இனமே!

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலகநீதி போன்ற ஓரடி செய்யுள்கள் உள்ளனவே; அவற்றை எல்லாம் விட்டுவிட்டு, ஏன், குறள் வெண்பாவை மட்டும் திருவள்ளுவர் தேர்வு செய்து திருக்குறளை உருவாக்கினார்?

ஔவையார் உட்பட மேற்கண்ட நூலாசிரியர்கள் எழுதிய பாக்கள் எல்லாம் 'செய்யுள்' இனத்தைச் சேர்ந்தவை. அவை 'பா' வகைச் சதிராட்ட யாப்புகளுள் இலக்கண நுட்பங்களோடு அடங்கிய 'பா' இனங்கள் அல்ல.

மிகச் சுருக்கமாகத் தனது கருத்தை மக்களுக்குக் கூறிட; வெண்பாவை இரண்டாக வெட்டிக் குறள் வெண்பா என்றொரு 'பா' வகையை திருவள்ளுவர் பெருமான் உருவாக்கினார்.

அதனால் தான், திருக்குறளிலே ஈரசைச் சீர்களையே அதிகமாகத் திருவள்ளுவர் ஆட்சி செய்துள்ளார். அறம் உரைப்பதற்கு அது சுலபமான அற ஆடல்! வெண்பா என்றால் தூய 'பா' என்பது பொருளல்லவா? அதனால்!

உண்மைகளை உலகுக்கு உணர்த்த - அந்தப் 'பா' வகைத் தொடக்கமும் முடிவும் உடைய சுருக்கமான 'பா'வாக அது அமையும் என்று பொய்யில் புலவர் நம்பினார். அவரால் அது 'முதற்பா' என்ற புகழையும் பெயரையும் பெற்றது. அவரும் முதற்பாவலர் என்றச் சிறப்பைப் பெற்றார்.

### வெண்பாவிற்கு பெருமை சேர்த்தார்

வெண்பா என்றாலே அறம் உரைக்க ஓர் அருமையான பா. படிப்போர்க்குச் சிக்கலை உருவாக்காத பா. நுண்ணறிவு நுவலும் நுட்பமான சொற் பா; ஞானப் பா. 'பா'வினங்களிலேயே சான்றாண்மையைச் சாற்றிடத் தகுந்த சான்று பா!

அதனால், அந்தப் 'பா' புலமை உலகுக்குப் பொதுப் 'பா'வாக, மறை 'பா'வாக விளங்கும் சக்தியைப் பெற்றது என்ற அருமையை, வெண்பாவுக் குள் நுழைத்து அதற்குப் பெருமையைச் சேர்த்தவர் 'பொருளுரை நாயகர்'!

சான்றோர் எனில் சால்புடையவர்கள், உயர்ந்த பண்பில் வைரம் பாய்ந்தவர்கள்! அவர்களால் மக்களைச் சான்றோர்களாக்க முடியும் என்ற ஒழுக்கமுடைய நேர்மைத் திறம் பூண்டவர்கள் அல்லவா?

பன்நெடுங் காலத்திற்கு முன்பு முதன் முதல் கல்வி உருவானது பள்ளிகளிலே தான்! பள்ளி என்றாலே படுக்கும் இடம் என்று பொருள்! சமணர்களால் இச்சொல் உருவானது.

சமணர்கள் தாங்கள் வாழும்போது படுத்துறங்கும் இடங்களிலே தான்: தனது பிக்குகளுக்கும், பிக்குணிகளுக்கும் கல்விக் கலைகளைக் கற்பித்தார்கள்! நீதி நெறிகளையும், மத ஞானங்களையும் போதித்தார்கள்! அதனால் பள்ளி என்பது படுத்துத் தூங்கும் இடமாக, மடமாக இருந்தது.

பிறகு, அந்தப் பள்ளி வீட்டுத் திண்ணைகளிலே இடம் மாறி, திண்ணைப் பள்ளியாக ஆயிற்று!

இந்த நூலை உருவாக்கும் நானெல்லாம் கிராமத் திண்ணைப் பள்ளியிலே தான் முதன் முதலாக சதக வகை நூற்களை எல்லாம் மனனம் செய்து ஆசானிடம் ஒப்புவித்தவன். நான் மட்டுமன்று; என்போன்று பன்னூற்றவர், பல கிராமத் திண்ணை ஆசான்களிடம் பயின்றவர்கள்தான். எனவே, திண்ணைப் பள்ளிக் கல்வி தமிழர்களுக்கு பண்டையக் கல்விக் கூடமாகவும் திகழ்ந்தது.

அத்தகையப் பள்ளி ஆசான்கள் சான்றோர்களாகவும், அவர்களிடம் கல்வி கற்றுக் கொள்பவர்கள் மாணாக்கர்களாகவும் அமைந்ததால், அதைக் ‘குருகுலம்’ என்றும் மக்கள் போற்றினர்கள். அது வாழையடி வாழையாக வளர்ந்து தமிழ் வளத்தை ஊட்டியது.

அந்தக் குருகுல முறையை, ஆடு, மாடு மேய்த்திட சமணர் காலத்துக்கு முன்பு வந்தேறிய வட ஆரியர்கள், கல்விக்குரிய பீடமாக அதை ஏற்றுக் கொண்டு, கல்வியை ஞான பீடமாக, கலைத் துறையாக மாற்றிக் கொண்டு, அரசு போகிகளாக மாறினார்கள்.

அந்தக் குருகுலக் கல்வியாலே அரச குரு போன்ற பதவி போகங்களை அரண்மனைகளிலே அனுபவித்துக் கொண்டே, சில அரசுகளை ஆரியர்கள்அழித்தார்கள். சுயநலத்துக்காக அவர்கள், சில அரசுகளை உருவாக்கினார்கள்: உயர்ந்த ராஜ குருக்களாக மன்னர்களால் புகழப்பட்டார்கள். கல்விக் கலைகளிலே தமிழர்கள் பின்தங்கி பிராமணச் சமுதாய அடிமைகளானார்கள்.

இந்தக் குறைபாடுகளின், ஆதிக்கக் கல்வி முறைகளால், ஓரினம் மட்டுமே வளர்ச்சியுறும் என்று அஞ்சியே தனது அரும் நூலான திருக்குறளை, அதன் நெறிகளை உலகுக்கு உணர்த்தவும், நாளடைவில் தனது தமிழ் இனம் உயர்ந்திட வேண்டும் என்றும் எண்ணிய காரணத்தால்; குறள் யாப்புத் தேர்வை, குருகுல நெறியில், ஆசான் - மாணவன் போதனை முறையில், சான்றாண்மைச் சால்புகளை விளக்கிக் கூறிடும் தருக்கவாத நூலாக திருக்குறளை திருவள்ளுவர் பெருந்தகை விளங்கச் செய்தார்!

இந்த அறநெறி போதனைகளைக்கூட; முப்பாலின் இருபாலான அறம், பொருள் பாக்களில் மட்டுமே - தானே, நேரிடையாக - ஆசானாக அமர்ந்து, உலக மக்களை மாணாக்கர்களாக மதித்து, தாயன்பால் அன்னை ஒருத்தியின் அக்கரையோடு அந்த அறநெறிகளை உலக மக்களுக்கு அறிவுறுத்தினார்.

ஆனால், காமத்துப் பாலை மட்டும் தானே கூறாமல், நாயகன், நாயகிகளான காதலர்களை விட்டே நேருக்கு நேராக பேச வைத்து விட்டார்! ஏன் தெரியுமா?

காதலர்கள் தங்களது களவு மயக்கத்தால், காமப் போதையால், 'அன்பே, உன்முகம் முழு நிலாவைவிட அழகாக வெள்ளொளி வீசுகின்றது. உனது சொல்லில் தேனும் பாலும் தோற்று விடும்; இரவு சினம் அவளிடம் சீறியதால் சூரியன் மறைந்து மறைந்து அந்தியில் ஓடிப் போய் பதுங்கிக் கொள்கின்றான். பொதிகைத் தென்றலே நீ விடும் இன்ப நேரத்து வீச்சுதான், அவள் விடும் புணர்ச்சிப் போக மூச்சு என்று, இவ்வாறான பொய் புரட்டுகளைக் காமக் களியால் அவர்கள் பேச வேண்டிய சிற்றின்ப சூழ்நிலை உருவாகும்.

அந்த நேரத்துப் பொய்யுரைகளை, காம உளறல்களை அறம் பாடிய தனது வாயால் பாடிட திருவள்ளுவர் விரும்பாததால், பொருள் தேடும் நுட்பங்களை எழுதிய 'ஆணி'யால் பொய் புரட்டுகளைக் காமம் பெயரால் புகன்றிட மனமில்லாததால், மனச்சாட்சிக்குப் பயந்து, இன்பத்துப் பால் காதலர்களை விட்டே அந்தப் போதை உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்ளச் செய்துவிட்ட உண்மை அறம் சார்ந்த சிந்தனையைப் போல, உலகத்திலே வேறு எந்தக் கவிஞனும் இன்றுவரை செய்திருக்கவில்லை.

அதனால்தான்; இலண்டனில் தமிழ்ப் பணியாற்றிய ஜி.யு. போப் அவர்கள், இந்தக் காமத்துப் பாலைப் படிக்க நேர்ந்தபோது வியந்தார். பேராச்சர்யப்பட்டு தனது கருத்தை சென்னையிலுள்ள பேராசிரியர் பரிதிமாற் கலைஞருக்குக் கடிதம் மூலம் தெரிவித்தார்.

அதுமட்டுமல்ல, காதலர்களுக்கு ஏற்பட்டு விட்ட இந்த காமப் போதையில்கூட, எந்த ஓரிடத்திலும் கம்பர் பெருமானைப் போல வரம்பு மீறி 'அல்குல்' என்ற உறுப்பைப் பற்றித் திருவள்ளுவர் மறந்தும்கூட அந்தக் காதலர்களை விட்டுப் பேச விடவில்லை.

'அறிதோறும் அறியாமை கண்டற்றால் - காமம், செறிதோறும் சேயிழையார் மாட்டு' என்ற குறளின் காமபோதை மயக்க உரையிலேகூட, அறிவுக்கு இலக்கணமாக அறியாமையைப் பற்றிக் கூறும்போது, சிவந்த அழகான நகைகளை அணிந்த பெண்ணிடம் இன்பம் நுகருந்தோறும் - அதை அனுபவிக்குந்தோறும், அரிய நூற்பொருள்களைக் கற்று, அறியு முன்பு அறியாதிருந்த அறியாமைகள் அழிந்து - புதுப்புது அறிவுணர்வு களைப் புதியனவாகக் கண்டறிவது போன்ற இன்பமாக இருக்கிறது' என்று தான் கூறினாரே ஒழிய கம்பர் பெருமானைப் போல அல்குல் உணர்ச்சிகளை அந்தக் காதலர்கள் மூலமாகப் பஞ்சணையில் ஏவிப் பேச வைக்கும் அறிவைத் திருவள்ளுவர் இருந்தும் ஆட்சி செய்யவில்லை.

அதனால்தான், அறம் பொருள் அதிகாரங்களில் உலகத்தின் முன்னால் அவரே நின்று நேரிடையாக எழுதியவர், அறம் பேசியவர், காமத்துலிப் பாலே இன்பச் சுனாமி ஏற்படும்போது, பொய்யும் புனை

சுருட்டும், அசிங்கமும் ஆபாசமும் கூறும் கட்டங்கள் வருமே என்ற சமுதாய அச்சத்தால், காதலர்களை விட்டே, வரம்போடு, அறிவு நுட்பத்தோடு, சிந்தனை ஒழுக்கத்தோடு, அந்த உண்மைகளைப் பேச வைத்தார். இது மட்டுமன்று திருவள்ளுவர் பெருமானின் சீரிய உலக ஞான போதனை!

திருக்குறளில் அவர் புகுத்திய குருகுல முறை, ஆசான் - மாணாக்கர் கல்வி போதனைத் தொடர்பு. சான்றோர்களைத் துணைக் கொள்ளும் அறிவு கற்பிப்பு முறை. உலக முன்னேற்றத்திற்கும், அமைதிக்குமுரிய அந்த உயர்ந்த அறிவு' துறை, இளம் பருவம், வாலிபப் பருவம், வயோதிகப் பருவம், ஆகிய எப்பருவத்தினரும் கூடிக் கற்றிடும் அந்தக் குருகுலக் கல்வி; இளைய தலைமுறைகளைச் சான்றாண்மை ஞானத்தோடு உருவாவதற்குரிய அந்த உன்னதமான முறை, நேர்மையான பண்பாளர் களாக எதிர்காலத்தில் வாழ வரும் அந்தச் சமுதாயத்தை சீர்மையான அறப்பண்புகளோடும், நிறைவான ஒழுக்கக் குணங்களோடும் உருவாக்க வேண்டும் என்ற உலகச் சமுதாயத்தின் மீது அக்கரையும் பற்றும் கொண்ட கொள்கைகளை; அன்றே தனது மனப் புத்தகத்திலே முதல் நூலாக எழுதிக் கொண்ட திருவள்ளுவர், வழி நூலாகத் தனது திருக்குறளை எழுதினார்.

அதாவது, தனது வெண்பாவில் **நேர்மையாளராகிய உயர்ந்தோரை அவர் நேரசை** என்ற **இலக்கணமாக்கிக் கொண்டார்.** அதாவது ஆசானாகக் கொண்டார். அவர்களைச் சமுதாய அறிவாசான்களாக நிலை நாட்டினார் - குருகுல பீடத்தில்!

அதனைப் போலவே நல்ல ஆசான்களுக்கேற்ற நிறைவான மாணவர்களும் அமைய வேண்டுமல்லவா? அதற்காக, "எக்கற்றும் கற்றாரே கற்றார்" என்றவாறு கற்க வேண்டிய வரிசையாளர்களை **நிரையசை என்ற இலக்கண மாணக்கராக உருவாக்கிக் கொண்டார்** வள்ளுவர் பெருமான்.

**நேரசையும், நிரையசையும் உறழ்ந்து வரும் 'வெண்தளை'** என்ற **வாழ்வியலறச் செங்கனிதான்** - சான்றோரைத் துணைக் கொண்டு பழக்க வழக்க மாகப் பண்பு பெறும் குருகுல நடைமுறையை நாட்டும் கல்விச் சிறப்புப் பண்பு!

அவ்வாறானால், **'வெண்டளை'யின் முக்கியத்துவ உணர்வு என்ன? சமுதாயத்தில் - நாட்டில் - வெண்டளை அறம் பெருக்கும் நோக்கை யூட்டும். இது 'வெண்பா பா' வினத்தின் இலக்கணத் தூய்மையின் இயல்பு.**

**நேரசையோடு - நிரையசை பொருந்தி வரும் வெண்டளை இலக்கணம்; சான்றாண்மையாளரைத் துணைக் கொள்ளும் மற்றையோர் நோக்கத்தை யும், நிரையசையோடு இணங்கி வரும் வெண்டளை,** பக்குவமான மெய்யன்பர்க்கு இதம் விளைவிக்கும் குருமார் செயல்களையும் குறிக்கின்றன.

'இந்த வெண்டளை'களை; இலக்கண அறிஞர்கள் 'இயற்சீர்' வெண்டளை என்று கூறுவர். **'இயற்சீர் - என்பது இயற்கை ஒழுங்கு. அறிவூட்டும் பெரியோரும், அவர் துணை பெற்று உயரும் மற்றையோருமாக நடை பெறும். உலக இயற்கையை இது சுட்டுகிறது' என்பார் மதுராந்தகம் அருகே உள்ள மாம்பாக்கம் எனும் சிற்றூரில் திருக்குறள் குருகுல பீடம் நடத்திய மேதை அழகரடிகள் தனது 'திருக்குறள் அறம்' என்ற நூலில்.**

எனவே, நேரசையும், நிரையசையும் ஒன்றிணையும் வாய்ப்பு வெண் பாக்களில் பெரும்பான்மையாக உண்டு. இந்த வெண்சீர் வெண்டளை என்று கூறப்படும் வெண்டளைகள். தூய்மை ஒழுங்கை, நேர்மை யாளரும், நேர்மையாளருமானச் சான்றோர்கள் தங்களுக்குள்ளேயே வெண்பா இலக்கண அசைகளைப் போலச் சந்தித்து, நாட்டுக்கு அறத்தை வளர்க்கும் சான்றாண்மை இயக்கத்தையே - இது புலப்படுத்தும் என்று, புறநானூறு 218வது பாடல், 'சான்றோர் சான்றோர் பால ராப' என்று கூறுகின்றது. இதனால்தான் வெண்டளைகள் வரும் வெண்பா, தமிழ் மொழியில் அறிவமுதமூட்டும் முதற்'பா'வாக அமைந்துள்ளது.

வெண்பா என்றால் வெள்ளைப் பா என்பர் அறிஞர். அதாவது, தூய்மையின் அடையாளமாகிய வெண்மை வருதல் இதனாற்றான். அறவுரைகளையும், நீதி நூற்களையும் வெண்பாக்களால் தமிழ்ப் பெரியோர்களும் எழுதியிருப்பதற்கும் இதுதான் காரணம்.

வெண்பா நிறத்தையும் தன்மையையும் சுட்டும் என்பதை அந்தப் பாவால் நாம் உணரலாம். குற்றமற்றத் தூய்மை, குற்ற மறுக்கும் கருணை யுடையதே அறம்! அதனால்தான், "அந்தணரென்போர் அறவோரே" என்றார் திருவள்ளு வர். வெண்பாவுக்கோர் புகழேந்திப் புலவர் என்பர். வெண்பா புலி வேலு செட்டியார் இருபதாம் நூற்றாண்டிலும் புகழ் பெற்றதற்குக் காரணம் அவரது அறிவு சிலிர்க்கும் வெண்பா புனையும் புலமைத்திறன்தான் என்றால் மிகையாகா.

அதனால்தான் திருவள்ளுவர் பெருமானும், உலகுக்குரிய உண்மை தத்துவங்களை, அறநெறிகளை, வாழ்வியல் ஞானங்களை மக்களுக்குக் கூற உணர்த்த நினைத்தபோது அவருக்கு வெண்பா என்ற இலக்கண யாப்பே நினைவில் ஊஞ்சலாடியது.

அந்த வெண்பாவை மேலும் சுருக்கி ஏழு சீர்களால், தாயுள்ளக் கருணையோடு தமிழ் மாந்தர்களுக்கு மட்டுமல்லாமல், உலக மக்கள் இனத்துக்கும், மத, இன, சாதி, பேத வேற்றுமை என்று ஏதும் தோன்றாதவாறு; உலகப் பொது மறையை குறள் வெண்பாவால், அறமாக அற நூலாக அவர் மேதினிக்கு வழங்கினார்.

இதில் என்ன சிறப்பு என்றால், உலகுக்குத் திருவள்ளுவரின் பயன்படு உணர்வு, சுருக்கமாகக் கூறியதிலும், பொருள் சுரப்பியிலும், மிகக் குறுகிய பாவின யாப்பிலும், குறள் உள்ளே சலசலவென ஓசையிட்டோடும் அருவிநீர் போன்ற இனிய இலக்கியச் சுவையிலும், வடலூர் வள்ளல் பெருமான் கூறியதைப் போல குறள் ஞானத்துள் ஞானமாகவும், திருவள்ளுவர் ஞானியருள் தலையாய ஞானியாகவும் விளங்குவதே வாழ்வியல் நூல் இலக்கிய உலகில் அது ஒரு தனிச் சிறப்பாக அமைந்துள்ளது.

பதினாயிரம் பகவத் கீதையிலும் திருக்குறள் உயர்ந்தது, என்று வள்ளல் பெருமான் கூறுவதற்கேற்ப இதுபோன்ற ஒரு நூல் இதற்கு முன்னும் தோன்றியதில்லை. இனியும் தோன்றுவதற்கு வாய்ப்பு இல்லை எனலாம்.

அறிஞர் பெருமக்களை மதித்து, அவர்கள் நட்பை நாடி நட்டு, அறியாமை அகற்றி, அறிவைத் தேடும் வறியவர்கட்கு இரங்கி உதவி புரியும் ஆசான் - மாணவர் முறையிலே, அமைதியையும், புகழையும் பெருக்கும் வாழ்க்கையை நடைமுறைக்கு ஏற்றவாறு நலம் நல்கும் சிறப்பே தமிழ்ப் பண்பு என எண்ணி, இந்த உயர்ந்த வாழ்க்கையை மொழி உருவில் உதவுவதே வெண்டளை வெண்பாவின் பயனாகும்.

வெண்டளைகளில் நேரசையும், நேரசையும் இணைவது - அறிஞர்கள் அறிஞரோடு இணைந்து அறிவை வாரியென வழங்குவதற்குச் சமம். இந்த இணைப்பு அடிக்கடி நிகழாது; அரிதாகவே அமையும்!

நேரசையுடன் நிரையசையும், நிரையசையுடன் நேரசையும் கூடுவது, அறிஞருடன் மற்ற மக்களும், மற்ற மக்களுடன் அறிஞரும் கூடி அறிவு நலனைப் பெருக்குவதற்கான சான்று! இந்த இணைப்புதான் உலகில் அதிகமாக நடைபெறும்.

இதற்கேற்பவே திருக்குறளில் நேரும் நிரையும், நிரையும் நேரும் வரும் அசைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. காரணம், அறிஞருடன் சாதாரண மக்களும், சாதாரண மக்களுடன் அறிஞரும் இணைந்து படிக்கும்போதுதான் அறிவு நலம் பெருகும்! அறிவான சமுதாயம் அரும்பி வளரும் என்பது திருவள்ளுவரின் அவாவோ - என்னவோ?

நேரசையோடு - நேரசை அமையும் சான்றோர் பழக்க வழக்க இணைப்பு; எப்பெப்போதோ உண்டானாலும், அந்தக் கூடுதல் அருமையும் பெருமையும் உடையது. எடுத்துக்காட்டாக, 397-வது குறளான, 'யாதானூம் நாடாமால், ஊராமால் என்னொருவன், சாந்துனையும் கல்லாத வாறு' என்ற குறள்; காய்ச்சீரோடு காய்ச்சீரின் இயையே குறள் முழுவதிலும் பெற்றுள்ளதால், இத்தகையக் குறட்பா திருக்குறளில் அருமையாகவே அமைந்துள்ளது. காரணம். நேர் அசைச் சீர்கள் சான்றோர் கூட்டங்கள். 'சான்றோர் - சான்றோர் பால ராதல்' எனும் புறப்'பா'; திருக்குறள் ஞானம் பெற்ற 'பா'வாக அமைந்துள்ளது.

இவை போன்ற இலக்கணத் திருவிளையாடல்களைத் திருக்குறளில் ஞான விளையாட்டாகத் திருவள்ளுவர் விளையாடுவதில் திறன் பெற்ற மேதை என்பதால் தான், அவர் திருக்குறளை எழுதிட வெண்பா யாப்பை ஆய்ந்து, அதிலும் சுருக்கமாக குறள் வெண்பா யாப்பைப் பயன்படுத்திக் கொண்டு தனது அறிவுக்கேற்ற பாவினக் கருவியாக்கிக் கொண்டார்.

குறிப்பு :- திருக்குறள் 'சொற்பொருள் சுரபி' எனும் இந்த நூலில், ஏதாவது விடுப்பட்டிருந்தால், கருத்துக்கள் கூறும் நிலை ஏற்பட்டால், அன்பு கூர்ந்து அஞ்சலில் தெரிவித்தாலே போதுமானது. அடுத்தப் ப்திப்பில் அந்தப் பொன்னான எண்ணங்களை நூலில் சேர்த்து அழகுப்படுத்தத் தயாராக இருக்கிறோம். (ஆ - ர்)

# திருக்குறள் வடிவமைப்பில் திருவள்ளுவர் சிந்தனைகள்

[*திருக்குறள் உள்ளடக்கம்*]

| | |
|---|---|
| குறள் பெயர் | : தமிழ் மொழியில் மிகச் சுருங்கிய வெண்பா யாப்பிற்குக் குறள் வெண்பா என்று பெயர். |
| சான்று | : தொல்காப்பியம் இதைக் 'குறுவெண் பாட்டிற்குக் களவெழு சீரே' என்று குறிப்பிடுவதே தக்கச் சான்றாகும். |
| வடிவ அமைப்பு | : குறள் இரண்டு வரிகளால் ஆனாது. மேலே உள்ள வரி நான்கு சீர்களையும், கீழே உள்ள வரி மூன்று சீர்களையும் உடையது. |
| சீர்கள் அமைப்பு | : குறட்பா ஒவ்வொன்றும் ஏழு சீர்களால் ஆனது. |
| திருக்குறள் வடிவம் | : அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பால்களால் வடிவமானது; அதனால் திருக்குறளை 'முப்பால்' என்றும் கூறுவர். |
| குறட்பா வகைகள் | : திருக்குறள் நூலிலுள்ள மொத்தம் 1330 குறட்பாக்களில், 2,660 வரிகளும், 9310 சீர்களும், 12,000 ஆயிரம் சொற்களும் அடங்கியுள்ளன. |
| சொல்லுக்கு உண்டா சான்று? | : குறட் பாக்களை எழுத்தெண்ணிக் கற்று அதை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்த மேதை டாக்டர் ஜான். லாசரஸ் (Dr. J. Lazarus) என்பவர். திருக்குறளில் 12,000 சொற்கள் இருப்பதாகக் கூறுகிறார் என்று **மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், தனது 'திருக்குறள் அழகும் அமைப்பும்'** என்ற நூலில் அதற்குச் சான்றளிக்கின்றார். |
| | 'திருக்குறள் சொற்பொருள் சுரபி' எனும் இந்த நூலின் ஆசிரியர் திருக்குறளிலுள்ள 1330 பாக்களையும், அதிகாரம் ஒவ்வொன்றிலும் உள்ள ஒவ்வொரு குறட் பாவின் சீர்களைச் சொற்களாகப் பிரித்து எழுத்தெண்ணி ஆய்ந்துப் பார்த்ததில் ச. தண்டபாணி |

தேசிகர் சான்றளித்தக் கருத்துச் சரியாகவே இருக்கிறது என்கிறார்.

## அறத்துப்பால்

**பாயிர இயல்**
**நான்கு அதிகாரங்கள்**

1. கடவுள் வாழ்த்து, 2. வான் சிறப்பு, 3. நீத்தார் பெருமை, 4. அறன் வலியுறுத்தல்

**இல்லறவியல்**
**இருபது அதிகாரங்கள்**

5. இல்வாழ்க்கை, 6. வாழ்க்கைத் துணை நலம், 7. மக்கட்பேறு, 8. அன்புடைமை, 9. விருந்தோம்பல், 10. இனியவை கூறல், 11. செய்நன்றி அறிதல், 12. நடுவு நிலைமை, 13. அடக்கம் உடைமை, 14. ஒழுக்கம் உடைமை, 15. பிறன் இல் விழையாமை, 16. பொறை உடைமை, 17. அழுக்காறாமை, 18. வெஃகாமை, 19. புறங்கூறாமை, 20. பயன் இல சொல்லாமை, 21. தீவினை அச்சம், 22. ஒப்புரவு அறித்தல், 23. ஈகை, 24. புகழ்.

**துறவற இயல்**
**ஒன்பது அதிகாரங்கள்**

25. அருள் உடைமை, 26. புலால் மறுத்தல், 27. தவம், 28. கூடா ஒழுக்கம், 29. கள்ளாமை, 30. வாய்மை, 31. வெகுளாமை, 32. இன்னா செய்யாமை, 33. கொல்லாமை

**ஞானம்**
**நான்கு அதிகாரங்கள்**

34. நிலையாமை, 35. துறவு, 36. மெய் யுணர்தல், 37. அவா அறுத்தல்

**ஊழ் இயல்**
**ஓர் அதிகாரம்**

38. ஊழ்

## பொருட்பால்

**அரசியல்**
**இருபத்தைந்து அதிகாரங்கள்**

39. இறை மாட்சி, 40. கல்வி, 41. கல்லாமை, 42. கேள்வி, 43. அறிவுடைமை, 44. குற்றங் கடிதல், 45. பெரியாரைத் துணைக்கோடல்,

46. சிற்றினஞ் சேராமை, 47. தெரிந்து செயல் வகை, 48. வலி அறிதல், 49. காலம் அறிதல், 50. இடன் அறிதல், 51. தெரிந்து தெளிதல் 52. தெரிந்து வினையாடல், 53. சுற்றந் தழால், 54. பொச்சாவாமை, 55. செங்கோன்மை, 56. கொடுங் கோன்மை, 57. வெருவந்த செய்யாமை, 58. கண்ணோட்டம், 59. ஒற்றாடல், 60. ஊக்கமுடைமை, 61. மடியின்மை, 62. ஆள்வினை யுடைமை, 63. இடுக்கண் அழியாமை.

**அங்க இயல்**
**முப்பத்திரண்டு அதிகாரங்கள்**

64. அமைச்சு, 65. சொல்வன்மை, 66. வினைத் தூய்மை, 67. வினைத் திட்பம், 68. வினை செயல் வகை, 69. தூது, 70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல், 71. குறிப்பு அறிதல், 72. அவை அறிதல், 73. அவை அஞ்சாமை, 74. நாடு, 75. அரண், 76. பொருள் செயல் வகை, 77. படை மாட்சி, 78. படைச் செருக்கு, 79. நட்பு, 80. நட்பு ஆராய்தல், 81, பழைமை, 82. தீ நட்பு, 83, கூடா நட்பு, 84. பேதைமை, 85. புல்லறிவாண்மை, 86. இகல், 87. பகை மாட்சி, 88. பகைத் திறம் தெரிதல், 89. உட்பகை, 90. பெரியாரைப் பிழையாமை, 91. பெண் வழிச் சேறல், 92. வரைவின் மகளிர், 93. கள் உண்ணாமை, 94. சூது, 95. மருந்து.

**ஒழிபு இயல்**
**பதின்மூன்று அதிகாரங்கள்**

96. குடிமை, 97. மானம், 98. பெருமை, 99. சான்றாண்மை, 100. பண்பு உடைமை, 101. நன்றியில் செல்வம், 102. நாண் உடைமை, 103. குடி செயல் வகை, 104. உழவு, 105. நல்குரவு, 106. இரவு, 107. இரவு அச்சம், 108. கயமை.

## காமத்துப் பால்

**களவு இயல்**
**ஏழு அதிகாரங்கள்**

109. தகை அணங்கு உறுத்தல், 110. குறிப்பு அறிதல், 111. புணர்ச்சி மகிழ்தல்

112. நலம் புனைந்து உரைத்தல், 113. காதற் சிறப்பு உரைத்தல், 114. நாணுத்துறவு உரைத்தல், 115. அலர் அறிவுறுத்தல்

**கற்பு இயல்**
**பதினெட்டு அதிகாரங்கள்**

116. பிரிவு ஆற்றாமை, 117. படர் மெலிந்து இரங்கல், 118. கண் விதுப்பு அழிதல், 119. பசப்புறு பருவரல், 120. தனிப்படர் மிகுதி, 121. நினைந்தவர் புலம்பல், 122. கனவு நிலை உரைத்தல், 123. பொழுது கண்டு இரங்கல், 124. உறுப்பு நலன் அழிதல், 125. நெஞ்சொடு கிளத்தல், 126. நிறை அழிதல், 127. அவர் வயின் விதும்பல், 128. குறிப்பு அறிவுறுத்தல், 129. புணர்ச்சி விதும்பல், 130. நெஞ்சொடு புலத்தல், 131. புலவி, 132. புலவி நுணுக்கம், 133. ஊடல் உவகை

திருக்குறளின் மூன்று பால்களிலும் உள்ள வகைகளையும் அவற்றிலுள்ள அதிகார விளக்கப் பெயர்களையும், மேலே குறிப் பிட்டுள்ளோம். அவற்றைப் படித்தால் குறளின் விவரங்களைக் கற்றாரும் கல்லாரும் உணரலாம். குறள் நூல் பக்கப் புரட்டல்கள் தேவைப்படாது.

# திருக்குறள் சொற்பொருள் சுரபி

## (Thirukkural Concordance)

# அ

*[அ - தமிழ் மொழியின் நெடுங்கணக்கில் முதல் எழுத்து. உயிர் முயற்சியாற் பிறக்கும் எழுத்துக்களுள் வாயைத் திறந்த உடனே ஒலிக்கும் ஒரு குற்றுயிர். அஃறிணைப் பன்மையீறு. அஃறிணைப் பன்மை வினைமுற்று; ஆறாவதன் பன்மையுருபு. இன்மை, எதிர்மறை, குறைவு, சம்மதம், சாரியை, அந்த, சுட்டு, தடை, பிறிது, வியப்பு, இவற்றைக் காட்டும் இலக்கியச் செய்யுட் கூறுபாடு. தமிழ் எண்ணியலின் எட்டு என்னும் எண்ணின் குறி. அஆ - அதிசய விரக்கக் குறிப்பிலே வரும் ஒரு கூட்டிடைச் சொல், விட்டிசை]*

*ஈண்டு எண் குறட் பாக்களைக் குறிக்கும்.*

---

**அ** = அந்த என்ற பொருளில், *(225, 247, 254, 350, 355, 370, 411, 423, 426, 475, 489, 641, 645, 671, 677, 695, 848, 950, 967, 1091, 1187)* மொத்தம் 21 குறள்களில் 'அந்த' என்ற பொருளை சுட்டுகின்றது. எடுத்துக் காட்டாக 225-வது குறட்பாவில்,

"ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்."

இந்தக் குறளில், அப்பசியை என்ற சொற்றொடரில் வரும் **அப்** என்ற சொல்லின், அ என்ற **எழுத்து** **அந்த** என்ற பொருளைச் சுட்டுகின்றது.

அதனைப் போலவே, மற்ற 20 குறட் பாக்களிலும் அந்த என்ற பொருளைக் குறித்து நிற்கின்றது.

**அஃகாமை** = சுருங்காமை, *(178)*.

**அஃகி** = சுருங்கி, நுண்ணிதாய், *(175)*.

**அஃகி அகன்ற** = ஊன்றி ஆராய்ந்து பெற்ற விரிந்த, நுனித்து அகன்ற, *(175)*.

**அஃதிலர்** = அதனை இல்லாதவர், கண்ணோட்டம் இல்லாதவர்கள், *(572)*.

**அஃது** = அது; அது என்ற நிலை மொழிக்கு முன்னால் உயிர் எழுத்தில் ஆரம்பமாகும் சொல் வரும்போது, அது என்பது பெரும்பான்மையாக அஃது என்றாகும். அது ஒரு சுட்டுப் பெயர் அஃறிணை ஒருமை. எடுத்துக்காட்டாக;

வீழ்நாள் படாஅமை நன்று ஆற்றின்; அஃதுஒருவன்
வாழ்நாள் வழிஅடைக்கும் கல், (38).

இந்தக் குறட்பாவின் 4வது சீர் அஃது ஒருவன் என்றுள்ளது. அது என்ற நிலைமொழிக்கு முன்னால் உயிர் எழுத்தில் ஆரம்பமாகும் ஒருவன் என்ற சொல்லில் 'ஒ', என்ற உயிர் எழுத்து வந்ததால், அது என்ற சொல் அஃது என்றானது.

இதனைப் போன்றே *49, 76, 80, 132, 162, 170, 220, 226, 236, 242, 262, 363, 368, 414, 427, 459, 476, 556, 572, 575, 591, 600, 621, 943, 971, 1001, 1014, 1032, 1093, 1166, 1279, 1308* என்ற குறட்பாக்களிலும் வந்துள்ளன.

**அகடு** = வயிறு, *(936)*.

**அகத்தது** = பிறருடைய மனத்தில் இருப்பதை, *(702)*.

**அகத்தார்** = நிலைக்கு, உள்ளே இருந்து போர் புரிவோர் நிலைக்கு, *(745)*.

**அகத்தான்** = மனத்தில், மனத்துடனாகிய, *(93)*.

**அகத்து** = மனத்து, *( 78)*; இடத்து, இடையில் என்ற பொருளில் *(194, 694, 717, 723, 727, 814, 877, 1020, 1027, 1163, 1180, 1305, 1323)* ஆகிய குறள்கள் வருகின்றன.

**அகத்து உறுப்பு** = உள் உறுப்பாகிய *(79)*.

**அகத்தே** = உள்ளே, *(271)*.

**அகப்பட்டி** = மனம் கட்டுப்பாடற்றவர், தம்மைக் காட்டிலும் குறைந்த; கீழ்மக்களை, *(1074)*.

**அகம்** = மனம் என்ற பொருளில் *(78, 277, 298, 786, 830, 1305, 1323)*; இடம் *(101, 547, 1055)*.

**அகம் நக** = மனம் மலரும்படி யாக, *(786)*.

**அகரம்** = 'அ' என்னும் எழுத்து, *(1)*.

**அகலம்** = பரந்த அகலம், புறத்தோர்க்கு அகழல், ஆகா அடி, *(743)*.

**அகலாக் கடை** = அதிகப்படாமல் இருந்தால், விரிவடையாதிருந்தால், *(478)*.

**அகலாத** = பிரியாத, பிரியாத தற்கு முன்பு, *(1226)*.

**அகலாது** = அதிகமாக விலகிப் போய்விடாது, மிக நீங்காது, *(691)*.

**அகல்** = அகன்ற, பரந்த, விரிந்த, பெரிய, *(25)*.

**அகழ்வார்** = தோண்டுவார், *(151)*.

**அகறல்** = நீங்குதல், நீங்கியிருப்பது, *(1325)*.

**அகற்றும்** = விரிவுப்படுத்தும், விசாலப்படுத்தும், *(372)*.

**அகன்** = அகம், மனம், *(84,92)*.

**அகன்ற** = விரிந்த, *(175)*.

**அகன்றாரும்** = பெருக்கம் பெற்றாரும், பெரியவராயினாரும், *(170)*.

**அங்கணத்துள்** = முற்றத்தில், அழகான கட்டுக்கோப் பான இடத்துள், *(720)*.

**அங்கணம்** = முற்றம், ஆரியச் சொல் என்று இதனைக் கூறுவாருண்டு. இது தமிழ்ச் சொல். அகம் + கண் + அம் என்று இதனைப் பிரிக்கலாம். வீட்டிற்கு வெளியே உள்ள இடத்தை இது குறிக்கும்.

**அங்கம்** = உறுப்பு. இச் சொல்லைச் சிலர் வடசொல் என்பர். இது

'அ' என்னும் சுட்டு அடியாகப் பிறந்து, கூறுபாடு என்னும் பொருள் கொடுக்கும் தமிழ்ச் சொல் என்பதே உண்மை.

**அசாவாமை** = மனந்தளராமை, மெய்யீற்று வியங்கோள் முற்று இது, (611).

**அசை** = துவளுகின்ற தன்மை, அசையும், அசைந்தாடும், (1098).

**அசைஇ** = சோம்பி, சோம் பலாக, (1040).

**அசைஇயற்கு** = அசை இயல் வினைத்தொகை. அசையும் இயல்புடையவளுக்கு.

**அசைவின்மை** = முயற்சி, (371).

**அசைவு** = அசைதல், தளர்தல், சோம்பியிருத்தல், (594).

**அச்சம்** = பயம், நடுக்கம், (146, 501, 534, 1075).

**அச்சாணி** = வண்டிக்குப் போடும் கடை ஆணி. அச்சின் வெளிப் பக்கச் சக்கரத்தில் செருகும் ஆணி, (667).

**அச்சு** = இரு சக்கர வண்டிச் சக்கரம் அச்சு, (475, 667).

**அஞர்** = துன்பம், இடுக்கண், (1086, 1179).

**அஞ்சப்படும்** = பயப்படல் வேண்டும், (202), அஞ்சல் வேண்டும், (824).

**அஞ்சல்** = பயப்படுதல், (428); பயப்படுதலை, (1149); பயப்படாதிரு, (1154).

**அஞ்சல் ஓம்பு** = பயப்படுதலைத் தவிர், (1149).

**அஞ்சற்க** = பயப்படாதிருக, பயப்படாதே, பயத்தை ஒழித்திடுக, (882).

**அஞ்சா** = அடங்கா, (500); பயப் படாத, (725,761,762,778).

**அஞ்சாதவர்** = பயப்படாமல் செல்ல வல்லவர், (723).

**அஞ்சாது** = பயப்படாது, (585).

**அஞ்சாமை** = துணிவு, (382); அஞ்சாதொழிதல், (428); உறுதிப் பாடு, திடபுத்தி, துணிவு, (497).

**அஞ்சார்** = பயப்படார்கள், (201).

**அஞ்சான்** = அவைக்கு அஞ்சா தவன், (647); பயப்படாது, (689).

**அஞ்சி** = பயந்து, (44, 325, 680, 730, 741, 863, 869, 883).

**அஞ்சுக** = அஞ்ச வேண்டும், (882).

**அஞ்சுதும்** = அஞ்சுகின்றேன், (1128).

**அஞ்சுபவர்** = பயப்படுவார், (464, 726, 906).

**அஞ்சும்** = அஞ்சுதற்கு ஏதுவாகிய, (244); அஞ்சுவர், (451); பயப் படுகின்ற, (727); அஞ்சி ஒழுகும், (904); அஞ்சுவான், (905); அஞ்சுவர், (1152); அஞ்சுகின்றது, (1295).

**அஞ்சும் அவன்** = அஞ்சுகின்றவன், (727).

**அஞ்சுவது** = அஞ்சித் தடுப்பது, (366); பயப்பட வேண்டியது; பாவம், (428).

**அஞ்சுவர்** = பயப்படுவர், (201).

**அஞ்சுவார்** = பயப்படுவார், (729).

**அஞ்சுவான்** = பயப்படுகின்றவன்; சினத்துக்கு அஞ்சுகின்றவன், (905).

**அடக்கமுடைமை** = மனம், மொழி, செயல் ஆகியவற்றைத் தீய வழி களில் செல்ல விடாமல் அடக் கிக் கொள்ளுதல், (அதி. 13).

**அடக்கம்** = மனம், மொழி, மெய் களைத் தீயவழிகளில் செலுத் தாமல் இருக்கும் ஒழுக்கம், (121, 122).

**அடக்கல்** = ஒடுக்கல், மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களையும் தீய வழிகளில் போகவிடாமல் தடுத்தல், (126).

**அடங்க** = ஒடுங்க, (123).

**அடங்கல்** = மனதைப் புறவழி களில் புகவிடாமல் அறவழி யிலே நிறுத்தப் பழகுதல், அடங்குதல், தன் கட்டுக்குள் மனதை வசமாக்குதல், (130).

**அடங்கா** = அமைவில்லாத; அவற்றின்படி நடவாத; அடங்கி ஒழுகாத, (834).

**அடங்காமை** = மனம்,மொழி, மெய் களை அடக்காமை, (121).

**அடங்கியான்** = அடங்கியவனது, (124); வருத்துதல், (206); கெடுத்தல், (343); தாக்குதல், போர்செய்தல், (768); கெடுத்தல், கொல்லுதல், (893).

**அடல்வேண்டின்** = தன்னை அழித்துக் கொள்ள விரும் பினால், (893).

**அடி** = தாள், பாதம், (3,4,10, 208,544, 610,1120, 1279).

**அடி அளந்தான்** = திருமால், (610). [குறிப்பு : நாவலர் நெடுஞ் செழியன் தனது திருக்குறள் தெளவுரையில், குறளையே மாற்றி, 'அடி அளந்தான் என்பது சரியல்ல' என்கிறார். ''எய்தும் மடி அளந்தான் என்பதுதான் சரி' என்பது அவரது ஆய்வு. பரிமேலழகரை மறுக்கும் நாவலர், எம்.பி. பூரணலிங்கம் பிள்ளை, மணக் குடவர், பரிதியார், காளிங்கர் போன்ற மேதைகளையும் மறுத்துள்ளார்.]

**அடி உறைதல்** = தாள்களில் வந்து தங்குதல், (208).

**அடிகளுக்கு** = பாதங்களுக்கு, (1120).

**அடிமை** = அடிமையாகும் தன்மை, (608).

**அடு** = வெல்லும், (567); சமைத்த, (1065); காய்ச்சப் பட்ட, (1090).

**அடுக்கி** = மேலும் மேலும், மேன் மேலாகி, (625).

**அடுக்கிய** = தொடர்ந்த; முன் னும் பின்னுமாக வருகின்ற, (525); பலவாக அடுக்கிய, (954, 1005).

**அடுக்கிய கோடி** = பல கோடி, (954, 1005).

**அடுங்காலை** = இறக்கும்போது; கூற்று கொல்லும் வேளை யில், (799).

**அடுங்கால்** = துன்பஞ் செய்யும் போது, (1166).

**அடுத்த** = மடங்கு; மடங்கான, (450, 817).

**அடுத்தது** = தன்னை அடுத்த பொருள்களை, (706).

**அடுத்திருந்து** = தொடங்கியிருந்து, (867).

**அடுத்து** = தொடர்ந்திருந்து, (621); தொடங்கி, (867); நெருங்கி, (1030).

**அடுத்தூன்றும்** = பக்கத்திலே அடுத்து ஊன்றுகின்ற முட்டுக் கோல் போல; நெருங்கித் தாங்கவல்ல, (1030).

**அடுப** = வெல்லுவர், (493).

**அடுமுரண்** = வெல்லும் வலி, (567).

**அடும்** = கொல்லும், (207, 500, 799); வெல்லும், (495).

**அடைக்கும்** = தடுக்கும், (38, 71).

**அடைக்கும்தாழ்** = அடைத்து வைக்கும் தாழ்ப்பாள், (71).

**அடையாவாம்** = சாராவாம், (939).

**அட்டிய** = வார்த்த, (1093).

**அணங்கு** = காம நோயால் உயிர் கொள்ளும் தெய்வப் பெண், (918), தெய்வப் பெண், (1081).

**அணங்குறுத்தல்** = தலைமகள் அழகு துன்புறுத்தல், (109வது அதிகாரம்).

**அணி** = ஆபரணம், அழகு, (95); அழகு, (115, 118, 738, 742, 1014, 1102); ஆபரணம், (701, 1089); அழகு, மலர்ச்சி, (1273).

**அணி இழை** = அழகிய ஆபரண மணிந்த பெண். இது வினைத் தொகை. அணிதலையுடைய என வரும் வேற்றுமை தொகை. அது அன்மொழி ஆனாலும் சரி, ஆகு பெயரானாலும் சரி!.

**அணிகலம்** = அழகு, (575).

**அணி நிழற்காடு** = செறிந்த காடு; அழகிய நிழலை யுடைய வனம், (742).

**அணியுமாம்** = புனையும், அலங் கரிக்கும், பிறரின் தமக் கொரு மிகுதியை ஏற்படுத்திக் கொள் ளும்; தம்மைத் தாமே புகழ்ந்து சிறப்பித்துக் கொள்ளும், (978).

**அணுகாது** = கிட்டாது; நெருங் காமல், (691).

**அண்ணாத்தல்** = வாய் திறத்தல், (மணக்குடவர் இச் சொல்லிற்கு புறப்பட விடுதல் என்கிறார், (255).

**அதர்** = வழி, (594).

**அதற்கு** = அந்தக் கல்விக்கு, (391); அவ்வினை செய்தற்கு, (518); அந்த உரிமைக்கு (802) உயிருக்கு, (1124), ஊருதற்கு, (1330).

**அதனால்** = அது காரணமாக, (303, 642, 1031).

**அதனினும்** = அதிலும் பார்க்க, (152, 1158).

**அதனின்** = அதிலும் பார்க்க, (122, 302); அப்பொருளால், அதனளவு, (341); அதனிலும் பார்க்க, (644, 1166).

**அதனை** = அதை, (32, 77, 152, 262, 495, 517, 621, 859, 1141, 1143).

**அதனோடு** = அதனுடன், (550).

**அதன்** = அவை தமக்கு, (60); அதற்கு என, (323 490, 773); அதை, (1038); அதனுடைய, (1289).

**அதி** = மிக, (636).

ஆனால், ஒரு சிலர் 'அதி' என்ற சொல் வடசொல் என்கிறார்கள். இதைத் தமிழ்ச் சொல் என்றே கூறவேண்டும். ஏனென்றால், அதிகாலை என்று கூறுகிறோம். அந்த அதி என்பது அது என்றும், சுட்டுப் பெயரடியாகப் பிறந்து 'மிக' என்னும் பொருளைக் குறிக்கின்றது.

இவை என்றது நணியவற்றை; உவை என்றது அவற்றிற் சேய வற்றை; அவை என்றது அவற் றில் சேயவற்றை, (பரி. 40 உரை) மிகச் சேய்மையில் உள்ளது 'அதி' எனபபட்டது.

இந்தப் பொருளிலிருந்து அதி என்பதற்கு மிகுதி என்னும் பொருள் வருதல் கூடும். வட

மொழி தொடர்பான அடி வேறு வகையதாகும்.

**அதிர** = நடுங்கும்படி, (429).

**அது** = அஃறிணை ஒருமைச் சுட்டுப் பெயர். (36, 45, 74, 165, 231, 257, 278, 332, 333, 334, 362, 364, 452, 477, 533, 536, 570, 596, 901, 948, 985, 996, 1144, 1166, 1284, 1302, 1307) என்ற குறட்பாக்கள் 'அது' என்றே சுட்டுகின்றன.

**அதூஉம்** = அதும். அது என்னும் முற்றுகரத்தின் மேல் இழிவு சிறப்பும்மையின் உயிரேறி 'உம்' என நின்று, பிறகு செய்யுள் இசையை நிறைவிக்க அளபெடுப்பதால் 'அதூ உம்' என நின்றது, (230, 546).

**அத்தால்** = அதனால், (524).

**அத்து** = சாரியை, (13); உலகத்து, ஒழுக்கத்து, (21).

**அந்தணர்** = அழகிய தண்ணளியை உடையவர்; உயிர்களிடத்துக் கருணை உடையவர், (30); அறவோர், துறவோர், (543).

**அந்தணன்** = கடவுள், (8); மற்றும் சிலர் அறவோர், செந்தண்மை யுடையவர் என்றும் கூறுவர். [ குறிப்பிட்ட ஒரு சாதியைக் குறிக்காது. 'பார்ப்பார் என்றால் திருமறை பார்ப்பார், நாழிகை பார்ப்பார், நிமித்தம் பார்ப்பார்' என்கிறார் நாவலர் தனது உரையில்.]

**அந்நிலை** = அது நிற்குமளவில், (439).

**அந்நிலையே** = அவ்வாறு செய்யாத நிலையில் நின்று; முன்பிருந்த நிலையிலேயே நின்று, (967).

**அப்பால்** = அப் பகுதிகளை யுடைய, (950).

**அப்பால் நாற்கூற்று** = பரிமேலழகர், அந்த நான்கு பகுதி களையுடைய, நான்கு திறத்து. அதாவது உற்றான் முதலிய நான்கு பகுதிகளையும் தனித் தனி நான்கு பகுதிகள் என்கிறார்.

மணக்குடவர் உரையில் "நோயுற்றான்.. முதலிய நான்கு கூற்றது மருந்து என்கிறார். மருந்து பகுதி, (950).

**அப்பொருளை** = அவ்விரகசியத்தை, அந்த மறைபொருளினை, (695).

**அமரகத்து** = போர்க் களத்தே, (1027).

**அமரர்** = தேவர், (121). நாவலர் நெடுஞ்செழியன் "விரும்பு கின்றவர்" என்கிறார்.

இந்தச் சொல்லை வட சொல் என்பர் சிலர். தமிழ்ச் சொல் என்று இதைக் கூறுபவரும் உண்டு. அவர்கள் இந்தச் சொல்லிற்கு இனிது அமர்ந்திருப்பவர் என்பர்.

இந்தச் சொல் வானத்தில் இருப்பவர் என்னும் பொருளில் 'அ' என்ற எழுத்து அமரர் என நின்று; பின் அமரர் என்றாயிற்று எனலாம். அ.இ. உ. என்னும் சுட்டுகளிலிருந்து தமிழிலுள்ள சொற்களில் பெரும்பாலன தோன்றியுள்ளன என்பது தமிழ் மொழி ஆய்வாளர் கூற்று.

**அமராமை** = முன்பு பொருந்தாமை; முன்பு சுற்றமாக, (529).

**அமர்** = போர், (814); அமர் செய் கின்ற, (1083); போரைச் செய்யும், (1125).

**அமர்க்கண்** = போர் செய்கின்ற கண்கள்; அமர்த்தல்; போர் செய்தல், (1083).

**அமர்த்தன** = மாறுபட்டிருந்தன; அவளது நல்லியல்புக்கு மாறு பட்ட தன்மையுடையனவாக இருக்கின்றன. குணங்கட்கும், பேதமைக்கும் ஏலாது கொடிய வாய் இருந்தன என்பதாம், (1084).

**அமர்ந்த** = பொருந்திய, (75).

**அமர்ந்து** = மகிழ்ந்து, (84); மலர்ந்து, விரும்புதல், விரும்பி, (92); பொருளாக, (93).

**அமிழ்தும்** = சாவா மருந்து என்பர் சிலர். சுவை உணவு என்பர் மற்றும் சிலர். இந்தச் சொல். அம்ருத என்னும் வடசொல்லின் வேறுபாடு என்பர்.

இன்பத்தில் ஆழ்த்தும் சுவை யுணவு அமிழ்தம் என்று பொருள் கூறி, இச்சொல் தமிழே என்றும் சொல்வர் தமிழர்.

இந்தச் சொல் 'ழ' கர உச் சரிப்பு பெற்றுள்ளது. உலக மொழி களில் 'ழ'கர ஒலி எந்த மொழி யிலும் இல்லை. தமிழில் மட்டுமே 'ழ'கரம் தனிச் சிறப்பு ஒலி பெற்ற மொழியாக நீண்ட நெடுங் காலமாக இருப்பதால், இது தமிழ்ச் சொல்லே.

கட்டுமரம் என்ற தமிழ்ச் சொல் ஆங்கில மொழியில் கட்டமரான் ஆனது போல, 'அமிழ்தம்' என்ற சொல்லே வடமொழியில் 'அம்ருத'மாக மாறியிருக்கின்றது. ஏனென்றால், வடமொழியில் 'ழ'கர ஒலி இல்லையே! அதனால்.

**அமிழ்தினும்** = அமிழ்தத்தினை விட. உம்மை - உயர்வு சிறப்பு, (64).

**அமிழ்தின்** = அமிழ்தத்தைவிட, (64); அமிழ்தினால், (1106).

**அமிழ்து** = அமிர்தம், சுவையுணவு, (64, 720, 1106).

**அமை** = மூங்கில், (906).

**அமைகலா** = செய்யமாட்டாத; செய்ய மாட்டாது, (219).

**அமைச்சு** = திருக்குறளில், அமைச்சர்களது கடமைகள், ஆற்றல்கள் கூறும் 64-ம் அதி காரம். வடமொழி பற்றாளர்கள் அமைச்சர் என்ற சொல் ஆமாத் தியர் என்ற வட மொழியிலே யிருந்து பிறந்ததாகக் கூறுவர். அமைவு என்ற சொல்லிலே யிருந்து இது பிறக்கவில்லை. ஆமாத்தியர்தான் வேர்ச் சொல் லென வாதிடுவர். பொருந்த வில்லை அவர்கள் வாதம். 381-வது குறளின்படி அரசியல் பகுதியின் இறை மாட்சியில் அமைச்சு ஓர் உறுப்பினன் ஆவான். அந்த அமைச்சன் 631, 632, 633, 634 குறட்பாக்களில் கூறப்பட்ட எல்லாவித ஆற்றல் களையும், பண்புகளையும் உடையவனாக இருக்க வேண் டும். இவை அமைவு பண்பு கொண்ட அறிவுடையோன், அடக்கமுடையோனிடம் மட்டும் தான் பொருந்தும். எனவே, அமைவு என்ற சொல்லிலே இருந்து அமைச்சன், அமைச்சர் என்ற சொல் தோன்றுவதுதான் இயல்பு, இயற்கை.

**அமைதல்** = பொருந்துதல்; நட்பு கொள்ளல், (825), அளவுக்கு அமைதல்; கலவி இன்பத்தில் சேருதல், (1302).

**அமைந்த** = அடக்கமான, (635); பெரிய, (900).

**அமைந்தக் கண்ணும்** = வாய்த்த விடத்தும், (606).

**அமைந்தற்று** = வேண்டுமளவில் ஆவதுபோல, (1302).

**அமைந்தார்** = கணவனாக அமைந் தவரது அல்லது காதலரது, (1155).

**அமைந்தின்று** = அமைந்தது இல்லை; அமையவில்லை, (340).

**அமைந்து** = தன்மைகளால் நிறைந்த தென, (118); சமாதானப்பட்டு பொருந்தியென, (474); நிறைந்தது என்று, (761).

**அமையல** = இருக்க முடியவில்லை; மனநிறைவில்லை, (1283).

**அமையா** = 'வாழ முடியாத', இல்லாமல் இயலாத, (961).

**அமையாக் கடை** = ஏற்றுக் கொள்ளாத இடத்தில்; உடன் படாத விடத்து, (803).

**அமையாத** = முடியாத, (682); பொருத்தமில்லாத, (825).

**அமையாது** = நடக்காது; முடி யாது, (20).

**அமையார்** = அமை+ஆர் மூங்கில் போன்ற, (906).

**அமையும்** = உண்டாகும், (298); துன்பத்தைப் போக்குவதற் குப் போதுமானது, (708); ஏற்புடையது, (1193).

**அமைவர்** = பழகுபவர், மேவுவர், (580).

**அமைவில** = பொறுக்கின்றில, (1178).

**அமைவிலன்** = பொருத்தம் இலன், (862).

**அமைவிலாத** = பொருத்தமில்லாத, (740).

**அமைவு** = பொருந்துதல்; மேவு தல்; வேத்தமைவு. எனவே, குடிகள் அவன்மேல் அன்புடை யராதலும், அவன் மக்கள் மேல் அன்புடயனாதலும் அடங்கின, (740); மிகுதி, (743); அமைதல், (1178).

**அமைவுஇலன்** = மற்றவர்களோடு பொருத்தம் இலன், (863).

**அம்** = அழகிய, (1107).

**அம்பினில்** = அம்பினும், அம்பை வைத்திருப்பதைவிட, (772).

**அயர்கம்** = உண்போமாக, செய் வோமாக, (1268).

**அரங்கு** = இந்தச் சொல்லை வடசொல் என்பாரும் உளர். **அரங்கு, அறு என்னும் அடியாகப் பிறந்தது;** அவ்வாறானால் கோடு அறுத்தல்; வகுத்தல் எனும் பொருளுடையது. அரம் கொண்டு இரும்பை அராவு தலை, அறுத்தலை நாம் பார்த்துள்ளோம். எனவே, அரங்கு தமிழ்ச் சொல்லே.

அரங்கு என்றால் சூதாடு கோடுகள்; சதுரங்கக் கோடுகளை யும் பொருள் குறிக்கும். சூதாடு களம், (401).

**அரசர்** = வேந்தர், (381). இது ராஜா எனப்படும் வட சொல்லின் திரிபு என்பர். ஐரோப்பிய ஆரிய மொழிகளில் இந்த சொல் இல்லை. இது தமிழச் சொல்லே. அரசு என்ற தமிழ்ச் சொல் வட மொழியில் ராஜா என வழங்கு கிறது என்பது ஆய் வாளர் முடிபு. அரண்களை உடை யவன்தானே அரசன்?

**அரசு** = அரசன்; அரசனுடைய பண்புகள், தன்மைகள், கடமை கள் ஆகியவற்றை, (384, 385, 554) குறட்பாக்களில் கூறப் பட்டிருப்பதைக் காணலாம்.

**அரண்** = கோட்டை; கோட்டை மதில், (381, 421, 492, 741, 750); காவல், பாதுகாப்பு, (534).

**அரம்** = அராவும் கருவி, (567, 888, 997).

**அரம்பொருத** = அரத்தால் தேய்க்கப்பட்ட, *(888)*.

**அரிது** = ஆகாது, முடியாது, *(7, 8, 29, 101)*; இல்லை, *(177, 227, 235, 248, 606, 647, 693, 762, 823, 843, 886, 1049, 1153, 1155, 1156, 1160, 1180, 1276)*; உண்டாகாது, அருமை யுடையது, *(377, 419, 499)*.

**அரிது ஆற்றி** = பிரிவுக்கு உடன் பட்டு, *(1160)*.

**அரிதே** = அரியது, *(213, 443, 503)*.

**அரிந்தற்று** = அறுத்தார் போலும், *(1304)*.

**அரிய** = அரியவை, சுலபமாக, எளிதில் முடியாதவை, *(26, 489)*; அரிய நூற்களை அதாவது மன்னர்கட்குரிய போர் நூல், பொருள் நூல், ஆட்சி நூல் முதலியன, *(503)*; அரியவை, *(537, 664, 781)*.

**அரியது** = அரிய காலம், *(489)*; அருமையுடையது, *(747)*.

**அரியர்** = சிலர், பெறுதற்கு அரியர், *(723)*; நாம் காமம் மீதூர்தற்கு அரியர், *(1138)*.

**அரியவற்றுள்** = அரிய பேறுகள் எல்லாவற்றுள்ளும், *(443)*.

**அரியவை** = பொறுத்தற்கரியன, *(693)*.

**அரிவை** = பெண், *(1107)*.

**அரு** = அரிய, அரியதான, *(483, 631, 647)*.

**அருங்கேடன்** = அரிதாகிய கேடு களை உடையவன், *(210)*.

**அருங்கேடு** = அழிவில்லாமை, *(732)*.

**அருஞ்செவ்வி** = தன்னைப் பார்க்க வருபவர்க்குச் சமயமின்மை, *(565)*.

**அருட்செல்வம்** = அருளால் வரும் செல்வம், அருளுடைமை யாகிய செல்வம், *(241)*.

**அருட்பொருள்** = அருளாகிய பொருள், *(914)*.

**அருந்தியது** = உண்டது, *(942)*.

**அருப்பு** = கிளைத்தல், அரும்பி வளர்தல்; அரும்பு, *(522)*.

**அருமறை** = அரிய இரகசியங் களை, *(847)*.

**அருமை** = முடியாமை, கடுமை, *(611)*; பொறிகள் இருப் பதால் கடத்தற்கு அருமை, *(743)*; அடைதற்கு அருமை, *(1142)*.

**அருமை உடைய** = பிறர் செய்தற்கு அருமையுடைய, *(975)*.

**அரும்** = அறிதற்கரிய, *(198)*; பெற முடியாத, *(462)*; இன்மை, *(732)*.

**அரும்பயன்** = அருமை தரும், நன் மை தரும் செயல்கள், *(198)*.

**அரும்பி** = உண்டாக்கி, *(1223)*; முகிழ்த்து, மொட்டாகி, *(1227)*.

**அருவினை** = முடித்தற்கருமை யுடைய செயல், *(483, 631)*.

**அருளல்லது** = பாவம், உயிர்க் கொலை, *(254)*.

**அருளற்றார்** = அருள் இல்லா தவர்கள், *(248)*.

**அருளாட்சி** = அருளால் வரும் பயன், *(242)*.

**அருளாதான்** = அருள் இல்லா தவன், இரக்கம் கொள்ளா தவன், *(249)*.

**அருளாள்க** = கருணையுடைய செயல்களில் பழகுக, *(242)*.

**அருளின்மை** = கருணையின்மை, *(1209)*.

**அருளென்னும்** = அருளாகிய, *(757)*.

**அருளொடும்** = அருளுடைமை யோடும்; குடிகளிடத்துச் செய்யும் அருளோடும், (755).

**அருள்** = அருளொழுக்கத்தை; துறவு, (176); கருணை அருள் உடைமை, (அருளுடைமை, என்பது என்னவென்றால், "யாதானும் ஓர் உயிர் துன்பப் படுமிடத்து, தனது உயிர் வருந் தினாற்போல் வருந்தும் நீர்மை" என்கிறார் இளம்பூரணர் எனும் உரை மேதை. (241, 248, 251, 252, 254, 285, 938).

**அருள் ஆள்வாற்கு** = கருணை உடையவனாய் இருப் பவனுக்கு, (244).

**அருள் பொருள் ஆயும்** = அருளைப் பொருளாக ஆராயும்; அரு ளோடு கூடிய பொருளை ஆராய்ந்து செய்யும், (914).

**அரோ** = அசைநிலை, ஈற்றசை, (1153, 1256).

**அலகு** = நெற்கதிர், நெல், (1034).

**அலகை** = பேய், (850).

**அலந்தாரை** = துன்பமடைந்திருப் பவரை, (1303).

**அலரறிவுறுத்தல்** = களவொழுக் கத்தை அறிந்த மற்றவர்கள், ஊரார்கள் தூற்றுதல், தனக்கு நன்மையானவைகளை நாயகன் நாயகி தோழிக்குத் தெரிவித்தல் (அதிகாரம் 115 அலர் அறிவித்தல்).

**அலர்** = ஊரார் அறிதல்; உறவு முறையில் பலர் அறிதல், (1141, 1142, 1146, 1149, 1296, 1301).

**அலர் எழ** = பிறர், உற்றார், ஊரார் அறிந்து தூற்றுதல், எழுதல், (1141).

**அலர் நாண** = அலர் தூற்றுவதற்கு வெட்கப்பட, (1149).

**அலை** = அலையும் தொழில் வருந்துதல், (551).

**அலைக்கும்** = தொந்தரவு கொடுக்கும், (735).

**அல்** = அல்லாததாகிய, (301); ஆகா, (1299); அல்லாத, (1300).

**அல்ல** = ஒழிந்த, (61); ஆகா, (95); இல்லை, (115, 1012); நடு வல்லாதவற்றை, (116); பாவங்கள், (150); அல்லாதன, (157, 173); பாவம், (181); அல்லாத, (289); இல்லை, (279); அன்றி, (337); அல்லாத வற்றை, (466, 700, 944, 962).

**அல்லதற்கண்** = துன்பத்தில், (798).

**அல்லது** = அல்லாதது, (108); இல்லது, (231, 254); அல்லா மல், (491, 570, 751, 951, 1131, 1159, 1168); செய்வ தல்லது (1090); குற்றமுள்ளது செய்யக் கருதின், (795).

**அல்லம்** = அல்லாதவராவோம், (1209).

**அல்லர்** = அவர் இல்லை, (143, 880, 926, 973); அல்லராதல், (1300).

**அல்லல்** = துன்பம், (245, 379, 460, 555, 626, 787, 936, 938, 1160, 1301, 1303).

**அல்லவரை** = அல்லாதவரை, (751).

**அல்லவற்றை** = இல்லாதவற்றை, (351).

**அல்லவை** = பாவங்கள், தீமைகள், (96, 164, 182, 246); தவமல்லாத தீய ஒழுக்கங்கள், (274); அருளல்லாதவை, (384); அற மல்லாதவற்றை, (551); பிறவற்றை, (1286).

**அல்லற்கண்** = இடுக்கண் நேர்ந்த விடத்து, (798).

**அல்லனேல்** = அல்லாதவனாயின், *(386)*.

**அல்லாதவர்க்கு** = இல்லாதவர்க்கு, *(1077)*.

**அல்லார்** = அல்லாதார், *(266, 419, 720, 822, 973)*.

**அல்லார்க்கு** = அல்லாதவர்க்கு, *(726, 918, 999)*.

**அல்லால்** = அல்லது, அல்லாமல், *(7, 8, 16, 233, 235, 377, 406, 497, 515, 762, 1095, 1183)*.

**அல்லாவார்** = வருந்தார், *(593)*.

**அல்லிடம்** = செல்லாதவிடம், தன்னைக் காட்டிலும் வலி மையான இடம், *(301)*.

**அல்லை** = நீ அப்படி இல்லை, *(1221)*.

**அல்வழி** = ஆகாதபோது, துணை யாக வராவிட்டால், *(1299, 1300)*.

**அவம்** = வீண்; கேடு, *(262)*; பயனில்லாதன, *(266)*.

**அவரின்** = அவரிலும் பார்க்க, *(1074)*.

**அவர்** = மக்கள், *(63, 65)*; ஒருவர், *(109)*; இன்னா செய்தார், *(314)*; துறவாதவர், *(348)*; கல்லாதவர், *(410)*; கேள்வியுடையவர், *(417)*; உடையவார், *(653)*; உடையார், *(112, 721, 807, 977, 1016)*; ஈபவர், *(1051)*; கயவர், *(1071)*; காதலர், *(1152, 1155, 1156, 1182, 1183, 1184, 1188, 1198, 1204, 1236, 1242, 1244, 1249, 1255, 1261, 1293, 1297, 1321)*.

**அவர்க் கண்ட** = அவரைக் கண்ட, *(1177)*.

**அவர்க் காணாது** = அவரைக் காணாது, *(1178)*.

**அவர்க் காதல்** = அவருக்காக நிற்றல்; அவர் எண்ணியதற்கு ஒத்துப் போதல், *(1291)*.

**அவர் பழி** = இரக்கப்பட்ட வர்க்குப் பழியல்லது, *(1051)*.

**அவர் பொருள்** = அவர்களைப் பெறுதலாகிய செல்வம், *(63)*.

**அவர் வயின் விதும்பல்** = பிரிந் திருந்த நாயகனை மனைவியர் காதல் வேட்கையால் தம்முள் ஒருவரை ஒருவர் காணுதற்கு விழைதல் விரைதல், (அதிகாரம் *127*). 'அவர் வயின் விதும்பல்' என்பது, பிரிந்திருக்கும் நாயகனும் நாயகியும், காதல் வேட்கை அதிகமானதால் அவர் களுள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கலந்துரையாட விரும்புதலாகும்.

**அவலம்** = கவலை, *(1072)*.

**அவள்** = அந்தப் பெண், *(1093, 1113, 1279)*.

**அவற்றின்** = பகை இரண்டனுள் ஒன்றை, *(875)*.

**அவற்றுள்** = செல்வங்களுள், *(61)*; அவைகளுள், *(504)*.

**அவனின்** = அவன் போல, *(526)*.

**அவன்** = நிறைந்திருக்கும் தன்மை யுடைய அவன், *(684)*; கற்றார் அவைக் களத்து அஞ்சுபவன், *(727)*.

**அவா** = ஆசை, *(35, 361, 364, 365, 366, 368, 369, 370, 513)*; விரும்பப்படும் பொருள், *(1075)*; ஆசை, *(1310)*.

**அவாம்** = விரும்பிச் செய்யும், *(215)*; விரும்பும், *(681)*.

**அவாய்** = அவாவி; விரும்பி, *(643)*.

**அவாவின்மை** = பொருள்மேல் ஆசை இன்மை, *(513)*.

**அவி** = அவி என்பதே வடமொழியில் ஹவிஸ் என வழங்கப் படுகிறது என்பர் மொழி ஆய்வாளர். தமிழில் அவித்துப் படைப்பதை அவி எனப்படுகின்றது. அவியல் என்ற உணவுப் பொருளை உண்டோரும் இதனை அறிவர். நெய், (259); வானோர்களை நினைத்து ஹோமத்தில் சொரியும் நெய் முதலியன, (413).

**அவித்தான்** = அறுத்தான், (6); அடக்கியவனது, (25).

**அவித்து** = நீக்கி, தவிர்த்து, (694).

**அவியின்** = இறந்தால், (420).

**அவிர்** = விளங்கும்; ஒளி விடுகின்ற, (1117).

**அவை** = சபை, (67); அரங்கு, (332); அது என்பதன் பன்மை அவை, (400, 658, 659); சபை, (711, 717, 723, 725, 727, 729); அப்பொருள்கள், (1105).

**அவை அஞ்சாமை** = சபையில் எழுந்து பேசும்போது அஞ்சாதிருத்தல்.

இது, திருக்குறளில் வரும் 73-வது அதிகாரம். அறிஞர்கள், பண்பாளர்கள், கல்விமான்கள் கூடியுள்ள அவையில், திறமையும், தகுதியும் பெற்ற ஒருவர் உரையாற்றத் துவங்கும்போது, அந்த அவையைக் கண்டு அஞ்சாமல் உரை முழக்கமிடல் வேண்டும் என்பதாகும்.

**அவை அவை போலுமே** = விரும்பப்படும் அந்த அந்த பொருள்கள் வந்து இன்பம் தருவது போலும், (1105).

**அவை அறிதல்** = அரசனைச் சூழ்ந்திருப்பவரின் மனநிலையை அறிந்து பேசுதல்.

திருக்குறளில் இது 72-வது அதிகாரம். அறிவுடையார், கல்வியாளர்கள், சான்றோர்கள் கூடியுள்ள அவையில் ஒருவன் பேச எழும்போது, அந்த அவையில் குழுமியுள்ளோர் யார்? எத்தகையர்? அவர்கள் உணர்வுகள் யாவை? என்பனவற்றை நன்றாக அறிந்துணர்ந்து பேசுதலே அவை அறிதல் எனப்படும்.

**அவை நீக்கி** = தீயவழியிலிருந்து நண்பனை நீக்கி, (787).

**அவையத்து** = சபையில், (67).

**அவ்** = அந்த, (254).

**அவ்வது** = அவ்வாறு, (426).

**அவ்வித்து** = பொறாமைப்பட்டு, (167).

**அவ்விய** = அழுக்காற்று, (164).

**அவ் வுலகம்** = வீட்டுலகம், (247).

**அழ** = வருந்தி, (659).

**அழச்சொல்லி** = கண்டித்துச் சொல்லி, அழும்படிக் கூறி அவற்றை விலக்கி, (795).

**அழப்போம்** = சேர்த்தவன் அழுமாறு போய் விடும், (659).

**அழல்** = நெருப்பு, (1228).

**அழிக்கல்** = அழித்தல், கெடுத்தல், (421).

**அழிக்கும்** = கெடுக்கும், (934).

**அழிதல்** = கண் விதுப்பு அழிதல். காதலர்கள் ஒருவரை ஒருவர் விரைந்து காண வேண்டும் என்று வருந்துவதாகக் கூறுதல், (அதிகாரம் 118).

**அழித்து** = உணர்வைக் கெடுத்து, (359); அந்தப் பார்வையை மாற்றி, (775); மதித்து, அதற்கு மாறாக, (1317).

**அழிந்து** = கெட்டு, (498).

**அழிபசி** = அதிகப்பசி, மிக்கப் பசி, (226).

**அழிப்பது** = கெடுப்பது, (744).

**அழிய** = அழியும்படி, (968).

**அழிவதூஉம்** = அழிவதனையும், (461).

**அழிவந்த** = அழிவு வந்தவை, (807).

**அழிவிலான்** = கலக்கமில்லா தவன், (625).

**அழிவின் அவை** = அழிவைத் தருகின்ற தீய வழிகள், (787).

**அழிவின்று** = போரில் கெடுதல் இல்லை, (764).

**அழிவு** = கேடு, (615, 764, 876).

**அழீஇ** = அழித்துச் சொல்லி, (182).

**அழுக்கறுப்பான்** = பொறாமை கொள்வான், (163, 166).

**அழுக்கற்று** = பொறாமை கொண்டு, (170).

**அழுக்காறு** = பொறாமை, (35, 135, 161, 165, 167, 168).

**அழுக்காற்றின்** = பொறாமை யினின்று, (162); அழுக்காறு ஏதுவாக, (164).

**அழுத** = அழுவதால் சிந்திய கண்ணீர், (555, 828).

**அழுத கண்ணீர்** = அழுதலால் ஏற்பட்ட கண்ணீரும், (555); அழுகின்ற கண்ணீர், (828).

**அழுதாள்** = புலம்பினாள்; அழலாயினாள், (1318); அழுந்தும்; வருந்தும், (835).

**அளக்கும்** = அளந்து அறியும், (710).

**அளந்தான்** = கடந்தான், (610).

**அளப்பது** = அளந்தறிவது, அளப் பதற்கு கருவியாக உள்ளது, (796)

**அளவல்ல செய்து** = அளவற்றத் தீயச் செயல்களைச் செய்து, (284).

**அளவளாவு** = நெஞ்சு கலத்தல், (523).

**அளவில்** = நேரத்தில், (1187).

**அளவினான்** = அளவு கடவாத, வேண்டப்படும் அளவுக்கு, (574).

**அளவிறந்து கெடும்** = எல்லை யைக் கடந்து கெடும், (283).

**அளவின்றிப்படும்** = அள வில்லாமல் உண்டாகும், (947).

**அளவு** = வரை, (224); எல்லை, (283); அளத்தல், (287, 288); நேர்மை அறிந்தார், (289); நேர்மையற்ற செயல் செய்து, வலியின் அளவு, (474); பொருளின் அளவு, (477, 478, 479); அளவை நூல், (725); காலம் வரை, (848); செரிக்கும் அளவு, (943); பசியளவு, (947); நோயாளியின் பருவம், பிணிகள் வலிகளின் அளவு, (949).

**அளறு** = நரகம், (255, 835, 919).

**அளவாவிய** = அளைந்த, துளாவிய, (64).

**அளி** = கருணை, முகமலர்ந்து, இன்சொல் கூறுதல், (390); அருள், (557, 1192, 1209, 1322).

**அளிக்க** = காக்க, (387).

**அளிக்கும்** = செய்யும், (1192, 1312).

**அளிக்கும் ஆறு** = செய்யும் வகை, (1321).

**அளித்து** = அருளி, (1154); அரு ளுடையதாயிருந்தது, (1168); நன்றாகின்றது, இரங்கத் தக்கது, (1256).

**அளியர்** = இரங்கத் தக்கவர், அன்பு காட்டத் தக்கவர், *(1138)*.

**அளைஇ** = கலந்து, அளாவி, *(91)*.

**அள்ளிக் கொள்வற்றே** = அள்ளிக் கொள்ளும் பொருள் போலக் குவிந்தது. என்னை முழுவதும் அப்படியே வாரிக் கொள்வது போலப் படரத் தொடங்கிற்று, *(1187)*.

**அற** = நீங்க, ஒழிய, *(184, 268, 391)*; முழுமையாக, *(465)*; நீங்க அல்லாமல், *(717, 845)*.

**அற ஆழி** = அறக் கடவுளாகிய, அறக்கடலாக விளங்கும், அறம் பூண்டவர், *(8)*.

**அறஞ்சாரா நல்குரவு** = அறத் தோடு பொருந்தாத வறுமையுடையவன் என்பர் **பரிமேலழகர்;** அறத்தோடு பொருந்தி வராத வறுமை அடைய நேர்ந்தால்; **நாவலர் நெடுஞ்செழியன்;** பொருளையும் சிந்தித்து நல்கூர்தல் என்பர் **மணக்குடவர்,** *(1047)*.

**அறத்தாறு** = அறத்தின் பயன், *(37)*.

**அறத்தாற்றின்** = அறவழியில், *(46)*.

**அறத்திற்கும்** = அதிற் கூறப் பட்டுள்ள அறத்திற்கும், அற நூலிலுள்ள நெறிகட்கும், *(543)*.

**அறத்திற்கே அன்பு சார்பு** = அறத் திற்கே அன்பு துணையாக இருக்கும், *(76)*.

**அறத்தின்** = நல்வினையிலும், அறத்தினைவிட, *(31,32)*.

**அறம்** = தருமம், *(8)*; துறவறம், *(23)*; நன்மை, *(31,32)*; தருமம், *(35* முதல் *39, 46, 93, 96, 185, 249, 288, 296, 297, 501, 1018, 1019, 1047)*; தவம் *76*; அற நெறி, *(77)*; அறவோர் ஒழுக்கம், *(130)*; அற நூல்களையும், *(141, 189)*; அறம் என்னும், *(181)*; அறமென்பது அறநூலை; இது ஆகுபெயர், *(183)*; அறக் கடவுள், *(204)*.

**அறம் நாணத் தக்கது** = அறம் அவனிடம் தங்கியிருக்க வெட்கப்படும் அல்லது நாணும், *(1018)*.

**அறம் நோக்கி** = அறம் என்று எண்ணி, *(189)*.

**அறல்** = சமித்தல், செரித்தல், *(1326)*.

**அறவினை** = அறச் செயல், *(33, 321)*; அறச்செயல்களைச் செய்தல், *(909)*.

**அறவோர்** = துறவோர், தண்ணளியாகிய அறத்தையுடையோர், *(30)*.

**அறன்** = அறம், நல்வினை, நற் செயல், அறநெறிகள், *(34, 40, 45, 48, 49, 142, 147, 148, 150, 157, 163, 173, 179, 182, 189, 366, 384, 441, 635, 644, 754)*.

**அறன் அழீஇ** = அறத்தை அழித்து இழிவாகப் பேசி, அறம் என்ற ஒன்று இல்லை என்று அழித்துச் சொல்லி, *(182)*.

**அறன் ஆக்கம்** = அறத்தையும் செல்வத்தையும், *(163)*.

**அறன் எனப்பட்டது** = இல்லறம், துறவறம் என்ற இரண்டறங் களுள் அறமென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது, *(49)*.

**அறன்கடை** = பாவம், தீய நெறி, *(142)*.

**அறன் சொல்லும் நெஞ்சம்** = மற்றவர்கள் செய்யும் நன்மை களை நெஞ்சாரக் கூறும் மனம், *(185)*.

**அறா** = நீங்காத, *(552, 1295)*.

**அறி** = அறிந்த, *(218)*.

**அறிக** = உணர்க, அறிந்து கொள்க, *(116, 210)*.

**அறிகல்லாதவர்** = அறிய மாட்டா தவர், *(427)*.

**அறிகிலார்** = அறியாதிருக் கின்றார், *(1139)*.

**அறிகொன்று** = அறிந்தவர் சொல்லை அல்லது அறிவுறுத்து வோர் அறிவை ஏற்காமல் அதனை அவமதித்து அல்லது அழித்து, *(638)*.

**அறிதல்** = தான் துப்புத் துலக் கும் ஒற்றாடலால் அறிதல், *(582)*, செய்யத் தக்கதை அறிதல், *(632)*.

**அறிதோறும்** = நூல்களை ஆய்ந் தாய்ந்து புதுப்புது பொருளை அறியும் தோறும், *(1110)*.

**அறிந்த** = அறியவல்ல, அறி வினால் ஆராயத்தக்க, அறி வுடைய, *(61)*; பயன்படுத்த, அறிந்த, *(721)*; அறிவதால் உண்டான, *(1143)*.

**அறிந்த கடைத்தும்** = அறிந்த விடத்தும், *(637)*.

**அறிந்தது** = அறியப் பெற்றது, *(1226)*.

**அறிந்தவை** = கேட்டறிந்த செயல்கள், *(587)*.

**அறிந்தார்** = அறிந்தவர்கள், பயின்ற வர்கள், *(288)*; ஆராய்தல் வல்லார், *(717)*.

**அறிந்தான்** = அறிந்தவன், *(635)*.

**அறிந்து** = மற்றவர்களால் அறியப் பட்டு, *(123)*; உணர்ந்து, *(136, 164, 179, 427, 441, 469, 472, 477, 483, 493, 494, 515, 635, 637, 644, 645, 687, 696, 711, 721, 725, 729, 754, 767, 793, 878, 943, 944, 946, 981)*; எண்ணி, *(1128)*; அறிந்திருக் கும், *(1287)*; கருதி, *(1312)*.

**அறிந்தேன்** = தெரிந்து கொண்டேன், *(1083)*.

**அறிய** = பிறரறிய, *(590)*; அறிந்து நடக்கும்படி செய்ய, *(795)*.

**அறியலம்** = அறியமாட்டேன், *(1257)*.

**அறியா** = அறியாததாய், *(736)*; அறியாத, *(836)*; அறிய மாட்டாது, *(1116)*.

**அறியாது** = அறியமாட்டாது, *(1142)*.

**அறியாமை** = அறியாமல், *(440)*; மறப்பு, *(925)*; முன்னிருந்த அறியாமை, *(1110)*.

**அறியார்** = கண்டறியார், *(228)*; தெளிய மாட்டார், அறியாமை உள்ளவர்கள், *(76, 337)*; அறியாதார், *(507)*; அறிய முடியாதவராகி, *(713)*; அறிய மாட்டார், *(1141)*.

**அறியார்க்கு** = எந்த வகையிலும் அறியாதவர்களுக்கு, *(877)*.

**அறியார் கொல்** = வாழ்நாளில் கண்டறிய மாட்டார்களோ, *(228)*.

**அறியான்** = அறிவதும் செய் யாது, *(474)*; அறியான் ஆயி னும், *(638)* அறிய வேண்டிய வற்றை அறியானாகவும், *(863)*.

**அறியும்** = அனுபவிக்கப்படும், *(1101)*; அறிந்து கொள்ளும், *(1308)*.

**அறியேன்** = களித்து அறியேன், *(928)*; அறியமாட்டேன், *(1083, 1125, 1207)*.

**அறிவது** = கண்டறிவது, மதிப்பது, *(61)*; ஒன்றனை அறிவது, *(293)*; அறிந்து கொள்வது, *(1255)*.

**அறிவல்** = அறிவேன், *(1129)*.

**அறிவறிந்து** = அறியவேண்டியவற்றை அறிந்து, *(123)*; அறிவினால் அறிய வேண்டியவற்றை அறிந்து, *(618)*.

**அறிவன்** = மெய்யறிவினை உடையவன்; அறிவாற்றலில் சிறந்தோன், கடவுள், *(2)*.

**அறிவாம்** = அறிந்து செய் வோம், *(36)*.

**அறிவாரின்** = அறிகின்றவரினும், *(1072)*.

**அறிவார்** = அறிந்தவர், *(427, 428, 995, 1053)*.

**அறிவாளன்** = அறிவினையுடையவன், *(215)*.

**அறிவான்** = அறிகின்றவன், *(214, 318, 677, 701)*.

**அறிவிப்ப** = உணர்த்துவ, *(1233)*.

**அறிவிலா** = அறிவில்லாத, நீதியை அறியாத, *(869)*.

**அறிவிலார்** = அறியார், அறியாதார், *(140)*.

**அறிவிலான்** = புல்லறிவாளன், *(847)*.

**அறிவில்லார்** = அறிவில்லாத மற்றவர்கள், *(1140)*.

**அறிவினவர்** = அறிவினையுடையவர், *(857, 915, 918, 941)*.

**அறிவினார்** = அறிவினையுடையார், *(198)*.

**அறிவினார்க்கு** = அறிவினை உடையவர்க்கு, *(429)*.

**அறிவினான்** = தான் பெற்றுள்ள அறிவினால் (நாவலர் நெடுஞ்செழியன்); துறவிகள் தாம் பெற்ற அறிவினால் (திருகுறள் முனிசாமி உரை); அறிவால் (பரிமேலழகர் உரை) அறிவுடையனாகிய அதனால், (மணக்குடவர்) *(315)*.

**அறிவினுள்** = அறிவுத் திறன்களுள், *(203)*.

**அறிவு** = அறிவுடைய, *(61)*; அறிவோடு இணைந்த கல்வியறிவு, *(68)*; அடங்குவது தான் நமக்கு அறிவென்று, *(123)*; கல்வியறிவு, *(174, 179)*; அறியும் தன்மை, *(214, 287, 331, 355, 358, 373, 382, 396, 404, 421, 427, 430, 441, 454, 507, 513, 622, 682, 684, 842, 847)*.

**அறிவு அறிந்து** = அறிய வேண்டியவற்றை அறிந்து, *(618)*.

**அறிவு ஆண்மை** = அறிவினையுடையவராய் இருத்தல், *(287)*.

**அறிவுடைமை** = கல்வி கேள்வி அறிவொடு பகுத்தறியும் உண்மை. [இது திருக்குறளின் 43-வது அதிகாரம். ஒருவன் கல்வி கேள்விகளினால் அறிவுடைமை பெறுவதும், அவற்றால் பயனடைவதும், அவன் உண்மை அறிவுடையனாவது குறித்தும் கூறப்பட்ட அதிகாரமாகும்.]

**அறிவுடையார்** = அறிவுடையவர், *(463, 816)*; அறிவுடைய ராகிய காதலர், *(1153)*.

**அறிவும்** = இயற்கை, செயற்கை அறிவும், *(1022)*.

**அறிவே** = பேதைமை அறிவு, *(373)*.

**அறின்** = பயனில்லாதபோது; செல்வமற்ற விடத்து, (812).

**அறு** = நீங்கிய, (119, 352); ஆறு, (560); குறைந்த, (1117).

**அறுக** = இல்லாமற் போவ தாகிய, (1177).

**அறுக்கல்** = அறுத்தலை, நீக்க முயலுதல், (345).

**அறுக்கும்** = ஒழிக்கும், நீக்கும், (349).

**அறுதொழிலோர்** = அறுதியிட்ட முக்கிய தொழில்களையுடையோர். அறுதொழில் வினைத் தொகை. அறுதி செய்யப் பட்ட தொழில். வரையறை செய்யப் பட்ட தொழில் என பொருள் படும். [அந்தத் தொழில்கள் யாவன? கல்வி கற்பித்தல், உழவுத் தொழில் செய்தல், நெசவுத் தொழில் செய்தல், சிற்பத் தொழில் செய்தல், தச்சுத் தொழில் செய்தல் - கொல்லுத் தொழில் செய்தல் போன்ற முக்கிய தொழில்களைக் குறிக்கும்] (நாவலர் நெடுஞ் செழியன் உரை).

ஆறு வகைப்பட்ட தொழில் கள். இயல்புடைய மூவர் என்று 41-ம் குறளில் குறிப்பால் கூறியது போல, இந்தக் குறளிலும், 'அறு தொழிலோர்' என்றார். [உலகத் தொழில்கள் பொதுத் தன்மையில் உழவர், வாணிகர், ஆசிரியர், கம்மியர், கலைஞர், மருத்துவர் என்பவற் றுள் அடங்குவதாகும். திருக் குறளார். முனிசாமி உரை.]

**அந்தணர்** = அறத்தை வரை யறுத்துக் கூறுவோர், (560).

**அறுப்பார்** = கைவிடுவார், (798).

**அறுப்பான்** = கெடுப்பவன், நீக்குபவன், (346).

**அறுவாய்** = முன்பு குறைந்த நிலையிலிருந்து, பின்பு நிறைவு பெற்ற, (கலை); குறைந்த இடம், (1117).

**அறை** = வீட்டிலுள்ள அறை, (913); அடிக்கப்படும் பறை, (1180).

**அறைந்தான்** = அடித்தவனது கைவலிபோல, (307).

**அற்கா** = சுருங்கா; அல்கா என் பது அற்கா எனத் திரிந்து நின் றது; நிலைத்து நிற்காத, (333).

**அற்குப** = நிலை பெறுவன, (333).

**அற்ற** = ஒழிந்த, (349, 521, 649, 654, 699, 956).

**அற்ற கண்ணும்** = செல்வம் அழிந்து வறியவனானாலும், (521).

**அற்றதிலர்** = உலகப் பற்றற்றவர் ஆகார், (365).

**அற்றது** = நீங்கியது, (365); சமித்தது, முன்பு உண்ட உணவு செரித்த பிறகு, (942, 944).

**அற்றம்** = குற்றம், கேடு, (421); முடிவு, (434); மறைத்தற் குரிய உறுப்புக்களை, (846); குற்றம், (980); ஒளி குறை யும் நேரம், (1186).

**அற்றவர்** = உலகப் பற்றற்றவர், (365).

**அற்றாக** = அவ்வாறாக, (365).

**அற்றாரை** = சுற்றமில்லாதவரை, (506).

**அற்றார்** = நீங்கியவர், (106); வறி யவர், (226); அழிந்தவரே, (248); நீங்கினார், (503, 646).

**அற்றார்க்கு** = பொருள்; பண மற்றவர்க்கு, (1007).

**அற்றால்** = போன்றதாகும், (720, 758, 838); உணவு செரிக்கக் கூடிய அளவினை அறிந்து, (943); போன்றது, (1107, 1145, 1148).

**அற்றான்** = நீங்கினவன், (350).

**அற்று** = போன்றது, (100, 208, 215, 216, 217, 249, 273, 274, 332, 338, 401, 402, 407, 415, 452, 460, 718, 890, 913, 929, 939, 1000, 1020, 1058, 1107, 1192, 1302, 1304, 1306); இழந்து 1261.

**அற்றே** = அந்த அளவிற்று; அத் தன்மையே; அவ்வளவே, (261); போன்றது 716, 1288).

**அற்றேம்** = இழந்தோம், (88); துறந்தோம், (275); பொரு ளற்ற, வறியவரானோம், (626).

**அனிச்சப்பூ** = அனிச்சத்தின் மலர், பூ, (1115).

**அனிச்சமே** = அனிச்சம் பூவே, (1114).

**அனிச்சம்** = நாகமல்லிகை, (90, 1120).

**அனைத்தானும்** = அவ்வள வானாலும், (416).

**அனைத்திற்கு** = அந்த அளவிற்கு, (1129).

**அனைத்து** = எல்லா, (34) - "அவன் எண்ணுகிற அளவுக்கு", நாவலர் நெடுஞ்செழியன் உரை; "அளவிற்றாகும் போலும்" - என்கிறார் மணக் குடவர், (387) அத்தன்மையது, (394); அளவுக்கு, (396); அவ்வளவு ஒத்த, (409) அவ்வளவு, (416); அத்தன்மை யது, (828); அந்த அளவினது, (1208) - "என்னுடைய அவயவங்கள் அனைத்தும்" திருக்குறள் முனிசாமி உரை; "எனது உடல் அழகை எல்லாம்" நாவலர் நெடுஞ்செழியன் உரை, (1320).

**அனைய** = அளவின, (595); போன்ற, (622); அளவின குன்றிமணி, (965).

**அனையர்** = போன்றவர், வேட முடையவர், (277); ஒப்பர், (310, 406); வேறுபாட்டை யுடையர், (410); ஒப்பர், (650, 964); ஒத்திருப்பார் கள், (1073).

**அனையாரும்** = பெருமை பெற்று உயர்ந்த நிலையில் உள்ள வர்களும், (965).

**அனைவரையும்** = எல்லோரையும், (584).

**அன்** = ஓர் உயிரின், (259); உடைய, (360).

**அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை** = மனத்தில் அன்பில்லா உயிரி னது இல்லற வாழ்க்கை, (78).

**அன்பிலது** = அன்பு இல்லாத உயிரை, (77).

**அன்பிலவர்க்கு** = அன்பில்லா தவருக்கு, (79).

**அன்பிலன்** = உறவு முறைகள் மீது அன்பு இல்லாதவன், (762).

**அன்பிலார்** = அன்பில்லாதவர், (72).

**அன்பிற்குமுண்டோ** = "அன்பிற்கும் என்ற உம்மை சிறப்பு பொருள் படவும் உண்டோ என்ற ஓகாரம் எதிர்மறைப் பொருள்படவும் நின்றன - அன்பினுக்கும் இருக் கின்றதோ" திருக்குறள் முனிசாமி உரை, (71).

**அன்பின்** = அன்பினுடைய, (79) அன்பின் காரணமாக, (911).

**அன்பீன்** = அன்பினின்றும் தோன்றிய, அன்பினால் பெறப் பட்ட, (757).

**அன்பு** = அனைவரிடத்தும் காட்டும் அன்பு, (45); உறவினர் களிடம் காட்டும் அன்பு, (74); தன்னைச் சேர்ந்தவரி டம் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி, (76, 78, 79, 80, 513, 681, 682, 807, 983, 1009).

**அன்புடைமை** = மன்னனிடத்தில் அன்புடையவராய் இருத்தல், (681); எல்லாரிடமும் அன்பு டையவராய் இருத்தல், (992).

**அன்புடையராதல்** = "அருளின் மேல் அன்புடையராதல்" - பரி மேலழகர் உரை; "உயிர்கள் மீது அன்புடையராதல்" - மணக் குடவர் உரை; "அருளுடை மையை எண்ணி உயிர்களிடம் அன்புடைவராக விளங்கும் பண்பு" - நாவலர் உரை; "அரு ளின் பெருமையை அறிந்து அதன்மேல் அன்பு கொண்டு நடப்பதென்பது" - திருக் குறளார் முனிசாமி உரை, (285).

**அன்புடையார்** = அன்பைப் பெற்றவர், (72).

**அன்புற்றமர்ந்த வழக்கென்ப** = "அன்புடையராய் இல்லறத்தில் ஒழுகியதின் பயன் என்று கூறுவர்" - பரிமேலழகர்; "முற் பிறப்பின்கண் பிறர்மேல் அன்பு வைத்துச் சென்ற செலவென்று சொல்லுவார்" - மணக்குடவர், (75).

**அன்பொடும்** = குடிமக்கள் தங்களுக் காகக் காட்டும் அன்பொடு, (755).

**அன்போடியைந்த** = அன்போடு பொருந்துவதற்கு வந்த, (73).

**அன்மை** = வேறாதல், (162); அல்லாமை, (172); இன்மை, (185).

**அன்றி** = இல்லாது, (437, 947).

**அன்று** = பின்பு, (36); இல்லை, (82); அப்பொழுதே, (108); அல்லாத, (379); அன்று, மிக்கது, (438).

**அன்றே** = அப்பொழுதே, (108, 113); அல்லவோ, (555).

**அன்ன** = போன்ற, (109); ஒத்த, (296, 308, 363, 527, 889, 1071, 1119, 1137, 1142, 1143, 1260, 1267, 1294, 1305).

**அன்ன ஒப்பார்** = போல ஒத்திருப் பவர், (1071).

**அன்னது** = போன்றது, (565, 1082).

**அன்னம்** = அன்னப் பறவை, (1120).

**அன்னர்** = போன்றவர், ஒப்பான வர்கள், (1076).

**அன்னள்** = வாழ்தலோடு ஒத்தவள், (1124).

**அன்னார்** = போன்றவர், (667, 814, 889, 969, 1061); போல, ஒற்றுமை யுடையவர், (1323).

**அன்னான்** = எருதுபோல, தடை களைக் கடந்து தளராமல் நடைபோடும் வல்லவன், (624).

**அன்னை** = பெற்ற தாய், (1147).

# ஆ

[ஆ - தமிழ் நெடுங் கணக்கில் வரும் ஒரு நெட்டுயிர். உயிர் முயற்சியால் பிறக்கும் எழுத்துக்களுள், வாயைத் திறந்த அளவிலே ஒலிக்கும் ஒரு நெடில் உயிர். அஃறிணை, படர்க்கை, எதிர்மறைப் பலவின் விகுதி, ஆக என்பதின் குறுக்கம். ஆதலைச் செய்யென் ஏவல், இசை, இரக்கம், இரண்டாம் உயிரெழுத்து இது. எதிர்மறை ஒரு வினையெச்ச விகுதி. சொல்லிசை. பசு, பெண் மான், பெண் எருமை, வியப்பு. விலங்கின் பெண் பொது. வினா இணைப்பு, அந்தம், உருக்கம், குறைவு, பிரிப்பு இவற்றை உணர்த்தும் இலக்கியச் செய்யுட் கூறுபாடு. அஆ - வியப்புச் சொல், வியப்பிரக்கச் சொல், இரக்கச் சொல், ஆக - ஆகட்டும் உவமையுருபு முழுவதும் அடங்கியுள்ள எழுத்து]

---

**ஆ** = பசு, 560-ஆவது குறளின் முதற்சீரின் முதல் எழுத்து. 'ஆ'. பரிமேலழகர் உட்பட்ட சில உரையாசிரியர்கள் 'ஆ' என்றால் பசு என்று கூறி, அது தருகின்ற பயன் எனப்படும் பால் என்றும் சுட்டுகிறார்கள்.

[**திருக்குறளார் முனிசாமி** "பசுக்கள் தரும் பயனான பால்" என்று பரிமேலழகர் உரைப் பாதையினையே நமக்கும் வழி காட்டுகிறார்.]

[ஆனால், நாவலர் நெடுஞ் செழியன் தனது உரையில், 'ஆ' என்றால் பசு என்ற பரி மேலழகர் உரையை மறுத்து, ஆபயன் = வினைத்தொகை. குடிமக்களின் முயற்சியால் ஆகும் பயன்கள். ஆவின் பயன் என்று பொருள் தரும் 'ஆப் பயன்' என்பது பாடமல்ல. அது பொருந்தி வராது என்கிறார்] (குறள் 560).

[ஆனால், 'இரவு அச்சம்' என்ற *107*-ஆவது அதிகாரத்தின் *1066*-ஆவது குறளின் முதல் சீரான 'ஆ'விற்கு என்பதில் வரும் 'ஆ' என்ற சொல்லுக்குப் 'பசு என்று உரை கூறுகிறார் நாவலர். சிந்திக்க.]

**ஆ** = ஆக, (*82, 104, 119, 300, 429, 433, 443, 444, 451, 507, 634, 1163, 1193, 1250, 1315*).

**ஆக** = உடையவனாக, (*92*); உளவாயிருக்க, (*100*); உண்டாக, (*117, 278, 424, 434, 445, 666, 951, 1127, 1128, 1147, 1242, 1249, 1263, 1317*).

**ஆகல்** = ஆக்குதல், ஆதல், (*372*).

**ஆகல் ஊழ்** = பொருளை உண்டாக்கும் ஊழ், ஆகூழ் என்பர் பரிமேலழகர். [கைப் பொருளை ஆக்கக் கூடிய இயற்கைப் பண்பறிவு என்பது நாவலருரை] (*372*).

**ஆகா** = நில்லா, (*376*); முடியாத, (*421*); ஆகாமல் போகும், (*456*).

**ஆகாதது** = ஆக நில்லாதது, (*1291*).

**ஆகாதவை** = முடியாதவை, (*537*).

**ஆகாதாகி** = இல்லவையாகி, (*128*).

**ஆகாது** = ஆக்கம் இல்லை; உண்டாகாது, (*619*).

**ஆகாவாம்** = நில்லாமற் போய் விடும், (*376*).

**ஆகி** = உடையவளாகி, மருந்தாகி என்ற சார்புகளிலே, *(51, 217)* பொருளாகி வரும், *(461, 586, 587. 732, 744, 745, 1218, 1227, 1228)*.

**ஆகிய** = ஆகவும், ஆயிருப்பதன், *(270)*; உண்டாகிய, *(283)*; உடையராகிய, *(329)*; ஆவ தற்குக் காரணமாகிய இயல் பினர், *(817)*.

**ஆகிவிடும்** = தீதாக முடிந்து விடும், *(128)*; அழிந்தே போவாம், *(476)*.

**ஆகு** = செல்வம் உண்டாகும; பொருள் திரள்வதற்குக் காரண மாகிய வழி, *(371)*.

**ஆகுஆறு** = செல்வம் வரும் வழி; பொருள் வருமானம் வரக் கூடிய ஆக்கம், *(478)*.

**ஆகு ஊழ்** = செல்வம் வருவதற் குக் க்காரணமான வழி; நன்மை தரும் வகையில் இயற்கை முறையாக அமையும் இயற்கைப் பண்பறிவு, *(371)*.

**ஆகுதல்** = ஆவது என்பது, *(683, 823)*.

**ஆகுதிர்** = நடந்து கொள்ளும் தன்மை கொண்டிருக்கின்றீர், *(1319)*.

**ஆகும்** = முடியும், *(134)*; ஆக இருக்கும், *(128, 205, 235)*; பொருந்தும், *(262)*; உண் டாகும், *(328, 459, 630)*; ஆல், இருக்கும், *(344, 368, 436, 452, 454, 456)*; உண்டாகும், *(459)*; வெளிப்படுத்தியவனாவான், *(590)*; இயலும், *(1049, 1079, 1214)*.

**ஆகுல** = ஆரவாரிக்கும், *(34)*.

**ஆகுவது** = ஆவது ஒரு பயன், *(315)*.

**ஆக்கத்தின்** = செல்வத்தைக் காட்டிலும், *(657)*.

**ஆக்கமும்** = செல்வப் பெருக்க மும், *(169)*; நன்மைகளும், *(642)*.

**ஆக்கம்** = செல்வம், மேலும் மேலும் பெருகுவது, *(31, 32, 112, 113, 122, 135, 163, 177, 183, 283, 328, 457)*; செல்வம், *(522, 527, 544, 562, 593, 642, 651, 755, 858, 859, 902)*; மேல் வரும் மிகு ஊதியம், *(463)*; உயர்வு, *(492)*.

**ஆக்கி** = உண்டாக்கி, உளவாக்கி, *(12)*; முடித்து, *(678)*.

**ஆக்கிக் கோடல்** = செய்து முடித் துக் கொள்ள வேண்டும், *(678)*.

**ஆக்கும்** = வளர்க்கும், *(616)*.

**ஆங்கு** = முன்பிருந்தபடியே, போலவே, *(15, 265, 666)*; அசை, *(43, 584, 1307)*; போல, *(247, 803)*; அதுபோல, *(252)*; அந்த வகையே, *(279)*; அங்கே அயல் அரசரோடு, *(474)*; அது போல, *(534)*; அசை இடத்தும் எனினும் ஆம், *(676)*; மேற் கூறிய, *(740)*; அத்தகையது கூட, *(1325)*.

**ஆங்கே** = அப்பொழுதே, அவ் விடத்தே, *(16, 171, 179, 289, 333, 487, 566, 788, 1215)*.

**ஆசற்றார்** = குற்றங்கள் இல்லாத வர்கள், *(503)*.

**ஆசாரம்** = ஒழுக்கம். இது வடச் சொல் என்று கூறுவர் பார்ப்பன பற்றாளர். தமிழ் மொழி யில் ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு என்பதைக் கற்றார் அறிவர். அவ்வாறுள்ள சொல்லை உடனே வடசொல் என்ற முடிவுக்கு வந்து விடுவது தவறு என்று மொழி நூலார் கூறுவர்.

[ஆசாரம் என்பதற்குத் தமிழில் அரசிருக்கை, ஒழுக் கம், சீலை, பெருமழை என்று பல பொருள்கள் இருப்பதாக **வீரமா முனிவர் சதுர அகராதி** கூறு கின்றது].

**ஆசாரம்** = அரசிருக்கை, அனுட் டானம், ஒழுக்கம், கட்டளை, சீலை, சுத்தம், படை வளைப்பு, பிரதிஷ்டை பண்ணல், பெரு மழை, முப்பொருளினொன்று, அஃது அறப்பொருள், வழக்கம், வழிபாடு என்று பல பொருள் களை மேலைப் புலோலி **சதாவதானி, வித்வான் நா. கதிரை வேற்பிள்ளையவர்கள் தமிழ் மொழி யகராதி கூறுகிறது. ஆனால், அவர் இதை வடசொல் என்று கூறவில்லை.**

ஒழுக்கம் என்ற தூய தமிழ்ச் சொல்தான் ஆசாரம் என் கிறார் நாவலர் 'திருக்குறள் தெளிவுரை' எனும் அவருடைய உரையில்.

எனவே, **ஆசாரம் என்பது ஆரியச் சொல் அல்ல என்று பாவணர் போன்ற தனித்தமிழ் அறிஞர்களும் கூறுகின்றார்கள்** என்பதைச் சிந்திப்பீர்களாக,(1075).

**ஆசு** = குற்றம், (503).

**ஆசை** = பற்று, (266).

**ஆடவர்** = ஆண் மக்கள், (1003).

**ஆடி** = முழுகி, (278); வட்டாடும் காயுருட்டி விளையாடுவது, (401).

**ஆட்சி** = ஆறுதல், பயன் கொள்ளு தல், (252).

**ஆட்டு** = ஆடுதல் செய்கின்ற, (332).

**ஆணி** = வண்டிச் சக்கரத்தில் செரு கும் கடை ஆணி, (667, 1032).

**ஆண்டு** = அந்த புன் சிரிப் பினிடத்தே, (1098); அவ் விடத்தில், (1279).

**ஆண்டும்** = அந்த இடத்தும், வேறு எங்கும், (363).

**ஆண்மை** = வீரம், (148); மன வூக்கம், (287); உடையவராக இருத்தல், (331); மிகுதியாக உதவி செய்யும் தன்மை, (480); தன்னை ஆட்கொண்டிருப் பதை, (609); செய் வினையை முடிவடையும்போது வெளிப் படுத்துவதே, (663); ஆண் மகனது ஆண்மையைவிட, (907); ஒன்றுக்கும் தளராமல் நிற்கும் வீரம், (1133).

**ஆஅதும்** = மேலாக உயர வேண்டும், (653).

**ஆதலே** = தனி வடிவமே, (600).

**ஆதல்** = ஆக இருத்தல், (34); ஆவதே, (95); ஆயிருத்தல், (219, 285, 374, 419, 714, 1291); உயர்வடைதல், (248).

**ஆதி** = அடிப்படைக் காரணம் கடவுள், இறைவன், சூரியன், நேரோடல், பழமை, முதல் என்கிறது **வீரமாமுனிவர் சதுர அகராதி.** ஆவா யென்னு முற்று - ஆவதற்குக் காரணமாக தொழிற் பெயர், (543).

**ஆதி பகவன்** = கடவுள், அறிவன், ஆசிரியன், புத்தன், அமணன் இவை வேறு அகராதிகளின் பொருட்கள். இங்கு அறிவன் என்பர் சிலர். கடவுள் என்பர் பலர். திருவள்ளுவர் பெற்றோர் பெயரென்பர் வேறு சிலர். பாவேந்தர் பாரதிதாசன் பகவு + அன் = பகவன் சூரியன் என்கிறார்.

**ஆதியாய்** = அடிப்படைக் காரண மாய், (543).

**ஆபயன்** = பசுவால் பெறப்படும் பயன் பால் என்பர் பலர், (560); ஆப்பயன் என்பது பாடமல்ல; ஆபயன் வினைத் தொகை; குடி மக்களின் முயற்சியால் ஆகும் பயன்கள் என்கிறது நாவலருரை, (560).

"உலகம் அனைத்திற்கும் 'பால்' இன்றியமையாததாகவும், பொது வாகவும் உள்ளதால் 'ஆ' என்றாரென்றறிக என்கிறது" திருக்குறளார் முனிசாமி உரை, (560).

**ஆமை** = ஆமை தனது ஓட்டுக்குள் ஐந்து உறுப்புக்களை அடக் கிக் கொள்ளும் ஒரு நீர் வாழ் பிராணி, (126).

**ஆம்** = ஆகும், (93, 113 449, 488, 492, 643, 1002, 1298); உள தாகும், (351); முடியும், (375); போய்விடும், (376); சார்வன வாகும், (320); ஆவான், (390); துணை நிற்கும், (414); அளவாம், (433); உண்டாகும், (453); உண்டாக்குவதும், (685); ஆவான், (686, 690, 785, 830, 858); அசை, (889, 932).

**ஆம்கால்** = உண்டாகும்போது, (379).

**ஆய** = உண்டாகிய, (2); ஆன, (12); ஆகியவற்றை, (1286).

**ஆயதூஉம்** = நின்றதும், (12).

**ஆயன்** = இடையன், (1228).

**ஆயார்** = ஆகியவர், (106).

**ஆயிடை** = ஆக இரு வகையிலும், (1179).

**ஆயிரம்** = ஆயிரம் வேள்வி களைவிட, (259).

**ஆயினும்** = இருப்பினும், ஆயிருந் தாலும், (52, 127, 144, 355, 404, 409, 414, 458, 478, 599, 656, 889, 900, 961, 1005, 1321, 1325).

**ஆயின்** = ஆனால், (44, 45, 209, 563, 566, 1119, 1156, 1216, 1306).

**ஆயும்** = ஆராயும், (198); ஆராய்ந்து செய்யும், (914).

**ஆய்** = உடையவனாய், (446); சிறந்த, அழகிய, (1081); உடையதாய், (1216).

**ஆய் இழை** = ஆராய்ந்தெடுத்த நகைகளை அணிந்த இந்தப் பெண், (1124).

**ஆய்ந்தொடியார்** = ஆய்ந்தெடுத்த வளையல்களையுடைய விலை மகளிர், (911).

**ஆய்ந்தவர்** = செயல்களை ஆராய்ந்து செய்பவர், (622).

**ஆய்ந்து** = ஆராய்ந்து, (517, 792, 795).

**ஆய்ந்து ஆய்ந்து** = நிறைவையும் குறைவையும் குணங்களையும் குற்றங்களையும், பலகாலும் பல முறைகளிலும் ஆராய்ந்து ஆராய்ந்துப் பார்த்து, (792).

**ஆர** = நிறைய பயனைப் பெற, (835); நிறைய, (1265).

**ஆரா** = ஒருக்காலும் நிறைவு பெறா, (370).

**ஆராய்ந்த** = ஒரு சொல்லின் பயனை ஆராய்ந்து, (682); ஆராய்ந்து உணர்ந்துக் கற்ற கல்வி, (684).

**ஆராய்ந்து** = ஆராய வேண்டிய வற்றை ஆராய்ந்து அறிந்து, (586); அவற்றுக்கு ஏற்ற சொற் களைத் தெரிந்து ஆராய்ந்து,

(682); ஏற்ற சொற்களின் திறத்தை மேலும் ஆராய்ந்து, (711).

**ஆரய்வது** = பொருத்தமாக ஆராய்வது, (584).

**ஆராய்வான்** = ஆராய்ந்து நீக்கத் திறனுடையவன், (512).

**ஆரார்** = உணவு உண்டு நிறையப் பெறாதவர்கள், (936).

**ஆரிருள்** = நரகம், நிறைந்த துன்பம், (121).

**ஆருயிர்** = அருமைமிகு உயிர்; பெற முடியாத அரிய உயிர், (73).

**ஆர்** = இது பலர் பால் விகுதி, (43, 1180); அரிய, (73, 1141); தாங்க முடியாத, (121); நிறைந்த, (1105); மிக்க, (1179).

**ஆர்க்கும்** = பிணிக்கும் அல்லது கட்டும் கயிறு, (482).

**ஆர்வம்** = பிறரிடம் காட்டும் விருப்பம், (74).

**ஆர்வலர்** = அன்புடையவர், (74).

**ஆல்** = மூன்றாம் வேற்றுமை உருபு, (11); அசை நிலை, (91, 216, 217, 256); கண், போது, (102); கொண்டு, (129); காரணமாக, (208, 220, 371, 457, 514, 548); காரணத்தால், (265); கருவியாக, (282, 309, 418); ஏற்ப, (294); உடனே, (387); 397-வது குறளில் 'நாடு ஆமால்', 'ஊர் ஆமால்' என்ற இரண்டு இடங்களில் வந் துள்ள 'ஆல்'கள் இரண்டும் அசைகள், (397); ஆலே, (525); கொண்டு, (537); ஆலும், (588); ஆல், (732, 757, 817, 827, 1004); அசைநிலை, (840, 875, 925, 966, 993); பொருட்டு, (1017).

**ஆவது** = வளர்வது, (283); ஆகக்கூடியது, (427); உண்டாகும் ஆக்கத்தையும் அதா வது பொருளையும், (461).

**ஆவது போல** = வளர்வது போலத் தோன்றி, (283).

**ஆவதூஉம்** = பின்னால் வரப் போவதையும், (461).

**ஆவர்** = செய்வர்; செய்வாரோ, (1165); ஆகுவார், துன்பமுறுவார், (1189); ஆக நிற்பார், (1218).

**ஆவன்** = என்ன ஆவேன், எப்படி வாழ்வேன், (1207).

**ஆவார்** = செய்வார், (1299).

**ஆவிற்கு** = பசு குடிப்பதற்கு, பசுவுக்கு, (1066).

**ஆழி** = கடல், (8); கடல் மண், கடல் கரை, (989).

**ஆழும்** = அழுந்தும், (919).

**ஆழ்** = சேற்றில் புதையும், புதையும் தன்மை, (500).

**ஆளப்படும்** = வேலைகளுக்கு அமர்த்தப்படுவான், ஆக்கப் படுவான், (511).

**ஆளரை** = உடையவரை, (1230).

**ஆளும்** = மேற்கொள்ளும், (251); மேற்கொள்ளச் செய்யும், நடு இரவிலும் அடக்கி ஆளும், (1252).

**ஆளும் தொழில்** = தொழில் படுத்தி அடக்கி ஆளும், (1252).

**ஆள்** = ஆட்கள், வீரர், (500); உடையவர், (1005, 1119, 1125, 1142).

**ஆள்க** = உடையவர்களாகுக, (242); விடுக, போக்குக, (589).

**ஆள்பவர்** = பண்பாட்சியுடையார், (1017).

**ஆள்பவர்க்கு** = ஆளும் திறமை பெற்றோர்க்கு, (383); அவை

யவை கூறும் வழியில் நிற்பவர்க்கு, (791).

**ஆள்பவற்கு** = ஆட்சி செய் பவனுக்கு, (383).

**ஆள்வாரை** = உடையாரை, (447).

**ஆள்வார்** = காப்பவர்க்கு, (244).

**ஆள்வினை** = இது 62-வது அதி காரத்தின் தலைப்பு. ஒருவன் இடைவிடாத மெய்ம் முயற்சி உடையவனாக இருப்பதுதான் ஆள்வினை. ஒவ்வொரு மனிதனும் இதை முதாதையர் சொத்து போல் காப்பது நல்லது. முயற்சி, (632, 1022).

**ஆறாது** = மாறாது, (129).

**ஆறு** = வழி, பயன், நெறி, (37, 161, 219, 222, 324, 465, 478, 662, 787, 932, 1140); அற வினைகளை, (43), தன்மை, இருப்பது, (397, 849, 1321).

**ஆறு உய்த்து** = நல்ல நெறியில் நடக்கச் செய்து, (787).

**ஆறும்** = தீரும், மாறும், (129).

**ஆற்ற** = மிகவும், (64); முற்றி லும், (367); மிக, (732, 1209).

**ஆற்றலரிது** = கைம்மாறாக ஈடு செய்ய முடியாது; நிறையில் சமமாதல் அரிது, (101).

**ஆற்றலின்** = வலிமை, (225).

**ஆற்றலுள்** = செய்வதுள்; உபாயம் செய்தற் கண்ணும்; செய்யுமிடத் தும் - மணக்குடவருரை, (469).

**ஆற்றல்** = வலிமை - ஒத்தல்,(25); நிறையாற்றுதல் - மணக்குட வர் உரை, (25, 269, 765, 891, 985); வலிமை பொறுத்தல், (225); பெருமை (287).

**ஆற்றறுத்து** = வீழ்த்தி விட்டு, (814) - இராவுத்தனின் சேவுகத்தைக் கெடுக்கின்ற என்பார் காளிங்கர் தனது உரையில்.

**ஆற்றறுப்பார்** = கைவிட்டு விடு வார், (798).

**ஆற்றா** = முடியாதபடி, (1174); தாங்க முடியாதபடி, தூங்க முடி யாதபடி, (1175).

**ஆற்றாக்கடை** = செய்யாவிடின், செய்யாவிட்டால், (469).

**ஆற்றாதார்** = வலிமை அற்றவர்கள்; குன்றிய வலிமையுடையவர் கள், (894).

**ஆற்றாதான்** = பொருள் கொடா தான், கருமி, கஞ்சன் செல்வம், (1007).

**ஆற்றாது** = பொறுக்க மாட்டாது, (555); செய்ய மாட்டாது, (1032).

**ஆற்றாமை** = மணம் செய்து கொண்ட காதலர்கள், கல்வி, பொருள், போர் போன்றவற்றுக் காக நாயகன் நாயகியைப் பிரிய நேரும்போது, நாயகி பிரிவு ஆற்றாமையால் வருந்துதல் பற்றி கூறும் 62-ஆம் அதிகாரம்.

**ஆற்றாராகி** = செய்ய முடியாத வர்களாகி, (998).

**ஆற்றாரும்** = வலிமையில்லாத வராயினாரும், (493).

**ஆற்றார்** = வலிமை இல்லாதவர், (493); செய்ய மாட்டார்கள், (908).

**ஆற்றால்** = வழியால், நெறிகளால், (367).

**ஆற்றி** = செய்து, தேடிய, பெற்ற, (212); வலியுடையராய், (493); இடையூறுகளைத் தாங்கிக் கொண்டு செய்து முடிக்கும், (515); பொருந்தியிருந்து, (568);

பயன்படுத்திக் கொண்டு, *(669)*; வலியவராய் காக்கும் வல்லவ ராய், *(748)*; சுடுதலைச் செய்ய வல்லதாகுமோ, *(1159)*; உடன் படும் செயலைச் செய்து, *(1160)*; பிரிவை மிகவும் ஆற்றி, பிரிவை மீண்டும் செய்து, *(1276)*.

**ஆற்றின்** = செய்தால், *(38)*; வழி யில் நடத்தினால், செலுத்து வானாயின், *(48)*; நல்வழி யிலே, *(123)*; வல்லவனாயின், *(126)*; வல்லவனது, *(130)*; நெறியால், *(164)*; இல்லற நல்லொழுக்கம், *(176)*; செய் வானாயின், *(297, 525)*; முடிக்கும் வழியில், *(468)*; ஈதல் நெறியில்; தனது வரு வாய் வழியின் நின்று, *(477)*; நல்ல ஒழுக்க நெறியில் நின்ற ஒருவன், *(716)*; சொற்பொருள் இலக்கண நெறியில், *(725)*; செயல்களைச் செய்வதற்குரிய வழியில், *(975)*.

**ஆற்றின் கண்** = இல்லறத்தின் அற வழி நெறியிலே - மணக்குடவர் உரை, *(176)*.

**ஆற்று** = வலிமை, *(798)*; வலி துணை, *(814)*.

**ஆற்றுபவர்** = வலிமையினால் பகை மேல் படை நடத்துபவர், *(741)*; அப்பொழுதே செய்து முடிக்க வல்ல பெரியோர் களுக்கு, *(893)*; செய்யக் கூடியவர், *(1165)*.

**ஆற்றுமோ** = வல்லதாகுமோ, *(1159)*.

**ஆற்றும்** = செய்யும், *(67, 70)*; பொறுத்தல், தாங்குதல், *(189)*; செய்தல் உண்டு, *(211)*; செய்ய வேண்டிய செய்யும், *(579)*; செய்து கொள்ளும், *(835)*.

**ஆற்றுவார்** = செய்யத் துணிந்த செயலை முடிக்கும் சிறந்த திறமையுடையவர்களின், *(891)*; வலிமையுடையவர் களுக்கு, *(894)*; செய்ய வல்லவ ராவர், *(975)*; ஒரு செயலைச் செய்யும் ஆற்றலுடையவர்கள், *(985)*; நடத்த வல்லவர், *(1027)*.

**ஆற்றேன்** = வல்லமையற்ற வளாக உள்ளேன், *(1162)*.

**ஆனால்** = இருந்தால், *(53)*.

**ஆனும்** = ஆயினும், *(128, 317, 397)*; ஆனாலும், என்றாலும், *(416)*.

**ஆன்** = மூன்றாம் வேற்றுமை உருபு இது. கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி என்ற பொருள் களில் திருக்குறளில் இது பல இடங்களில் வந்துள்ளன. எடுத்துக்காட்டாக 24 "தோட்டியான் ஓர் ஐந்தும் 'காப்பான்" 24, என்பவை.

**ஆன்ற** = மிகுந்த, மேலான, *(148)*; நிறைந்த, *(416)*; உயர்ந்த, வலிய, *(862, 992)*; சிறந்த, *(909)*; அகன்ற, *(1022)*.

**ஆன்றார்** = தேவர், புலனடக் கத்தோடு நோற்பவர்கள் என்பது நாவலருரை; தேவர்கள் என்பது திருக்குறளாருரை; தேவர் பரிமேலழகர் கூற்று, *(413)*.

**ஆன்று** = அறிவால் நிறைந்து, *(635)*.

# இ

இ - தமிழ்மொழியின் நெடுங்கணக்கில் மூன்றாம் எழுத்து. உயிர் முயற்சியால் பிறக்கும் எழுத்துக்களுள், அண் பல்லடியை நாக்கினது விளிம்பு பொருந்த ஒலிக்கும் ஒரு குற்றுயிர். அன்பு, வியப்பு, இகழ்வு ஓரெழுத்து, ஒரு சுட்டு, முப்பாலொருமை முன்னிலை வினை விகுதி. எடுத்துக்காட்டு உண்டி. முப்பாலொருமை முன்னிலை ஏவல் விகுதி. எடுத்துக்காட்டு கேட்டி - உயர் திணைப் பெண் பாலொருமை படர்க்கை பெயர் விகுதி. (எ.கா) குறத்தி. உயர் திணை ஆண்பால் படர்க்கை ஒருமைப் பெயர் விகுதி (எ.கா) வில்லி. அஃறிணை படர்க்கை ஒருமை பெயர் விகுதி (எ.கா.) ஊருணி. வினையெச்ச விகுதி (எ.கா) எண்ணி. இஃது - இது, இத - இகவென்ன ஏவல் முன்னிலை, அசைச் சொல்.

---

**இ** = சுட்டுப் பொருளில் வந்த இடைச்சொல். எடுத்துக் காட்டாக, குறள் 247. இவ் வுலகம். வாழும் இந்த உலகம். இங்கே இந்த உலகம் என்பதில் வரும் இந்த என்ற சொல் சுட்டுப் பொருளில் வந்துள்ளது, (336, 382, 383, 387, 392, 513, 571, 578, 662, 684, 688, 738, 743, 952, 992, 1085, 1129, 1130, 1142, 1147, 1150, 1162, 1169, 1176, 1220, 1227, 1274, 1319).

**இஃதோ** = இது, இந்த நோய், இஃது என்பது இஃதோ என ஈறு திரிந்து நின்றது. எடுத்துக் காட்டாக : 1161-வது குறளில் **'யான் இஃதோ'** என்று வரும் சொற்றொடர்க்கு, **'இந்தக் காதல் நோயோ'** என்று பொருள். இங்கே இஃது என்பது - ஈறு திரிந்து இஃதோ என்று ஆனாது. (இக் குறளில் வரும் மன் - அசை).

**இஃதோ நோய்** = இந் நோய், (1161).

**இகந்த** = மிக்க (567).

**இகந்து** = நீங்குதலால், (113); பிரிந்து, (1130).

**இகலான்** = மாறுபாட்டினால், (860).

**இகலிற்கு** = மாறுபாட்டிற்கு, (858).

**இகலின்** = எதிர்த்து மாறுபாடு கொள்வதால், (856).

**இகல்** = (இது திருக்குறளில் வரும் 86-வது அதிகாரம். இருவர் களுக்குள்ளே உண்டாகும் பகைமைப் பண்பு. மன மாறு பாடுகளை விளக்கும் தத்து வத் தன்மைகளைக் கூறுவது.)

பகைஞர்களது மாறுபாடு, (484); சொற்போரில் மாறு பட்டு, (647); மன்னரிடம் ஏற்கனவே இருந்த அன்பு மாறுபடுவது, (691); மனமாறு பாடு, (851 முதல் 854, 857); மாறுபாடு மனத்தில் ஏற்படும்போது, (855).

**இகலின்** = எதிர்த்து மாறுபாடு கொள்வதால், (856).

**இகலிற்கு** = மனத்தில் மாறுபாடு தோன்றும்போது, (858).

**இகல்காணான்** = மாறுபாட் டினை எண்ணாதவன், (859).

**இகலான்** = மனமாறுபாடு என்ற ஒன்றினாலேயே, (860).

**இகல்வெல்லல்** = பகைவனாக மாறுபடுத்தி வெற்றி கொள்ளல், (647).

**இகவா** = நீங்க மாட்டா, (146, 869).

**இகவாமை** = தப்பாமல் இருக்க வேண்டி; செய்த சூளுரை தவறாமை, (779).

**இகவாமை சாவாரை** = முன்பு கூறிய வெஞ்சினம் தப்பா மல், (779).

**இகழாமை** = இகழாமலிருத்தல், (891); மற்றவர்களையும் பழிக்காதிருத்தல், (953).

**இகழார்** = பழிக்கமாட்டார், (698).

**இகழ்ச்சி** = பழித்தல், இகழ்தல், (995).

**இகழ்ச்சியின்** = மறதியால், சோர்வால், (539).

**இகழ்ந்தார்க்கு** = மறந்தவர்களுக்கு, (538).

**இகழ்ந்து** = அவமதித்து, (1057).

**இகழ்வாரை** = இகழ்ந்தவரை, பழித்துப் பேசுவாரை, (151, 237).

**இகழ்வார்** = பழித்துப் பேசுவார், (59).

**இகழ்வார்பின்** = தன்னை இகழ்ந்து பேசுவார் பின்னே, (966).

**இகழ்வார் முன்** = இகழ்கின்றவர் எதிரில், (59).

**இசை** = புகழ், (231, 238, 240, 777, 1003).

**இசைபட வாழ்தல்** = புகழ் உண்டாகுமாறு வாழ்தல், (231).

**இசையும்** = சொல்லும், (1199).

**இசை வேண்டி** = புகழ் விரும்பி, (777).

**இடத்த** = ஒப்ப, போன்றன, (292).

**இடத்தது** = இடத்தையுடையது, (744).

**இடத்தால்** = இடத்தே; புலன்களிடத்து, (422); இடத்தோடு பொருந்த, (497).

**இடத்தான்** = இடத்தோடு பொருந்த, (484); இடனறிந்து, (497).

**இடத்து** = பொழுது, (250); இடத்திலே, (302, 310); போது, (597); அயலவரால் அழிவு வந்த காலத்து, (746); வரும்போது, (762); நிலை மைக் கண், (879); வந்த போது, (883, 968); உயிர் உடம்பை விட்டு நீங்குமிடத்து, (1124); பிரிவின் ஒரோ வழி, (1154); அவரை நேரில் பார்க்கும்போது, (1285).

**இடத்தும்** = அப்பொழுதும், (736, 806).

**இடம்** = தக்க இடத்தை, (491); செல்வாக்கு மிகுந்த இடம், (498); ஏற்ற சமயம், (821); வறுமை காலத்தில், (1064); உலகம் முழுவதும், (1064); இருந்ததற்கு வேறு இடம், (1123).

**இடம் எல்லாம்** = உலகம் எல்லாம், (1064).

**இடர்ப்பாடு** = துன்பப்படுதலை, (624).

**இடல்** = விதை விதைத்தல், (85).

**இடனறிதல்** = [இது திருக்குறளில் 50-வது அதிகாரம். வலிமைகளையும், காலத்தையும் அறிந்து ஒரு செயலைச் செய்ய முற்படுபவன். தான் வெல்லும் முறையில், செயலாற்றுவதற்கு ஏற்ற இடம் எது? எப்போது? என அறிதலே இடனறிதலாகும்.]

**இடன்** = செல்வம், (218); ஏற்ற இடம், (493); போர் புரி வதற்கு ஏற்ற இடத்தை, (494); உரிய இடமறிந்து, (675); பகை யரசரிடம் சொல்லுவதற் கேற்ற இடம், (687); திடம், இது மன உறுதியைக் காட்டும் ஊக்கம், (910).

**இடி** = கண்டித்துப் பேசுதல், இடித்துரைத்தல், (607).

**இடிக்கும்** = தீயன கண்டால் நெருங்கி இடித்துச் சொல் லும் அறிவுரைத் தன்மை, (447).

**இடித்தல்** = கடிந்து கூறல்; குற்ற மெனத் தெரிந்தால் அதைக் கண்டித்துப் பேசும்நிலை, (784).

**இடித்து** = தவறு செய்தவனை மீண்டும் செய்யாதவாறு கண் டித்துப் புத்திமதி கூறுவது, (795).

**இடி புரிந்து** = கண்டித்துச் சொல்லி, (607).

**இடிப்பாரை** = கண்டித்து அறிவுரை கூறுவாரை, (448).

**இடு** = கள்வன் கொடு என்று கேட்பது போல, (552).

**இடுக்கண்** = துன்பம், (621); இடையூறு, (624); துன்பம், (625, 654, 788, 1030).

**இடுக்கண் இடர்ப்பாடுடைத்து** = துன்பம்; தானே துன்பப்பட்டு அழிந்து போகும், (624).

**இடுதல்** = செய்தல், (1038).

**இடும்பை** = துன்பம், (4, 138, 508, 510, 622, 623, 628, 892, 1056, 1060, 1063).

**இடும்பைகள்** = துன்பங்கள், (347).

**இடும்பைக்கு** = துன்பத்திற்கு, (623, 627).

**இடும்பைக்கே** = துன்பத்திற்கே, (1029).

**இடும்பைத்து** = துன்பத்தையுடை யதாகும், (1295).

**இடும்பைப் படாதவர்** = வருத்தப் படாதவர், (623).

**இடும்பைப் படுப்பர்** = துன்பத்தை உண்டாக்குபவர், (623).

**இடும்பையுள்** = துன்பத் தினுள்ளே, (1045).

**இடை** = பல்லக்கில் உட்கார்ந் திருப்பவனுக்கும் சுமப்பவனுக் கும் ஆகிய இருவரிடை, (இது காட்சியளவுக் குறள் - 37); உடம்புக்கும் உயிருக்கும் இடையேயுள்ள உற விடையே, (338); இடையில், (663) தன்மை, நல்லவை, தீயவை, இடையூறும் நன்மையும் என்கிறார் **பரிதியார்** குறள் 712-ல் வரும் இடை என்ற சொல்லுக்கு. நேரம், நிலைமை என்கின்றது **நாவலருரை**. 'சபையின் நேரத் தினையும், நிலைமையினை யும் என்கிறது **திருக்குறளார்** உரை. இடையே, (899, 1109); இடையில், (1122).

**இடைக்கண்** = இடையிலே, (473).

**இடை போழா** = இடையே சென்று பிரிக்க முடியாத, (1108).

**இடையறாது** = இடையில் நீங்காது, எப்பொழுதுமுண்டு, (369).

**இடையூறு** = தடை, துன்பம், (676).

**இட்டிது** = சிறிது, அற்பம், (478).

**இட்டு** = இட்டால், (1260).

**இணர்** = கொத்துக் கொத்தாக சுடர்விடல், (308); கொத்தாக, (650).

**இணை** = இரண்டு, (1100).

**இதற்பட்டது** = உறங்க முடியாத துன்பத்திற்குள்ளாகி வருந்துவது, (1176).

**இதனால்** = இக் கருவியால், இந்தச் செயலால், (517).

**இவ்வினையை** = இந்தச் செயலை, (517).

**இதன்** = தூங்காத இதன்கண், (1176).

**இது** = ஆகிய இது, (37); இந்தச் செயல், (1173).

**இந்திரன்** = தேவர்க்கு அரசனான இந்திரன் என்பார் **பரிமேலழகர்.** வானவர் கோமான் இந்திரன் என்பது **திருக்குறளார் உரை.** பரிமேலழகர் சுவடு ஒட்டிய உரை இது.

வேதங்களில் கூறப்படும் இந்திரனும், திருவிளையாடல் புராணத்தில் வரும் இந்திரனும் இருவரும் ஒருவரோ என அறிய முடியவில்லை. பழைய உரை ஆசிரியர்களிலே ஒருவர்கூறும் விளக்கம் இது.

'வானவர் கோமான் இந்திரன் ஆண்ட அமராவதி என்னும் பட்டினம் தென்னாட்டிலேயே உள்ளது. அகலிகை இந்திரன் முதலியவர்களைப் பற்றிய பழங் கதைகள் கோயிற் சுவர்களில் எழுதப்பட்டிருந்த செய்திகள் **'பரிபாடல்'** என்ற சங்கக் காலம் நூலில் காணப்படுகின்றது என்று அந்த பழைய உரை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**'மணிமேகலை'** என்ற சங்க காலம் வழி வந்த கி.பி. இரண்டாம் நூற்றாண்டு காப்பிய நூலில், சீத்தலைச்சாத்தனாரால் சுட்டப்படும் **இந்திர விழா எடுத்த காதை** எந்த இந்திரனைக் குறிக்கின்றதோ என்று கூறமுடியவில்லை என்று, இந்த நூலின் கள்ளக் குறிச்சி நகரின் உயர் நிலைப் பள்ளியில் கவிஞர் பனப்பாக்கம் சீத்தா தலைமையில் 1972-ஆம் ஆண்டு நடைபெற்ற தென்னாற்காடு மாவட்டக் கவிஞர் பெருமன்றம் சாத்தனார் ஆய்வுக் கருத்தரங்கில் இந்த அகராதி ஆசிரியர் புலவர் **என்.வி. கலைமணி** பேசும்போது குறிப்பிட்டார். **உவமைக் கவிஞர் சுரதா** அவர்களும் இந்த விழா விலே சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அதனால் அக் கருத்து இதுவரை எந்த ஆய்வாளராலும் சான்றளிக்கப்படாத வினாவாக உயிர் வாழ்கின்றது.

**திருக்குறளில் 3-வது அதி காரமான நீத்தார் பெருமையை நாவலருரை 'துறந்தார் சிறப்பு' என்று கூறுகின்றது.** பொதுநல நோக்கோடு, இல்லற நலம் முழுவதையும் துறந்து, மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கான, நோன்புகள் பலவற்றையும் நோற்றுத் தன்னலம் துறந்து வாழ்பவர்களது பெருமையைத் 'துறந்தார் சிறப்பு' என்று சுட்டுகின்றது; நாவலருரை.

இதில் இருபத்தைந்தாவது அகர வரிசை குறட்பா 'ஐந்து அவித்தான் ஆற்றல்' எனும் குறள். இக்குறளின் பொழிப்புரை இது. 'ஐந்து புலன்களாலாகும் அவாக்களைக் கட்டுப்படுத்தி அடக்கியவனுடைய வல்லமைக்குப் பரந்த வான்புகழ் கொண்டோரில் மிக உயர்ந்தோனாகக் கருதப்படும் இனிய திறமைமிக்க அறிவ ஆற்றலில் சிறந்த சான்றோனாகக்

கருதப்படும் அறிவனே தக்க சான்று ஆவான்.

அகல் விசும்புளார் கோமான் பரந்த வான் புகழ் கொண்டோரில் மிக உயர்ந்தோர் : **இந்திரன் - இந்திறன் - இனிய திறமைமிக்க அறிவன் : 'ற' கர, 'ர'கரப் போலியாகவும் கொள்ளப்படும். பாட வேறுபாடாகவும் கருதப்படும்.**

ஐம்புலன்களையும் அடக்கியவர்களில் மிகச் சிறந்த வரும் வான்புகழ் கொண்டவர் களில் மிக உயர்ந்தவருமான ஒரு சீரியோரே விசும்புளார் கோமான் என்று குறிப்பிடப் பெறுகின்றார்.

**இந்திறன் என்ற சொல், பிற்காலத்தின் 'இந்திரன்' என்று திரிபுற்றதாக ஒரு வழக்கு உண்டு.**

'ஐந்திறம்' என்பது, 'ஐந் திரம்' என்று பாட வேறுபாடு அடைந்து, உருக் குலைந்தது போன்று, 'இந்திறன்' என்பது 'இந்திரன் என்று உருக் குலைந் திருக்கிறது பிற்கால ஏடுகளில்.

பண்டித அ.கி. பரந்தாமனார் அவர்கள், **தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்** என்ற நூலில், பக்கம் 18, 19ல் பழைய ஓலைச் சுவடிக்ளில் வல்லின 'ற' கரத்திற்கும், இடையின 'ர' கரத்திற்கும் வேறுபாடு காண்டல் அரிது. இவ்வறியா நிலையில் 'ஐந்திறம் என்பது ஐந்திரம் என எழுதப் பட்டிருக்கிறது. அதில் வியப்பு இல்லை என்று குறிப்பிட்டுள் ளார். அதுபோல, இந்திறன் என்ற சொல்லும் இந்திரன் என்று ஆகி இருக்கக் கூடும்.

வடமொழியாளரின் கற்பனைப் புராணக் கதைப்படி, ஐம் புலன்களையும் அடக்க மாட்டாமல், அகலிகையைப் புணர்ந்து, கௌதம முனி வரால் சாபமிடப்பட்ட, அருவருப்பான தோற்றத் தைப் பெற்று உலாவிய இழி மகனான இந்திரனை, இக் குறளோடு பொருத்திப் பொருள் கூறுவது எந்த வகை யிலும் பொருந்தி வராது.

ஐம்புலன்களையும் அடக் கிய ஆற்றல் மிகுந்த ஒரு வரின் வலிமைக்கு **அந்த இந்திரனை உவமையாகக் கொண்டு வள்ளுவப் பெருந் தகையார் கூறுவார் என்று எண்ணுவதற்கே இடமில்லை.**

எனவே, நாவலருரை 'இந் திறன்' என்ற சொல், உரை ஆராய்ச்சியில் மற்ற புராணப் பித்து உரையாளர்களை மலைச் சிகரம் போல ஓங்கி, உயர்ந்து நின்று உறுதியாக மறுக் கின்றது.

**வித்யா ரத்தினம் டாக்டர் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி** என்பவர், திருக்குறள் அறத்துப்பாலுக்கு பால ருரை என்ற ஓர் உரையை 1939ம் ஆண்டில் எழுதியுள் ளார். திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத தம்பிரான் சுவாமிகளவர்களால், ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ஞாபகார்த்தத் தமிழ்ப் பரிசு என்ற பரிசைப் பெற்று உருவான நூல் அது. அந்தத் திருக்குறள் பாலர் உரையில், அவர் இந்திரன் என்பதற்கு என்ன ஆய்வு விளக்கம் தரு கிறார் என்பதையும் படித்துப் பாருங்கள்.

இந்த உரையாசிரியர் பரிமேலழகர் இனம் சார்ந்தவர். திருக்குறள் அதிகார வரிசைப்படி வரும்

'நீத்தார் பெருமை' என்னும் அதிகாரத்தின் 5-வது குறளான 'ஐந்து அவித்தான்' என்ற குறளை, 8-வது குறட்பா இடத்திலும், 8-வது குறட்பாக வரும் 'நிறைமொழி மாந்தர்' என்ற குறளை 4-வது இடத்தி லும் மாற்றி வைத்து உரை எழுதியிருக்கிறார்.

7-வது குறட்பாக வரவேண் டிய 'சுவை ஒளி ஊறு ஓசை' என்ற 'பா'வை, அதே அதி காரத்தில் 5-வது இடத்திலே வைத்து இடம் மாற்றி அவர் உரை வரைந்துள்ளார்.

திருக்குறள் பாடல் வரிசைப்படி வரவேண்டிய 9-வது குற ளான 'குணமெனும் குன்றேறி நின்றார்' என்ற 'பா'வை, அதே அதிகாரத்தில் 7-வது குறளாக இடம் மாற்றி வைத்து உரை எழுதியுள்ளார்.

இவ்வாறு அவர் திருக்குறளை இடம் மாற்றி மாற்றி உரை எழுதி யுள்ளதால் 'ஐந்த வித்தானாற்ற லகல் விசும்புளார் கோமானிந் திரனே' சாலுங்கரி' என்ற குறள், சாஸ்திரியின் இடமாற்றம் எண்ணத்தின்படி அக்குறள் அதே அதிகாரத்தில் 8-வது இடத்திலே வந்துள்ளது.

உரை எழுதிய சாஸ்திரி இவ் வாறு இடம் மாற்றி மாற்றி குறள் களை எழுதியதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும் அல்லவா? என்ன காரணம் அதற்கு என்றால்? அது இது :-

'நீத்தார் பெருமைகளே பெருமை; அவற்றை எண்ண முடி யாது; அவை உலகில் பிர காசிக்கும்; அப்பெருமையை அவர்களுடைய மந்திரம் காட்டும்; அவர் சப்த ஸ்பர்ச - ரூப - ரஸ - சந்தங்களின் வகையை அறிந்ததால் அவராலே உலகம் நிலைக்கும்; பிறரால் செய்ய முடியாதவற்றை அவர் செய்வார். அவருக்கு வரும் கோபத்தின் பயனை ஒரு நிமிஷ மாயினும் தடுக்க முடி யாது; அதற்கு இந்திரனே சாக்ஷி அவரையே அந்தணர் என்று கூறுவர்; அவரே மோக்ஷத்திற்கு விதை; என ஆசிரியர் கூறினார்.

அதாவது மேற்கண்ட காரணத்தைக் கூறும் உரையாளர் சாஸ்திரி என்ன கூற வருகிறார் என்றால், இந்திரன் தான் திருவள்ளுவர் கூறும் அந்தணர்; அதற்கு அவருடைய செயலே சாட்சி : அவர் ரஸம்; ரூபம்; ஸ்பர்சம், சப்தம், கந்தம் இவற் றின் பிரக்ருதி, விக்ருதிகளை அறிந்தவர். அவரே மோட் சத்திற்கு விதை' என்ற காரணப் பழியை, திருவள்ளுவரே கூறு கிறார் எனத் திருவள்ளுவர் பெரு மான் மீதே அந்தப் பழியைச் சாஸ்திரி சுமத்துகின்றார்.

திருக்குறளின் பாக்களை சாஸ்திரி ஏன் இடம் மாற்றி மாற்றி எழுதினார் என்பதற்கு அவர் கூறும் காரணம் இது :-

'முன்பின் குறள்களின் இயைபு பற்றி மணக்குடவர், பரிமேலழ கர் இவ்விருவருங் கொண்ட முறையினின்றும், ஈண்டு அவற் றின் முறை சிறிது வேறுபடும்' என்று சாஸ்திரி காரணம் கற்பித்துள்ளார்.

திருக்குறளில் வரும் சில சொற்களுக்கு மணக்குடவரும், பரிமேலழகரும் அவரவர்

ஆய்வுரைகளைத் திருவள்ளுவரது அடிப்படைக் கருத்துக்கு மாறாமல் எழுதினார்களே தவிர, **இந்திரன்தான் அந்தணன்; அதற்கு அவரே சாட்சி, மோட் சத்திற்கு விதை என்று மேற்கண்ட உரையாளர்கள் எவரும் வாசகர்கள் மீது அடித்துத் திணிக்கவில்லை என்பதே உண்மை!**

ஆனால், சாஸ்திரி, திருக்குறள் அதிகாரத்தில் வரும் 10-வது குறளான 'அந்தணர் என் போர் அறவோர்' என்ற குறளை, சாஸ்திரி தனது பாலர் உரையில் 9-வது குறளாக இடம் மாற்றி வைத்து 10-வது குறளாகத் திருக்குறளின் 4-வது பாடலான 'உரனென்னுந் தோட்டியான்' எனும் பாடலை, தனது நீத்தார் பெருமை அதிகார உரையை இறுதியிலே வைத்து முடித்துள்ளார். என்ன காரணம் இதற்கு?

இந்திரனே அந்தணர்; அவரே உயர்ந்தவர்; பிறரால் செய்ய முடியாதவற்றை எல் லாம் இந்திரனே செய்வார்; அவர் கோபத்தின் பயனை யாராலும் தடுக்க முடியாது என்ற பண்புகளது பெருமைகளை, இந்திரன் மேலே திணித்து அவரை அந்தணர் என்பதை உலகில் நிலை நாட்ட அரும் பாடுபட்டுள்ளார் உரை வித்தகரான சாஸ்திரி.

சாஸ்திரி கூற்றுப்படி அந் தணர் தானா இந்திரன்? மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுபவரா இந்திரன்? குணநலனே சான்றோர் நலம் என்ற பண்பு நலமுடையவரா இந்திரன்? சான்றோர் களுக்குரிய அற ஆழி, அன்பு ஆழி, அருள் ஆழி, அறிவு ஆழி, பண்பு ஆழி இவற்றுள் என்ன ஆழியை வென்றவர் இந்திரன் என்பதைச் சாஸ்திரி விளக்கியிருக்க வேண்டாமா?

இந்திரன் ஒழுக்க ஆழி பற்றி கம்பர் பெருமான் 'அகலிகை'ப் படலத்தில் பாடுவதைப் பரிசீலனை செய்து பாருங்கள். இதோ கம்பர் தனது இராமயணத்தில் பாடும் பாடல் :

துறவி கெளதமரின் துணைவி அகலிகை. இந்திரன் அவளைப் பார்த்தான்; பாற்கடல் கடையும் போதே. அன்று முதல் அவள் மீது அவனுக்குக் காமம். ஒரு நாள் அந்தத் தையலாள் நயனவேலும் மன்மதன் சரமும்பாய, மையலேறிய தேவர் கோமான் இந்திரன்; கெளதமன் உருவில் அகலிகை குடிலில் புகுந்த இந்திரன் அந்தண்ணாகும் தகுதி உடையவனோ? ஒழுக்க ஆழி பற்றிப் பேசும் சாஸ்திரி இதைச் சிந்திக்காததேன்?

புகுந்தான் காமக் கள்ளன் இந்திரன் - அறிவன் கெளத மன் குடிலில், இதோ, கம்பர் அந் நிகழ்ச்சியை பாடுவதை ரசியுங்கள் - இந்திரன் மோட்சத்திற்கு விதையானவன் தானா என்று?

"புக்கவ ளோடும் காமப்
புதுமண மதுவின் தேறல்
ஒக்கவுண்டு இருத்த லோடும்
உணர்ந்தனள்; உணர்ந்த பின்னும் -
தக்கதன் றெண்ண ஓராள்
தாழ்ந்தனள் - இருப்பத் தாழா
முக்கணன் அணைய ஆற்றல்
முனிவனும் முடுகி வந்தான்"

கணவனில்லாத குடிலில், புகுந்தவளோடு, அதாவது

அகலிகையோடு, புது மணம் வீசுகின்ற காமத்தேனை இந்திரன் அனுபவித்தான். இந்த மோக போகம் தகாதது என்றுணர்ந்த அவள், பின்னரும், இந்திரனோடு காமம் துய்ப்பது தகாத செயல் என்று நினைக்காதவளாய், இந்திரன் அனுபவிக்க அனு பவிக்கக் காமத்தை ஊற்றுக் கண்போல் சுரக்க வைத்துக் கொண்டே இருந்தாள்.

குளிக்கச் சென்ற கௌதமன் தனது ஞானப் பார்வையால் இதை உணர்ந்து - புரிந்து ஓடோடி குடிலுக்கு வந்தார்!

அகலிகை நெடும்பழி பூண்டாள்! இந்திரன் நடு நடுங்கி நின்றான்; பூனை உருவமெடுத்து குடிலை விட்டு ஓடினான்! உடனே, அந்தணனான முனிவன் 'ஆயிரம் மாதர்க்குள்ள அறிகுறி உனக்குண்டாகென்று' இந்திரனை ஆயிரம் அல்குலியாகுமாறு சபித்தான்! கொதித்தார்; கௌதமர், விலைமகள் அனைய நீயும் கல்லாய் போவென அகலியைச் சாபமிட்டார்.

இந்த இந்திரனா திருவள்ளுவர் கூறும் அந்தணன்? மோட்சத்திற்கு விதையானவன்?

பிறன் இல் விழையாமை என்ற அதிகாரத்தில் வரும் வாழ் வியல் சட்டங்கள் பத்துக்கு ஏதாவது ஒன்றுக்காவது தகுதியுடையவனா இந்த இந்திரன்?

பிறன் பொருளான இல்லாளைக் காதலித்து ஒழுகும் அறியாமைக் குணம், நூலறிவுடையார் நெஞ்சில் நுழையாது. ஆனால், இந்திரன் நெஞ்சில் ஊஞ்சலாடியதே!

மற்றவன் மனைவியை இச்சித்து அவனுடைய வாயிலில் நிற்பவன் பேதை! இந்திரன் நின்றானே கௌதமன் வாயிற்படியில்!

கௌதமன் இந்திரனைச் சந்தேகிக்கவில்லை - அகலிகையைக் காதலித்தவனென்று. செய்து விட்டானே இந்திரன்! வள்ளுவர் வாக்குப்படி அவன் ஒழுக்க ஆழியில் செத்தவனாகி விட்டானே! பிறகு எப்படி அவன் அந்தணனாக முடியும்?

கடுகளவுக் காம போதையால் இந்திரன் ஆயிரம் அல்குலியானானே? அவனா அந்தணன்? மோட்ச லோக விதை?

எப்படிப்பட்ட பதவி இந்திரப் பதவி, அந்தப் பதவிக்கு அவமானியானவனா அந்தணன்?

பகை, பாவம், அச்சம், பழி இந்த நான்கும் பிறன் மனையாளை அனுபவிப்பனை விட்டுச் சாகும்வரை நீங்காது என்பதுதானே வள்ளுவர் நெறி? அதை மீறி அந்த நான்கையும் ஏற்ற இந்திரனா அந்தணன்? மோட்ச லோகத்திற்கு விதை?

பிறன்மனை நோக்காத பேராண்மைதானே சான்றாண்மை? இந்திரன் கௌதமன் மனை ஏகி ஆயிற்றே? பிறகு எப்படி அந்தணன் ஆவான்?

எல்லா உலக நன்மைகளையும் அடைபவன் யார் தெரியுமா? பிறன் மனைவி தோள்களை அணையாதவர்கள்! இந்திரன் அப்படியா?

இல் அறத்தை அழித்த விசும் புளார் கோமானான இந் திரனை அந்தணன் என்று மக்களுக்கு நூலோர் அறி முகப்படுத்துவது அறத் துரோகம் என்பதை உரை யாசிரியர்கள் உணர வேண்டும்.

இந்திரனைப் பற்றிய உயர் குறிப்புகளுள் மேலும் சிலவற்றை, சாஸ்திரியார் தனது உரையில் சுட்டிக் காட்டுவதை நோக்குங்கள் :

'ச்யவனர் என்ற முனிவர் அச்வினீ தேவதைகளுக்கு ஸோம யாகத்தில் பாகம் தருவ தாகச் சொல்ல; இந்திரன் அதை மறுக்க, அவர் அவ் விருவரை யும் நோக்கி மந்திரபூர்வமாக ஸோமத்தைத் தர, அப்போது பெரிய மலையுடனும், வச்சி ராயுதத்துடனும் இந்திரன் அவ்வேள்வியின் கண் வர, நீரைத் தெளித்து அவனை அசை வற்றிருக்கச் செய்து அவனைக் கொல்வதற்கு மந்திரச் சக்தியால் மதன் என்ற ஒருவனை ச்யவனர் உண்டு பண்ண, அவனைப் பார்த்துப் பயந்த தேவர் களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி; இந்திரன், அச்வினீ தேவதைகளுக்கும் யாகத்தில் பாகம் இருத்தல் கூடும் என ஒத்துக் கொண்டான்.

மருத்தன் என்ற அரசன் பிரகஸ்பதி யின் தம்பியாகிய ஸம்வர்த்தரைக் கொண்டு யாகம் செய்யத் தொடங்க, அவரை விட்டு விட்டு பிரகஸ்பதியைக் கொண்டு செய்ய வேண்டுமென இந்திரன் மருத்தனுக்குச் சொல்லி யனுப்ப, அவர் அதற்கு இணங்காது, ஸம்வர்த்தரைக் கொண்டே யாகத்தைச் செய்யத் தொடங்க, அதற்கு வேண் டிய இடையூறுகளை இந்திரன் செய்ய, பிறகு, ஸம்வர்த்த முனிவரின் தபோ பலத்தால் இந்திரன் கோபத்தை விட்டு வேள்விக்கு நேரில் தேவர் களுடன் வந்து ஹவிர்ப் பாகங் களைப் பெற்றுக் கொண்டான்.

அகத்தியர் பன்னிரண்டு ஆண்டு களில் முடியக்கூடிய வேள்வி யைத் தொடங்க, அப்போது இந்திரன் மழையைப் பெய்யா திருக்கும்படிச் செய்ய, தம் முடைய தவத்தின் ஆற்றலால் தாமே இந்திரன் ஆகின்றேன் என்று அவர் சொல்ல, இந்திரன் தேவர்களோடு நேரில் வந்து மழையைப் பெய்ய வைத்து வேள்வியை நடத்தினன்.

எனவே, இதுவரை நாம் சிந்தித்தவற்றுள் இந்திரன் என்ற சொல்லுக்குரிய ஆய்வுகளைக் கண்டோம். ஆனால், இந்திரன் என்பவன், அகல் விசும்புளார் கோமானா? அல்லது,

அகத்திய முனிவரால் சாபம் பெற்றுப் பூலோக பூமியில் பாம் பா க ஆன நகுஷன் என்பவனா?

வேதங்களில் சொல்லப்பட்டு அகலிகைமீது ஆசைப்பட்டு கௌதமரால் ஆயிரம் அல்குல் கண்களைச் சாபத்தால் பெற்றவனா?

திருவிளையாடல் புராணத் தில் வரும் இந்திரனா? மணிமேகலை காப்பியத்தில் கூறப்படும் இந்திர விழா நாயகனா?

நாவலர் நெடுஞ்செழியன் தனது திருக்குறள் தெளிவுரையில் விளக்கமளித்துள்ள, 'இந்திறன்', அதாவது இனிய திறமைமிக்க

அறிவன் என்ற புலனடக்கம் பெற்ற சான்றாண்மை மிக்கவனா?

அகலிகை, இந்திரன் பற்றிய பழங்கதைகள் திருக்கோவில் சுவர்களிலே எழுதப்பட்டிருந்த செய்தி 'பரிபாடல்' என்ற நூலிலே உள்ளதே அந்த இந்திரனா? என்று தீர்மானமாக ஆராய்ச்சி செய்து புராணிகர்களால் இன்று வரைக் கூறப் படவில்லை.

எனவே, அவரவர் மதக் கண்ணாடியின் பார்வைக்கேற்ப ஒவ்வொரு இந்திர உருவம் புலப்படுகின்றது. கற்பனையான புராணங்களிலே பல பொய்ப் புனைவுகள் உருவாவது மிகமிகச் சாதாரணமானது தானே!

திருவள்ளுவர் பெருமான்; ஆரியர்களது வேத, புராணக் கருத்துக்களை ஏற்று, அவற்றின் சமூக வரலாற்றுச் சம்பவங்களின் நடத்தைகளைச் சுட்டிக் காட்டி, இவை தமிழர் பண்பாடுகளல்ல; நாகரிகமல்ல என்பதை மறுத்து, சான்றோர்களின், உண்மையான தமிழர் நாகரிகப் பண்பாடுகளை நீத்தார் பெருமைகளை நிலை நாட்டிட; 'இந்திரன்' போன்ற சில சொற்களை, திருக்குறளிலே ஏற்று, அதன் கீழ்மைகளை மக்களுக்கு உணர்த்தவே ஆட்சி செய்துள்ளார் என்பதே என் போன்றோர் எண்ணமாகும்.

எனவே, இத்துடன் இந்திரன் சொற்பொருள் விளக்கத்தை Indiran Concordance என்பதை முடித்துக் கொண்டு நமது 'திருக்குறள்' சொற்பொருள் சுரப்பிப் பணியைத் தொடர்வோம்.

**இந்நாள்** = காதலரின் பிரிவு ஆற்றாமையால் வேதனையை அனுபவிக்கும் இப்போது, *(1169)*.

**இந்நோய்** = இந்தக் காதல் நோய் என்ற பூவானது

**இமைப்பின்** = இமை கொட்டினாலும், *(775, 1126)*; கண்கள் இமைக்குமேயானால், *(1129)*.

**இமையாரின்** = கண்ணிமையா உழைப்பாளர்களாக, *(906)*.

**இம்மை** = இந்தப் பிறப்பிலே, *(98)*.

**இம்மைப் பிறப்பில்** = இந்த எனது வாழ்க்கையில், *(1315)*.

**இம்மையும்** = இந்த உலக இன்பமும், *(1042, 1315)*.

**இயக்கம்** = உலகில் இயங்கி வருதல், *(1020)*.

**இயலாள்** = பிறனுக்கு மனைவியானவள், *(147)*.

**இயலான்** = நெறியான், இயல்போடு கூடிய, *(147)*.

**இயல்** = இயலும், *(342)*; ஒழுக்கம், நடை, *(572)*.

**இயல்பாக** = இயற்கையாக, *(951)*.

**இயல்பார்** = தன்மையை உடையவர், *(1311)*.

**இயல்பான்** = தன்மையினால், *(452)*.

**இயல்பிலாதான்** = தன்மையில்லாதவன், *(1006)*.

**இயல்பிற்று** = தன்மையை உடையது, *(333)*.

**இயல்பினான்** = நல்ல முறையில், இயல்பாகவே பெருந்தன்மையுடன்*(47)*.

**இயல்பின்மை** = தகுதியின்மை, *(903)*.

**இயல்பு** = தகுதி பொருந்திய, (41); அற இயல்பு, (161); தன்மை, (344); மரபு இயல்பான பண்பு, (382, 903); தான் சேர்ந்த இனத்தின் தன்மை, (452); இயற்கை, (628); மரபு (903).

**இயல்புளி** = நீதிக்கு மாறுபடாமல், முறைமையிலேயே, (545).

**இயல்வது** = இனிது நடப்பது, (734).

**இயற்கு** = தன்மையுடைய அவளது, (1098).

**இயற்கை** = தன்மை, (370); ஊழினால் வரும் இயற்கை, (374); இயல்பு, நடை, (637).

**இயற்பால** = பெறக்கூடிய உயர்ந்த இன்பங்கள், (342).

**இயற்றலும்** = பொருளை உண்டாக்கலும், (385).

**இயற்றியார்க்கு** = உண்டாக்கியவர்க்கு, (760).

**இயற்றியான்** = படைத்தவன், கடவுள், (1062).

**இயன்றது** = வினையாலணையும் பெயர்; இடைவிடாது நடந் தது; நடைபெறுவது, (35).

**இயன்றன** = செய்யப்பட்டிருக்க வேண்டும், (1106).

**இயைந்த** = பொருந்துவதற்கு வந்த, உண்டாகிய, (73); பொருந்தி நிற்கின்ற, (1323).

**இயைந்தக் கால்** = வந்து வாய்க்குமேயானால், (489).

**இயைந்து** = கண்ணோடு கண் கலந்த பின்பு கண்களைப் பொருந்த வைத்து, (576).

**இயைபு** = பொருந்தி, (573).

**இயையாக் கடை** = முடியாத விடத்து, (230).

**இயையின்** = கிடைத்து விடுமேயானால், அமைந்து விடுமேயானால், (522).

**இரக்க** = இரந்து பெறுக, (1051).

**இரக்கப்படுதல்** = இரப்பார்க்கு ஈவனென்றிருத்தல்; படுதல் எச்ச உம்மை. இரக்கப்படுதலும் என்கின்ற இறந்தது தழுவிய எச்ச உம்மையும் காணுமளவுமென்ற முற்றும்மையும் குறைந்து நின்றன, (224).

**இரங்கல்** = இது திருக்குறளில் வரும் 117-ஆவது அதிகாரம். படர் மெலிந்து இரங்கல் என்பது அதிகாரம் தலைப்பு. தலைவி பிரிவு ஆற்றாதவள். தலைவனை நினைந்து நினைந்துத் தான் பெறுகின்ற துன்பத்தினை எப்போதும் நினைத்துக் கொண்டே இருத்தலால், தலைவி உடல் இளைத்து வருந்திக் கூறும் நிலையே இந்த இரங்கல்.

**இரங்கல்** = திருக்குறளின் 123-வது அதிகாரம். பொழுது கண்டு இரங்கல். இரண்டு அதிகாரங்களும் இன்பத்துப் பால் என்ற மூன்றாவது பிரிவிலே வந்துள்ளன.

'பொழுது கண்டு இரங்கல்' என்பது மாலைப் பொழுது வரும்போது, தலைவி இரங்கி வருந்துதல் பற்றிக் கூறும் பகுதி தான் இந்த இரண்டாவது இரங்கல் பகுதி.

**இரங்கி விடும்** = துக்கப்படுவான்; வருந்துவான், (535).

**இரங்குவ** = வருத்தப்படும், (635).

**இரண்டால்** = பகைவர் இரண்டு பிரிவினராக இருந்தால் ஆல், அசை, (875).

**இரண்டின்** = ஆகிய இரண்டினது வழியே நடத்துதல், *(662)*; ஆகிய இரண்டினையும், *(674)*; என்ற இரண்டினையும் கொண்டு, *(1022)*.

**இரண்டு** = இரண்டு, *(19, 392, 402, 455, 1247)*.

**இரண்டும்** = கலைகள் இரண்டும் அதாவது எண், எழுத்து என்பவை, இரண்டு சிறப்புகளும், *(992)*.

**இரத்தக்கார்** = இரந்து பொருள் கேட்கத் தக்கவர், *(1051)*.

**இரத்தலின்** = இரத்தலைக் காட்டிலும், *(229)*.

**இரத்தலும்** = இரந்து கேட் டாலும், 'இரக்கும் இரப்புத் தானும்' என்பது **காளிங்கர் உரை**, *(1054)*.

**இரத்தல்** = இரந்து கேட்பது, *(1052)*; பிச்சை ஏற்பதும் கூட, *(1054)*.

**இரந்தவர்** = பிச்சை எடுப்பவர், *(224)*.

**இரந்தவை** = ஒருவன் இரந்து கேட்ட பொருட்கள், *(1052)*.

**இரந்து** = பிச்சைக் கேட்டா யினும், *(780)*.

**இரந்து கோட்டக்கத்து** = இரந்தாவது கொள்ளத் தக்க, தகுதியினை, *(780)*.

**இரந்துகோள்** = பொருள் இல்லை என்று காரணத்திற்காக இரந் தாவது அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும், *(1059)*.

**இரந்து தீர்வாம்** = வறுமைத் துன் பத்தைத் தீர்த்துக் கொள்வோம், *(1063)*.

**இரந்தும்** = ஒருவன் இரந்துதான், *(1062)*; உம்மை இழிவு சிறப்பு.

**இரப்ப** = நான் வேண்டிக் கொள் வதற்கு இணங்க, *(1212)*.

**இரப்பவர்** = இரக்கின்றவர் சென்று, *(1055)*; இரக்கின்றவர், *(1070)*.

**இரந்து நிற்க** = இரந்து ஊடல் தீர்க்குமளவும், *(1329)*.

**இரப்பன்** = கெஞ்சிக் கேட்பவன், *(1067)*.

**இரப்பாரை** = இரக்கின்றவர், 'ஐ' அசை, *(1058)*; (இரக்கும் அவர் களை, **மணக்குடவர்** உரை), *(1058)*; இரக்கின்றவரை, *(1067)*.

**இரப்பார்க்கு** = இரக்கின்றவர் களுக்கு, *(232)*.

**இரப்பான்** = ஏற்கின்றவர்களுக்கு, *(1035)*; பிச்சைக் கேட் பவன், *(1060)*.

**இரப்பினும்** = பிச்சைக் கேட்டு செல்லுமிடத்தும், *(1066)*.

**இரப்பின்** = இரக்க வேண்டு மானால், *(1067)*.

**இரப்பு** = பிச்சைக் கேட்டுப் பெறுதல், *(1053)*.

**இரவச்சம்** = இது திருக்குறளின் 107-ஆவது அதிகாரம். ஒருவன் மானத்தை இழந்து பிச்சைக் கேட்பதற்கு அஞ்சுவது.

**இரவன்மின்** = சென்று பிச்சைக் கேட்காதீர்கள், *(1067)*.

**இரவாமை** = ஒருவர் இரவாம லிருப்பது, *(1061)*.

**இரவார்** = தாம் இரக்க மாட்டார், *(1035)*.

**இரவின்** = பிச்சைக் கேட் பதலைப் போல, *(1066)*.

**இரவு** = இது திருக்குறளின் 106-ஆவது அதிகாரம். வறுமை யாளர்கள் தமக்கு வேண்டிய

வற்றை பிறரிடம் கேட்டுப் பெறுதலைக் குறிக்கும் நிலை.

குடிமக்களிடம் பொருளைப் பெறுதல், (552); கொடுங்கோன்மை அதிகாரம்; இரந்து வாழ உடன்படாத, (1064); இரத்தல், (1068); இரத்தலின் கொடுமையை, (1069); தனது காதல் நோயைக் குறிப்பால் உணர்த்தி உடன்போக எண்ணித் தலைவனை வேண்டுதல், (1280).

**இரவு உள்ள** = பிச்சைக் கேட்கும் கொடுமையை அவன் நினைக்க, (1069).

**இரா** = இரவானது, (1168); நெடியனவாய்ச் செல்லுகின்ற இரவுப் பொழுதுகள், (1169); இப்படியே இருந்து கொண்டு, (1301); நான் அவளிடம் இரந்து நிற்பதற்காக இரவு நீட்டிப்பதாக, (1129).

**இராஅ** = இப்படியே இருந்து கொண்டு, (1301).

**இரீஇ** = இருத்தி, முகந்து வைத்து, (660).

**இரு** = இரண்டு, (374); இந்தப் பெரிய, (990, 999).

**இருக்க** = இருந்தால், (403).

**இருக்கப் பெறின்** = இருக்கக் கூடுமானால், (403).

**இருக்கை** = இருக்குமிடம், (789).

**இருட்டறை** = இருள் சூழ்ந்த அறை, (913).

**இருட்டு** = ஒளியில்லாத, (913).

**இருதலையானும்** = இரண்டு பக்கங்களிலும் ஒத்திருந்தால், (1196)

**இருநிலம்** = பெரிய உலகம், (990)

**இருநோக்கு** = அழகிய பெண்களிடமுள்ள இருவிதப் பார்வைகள், (1091).

**இருந்து** = இருந்து வந்த, (340).

**இருந்தான்** = இருந்த அமைச்சன், (638).

**இருந்து** = வாழ்ந்து, (81); செய்து வைத்து, (530); இருந்து கொண்டு, (867, 973, 1107, 1160, 1296, 1320); இறந்து போகமாலிருந்து, (1243).

**இருந்தேமாத்** = இருந்தோமாக, (1312).

**இருபுனலும்** = ஆற்று நீர், மழை நீர் என்ற இரு நீர் வகைகள், (737).

**இருப்ப** = இருக்கும்படி, (67); தன்னிடமிருக்க, (100).

**இருப்பர்** = காத்துக் கொண்டிருப்பர், (485); விரும்பி இருப்பர், (804).

**இருப்பாரை** = இருக்கின்றவர்களை, (1040).

**இருப்பான்** = விருந்தினரோடு உண்ண இருப்பான், வரவுக்காகவும் காத்து இருப்பான், (86).

**இருப்பின்** = சோம்பி இருப்பானானால், (1039).

**இருமனப் பெண்டிர்** = ஒருவனோடு புணராமையும், புணர்தலும் ஒரே நேரத்திலுடைய இரு மனமுடையப் பெண்கள், (920).

**இருமை** = இம்மையும், மறுமையும், (23).

**இருவர்க்கு** = ஒருவரை ஒருவர் விரும்பும் இருவர்க்கு, (1108).

**இருவினையும்** = நல்வினை தீவினை இருவினைகளும், (5).

**இருவேறு** = இரண்டு வகை வேறு பட்ட இயற்கை முறைகள், *(374)*.

**இருள்** = அறியாமை, மயக்கம், *(5)*; துன்பம், நரகம் என்றும் சிலர் கூறுவர், *(121, 352)*; அறியாமை இருள், *(243)*; குற்றமற, *(675)*; இடுக்கண் களை, துன்பங்களை, *(753)*.

**இருள்சேர்ந்த** = இருட்டுடைய, *(243)*.

**இரையான்** = இரை என்பது மிருகம் தின்னும் தீனி. மனிதன் அளவோடு உண்பது உணவு. இரையான் அதிகம் உண்ணும் மிருகம். அதனால் இரையான் எனப்பட்டான், *(946)*.

**இல** = இல்லை; உளவாகா, *(4)*; உடையனவல்ல, *(9, 39)*; பய னில்லாத சொற்களை, *(191)*; நீதியில்லாத செயல்களை, *(192)*; உடைத்தாயிருக்கவில்லை, *(193)*; பயனற்ற, *(195, 196, 197)*; இல்லாதவும், *(696)*; இல்லாதவற்றை, *(697, 956, 998)*; உடைய அல்ல, *(1100)*; இல்லையாயின, *(1178)*.

**இலக்கம்** = குறியிடம், இலக்கு, *(627)*.

**இலங்கிழாய்** = விளங்குகின்ற நகை களை அணிந்த தோழியே, *(1262)*.

**இலங்கு** = விளங்குகின்ற, மேன்மையான, *(410, 1262)*.

**இலதனை** = அன்பு இலாத, என்பு இல்லாத, *(77)*; வினையை, தெளிவில்லாத தொழிலை, *(464)*; பண்பிலாதனை, தீமை தருகின்ற, *(871)*.

**இலது** = இல்லாதது, இல்லாதவன், *(586)*.

**இலம்** = பொருளின்றி, வறுமை யுற்றவர் ஒரு பொருளும் இல்லாமல் ஏழ்மையராய் இருக்கிறோம், *(1040)*.

**இலரே** = இல்லாதவரே, *(728)*.

**இலர்** = இல்லாதவர், *(114, 365)*; ஏழைகள், *(270)*; இல்லாத வராவார், *(409, 430, 499, 506, 778, 954, 1242, 1325)*; இலராதலான், *(1072)*; இல்லாராவர், *(1094)*.

**இலவர்** = இல்லாதவர், *(607)*.

**இலவர்க்கு** = இல்லாதவர்க்கு, *(79)*; இலர் ஆயினார்க்கு, *(604)*.

**இலவாம்** = இலாவயிருக்கின்ற, *(91)*.

**இலனாகும்** = ஏழையாயிருக்கும் நிலை, *(205)*.

[இலன் என்றது தன்மை ஒருமை யாயின், அன்னீற்றுத் தன்மை ஒருமை. தொல்காப்பியத்திற் கூறப்படவில்லை. அதனால் திருக்குறள் தொல்காப்பியத் திற்குப் பிற்பட்டது என்பவர் காட்டும் சான்று இது.

'இலன் என்ற சொல்லுக்குத் தான் என்பதை எழுவாயாகக் கொள்ளின் தன்மையொருமை எனக் கொள்ளல் வேண்டாம். ஆயினும், 'இரப்பனிரப்பாரை' என்ற 1067-ஆவது குறளை என்னுமிடத்து; இரப்பன் எ ன்பதைத் தன்மையொருமை யாகவே கொள்ள வேண்டி யுள்ளது. அதனையொட்டி ஈண்டுத் தன்மையொருமை யாகக் கொள்ளின் குற்றமாகாது' என்று அறத்துப் பால் பாலருரை யில் டாக்டர் பி.எஸ். சுப்பிர மணியம் குறிப்பிட்டுள்ளார்].

**இலனாம்** = இல்லாதவனாவான், (808).

**இலனாய்** = இல்லாதவனாகி, (808).

**இலனென்று** = யான் வறிய னென்று, (205).

**இலன்** = இல்லாதவன் - **மணக் குடவருரை,** (34, 193, 414, 566); வறுமையு டையோன், (205); வறியன், (223); துன்ப முறுதல் இலன், (341); இல்லாத வனாவான், (628, 629); இல்லாதவன், மாட்டாதவன் - **மணக்குடவருரை;** இலனாய், (647); அல்லன், (864).

**இலா** = இல்லாத, (200, 239, 594, 610, 731, 869, 919, 1053).

**இலாஅதவர்** = இல்லாதவர், (640).

**இலா அக் கடை** = இல்லாத விடத்து, (1059).

**இலாத** = இருக்கப் பெறாத, (161); இல்லாத சொற்கள், (291); பிறவாத, இல்லாத, (1030).

**இலாதவர்** = இல்லாத மன்னர், (598); இல்லாதவரோடு, (890).

**இலாதார்** = இல்லாதவர், (140).

**இலாதான்** = இல்லாதவன், (1006).

**இலார்** = இல்லாதவர், (72, 236, 262, 430, 1055); இலராவர், (427); இல்லாதவரது, (800, 811, 812, 843).

**இலார்க்கு** = இல்லாதவர்க்கு, (80, 449).

**இலாள்** = இல்லாதவள், (56).

**இலானும்** = இல்லையாயினும், (448).

**இலான்** = இல்லாதவன், (4, 617, 625, 842, 1000).

**இலான்கண்** = இல்லாதவனிடத்து, (135).

**இலேன்** = அறியப் பெற்றிலேன், (1226).

**இலோர்க்கு** = இல்லாதவருக்கு, (59).

**இல்** = இல்லாத, போல, (9, 174, 194, 380, 400, 1158, 1164, 1174, 1188, 1191, 1198, 1202, 1243); இல்வாழ் வான், (42); இல்லை, (44, 115, 141, 142, 170, 222, 233, 244, 25[illegible], 273, 276, 285, 287, 363, 368, 446, 460, 472, 526, 536, 538, 577, 583, 621, 713, 759, 770, 834, 839, 850, 871, 909, 910, 934, 1281, 1293); வீடு, (45, 47, 49, 52, 84, 340, 1107); இல்லாள், (59); இல்லாள் கண்ணே, (143); பிறன் இல்லாள், (146); சொல்லற்க, (196); சுருங்கிய, (218); குடிப் பிறப்பு, (951, 1001, 1005, 1021, 1063, 1065, 1066, 1068, 1071); உடைய, (1092); இடத்து, (1260, 1273, 1297, 1327).

**இல் ஆகி ஆங்கு** = இல்லாதது போல, (247).

**இல் இறப்பான்** = வீட்டுக்குள்ளே புகுகின்றவன், (145).

**இல் எனினும்** = இல்லையென்று கூறப்படினும், (222).

**இல்லது** = இல்லாதது, (53, 425, 735, 750); இல்லாததாம், இல் லாததாகிய சொல்லாம், (119).

**இல்லதே** = இல்லாததே, இல் லாதவனே, (587).

**இல்லல்ல** = உள்ளதே, இல்லாமல் இல்லை, (115).

**இல்லவர்** = இல்லாதவர், (577, 917).

**இல்லவள்** = மனைவி, இல்லாள், (53).

**இல்லா** = இல்லாத, (78, 853).

**இல்லாகும்** = இல்லையாகும், (94).

**இல்லாண்மை** = குடியை ஆளும் தன்மை, குடியோம்புதல், (1026).

**இல்லாத** = பயனில்லாத, (198); இல்லாத, (412); இல்லையாகிய, (448, 573, 574, 740, 945).

**இல்லாதவரோடு** = இறந்தவரோடு, (730).

**இல்லாதவர்** = இல்லாதவர்கள், (997).

**இல்லாதவர்க்கு** = உணராதவர்க்கு, (354).

**இல்லாதாள்** = இல்லாதவள், (402).

**இல்லாதான்** = இல்லாதவனது, (7, 523, 614).

**இல்லாளின்** = இல்லாளைப் போல, (1039).

**இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை** = மனைவியிடத்தில் தாழ்ந்து நடத்தலாகிய இயல்புக்கு மாறான தன்மை, (903).

**இல்லாயில்** = இல்லையாயின், இல்லாவிடில், (49, 52, 769, 1058, 1206).

**இல்லாரை** = பொருள் இல்லாதவரை, (752); இல்லாதவரை, (1056).

**இல்லார்** = அந்தச் செயல் இல்லாதவர், (170); இல்லாதவருக்கு, (247, 378, 1005); வறியவர், (395); இல்லாதவர், (431, 591, 600, 1020, 1050); இறந்தவர், (730).

**இல்லார்கண்** = இல்லாதவரிடத்து, (750).

**இல்லார்க்கு** = இல்லாதவருக்கு, (368).

**இல்லாவழி** = இல்லார் ஆகிய விடத்து; பெறாத இடத்து, (1308).

**இல்லாள்** = மனைவி, (52, 903); மனையாளுடைய, (906).

**இல்லாற்கண்** = இல்லாளிடத்து, (52, 903).

**இல்லான்** = இல்லாதவன், (407).

**இல்லிறப்பான்** = மற்றவர் மனைவியிடம் நெறிகடந்து செல்வான், (145).

**இல்லெனினும்** = இல்லையாயினும், (768).

**இல்லை** = உள்ளது ஆகாமை, (32, 59).

**இல்வழி** = இல்லாதவிடத்து, (770, 1274).

**இல்வாழ்வான்** = குடும்பம் நடத்துபவன், இல்லாளோடு இல்லில் வாழ்பவன், (41).

**இவக்காண்** = இங்கேயன்றோ, (இங்கே பாராய் - **மணக்குடவர்**), (1185).

**இவர்** = நண்பராகிய இவர், (790).

**இவர்தந்து** = மேலால் கொண்டு, ஏறி, (1182).

**இவளை** = இந்தப் பெண்ணை. (1188).

**இவள்** = பெண்ணுடைய, (1091); பெண், (1104, 1112, 1188, 1191).

**இவறல்** = கஞ்சத்தன்மை, ஈயாத பண்பு, (432).

**இவறன்மை** = படுகஞ்சத் திறமை, கொடுக்க மனம் வராத குணம், (438).

**இவறி** = பெரிதும் விரும்பி, (1003).

**இவறியார்** = கைவிடாதவர், அதனையே பற்றி இருப்பவர், (935).

**இவறியான்** = கஞ்சத்தனம் செய் பவன்; கடும் பணப் பற்றுடை யான், (437).

**இவறும்** = பொருளை விடாமல் பற்றிக் கொண்டிருப்பவன், (1002).

**இவன்** = இவனுடைய, (70); இவன், (517).

**இவை** = ஆகிய இவை, (360, 581, 1109); இந்தக் கண்கள், (1244).

**இவ்** = இந்த, (992).

**இவ்வுலகம்** = இந்த உலகத்தின் கண் இன்பம், (247).

**இவ்வுலகு உண்டு** = இந்த உல கம் அழியாமல் இருக்கின்றது, (571).

**இழக்கும்** = பின் இழக்கின்ற, (228); இழத்தற்கு ஏதுவாகிய இழக்க வரும், (463); இழப்பின், (554); இழந்து வறியவாம், இழக்கின்ற, (932).

**இழத்தும்** = இழப்போம், (1250).

**இழத்தொறூஉம்** = பொருளினை இழக்கும் போதெல்லாம், (940).

**இழந்தவன்** = இடுப்பிலே கட்டி யுள்ள துணி அவிழ்ந்தவன், (788).

**இழந்து** = துய்க்கும் தன்மை இழந்து, (1144).

**இழந்தேம்** = இழந்தோம், (593).

**இழப்பர்** = இழந்துவிடுவர், (494, 921).

**இழப்பினும்** = இழந்தான் என்றாலும், (659).

**இழப்பினும் என்?** = இழந் தாலும் என்ன தீமை, (812).

**இழப்பின்** = இழந்தால், (659, 812).

**இழவு** = இழத்தற்கு ஏதுவாகிய, (372).

**இழவூழ்** = கையிலே உள்ள பொருளை இழத்தற்குரிய ஊழ், (372).

**இழாய்** = அணிகலன்களை அணிந் தவளே, (1262).

**இழிந்த** = தாழ்ந்த, (133); வீழ்ந்த, உதிர்ந்த, (964).

**இழிந்தக் கடை** = நீங்கிய விடத்து, (964).

**இழிவறிந்து** = குறைவறிந்து; சிறிது குறைய உண்பதே உடலுக்கு நல்லது, (946).

**இழிவு** = குறைவு, (946).

**இழுக்கத்தின்** = ஒழுக்கம் தவறினால், (136, 137).

**இழுக்கம்** = தவறுதல், (133); குற்றத்தினை, (808).

**இழுக்கல்** = வழுக்கல், (415).

**இழுக்கா** = ஒழித்து, (35); தவறாது, (48).

**இழுக்காது** = வழுவாது, (384).

**இழுக்காமை** = மறவாமை, (536); **தப்புச் செய்யாமை என்கிறார் மணக்குடவர்.**

**இழுக்கார்** = வழுவார், (952).

**இழுக்கியான்** = மறந்திருந் தான், (535).

**இழுக்கு** = (சொற்) குற்றத்தோடு, (127); அறனற்ற, தீய, (164); குற்றம், (467); குற்றப்படு தல், (716); தப்புச் செய்க, (893); துன்பத்தை, (911).

**இழுக்காறு** = அறமற்ற வழி, (164).

**இழை** = அணிகலன், (1102, 1110, 1329).

**இழைத்தது** = செய்த சபதம், (779).

**இழைத்து** = ஆய்ந்து, (417); செய்து வைத்து, (530).

**இழைந்து** = மனம் நெகிழ்ந்து, (1177).

**இழையார்** = பெண்கள், அணிகலன் கள் அணிந்தவர், (919).

**இளி** = மானம் கேடடைதல், இழிவு, (970, 971).

**இளித்தக்க** = இகழத்தக்க, இழிவு தரத்தக்க, (1288).

**இளிவந்த** = இகழப்படுவன, (654).

**இளிவந்த சொல்** = இழிவான சொல், (1044).

**இளிவந்தது** = இழிவை தருவது, (1066).

**இளிவு** = இகழ்ச்சி, இகழ்வு, (464, 988, 1298).

**இளைதாக** = சிறுசெடியாக இருக்கும் போதே, (879).

**இளைது** = முளை, இளைய தான மர, செடிநிலை, (879).

**இளையர்** = வயதிற்குறைந்தவர், (698).

**இறந்த** = நீங்கிய, கடந்த, (432); அளவு கடந்த, (531); அகன்ற, (1275).

**இறந்தாரை** = செத்தவரை, (22).

**இறந்தார்** = நல்வழியைக் கடந் தவர், (159); கோபத்தில் அதிக மானவர், இறந்தவர், (310).

**இறந்தார்க்கும்** = வயது அதிக மாகி, திக்கற்று தவிக்கும் முதியோர்க்கும், (42).

**இறந்து** = எல்லை கடந்து, (283); நுனியும் கடந்து, (476); புகுவதற்குரிய அரிய இடங் களை எல்லாம் கடந்து உட் புகுந்து, (586); அளவு கடந்து, (900); ஊக்கம் இல்லாமலேயே, (971); கடந்து, (1138, 1254).

**இறப்பான்** = நெறி கடந்து செல்லு வான், (145).

**இறப்பான்கண்** = முறை கடந்து செல்லுபவனிடத்தில், (146).

**இறப்பினை** = தீமையை, (152).

**இறப்பு** = அளவு கடந்து, (977).

**இறப்பே புரிந்தே** = அளவு கடந்து போகும், நீதியை மீறி போகும், (977).

**இறல்** = அழிவு, (180); சாதல் வகைக் குற்றங்கள், (885).

**இறல்முறை** = சாதலோடு கூடிய (**கெடுதல் முறையோடுகூட - மணக்குடவர்**), (885).

**இறவா நின்ற** = கழன்றுவிழும் வளையல்களே, (1157).

**இறு** = இறுதி, (488).

**இறுதி** = முடிவு, (476); இறுதி முடிவு ஏற்படுவதாக, (690).

**இறும்** = முறியும், (475).

**இறுவரை** = முடிவுக் காலம், (488).

**இறை** = கடவுள் என்பர் சிலர்; ஆட்சித் தலைவனான மன்னன் என்பர் பலர்; நடுவு நிலைமை, (541); அரசன், (541, 547, 564); வரி விதிக் கும் கட்டண வகைகள், (733); பெருந் துன்பத்தை, (847); முன்கை மணிக்கட்டு, (1157).

**இறைக்கு** = அரசனுக்கு, (432).

**இறைஞ்சினாள்** = நாணத்துடன் தலைகுனிந்தாள், (1093).

**இறைப்பவர்க்கு** = தண்ணீரை இறைப்பவர்களுக்கு, (1161).

**இறைமாட்சி** = ஒரு நாட்டை ஆளும் மன்னனுடைய நல்ல பண்புகள், நல்ல செயல்கள் ஆகியவற்றின்

மாட்சிமைப்பட்ட செயல்களைப் பற்றிக் கூறுதல். இது திருக்குறள் 39-ஆவது அதிகாரமாகும்.

**இறைவற்கு** = அரசனுக்கு, (690, 733).

**இறைவன்** = கடவுள் என்பர் சிலர், (5).

இறை என்ற சொல், இறைவன், அரசன், தலைவனையே முதலில் குறித்து வந்த சொல். நாளடைவில் அது கற்பனைக் கடவுளுக்குப் பயன்படுத்தப் பட்டது. அரசன் வாழ்ந்த அரண் மனையைக் குறித்த கோயில் என்ற சொல்லே பின்னர் கற்பனைக் கடவுள் நிலை நாட்டப்பட்ட இடத்தையும் குறிக்கும் சொல்லாக ஆயிற்று என்று **நாவலருரை** கூறுகின்றது.

அதற்கு **நாவலருரை** வழங்கும் எடுத்துக் காட்டுகள் :

'மக்கட்கு இறையென்று வைக்கப்படும். குறள் 388. இறை என்பது தலைவன் என்ற பொருளில் வருகிறது.

'இறை காக்கும் வையகம் எல்லாம்'. குறள் 547. இறை என்பது அரசன் என்ற பொருளைக் குறிக்கிறது.

'ஓர்ந்து கண்ணோடாது இறை புரிந்து'. குறள் 541. இறை புரிந்து என்பது அரசனது நடு நிலைத் தன்மையைக் குறிக்கிறது.

'இறை கடியன் என்றுரைக்கும் இன்னாச் சொல்'. குறள் 564. இறை என்பது அரசனைக் குறிக்கிறது.

'இறைவற்கு, இறையொருங்கு நேர்வது நாடு'. குறள் 733. இறைவற்கு இறை என்பது அரசனுக்குச் செலுத்தும் இறைப் பொருள் என்று பொருள் படும்.

'இறைவற்கு உறுதி பயப்பதாம் தூது'. குறள் 690. இறை வற்கு என்பது அரசனுக்கு என்று பொருள்படும்.

'இறைவன், செறினும் சீர்குன்றல் இலர்' குறள் 778. இறை வன் என்பது அரசனையே குறிக்கும் என்று சுட்டுகின்றது நாவலருரை.

திருக்குறள் முதல் அதிகாரத்தை உரையாசிரியர்கள் அனைவரும் 'கடவுள் வாழ்த்து' என்றே கூறுகிறார்கள்.

**திருக்குறளார் முனிசாமி உரை** : முதல் அதிகாரத்தை 'கடவுள் வாழ்த்து' என்று தலைப்பிட்டு விட்டு, **அதனடியில் இறை வனது பண்புகள், வழிபாடுகள், பயன் முதலியவற்றைக் கூறு தல் என்று குறிப்பிடுகிறது.**

ஆனால், **நாவலருரை** கடவுள் வாழ்த்து எனப்படும் முதல் அதிகாரத்தை 'அறிவன் சிறப்பு' என்று சுட்டுகிறது. அதற்கு அவர் கூறும் காரணம். அறியாமை உலகத்திலிருந்து அகன்று, அறிவுடைய பயன்படும் உலகத் திற்கு மக்களை அழைத்து வரு வதற்கு முன்னோடியாக இருந்து, அறிவாலும், ஆற்றலாலும், பண்பாலும் சிறந்து விளங்கி, வழி காட்டக் கூடிய அறிவனின் சிறப்புப் பற்றிக் கூறுதல் என்று கூறுகிறது.

'இறை மாட்சி' என்ற அதிகாரத் திற்கு **திருக்குறளார்** உரை கூறும் போது : 'நாட்டிற்குத் தலை வனான மன்னனைப் பற்றிக் கூறுதல்' என்கிறார். இறை என்ற சொல்லுக்கு அவர் கடவுள் என்ற சொல்லையே எங்கும் குறிப்பிடவில்லை என்பது சிந்திக்கத்தக்க ஒன்றாகும்.

பொருட்பால் முதல் அதிகாரமான 'இறைமாட்சி' என்ற அதிகாரத்தில் வரும் **8-வது குறளான,** 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு **இறை என்று வைக்கப் படும்' என்று குறளில் வரும் 'இறை' என்ற சொல்லுக்கு, செய்லினாலே இறைவன் என்று வைக்கப்படுவான் என்கிறது திருக்குறளார் உரை.** அந்தச் சொல்லுக்கும் அவர் கடவுள் என்று கூறவில்லை.

ஆனால், முதல் அதிகாரத் துக்கு மட்டும் கடவுள் வாழ்த்து என்று பெயரிட்டுள்ளார். **அவ்வாறானால்; திருவள்ளுவர் சுட்டும் அந்த 'இறை' என்பதற்குரிய சரியான பொருள் என்ன? கடவுளா? மக்களுக்கு இறைவன் என்று அவர் உரை கூறுகிறதே அந்த மன்னவனா?**

**திருக்குறள் பாலருரை என்ற அறத்துப் பால்.** திருக்குறளின் **5-ஆவது குறளில் வரும் இறைவன் என்ற சொல்லுக்குக் கடவுள் என்கிறது. மற்ற உரையாசிரியர்களும் கடவுள் என்றே கூறு கிறார்கள்.** எனவே, உரைச் சிக்கல் சிந்தனைக்குரியதாக உள்ளது.

எனவே, பழைய உரைகாரர் களது இறைவன் என்ற சொல், திருக்குறள் 5, 10 பாக்களில் கடவுள் என்றும், இறை என்று வரும் மற்ற இடங்களில் அரசன் என்றும் கூறுகின்றன. படிப்போர் சிந்திக்க...!

**இன** = இனத்தினது, சுற்றத் தினது, *(457, 458, 459).*

**இனத்தன்** = இனத்தையுடையவன், *(446).*

**இனத்தாற்றி** = ஆட்சி சுற்றத்துடன் பொருந்தியிருந்து, *(568).*

**இனத்தான்** = சுற்றம் காரணமாக

**இனத்தின்** = இனத்தைக் காட்டிலும், *(460).*

**இனத்து** = இனத்தினது, *(452);* அவன் சேர்ந்த இனத்தின் வழியாக, *(454);* அமைச்சர் முதலானோருடன், *(568).*

**இனத்தொடு** = மந்திரிகள் குழு வினரோடு, *(462).*

**இனநலத்தின்** = சுற்றத்தின் நன்மையால், *(459).*

**இன நலம்** = இனத்தின் நன்மை, *(458).*

**இனந்தூயார்க்கு** = இனம் நல்லவர்க்கு, *(465).*

**இன முறையார்** = உறவு முறை யார், *(698).*

**இனம்** = நண்பர்கள், *(306);* சிற்றினம் குழு, கீழ் மக்களின் கூட்டம், *(451);* ஒருவன் சேர்ந்துள்ள இனத்தின், *(455);* சேர்ந்த இனம் தூய்மையான வர்களுக்கு, *(456);* நெருங்கிய உற்றார் போன்று, *(822, 844).*

**இனம் மாணா** = சுற்றத்தார் நல்லவர் ஆகார், *(884).*

**இனன்** = சுற்றம், *(793);* துணை ஏதும், *(868);* தோழியர், *(1158).*

**இனி** = இப்பொழுது, *(1083, 1294).*

**இனிது** = சுவையால் இனிமையுடையது, *(64);* கேட்பதற்கு இனிமையுடையது, *(66);* சுகத்தைத் தருவது, *(68);* மகிழ்ச்சி தருவதாகும், *(93, 865, 1103, 1108, 1145, 1176, 1196, 1202, 1206, 1215, 1309, 1326);* இன்பம், *(99);* சிறந்தது, *(181, 811);* மகிழ்ச்சிக்

குரியது, (230); இனிதாக, (648); நன்று, (772); இன்பம் தருவது, (839, 856).

**இனிதே** = இனியதே; 'ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது, (1108).

**இனிய** = இனிய சொற்களை, (95); **இனியவாக என்பர் பரிமேலழ கரும், மணக்குடவரும், இனிய சொற்கள்,** (100); இனியவாக, (824); இனியவாம், (1199).

**இனியது** = இனிதாயிருப்பது, (1065).

**இனியவே** = இனியவற்றையே, (987).

**இனியவை** = திருக்குறளில் வரும் 10-ஆவது அதிகாரம். விருந் தினரை முகம் மலர்ச்சியோடு உபசரிக்க வேண்டும். அதற்கு அகமலர்ச்சி முதற்கண் அவசியம். அந்த இரு மலர்ச்சி கள் இருந்தாலும், இனிய சொற்களைக் கூறி உபசரிக்க வேண்டும் என்பதால் தான் திருவள்ளுவர் விருந்தோம்பல் அதிகாரத்தின் பின்னே இனியவை கூறல் அதிகாரத்தை வைத் துள்ளார் என்பது குறிப்பு.

**இனியார்** = காதலர், (1158).

**இனை** = இவ்வளவு, (87).

**இனைத்துணைத்து** = இந்த அளவினது, (87).

**இனையர்** = இவ்வளவு அன்பினர், (790).

**இன்** = சாரியை, (6, 12); இனிய, நல்ல, (91 முதல் 94, 1198, 1209); இனிய சொற்களை, (95, 98, 99, 224, 327, 387, 525); சாரியை, (1053, 1105, 1120, 1123, 1165); இனிய, (1198, 1209); விகாரத்தால் தொக்கது, (1282, 1326) மற்ற இடங்களில் 5ம் வேற்றுமை உருபாக ஒப்பு, ஏது, உறழ்புப் பொருளில் வந்துள்ளது).

**இன் உயிர்** = இனிய உயிர், (327).

**இன்கண்** = இன்பமூட்டும் கண், (1152).

**இன்சொல்** = இனிய சொற் களாவன, (91); இன்சொல் வல்லவனாயின் - (மணக் குடவர்), இனியச் சொற் களைச் சொல்லுதலின் கண்ணேதே - பரிமேலழகர்).

**இன்சொலவர்க்கு** = இனிமையான சொற்களைக் கூற முடிபவர் களுக்கு, (94).

**இன்சொலன்** = இனியச் சொற் களைக் கூறுபவன், (92, 95).

**இன்பத்துள்** = இன்பம் வந்த போது, (629); இன்பங்கள் எல்லாவற்றுள்ளும், (854).

**இன்பம்** = மகிழ்ச்சி, (39, 65, 98, 156, 173, 228, 352, 369, 501, 615, 628, 629, 630, 669, 738, 754, 854, 869, 945, 1052, 1166, 1330).

**இன்பம் விழையாதான்** = மகிழ்ச் சியை விரும்பாதவன், (629).

**இன்பு** = மகிழ்ச்சி, இன்பம், (75).

**இன்புறுவது** = இன்பம் அடைவது, (399).

**இன்புறூஉம்** = இன்பத்தை அதிகப் படுத்தும், (94).

**இன்புற்றார்** = இல்வாழ்வில் சுகத் தைப் பெற்றவர்கள், (75).

**இன்முகம்** = மகிழ்ச்சியால் மலர்ந்த முகம், (224).

**இன்மை** = வறுமை, (89, 153, 616, 988, 1041, 1042), மனக்கோணல் இன்மை, (119);

**இன்மை வலியின்மை (மணக்குடவர்), வறுமை - (பரிமேலழகர்):** இல்லாமை, *(320)*; பொருட்பற்றின்மை, *(344)*; அவா இல்லாமை, *(364)*; முயற்சியின்மை, *(371)*; இல்லாதிருத்தல், *(503)*; ஆசையின்மை, *(513)*; மழையின்மை, அருளின்மை, *(557)*; இல்லாமல், *(577)*; பொறியின்மை, அதாவது அறிவதை அறிந்து, முயற்சி மேற்கொள்வது, *(618)*; நோயில்லாமை, *(738)*; அன்பின்மை, *(833, 958)*; அறிவின்மை, எல்லா இன்மைகளுள், பிறயின்மைகள், இன்மை யாக, *(841)*; தகுதியின்மை, *(903)*; இல்லாத, *(979)*; நாணம் இல்லாமை, *(1019)*; வறுமையானது, *(1044)*; வறுமைத் துன்பம், *(1063)*; இரக்கம் இல்லாமை, *(1209)*; அன்பில்லா மல், *(1276)*.

**இன்மையும் இல்** = இல்லாமலும் இருக்கமாட்டார், *(577)*.

**இன்மையுள் இன்மை** = வறுமையுள் வறுமை, *(153)*.

**இன்றி** = இல்லாமல், *(112, 166, 171, 401, 523, 529, 566, 620, 682, 754, 759, 947, 961, 1042, 1069, 1253)*.

**இன்றிக் கெடும்** = இல்லாமல் போய் விடும், *(1069)*.

**இன்றி அமையா** = இதனை இன்றி இயலா, *(961)*.

**இன்றியமையாத** = இல்லாது முடியாத, இருக்க வேண்டிய, *(682)*.

**இன்று** = இல்லை, *(83)*; **முன்நின்று - (மணக்குடவர்), முன் இன்று - பரிமேலழகர். இன்றி என்பது இன்று ஆகத் திரிந்தது. (தொல்காப்பியம், எழுத்து 238)**, *(184-வது குறள்)*; இன்றைக்கு, *(336, 1048, 1133, 1262)*; இல்லை, *(354, 740, 875, 904, 955, 966, 1090, 1252)*; இல்லா மல், *(764)*.

**இன்று பொய்ப்பின்** = பெய்ய வேண்டிய காலத்தில் பெய்யாது நின்று விட்டால்; **(நின்று - நிலை நிற்க - மணக்குடவர்) (13)**.

**இன்றும் வருவது கொல்** = இன்றும் என்னிடம் மேலும் வரக் கூடுமோ? வந்தால் யாது செய்வேன்?, *(1048)*.

**இன்றேல்** = இல்லாவிட்டால், இல்லையானால், *(556), 573, 575, 996, 1014, 1144)*.

**இன்னம்** = ஒருவரை ஒருவர் இப்பட்டிப்பட்டவர் யாம் என்பரேல், *(790)*.

**இன்னா உலகம்** = துன்பம் தரும் உலகம்; சிலர் நரகம் என்பர், இருள் கூடிய நரகம் என்றும் கூறுவர், *(243)*.

**இன்னாச்சொல்** = கடுமையான சொல், துன்பம் தரும் சொல், இனிமையற்றச் சொல், *(35, 159, 160)*.

**இன்னாத** = கடும சொற்கள், *(1100)*; தீமை பயக்கும் சொற்கள், தீமைகள், *(313, 860, 881)*.

**இன்னாதது** = துன்பம், *(230, 1041)*.

**இன்னாது** = துன்பம் தருவதா கும், *(224, 229, 408, 558, 819, 923, 995, 1158, 1196)*.

**இன்னாமை** = துன்பம், *(318, 630)*.

**இன்னான்** = இப்படிப்பட்ட பண்பினன், *(453)*.

**இன்னும்** = பின்னும், *(1250)*; இந்த எல்லையினும், *(1263)*.

**இன்னுயிர்** = இனிய உயிர், *(327)*.

# ஈ

ஈ = தமிழ்மொழியின் நெடுங்கணக்கில் வரும் நான்காவது எழுத்து. அங்காப்போடு மேற்பல்லை அடி நாவின் விளிம்பு பொருந்தப் பிறக்கும் ஒரு நெட்டுயிர். கொடுவென்னேவேல், முன்னிலை அசைச் சொல். எடுத்துக்காட்டு சென்றீ பெரும நிற்றகைக்குநர் யாரே வண்டு.

---

**ஈக** = கொடுக்க, கொடுக்க வேண்டும், *(477)*; வெல் வானாக;, *(1268)*.

**ஈகலான்** = கொடுக்கமாட்டான், *(863)*.

**ஈகை** = திருக்குறளில் இது 23-ஆவதுஅதிகாரம். ஏழ்மை யோடு பிச்சை கேட்டு வருவோர் அனைவருக்கும் இல்லை என்று கூறாமலும், ஒரு வரம்பு வகுத்துக் கொள்ளாமலும், பயனை எதிர்பாராமல் ஒருவன் தனது விருப்பப்படி பொருளை அள்ளிக் கொடுத்தல் ஈகைப் பண்பு. இதைத் தானம் என்பர் வட நூலார். கொடை, *(221, 382, 953)*.

**ஈட்டம்** = ஈட்டிய பொருள், பொருள் சேர்ப்பது, *(1003)*.

**ஈட்டல்** = பொருள் சேர்த்தல், *(385)*.

**ஈட்டிய** = சேர்த்து வைத்த பெரும் பொருளை, *(1009)*.

**ஈண்டிய** = நிறைந்த, *(417)*.

**ஈண்டு** = இந்த உலகில், *(18)*; இந்தப் பிறப்பில், *(23, 369)*; இவ்வுலகில், *(213)*; இப் பிறப்பின், *(265, 342, 356)*; இந்த உலகில், *(363)*; பிறவா நெறி, *(356)*.

**ஈண்டு வாரா நெறி** = பிறவா நெறி, தூய துறவற நெறி, *(356)*.

**ஈதலின்** = கொடுத்தலினும் விட, *(92)*.

**ஈதலே** = கொடுத்தலே, *(1054)*.

**ஈதல்** = கொடுத்தல், *(223, 230, 842, 1006, 1054)* -

[இதற்கு **நன்னூல் இலக்கண உரை ஆசிரியர் இராமானுசர்;** ஈதல் என்றால் உண்ணும் பண்டங்கள் உணவு முதலியவற்றையே குறிக்கும் என்கிறார்.]

[ஈகையின் பயன், *(231)* (**புகழ் பட வாழ்தலாவது கொடுத் தல்; அக் கொடையானல்லது உயிர்க்கு இன்பம் வேறு ஒன்றும் இல்லை என்கிறார் மணக்குடவர்**].

[வறியார்க் கீக, அதனாற் புகழுண்டாக வாழ்க; அப் புகழல்லது மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லை யாகலான்' என்பது **பரிமேலழகர்** கருத்து].

[ஈதல் ஆகு பெயர். இரப்போர்க் கீயாமையிற் றொன்மை மாக் களிற் றொடர்பறி யலரே' என்பது **புறநானூறு** 165-4.5].

**ஈத்து** = பிறர்க்கு ஈதலைச் செய்து, கொடுத்து, *(228)*

['கொடுத்த கொடையினால் பெற்றவர்க்கு வரும் முக மலர்ச்சியைக் கண்டறி யாரோ' என்பர் **மணக்குடவர்**]. கொடுத்து;

(387); ஒரு பொருளைக் கொடுத் தாயினும், (800).

**ஈத்துவக்கும்** = மேலே உள்ள மணக்குடவருரையையும் கவனம் கொள்க. ஏற்றவர்க்கு வரும் முக மலர்ச்சியினால் மகிழும், (228).

**ஈந்தது** = தந்தது. எனக்குக் கொடுத்தது, (1142).

**ஈயப்படும்** = இடப்படும்; **கொடுக்கத் தகும் என்பர் மணக்குடவர்**, (412).

**ஈயாது** = கொடாது, (1002).

**ஈயும்** = கொடுக்கும், (1061).

**ஈரம்** = அன்பு, (91).

**ஈரும்** = அறுக்கும், அறுத்துச் செல்லும், (334).

**ஈர்ங்கண்** = குளிர்ந்த இடத்தை யுடைய, (1058).

**ஈர்ங்கை** = ஈரமான கை, உண்டு கழுவிய கை, (1077).

**ஈவது** = கொடுப்பது, (221).

**ஈவர்** = கொடுப்பர், (1035).

**ஈவாரை** = கொடுப்பாரை, (1057).

**ஈவார்கண்** = கொடுப்பவரிடத்து, (1059).

**ஈவார்மேல்** = கொடுப்பார்மேல், (232).

**ஈனும்** = தரும், (31, 180, 754); ஈனும் பெயரெச்சம், உண்டு பண்ணும், (74); கொடுக்கும், (311); உண்டாக்கும், (361).

**ஈன்** = பெற்ற, (757).

**ஈன்பது** = உண்டாவது, (165); ஏழாம் வேற்றுமை, (தொல். சொல் 105), இரண்டாம் வேற்றுமையாகவும் கொள் ளலாம். 'ஒன்னார் வழுக்கியுங் கேடீன்பது என்பதற்கு; 'அழுக் காறு பகைவரை யொழிந்துங் கேடு பயப்ப தொன்றாகலின் என்று' பரிமேலழகர் உரை கூறினார். அவ் வாறு கொள்ளின் வழுக்கியும் என்றவிடத்து உம்மைச் சிறக்காது.

**ஈன்ற** = பெற்ற, (1047).

**ஈன்ற பொழுது** = குழந்தையைப் பெற்ற காலத்திலும், (69).

**ஈன்றல்** = தருதல், பயத்தல், (99).

**ஈன்றாள்** = தன்னைப் பெற்றவள், (656, 923).

**ஈன்று** = உண்டாக்கி, (97)

# உ

*தமிழ் மொழி நெடுங்கணக்கில் 'உ', ஐந்தாவது எழுத்து. இந்த எழுத்தை வாயைத் திறந்து அங்காப்போடு இதழ் குவித்து உச்சரிக்கும் அளவிலே ஒலிக்கும் ஒரு குற்றுயிர். தமிழ் எண்ணியலில் இரண்டு என்ற எண்ணின் குறிவடிவ எழுத்து. இந்த 'உ' வடிவ எழுத்து, உருக்கம், கட்டளை, கோபம், சம்மதம் இவற்றின் ஒலிகளை உணர்த்திக் காட்டும் ஓர் இலக்கிய செய்யுட் கூறுபாடு. எடுத்துக்காட்டு : செய்து, இது தன்மை ஒருமை வினைப் பகுதி. உ்ஃது; ஒன்றன் படர்க்கைச் சுட்டுப் பெயர். எடுத்துக்காட்டு : உக்கொற்றவன், உவன் என்பவை.*

**உகாமை** = நெஞ்சில் உள்ள வற்றை வெளிப்படுத்தாத; சொல்லாமை, (உகுதல் சொரிதல்), (585).

**உக்க** = சிந்திய, (720).

**உக்கக்கால்** = தன்நிலை அழிந்து போய் விடுவாளேயானல், (1270).

**உஞற்று** = முயற்சி, (604).

**உஞற்று இலவர்** = முயற்சியற்றவர், (607).

**உஞற்றுபவர்க்கு** = முயற்சி செய்கின்றவர்களுக்கு, (1024).

**உஞற்றுபவர்** = முயல்பவர், (620).

**உடம்பாடு** = மனப்பொருத்தம், (880).

**உடம்பாடிலாதவர்** = உட்பகை உள்ளவர், (890).

**உடம்பினகத்து** = உடம்பின் உள்ளே, (1163).

**உடம்பினுள்** = உடம்புகளுள், (340).

**உடம்பின்** = உடம்பினின்று, (330).

**உடம்பு** = உடம்பு, (80); உடம்பும், (345); உடம்புகள், (637); உடல், (943, 1029, 1122).

**உடம்பொடு உயிரிடை** = உடம்புக்கும் உயிருக்குமுள்ள, (338, 1122).

**உடல்** = உடம்பு, (235).

**உடற்கு** = உடம்புக்கு, (65).

**உடற்றுபவர்** = வருந்துகிறவர், முடியதாபடி கெடுப்பவரின், (818).

**உடற்றும்** = நிலைபெற்று துன்பப் படுத்தும், (12).

**உடன்** = ஒருங்கே, ஒருமிக்க, **(ஒரு காலத்தே என்கிறார் மணக் குடவர் தனது உரையில்)**, (309, 589); ஒரு கூடி, கூட (632); சேர்ந்து, (890).

**உடன் மூவர்** = ஒரு பொருள் பற்றி வெவ்வேறாக ஒற்றரை ஆய்வதற்காக அனுப்பப்பட்ட மூன்று பேர், (589).

**உடனுறைந்து** = சோர்ந்து வாழ்வதை, (890).

**உடன்று** = சினந்து, கோபம் கொண்டு, (765).

**உடுக்கை** = ஆடை, உடை, (788).

**உடுப்பதூஉம்** = உடுக்கும் துணியும், (166) (பிறர் முன்நின்ற நிலையினும் மேற்பட்ட உடுக்கும் ஆடையும் - **காளிங்கர் உரை**), (1079).

**உடை** = உடைய, (62, 389, 415, 473, 907, 1034); உடுக்கப்படுவன, (939, 1012).

**உடை உழி** = உண்டான இடத்தில், (415).

**உடைக்கும்** = ஒடிக்கும், (1077); அழிக்கும், (1258, 1324).

**உடைத்தாயின்** = உடையதாயிருந்தால், (44,45).

**உடைத்தாய்** = உடையதாய், (746).

**உடைத்து** = உடையதாகும், உடையது, (48, 112, 126, 220, 221, 277, 336, 353, 398, 458, 459, 565, 578, 611, 624, 667, 746, 770, 780, 868, 907, 925, 1010, 1018, 1053, 1057, 1082, 1085, 1152, 1173, 1275, 1276, 1280, 1325).

**உடைந்தது** = அழிந்து விட்டது, (1088).

**உடைந்து** = அழிந்து, கெட்டு, (1270).

**உடைமை** = உடையவனாயிருக்கும் தன்மை, (68, 74); செல்வமுடைமை, (89); உடைய பொருள், (228, 592); உடையனாம் தன்மை, (641, 681, 688); பொருள், (838); நாணமுடைமை, (1012).

**உடைமையுள்** = செல்வமுள்ள காலத்தில், *(89).*

**உடைய** = உள்ள, *(41, 975, 1299, 1300);* உள்ளவை, *(200).*

**உடையது** = உடையவனே, *(384);* மற்ற பொருள்களைப் பெற்ற வர்களாக இருந்தாலும், *(591);* உடையன, *(742);* உடையது அரண், *(746);* பெருமை யுடையது, *(1021).*

**உடையம்** = உடையோம், *(844).*

**உடையரேனும்** = பெற்றவராக இருந்தபோதும், *(430).*

**உடையரோ** = பெற்றவரா வாரோ, *(591).*

**உடையர்** = பெற்றுள்ளார், *(159, 1072);* பெற்றுள்ளவர், *(285, 293, 458, 591, 900).*

**உடையவர்** = பெற்றிருப்பவர், *(975).*

**உடையவர்க்கு** = பெற்றிருப் பவர்க்கு, *(139).*

**உடையவன்** = பெற்றிருப்பவன், *(112).*

**உடையள்** = உடையவளாய், *(51).*

**உடையன்** = பெற்றவனாய், *(95).*

**உடையாட்கு** = பெற்றவளுக்கு, *(1089).*

**உடையார்** = உடையவாகள, *(179, 195);* செல்வர், *(395);* உடை யவர், *(404, 413, 415, 427, 430, 441, 526, 593).*

**உடையார்க்கு** = உள்ளவருக்கு, *(165, 262, 534, 636, 910).*

**உடையாளர்** = உடையவர்கள், *(783).*

**உடையாளன்** = உடையவன், *(874).*

**உடையானை** = பெற்றவனை; பெற்றுள்ளவனை, *(167).*

**உடையேம்** = பெற்றுள்ளோம், *(1250).*

**உடையேன்** = பெற்றுள்ள யான், *(1254).*

**உட்கப்படா அர்** = பகைவரால் அஞ்சப்படார்

**உட்கும்** = பயப்படுகின்ற, *(1088).*

**உட்பகை** = இது திருக்குறள் அதி காரம் 89. ஒருவன் வெளித் தோற்றத்திலே நட்புடைய வனைப் போல நடந்து கொண்டு, வெளிப்பகைக்கு உதவி செய்தும், புறப்பகை வெற்றி பெறுவதற்கு இடமளித் தும், உடனிருந்தே கெடுக்கும் குணம் உட்பகை.

[இதற்கு திருக்குறள் உரையாசிரி யருள் ஒருவரான **பரிப்பெருமாள்,** 'உட்பகையாவது, நாட்டுத் தலைவராயினும், அதிகாரி களா யினும் நாட்டைக் கெடுக்குமவர் கள்' என்கிறார்]. *(735, 883, 884, 885, 887, 889).*

**உட்பட்டு** = அகப்பட்டு, *(266).*

**உணங்கின்** = உழுது காய விடு வானானால், *(1037).*

**உணங்க** = நான் மெலிந்து இருக்க, *(1310).*

**உரை** = அறியும் வண்ணம், *(650).*

**உணரப்படும்** = அறியப்படும், *(575, 826, 1096).*

**உணல்** = உணரப்படத் தக்கதாகும், *(11).*

**உணரற்பாற்று** = அறியும் தன்மை யுடையது, *(11).*

**உணரா** = அறியாத, *(420);* தெரிய மாட்டாத, ஆய்ந்துணராத, *(1304).*

**உணராமை** = அறியாமல், (589); ஊடல் தீர்த்துக் கூடாது இருத்தல் என்பது, (1304).

**உணராய்** = புலவி நீங்க மாட் டாய், (1124).

**உணராவாயின்** = அறிய மாட்டா தவராயின், (705).

**உணரின்** = அறியுமாயின், (357).

**உணரும்** = நினைக்கின்ற, (331, 351).

**உணர்க** = உணர்ந்து கொள்க, (805).

**உணர்ச்சி** = ஒத்த உணர்ச்சி, அறிவு, (785).

**உணர்ச்சியுள்** = மனத்தில், (976).

**உணர்தல்** = ஓரளவு ஊடலை நீக்கிக் கொள்ளுதலும், (1109).

**உணர்த்தினும்** = நான் பணிந்து ஊடலைத் தீர்க்க முயன்றாலும், (1319).

**உணர்த்தும்** = நீக்க வல்ல, (1246).

**உணர்ந்தன** = அறிந்தன, (1277).

**உணர்ந்தவை** = அறிந்தவற்றை, (316).

**உணர்ந்து** = அறிந்து, (359, 417, 516, 712, 834, 1046).

**உணர்ந்தும்** = அறிந்திருந்தும், (834).

**உணர்வது** = அறிவது, (718).

**உணர்வதுடையார்** = மற்றவர்கள் உணர்த்தலின்றிப் பொருளைத் தாமே உணரும் திறனுடையார், (718).

**உணர்வாரை** = அறியும் குண முடையவரை, (703).

**உணர்வார்** = அறிகின்றவர், (257, 334, 708, 709, 716).

**உணர்வானை** = தெரிந்து புரிந்து கொள்ளும் சக்தியுடை யவனை, (702).

**உணர்வின்** = அறியும் இன்பத்தை நுகரும், (420).

**உணர்வு** = அறிவு, (354).

**உணல்** = உண்பது.

**உணலின்** = மென்மேலும் உண் பதைக் காட்டிலும், (1326).

**உணவு** = உணவாகிய கேள்வி, (412).

**உணவின்** = உணவாகிய; உணவு போன்ற, (413).

**உணி** = ஊர் மக்கள் தண்ணீர் குடிக்கும் குளம்; அல்லது கிணறு, (215).

**உணில்** = உண்ண விரும்பினால், (922); உண்பானாயின், (942).

**உண்க** = உட்கொள்ளுக, (922, 943).

**உண்கண்** = மையுண்ட கண், (1113, 1172, 1174, 1212, 1271).

**உண்ட** = உண்ட பொழுது, (930).

**உண்டது** = உண்ட உணவு, (1326).

**உண்டல்** = தான் மட்டுமே இல்லுக்குள்ளிருந்து உணவு உண்ணல், (82); உட்கொள்ளு தற்கு, (1128); கள்ளுண்டல், (1145).

**உண்டாக** = இருக்கும் காலத்தி லேயே, (342); பொருளை வைத்துக் கொண்டு, (758); ஏற்பட்டு விட்டால், (988).

**உண்டாங் கொல்** = நல்வழி உண்டாமோ, (932).

**உண்டாம்** = உண்டு, (110).

**உண்டாயினும்** = உண்டாயிருப் பினும், (1005).

**உண்டாயின்** = உண்டாவதாயின், (128).

**உண்டார்** = உண்டவர், (253).

**உண்டார்கண்** = உண்டவரிடத்து, (1090).

**உண்டி** = உணவை, (945).

**உண்டு** = உளது, (54); உட்கொண்டு, (322, 580, 1033, 1101).

**உண்டேல்** = உண்டாயின், (308, 1075, 1151).

**உண்ண** = உண்பானாயின், (255).

**உண்ணலின்** = உண்டற்கு, (1065).

**உண்ணற்க** = உண்ணாதொழிக, (922).

**உண்ணா** = உண்ணாத, (930).

**உண்ணாது** = உணவைச் சாப்பிடாமல், (160).

**உண்ணாமை** = சாப்பிடாமல் இருத்தல், (255, 257, 259).

**உண்ணார்** = உண்ண மாட்டார், (258).

**உண்ணான்** = சாப்பிடாதவன், (1001).

**உண்ணின்** = உண்ணுவானானால், (945, 947).

**உண்ணும்** = விழுங்கும்; சாப்பிடும்; அழிக்கும், (326); தின்னும், (527); பருகும், (1084, 1221).

**உண்பதூஉம்** = உண்ணப்படுவதும், (166, 1079).

**உண்பர்** = உண்பார்கள்; நோக்குவர், (1311).

**உண்பான்** = சாப்பிடுவான், (251, 946).

**உண்மை** = உளராதல், (572); ஊழியினாலாகிய பேதைமை இயல்பு, (373); உள்ள தன்மையை, (1212).

**உண்மையான்** = இருப்பதினால், (571); உளராய தன்மையால், (1055); உண்டாம் ஆதலால், (1153).

**உதவி** = உபகாரம், நன்றி, (70, 101, 103, 105).

**உதவும்** = உதவிக் காக்கும், (746).

**உப்பக்கம்** = முதுகு, புறங்காட்டி, (620).

**உப்பக்கம் காண்பர்** = புறங்காட்டி ஓடச் செய்வர், தோற்கடிப்பர், (620).

**உப்பாதல்** = இனிமையராதல்; உடன்பட்டவராக இருத்தல், (802).

**உப்பிற்கும்** = பிறர் இடுகின்ற உப்பிற்கும், (1050).

**உப்பு** = நட்பினிமை, (802, 1328); அளவோடு சேர்க்க வேண்டிய உணவு உப்பு, (1302).

**உம்** = அசை நிலை, (110, 896, 932, 1050, 1075, 1146, 1164, 1327).

**உயர்** = நெடிய, உயர்ந்த, (272).

**உயர்ந்த** = வளர்ந்த, மிகுந்த, (233); எய்தற்கரிய, (346).

**உயர்ந்து** = நெடிதுயர்ந்து; எல்லாரும் பார்க்கும் வகையில் தோற்றமளிக்கும், (957).

**உயர்வு** = மக்களால் வரும் பெருமை, மேம்பாடு, (135); உயர்ச்சி, பொருள் படைகளால் மிகுதல், (595); உயர்ச்சியையே, (596); நல்ல உயரத்தை (743) [**பரிதியார் உரை** 'பணியாமை தன்மை குறைவு படாமல் ஒழுகல்; தாழ்ச்சி சொல்லாமல் கனமாயிருத்தல் வேண்டும்' என்று கூறுகிறது; கனம், பெருமை, (963)]; ['சொல் வளம் குறுகி விட்ட ஒரு வறியர், பிறரிடம் மிக உயர்வாக நடந்து கொள்ள வேண்டும்' என்று கூறுகிறது **நாவலருரை**, (963)].

['நற்குடியில் பிறந்த செல் வர்க்கு வறுமை உண்டானபோது உயர் வான தன்மை வேண்டுவதாகும்' - **திருக்குறளார்** உரை, (963)].

**உயலாற்றா** = உய்ய மாட் டாமைக் கேதுவாகிய, (1174).

**உயல்** = ஒழிதல், நீக்கத் தகுந்த, (40); உளராதல், உய்தல், (437); நான் காம நோயிலிருந்து பிழைக்க, (1174); உயிர் பிழைத்திருப்பதன், (1212).

**உயிரச்சம்** = தனது உயிரை இழப் பதற்கும் அச்சமற்ற, (501).

**உயிரஞ்சா** = உயிரை இழக்க அஞ்சாத, (778).

**உயிரார்** = உயிர் வாழ்தலை விரும் பாத வீரர்கள், (777).

**உயிரிடை** = உயிருக்குள்ள, (338); உயிரிடத்து, (1122).

**உயிரினும்** = உயிரைக் காட்டிலும், (131).

**உயிரின்** = உயிரினின்று, (258).

**உயிரினும்** = உயிருக்கும் மேலாக, (13).

**உயிரை** = உயிரினை (1017).

**உயிர்** = சீவன் இருக்குமிடம், (78, 80).

**உயிர்காவா** = உயிர்க்காவு தண்டாக, சீவனை சுமக்கும் காவடித் தண்டுபோல, (1163).

**உயிர்க்கு** = எல்லா உயிருக்கும், (30, 311).

**உயிர்க்கும்** = மக்களுக்கும், (851, 972, 1012).

**உயிர்த்து** = மூக்கால் முகர்ந்து, (1101).

**உயிர் நிலை** = உயிருக்கு இருப் பிடம்; உடம்பு, (80, 290); உயிர்கள் நிலை பெறுதல், (255).

**உயிர் நீப்பர்** = உயிரை விட்டு விடுவர், (967).

**உயிர்போம்** = உயிர் போவது போல ஏக்கம் எழும், (1070).

**உயிர்ப்ப** = மூச்சுவிட, (763; மூச்சு விடுகின்ற அவ்வளவு நேரம் கூட, (880).

**உயிர்ப் பொருட்டு** = உயிர் போகா மல் இருக்கும் பொருட்டு, (1017).

**உயிர்மருட்டியற்று** = உயிருள்ளது போல மயக்கும் தன்மையை ஒக்கும், (1020).

**உய்க்கிற்பின்** = நுகர அனுபவிக்க வல்லவனானால், (440).

**உய்க்கும்** = கொண்டு போய் விடும், (121); உடம்பைச் செலுத்து தற்கு, உயிர் வாழ்வதற்கு, காப் பாற்றி வாழ வைக்கக்கூடிய, (943); என்னை விட்டுப் பிரித்துக் கொண்டு போய் விடுகிறது, (1134).

**உய்த்தல்** = வெள்ளம் இழுத்துக் கொண்டு செல்லக் கூடும் என்பதை, (1287).

**உய்த்து** = கொண்டு போய், (376); நல்ல நெறியில் நடக்கச் செய்து, (787); சுமந்து சென்று, (1076).

**உய்த்து விடும்** = கொண்டு செலுத்தி விடும், (121, 168).

**உய்ப்பது** = செலுத்துவது, (422).

**உய்யா** = பிழைக்க முடியாத, கடக்க முடியாத, (313).

**உய்யாது** = அவன் பெயரையும் செலுத்தாது, (966).

**உய்யார்** = உயிர் தப்பி வாழ முடி யாது; உயிர் தப்பிப் பிழையார், (900).

**உய்வர்** = தப்பிப் பிழைப்பார்கள், *(207)*.

**உய்வில்** = தீராத, *(1174)*.

**உய்வு** = பிழைப்பு, நல்வாழ்வு, பிராயசித்தம், *(110)*; உயிர் தப்பி வாழ முடியும், *(896)*; ஒழிதல், *(1174)*.

**உரம்** = வலிமை, *(600, 888)*.

**உரவோர்** = அறிவுடையோர், *(136)*; ஊக்கமுடையோர், *(597)*.

**உரன்** = அறிவு, மன உறுதி, *(24)*; வெற்றி, வலிமை, *(1263)*.

**உரிமை** = உரியவன், ஏற்றவன், உரிமை பெற்றவன், *(518, 578)*.

**உரியர்** = உரிமையுடையவர், *(72)*; வல்லவர், *(1080)*.

**உரியன்** = அந்த வினையாற்றிட உரியவன், ஏற்றவன், *(518)*.

**உரியார்** = உரிமையுடையவர்; தகுந்தவர், *(149)*.

**உரியாள்** = உரிமையுடைய மனைவி, வாழ்க்கைத் துணை நல இல்லாள், *(149)*.

**உரு** = வடிவு, *(261, 585)*; தோற்றப் பொலிவு, *(684)*.

**உருகும்** = கரையும், *(1069)*.

**உருவம்** = வேடம், *(273)*.

**உருவு** = வடிவின் சிறுமை, *(667)*.

**உருவொடு** = வடிவத்தோடு, *(585)*.

**உருளாயம்** = தாயம் ஆறு, தாயம் பன்னிரெண்டெனப் பெண்கள் தாயக் கட்டையை உருட்டி ஆடுதல், *(933)*.

**உருள்** = உருள்கின்ற, *(667)*; சூதாடுங்காய் உருள்வதாலுண் டான, *(933)*.

**உரை** = சொல், *(193)*; புகழ், *(581)*.

**உரைக்கலான்** = சொல்லுதலால், *(1076)*.

**உரைக்கல்** = சொல்லுதல், *(1271)*.

**உரைக்கு** = சொல்வேன், *(1181)*.

**உரைக்கும்** = சொல்லும், *(193, 709, 912)*; சொல்லுவர், *(743)*; சொல்லா நின்றன, *(1235)*.

**உரைக்கோ** = சொல்லுவேன், *(1181)*.

**உரைத்தலும்** = சொல்வதென்றால் சொல்லவும், *(1162)*.

**உரைத்து** = சொல்லி, *(1237)*.

**உரைத்தும்** = சொல்லியும், *(834)*.

**உரைப்பது** = நான் நாவால் கூறு வதும், *(1184)*.

**உரைப்பவை** = பொதுவாகச் சிறப் பித்துக் கூறுபவை எல்லாம், *(232)*.

**உரைப்பாய்** = கூறுவாய், சொல்லு வாய், சொல்கின்ற, *(1200)*.

**உரைப்பார்க்கு** = நாடு விட்டு நாடு தூது போவோருக்கு பொது வாகத் தூதுரைக்கச் செல் வாருக்கு, *(682)*.

**உரைப்பான்** = கூறுவான், சொல்லு வான், *(189, 681, 683, 687, 689)*.

**உரையாதார்** = உரைக்க முடி யாதவர்கள், *(650)*.

**உரையாமை** = சொல்லாமை, கூறாமை, *(223)*.

**உலகத்தார்** = உயர்ந்தோர், உலகத்தவர், *(294, 850)*.

**உலகத்தார்க்கு ஆணி** = உலகத்தா ராகிய தேருக்கு அச்சாணி, *(1032)*.

**உலகத்து** = உலகத்து வழங்குகின்ற, *(533)*; உலகத்தினது, *(637)*.

**உலகத்துள்** = உலகத்தின் உயிர் களை, *(13)*.

**உலகத்தியற்கை** = உலக நடை முறைகள், (637).

**உலகத்தோடு** = உலக இயல்பு களோடு, உயர்ந்த மக்கள் ஒழுகும் ஒழுக்கம் போல, (140, 426).

**உலகம்** = இந்த உலகத்து உயிர் கள், (11) - [உலகம் என்றது ஈண்டு உயிர்களை என்றார் **பரிமேலழ கர்.** மழையின்மையால் கடல் குன்றுதல் போன்றனவும், நிகழ் கின்றமையான் உலகம் என்பது உலகத்துள்ள பொருள்கள் எல்லாவற்றையும் குறித்தல் கூடும்], (11); மண்ணுலகின் கண், (19); உயர்ந்தோர், (117, 280, 425, 426, 1031); நிலவுல கம், (222, 243, 247); புகழ் உல கம், (346); உலக நடை, (996).

**உலகியல்** = உலக நடைமுறை யானது, (572).

**உலகு** = உயிர்கள், நிலவுலகம், உலக வாழ்வு, (20, 27, 58, 211, 290, 336, 387, 389, 542, 544, 571, 572, 578, 612); உலகத் தார், (215) (உலகத்தார் எல்லா ராலும் நச்சப்படுகின்ற - **மணக் குடவருரை;** உலக நடையை விரும்பிச் செய்யும் - **பரிமேலழ கருரை;** மக்கள், (399, 470, 970, 994); குடிமக்கள், (520); உயர்ந்த மக்கள், (1015); உயர்ந் தோர், (1025)

[தாமரைக் கண்ணான் உலகு என்று ஒன்று உளதோ ஸ்ணீர **திருக்குறளார் முனிசாமி.** தாமரைக் கண்ணான் உலகு என்று கூறுகிறார்.

[மோட்ச லோகம் என்கிறார் **பி.எஸ். சுப்பிரமணியன் எனும் திருக்குறள் பாலருரையாளர்.**

'தாமரை போன்ற கண்ணை யுடைய தலைமகன், தன்னால் விரும்பப்படும் அழகிய பெண்ணினது மென்மையான் தோள்களின் மேல், தலைமகன் படுத்துறங்கும்போது பெறும் இன்பத்தை விட, வேறு சிறந்த இன்பத்தை, இந்த உலகில் வேறு எங்கேயும் பெற முடி யுமோ? என்று தலை மகன் தோழியிடம் வினவுகிறான்' என்று தாமரைக் கண்ணான் உலகு என்ற கருத்துக்கு **நாவல ருரை விளக்கம் விளம்புகிறது.**

அகராதி வாசகர் சிந்தனைக்குப் பிற!. (1103- வது குறளுக்குரிய Concordance இது. அதாவது அக் கருத்துக்குரிய குறள் எண், பால், இடம், பொருள், விளக்கம், அதற்கான மாறு பாடுகள் அனைத்தும் கூறும் சொற்றொகுதி விளக்கப் பட்டியல்-இது!)

**உலகு அவாம்** = உலக நடை முறை களை விரும்பிச் செய்யும், (215).

**உலகெலாம்** = உலகத்து உயிர்கள் எல்லாம், (542).

**உலந்த** = வற்றிப் போய் விட்டன, (1174).

**உலைவிடத்து** = வேந்தனுக்கு அழிவு ஏற்பட்டவிடத்து, (762).

**உலை** = தளர்வு, (620, 762, 883).

**உலைவு இன்றி** = தளர்வின்றி, (620).

**உல்கு** = தீர்வை, சுங்க வரி, (756).

**உவகை** = மகிழ்தல், (304); களிப்பு, (432); செருக்கு, (531).

**உவக்காண்** = உங்கே, அதாவது சிறிது தூரமே, (1185) ('உங்கே செல்வாராக, உங்கே

பாராய்' என்பது **மணக்குட வர்** கூற்று.)

**உவக்கும்** = மகிழ்வாள், (69); தாய் தந்தை மகிழ்தலாலுண்டாகும், (228).

**உவந்தாரை** = விரும்பியவரை, (264).

**உவந்து** = மகிழ்ந்து, (842); உள் மனதுக்குள்ளேயே மகிழ்ந்து, (1061, 1130).

**உவப்ப** = அனைவருக்கும் மகிழ்ச்சி உண்டாக, (394).

**உவப்பது** = உற்சாகமடையும் தன்மை, (1057).

**உவப்பினும்** = உற்சாகமடை யினும், விரும்பினும், (707).

**உவமை** = நிகர், ஒப்பு, (7).

**உவரி** = கடல் போல, (763).

**உழக்கும்** = அனுபவிக்கும், (1135, 1175, 1229).

**உழித்தொறூஉம்** = அனுபவிக்குந் தோறும், நுகரும் போதெல் லாம், (940).

**உழந்து** = நுகர்ந்தபின் பெறாது, முயன்று - **மணக்குடவர்**, (1131).

**உழந்தும்** = காதல் நோயால் வருந்தினாலும், துன்பப் பட்டாலும், (1137).

**உழந்துழந்து** = தூக்கமில்லாமல் கண்கள் வருந்தி வருந்தி, அடுக்குத் தொடர் துன்பத்தைச் சுட்டிக் காட்டிட வந்துள்ளது, (1177).

**உழப்பது** = அனுபவிப்பது, (787); வருந்துவது, (1172).

**உழப்பர்** = வருந்தி வேதனைப் படுவர், (936).

**உழப்பிக்கும்** = உறுவிக்கும், வருத்துவிக்கும், (938).

**உழவர்** = விவசாயிகள், உழு தொழில் புரிவோர், (14, 872).

**உழவினார்** = வேளாண் தொழில் செய்வோர், (1036).

**உழவு** = வேளாண் தொழில், விவசாயத்தொழில், உழு தொழில் (1031) - இது திருக் குறளில் வரும் 104-ஆவது அதி காரம். தொழில்கள் அனைத் திலும் சிறந்தது உழவு என்பதைத் தெரிவிக்க, அதன் பெருமையினையும், பயனை யும் பற்றி கூறும் பகுதி இது.

**உழா அர்** = உழும் தொழிலைச் செய்யார், (14).

**உழி** = இடம், (226, 415).

**உழுது** = உழு தொழிலைச் செய்து, (1033).

**உழுதுண்டு** = வேளாண் தொழிலைச் செய்து உணவைப் பெற்று உண்டு, (1033).

**உழுவார்** = பயிர் தொழில் விவ சாயம் செய்வோர், (1032).

**உழை செல்வான்** = மருந்துகளைச் செய்து கொடுப்பவன் (Compunder), (950).

**உழைப்பிரிந்து** = தன்னிடத்தினின்று நீங்கி, (530).

**உழையிருந்தான்** = அருகே இருக்கும் அமைச்சன், (638).

**உள** = உள்ளன; இருக்கின்றன, (54, 223, 241, 304, 380, 483, 521, 527, 636, 781, 995, 1019, 1101).

**உளதாகும்** = புகழைத் தோற்று விப்பதற்கும், நிலைநாட்டு வதற்கும் உளதாகிய, (235).

**உளது** = தோன்றியது போல, உள்ளதைப்போல, (454).

**உளபோல** = இருப்பதுபோலத் தோன்றி, (479).

**உளபோல்** = இருக்கின்றன போல, (574).

**உளராகார்** = அழிவார்; பிழைக்க மாட்டார், (895).

**உளர்** = கை சிட்டிகை ஒலி நேரம் உயிரோடு இருக்கின்றார் என்ற அளவினரே அல்லாமல், (406, 730, 1178, 1204).

**உளர் அல்லர்** = நிலைபெறு கின்றவர் அல்லர்; அதாவது இறப்பர், (880).

**உளவரை** = தனது பொருள் உள்ள அளவு, (480).

**உளன்** = இருக்கின்றான், (294, 336).

**உளவாக** = தன்னிடத்தில் இருக்க, (100).

**உளார்** = இருப்பவர்; வாழ்பவர், (25).

**உளாள்** = உறைவாள்; வாழ்வாள்; இருப்பாள், (617).

**உளி** = நீதி நூல் முறைப் படி; மூன்றவதன் பொருள்படுவதோர் அடைச்சொல்; பால்; மூன்றாம் வேற்றுமை உருபு, (545).

**உளேம்** = இருக்கின்றேனா? இல்லையோ? தெரியவில்லை, (1204).

**உளேன்** = இருக்கின்றேன், (1167); உயிர் வாழ்கின்றேன், (1206); உயிரை வைத்துக் கொண் டிருக்கின்றேன், (1263).

**உள்** = இடத்தில், (50); மனத்தில், (129); [உட்புகுந்து அழிக்க முடியாத - **மணக்குடவருரை**], (421); உள்ளம், (487, 680); உள்ள தன்மை, (677); உள்ளாய் நிற்கும், (735); மனம், (927); உள்ளிடம், (955, 1177, 1274, 1324).

**உள் ஊர்** = ஊர் உள்ளே; நடு ஊர்; உள்ளூரில் இருப்பவரால், (927).

**உள் ஒற்றி** = உள்ளே நடப் பதை அறிந்துணர்ந்து, (927).

**உள் வீழ்ந்தக் கண்ணும்** = சுருங்கிய கண்ணிடத்தும், (955).

**உள்ள** = நினைக்க, (109, 357, 540, 622, 1069, 1206, 1281); எவ்வாறு இவரை இனி எங்கு சந்திப்போமென்று எண்ணு மாறு, (394); ஊக்க, (600, 971).

**உள்ள உளேன்** = நினைத்துக் கொண்டிருப்பதால் உயிர் வாழ்கின்றேன், (1206).

**உள்ளங்கொளல்** = கருத்தைத் தான அறிய வேண்டும், (677).

**உள்ளதாம்** = உள்ளதாகும், (889).

**உள்ளது** = இருப்பது, (53, 1091); இடத்து, (255); மெய்ப் பொருள், (357); நிகழ்வது, (572).

**உள்ளதூஉம்** = அடங்குவதும், (641); கரைந்து உள்ளதும்; சேர்ந்ததும், (982); கரைந்து நின்ற உள்ளமும், (1069).

**உள்ளத்தார்** = உள்ளத்தில் இருப் பவர், (1249).

**உள்ளத்தால்** = மனத்தால், (282); மனத்திற்கேற்ப, (294); மனத் தால், (309).

**உள்ளத்தின்** = மனத்திலே, மனத் தினாலே, (622).

**உள்ளத்து** = ஊக்கத்தின், (595).

**உள்ளத்துள்** = மனத்தில் (294, 1130).

**உள்ளப்படும்** = மதிக்கப்படும், (665).

**உள்ளம்** = மனம், (357, 677, 799, 1057, 1069, 1170, 1207); ஊக்கம், (592, 798, 1263).

**உள்ளலும்** = நினைத்தலும், உம்மை; இழிவு சிறப்பின் கண் வந்தது; அல்விகுதி வியங்கோள் எதிர்மறைகண் வந்தது, *(282)*.

**உள்ளல்** = நினைத்தல், *(282)*; நினைக்க, *(596)*; நினைத்தல், *(1243, 1318)*.

**உள்ள வெறுக்கை** = ஊக்கமிகுதி, மனப்பெருமை, *(971)*.

**உள்ளற்க** = நினையாது ஒழிக; உள்ளம் கருதற்க, *(798)*.

**உள்ளார்** = இருக்கின்றார், *(1127)*.

**உள்ளான்** = நினையான், நினைக்க மாட்டான், *(309, 930)*.

**உள்ளான்கொல்** = கள்ளுண்ணும் போது தனக்குள்ள உடல் தளர்ச்சியை பற்றி நினையான் போலும், நினைப்பானே ஆனால் நீங்கும், *(930)*.

**உள்ளி** = நினைந்து, *(1230, 1243, 1249, 1264, 1317, 1320)*; உள்ளுதலால் - அழுதலால், *(1231)*.

**உள்ளியது** = நினைத்ததனை, கருதிய பேறுகள், *(309)*; நினைத்தக் காரியத்தை, *(540)*.

**உள்ளினும்** = முன் அனுபவித்த வற்றை நினைத்தாலும், *(1201)*; பிரிவை நினைத்தாலும், *(1207)*.

**உள்ளினேன்** = நினைத்தேன், *(1316)*.

**உள்ளின்** = நினைத்தால், *(799)*; அகத்து, *(1126)*; நினைப்பின், *(1201, 1207)*.

**உள்ளுக** = நினைக்க, *(599)*.

**உள்ளும்** = நினைத்திருக்கும், *(1298)*.

**உள்ளுவது** = நினைப்பது, *(596)*.

**உள்ளுவர்** = நினைப்பர், *(107)*.

**உள்ளுவன்** = நினைப்பேன், *(1125)*; அவர் சொற்களை நினைப்பேன், *(1184)*.

**உள்ளுவேன்** = நினைப்பேன், *(1136)*.

**உள்ளுள்ளே** = உள்ளத்துள்ளே; **(நினைக்குந்தோறும் உள்ளும் தோறும் என்பர் காளிங்கர்)**, *(1057)*.

**உற** = அடைதலால், *(399)*; வரக் கூடியவற்றை, *(535)*; மிக, *(659)*.

**உறங்கி** = தூங்கி, *(339)*.

**உறங்குவது** = தூக்கம் வருவது, *(339)*.

**உறல்** = அடைதல், *(378)*; உறவு, *(885)*.

**உறல் முறையான்** = உறவு முறைத் தன்மையோடு, சுற்றத் தாரோடு, *(885)*.

**உறவு** = படுதல்; கொள்ளுதல், *(510)*.

**உறற்பால** = வரக்கூடியன, *(378)*.

**உறாஅ** = அடையாவகை; உறா மல் என்பது கடைக் குறைந்து நின்றது, *(1052)*.

**உறாஅதவர்** = அயலவர்; உடன் பழகாதவர், *(1096)*; என்னை விரும்பாதவர், *(1245)*; அன் புடையராகாதவர், *(1292)*.

**உறாஅதோ** = பெறத்தக்க ஒன்றோ? பெறுதற்கு அரியது, *(1143)*.

**உறாஅமை** = வராதவாறு, *(442)*.

**உறாஅர்** = அயலவர், *(1097)*.

**உறா அர்க்கு** = சேராதவருக்கு, *(1200)*.

**உறாஅமை** = வராமை, (442).

**உறின்** = போர் பெற்றால், எதிரிப் படை தன்னை வந்து தாக்கினால், (778); தனக்கும் பயனுள்ள வழி, (812); மெய்யுறக் கலப்பதால், (1270).

**உறினென்** = தழுவிக் கொண்டால் என்ன, (1270).

**உறு** = வரும், (261); பெரிய, மிக, (499, 734); வந்த, வந்து முற்றிய அல்லது தன்னை நெருங்கும் பகைவர், (744); அரசுக்கு முறைப்படி வந்து சேரும், (756); உற்ற, (1200); மிகா, (1245).

**உறுகண்** = வருந் துன்பம்; துன்பம், (261).

**உறுதல்** = அடைதல், (402, 629); அன்புபடுதல், (1245).

**உறுதி** = நன்மை பயப்பன; நல்ல அறிவுரை, (638); மிகுதியை, நன்மையைத் தரு வதை, (690); நல்லறிவு, (796).

**உறுதுயர்** = மிக்க துயர், (1245).

**உறுதோறு** = இந்த அழகிய பெண்ணை நான் தழுவுந் தோறும், (1106).

**உறுநோய்** = உற்ற துன்பத்தை, (1200).

**உறுபகை** = முற்றுகையிட்ட பகைவர், (744).

**உறுபசி** = மிக்க பசி, (714).

**உறுபொருளும்** = அரசுக்கு வந்து சேரும் இறை பொருள், (756).

**உறுப்பினுள்** = படைத்துணையுள், அங்கங்களுள், (703); அவய வங்களுள், (705).

**உறுப்பு** = தலைவியின் கண், தோள், நெற்றி முதலியன அங்கங்கள், (79, 704, 737); தேர், யானை, குதிரை, காலாள் முதலிய உறுப்புகள், (761, 802); உறுப்பு உடம்பு, மெய் வாய், கண், மூக்கு முதலிய உறுப்புகள், (993).

**உறுப்பு ஓர் அனையர்** அவயவத்தால் ஒரே தன்மை யவராயிருப்பினும், (704).

**உறும்** = நிற்கும், வரும், (380, 1023); வந்து, பட்டு, (707); நல்ல, (816, 817); நல்லது, (1061).

**உறுவது** = இன்பம் அடைவதற்கு ஏதுவாகிய கல்விக்கு, (399); பயன், (813); தொடங்கல், செய்தல், (1259); விரும்பு வது, (1271).

**உறூஉம்** = அதிகப்படுத்தும், மிகுவிக்கும், (94).

**உறை** = இருக்கின்ற, உரிய, (499); ஆயுள், (564); ஆளும் இடம், நகர், (680).

**உறை நிலம்** = நிலைத்து வாழுகின்ற இடம், (499).

**உறைந்தற்று** = தங்கியது போலும், (208) வாழ்ந் தாற் போன்றது, (890).

**உறைபதி** = இருப்பிடம், (1015).

**உறையும்** = வசிக்கும், (50); வாழ்வாள், வாழும், (84).

**உறைவது** = ஒழுகுவது, (426); கலத்தல் தொடங்குவது, (1259); செய்தி, (1271).

**உறைவர்** = இருந்து கொண்டிருக் கின்றார்; வாழ்கின்றார், (1130).

# ஊ

தமிழ்மொழியின் நெடுங்கணக்கில் வரும் ஆறாவது எழுத்து ஊகாரம். உயிர் முயற்சிகளால் பிறக்கும் எழுத்துக்களுள் வாயைத் திறத்தலோடு இதழ் குவிவாற் பிறக்கும் ஒரு நெட்டுயிர்.

---

**ஊக்க** = சிறிது தளர்த்தவே, நீக்க, *(1238)*.

**ஊக்கத்தின்** = மன எழுச்சியால், *(473)*.

**ஊக்கமுடைமை** = இது குறளில் வரும் 60-வது அதிகாரம். [எந்த ஒரு செயலைச் செய்ய முயன் றாலும், அதை மனச் சோர் வின்றிக் குறிப்பிட்ட அந்தச் செயலை செய்ய மன எழுச்சிப் பெறவேண்டும். அந்த ஈடுபாடு தான் ஊக்கமுடைமையை மேலும் ஊக்கப்படுத்தும். ஏனென்றால், ஊக்கம் நமது சொந்த சொத்து ஆகும்.]

**ஊக்கம்** = செயல்களைச் செய்யத் துவங்கும்போது எழும் மன எழுச்சி, *(382, 591, 593, 744)*; வலி மிகுதி, பெருமை, *(498)*.

**ஊக்கம் அழிப்பது** = மன ஊக்கத்தை குலைப்பது, *(744)*.

**ஊக்காது** = நோக்காது, நினையாது, *(253)*.

**ஊக்கார்** = மேலால் ஊக்குவியார், *(463)*.

**ஊக்கி** = முயன்று, *(473)*.

**ஊக்கின்** = முயன்றால் - [மணக் குடவர்; மேற்கொள்வானா னால், நினைப்பின் என்கிறார், *(476, 858)*].

**ஊக்குமாம் கேடு** = கேடு அதிக மாகும், *(858)*.

**ஊக்கும்** = வெல்லுதற்கு எண்ணும் தன்மை, *(855)*.

**ஊங்கு** = அத்தகைய அறத் தன் மையைவிட, *(31, 32, 122, 460, 644)*; மேல், *(1065)*.

**ஊடலின்** = கலவியிற் பிணங்கல்; வியங்கோள் முற்று, *(1307, 1322, 1327)*.

**ஊடலுவகை** = திருக்குறளில் இது கடைசி அதிகாரம் 133-வது ஊடல் உவகை என்பது [காதலர்களது ஊடலுக்குப் பிறகு அமையும் கூடல் இன்பம், மிகமிகச் சிறந்து காணப்படுவதால், அந்த ஊடலைத் தலைவியும் தலை வனும் மகிழ்ந்து விரும்புவதைக் கூறும் பகுதி இது.]

**ஊடல்** = பிணங்குதல், கணவன் மனைவிக்கு இடையில் உண் டாகும் சிறுசிறு குழப்பங்கள்; சண்டை சச்சரவுகள் மனப் பின்னல்கள்; மாறுபடும் கருத் துக்கள், *(1109, 1310, 1326)*.

**ஊடற்கண்** = ஊடலைக் கருதி, *(1284)*.

**ஊடாமை** = பிணங்காமை, *(1282)*.

**ஊடி** = வெறுத்து, *(1039)*; புலந்து, *(1260, 1312, 1328)*.

**ஊடியவரை** = பிணங்கியவரை, *(1304)*.

**ஊடிவிடும்** = அவனோடு பிணங் கிக்கொள்ளும், *(1039)*.

**ஊடினான்** = பிணங்கினான், *(1314)*.

**ஊடுக** = புலக்க, *(1329)*.

**ஊடுதல்** = புலத்தல், *(1321, 1330)*.

**ஊட்டா** = அடைவிக்காமல், *(378)*.

**ஊண்** = உண்ணுதல், *(44)*; உணவு, *(227, 939, 1012)*.

**ஊண்மாலையவர்** = உண்ணும் சுபாவமுடையவர், *(1035)*.

**ஊதியம்** = பயன், இலாபம், *(231)*; மிகுந்த வருவாய், *(449, 461)*; பேறு, இலாபம், *(797)*; ஆக்கம், செல்வம், *(831)*.

**ஊர** = மறைக்க, நெருங்க, *(601)*.

**ஊரவர்** = ஊரின் பெண்கள், *(1147, 1220)*.

**ஊராண்மை** = ஊரார்க்கு கண்ணோடி தாழ்வகல உதவி செய்தல், *(773)*.

**ஊராம்** = தனது சொந்த ஊர் போன்றதாம், *(397)*.

**ஊரார்க்கு** = ஊரிலுள்ளவர்க ளுக்கு, *(1180)*.

**ஊருணி** = ஊரவர் நீர் குடிக்கும் குளம் அல்லது கேணி, கிணறு, *(215)*.

**ஊரும்** = படரும், செல்லும், *(1182)*.

**ஊருள்** = நடு ஊரில், *(1008)*.

**ஊர்** = மக்கள் கூடி வாழும் குடியிருப்பு, *(216)*; நகரம், *(397)*; ஊரிலுள்ளவர், *(1129)*; வேறு ஊரிலும் வாழ்வோர், *(1198)*.

**ஊர்தல்** = ஏறிச் செல்லுதல், *(1136)*.

**ஊர்ந்தான்** = ஏறிச் செல்பவன், தூக்கப்படுகின்றவனிடத்தில், *(37)*; இந்த குறளில் கூறப்பட்ட அறம் இல்லறச் செயல்களையே குறிப்பிடும்.

**ஊர்ந்துவிடல்** = மேற்கொண்டு ஒழுகல்; ''கொண்ட அளவில் நின்று விடும்'' என்பர் பரிமேலழகர், *(979)*.

**ஊர்வது** = வரத்தக்கது, பரவு வது, *(1185)*.

**ஊழால்** = வினைப் பயனால், *(371)*.

**ஊழி** = உலகம் அழியும் காலம், கடல்கள் எல்லைகளைத் தாண்டி தடம் புரளும் காலம், *(989)*.

**ஊழி பெயரினும் தாம் பெயரார்** = கடல்கள் கறை தாண்டிப் பொங்கித் திரிந்தாலும், தாம் திரியார்; [**''ஊழிக் காலம் வந்தாலும் தம் நிலை பெயரார்'' என்பர் பரிதியார்**, *(989)*].

**ஊழின்** = ஊழைப் போல, *(380)*.

**ஊழையும்** = தீமை தரும் வினைச் செயல்கள் அழிவையும், *(620)*.

**ஊழ்** = வினைப்பயனின் விளைவு. [இது குறளின் 38-வது அதிகாரம். உலக முடிவு; ஊழ்த் தலைச் செய்யென் னேவல், குணம், நியமம், பகை, பழவினை, பழமை, பூர்வகன்மம், முடிவு, முறை, விதி, வெயில் என்கிறார் **தமிழ்மொழி அகராதி ஆசிரியர் சதாவதானி, பண்டித. நா. கதிரை வேற்பிள்ளை.**

'ஊழ்த்தலைச் செய்யனேவல், குணம், பகை, பழமை, முறை, வெயில் என்கிறார் **சதுர அகராதியில் வீரமாமுனிவர்.**

ஊழ், முற்பிறப்பில் செய்த செயல்களின் பயன், நல்வினைப் பயனாக முயற்சியும், தீவினைப் பயனாகச் சோம்பலும் தோன்றும். தீ வினை அறிவைப் போக்கும். நல்வினை

அறிவை வளர்க்கும். சிறந்த பல நூல்களைக் கற்றாலும், வினைக்குத் தக்க அறிவே இருக்கும். ஊழ்; கர்மம்; பழ வினை இவையெல்லாம் ஒரு பொருட் கிளவி என்று கூறுகிறார் **திருக்குறள் அறத்துப்பால் பாலருரையில் பி.எஸ். சுப்பிர மணிய சாஸ்திரி** என்பவர்.

"ஊழ் என்பது, வழிவழித் தலை முறையாக, ஒவ்வொருவரிடமும் இயற்கையாகவே படிந்து படிந்து, தலைமுறைக்குத் தலைமுறைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கக் கூடிய பரம்பரை இயற்கைப் பண்பறிவானது, அவ்வப்போது, இடம், பொருள், காலம், சுற்றுச் சார்பு, தொடர்பு போன்றவற்றின் சூழ்நிலைக்கு ஏற்ப, அவர்களின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டு, அவர்களையும் மீறித் தாமாகவே உள் ளிருந்து வெளிப்பட்டு விடக்கூடிய ஒருவிதமான இயற்கை முறையாகவே அமையும் பண்பறிவு எனப்படும்" என்று **நாவலர் நெடுஞ்செழியன் திருக்குறள் தெளிவுரை சுட்டுகின்றது.**

"ஊழ், வன்மை, தன்மைக் கூறல், பொருளுக்கும் இன்பத் திற்கும் முதற்காரணம் ஊழ். இரு வினைப் பயன், செய் தவனையே சென்றடையும். நியதி, ஊழ், பாழ், முறை, உண்மை, தெய்வம் விதி, இயற்கை என்பன ஒரே பொருளைக் கொடுப்பன" என்கிறது **திருக்குறளார் வீ. முனிசாமி எழுதிய உலகப் பொதுமறை திருக்குறள் உரை.**

இவற்றை வாசகர்கள் சிந்தனைக் காகத் தொகுத்துக் கொடுத்துள்ளோம். அவரவர் மன நிலை கேற்றவாறு பொருந்தும் பொருளைத் தேர்வு செய்து கொள்க.

**ஊழ்த்து** = மலர்ந்திருந்தும், *(650)*.

**ஊறிய** = சுரந்த, *(1121)*.

**ஊறு** = தொடுதல் உணர்ச்சி, *(27)*; வந்தவிடத்து, *(535)*; **பழுதுபடும் செயல்களை; உறும் துன்பம் என்கிறது மணக்குடவருரை,** *(662)*; அடைதல், *(665)*; தடை, *(676)*; அடைதல், *(761, 762)*.

**ஊறு எய்தி** = இடையூறு பெறுவதலால், *(665)*.

**ஊறுபாடு** = துன்பம், *(945)*.

**ஊறும்** = சுரக்கும், *(396)*.

**ஊற்று** = ஊன்று, பற்றுக்கோடு, *(414)*; ஊன்று ஆகிய, *(415)*; நீரூற்று, *(1161)*.

**ஊற்றுக்கோல்** = ஊன்றுகோல், *(415)*.

**ஊற்று நீர்** = ஊற்றுக் கண்ணிலிருந்து வரும் நீர், *(1161)*.

**ஊனைக் குறித்த** = உடம்பை இருப்பிடமாகக் கொண்டு அதனை விடா, *(1013)*.

**ஊன்** = ஊடம்பு, உடல் தசை, *(251, 252, 254, 255, 256, 258, 968)*.

**ஊன் ஓம்பும்** = உடம்பைக் காப்பாற்றுகின்ற, *(968)*.

**ஊன்றிய** = தாங்கிய, *(983)*.

**ஊன்றும்** = நிலை நாட்டும், *(597, 615)*; தாங்கும், *(789, 1030)*.

# எ

*தமிழ் மொழியின் நெடுங்கணக்கில் வரும் ஏழாம் எழுத்து. உயிர் முயற்சியால் பிறக்கும் எழுத்துக்களுள், வாயைத் திறத்தலோடு அடிநாவில் விளிம்பு அண்பல்லினையுறப் பிறப்பதும், அகர, இகரக் கூறுகள் சந்தித்துப் பிறப்பதுமான ஒரு குற்றுயிர். ஏழு என்னும் எண்ணின் குறி. வினாவெழுத்து. எடுத்துக்காட்டு : எக்கொற்றன் - எவன்.*

---

**எஃகு** = கோட்டைக்குள் உள்ளே உள்ள படைக் கலங்கள், *(759)*; கூர்மை, *(773)*.

**எங்ஙனம்** = எவ்வாறு, எப்படி, *(251)*.

**எச்சம்** = சாவுக்குப் பிறகு எஞ்சியிருக்கும் பொருள், எஞ்சி நிற்பது, மிச்சம், *(238)*; செய்யாமல் விடப்படும் குறை, ஒழிந்து நிற்பது, *(674, 1004)*; ஒழிந்தவை, *(1012)*; அஃதொழிந்தது, *(1075)*; மக்கட்பேறு, *(114)*.

**எச்சத்தால்** = மக்களால், அவர வர் சந்ததியால், *(114)*.

**எச்சத்திற்கு** = வழியிலுள்ளார்க்கு, *(112)*.

**எஞ்சல்** = அற்றுப்போதல், செல்வம் குறைதல், *(44)*.

**எஞ்சாது** = ஒழியாமல், *(690)*.

**எஞ்சாமை** = ஒழியாமல், குறையாமல், *(497)*.

**எஞ்ஞான்று** = எப்போதும், *(44, 145, 317, 361, 439, 582, 635, 697, 701, 864, 870, 886, 903, 905, 910, 921, 926, 927)*.

**எடுக்கும்** = எழுப்பும், *(1150)*.

**எடுத்து** = எடுத்து எண்ணி, *(776)*.

**எடுப்பதூஉம்** = உண்டாக்குவதும், வாழ வைப்பதும், *(15)*.

**எட்பகவு** = எள்ளினது பிளவினை, *(889)*.

**எண்** = எட்டு, *(9)*; கணக்கு, கணிதம், *(392)*; அரிய, அறிதற்கரிய, *(424)*; எளிய, *(548, 760, 991)*; எண்ணம், *(910)*.

**எண்குணத்தான்** = எட்டு குணங்களையுடைய கடவுள், எண்ணற்ற பண்புகளை, அறிவாற்றல் சிறப்பினையுடைய சான்றாண்மையர், *(9)*.

**எண் சேர்ந்த நெஞ்சத்து** = கூடிக் கலந்து சிந்தனை முடிவெடுக்கும் மனம், *(910)*.

**எண்ண** = மதிக்கத்தக்கதை விரும்பாத, *(922)*.

**எண்ணப்படுவது** = கொள்ளப்படுவது, *(438)*.

**எண்ணம்** = வெற்றி பெற எண்ணிய முடிவு, *(491)*.

**எண்ணாத** = சிந்தித்து ஆராயாத, *(568)*.

**எண்ணாது** = பின் விளைவுகளை விசாரித்து எண்ணாமல், *(180)*.

**எண்ணி** = ஆராய்ந்து, *(162, 467, 470, 497, 530, 675)*; முன் கூட்டியே யோசித்து, *(687)*; அரசருக்குரியரென, *(699)*; தனக்கே இழிவென எண்ணி, *(1298)*.

**எண்ணிக் கொண்டற்று** = எண்ணி அறிந்தாற்போல, (22).

**எண்ணிய** = அடைய நினைத் தவற்றை, (666); நினைத்த, கருதிய, (753); வாதம், பித்தம், கபம் என்று எண்ணிக் கூறிய மருத்துவ முறை மூன்று, (941).

**எண்ணிய மூன்று** = மருத்துவத் துறையிலே கூறப்படும், காற்று, சூடு, நீர் என்ற மூன்று.

**எண்ணியாங்கு** = எண்ணியவாறு, (666).

**எண்ணியார்** = வெற்றி பெறுவ தாக எண்ணியவர், (494); நினைத் தவர், (666).

**எண்ணின்** = எண்ணுவாராயின், நினைப்பாராயின், (264).

**எண்ணும்** = நினைக்கும், (639, 1004).

**எண்ணுவம்** = நினைப்போம், எண்ணுவோம், (467).

**எண்பதத்தான்** = முறை வேண்டி குறைகளைக் கூற வந்தவர்கள் தன்னைப் பார்க்க முடியாத நிலையில் இருந்து கொண்டு, (548).

**எண்பதத்தால்** = எல்லோரிடத் திலும் எளிமையாகப் பழகுபவரே யானால், தங்கள் முறைகளைச் சொல்லும் சூழ்நிலை எய்தும் காலத்தால், (991).

**எண்பொருள்** = எளிமையாக வந் தடைந்த பொருள்கள், (760).

**எதிரதுஆக** = பின்னால் வருவதை முன்னே அறிவது, (429).

**எதிர்** = எதிர்த்து, எதிரில், (765); மாறுபாடு, (885, 858); எதிரில், நேரில், (1082).

**எதிர் சாய்ந்து** = ஏற்றுக் கொள்ளாது எதிர்த்து, (855).

**எதிர்ப்பை** = எதிர்பார்த்திருத்தலை, (221).

**எத்தன்மைத்து ஆயினும்** = எந்த ஓர் இயல்பினதாய் தோன்றினும், (355).

**எந்நலத்ததூஉம்** = எந்த ஒரு நலத்தினும், (982).

**எந்நன்றி** = எவ்வகைப்பட்ட அறத்தையும், (110).

**எப்பால்** = எப்படிப்பட்ட, (533).

**எமக்கு** = நமக்கு, (790, 1142, 1176, 1291).

**எம்** = எமது, (1126); எம்மை, (1180); எமது, (1185, 1204, 1205, 1222, 1278).

**எம்மிடை** = எங்களிடையே, (1122).

**எம்மை** = எங்களை, (1205, 1217, 1318).

**எயிறு** = பற்களின் இடையில், (1121).

**எய்த** = பொருந்தத்தக்க, (516); எளிய, (772).

**எய்தலால்** = பெறலாமாதலால், அடைய முடியுமாதலால், (265).

**எய்தலின்** = உண்டாவதைவிட, ஏற் படுவதைக் காட்டிலும், (815).

**எய்தல்** = அடைதல், பெறுதல், (540, 606, 671, 904, 991).

**எய்தற்கு** = அடைதற்கு, (489).

**எய்தா** = பெறுதற்கியலாத, அடாத, (137).

**எய்தாமை** = ஏற்படாமல் இருப்பதே, (815).

**எய்தார்** = அடையார், பெறார், (508, 901).

**எய்தி** = பெற்று, (665, 749, 932).

**எய்திய** = பெற்று, (657).

**எய்தியக்கண்** = தம் வயத்தது, ஆகிய வழியும், (354); உடைய ராயவிடத்தும், (670); அடைந் திருந்தாலும், (740).

**எய்தின்று** = எய்துகின்றது, (1240).

**எய்துப** = அடைவார்கள், (666).

**எய்து பிழைத்தது** = எய்து இலக்குத் தவறிய, (772).

**எய்தும்** = அடையும், (75, 1024); அடைவான், (145); பெறும், (309, 610).

**எய்துவர்** = பெறுவர், (137).

**எய்யாமை** = மெய் வருந்தாமை; முயலாமையில், (296).

**எரி** = நெருப்பு, (308, 435, 1148).

**எரியால்** = நெருப்பால், (896).

**எரு** = உரம், ஆடு மாடுகளின் கழிவு, (1037, 1038, 1147).

**எலிப்பகை** = எலிகளது பகை, (763).

**எல்லா** = அனைத்து, (260, 296, 299, 361, 457, 746, 851, 972).

**எல்லா அம்** = எல்லாம், (375).

**எல்லாம்** = அனைத்தும், (1, 15, 29).

**எல்லாரும்** = அனைவரும், (191, 742, 1139, 1311).

**எல்லார்க்கும்** = அனைவருக்கும், (582).

**எல்லைக்கண்** = எல்லையோடு, எல்லைக்குள், (806).

**எவன்** = யாது, உளது, (31) யாது, (46, 57, 574, 1207, 1291), யாது - பயனை, (79); யாது பயனைக் கருதி, (99, 237); என்ன பயனை, (272, 803); என்னாம், (345); யாது கருதி, (379); என்னை பயனையுடை யது, (1089); என்ன செய் வாரோ, (1165); என் கருதி, (1171); எதற்காக, (1172); என்ன இன்பத்தை, (1195); என்ன, (1308).

**எவ்வ** = துன்பந் தரும், (853); ஒன்றாலும் தீராத, (1241).

**எவ்வது** = எப்படி, (426).

**எவ்வம்** = துன்பந் தரும் செயல், இளிவரவு, (223); ஒன்றாலும் தீராமை, (1241).

**எவ்வுயிர்க்கும்** = எல்லா உயிர்கள் மேலும், (30).

**எழ** = உண்டாக, (1141).

**எழிலி** = முகில், (17).

**எழில்** = அழகு, தோற்றப் பொலிவு, (407).

**எழு** = ஏழு, வாழ்க்கையில் எழுகின்ற பல்வேறு நிலைகள், (62); பிறப்பின் எல்லா நிலை மைகள், (107); பல நாட்கள் போல், (1269, 1278).

**எழுதல்** = போரிடச் செல்லுதல், (465).

**எழுதுங்கால்** = கண்ணுக்கு மை தீட்டும்போது, (1285).

**எழுதேம்** = எழுத மாட்டோம், (1127).

**எழுத்து** = தமிழ்நெடுங்கணக்கு, எழுதப்படுபவை என்பன - [''எழுத்தும் சொல்லும்'' முதலிய அஞ்சு லட்சணமும் **பரிதியாருரை**, இயற்றமிழ், **சிவஞானமுனிவர்**] (392).

**எழுபது கோடி** = ஏழாகிய பத்துக் கோடி, பெரும் எண்ணிக் கையைச் சுட்டும், (639).

**எழுபிறப்பு** = ஏழு தலைமுறைகள் - (தேவர், அசுரர், நரர், மிருகம், பறப்பன, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் போன்ற ஏழு பிறப்புகள் - பழைய உரை), (62, 107).

**எழுமையும்** = எதிர் காலத்தில் உண்டாகும் எல்லா நிலைகளிலும், ஏழு பிறப்பிலும், (126).

**எழுவாரை** = எதிர்காலத்தில் உண்டாகும் எல்லா நிலைகளிலும், எழு பிறப்பிலும், (126); மற்ற தொழில் செய் வாரை, (1032).

**எழுவாள்** = கணவனை மட்டுமே பின்பற்றி வழிபடுபவள், (55).

**எளிது** = எளிமையான செயல், அரிய செயலன்று, (145, 540, 745, 864, 991).

**எளிய** = இலகுவானவை; எளிய செயல்

**எளியர்** = எளிய பலராவர்; பெறுதற்குப் பலராவர், (723).

**எளியன்** = பகைவரால் வெல்லப்படுவதற்கு மிகவும் எளியனாவான், (863).

**எள்** = எள்ளினது பிளவினை, (889).

**எள்ளப்படும்** = எள்ளி நகையாடப் படுவான், (191).

**எள்ளற்க** = இகழாதிருக்க, இகழ் தல், அற்பமாக நினைத்தல், (470).

**எள்ளாது** = இகழ்ந்து பேசாது, (281); இகழாமை, (667).

**எள்ளின்** = இகழ்ந்து சென்ற காதலரை நான் இகழ்ந்தால், (1298).

**எள்ளும்** = இகழ்ந்து கூறும், (607).

**எள்ளுவாரை** = உள்ளுக்குள்ளே தம்மை இகழும் எதிரிகளை, (829).

**எள்ளுவர்** = அற்பமாகப் பேசுவர், (752).

**எறிக** = தண்டனை தரும்போது, (562).

**எறிதற்கு** = வெட்டுவதற்கு, கேடு தருவதற்கு, (821).

**எறிந்தும்** = முற்றுகையிடாமல் நேருக்கு நேராகப் போர் செய்தும், (747).

**எறிய** = எதிர்த்து எறியும் போது; வீச, (775).

**எற்றா** = நீங்காத, (663).

**எற்றிற்கு** = எதற்கு, (1080).

**எற்று** = என்ன செய்தோம்?, (275); எத்தன்மையது?, (557); என்ன தவறு, (655); எத் தன்மையது என்றால், (1256).

**எற்றுள்** = எல்லாவற்றுள்ளும், (438).

**என** = என்றுகூற, (55, 69); என்று சொல்லப்பட்ட, (168, 722, 1252); என்று, (316, 630, 700, 1173, 1190, 1216, 1236); என்பது, (334); என்றும், (766); என்று கூறப்படுவது வேறு, (942); என்று கூறப்பட்ட, (1022); என்று கருதி, (1245); என, (1257); என்று எண்ணி, (1259); என்பது பற்றி, (1292).

**எனக்கு** = என்னிடம், (1151).

**எனது** = என்னுடைய, (346).

**எனப்படுதல்** = என்று சொல்லப் படுதல், (967).

**எனப்படும்** = என்று கூறப்படும், (453).

**எனப்படுவது** = என்று சொல்லப் படுவது, (*291, 324, 591, 801, 844*).

**எனப்படுவர்** = என்று சொல்லப் படுவர், (*722*).

**எனப்படுவார்** = என்று மற்றவர் களால் கூறப்படுபவர்கள், (*989*).

**எனப்பட்டதே** = சிறப்பித்துக் கூறப் பட்டதே, (*49*).

**எனல்** = என்று சொல்லாதே, (*196*); என்று கருதாதே, (*282*); என்று எண்ணுவதாகும், (*971, 1148*); உண்டோ, (*1260*).

**எனினும்** = என்று கூறப்படுபவர் உண்டானாலும், (*222*).

**எனின்** = என்றால், ஒழுகாரானால், (*2, 19, 20, 82, 102, 149, 178*).

**எனை** = எவ்வளவு, (*52*); எவ் வளவு பெருமை, (*107, 144*); எல்லா, (*514, 750*).

**எனைத்தானும்** = சிறியதாயினும், (*317*).

**எனைத்து** = எவ்வளவு சிறிய, (*209*); யாதொரு, (*281*); சிறந்த வனாக, (*300*); எவ் வகை யிலும், (*317, 416*); எவ்வா றேனும், (*820, 825*); எந்த வகையில் பார்த்தா லும், (*1202*); எவ்வளவு மிகுதியாக, (*1208*); எத் தன்மையானது, (*1241*).

**எனைத்து ஆனும்** = சிறிதள வாயினும், (*416*).

**எனைத்து ஒன்றும்** = யாதொரு பொருளையும், (*281*); எப்படிப் பட்ட ஒன்றாயினும், (*1241*).

**என்** = எவன் என்னும் வினா, என் என விகாரப்பட்டு இல்லை என்ற பொருளுணர்த்திற்று, (*2*); யாது, (*53, 211, 436, 1225*); மேலானது, (*70*); யாது கருதி, (*397*); யாது பயன், (*420*); இன்பம் உண்டு, (*426*); எல்லாம், (*430*); நன்மை தீமை என்ன, (*812*); எப்படி அழிக்க முடியும், (*862*); யாதாகும், (*923*); அது செய்வது என்ன, (*966*); யாதனை, (*1004*); என்ன, (*301, 1059, 1081, 1088, 1136, 1139, 1163, 1168*); எனது, (*1170, 1175, 1181, 1182, 1185, 1188, 1209, 1213, 1217*); எதனால், (*1206*).

**என் அல்லது இல்லை** = என்னை யல்லாமல் வேறு துணை ஏதுமில்லை, (*1168*).

**என் எண்ணும் கொல்லோ** = எதை நினைப்பானோ?, (*1004*).

**என்கண்** = என்னிடத்தில், (*1174*).

**என்கொலோ** = என்ன காரணத் தாலோ, (*318*).

**என்ப** = என்று கூறுவர் அறிவர், (*63, 66*); என்று கூறப்படுவன, (*483*).

**என்பதனை** = சொல்வதை, (*1083*).

**என்பது** = என்று கூறப்படுவது, (*87, 114, 116, 193*); என்று கூறு வது, (*467*); பொய் கூறுவதை, (*928*).

**என்பதல்லால்** = என்று குறை கூறுவது அல்லாமல், (*1188*).

**என்பரிதல்** = வருந்துவதால் என்ன பயன், (*1243*).

**என்பரியும்** = எப்படி நீக்கும்?, (*862*).

**என் பயத்தது?** = என்ன பயனை உடையது, (*987*).

**என்பர்** = என்று சொல்வர், (246, 662, 1220).

**என்பவர்** = என்று கூறப்படுபவர், (393).

**என்பவன்** = எண்ணுபவன், (856).

**என்பவன் வாழ்க்கை** = என்பவனும், வாழ்க்கையும், (85).

**என்பார்** = என்று கூறுபவர், (275); என்று கூறப்படுகின்றவர், (365, 710, 956, 1188, 1209).

**என்பார்க்கு** = என்று சொல்லப் படுபவர்க்கு, (1036).

**என்பான்** = என்று கூறப்படுவான், (41, 42, 47, 147); நன்கு மதிக்கப்படுவான், சொல்லப் படுவான், (281); தெளிந்திருப் பான், கருதுகின்றவன், (628); கூறுபவன், (850).

**என்பு** = எலும்பு, உடல், (72, 77, 80).

**என்பில் அதனை** = எலும்பு இல்லாத உயிரை, (77).

**என்போர்** = என்று கூறப்படு வோர், (30).

**என்ற** = என்று சொல்லப்பட்ட, (584).

**என்றது** = என்று கூறப்பட்டது, (552).

**என்றல்** = உலக மக்களால் கூறப்படுதல், (181).

**என்றவர்** = என்று சொல்லியவர், (1154).

**என்றவற்றுள்** = என்று கூறப்பட்ட வற்றைக் காட்டிலும், (715).

**என்றார்** = என்று கூறியவரே, (1149).

**என்று** = என்பதாக, என்றபடி, (11); சொல்லப்பட்ட, (27); என்று கருதி, (174, 205); என்று சொல்லும்படி, என்று கொண்டு, (307, 331, 351); என்பதாக, (388).

**என்று அற்றால்** = என்பது போலாகும், (1148).

**என்றும்** = எப்பொழுதும், (138, 152); எக்காலத்தும், (538, 652, 958, 1130).

**என்றேனா?** = என்றேனாக, (1314).

**என்ன?** = எத்தன்மைய, எப்படிப் பட்ட, (705, 987, 1100); எத்தகைய தொடர்பு இருந்து வருகிறதோ, (1122).

**என்னாது** = என எண்ணாமல், (30); என்று செய்யாது, (1138).

**என்னாம்** = என்ன பெருமை யுடையது, (144).

**என்னின்** = என்னைக் காட்டிலும், (1290).

**என்னுமவர்** = என்று கூறுகின்ற அவர், (653).

**என்னும்** = என்று கூறும், என்று சொல்லும், (14, 24).

**என்னை** = எவ்வாறு இகழ்வாக நடந்து கொள்வார்களோ, (188); என்னை, (1296); என்று கேட்டு, (1316).

# ஏ

தமிழ்மொழியின் எட்டாம் எழுத்து 'ஏ'. பண்டையத் தமிழறிஞர்கள், 'எ' என்ற எழுத்தின் மேல் ஒரு புள்ளியை 'எ்' இவ்வாறு வைத்து 'ஏ' என்ற எழுத்தை எழுதி வந்தார்கள். ஓலைச் சுவடியில் எழுத்தாணி கொண்டு தமிழ் நெடுங்கணக் கின் எழுத்துக்களை எழுதி வந்தபோது, சிலநேரங்களில் மறதிகளாலும், கறை களாலும், கரையான் பூச்சிக் கடிகளாலும், ஓலை தேய்வுகளாலும், அந்தப் புள்ளி அழிந்து விடுகின்றது; மறைந்து விடுகின்றது. அதனால் பொருள் குழப்பங்கள், அனர்த்தங்கள் உருவாகி, இலக்கிய மதீப்பிட்டுக் குறைகள் நிலவியிருந்ததை, வீரமா முனிவர் என்ற 'இத்தாலி' அறிஞர் தமிழகத்தில் தமிழ் கற்று மேதையாகித் தமிழுக்குச் செய்த தொண்டுகளில் ஒன்று, ஏ, ஓ என்ற எழுத்துச் சீர்த்திருத்தமாகும்.

எ் மேல் இருந்த புள்ளியை அகற்றி, 'எ' எழுத்தின் கீழே ஒரு சிறு கோடு இழுத்து, இன்றைய 'ஏ' என்ற எழுத்தாக்கினார். இன்று யார் யாரோ கணினி வசதிக்காக, தட்டச்சு வசதிக்காக எழுத்துச் சீர்த்திருத்தம் என்ற ஒன்றை உருவாக்கி, தொல் காப்பியம் என்ற நூலின் சில பக்கங்களது சூத்திர அறிவைச் சித்ரவதை செய்து சிதைத்துள்ளார்கள். தொல்காப்பியரின் சிந்தனை நரம்புகளைத் துண்டு துண்டாக வெட்டி எறிந்துள்ளார்கள். இதற்கோர் வாத மன்றம் வைத்தால் காப்பியரின் அருமையை அறிஞர்கள் மீண்டும் போற்றும் சூழ்நிலை வந்தே தீரும். இதே நிலைதான் ஒ், ஓ ஆன அற்புதம்! அந்த எழுத்து வரும்போது அதைச் சிந்திப்போம்!

'ஏ- என்ற எழுத்து உயிர் முயற்சியால் பிறக்கும் எழுத்துக்களுள் வாயைத் திறத்தலோடு அடி நாவின் விளிம்பு அண்பல் வினை உறப்பிப்பதும், அகர, இகரக் கூறுகள் சந்தித்துப் பிறப்பதுமான ஒரு நெட்டுயிர் எழுத்து. இது இகழ்ச்சிக் குறி, இசை நிறை, ஈற்றசை, எண்ணின் குறிப்பைச் சுட்டும் எழுத்தாகும் என்று **மேலைப் புலோலி வித்வான் சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை தனது தமிழ்மொழி அகராதியில் விளக்கம் தந்துள்ளார்.**

'ஏ, இசை நிறைச்சொல், ஈற்றசைச் சொல், எண்ணின் குறிப்பு, ஒரெழுத்து, தேற்றக் குறிப்பு; பாணம், பிரிவின் குறிப்பு, வினாக் குறிப்பு' என்று 'ஏ' எழுத்தின் அருமையை அறிவிக்கின்றார் **'சதுர அகராதி'** ஆசிரியரான **வீரமாமுனிவர்.** திருக்குறள் நூலில் வந்துள்ள 'ஏ' எழுத்தின் சிறப்பை இப்போது காண்போம்.

---

**ஏ எர்** = இரத்தலிலும் ஓர் அழகினை, (1053); ஊடலழகுக் குறிப்புகள், (1305); நன்மைக் குறிப்பு அழகு, (1098).

**ஏகினான்** = சென்றவனது, (3).

**ஏக்கற்று** = ஆசிரியரிடம் ஏக்கத்துடன் தாழ்ந்து கற்க நின்று, (395).

**ஏங்கி** = வருந்தி, (1248).

**ஏங்குபவர்க்கு** = வருந்தும் பெண்களுக்கு, (1269).

**ஏதப்பாடு** = குற்றம் உண்டாதல், (464).

**ஏதம்** = குற்றம், துன்பம், (136, 164, 432, 884, 885); கேடு, (275, 831); நோய், (1006).

**ஏதில** = பழுதாகிவிடும், பலிக்காது, (440); வேறு பிற, (1089).

**ஏதிலர்** = அன்பிலர், *(1129, 1130)*; கொலை செய்வோர், அருள றியாத பக்கவர், *(1324)*.

**ஏதிலார்** = அயலாரிடத்தில், *(188, 190)*; பகைவரது, *(440)*; இயை பில்லாதவர், எந்தவித தொடர்பு மற்றவர், *(837)*; முன்னே பழக்க மில்லாதவர், *(1099)*; அயலார், *(1300)*.

**ஏதிலான்** = விரோதி, பகைவன் *(862)*.

**ஏதில்** = முன்பே அறியாதவர், *(913)*.

**ஏது இல் பிணம்** = முன்னே அறியப்படாத பிணம், *(913)*.

**ஏதின்மை** = பகை, *(816)*.

**ஏத்தும்** = துதிக்கும், போற்றும், *(970)*.

**ஏத்தல்** = தாங்குதல், *(772)*.

**ஏந்திய** = உயர்ந்த, *(899)*.

**ஏந்திய கொள்கையர்** = உயர்ந்த தவஞானிகள், *(899)*.

**ஏம** = பாதுகாப்பு, சேமமாகிய - **காளிங்கர் உரை**, *(396)*; அரணா கிய, *(1131, 1174)*.

**ஏமஞ்சாரா** = பாதுகாவலற்ற, *(515)*.

**ஏமப்புணை** = பாதுகாப்பான தோணி, *(1164)*.

**ஏமம்** = காவல், *(738)*; காப் பாகிய குணங்கள், *(766)*; அரண், காவற்கோட்டை, *(815)*.

**ஏமரா** = காவலற்ற, காவலாயிராத, *(448)*.

**ஏமாப்பு** = வலிமை, ஆதாரமாயிருக் கும் தன்மை, *(112)*; தீமை களினின்றும், பாதுகாப்பு, நன்மை, *(126)*; பாதுகாப்பான வலிமையுடையதாதலை, *(458, 459)*; துணையாதல், *(868)*.

**ஏமார்த்தல்** = ஏமம் ஆர்த்தல், பாது காப்பு செய்தல், *(660)*.

**ஏமுற்றவரினும்** = பித்துற்றவரைக் காட்டிலும், ஏமுறல், மயங்கல், *(873)*.

**ஏரினும்** = உழுதலினும், *(1038)*.

**ஏர்** = கலப்பை, *(872, 1031)*; ஒத்த, *(1089)*; நன்மைக் குறிப்பாய ஆகுபெயர், *(1098)*; அழகு, *(1305)*.

**ஏர்பின்னது** = இறுதியாக உலகத்தார் உழுதொழிலை வளர்க்கும் ஏர் பின்னாலேதான் நிற்க வேண்டி யிருக்கிறது, *(1031)*.

**ஏல்** = ஆனால், *(18, 368, 556, 573, 575, 996, 1014, 1118, 1144)*.

**ஏவவும்** = புல்லறிவாளர்கள் செய்ய வேண்டியதைச் செய் யுமாறு நல்லறிவாளர்கள் கட்டளையிட் டாலும், *(848)*.

**ஏவல்** = கட்டளையிடுதல், *(515)*; ஏவிய தொழில், *(909)*.

**ஏழை** = அறிவில் ஏழையாக எண்ணப்படுபவன், *(873)*.

**ஏறா** = ஊராத, ஏறாத, *(1137)*.

**ஏறி** = மேலே சென்று, *(758)*.

**ஏறினார்** = ஏறியவர், ஏறி நின்றவர், *(476)*.

**ஏறு** = காளை, சிங்க ஏறு, *(59)*; எருது எனவும் கூறுவர். இது உயர்திணைப் பொருளில் வந்த அஃறிணை சொல், *(381)*.

**ஏறும்** = ஏறிச் செல்லும், *(1132, 1264)*; ஊருகின்ற, *(1133)*.

**ஏற்றல்** = போர் செய்தல், *(861)*.

**ஏற்று** = கேட்டு, *(716)*.

**ஏனும்** = ஆயினாம், *(277, 430, 997)*.

**ஏனை** = மற்ற, *(505, 704, 760)*; எல்லா, *(514)*.

**ஏனை இரண்டும்** = அறமும் இன் பமும் என்ற இரண்டும், *(760)*.

**ஏனைய** = மற்ற, *(268)*.

**ஏனையவர்** = கல்லாதவர், அறிவு நூற்களைப் படியாதவர், *(410)*.

# ஐ

தமிழ் நெடுங்கணக்கில் 'ஐ' ஒன்பாதவது எழுத்து. உயிர் முயற்சியால் பிறக்கும் எழுத்துக்களுள், வாயைத் திறந்ததும், முன் பல்லை அடி நாவினது விளிப்புப் பொருந்தியும் உச்சரிக்கப்படுவது. இரண்டனுருபு; முன்னிலை யொருமை விகுதி, பெயர் விகுதி, சாரியை, தொழிற்பெயர் விகுதி, யானையைப் பாகர் அதட்டும் ஐ, ஐ என்ற ஓசையில் இந்த எழுத்து ஊடுருவி நிற்கும். ஐகான், ஐகாரம் என்றும் இவ்வெழுத்தைச் சுட்டுவர் - அறிஞர்.

**ஐ** = ஐந்து, (354); ஐயம், சந்தேகம், (510); அரசன், இல்லத் தலைவன், (771).

**ஐந்தன்** = மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம் பொருள் களுக்குரியவாய, (343).

**ஐந்தன்புலத்தை** = ஐம்பொறி களுக்குரிய புலன்களை, (343).

**ஐந்தின்** = ஐந்தனது, (27).

**ஐந்து** = ஐந்து - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐந்து ஆசைகளையும், பொறிகளெனும் யானைகள், (24, 271, 675, 738, 939, 983); புலன்களில் புகுந்து செய லாற்றும் அவா ஐந்து, (25); ஐம்பொறிகள், (126); ஐந்து என்பது ஐந்து ஐந்து பொறி களின் நுகர்ச்சியைக் குறிக்கும்.

**ஐந்துடன்** = ஐந்தோடு, (632).

**ஐம்** = ஐந்தாகிய, (43, 1101).

**ஐம்புலத்து ஆறு** = ஐந்து இடங்களில் செய்யும் அற நெறியை, (43).

**ஐயத்தின்** = சந்தேகத்தினின்றும், (353).

**ஐயப்படா அது** = பிறருடைய மனத் திலுள்ளதைச் சந்தேகப் படாமல், (702).

**ஐயப்படும்** = உலகம் சந் தேகப்படும், (958).

**ஐயப்பாடு** = சந்தேகம், (587).

**ஐயம்** = சந்தேகம், மயக்கம், (353, 845).

**ஐயுணர்வு எய்தியக் கண்ணும்** = ஐம் புலனாலறியக் கூடியவற்றை புரிந்திருந்தாலும், புலன் களைத் தன்வயப்படுத்தி விட்டாலும், (351)

**ஐயுறவு** = நம்பப்பட்டவனைச் சந்தேகப்படுதல், (510).

# ஒ

தமிழ் மொழி நெடுங்கணக்கில் வரும் பத்தாவது உயிர் எழுத்து. உயிர் முயற்சியால் பிறக்கும் எழுத்துகளுள், அங்காப்பாகிய அகரக் கூறும், இதழ் குவிவாகிய உகரக் கூறும் சந்தித்துப் பிறந்த ஒரு குற்றுயிர். ஓர் உயிரெழுத்து.

**ஒக்க** = ஒத்திருப்பதாக, கொக் குப் போல அடங்கி, கொக்கு காலம் வரும்போது தப்பாது குத்துவ தொப்ப, (490).

**ஒக்கல்** = சுற்றத்தார்; சொந்த பந்தம், (43).

**ஒக்கின்** = ஒத்திருந்தால், (1100).

**ஒக்கும்** = ஒரு தன்மையானதாக இருக்கும், போன்றவை, (972, 1112).

**ஒடு** = உடன், சிறப்புடன், (18).

**ஒடுக்கம்** = காலம் பார்த்து ஒதுங்கி இருத்தல்; ஓய்ந்திருத்தல்; ஒடுங்கியிருத்தல், (486).

**ஒடுங்கும்** = மறைந்திருக்கும், (828).

**ஒட்ட** = பொருந்த, (140,482).

**ஒட்டல்** = தாக்குதல், கிட்டுதல், (499).

**ஒட்டாரை** = பகைவரோடு கூடாதவரை, (679).

**ஒட்டார்** = பகைவர்கள், (826); தன்னுடன் இணக்கமற்றவர், (967).

**ஒட்டி** = நட்பாகி, (679).

**ஒட்டிக் கொளல்** = தம்மோடு நட்பாக்கிக் கொள்ளல், (679).

**ஒட்பம்** = அறிவு, (404, 425).

**ஒண்** = நன்நெறியின் வரும், (760); விளங்கும், (1009); ஒளி பொருந்திய, (1088, 1101, 1240).

**ஒண்டொடி** = ஒளி பொருந்திய வளையலை அணிந்தவள், (1101).

**ஒண்ணுதல்** = ஒளி பொருந்திய நெற்றி, (1240).

**ஒண் பொருள்** = நேர்மையான நெறியான் வரும் பொருள், (760, 1009).

**ஒண்மை** = நல்லறிவுடை யவரென, (844).

**ஒத்தது** = உலக நடை, (214).

**ஒத்தல்** = ஒத்திருத்தல், (993).

**ஒத்தாங்கு** = குற்றத்திற்குகந்த வாறு, (561).

**ஒத்தி** = ஒத்திருக்க விரும் பினால், (1119).

**ஒப்ப** = ஈடாக, (702).

**ஒப்பதாம்** = பொருந்துவதாகிய, (993).

**ஒப்பாரி** = ஒத்துத் தோன்றுவர், (1071).

**ஒப்பிலார்** = மாறானவர்கள், ஒப்பில்லாதவர்கள், (801, 812).

**ஒப்பு** = ஒத்திருத்தல், (993).

**ஒப்புரவாண்மை** = உதவியின் அதிகமான அளவு, (480).

**ஒப்புரவில்** = கொடுப்பதில், உதவிகள் செய்வதில், (218).

**ஒப்புரவின்** = ஒப்புரவு போன்ற, (213).

**ஒப்புரவு** = இல்லாதவர்களுக்கு இருப்பவர்கள் உதவி செய்தல், (218).

**ஒரார்** = நீக்கார், (658).

**ஒரால்** = நீங்குதல், (153); செய்யாமை, (662).

**ஒரீஇ** = நீங்கி, ஒருவி ஒரிஇ என விகாரப்பட்டு நின்றது, (116); நீங்க, நீங்கி, (422, 797, 830); ஒழித்து, (1009).

**ஒரு** = ஒப்பற்ற, (168); சிறு, (337); தெளிய, (357).

**ஒருகால்** = ஒரு காலத்தில், (248).

**ஒருங்கு** = ஒரு சேர, (343, 554, 610); முழுவதும், (733); ஒரு சேர, (760, 951, 1056).

**ஒருங்கே** = ஒரு காலத்தில், ஒரு சேர, (343).

**ஒரு தலையாக** = ஒரு தலைஆ; நிச்சயமாக, (357).

**ஒரு தலையான்** = ஆண் பெண் இருபாலருள் ஒருவரிடம் மட்டும் உண்டானால், (1196).

**ஒருத்தியை** = ஒரு பெண் மகளுக்கு, *(1313)*.

**ஒரு நாளை** = ஒரு நாளைக்குள்ள, அப்பொழுதுள்ள, *(156)*.

**ஒரு பால்** = ஒரு பக்கம், *(118)*.

**ஒரு பொழுதும்** = ஒரு நொடிப் பொழுதும், *(337)*.

**ஒருமை** = ஒரு பிறப்பு, வாழ்க் கையின் ஒரு நிலை, *(398, 835)*; கற்புடையப் பெண்களைப் போல, *(974)*.

**ஒருமைக்கண்** = வாழ்க்கையின் ஒரு நிலையில்; ஒரு பிறப்பில், *(398)*.

**ஒருமை மகளிர்** = ஒரே உறுதியான மனநிலை கொண்ட கற்புடைய பெண்களைப் போல, *(974)*.

**ஒருமையுள்** = ஒரு வழிப்பட்ட உள் மனத்தினாலே, ஒரு பிறப்பில் என்றும் கூறுவர் சிலர், *(126)*.

**ஒருவந்தம்** = திண்ணமாக, *(593)*.

**ஒருவரால்** = ஒருவராலும், *(1004)*.

**ஒருவற்கு** = ஒருவனுக்கு, *(40, 95, 398, 400, 414, 454, 600, 797, 971, 988, 1023, 1026, 1052)*.

**ஒருவனை** = ஒருவனை, *(38, 161, 181)*.

**ஒருவுக** = விட்டு விடுக, *(800)*.

**ஒருவுதல்** = விட்டு நீங்குதல், *(652)*.

**ஒரூஉம்** = நீங்கும், *(812)*.

**ஒலித்தக்கால்** = ஓசையிட்டால், *(763)*.

**ஒல்காமை** = மனம் தளராமை, *(662)*.

**ஒல்கார்** = நீங்கார், *(135)*; தளரார், *(218, 597)*.

**ஒல்லா** = உடன்படாத, மனம் இசையாத, *(1064)*; ஒத்து வராத, *(1136)*; பெறாத படியே, *(1271)*.

**ஒல்லாக்கால்** = முடியாதவிடத்து, *(673)*.

**ஒல்லாது** = பொழியாதபோது, *(559)*; அடையாது, சேராது, *(870)*.

**ஒல்லானை** = அடையாதவனை, *(870)*.

**ஒல்லும்** = தம்மால் இயன்ற, *(33)*; இயலும், *(673)*; தம்மால் முடியக் கூடிய, *(818)*.

**ஒல்லை** = விரைவாக, *(563, 564, 826, 1096)*.

**ஒல்வது** = இயல்வது, *(472)*; கூடுமோ, *(1149)*.

**ஒவ்வா** = ஒப்பாக மாட்டா, *(972)*.

**ஒவ்வேம்** = ஒப்பாக மாட்டோம், *(1114)*.

**ஒழித்து** = நீக்கி, *(280)*.

**ஒழிய** = நீங்க, *(240)*; நிற்க, *(1231)*.

**ஒழிய விடல்** = கைவிடல், *(113)*.

**ஒழுக** = நடக்க, *(111, 446, 855)*.

**ஒழுகப்படும்** = நடக்க வேண்டும், *(154, 698)*.

**ஒழுகலான்** = நடத்தலான், *(30, 445, 1073)*.

**ஒழுகல்** = நடத்தல், *(140, 286, 482, 524, 845)*; நடந்து கொள்க, *(602, 694)*; நடத்தல், *(845)*.

**ஒழுகான்** = நடக்காதவனாய், *(474)*.

**ஒழுகின்** = நடந்தால், *(294, 359, 892, 974)*.

**ஒழுகுதல்** = நடத்தல், *(444)*.

**ஒழுகுபவர்** = நடப்பவர், *(908)*.

**ஒழுகும்** = நடக்கும், *(141, 278, 551, 563, 603, 874)*; செய்து திரியும், *(907)*.

**ஒழுகுவார்** = நடப்பவர், (143, 246, 691, 876, 921).

**ஒழுகுவான்** = நடப்பான், (326, 727); வருந்துபவனாகிய, (1197).

**ஒழுக்க** = ஒழுக்கமாகிய, (6).

**ஒழுக்க ஆறு** = ஒழுக்கமாக நடப்பதற்கான வழி, (161).

**ஒழுக்கத்தின்** = ஒழுக்கத்தினின்றும், (36); ஒழுக்கத்தினால், (137).

**ஒழுக்கத்து** = நல்ல ஒழுக்கத்தில் நடந்து, (21).

**ஒழுக்கம்** = அறநெறிகள் குறிக்கப் பட்ட முறைப்படியும், சான் றோர்களால் நடக்கப்பட்ட பண்புகளின்படியும் மக்கள் நடத்தலை ஒழுக்கம் என்பர். இந்த ஒழுகலாறுகள் இரண்டு வகைப்படும். அவை நல் லொழுக்கம், தீ யொழுக்கங் களாகும். இங்கே கூறப்படுவது நல்லொழுக்க நடத்தைகளையே, (131 முதல் 135 வரை, 138, 139, 371, 275, 415, 952).

**ஒழுக்கமுடைமை** = இது திருக் குறளில் வரும் 14-வது அதி காரம். ஒழுக்கத் தோடு வாழ்தல் என்பது பொருள். உயர்ந்த பண்புடையார்களால் அறி வுறுத்தப்பட்ட, மக்களின் பழக்க வழக்க அடிப்படையில், அற நெறிகளில் நின்று நடந்து கொள் ளும் முறைகளே ஒழுக்கம் எனப்படும்.

அந்த ஒழுக்க விதிகளை மக்கள் தலைமுறைகள்தோறும் கடை பிடித்து, சான்றோர்கள் நமக்கு வைத்து விட்டுச் சென்ற உடை மைகளாகக் கருதிப் போற்றிப் பின்பற்றி நடக்க வேண்டும்.

**ஒழுக்கு** = நீரின் ஓட்டம், (20); ஒழுக்கம், (148, 161).

**ஒளி** = விளக்கம், கண்ணால் காணப் படுவது, ஞானம், (267) விளக்கு, ஒளி, (390); புகழ், நன்கு மதிக்கப்படுதல், (556, 870, 921, 939, 970, 1118); புகழை, (971); ஒளி பொருந்திய அணிகலன்களை அணிந்த காதலி, (1329).

**ஒளிக்கும்** = ஒளிந்திருக்குமோ!, (1070).

**ஒளித்ததூஉம்** = மனத்தில் ஒளித் திருந்த இரகசியத்தையும், (928).

**ஒளியார்** = அறிவுச் செல்வர்கள், (714).

**ஒளியோடு** = அதிகாரப் புகழுக்கு ஏற்ப, (698).

**ஒளிவிடும்** = அறிவு அதிகமாகும், (267).

**ஒள்** = ஒளி பொருந்திய, (1088, 1125).

**ஒள் பொருள்** = நல்ல வழியில் வந்த பொருள், (760).

**ஒள்வாள்** = கூர்மையான வாள், (727).

**ஒள்ளியர்** = சிறந்த அறிவுடையராக, (714).

**ஒள்ளியவர்** = அறிவுடைய மன்னர், (487).

**ஒறுக்கிற்பவர்** = பழித்துப் பேசும் திறனாளர், (779).

**ஒறுத்தல்** = தண்டித்தல், (314, 550).

**ஒறுத்தாரை** = தீமை செய்ததால் தண்டிக்கப்பட்டவர்களை, (155).

**ஒறுத்தார்க்கு** = தண்டித்தவர்க்கு, (156).

**ஒறுத்து** = தண்டித்து, (579).

**ஒறுப்பது** = தண்டிப்பது, (561).

**ஒற்கத்தின்** = தளர்ச்சியில், (414).

**ஒற்றாடல்** = இது திருக்குறளின் 59-வது அதிகாரமாகும். எதிரிகள், அயலார்கள் நண்பர்கள் ஏனும் மூன்று வகையினரிடத்தும், நடந்த, நடந்து கொண்டிருக்கிற, நடக்கப் போகின்ற அனைத்து நடவடிக்கைகளையும் மறைந்து நின்று ஒற்றர் மூலம் அறிந்து துப்புத் துலக்கி அரசுக்கு அறிவித்தல். ஒற்றர்களை ஆளுதல், ஒற்றர்களின் திறமைகளது வகைகளைப் பற்றி விளக்கிக் கூறுதலை ஒற்றாடல் எனப்படும். மறைந்து இரகசியங்களை இடங்களுக்கு ஏற்றவாறு மாறி மாறி ஓடியாடி தேடி அறிதலால் 'ஆடல்' என்று கூறப்பட்டுள்ளது.

**ஒற்றி** = ஒற்றி, ஒற்றி - ஒற்றினாலறிதல், (583, 588); மறைந்து கள்ளுண்டார் களிப்பால் சுழன்றாடும் கண்களைப் போலவே ஒற்றி அலைவர், (927); சுவரில் தொட்டுத் தொட்டுக் குறியிட்டு, (1261).

**ஒற்றினால்** = வேறோர் ஒற்றினால், (588).

**ஒற்றினான்** = ஒற்றனால், (583).

**ஒற்றின்கண்** = ஒற்றனிடத்து, (590).

**ஒற்று** = உளவு அறிபவன், (581); வேறுபாடு பாராமல் ஒற்றாடுபவரே ஒற்றர், (584); வெளிப்படுத்தாதவன் ஒற்றன், (585); ஒற்றாடும் வகைகள், (586); கேட்டறியும் வல்லமை ஒற்று, (587); ஒற்றை ஒற்றால் ஒற்றியறியும் உண்மை, (588); ஓர் ஒற்றனை மற்றோர் ஒற்றன் அறியாதபடி, (589).

**ஒன்றல்** = ஆகும் என்பது, (886).

**ஒன்றன்** = ஓர் உயிரின், (253, 257, 259).

**ஒன்றாக** = ஒரு பொருளாக, (155); சிறப்பாக, (323).

**ஒன்றாமை** = உட்பகையானது, (886).

**ஒன்றானும்** = ஒன்றாவது, (128).

**ஒன்றியார்** = உட்பட்டு இருப்பவரிடத்திலே, (586);

**ஒன்று** = ஓர் அளவு, (87); ஒரு, (109); ஒன்று மட்டுமே, (111); ஏதாவது ஒன்றை, (221) ஒரு பொருள், (232, 438, 1007); மற்றொன்று, (233); சிறு கால அளவு போல, (334); செயற்கை அறிவு, (380); ஒரு பொருளை, (758, 1007); ஒரு குற்றத்தை, (831); துன்பம் ஒன்றை, (839); பகை ஒன்றை, (875); ஒன்றை வென்று, (932); வறுமை தருவது, (934); ஒரு நோயாக, (1006); உணவு கொடுப்பர், (1035); ஒரு துன்பம், (1080); துன்பம் இன்பம், (1202); நனவு ஒன்று அதாவது தெளிவு என்ற ஒன்று, (1216); செய்தியொன்று, (1271); ஒரு குறிப்பு, (1273, 1274); ஊடி நீங்கியிருப்பதிலும் ஓரின்பம், (1325).

**ஒன்று ஆ** = ஒப்பில்லாமல், (233).

**ஒன்று இன்மை** = ஒரு பொருள் மீது பற்றின்மை, (344).

**ஒன்றும்** = ஒன்றாயினும், (209); ஒரு பொருளையும், (281); சிறு தீங்கும், (291) வேறு ஒன்றும், (300).

**ஒன்றோ** = எண் இடைச் சொல், ஒன்று மட்டுமா?, (148, 805); ஒன்று மாத்திரமோ, (836).

**ஒன்னார்** = பகைவர், (165, 264); பகைவர்க்கு, (608, 630); பகைவர்களை, (756); பகைவர்களிடத்தில், (827); பகைவர்கள், (828).

# ஒ

தமிழ்மொழி நெடுங்கணக்கில், இது பதினோராம் உயிர் எழுத்து. உயிர் முயற்சியால் பிறக்கும் எழுத்துக்களுள், வாயைத் திறத்தலாகிய அகரக் கூறும், இதழ் குவிவாகிய. உகரக் கூறும் சந்தித்துப் பிறந்த ஒரு நெடில் உயிர்.

பழங்காலத்து ஓலைச் சுவடிகளில் தமிழறிஞர்கள் எழுத்தாணி கொண்டு எழுதும்போது 'ஓ' என்ற நெடில் எழுத்தைச் சுலபமாக எழுதிட, 'ஒ' குற்றெழுத்து மேல் புள்ளி ஒன்றை வைத்து, அதை 'ஓ' என்று ஒலித்து வந்தார்கள். வீரமாமுனிவர் அந்தப் பழக்கத்தை மாற்ற எண்ணி, 'ஒ' மேல் வைத்து எழுதப் பட்ட புள்ளியை 'ஒ'கர எழுத்துக்கு அடியில் கொண்டு வந்து, சிறு முட்டை போலச் சுழித்து 'ஒ'வை, 'ஓ' என்ற உயிர் நெடிலாக மாற்றி வீரமாமுனிவர் எழுத்துச் சீர்த்திருத்தம் செய்தார். அந்த 'ஓ' வடிவத்தைத்தான் இன்றும் நாம் எழுதி வருகின்றோம்.

இது ஓர் அதிசய விரக்கச் சொல். எடுத்துக்காட்டு ஓ புதினம்; இரக்கச் சொல் எ.கா. ஓ கொடியன்; உயர்வு சிறப்பு; ஓ பெரியன்; எதிர்மறை, யானோ செய்தது; ஒழிபிசை; கொளலோ கொண்டான்; அசைநிலை; வம்மினோ, வினா, சாத்தனோ, மதகு நீர் தாங்கும் பலகை. இவ்வாறு எண்வகைப் பயன்பாடுகளுக் குரிய ஓரெழுத்து. இந்த 'ஓ'. -

---

**ஓ** = அசை நிலை, (31) எவனோ என்ற சொல்லில் 'ஓ' அசை! வேண்டா, (85); அசைநிலை, (99); இல்லை, (90,211); அசை இல்லை, (483); அசை, (819, 987, 990, 1004, 1016, 1029, 1048, 1070, 1081, 1089, 1170, 1171, 1184, 1195, 1206, 1240, 1241, 1252, 1267, 1329); இடை விடாமை, (1204); இரக்கக் குறிப்பு, ஐயோ, (1252); இரக்கத் தில் வந்தது, (1253, 1254).

**ஓஒ** = ஓ என்னும் வியப்பின் குறிப்பு. அவ்வொலிகளது பெருமையும், நெற்றியின்து சிறுமையும் தோன்றி நின்றது. அதாவது பெண்ணின் நெற்றி அழகு ஒன்றிற்கே ஆண் வலிமை அழிந்தது. ஓஒ - மிகுதிப் பொருட் கண் வந்த குறிப்புச் சொல், (1176).

**ஓஒ இனிதே** = இது மிக இனிதா யிருந்தது, (1176).

**ஓஒ உளரோ** = இடைவிடாமல் இருக்கிறார்கள், (1204).

**ஓஒதல்** = செய்யாதிருத்தல்; தவிர் தல்; ஓதல் என்பது ஒரு சொல் நீர்மைத்து; ஓவுதல் என்பது குறைந்து நின்றது, (653).

**ஓசை** = ஒலி, (27).

**ஓச்சி** = தொடங்கி, (562).

**ஓச்சும்** = செலுத்தும், (544, 545).

**ஓடா** = ஓடமாட்டா, (496).

**ஓடி** = சென்று, (210).

**ஓடு** = உடன், மூன்றாம் வேற்றுமை உருபு, (37, 410, 413, 426, 632, 636, 730, 962, 983).

**ஓடும்** = செல்லும், (496).

**ஓட்டு** = தோல்வி, (775).

**ஓதி** = கற்று, (834).

**ஓத்து** = வேதம், ஓதப்படுவது, (134).

**ஓம்பப்படும்** = போற்றப்படும், காப்பாற்றப்படும், (131).

**ஓம்பல்** = தவறாமல் செய்தல், வழுவாமல் பாதுகாத்தல், (43); பாதுகாத்தல், (390); நீக்குதல், (612); சோர்வுபடாமல் சொல்லல், (642); தவிர்க்க, நீக்கிவிடல், (820); தடுத்து நிறுத்துவாயாக, (1155).

**ஓம்பா** = இகழும், செய்யாத, போற்றாத, (89); விடாமல், (861).

**ஓம்பி** = போற்றி, பேணி, (81, 132); போற்றி உண்பித்து, (86); காத்து, (88); பாதுகாத்து, (244, 549).

**ஓம்பின்** = பாதுகாப்பின், (1155).

**ஓம்பு** = விட்டுவிட்டு, (1149).

**ஓம்புக** = நீக்குக, (506); விட்டு விடுக, (861).

**ஓம்புதல்** = பாதுகாத்தல், (322) போற்றிக் காத்தல், (626).

**ஓம்பும்** = போற்றும், (968).

**ஓம்புவான்** = காப்பாற்றுவான், (83, 84).

**ஓரனையர்** = ஒரே தன்மையர் ஆனாலும், (704).

**ஓரா** = ஆராயாத, (548).

**ஓரார்** = காது கொடுத்துக் கூர்ந் துக் கேளாமலும், (695).

**ஓரால்** = நீக்குதலும், செய்யாமலும், (662).

**ஓரும்** = அசை நிலை, (40, 366).

**ஓர்** = ஒரு, (24, 429, 465, 639, 645, 848, 932, 1053).

**ஓர் ஏர்** = ஒரு நன்மைக் குறிப்பு உண்டென்பதை, (1098).

**ஓர் ஐந்தும்** = ஐம்புலன்களையும், (24).

**ஓர்த்து** = ஆராய்ந்து, (357).

**ஓர்ந்து** = ஆராய்ந்து, (541).

**ஓவா** = நீங்காத, (734); ஒழியாது, எப்பொழுதும் இடைவிடாது, (1205).

**ஓவாது** = இடைவிடாமல், (933).

**ஓவாதே** = ஒழியாமல், (33).

**ஓவாப்பிணி** = நீங்காத நோய், (734).

# க

*இது ஒருயிர் மெய் எழுத்து. தமிழ் எண்ணியல் வரிசைப்படி இது ஒன்று என்ற எண்ணைக் குறிக்கும் வடிவம். வியங்கோள் விகுதியில் ஒன்று. கஂஂகான் என்றும், ககாரம் - ககரவெழுத்து என்றும் இவ்வெழுத்தைத் தமிழ் கூறும்.*

**கஂஂசு** = காற்பலம் - இது பழைய நிறுத்தலளவு எடைக் கல் மதிப்பைக் குறித்து வழங்கிய ஒரு சொல் , (1037).

**கசடற வல்லதூஉம்** = குற்றமறக் கற்றறிந்த நூலிருக்குமேயானால், அதைப் பற்றியும் , (845).

**கசடு** = குற்றம், வழு , (391, 717, 845).

**கடப்பாடு** = ஒப்புரவு, உபகாரங்கள், கைம்மாறு, வேண்டாத கொடை, முறையறிந்து செய்யும் உதவிகள், கடமை என்பதும், கடன் என்பதும் முறைமை. அவை தொழிற் பெயராகும் போது, கடம்படல், கடப்பாடு என்று சொல்லப்படும், (211).

கடப்பாடு என்ற பொருளில் ஒப்புரவு, ஈகை, வேளாண்மை, ஒத்தது, நயன், பெருந்தகை என்ற சொற்களை எல்லாம் வ்ழங்குவர் அறிஞர்.

'கடப்பாடறிதலாவது, இல்லென இரந்து வந்தார் யாவர்க்கும் வரை யாது கொடுக்கு மாற்றலிலரெனி னும், தம்மள விற்றாம், தம் வரு வாயளவிற்கும் ஏற்கத் தக்கார்க் குத் தக்கன வறிந்து கொடுத்தல்' என்கிறார் **மணக்குடவர்.**

**'உலக நடையினையறிந்து செய்தல்' என்கிறார் பரிமேலழகர். மணக்குடவர் கூறிய பொருள் ஒரு வகையில் ஈகையின் பாற்படுமாக லானும், பரிமேலழகர் கூறிய பொருள் ஒரு வகையில் ஒழுக்கத் தின்பாற் படுமாகலானும் ஒப்பரவு. கடப்பாடு என்பதற்கு உலகிற்குச் செய்யும் உபகாரம், உதவிகள் எனப் பொருள் கொள்ளல் சிறப்பே ஆகும்.**

**கடலில் =** ஆராயாமல் செய்த உதவியின் நன்மை, கடலை விடப் பெரியதாக இருக்கும், *(103)*.

**கடலும் ஆற்றா =** கடலும் தாங்க முடியாத அளவுக்குப் பெரும், *(1175)*.

**கடலை =** துன்பம் உண்டாக்கு கின்ற கடலினை , *(1200)*.

**கடலை செறாய் =** கடலைத் தூர்க்க முயல்வாயாக, *(1200)*.

**கடல் =** கடத்தற்கரிய கடல், *(10)*; பெரிய கடல், *(17)*; தேர் கடல் ஓடா, மரக்கலம் நிலம் ஓடா போல், *(496)*; கடல் போன்ற காதல் நோய், *(1137)*; கடல் போல பரந்துள்ள நோய், *(1164)*; கடல் போன்ற இன்பம், *(1166)*; கடலைவிடப் பெரிய அளவுக்கு, *(1175)*.

**கடவுள் =** திருக்குறளின் முதல் அதி காரம் இது. கடவுள் இறைவன்; உள்ளத்தைக் கடந்தவன்.

கடவுள் வாழ்த்து என்பர் பலர்; கடவுள் வழிபாடு என்பர் சிலர்; ஆதி பகவன் என்பர் வேறு சிலர்; அறிவின் சிறப்பு என்பர் பகுத்தறிவாளர்கள்.

இந்த அதிகாரத்தில் கட வுளைச் சுட்ட, ஆதி பகவன், வாலறி வன், மலர்மிசை யேகினான்; வேண்டுதல் வேண்டாமை யிலான்; இறைவன்; பொறி வாயில் ஐந்தவித்தான்; தனக்குவமை இல்லாதான்; அற வாழி அந்தணன்; எண் குணத் தான் என்ற சொற்களை ஆட்சி செய்துள்ளார் **திருவள்ளுவர் பெருமான்.**

கடவுள் திருவடிகளைப் போற்ற; நற்றாள்; மாணடிதாள், அடி என்ற அருட்சொற்களை ஆண்டுள்ளார்.

ஐசுவரியம், வீரியம், கீர்த்தி, திரு, ஞானம்; வைராக்கியம் என்ற ஆறு வாழ்வியல் கூறு களைப் 'பகம்' என்ற சொல் குறிக்கும். அவற்றை உடையவன் **'பகவன்'.** இவை ஆறும் தாயின் கருவிலேயே உருவாகுபவை என்பர் ஆன்றோர்.

பூதங்களின் உற்பத்தியையும், முடிவையும், வரவையும், செலவையும், வித்தியையும், அவித்தியையும் அறிபவனைப் பகவன் எனவும் அறிவர் கூறு வர். அத்தகைய பகவருள் முதன்மையானவன் **ஆதிபகவன்.**

யார் அந்த ஆதிபகவன்? தூய்மையான அறிவுடையவன்; தாமரைப் பூவின் மேலுள்ள வன்? விருப்பு வெறுப்பு அற்ற

வன்; ஒரே ஒரு தலைவன்; ஐந்தனது இந்திரியப் பற்றற்ற வன்; தனக்குவமை இல்லாத வன்; அறவாழி அந்தணன்; எண் குணத்தான் என்ற கடவுள் இலக்கணம் பெற்றவனே **அந்த ஆதிபகவன்!**

ஆதி பகவன் என்ற சொல்! பண்புத் தொகை சொற்களடி யாய் பிறந்த குறிப்பு வினைகளா கும் என்ற சொற்பொருளை விரித்துக் கூறுகின்றது **'திருக் குறள் அறத்துப் பால் பாலருரை'.**

'அறியாமை உலகத்தி லிருந்து அகன்று, அறிவுடைய - பயன் படும் உலகத்திற்கு மக்களை அழைத்து வருவதற்கு முன்னோடியாக இருந்து, அறி வாலும், ஆற்றலாலும், பண் பாலும் சிறந்து விளங்கி, வழி காட்டக்கூடிய 'அறிவின் சிறப்புப் பற்றிக் கூறுதல் எனப் படும்' என்று **நாவலரின் திருக் குறள் தெளிவுரை** - 'கடவுள் வாழ்த்து' என்ற பகுதிக்கு ஆய்வு மகுடம் சூட்டி அழகு பார்க்கின்றது.

'ஆதி பகவன் - ஆவதற்குக் காரணமான அறிவன். ஆதல், ஆதி போன்றவை தொழில் பெயர்ச் சொற்கள் ஆகும். ஆதல் - ஆவது; மனித சமூகம் ஒவ்வொரு துறையிலும் முன்னேறுவதற்கு அடிப்படைக் காரணமான அறிவன் என்று பொருள்படும்'

'**பகவன்** என்பதற்கு அறிவன் ஆசிரியன், அருகன், புத்தன் போன்ற பல பொருள்கள் உண்டு. இங்கு கொள்ள வேண்டிய பொருள் அறிவன் என்பதேயாகும். இரண்டாவது குறளில், வால் அறிவன் என்று வள்ளுவர் பயன்படுத்தியிருப் பது கூர்ந்து நோக்கத்தக்கது. பகவு+அன் = பகவன்; பகவு - பகுத்தறிதல், பகவன் - பகுத்தறி பவன்; அதாவது அறிவன். அறிவன் என்பது, அறிவிற் சிறந்தோனைக் குறிக்கும்'.

இக் குறட்பாவிற்கு உரை எழுத வந்த **பரிமேலழகர் :** 'உலகம் ஆதிபகவன் ஆகிய முதலை உடைத்து' என்று உரை எழுதிவிட்டு, 'ஆதி பகவன் என்னும் இரு பெயரொட்டுப் பண்புத் தொகை வடநூன் முடிவு' என இலக்கணம் கூறி யதுடன், காணப்பட்ட உலகத் தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுமாத லின்... முதற் கடவுளது உண்மை கூறப்பட்டது' என்று அவர் விளக்கமும் தந்துள்ளார்.

'ஆதி பகவன் என்ற சொற் றொடர் இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாக உள்ள படியே இருந்திருக்குமே யானால், 'ஆடித் திங்கள்', 'சாரைப் பாம்பு' என்பன போன்று, வல்லின ஒற்று மிகுந்து, 'ஆதிப்பகவன்'என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால், திருவள்ளுவர் அப்படிக் குறிப்பிடவில்லை. 'ஆதி பகவன்' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், தமிழ் இலக்கணங் களையே பின்பற்றிக் குறட் பாக் களைப் புனைந்த வள்ளுவர், தமிழ் இலக்கணத்தை ஒதுக்கித் தள்ளி விட்டுப் பரிமேலழகர் கருத்துப்படி 'வடநூல் மரபு' என்ற முறையில் வடமொழி இலக்கணத்தை ஒருபோதும்

கையாண்டிருக்க வழியில்லை. 'ஆதிபகவன்' என்பதற்குத் தமிழ் இலக்கணப்படி, 'ஆதி ஆகிய பகவன்' என்று பொருள் ஏற்படாது. ஆவதற்குக் காரணமான பகவன் அல்லது அறிவன் என்றுதான் பொருள் ஏற்படும்.

**தமிழ் மொழிக்கே சிறப்பாக அமைந்திருப்பது புணரியலாகும். ஓர் ஒற்றுக் கூடினாலும், குறைந்தாலும் சொற்றொடரின் பொருள் வேறு பட்டு விடும்.**

'ஆபயன்' என்பதற்கும், ஆப் பயன் என்பதற்கும் வேறு பாடு உண்டு. அவை முறையே, 'ஆகின்ற பயன்' என்றும், 'ஆவினுடைய பயன்' என்றும் பொருள் வேறுபட்டனவாகும். 'நாட்டு கொடியை, (நாட்டு கொடியை) என்றும், நாட்டுக் கொடியை, (நாட்டினுடைய கொடியை) என்றும் இரண்டு சொற் றொடர்களும் பொருள் வேறு பட்டுநிற்பனவாகும்.

திருக்குறளின் முதல் அதிகாரத்தில் உள்ள பத்து குறட்பாக்களிலும், கடவுள் என்ற சொல்லே இடம் பெறவில்லை. கடவுளை வாழ்த்துதல், வணங்குதல், வழிபடுதல் என்ற முறையில் எந்தக் கருத்தும் சொல்லப்படவில்லை என்று கூறுகிறார் - **திருக்குறள் தெளிவுரையில் டாக்டர் நாவலர்.**

**கடன்** = கடமை, *(218, 638)*; மற்ற மன்னரிடத்துத் தான் செய்யும் முறைமைகளை அறிந்து, *(687)*; கடமை, *(802)*; தமக்கு ஆற்றத் தகுந்த கடமை, *(981)*; முறைமை, *(1053)*.

**கடாஅ** = சந்தேகப்படாத; கடா என்ற சொல் கடுக்கு என்ற பெயரெச்ச எதிர்மறை. கேட்டுத் தெரிந்து கொள் ளல், *(585)*; மத நீர், மதம் கொண்ட நீர், *(1087)*.

**கடி** = காவல், *(1205)*.

**கடிகொண்டார்** = காதலி நெஞ்சத் தில் காதலன் புகாமல் காவல் காத்தார், *(1205)*.

**கடிதல்** = தண்டித்தல், *(549)*.

**கடிது** = கடினமானது, கடுமை யானது, வரம்பு மீறி செய்வார் போல, *(562)*.

**கடிந்த** = நீக்கிய, தள்ளிய, *(658)*.

**கடிந்து** = நீக்கி, *(658)*; ஒழிந்து, *(668)*.

**கடியன்** = கொடுமையானவன், கொடியவன், *(564)*.

**கடுகி** = கிட்டி, *(564)*.

**கடுங்கோல்** = கொடுங்கோல ரசன், *(570)*.

**கடுத்தது** = மிகுந்த குணத்தை, *(706)*.

**கடுத்தபின்** = தவறு நடந்ததை அறிந்த அரசன் ஐயப்பட்ட பின்பு, *(693)*.

**கடும்** = கடுமையான, *(386, 566)*; கொடிய, *(570)*; வலிய, *(1134)*; பெரிய, *(1167)*.

**கடும் சொல்** = இனிமையற்ற சொல்; கடுமையான சொல்;, *(386)*; இன்சொல்லுக்கு எதிர்ச் சொல்.

**கடை** = ஆயின், இடத்து, *(53, 230, 315, 372, 478, 803, 837, 964, 1019, 1059, 1149, 1195)*; கீழானது, *(328)*, முடிவில், *(663)*; இழிந்தவர், *(729)*; பின், *(792)*; குறிக்கொண்டு, *(944)*; இழிபு, *(998)*.

**கடைத்தும்** = இடத்தும், *(637, 823)*.

**கடைப்பிடித்து** = குறிக்கொண்டு; கவனித்து; மறவாது, *(944)*.

**கடைமுறை** = முடிவில், *(792)*.

**கடையர்** = தாழ்ந்தவர்; இழிந்தவர், (395).

**கட்டதனோடு** = விளை பயிரின் களையைக் களைந்து விளைச் சலைக் காப்பது, (550).

**கட்டபின்** = களை எடுத்த பின்பு, (1038).

**கட்டளை** = உரைகல், அவரவர் செயல்களே உரைகல், (505).

**கட்டளைக் கல்** = உரைகல், (986).

**கட்டு** = இடத்து, (27, 502, 513); கண்களையுடையது, (1083).

**கட்படாம்** = முகபடாம், முகத்தை மறைக்கும் துணி, திரை, சீலை, வேழத்தின் கூரிய கண் பார்வையை மறைப்பதற்காக மூடப்படுவதால், கட்படாம் என்பர், (1087).

**கணத்தர்** = இனத்தார், (720).

**கணம்** = இந்தச் சொல்லை பலர் வடமொழி என்று கூறுவர். இது வடசொல் அன்று. தூயத் தமிழ்ச் சொல். அதாவது சிறுபொழுது என்பதுதான் உண்மைப் பொருள். கண்+அம் = என்பது. இதற்கு கண் இமைக்கும் சிறு நேரம் என்பதாகும். இது 29-வது பாடல்.

**கணிச்சி** = குந்தாலி, அதாவது காதல் வேட்கை எனும் கோடாரி, (1251).

**கணை** = அம்பு, (279).

**கண்** = இடத்து, (52); கண்ணோட்டம், (184); அப்பொழுதே, (349); கண், (393, 445, 573, 705, 709, 780, 1041); தறுகண், (500); கண்ணோட்டம், (566); கண்ணிற்கு, (585); கோபப் பார்வைக்குப் பின்னுள்ள பார்வை, (686); முன், (1055).

**கண் அஞ்சா** = கண் பார்வைக்கு அடங்காது, (500).

**கண் அஞ்சாது** = மற்றவர் சந்தேகப் பட்டுப் பார்த்தால், அந்தப் பார்வைக்குப் பயப்படாது, (585).

**கண் அற** = முகத்தில் விழிக்க முடியாதபடி, (184).

**கண் அன்னார்** = கண்ணைப் போல முக்கியமானவர், (1061).

**கண் இன்று** = இரக்கமில்லாமல், (1252).

**கண் சாய்பவர்** = அறிவு சோர்ந் தவர், அறிவு தளர்ந்தார், (927).

**கண்டது** = பார்த்தது, (1071, 1146); அறிந்து, (1171).

**கண்டதூஉம்** = கண்டனுபவித்த இன்பமும், (1215).

**கண்டவற்றுள்** = அனுபவித்த அறங் கள் அனைத்திலும்; படித்த அற நூல்களுள், (300).

**கண்டனைத்து** = அரசனுக்குக் கட்டுப்பட்டு அடங்கி நடக்கும், (387).

**கண்டார்** = அறிந்தவர், (19, 141, 356); பார்த்தவர், (1084, 1090).

**கண்டால்** = பார்த்தால், (1246).

**கண்டான்** = பார்த்துப் புரிந்தவன், (849).

**கண்டு** = பார்த்து, (249, 758, 1101, 1259); எண்ணிய, (587); கண்டு, (399, 667).

**கண்டு அணையரேனும்** = நேரில் பார்த்தார்போல வேடமுடைய ராயினும், (277).

**கண்ணஞ்சான்** = எதிரி கோபித் துப் பார்த்தாலும் அந்த நோக்குக்குப் பயப்படாமல், (686).

**கண்ணாள்** = கண்களை உடையவள், (1119, 1125, 1142).

**கண்ணான்** = கண்களையுடையவன், (1103).

**கண்ணார்** = கண்ணுடையவர், (1180, 1305).

**கண்ணில்** = கண்களால், (1311).

**கண்ணிற்காண** = கண்ணால் காணும்படி, (1140).

**கண்ணிற்கு** = கண்ணுக்கு, (575).

**கண்ணினால்** = கண்ணால், (1210, 1280).

**கண்ணின்** = பார்வையினது, (709); கண்ணினால், (1140, 1290, 1311); கண்ணினது, (1240).

**கண்ணும்** = இடத்தும், (241, 1292); கண்ணும் என்ற இந்தச் சொல் பெறுவதற்குரிய அருமையை விளக்கி நிற்பதால் இது சிறப்பும்மையாகிறது, (354); கண்களையும், (1244).

**கண்ணும் எழுதேம்** = கண்ணைக் கண்களில் தீட்டும் மை என்ற அழகு பொருளால் எழுத மாட்டோம், (1127).

**கண்ணுள்ளின்** = கண் உள்ளே நின்றும், (1126).

**கண்ணே** = அப்பொழுதே, (349).

**கண்ணை** = கண்ணினைப் பெற்றிருக்கிறாய், (1222).

**கண்ணொடு** = கண்ணோடு, (1100).

**கண்ணோடாது** = இரக்கம் காட்டாது; பழகிய பழக்கம் நட்புப் பக்கம் சாயாது, (541).

**கண்ணோடு** = கண்ணுடன், (576).

**கண்ணோட்டம்** = திருக்குறளில் இது 58-வது அதிகாரம். கண்ணால் காணப்படுபவர் யாராக இருந்தாலும், அவர்களிடம் அன்பு, இரக்கம் காட்டி, அவர்களுக்கு அருளொளி வழங்குவதற்கு கண்ணோட்டம் என்று பொருள். அதாவது அவர்களது சொல் மறுக்கப் படாமை ஆகும்.

**கண் நின்று** = கண் முன்னே நின்று, (184); விழிப்பார்வை எதிரே நின்ற அளவில், (1055).

**கண்பாடு** = தூக்கம், உறக்கம், (1049).

**கதம்** = சினம், கோபம், (130).

**கதவு** = காதலியின் மன அடக்கம் என்ற கதவு, (1251).

**கதுப்பு** = அழகு தரும் பெண்ணின் கூந்தல், (1105).

**கதுமென** = வேகமாக, விரைந்து, (1173).

**கந்து** = பற்று, பற்றுக்கோடு, (507).

**கயமை** = இது திருக்குறளில் பொருட்பாலின் இறுதியில் வரும் 108-வது அதிகாரம்.

எந்தவித நல்ல பண்புகளு மற்ற, ஒழுக்கமற்ற, வாழ்க்கை நெறிகளை உடைத்தெறியும் எந்தக் கீழான இழி செயல்களையும் செய்யும் கீழ்மக்களது அற்ப குணங்கள்.

**கயலுண்கண்** = பிறழச்சியுடைய கண், கயல் மீன் போன்ற கண், (1212).

**கயிறு** = நாரால் பின்னப்பட்ட தடித்தக் கயிறு, வடம், (482).

**கரத்தல்** = மறைத்தல், (1054); வெட்கத்தால் அடக்குதல், (1162).

**கரப்பவர்க்கு** = மறைத்து ஒளிந்து கொள்பவர்க்கு, (1070).

**கரப்பவர்க்கு யாங்கொளிக்கும்** = உயிர் பிச்சைக் கேட்பவன் சொல்லைக் கேட்டதற்குப் பின்னும் மறைத்துக் கொள்பவனது உயிர் மேலும் இருத்தலால்,

இல்லையென்று மறைத்து வைத்துக் கொண்டவனது உயிர் எங்கே போய் ஒளிந்து மறைந்து கொள்ளும்?, (1070).

**கரப்பார்க்கு** = காதலர் மறையக் கூடும் என்று எண்ணி, (1127); கண்ணுக்குள்ளே இருக்கும் காதலர் மறைவார் என்பதை, (1129).

**கரப்பார்** = மறைப்பவரிடத்து, (1067).

**கரப்பிலார்** = மறைத்து வைத்துக் கொள்ளாமல் பிச்சைக் கொடுப்பவர், (1055).

**கரப்பினும்** = நீ சொல்லாமல் மறைத்துக் கொண்டாலும், (1271).

**கரப்பின்** = எதையும் சொல்லாது, கொடுக்காது இருப்பதை ஒளித்து வைத்துக் கொள்வார் களானால், (1051); உள்ளதைக் கொடுக்காமல் மறைத்தால், (1271).

**கரப்பு** = மறைத்தல், (1053, 1055, 1056).

**கரவா** = மறையாமல், (527).

**கரவாது** = ஒளிக்காமல், (1035, 1051).

**கரவு** = வஞ்சனை, (288); மறைத்தல், (1068, 1069).

**கரி** = சான்று, (25, 245, 1060).

**கரியார்** = உள்ளம் இருண்டவர்கள், (277).

**கரு** = கரிய, (1123), பசுமை, (1306).

**கருக்காய்** = இளங்காய், (1306).

**கருத** = நினைக்க, (1028).

**கருதி** = நோக்கி, (463); அறிந்து, (484); எண்ணி, (485, 700, 852); பார்த்து, (687, 696); ஆய்ந்து அறிந்து, (949).

**கருதினும்** = கொள்ள எண்ணினாலும், (484).

**கருதுப** = நினைப்பர், (337).

**கருதுபவர்** = எண்ணுபவர், (485).

**கருமஞ்செய** = குடியை உயரச் செய்வதற்கு, அதற்கான கருமத்தைச் செய்ய, (1021).

**கருமணியின்** = கண்ணுள்ளே உள்ள கருமணியின், (1123).

**கருமத்தால்** = கீழான இழிந்த செயல் காரணமாக, (1011).

**கருமம்** = தொழில், செயல், (266, 467, 505, 578, 818, 1021).

**கரும்பு** = கரும்பு, (1078).

**கருவி** = ஆயுதம், (421); மூவகை ஆற்றலும் நால்வகை தந்திரங்களும், (483); மனம், (537); சாதனம், (631, 675).

**கருவியான்** = சாதனத்தால், (483); மனத்தால், (537).

**கரை** = நீர் நிலைகளை அடுத்துள்ள தரை சார்ந்த இடம் கரை, (1167).

**கரைந்து** = அழைத்து, கூவி அழைத்து, உரத்திக் குரல் கொடுத்து, (527).

**கலக்கத்தை** = துன்பத்தை, வேதனையை, (627).

**கலங்காது** = மனம் துன்பத்திலாழாது, (668).

**கலங்கிய** = தடுமாறித் திரியலாயின, (1116).

**கலங்கினாள்** = என்னோடு மறந்து ஒன்று கலந்து கூடிவிட்டாள், (1290).

**கலத்தல்** = ஒன்றாகிக் கூடுதல், (1259); ஆண் பெண் ஒன்று கூடும் கலவி, (1276).

**கலத்தல் உறுவது** = காதலரோடு கலக்கத் தொடங்குவது, (1259).

**கலத்துள்** = பயன்படும் உண்கலம் அல்லது மட்கலம் அல்லது பாத்திரத்துள், (660).

**கலந்தார்க்கு** = கனவில் வந்துக் கலந்த காதலர்க்கு, (1212).

**கலந்து** = ஒன்று சேர்ந்து, (1246, 1268).

**கலப்பேன் கொல்** = கலத்தல், கூடுதல் என்ற இரண்டையும் இணைந்து செய்வேனோ, (1267).

**கலம்** = அணிகலம், (60, 575); பாத்திரம், (660, 1000, 1029); வளையல்கள், (1262).

**கலம் கழியும்** = வளையல்கள் நழுவி அங்குமிங்குமாகக் கழன் றோடி கீழே விழும், (1262).

**கலன்** = மரக்கலம், (605).

**கலுழும்** = அழும், அழுகின்றன, (1173).

**கலுழ்வது** = அழிவது, (1171).

**கல்** = கல்லு, (505; இறந்தபின் சமாதியில் நடும் நடுகல், (771).

**கல் நின்றவர்** = கல்லறையில் கல் நடப்பட்டு நின்றவர்; தமக் குக் கல் நடப்பட்டவர் (771)

**கல்லா** = பழக்கமில்லாத, (814).

**கல்லாத** = படிக்காத புத்தகங்களை, (845).

**கல்லாதவாறு** = சாகும்வரை படி யாது காலம் கழிக்கின்றன ரென்றால், (397).

**கல்லாதவர்** = படியாதவர், (393, 395, 403, 406).

**கல்லாதார்** = நூற்களை படியாதவர், (409).

**கல்லாதான்** = படிக்காதவன், (402, 404).

**கல்லாமை** = இது, தமிழர் வாழ் வியல் பொதுமறையான திருக் குறளில் வரும் 41-வது அதி காரம். பெயர் கல்லாமை. மனிதனுக்குள் குற்றம், குறை, இழிநிலைகள் ஆகியன அவன் வாழ்க்கையில் புகுந்தால், அது ஆமை புகுந்த வீடு போல கெட்டுக் குட்டிச் சுவராகி விடுமே என்பதற்காக திருவள்ளு வர் பெருமான் 'கல்வி கற் காமை'யால் வரும் கேடு பாடுகளை இந்தப் பகுதியில் விளக்கியுள்ளார்.

**கல்லார்** = படிப்பறிவு இல்லாதவர், (408, 570).

**கல்லான்** = இந்தச் சொல் 'பகை மாட்சி' என்ற அதிகாரத்துள் வருவதால் போர்க் கல்வி முறைகளைக் கற்காத எதிரியைக் 'கல்லான்' என்று சுட்டுகின்றாரே தவிர, பள்ளியில் கற்கும் பன்னூல் கலைக் கல்வி முறைகளை அல்ல, (870).

**கல்வி** = திருக்குறளில் இது 40-வது அதிகாரம். கல்வி என்பது கற்கக்கூடிய, கற்க வேண்டிய நூற்கள், கலைகள் அனைத்தை யும் கற்றறிந்து, அவற்றின் சிறப்பையும், பயனையும் வாழ்க்கையில் உணர்தல் வேண்டும், பெறல் வேண்டும் என்பனவற்றைக் கூறும் பகுதி. அதனால் தான், 'கல்லாமை' என்ற அதிகாரத்துக்கு முன்பு 'கல்வி' வைக்கப்பட்டுள்ளது.

மனிதனது இரண்டு கண்களில் ஒன்று கல்வி என்ற முக்கியத் துவத்தை ஓர் ஆட்சி உணர்தல் வேண்டும் என்பதாலும், கல்வி கற்பதற்குரிய எல்லா வசதிகளை யும் செய்து தரவேண்டிய பொறுப்பு ஆட்சித் தலைவ னுடையது என்பதை உணர்த்த வேண்டி, 'கல்வி'ப் பகுதியை, 'இறை மாட்சி' அதிகாரத்துக்குப் பின்பு வைக்கப்பட்டிருக்கிறது,

(383); கற்றலை, (398, 400, 684, 717, 939).

**கவரிமா** = இமயமலைப் பகுதியில் வாழ்ந்த ஒரு வகை மான் இனம் என்று கல்வியாளர்கள் கூறு கிறார்கள். போர்க் கலைகள் தெரி யாத குதிரையைக் 'கல்லாமா' என்று குறிப்பிடுவதைப்போல, இதனை ஒரு விலங்கு வகை மான் என்று சுட்டிடக் கவரிமா என்றும் கூறப்பட்டுள்ள ஒரு சொல், (969).

**கவர்ந்து** = பறித்துத் தின்றிட, விரும்பி உண்டிட, (100).

**கவலை** = துன்பம், வருத்தம், (7).

**கவறு** = சூது, (920); சூதாட்டக் காய், (935).

**கவிகை** = ஆட்சிக் குடை, (389).

**கவிழ்ந்து** = தலை குனிந்து, (1114).

**கவின்** = இயற்கை அழகு, (1234, 1235, 1250).

**கவுள்** = முகம் சார்பாகவுள்ள கன்னத்தையுடைய பகுதி, (678).

**கவ்விது** = மிகுதலையுடையது, அலர் தூற்றும் இழி, பழி மொழி வளர்ந்து வருவது, (1144).

**கவ்வை** = பழி தூற்றிப் பேசுவது, (1144).

**கழகத்து** = சூதாடும் களத்தினிடத் திலே, (937); இந்தச் சொல்லை இப்பொழுது அரசியல் கட்சிகள் பெருமையாக ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

**கழகம்** = சூதாடும் இடம், (935).

**கழல்** = வீரத்தைச் சுட்டும் தண்டை, (777).

**கழல் யாப்பு** = கால்களில் வீரக் கழலை அணிந்துக் கொளல், (777).

**கழாஅ** = கழுவாத, (840).

**கழா அக்கால்** = அசுத்தத்தை மிதித்துக் கழுவாத கால், (840).

**கழி** = மிக, (57); அதிகப்படி யான, (657, 866, 946).

**கழிபெரும்** = மிகப் பெரிய, (571, 866).

**கழிபேர்** = மிக அதிக, கழிபேர், கழிபெரு என்ற இரண்டு சொற் களும் ஒரே பொருளை தரு கின்றன, (946).

**கழிய** = மிக, (404).

**கழியும்** = நீங்கும், (378); செல் கின்ற, (1169); கழலும், (1262).

**களத்து** = களரியில், (1224).

**களரின்** = சேற்று நிலத்தின், (500).

**களர்** = உவர் நிலம், சவர் நிலம், (406).

**களவினால்** = திருட்டினால், (283).

**களவு** = திருட்டு, (284, 286, 287, 288, 289).

**களவு கொள்ளும்** = காதலி அறி யாமல் பார்க்கும் பார்வை, காதலி திருட்டுத்தனமாக நோக்கும் பார்வை! (1092).

**களன்** = அவை, அவையில் கூடியிருப்போர், (730).

**களி** = கள்ளுண்டு மகிழ்தல், (923); மயக்கம், (1145).

**களித்தல்** = தலை கால் தெரியாத மகிழ்ச்சிப் போதையால் ஆடிப் பாடி பேசிடும் உற்சாகம் மிகுதல், (1281).

**களித்தறியேன்** = மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைவாகக் கள்ளை யுண்ட பிறகு, நான் கள் குடிக்க வில்லை எனப் போதையால் அறியாமல் கூறுதல், (928).

**களித்தற்றால்** = கள்ளுண்டபின்பு களித்தது போலும், (838).

**களித்தார்க்கு** = கள்ளுண்டு மகிழ்ந் தவருக்கு, (1288).

**களித்தானை** = கள்ளுண்டு மகிழ்ந்தவனை, (920, 930).

**களித்து** = மயங்கினாற் போலும், (838); மயங்கி, (928).

**களித்தொறும்** = மயங்கும் போதெல்லாம், (1145).

**களிறு** = ஆண் யானை, (500, 597, 774, 1087).

**களைகட்டு** = களைகளை விளை பயிர் நிலத்திலே இருந்து பிடுங்குதல், (550).

**களையாள்** = கிள்ளாள், நீக்கா மள், (1115).

**களையுநர்** = வெட்டி எறிபவர்களையே; வாட்டி வருத்தும், (879).

**களைவது** = வெட்டி எறிவது, பயிரை விட்டு நீக்குவது, (788).

**கள்** = மயக்கம் அல்லது போதை தரும் குடி வகை பொருட்கள், (920, 921, 924, 926, 927, 930, 1145, 1201, 1288).

**கள்வ** = மனம் கவர்ந்த கள்வரே, அன்புக் கள்வரே, (1288).

**கள்வர்** = திருடியவர், (813).

**கள்வன்** = திருடன், (1258).

**கள்வார்** = களவினைக் கற்றவர்க்கு, மனம் பற்றிய வஞ்சனையுள்ள வருக்கு, (290).

**கள்வேம்** = வஞ்சித்துத் திருடிக் கொள்வோம், (282).

**கள்ளத்தால்** = களவினால், (282).

**கள்ளம்** = வஞ்சனை, திருட்டுத் தன்மை, (1184); மறைத்தற் குறிப்பு, (1275).

**கள்ளாமை** = வஞ்சித்துக் கொள்ளாமை, (281). திருக் குறளில் இது 29-வது அதி காரம். மற்றவர்களுக்குச் சொந்த மான பொருட்களை வஞ்சகமாக வும், அவர்கள் அறியாதவாறு திருட்டுத் தனமாகக் கவர்ந்து கொள்ளாமல் இருப்பதற்கும் 'கள்ளாமை' என்று பொருள்.

**கள்ளார்க்கு** = திருட எண்ணாதவர் களுக்கு, (290).

**கள்ளுண்ணாமை** = வள்ளுவனாரின் பொதுமறையாம் திருக்குறளில் வரும் 93-வது அதிகாரம். ஒரு வனது அறிவையும், செயற்திற னையும், பெருமையையும், புகழையும், குடிப்பிறப்பு மாண்பையும், மானத்தையும், ஒழுக்கத்தையும், வாழ்க்கை வளத்தையும், உடல் நலத்தை யும், உள்ளத்தின் உயர் சிறப்பையும், சீர்குலைத்து அவமானத்தை உருவாக்கும் போதைவெறி கொண்ட குடி பொருட்களை உண்ணா திருக்க வேண்டும் என்பது பற்றிக் கூறிய அதிகாரம் இது.

**கள்ளுக்கு** = கள் என்ற போதைப் பொருளுக்கு, (1281).

**கள்ளை** = கள்ளினை, (922).

**கறுத்து** = பகைத்து, சினந்து, (312).

**கற்க** = படிக்க, (391, 725).

**கற்பவை** = படிக்க வேண்டிய நூல்களை, (391).

**கற்பின்** = படித்தால், (373).

**கற்பு** = திருக்குறளில் இது 116- வது அதிகாரம். 'கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை' என்ற சான்றோரின அனுபவ மொழி. களவு ஒழுக்கம் ஒழுகிய தலைவன் தலைவி எனப்படும் காதலர்கள், மணம் செய்து கொண்ட பின்பு, கணவன் கற்பித்தவாறு இருவரும் மனம் ஒத்து நடக்கும் இல்லறக் காலத்துச் சம்பவங்கள் ஆகும்.

அவ்வாறு நடத்தும் குடும்ப வாழ்க்கையில் கணவன் கல்வி பெறவோ, பொருள் தேடவோ தலைவியை விட்டுப் பிரிந்து கடல் கடந்து செல்ல நேரிட்டால், தலைவன் கற்பித்த ஒழுக்கத்திற்கு ஏற்றவாறு நடந்துக் கொள்ளும் பதி விரதத் தன்மை அதாவது நல்லொழுக் கம் என்பர் சான்றோர். அதைக் கற்பு என்றும் குறிப்பிடுவார்கள்.

'கற்புடைப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார்' என்றும் சொல்வ துண்டு. தலைவியானவள் தலைவன் பிரிவு ஆற்றாமை யால் வருந்துவதும் உண்டு. அந்த நேரத்தில் கணவன் பிரிவு எண்ணமே அவளை வருத்தும். அப் போது இல்லற நல்லொழுக் கம்தான் அவளுக்குரிய துணை யாக நிற்கும்; நிற்க வேண்டும் என்பதே கற்பு ஆகும்.

அதைத் தவிர கருப்பு, சிவப்பு என்ற சொற் ஜால மாயங்கள் ஏதும் அவளிடம் அணுகா. அந்த அளவுக்குத் தலைவனது பற்று ஒன்றே அவள் மனத்தில் அசைக்க முடியாதத் திண்மைக் காட்சிகளாக நடமாடும். அதனைத்தான் கற்பெனக் கூறுவர் இல்லறத்தார்.

திருவள்ளுவர் பெருமானும், தாம் எழுதிய 'வாழ்க்கைத் துணை நலம்' என்ற அதி காரத்தின் 54-வது குறளில்.

"பெண்ணின் பெருந்தக்க யாஉள கற்புஎன்னும்
திண்மை உண்டாகப் பெறின்"

என்ற வினா குறட்பாவைக் கேட்டு, கற்பு என்பதற்கு, மன ஒழுக்கத் திண்மை; என்ற சொற்களால் விள்க்கம் தருகிறார்.

"இல்லறத்தில் காதலன்பு காரண மாகக் கொண்ட மன உறுதி' என்கிறார். இந்த நற்பண்பு ஆண் - பெண் என்ற இரு பாலரிடமும் எதிர் பார்க்கப்படும் குடும்ப விதி என்றுரைக்கின்றார்.

இதைத்தான் கவிஞர் பாரதி யாரும், 'கற்பை இருபாலருக் கும் பொதுவினில் வைப்போம்' என்று குறிப்பிட்டார்.

எனவே, கற்பு என்பது இல்லற ஒழுக்க மன உறுதி என்பதே பொருத்தமான பொருளா கும். இது ஆணுக்கும் ஆணி வேர், பெண்ணுக்கும் மனவேர் ஆகும்.

**கற்றக்கடைத்தும்** = கற்றவிடத்தும், *(823).*

**கற்றதனால்** = படித்தக் கல்வி அறி வினால், *(2).*

**கற்றது** = கற்ற நூல், *(650).*

**கற்றறிதல்** = நீதி நூல்களைப் படித்து, அதனதன் விதிவிலக்கு களை உணர்தல், *(632).*

**கற்றறிந்தார் காமுறுவர்** = படித் தறிந்தவர்கள் அவற்றைப் பிறருக்கு கூற ஆசைப் படுவார்கள், *(399).*

**கற்றணைத்து** = எந்த அளவுக் குப் படித்தார்களோ அந்த அளவுக்கு, *(396).*

**கற்றார்** = படித்ததால் உயர்ந்த பண்பாளர், *(395)*; நூல் களைக் கற்றவர், *(403, 409, 722).*

**கற்றான்** = மருந்து எனும் 95-ஆம் அதிகாரத்தில் இச் சொல் வருவதால் மருத்துவ நூல்களது நெறிகளைக் கற்ற மருத்துவன், *(949).*

**கற்றிலன்** = படிக்காதவன், கற்க மாட்டாதவன், (414).

**கற்று** = நூல்களைப் படித்து, (130, 140, 356, 399, 632, 686, 717, 728, 729).

**கற்றோர்** = நூல்களைப் படித்தவர்கள், (393).

**கனங்குழை** = கனத்த காதணிகளை அணிந்த பெண், (1081).

**கனம்** = சுமை; பாரம், (1084).

**கனவினான்** = கனவிடத்து; கனவினால், (1213, 1214, 1216, 1217, 1219,1230).

**கனவினுக்கு** = கனாவிற்கு, (1211).

**கனவினும்** = கனவு கண்ட விடத்தும், (819).

**கனவு** = கனா, (1215).

**கனி** = பழம், (100, 1191, 1306).

**கன்றிய** = மிக்க விருப்பமுடைய, அதிகமான பற்றுடைய, (284, 286).

# கா

**கா** = காவடி, தோளில் வைத்து சுமை தூக்கும் காவுதண்டு, (1163). காதலி உயிரையே காவடித் தண்டாகக் கொண்டு, அதன் ஒருமுனையில் தூது சொல்லச் சொல்லும் காதல் நோயும், மறுமுனையில் அதனை மறுக்கும் நாணமும் தொங்கிக் கொண்டிருக்கும் காவடித் தண்டு, (1163); காவடித் தண்டின் சுமைகள் இருபக்கமும் ஒத்திருப்பது போல, (1196).

**காக்க** = பாதுகாக்க, (122); அடக்குக, (127); காப்பாற்றுக, (132, 281, 305, 434, 883).

**காக்கின்** = துன்பம் உண்டாகாமல் காப்பாற்றினால், (305).

**காக்கும்** = காப்பாற்றுவான், காப்பாற்றும், (421, 422, 429, 547).

**காக்கை** = காகம் - பறவை, (481, 527).

**காடி** = புளித்தக் கூழ், கஞ்சி, ஊறுகாய், (1050).

**காடு** = கானகம், (742).

**காட்சி** = மனக் கண்முன் தோன்றும் அறிவு, (174); மயக்கமற்ற சுத்த அறிவுடையோர், (199); கடமையுணர்ந்த அறிவுடையார், (218); தெளிந்த அறிவுடையார், (654); அறிவினையுடையார், (699).

**காட்சிக்கு எளியன்** = குறை கூற வரும் குடிமக்கள் உடனே காணத் தகுந்த எளிமை உடையவன், (386).

**காட்சியவர்** = அறிவினையுடை யார், (174, 199, 218, 352, 654, 699).

**காட்சியார்** = அறிவுடையார், (258).

**காட்ட** = எனக்குக் காதலரைக் காட்ட, (1171).

**காட்டி** = காண்பித்து, (167); கண்ணுக்குத் தெரியும்படித் தோன்றி, (354); புலப் படுத்தி, (454).

**காட்டிய** = காண்பிப்பதற்கு, (1313).

**காட்டி விடும்** = கண்ணுக்கு எதிரே பார்க்கும்படிச் செய்யும், (28).

**காட்டுதல்** = காட்டித் தெளியச் செய்தல், (929).

**காட்டும்** = காண்பிக்கும், (706, 959).

**காட்டுவான்** = அறிவிக்கப் புகுவான், அறிவுடையவனாக ஆக்க முயலும் ஒருவன், (849).

**காணப்படும்** = அறியப்படும், (114, 185, 349, 1237); உண்டாகும், (298).

**காணலுற்று** = காண ஆர்வமுற்று, விரும்பி, (1244).

**காணல்** = கண்டல், நேரில் பார்த்தல், (1244).

**காணா** = பார்க்க முடியாத, பார்க்க மாட்டாத, (1285).

**காணாக்கால்** = காண முடியாத போது, (1286).

**காணாச் சினத்தான்** = தன்னையும் மற்றவர்களையும் காண முடியாததால் கோபப்படுபவன், (866).

**காணாதவர்** = காணாத பெண்கள், (1219).

**காணாதான்** = பிறரால் ஒன்றை அறியும் குணம் இல்லாதவன், (849).

**காணாது** = காண முடியாது, காணாமல், (1178, 1283).

**காணார்** = அறியமாட்டார், (857, 1220).

**காணான் கொல்** = அறிய மாட்டானோ, (1197).

**காணின்** = கண்டால், (488, 1040, 1051, 1056, 1057, 1074, 1079, 1112); வாய்க்கப் பெற்றால், (881); பார்த்தால், பார்க்கும் தன்மையைப் பெற்றிருக்குமே யானால், (1114).

**காணுங்கால்** = ஆராய்ந்து பார்க்கும் போது, (710); பார்த்த விடத்தில், (930, 1286).

**காணும்** = நினைக்கும், (859); பார்க்கும், (224); பார்க்கப் படும், (1285).

**காண்பு** = பார்த்தல், (16).

**காணேன்** = காண முடியாத வனானேன், (1167); காண மாட்டேன், (1285, 1286).

**காண்க** = கண்களால் காண்பன வாக, (1265).

**காண்கம்** = காண்போமாக, (1301).

**காண்கிற்பின்** = கண்டுணர்ந்தால், (190); பின்னர் காண முற்படு வானாயின், (436).

**காண்டலின்**= பார்ப்பதினாலே, (1213).

**காண்பது** = பார்ப்பது, (355, 358, 423, 424).

**காண்பர்** = காண்பார்கள், (620); ஓடச் செய்வர், (1034).

**காண்பவர்** = கண்டு அனுபவிப்பர், (379).

**காண்பான்** = பார்ப்பவன், அறிகின்றவன், (99); கண்டு வருத்தமடைபவன், (656).

**காண்பு** = காண்பதும், (16)

**காதல்** = அன்புடைய, விருப்பப் பட்ட பொருட்கள், (440).

**காதலம்** = மிகுந்த காதலை உடைய வனாக இருக்கிறேன் என்றோ, என்று கூறிய போது, (1314).

**காதலர்** = காதலையுடையர், (1150, 1185, 1208, 1213, 1216, 1219, 1226, 1246, 1278, 1308).

**காதலவர்** = விருப்பமுடையவர், (286); காதலர், அன்புடையர், (1126, 1127, 1128, 1149).

**காதலன்** = அன்பு கொண்டவன், தலைவியின் நன்மையை விரும்புபவன், (209).

**காதலார்** = காதலித்தவர்கள், ஒருவருக்கொருவர் மனமார அன்புடையவர்கள், (1099).

**காதலிக்கும்** = விருப்பம் கொள்ளு கின்ற, (940).

**காதலை** = காதலை உடையவர் கள்; நீயும் இவளைப் போல என்னால் விரும்பப்படத் தக்கவளே, (1118).

**காதல்** = விருப்பம், அதிகமான ஆசை, விரும்பும் பொருள், (284, 440, 921); காம விருப்பம், (1195, 1242).

**காதற்று** = காதலையுடையது, (940).

**காதன்மை** = அன்புடைமை, காதல் மை, (507, 832).

**காதன்மை செயல்** = விரும்பிச் செய்வது, (832).

**காத்தலும்** = சம்பாதித்தப் பொருளைக் காப்பாற்று தலும், (385).

**காத்தல்** = தடுத்தல், தாங்குதல், (29); பாதுகாத்தல், (632); அழிய விடாமல் காப்பாற்றுதல், (1038).

**காத்து** = காத்து; பாதுகாத்துக் கொண்டு, (56); எழாமல் தடுத்து, (130, 549, 642).

**காத்து ஓம்பல்** = காக்க, காத்து என்றாலும், ஓம்பல் என் றாலும் இரண்டும் காக்க, பாதுகாக்க என்ற பொருளையே தரும் சொல்லாகும்.

திருவள்ளுவர் இந்த இரு சொற் களையும் ஒரே பொருளில் 642-ஆவது குறளில் கூறப்பட்ட தற்குக் காரணம், ஒருவனது சொல்; ஆக்கமும் - கெடுதியும் தரக்கூடியதால், சொல்லுகின்ற சொல் சோர்வு தராமல், தவறு ஏற்படாமல் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற அக்கறை யோடு இதைச் சொல் வன்மை என்ற அதிகாரத்திலே கூறினார்.

**காப்ப** = காப்பாற்றிக் கொள்ள, (878).

**காப்பாற்றும்** = காத்தல் செய்யும், (388).

**காப்பான்** = அடக்குபவன், (3); செல் லாமல் தடுப்பவன், (24, 301).

**காப்பின்** = பாதுகாப்போடு, (744).

**காப்பு** = காவல், (57); காத்தல், (388); பாதுகாப்பு, (781, 1038).

**காப்போல** = காவடித் தண்டின் இரு முனை சுமைபோல, (1196).

**காமக்கடல்** = காமமல் என்ற நோயாகியக் கடல், (1164).

**காமக் கலம்** = விரும்பி ஏறும் காம மெனும் மரக்கலம், (605).

**காமக் கடும்புனல்** = காமம் என்ற பெரிய கடல். **மணக்குடவர்** 'காமத்தை ஒரு பெருங் காற்று' என்று கூறுகிறார்., (1167).

**காமத்தான்** = காமம் கொண்டவன், காமாந்தக்காரன், (866).

**காமத்திலே** = பெறக்கூடிய புணர்ச்சி இன்பத்திலே, ஈருடல் ஒருயிராக சேர்கையில், (1092).

**காமத்திற்கு** = காமாந்த காரருக்கு, (128); காம இன்ப நுகர்ச்சிக்கு, (1330).

**காமத்து** = காம நுகர்வினது பயனா கிய, (1191).

**காமம்** = ஆசை, (360); விருப்பம், (1090); புணர்ச்சி இன்பம் நுகர்தல், (1110).

காமம் என்ற சொல்லைச் சிலர் வடமொழிச் சொல் என்கிறார் கள். இது தவறு. பழங்காலத்தில் **இந்தச் சொல் 'நிறைவு' என்ற பொருளில் வழங்கப்பட்டிருக்கிறது.**

காமம் என்ற சொல்லுக்கு ஆசை, அன்புறவு, துலாக் கோல், காம நோய், குடி, ஊர் என்று பல பொருட்கள் இருக்கின்றன என்று தமிழ் மொழிஅகராதி கூறுகின்றது.

அதற்கேற்ப, ஓர் ஊரிலுள்ள குடிவாழ் ஆண்-பெண் இரு பாலருக்கும் அன்பு உருவாகும். அந்த அன்பு ஆசையை ஏற்படுத்தும், ஆண் பெண் ஆசை களவாகும்; பிறகு, ஊரார் போற்றும் இல்லறமாகும். இல்லறத்தின் கண் ஊடலுண்டு. காம நோயைப் பரப்பிவிடும் கூடலுண்டு. அதற்கு மாமருந்து புணர்ச்சி இன்பமாகும். இந்த இன்பம்கூட இருபாலரிடையே துலாக் கோல் போலச் சமன் படுத்திக் கொண்டே சென்று மக்கட்பேற்றை நல்கும். வாழ்வாங்கு வாழும் இவ்வளவு பண்புகளைக் காமம் வழங்கு வதால், அதனை ஆதித் தமிழர் கள் **'வாழ்க்கையின் நிறைவு' என்று பெருமை யாக எண்ணி காம மனநிறைவோடு தங்களது வாழ்க்கையை** நடத்தினார்கள்.

காமம் என்ற ஒரு சொல்லில் இவ்வளவுப் பொருட்கள் இயற்கையாகவே அடங்கி இருந்ததால்தான், திரு வள்ளுவர் பெருமான் காமத்துப் பாலை திருக்குறளின் இறுதியிலே வைத்துள்ளாரோ என்பதை எண்ணி மகிழ்கின்றோம்.

மேற்கண்ட காரணங்கள் அதற் கான காரியங்கள் நடத்தும் ஆற்றல் அந்த காமம் என்ற சொல்லுக்குள் இருப்பதால், அத்தகைய சொல் தமிழ்ச் சொல் தான் என்பதே இறுதியை அறுதி யிட்டு உறுதியாகக் கூறலாம். இதற்கு ஏன் சொல் ஆய்வு?. சொற் பொருளே போதுமே!

**காமம் விடு** = காமத்தை விடு, (1247).

**காமன்** = காதலுக்குத் தெய்வம், (1197).

காதலுக்குக் கடவுள் காமன், அதாவது மன்மதன், ரதி என்ற இணை தெய்வங்கள் என்று சிலர் கூறுவதுண்டு! ஆண் டாண்டுதோறும் மன்மதனை எரித்தாரா சிவபெருமான் இல்லையா? என்ற போட்டி எழுந்து, ஊருருக்கு காமன் எரிந்த, எரியாத லாவணிப் போட்டி நடந்து, கலவரம், குத்து வெட்டு போன்ற குழப்பங்கள் கூட நடந்த காலம் உண்டு.

கடவுள் என்ற சொல்லைத் திருக் குறளில் எந்த ஒரு இடத்திலும் ஆட்சி செய்யாத திருவள்ளுவர் பெருமான், காமத்துப் பாலுக் காகவா கடவுளைக் கற்பிப்பார்? சிந்திக்க வேண்டும்?

காதலரிடத்தே நின்று வருத்து கின்ற காமன்; ஆண் பாலாகக் கூறப்படும் காதல்; அதாவது, பெண் பாலை, மகளிரை வாட்டி வருத்தும். ஆண்பால் காதலைக் காமன் என்று ஆண்பாலாகக் கூறு வதும், ஆண்பாலரை வருத்தும் பெண் பால் காதலை 'அணங்கு' என்றும் குறிப்பிடுகிறார் திரு வள்ளுவர். இது உலக வழக்கு (918, 1081, 1082 என்ற குறட் பாக்களில் காணலாம் வள்ளுவர் பெருமான் கருத்தை. நூல் மரபுக் காக இவ்வாறு சொல்வதுண்டு. எனவே, காமத்துக்கு என்று ஒரு கடவுளோ, தெய்வமோ கிடை யாது. ஆனால், விழா எடுத்து, லாவணி பாடியது பழங்காலத் தில் ஆரியர் நுழைவுக்குப் பின்பு வாழ்ந்த தமிழர்கள்.

**காமுறுதல்** = விரும்புதல், (402).

**காமுறுவர்** = விரும்புவர், (399, 649).

**காமுற்றற்று** = பெற விருப்பப் பட்டது போன்று, (402).

**காமுற்றார்** = காமம் அதிகமானவர், (1133).

**காம்பு** = மூங்கில், (1272).

**காயார்** = சினம் கொள்ள மாட்டார், (1208).

**காயினும்** = வெறுத்தாலும், (707).

**காயும்** = சுடும், (77); கோபப் படுவாள், (1313, 1319, 1320).

**காய்தி** = வெறுக்கின்றாய், (1246).

**காய்வார்** = தீக்காய்கின்ற வரைப் போல, (691).

**காய்வு** = கோபப்படுதல், கோபம், (1246).

**காரணங்காட்டுதல்** = காரணங் காட்டி விளக்குதல், (929).

**காரணத்தின்** = காரணம் எதுவு மில்லாமல், (530).

**காரணம்** = தோற்றுத்துக்கு மூலம், காரணம், (270, 529, 929).

**காரிகை** = அழகு, (571, 777, 1262).

**கார்** = இருண்ட, (287).

**காலத்தால்** = காலத்தோடு பொருந்த, (686).

**காலத்தினால்** = ஆபத்து ஏற்பட்டக் காலத்தில், (102).

**காலத்தோடு** = காலத்தோடு பொருந்த, (686).

**காலமறிதல்** = பலமுள்ள அரசன் தனது பகை மேல் படை எடுக்க ஏற்ற காலத்தை அறிதல், (49).

**காலம்** = பொழுது, (483); காலத்தை, (483); தகுதியான காலம், (484); ஏற்ற காலம், (485, 631); வெல்லும் காலம், (487); தக்கக் காலம், (675); நேரம், வேளை (687); காலமறிந்து, (696); நட்புக் காலம், (830); நோய்க்கு மருந்து கொடுக்கும் காலம், (987).

**காலம் கருதி** = நேரம் பார்த்து, சமயம் பார்த்து, (687).

**காலை** = காலத்தில், (799); அறம், பொருள், இன்பங்களை அடையத்தக்க இளமைக் காலம், (937); பொழுது, (1094); முன்னே, (1226); விடியல் நேரம், (1225).

**காலைக்கு** = விடியும் பொழுதுக்கு, (1225).

**கால்** = பொழுது, (36, 248, 379, 674, 859 1064, 1104); உருளை, (496); சேற்று நிலத்தில் காலடி அழுந்த, (500); ஆராய்ந்து பார்த்தால், (710); சேரும் பொழுது, (733); கழுவாத கால்கள், (840); அடிமரம், (430, 930, 1030); முளை, (959); காம்பு நீக்காமல், (1115); பிரியும் பொழுது, (1166); வாராத பொழுது, (1179); தூங்கும் போது, விழிக்கும்போது. (1218).

**கால் ஆழ்** = கால் புதைகின்ற, (500).

**கால் கொன்றிட** = காலை வெட்டிச் சாய்க்க, (1030).

**காவாஅன்** = மன்னன், (560).

**காவாக்கால்** = அடக்காவிட்டால், (127, 301, 305).

**காவாதான்** = காக்க முடியாத அரசன், (435).

**காவாது** = பாதுகாக்காது, (535).

**காவார்** = பாதுகாக்காதவர், (127).

**காவான்** = அரசு நெறிகள்படி பாது காக்கவில்லையானால், (560).

**காழ்** = கொட்டை, விதை, (1191).

**காழ்த்த விடத்து** = காழ்தல், முதிர் தல், வயிரம் போல் திண்மை அடைந்தவிடத்து, (879).

**காழ்ப்ப** = முதிர்ந்த, மிகுந்த, மிகுதிய, (760).

**கானம்** = வனம், காடு, (772).

# கி

**கிடந்து** = முடிந்தது; கூடியது, (446, 583, 1001).

**கிடந்தமை** = இயல்பு, (950).

**கிழக்கு** = கீழ், கீழாகும், (488).

**கிழக்காந் தலை** = தலை கீழாக விழுவர், (488).

**கிழமை** = உரிமை, (785, 805).

**கிழமையை** = நண்பு உரிமையால் செய்த பணிகளை, (801).

**கிழவன்** = வயலுக்கு அல்லது விவசாய நிலத்திற்குச் சொந்தக்காரன், (1039).

**கிளத்தல்** = கூறுதல், (125).

**கிளவா** = சொல்லாத, (715).

**கிளைஞர்** = நண்பர், (976).

# கீ

**கீழல்லார்** = கீழ்மையானவரல்லர்; தாழ்மையானவரல்லர், (937).

**கீழிருந்தும்** = பதவியில், பணத்தில், தகுதியில், தரத்திலிருக்கும் சமயம், (973).

**கீழ்** = கண், இல், (389); தாழ்ந்த குலம், (409); உள்ளாக, (538, 929, 1034); கீழான இடம், (973); கீழாயின், (1074, 1079); கீழாயினான், (1078).

**கீழ்களது** = கயவரது, ஒன்றுக்கும் உதவாத கீழ்க்குணம் கொண் டவர்களது, (1075).

**கீழ்நீர் குளித்தானை** = நீர் நிலை களின் அடிப்பாகம் தண்ணீருள் மூழ்கிவிட்டவனை, (929).

**கீழ்ந்திடா** = அழிக்கலில்லாத, அறுத்தலில்லாத, விலக்கா மல் ஏற்றுக் கொள்ளும், (801).

**கீழ்ப்படின்** = கீழ் வாழ்ந்தால், (558).

# கு

**கு** = நாலாம் வேற்றுமை உருபு, (7, 8, 18, 24).

**குடங்கர்** = குடில், (890).

**குடம்பை** = முட்டை, (338).

**குடி** = குடும்பம், (171); நாட் டில் வாழும் மக்கள், (381, 390, 542, 544, 549, 554, 632); உயர்ந்த மரபு, (502, 681, 794, 952, 954, 957, 992); குடும்பம்,

(601, 604, 609, 887, 888, 1022, 1023, 1025, 1028, 1030).

**குடி காத்தல்** = நாட்டில் வாழும் குடிமக்களைக் காப்பாற்றுதல், (632).

**குடிக்கு** = உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு, (953).

**குடி செய் வகை** = இது திருக்குறளில் 103-வது அதிகாரம். ஒருவன் தான் பிறந்த குடியின் அல்லது தனது குடும்பத்தைச் சார்ந்த மக்களின் பெருமை, புகழ், சீர்மை, சிறப்பு, செல்வாக்கு, சொல்வாக்கு ஆகியனவற்றை மேம்படுத்துவதற்கு மேற் கொள்ள வேண்டிய திறம், ஆக்கம், ஊக்கங்களைப் பற்றி விவரிக்கும் அதிகாரமாகும், (103).

**குடி செய்வல்** = குடியை மேம்படுத்துவேன், (1023).

**குடிமை** = குடிப் பிறப்பு, உயர் குலம், (133, 608, 793); உயர்ந்த குடும்பத்தில் தோன்றியவருடைய தன்மைகள், (96).

**குடியாக** = மேற்கொண்டு உயரும் குடும்பமாக, (602).

**குடியாண்மை** = குடும்பத்தை ஆட்சி செய்கின்ற நோக்கங்கள், (609).

**குடும்பத்தை** = சேர்ந்து வாழும் மக்களை எவ்வாறு சேரி என்று குறிப்பிடுகின்றோமோ, அதனைப் போலவே உறவு முறையோடு கூட்டமாகக் கூடி வாழ்பவர்களை குடும்பம் என்கிறோம். இந்தக் குடும்பம் என்ற சொல்லை வட சொல் என்பது தவறு. கூந்தலைப் பெண் கூட்டி முடிக்கின்றாள். அதனால் அதைக் குடுமி என்கிறோம். கூடு என்பது இதற்கு வேர்ச் சொல். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை பெருகும் என்ற உயர்ந்த நோக்கத்திலே உருவான ஒரு சொல் குடும்பம் என்ற சொல். எனவே, இது தமிழ்ச் சொல்.

**குடை** = கவிகை, பல அரசர் களது கொற்றக் குடை கீழே வாழும் மக்கள், உழ வர்களது நெற்கதிர்களை வழங்கும் ஈகைப் பண்புக் குடை நிழலின் கீழே வாழ்வார்கள் என்று குடையின் சிறப்பை வள்ளுவர் பெருமான் உழவர்களை மேலேற்றிக் கூறுகின்றார், (1034).

**குண நலம்** = நற்குணங்களால் உருவாகும் நன்மைகள், (982).

**குணத்தான்** = குணங்களை, பண்புகளை உடையவன், (9).

**குணமில** = பயனில்லாதன, (9).

**குணம்** = நல்ல குணம், நல்ல தன்மைகள், **இதைக் காளிங்கர் 'உள்ளத்து அமைவுடையதே குணம்' என்கிறார்**, (9, 29, 504, 1125).

**குணன்** = குணங்களை உடையவன், (793, 868).

**குதித்தலும்** = இது சிறப்பும்மை பெற்றச் சொல். கடத்தலும் எனலாம். காரியம் நடவாமையை விளக்கிற்று, வென்று நிற்றலும் ஆகும், (269).

**குதித்தல்** = வெற்றி பெற்று நிற்றல், கடத்தல், (269).

**குத்து** = பறவைகள் மூக்கால் கொத்துவது, (490).

**குரை** = வகைப்பட்ட என்பதால் இசை நிறைத்தற் பொருட்டு வரும் அசைச் சொல், இடைச் சொல். அவை ஏ, ஓ, உம், அம்ம, அரோ-குரை என்பன.

இந்த இடத்தில் 'குரை' என்பதன் கண் வந்த இடை அசைச் சொல், *(1045)*.

**குலத்தில்** = உயர் குடியில், *(959)*.

**குலத்தின் கண்** = பிறப்பினிடத்து, *(958)*.

**குலமுடையான்** = நற்குலத்தில் பிறந்தவன், *(223)*.

**குலம்** = குடி, மரபு, *(956, 960, 1019)*.

**குலம் சுடும்** = குடிப் பிறப்பைக் கெடுக்கும், *(1019)*.

**குலன்** = குலம், *(223)*.

**குவளை** = நீலோற்பலம் பூ, *(1114)*.

**குழல்** = புல்லாங்குழலோசை. *(66, 1228)*.

**குழவி** = குழந்தை, *(757)*.

**குழா அத்து** = அவையினிடத்து, *(840)*.

**குழாத்து** = கூட்டம், *(332)*.

**குழு** = கூட்டம், *(735)*.

**குழை** = காதுகளில் அணியும் அணி, நகை, *(1081)*.

**குழையும்** = வாடும், *(90)*.

**குளவளா** = கிராமங்களில் உள்ள குளத்தினது பரப்பு, *(523)*.

**குளித்தான்** = குளத்தில் அல்லது கிணறு போன்ற நீர் நிலை களில் மூழ்கினவன், *(929)*.

**குறி எதிர்ப்பு** = அளவோடு வாங்கி அதே அளவோடு திருப்பிக் கொடுப்பது. அதாவது வட்டிக்குக் கொடுப் பது, *(221)*.

**குறிக்கொண்டு** = குறித்து; காம உணர்ச்சியுடையார் போல நகுதல், *(1095)*.

**குறித்த** = நிலைக் களனாகக் கொண்டு விடாமல்; **இதற்குக் காளிங்கர் உரை, 'உடம்பை வளர்ப் பதற்காக ஊனையே நம்பி வாழ்தல்' என்று கூறுகிறார், (1013).**

**குறித்தது** = இருப்பிடமாகக் கொண்டு அதனை விடாதது, *(1013)*.

**குறித்தமையான்** = குறித்து நின்ற மையால், *(827)*.

**குறிப்பறிதல்** = மற்றவர்கள் நினைப் பதைக் குறிப்பால் உணர்தல், *(71)*.

**குறிப்பறிந்து** = மன்னனின் மனக் குறிப்பை அறிந்து, *(696)*.

**குறிப்பறிவுறுத்தல்** = தலைவன், தலைவி, தோழி ஆகியோரின் ஒருவர் குறிப்பை ஒருவர்க்கு அறிவித்தல், (அதிகாரம் *128)*.

**குறிப்பின்** = குறிப்பினால், *(703)* அறிவால், *(705)*.

**குறிப்பின்றி** = நினைத்த நினைப் பிற்கேற்ப அடங்கி நில்லாது, *(1253)*.

**குறிப்பு** = இது ஆகு பெயர். உடல் வேறுபாட்டால் விளங்கும் கருத்து, *(696)*; வேந்தன் எண் ணிய காரியத்தின் குறிப்பை, *(701)*; மனக்குறிப்பு, *(703, 705)*; என்பன குறிப்புரைப் பன, *(1097)*.

**குறுகுதல்** = காதலியை நெருங்கு தலை, *(820)*.

**குறுகுங் கால்** = காதலியை நெருங்கி நின்றால் குளிர்ச்சியாக உள்ளது, *(1104)*.

**குறும்** = சிறிய, *(1135)*.

**குறும்பு** = குறும்பர் எனப்படும் ஒரு காட்டிடை வாழ் இனம். குறும் பரினம் எனப்படும். சதி செய் பவர்கள்; பாலை நிலத்தில் உள்ள ஓர் ஊர் குறும்பு. அங்கு வாழ்வோர் குறும்பர், *(735)*.

**குறை** = மிகத் தேவைப்படும் முக்கிய பொருள், *(612)*; குறை

யிரத்தல், *(680)*; உற்ற குறை, *(908)*.

**குறை பெறின்** = உடன்பாடு செய்து கொள்ள இசைந்தால்; இணக் கத்துக்கு இசைந்தால், *(680)*.

**குறை முடியார்** = குறைகளை நீக்கமாட்டார், *(908)*.

**குறையின்** = ஏற்ற அளவிற்குக் குறைந்தால், *(941)*.

**குற்றத்தார்க்கு** = குற்றமுடையவர் களுக்கு, *(924)*.

**குற்றத்தின்** = குற்றங்களிலிருந்து, *(502)*.

**குற்றம்** = பிழை, தவறு, *(171, 188, 190, 433, 434, 436, 504, 549, 604)*; குடிகளுக்கு வேண்டியவற்றைச் செய்யாமை யால் வரும் குற்றம், *(609)*.

**குற்றம் கடிதல்** = காமம், கோபம், ஆசை, மானம், மகிழ்ச்சி; மதம் என்ற ஆறு வகைப்பட்ட குற்றங்களையும் ஒருவன் நீங்குதல், *(44)*.

**குற்றம் மறைப்பான்** = குற்றம் நேராத வாறு மறைப்பவனது, *(1029)*.

**குன்ற** = குறைவுபட, *(134)*; கெட, *(898)* தாழ, *(961)*.

**குன்ற நினைப்பின்** = ஒருவன் கெட்டுப் போக வேண்டும் என்று நினைத்தால், *(898)*.

**குன்ற மதித்தல் = அவமதித்தல் என்கிறார் மணக்குடவர்.** 'ஒருவன் கெட்டுவிட நினைப் பாரானால்' என்கிறார் **பரிமேலழகர்,** *(898)*.

**குன்றன்னார்** = குறையாத, *(601)*; குறைவற்ற, *(793)*.

**குன்றல்** = குறைதல், *(811)*.

**குன்றன்னார்** = மலையைப் போன்ற பெருமை, புகழை உடையார், *(898)*.

**குன்றா** = குறையாத, *(601)*; குறை யில்லாத, *(793)*.

**குன்றி** = குன்றுமணி எனப்படும் ஒரு தானிய வகை, *(277, 965)*.

**குன்றிக்கால்** = குறைவு படுமானால், *(14)*.

**குன்றி மூக்கின்** = குன்றி மணியின் மூக்கைப் போல, *(277)*.

**குன்றின்** = குறைந்தால், *(990)*; மலைபோல், *(965)*.

**குன்று** = சிறிய மலை, மேடு, *(29, 758, 898)*.

**குன்றும்** = குறைந்துவிடும், குறைவு படும், *(17, 239, 560)*.

**குன்றுவ** = ஒழுக்கம் குன்றும் செயல்கள், *(954, 965)*.

**குன்றுவர்** = தாழ்ந்துவிடுவர், *(965)*.

**குன்றேறி யானைப் போர் கண்டற்று** = மலை மீது ஏறி நின்று கீழே நடக்கும் யானைப் போரைப் பார்த்தது போல, எவராலும் எளிதில் பார்க்க முடியும், *(758)*.

# கூ

**கூகை** = கோட்டான், *(481)*.

**கூடலின்** = காதலன் காதலி கூடி முயங் குதலின்போது, *(1327, 1328)*.

**கூடற்கண்** = நாயகன் நாயகி கலந்து கூடும்போது, *(1284)*.

**கூடாது** = சேராது, *(887)*.

**கூடா நட்பு** = மனதில் உண்மையான நட்பு இல்லாமல் வெளியே நட்பு போலிருக்கும் நட்பு, *(83)*. இது திருக்குறளின் 83-வது அதிகாரம். மனதால் நட்பு கொள்ளாமல், வெளியே நட்பாளார் போல நடிப்பது. இவ்வாறு நடிப்பது இழி நட்பு; சிறப்பற்ற நட்பு; போலி நட்பு; முகநக நட்பு. இந்த நட்பால் உண்டாகும் கேடுபாடுகளை விளக்கும் அதிகாரம் இந்த 'கூடா நட்பு'.

**கூடி** = மனமொத்து, பாச உணர்வு சிதறாமல், *(765)*; ஒத்த அன்பு உணர்வினராகி, *(1330)*.

**கூடிய** = கலந்தின்பமுறும், *(1264)*. **மணக்குடவர் இந்தக் கூடலை 'கூடுதற்கு அரிய' என்கிறார்.** கூடும் காரணமாக, *(1264)*.

**கூடிய காமம்** = காதல் உணர்வுகளால் கூடும் உணர்ச்சி, *(1264)*.

**கூடியார்** = இடைவிடாதுக் கூடிக் கூடி இன்பம் பெற்றவர்கள், *(1109)*.

**கூடின்** = புணர்ச்சி இன்பத்திற் காகச் சேர்ந்தால், *(887)*.

**கூடும்** = இயலும், *(269)*; பெறலாம், *(484)*.

**கூடுவேம்** = ஒன்று சேரக் கடவோம், *(1310)*.

**கூத்தாட்டு** = கூத்தாட்டம் நடத்துகின்ற, *(332)*.

**கூத்து** = நாடகம், *(332)*.

**கூப்பி** = குவித்து, *(260)*.

**கூம்பும்** = குவியும், இதழ்கள் மூடும், *(425)*; காலம் பார்த்திருக்கும், *(490)*.

**கூரியது** = கூர்மையானாது, *(759)*.

**கூர்ங்கோட்டது** = கூரிய கொம்புகளை உடையது, *(599)*.

**கூர்ந்து** = மிகுந்து, *(1010)*.

**கூலி** = பயன், வேலை செய்த வரை வரும் உழைப்புக் கூலி, *(619)*.

**கூழ்** = சோறு, கூழ், உணவு, *(64)*; பொருள், *(381, 554)*; பயிர், *(550)*.

**கூழ்த்து** = உணவுகளை உடையது, *(745)*.

**கூறப்படும்** = சொல்லப்படும். இது செயற்பாட்டு வினை அல்ல; கூறவேண்டும் என் பதைப் போன்றுணர்வு. எடுத்துக்காட்டு மீற்று வியங்கோள் முற்றுவினை என்கிறார் **நன்னூல் உரை கண்ட இராமானுசர்**, *(186)*.

**கூறல்** = சொல்லுதல், கூறுதல், *(100, 638)*; கூறாதே, *(1236)*.

**கூறாமை** = சொல்லாமை, *(701, 704)*.

**கூறான்** = சொல்ல மாட்டான், *(181)*.

**கூறிவிடும்** = சொல்லிவிடும், *(980)*.

**கூறின்** = சொல்லின், *(22)*; சொல்லிச் சூதாடுவானானால், *(933)*.

**கூறும்** = சொல்லும், *(386)*.

**கூறுவான்** = சொல்லுவான், *(186)*.

**கூற்றத்தை** = கூற்றுவனை, இயமனை, *(89)*.

**கூற்றம்** = இயமன், *(269, 1085)*.

**கூற்று** = இயமன் உடலைக் கூறுபடுத்துபவன், *(326, 765)*; பகுதிகளை உடையது, *(950)*; கேடு, *(1050)*; இயமன், *(1083)*.

**கூன் கையார்** = கைபொத்தியவர். மணிக்கட்டு வரை விரல்களை மடக்கிக் கூனைப் போல வளைத்த படியே குத்துபவர். இது குத்துச் சண்டை (Boxer's) வீரர்களது உயிர் போக்கும் விந்தைகளுள் ஒன்று, *(1077)*.

# கெ

**கெட** = கெட்டழிந்து, நீங்கும் படியாக, (359, 360, 1266).

**கெடல்** = தவிர்த்திருத்தல், (612); கெடுதல், (856, 893).

**கெடா அ** = அழியாது, (809).

**கெடின்** = கெட்டுப் போனால், (369); இல்லையானால், (854).

**கெடு** = கெடுதல், வறுமை, (117).

**கெடுக** = கெட்டுப் போவா னாக, (1062).

**கெடுக்கும்** = அழிக்கும், (447); போக்கும், (937, 1048).

**கெடுதல்** = அழிதல், (208).

**கெடுத்து** = அழித்து, (938).

**கெடு நீரார்** = அழிந்து போகும் குணமுடையவர், (603).

**கெடுப்பதூஉம்** = அழிப்பதும், (15).

**கெடுப்பார்** = பகையாய்க் கெடுப்பார், (448).

**கெடும்** = அழியும், நீங்கும், இல்லாமல் போய்விடும், (109, 134).

**கெடுவல்** = கெட்டொழியப் போகிறேன், (116).

**கெட்ட விடத்தும்** = ஒருவேளை கெட்டுப் போனாலும், (736).

**கெட்டாரை** = அழிந்தவர்களை, (539).

**கெட்டார்க்கு** = செல்வம் இல்லாமல் கெட்டுப் போனவருக்கு, (1293).

**கெட்டான்** = செத்தான், இறந் தான், நின்று கெட்டான், (697).

**கெழீஇ** = செறிந்த, (816).

**கெழீ இயிலர்** = நல்வினையிலர், **(விருப்பமில்லாராவர் என்பது மணக்குடவருரை).**

**கெழுதகைமை** = பழைமை வாய்ந்த உரிமை, (700); உரிமை பாராட்டுவது, (802).

# கே

**கேடன்** = கேடுடையவன், (210).

**கேடில்** = அழிவற்ற, (400).

**கேடு** = அழிவு, (32, 115, 165, 169, 400, 478, 642, 700); கேடு தருகின்ற செயல், (204); பொருட்கேடு, (220, 235); அழிவை விளைவிக்கும் செயல், (791, 858, 859, 889).

**கேடும்** = கேடு வருதலும், (115); தீமையும், (642).

**கேட்க** = அறிவுடையார் சொல் வதைக் கேட்க, (414, 416); வினவ, (587).

**கேட்கும்** = கைக் கொள்ளும், (648).

**கேட்ட** = காதால் கேட்டுக் கொண் டவை, (10); கேட்டறிந்த, (1076).

**கேட்டல்** = காதால் கேட்டு பதிய வைத்துக் கொள்ளல், (65).

**கேட்டார்** = நண்பராய் ஏற்றுக் கொண்டவர்களை - **மணக் குட**

வர் இதற்கு 'வினா வினாரை' என்கிறார், (643).

**கேட்டால்** = கேடு தரும் கெடுதி யினால், (732).

**கேட்டினும்** = கேடு உண்டான நேரத்திலும், (796).

**கேட்டு** = செவியால் கேட்டு, (1101).

**கேட்பர்** = மற்றவர்கள் பேசும் அவ மரியாதைச் சொற்களைக் கேட்டுக் கொள்வர், (607).

**கேணி** = கிணறு, ஊற்று, (396).

**கேண்மை** = நட்பு, (106); உறவு, (441, 782); சினேகத் தன்மை, (709).

**கேண்மையவர்** = நட்புடையவர், (807).

**கேண்மையார்** = நண்பரின், (809).

**கேளா** = கேளாத, (418); பிறர் கூறி னும் கேளாத, (418, 808).

**கேளாதவர்** = கேட்க முடியாதவர், கேட்கப் பெறாதவர், (66).

**கேளாது** = கேட்காமல், கேட்க முடி யாமல், கேட்டு ஒப்புதல் பெறாது, (804); நீதி நெறி நூற்களைக் கடந்து சான்றோர், அறிஞர் அறி வுரைகளைக் கேளாது, (893).

**கேளார்** = கேட்டாலும் ஏற்றுக் கொள்ளாதவர், (643).

**கேளிர்** = உறவு முறைகள்; சுற்றத் தார், (187, 615); தலைவர், காதலர், (1267).

**கேள்** = நண்பர், (808, 882); காதலர், (1222).

**கேள்வி** = கேட்கக் கூடிய அறி வுரைகளைப் படித்தவர் களிடம் கேட்டறிந்துக் கொள்ளல். கேள்வி என்பது திருக்குறளில் வரும் 42-வது அதிகாரமாகும். சான்றோர், ஆன்றோர், பெரி யோர், ஞானிகள், அருளாளர் கள், அறிவுடையார் அனைவரிட மும் கேட்டறிய வேண்டியவை களைக் கேட்டு அறியாமையை அகற்றிக் கொள் வதற்காக, அறிவுடைமை பெறுவதற்காக கேள்வி என்ற அதிகாரம் உள்ளது. அதுவும் கல்லாமைக்கு அடுத்து, இந்த வினா எழுப்பு கின்ற அதிகாரம் வைக்கப் பட்டிருப்பதால், படித்தவர் களன்றி படியாத மக்களும் கேள்வி கள் மூலம் அறி வுடைமை பெறல் வேண்டும் என்பது திருவள்ளுவர் ஆசை யாகும்.

**கேள்வியர்** = கேள்வி கேட்கும் திறனுடையவர், (419).

**கேள்வியவர்** = கேள்வியை உடை யவர்; பெற்றுள்ளவர், (418).

# கை

**கை** = உடலில் ஓர் உறுப்பு, (64, 178); அளவு, (567); உரிமை ஒழுக்கம், (832); சிறுமை, (925); செய்யும் முறைமை, (836); கைத் தொழில், (935); குறிப்பு அளவு, (1271).

**கை அல்லது** = தன்னால் வெறுக்கப் பட்ட, தனக்குப் பிடிக்காத, (832).

**கை அறியாமை உடைத்தே** = செய்வது என்ன என்று அறியாத அறியாமை, (925).

**கை இகந்த தண்டம்** = *தண்டனை அதிகமானது; மிகுந்த தண்டம், (567).*

**கை இகந்து** = *கை வரம்பு தாண்டி, (1271).*

**கைகளை** = *கைகளை, (1238).*

**கை கூடும்** = *வெற்றி பெறும், இயலும், (269); அனுகூல மாகும், (484).*

**கை செய்து** = *தம் கைகளால் பயிர் செய்து, உழுது, (1035).*

**கை தூவேன்** = *கை ஓய்ந்தாலும் விடாமல் முயற்சி செய்வேன், (1021).*

**கைத்து** = *கைப் பொருளாக, (593); கையிடத்தே, (758).*

**கைப்ப** = *வெறுக்குமானாலும், (389).*

**கைப் பொருள்** = *கையிலே உள்ள பொருள், (178).*

**கை மடங்கின்** = *உழவுத் தொழிலைச் செய்ய முடியாமல் விட்டு விட்டாராயின், (1036).*

**கைம்மாறா** = *அதற்கு மாறாக, (1183).*

**கைம்மாறு** = *பிரதி உதவி, (211).*

**கையர்** = *கைகளைப் பெற்றவர்கள், (1077).*

**கையறியா** = *கை அறிய மாட்டாத, (836).*

**கையறியாமை** = *செய்ய அறிய மாட்டாமை, (925).*

**கையால்** = *கை காட்டி, (894).*

**கையாறு** = *துன்பம், (627).*

**கையும்** = *சூது ஆடும் கைத் திறமையையும், (935).*

**கையுள்** = *கையகத்து, (828).*

**கைவிடல்** = *தொடர்பறுதல், (450, 1245).*

**கைவிடுக** = *கை விட்டு விடுக, ஒழித்து விடுக, (928).*

**கைவிடுவார்** = *கை விட்டு நீங்குவார், (799).*

**கைவேல்** = *கையிலே பிடித்த வேலாயுதம், (774).*

# கொ

**கொக்கு** = *பறவை இனத்தில் ஒன்றான கொக்கு, (490).*

**கொடிது** = *கொடுமையான செயல் களின் தன்மைகள், (279, 551).*

**கொடிய** = *கொடுமையான, (1169).*

**கொடியர்** = *கொடூரமானவர்கள், (1236).*

**கொடியார்** = *கொடுமை செய் பவர்கள், (1169, 1217, 1235).*

**கொடிறு** = *கன்னக் கதுப்பு, தாடை, (1077).*

**கொடு** = *கொம்பு விட்டுக் கொம்பு, கொண்டு, (1264).*

**கொடுக்கும்** = *காட்டும், (924).*

**கொடுங்கோன்மை** = *நீதி நெறியில் அரசன் தவறி ஆட்சி செய்யும் தன்மை, (56).*

திருக்குறள் பொதுமறையில் உள்ள 56-வது அதிகாரம் கொடுங் கோன்மை. செங்கோன்மை அதி காரத்திற்கு அடுத்தபடியாக, அதி கார வைப்பு அமைந்துள்ள இது, உலக சிந்தனைக்குரிய விதி.

மன்னன் என்பவன் நீதி வழங்காமை, மக்களிடம் அன்பு பாராட்டாமை, தன்குடை கீழ் வாழ்வோரை மனித நேயப் படிக் காவாமை, குடிமக்களது குறை நிறைகளை ஆராயாமை, கேளாமை, நடவடிக்கை எடுக்காமை, துன்பமுற்ற மக்களது துயர்கள் துடையாமை, நடுவு நிலைமை பேணாமை, கொலை, கொள்ளை களவு, குடி போதைகள், கற்பு ஓம்பல் போன்றவற்றைக் காலத் தோடு கண்ணோடி நடவடிக்கைகள் எடுக்காமை போன்ற கொடிய செயல்களை ஆட்சியிலே அமர்ந்தவர்களது ஆட்சிப் பெயரால் நடவாதிருக்க வேண்டும் என்பதைப் பற்றிக் கடுமையாகக் கூறும் அதிகாரம் இது.

**கொடுத்து** = வழங்கி, தந்து, *(700, 794, 867, 925)*.

**கொடுத்தும்** = நற்குடி பிறந்த நாணமுடையவனை எத்தகையை விலைபொருளை யும் கொடுத்தும் ஒருவன் பெற்றுக் கொள்ளல் வேண்டும், *(794)*.

**கொடுப்பது** = ஒருவன் மற்றவனுக்கு உதவியாக, இரங் கிக் கொடுப்பதை, *(166)*.

**கொடுப்பதூஉம்** = தருவதும், *(1005)*.

**கொடுமை** = கருணையற்ற செயல், *(1168)*; தீமைச் செயல்கள், *(1235)*.

**கொடும்** = வளைந்த, *(1086)*.

**கொடை** = அன்பளிப்பாக மன மகிழ்ந்து வாரிக் கொடுக்கும் செயல், *(390)*.

**கொடையான்** = கொடை கொடுப் பவன், *(526)*.

**கொட்க** = வெளிப்பட, புலப்பட, *(663)*.

**கொட்கில்** = கொட்டுதல் என்றால் வெளிப்படுதல், புலப்படுமானால், *(663)*.

**கொட்பு** = வேறுபாடு, *(789)*.

**கொண்கன்** = கணவன், கொழுநன், *(1186, 1266, 1285)*.

**கொண்ட** = சேர்த்துக் கொண்டவை, *(659)*; தன்னகத்தே கொண்ட, *(745)*.

**கொண்டவன்** = பெற்றவன், பூண்டிருந்தவன், *(307)*.

**கொண்டனள்** = கொண்டவளாயினாள், *(1315)*.

**கொண்டற்று** = கொண்டது போல, ஊர் முழுவதும் தூற்றல் மொழிகள் அலறின, *(1146)*.

**கொண்டார்** = கையில் வைத்திருப்பவர், *(253)*; செய்யப் பட்டவர், *(1195)*; கொண்ட காதலவர், *(1205)*.

**கொண்டாரின்** = மேற்கொண்டு ஒழுக்கமாக நடந்து கொண்டிருப் பவரைவிட, *(351)*.

**கொண்டான்** = கணவன், *(51, 56)*.

**கொண்டு** = கொண்டால், அறிந் தால், *(22)*; மேற்கொண்டு, *(326, 551)*; கைக் கொண்டு, *(874, 921, 974, 1095, 1146)*; கொண்டு வந்து, *(1082)*.

**கொண்டு ஒழுகின்** = தீய வழியில் செல்லாமல் பாதுகாத்துக் கொண்டு நடப்பது, *(974)*.

**கொம்பர்** = மரக்கிளை, *(476)*.

**கொலை** = கொல்லும் செயல், கொலைத் தொழில், *(325, 329, 551, 1224)*.

**கொலைக் களம்** = அரசு அதிகாரத் தால் கொல்லும் இடம், *(1224)*.

**கொலையின்** = கொலை செய்து, *(550)*.

**கொல்** = அசை நிலை, (2, 28, 211, 345); கொலை, (735).

**கொல்ல** = நெருக்க; வருத்த, (1078).

**கொல்லா** = கொலை செய்யாத, (984).

**கொல்லாது** = கொலை புரியாது, (256).

**கொல்லாமை** = கொலை செய்யாமை, (254, 321, 323, 324, 325, 326).

**கொல்லான்** = கொலை செய்யாதவன், (260).

**கொல்லி** = கொல்லுவது, (306).

**கொல்லும்** = கெடுக்கும், (304, 532); அழித்து விடும் துன்பங்களை வருவிக்கும், (305); கைகளை வாட்டி வருத்தும், (879).

**கொழுநன்** = கணவன், (55).

**கொள** = கொண்டு, (1244).

**கொளப்பட்டேம்** = விரும்பப் பட்டோம்; கை கொள்ளப் பட்டோம், (699).

**கொளலின்** = அடைவதைவிட, (450).

**கொளல்** = பெறுதல், (134); இரத்தல், (222); அழிக, (279); கொள்க, (442); துணைக் கொளல், (504); கொள்ளு தல் வேண்டும், (445); நன்கு கொள்ளுதல் வேண்டும், (714); மதிக்க, (702); கொள்ளற்க, (720); விலை கொடுத்து வாங்குதல், (925); ஏற்றுக் கொள்ளுதல், (986).

**கொளற்கு** = பகைவர் கொள்ளுதற்கு, (745).

**கொளினும்** = கொண்டாலும், (872).

**கொளின்** = கொண்டால், (630, 836, 939).

**கொளீஇ** = மேற்கொள்ளச் செய்து, (93 8).

**கொள்க** = அடைக, பெறுக, (161, 875).

**கொள்கலம்** = பாண்டம், இடு கலம், (1029).

**கொள்கை** = விரதங்கள், நோன்புகள், கோட்பாடு, (899); ஒழுக்கம், (1019).

**கொள்பவர்க்கு** = கொண்டு ஒழுகு பவர்களுக்கு, (981).

**கொள்பவன்** = கொள்ளும் அவன், (873).

**கொள்வது** = முயல்வது, (262); செய்வது, (1055).

**கொள்வாரோடு** = அறிவார் களோடு, (704).

**கொள்வு** = கொள்வது, (1187).

**கொள்வேம்** = பெறுவோம், (282); அவரது தன்மையைக் கைக் கொள்வோம், (976).

**கொள்ளப்பட்டேம்** = நன்றாக மதிக்கப்பட்டோம், (699).

**கொள்ளலாகும்** = திரும்பவும் கற்றுக் கொள்ளலாம், (134).

**கொள்ளற்க** = கொள்ளாது ஒழிக, (798, 827, 872).

**கொள்ளா** = கொள்ள முடியாத, அடங்காத, (1064).

**கொள்ளாக் கடை** = கொள்ளாத விடத்து, (1195).

**கொள்ளாத** = பொருந்தாத, (470); விரும்பாத, (699).

**கொள்ளாதான்** = அடையாதவன், (792).

**கொள்ளாது** = ஏற்றுக் கொள் ளாது, (470, 627, 1016).

**கொள்ளார்** = ஏற்றுக் கொள்ளார், (404).

**கொள்ளும்** = அடைகின்ற, (1072).

**கொற்றம்** = வெற்றி, (583).

**கொன்ற** = கெடுத்த, அழித்த, (110).

**கொன்றது** = கொலை செய்வது போல் துன்பம் தரும், (1048).

**கொன்றாங்கு** = கெடுக்குமாறு போல, (532).

**கொன்றார்க்கு** = அழித்தவருக்கு, (110).

**கொன்றிட** = வெட்டிச் சாய்க்க, (1030).

**கொன்று அன்ன** = கொன்றால் ஒத்த, (109).

# கோ

**கோடல்** = கொள்ளுதல், (646); கொள்க, (678).

**கோடா** = கோடாது, வளையாது, நேராக, (1086).

**கோடாது** = கோணலாகப் போகாது, (520, 546).

**கோடாமை** = நடுவு நிலையில் தவறாமை, (115); சாயாமை, (118) கோணாது கடமைகளைச் செய்ய, (520).

**கோடி** = நூறு நூறாயிரம், (337, 377, 639); தவறி, (554, 559); கோடி மடங்கு, (816, 817, 954).

**கோடியும்** = கோடி அளவு மல்லாமல், (337).

**கோடு** = வளைவு உடையது, (279); கரை, (523); மரக்கிளை, (1264).

**கோடு கொடு ஏறும்** = கோடு கொண்டு ஏறும், கொம்பு விட்டுக் கொம்பு, மரக்கிளைகள் மேல் ஏறிப் பார்க்கும், (1264).

**கோட்டது** = கொம்பினை உடையது, (599).

**கோட்டம்** = கோணலை உடையது; கோணல், (119).

**கோட்டி** = சபை, (401); அவை, பேச்சு, (720).

**கோட்டி கொளல்** = அவையில் ஒன்றைப் பேசுதல், (401).

**கோட்டுப் பூ** = வளைவாகத் தொடுக்கப்பட்ட பூமாலை; மரக் கிளைகளிலுள்ள மலர்களால் தொடுத்த பூவாரம், (1313).

**கோமான்** = தலைவன், மன்னன், (25).

**கோல்** = துலாக்கோல், எடைக் கோல் (118); செங்கோல், (390); ஊன்று கோல், (415); கொடுங்கோல், (552, 558, 570); முறை செய்யும் கோல், (543, 546, 554); அளவு கோல், (710, 796); கண்ணுக்கு மை தீட்டும் கோல், (1285).

**கோல் கோடி** = நீதி தப்பி, (554).

**கோள்** = கொள்ளுதல், (9, 220, 780, 1059); துணிவு, (311, 312, 646, 652).

**கோள் இல்** = தத்தமதுக்குரிய புலன்களைக் கிரகித்து அறிய மாட்டாத, (9).

**கொள்வாரோடு** = அறிய முடிந்தவர் களோடு, (704).

**கோறல்** = கொல்லுதல், (254, 321).

**கோன்மை** = ஈகையை உடைமை, ஆட்சியை உடைமை, (அதி காரம் 55).

['செங்கோன்மை' என்ற இந்த அதிகாரம் திருக்குறளில் 55-வது தாக உள்ளது. வேந்தன் என் பவன் அன்பு, ஆதரவு, பற்று, பதவி, வலிமை, வளம் ஆகிய வற்றின் காரணமாக, அவ் வேந்தன் யார் பக்கமும் சாராமல் ஆட்சி என்ற செங்கோலை ஏந்தி மக்கள் போற்றி மகிழுமாறு செம்மையாக முறை செய்தல் செங்கோன்மை எனப்படும்].

# கௌ

**கௌவை** = பழி தூற்றும் வார்த்தைகளை வாரி வீசுவது, (1143); அலர் தூற்றும் பழிச் சொற்கள், (1147); ஊர் மக்கள் தூற்றும் பழிச் சொற்கள், (1150).

**கௌவையால்** = காதல் உணர்வை அழிக்கும் அலர் தூற்றுதலினால், (1148).

# ச

**சமன்** = ஒத்த நிலை, (118).

**சமன் செய்து** = தாம் சமனாக முதலில் நின்று, (118).

**சலத்தால்** = வஞ்சகத்தால்; தீயச் செயல்களால், (660).

**சலம்** = வஞ்சனை, (956).

# சா

**சா** = இறக்கும்படியாக, (824).

**சாகாடும்** = வண்டியும், (475).

**சாகிற்பின்** = இறந்து போக முடியுமானால், (78).

**சாக்காடு** = இறப்பு, மரணம், சாவு, (235, 339, 780).

**சாதல்** = இறத்தல், (183, 1244).

**சாதலின்** = இறத்தலின், (230).

**சாம்துணையும்** = சாகும் வரையிலும், (397).

**சாய** = அழியும்படியாக, (749).

**சாயல்** = உடலழகு; **'உடலின் மென்மை' என்பது மணக்குடவர் கருத்து,** (1183).

**சாய்தல்** = நீக்குதல், ஒழிதல், (858).

**சாய்ந்து** = ஒழிந்து, எதிர்த்து, (855).

**சாய்பவர்** = அறிவு தளர்ச்சியால் மயங்குபவர், (927).

**சார** = நிற்க, (323).

**சாரா** = பொருந்தாத, படாத, (194); சேராத, (815, 1047).

**சார்தரா** = சார மாட்டா, (359).

**சார்தரும்** = சாரக்கூடிய, (354).

**சார்பில** = பெருந்தன்மைக்கு ஒத்து வராத செயல்களை, (956).

**சார்பு** = துணை - அரண், (76, 359, 449); படை, பொருள், நட்பு, (900).

**சார்புகெட** = பற்று அற, (359).

**சார்வாய்** = துணையாய், (15).

**சார்வு** = துணையாதல், (15).

**சால** = மிக அதிகமாக, (475, 770, 1037); மிகவும், விளங்கும், (1233).

**சாலப்படும்** = மிக நன்றாக வளத்தோடு பயிர் வளரும், (1037).

**சாலும்** = அமையும், போதுமானதாகும், (25); கேடுகளை உண்டாக்கப்போதும், (165); பொருந்தும், (1060).

**சால்பிற்கு** = நற்பண்புகள் உள்ளமைக்கு, (986).

**சால்பின்** = பெருந்தன்மைக் குண அளவு, (105).

**சால்பு** = நற்குணங்கள், (956, 983, 984, 987, 988, 1013, 1064).

**சாவா மருந்து** = மரணமின்மைக்குரிய மருந்து, அமிழ்தம், தேவர்கள் உணவு, (82).

**சாவாரை** = இறக்கப் போகின்றவர்களை, (779).

**சாவார்** = உயிர்விட வல்லவர், (723).

**சாற்றுவேன்** = கூறுவேன், (1212).

**சான்ற** = தன் புகழையும் காத்து, நிறைந்த புகழ் மிக்க, (56, 581, 1001).

**சான்றவர்** = சான்றாண்மையுடையவர்கள், (990).

**சான்றாண்மை** = நல்ல குணங்களும், நல்ல செயல்களும் நிறைந்திருப்பவர்கள், (99)

**சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார்** = 'சான்றாண்மை என்ற கடலுக்குக் கரை போன்ற அறிவுடையார் **பரிமேலழகர் உரை.**

சான்றாண்மைக்கு ஒரு கடலென்று மற்றவர்களால் மதிக்கப்படுபவர்கள்-**பழைய உரை.**

'சான்றாண்மையாகிய கடலுக்கு, கரையென்று சொல்லப் படும் சான்றோர்கள் **நாவலருரை.**

'சான்றாண்மையாகிய கடலுக்கு கரை எனப்படுவார். அந்தக் கடலும் காலவேறுபாட்டால் கரை கடந்தாலும், சான்றாண்மை மிக்கவர்கள் தாம் வேறுபட மாட்டார்கள்'' என்று **திருக்குறளார் முனிசாமி உரை** கூறுகின்றது, (989).

**சான்று** = நற்குணங்களால் நிரம்பி, (981, 989, 990).

**சான்றோர்** = உலகறிவு, நூலறிவு, ஒழுக்க உணர்வறிவு, மனித நேய அறிவு, அனைத்தும் நிறைந்தவர், (197, 656, 657, 802, 840, 923, 982, 985, 1078).

**சான்றோர்க்கு** = நற்குணமும், நற்செயல்களும் நிறைந்த பண்புடையோர்க்கு, (115, 118, 148, 299, 328, 458, 1014).

**சான்றோர் முகத்து** = சான்றோர் முகத்துக்கு எதிரிலேயே களித்தல், (923).

**சான்றோன்** = கல்வி கேள்விகளால் முதிர்ந்த வைர மேறிய பன்னூல், ஒழுக்க அறிவாளன், (69).

# சி

**சிதைக்கலாதார்** = சீரழிக்க மாட்டார் தவர்கள், கெடுக்க மாட்டாதவர் கள், (880).

**சிதையாமல்** = சிறப்பாக உள்ள உருவம் அழியாமல், (578).

**சிதைவிடத்து** = மனச்சோர்வு அல் லது தளர்ச்சி வந்தவிடத்து, (597).

**சிதைவின்றி** = அழிவின்றி, (112).

**சிமிழ்த்து** = பிணித்து; **சிமிழ்தல் என் றது அவன் வாய்மேல் விரல் அது பட விளித்தல் என்கிறார் காளிங்கர்.**

**சிவிகை** = பல்லக்கு, கவிகை, (37).

**சில** = சில வகையான சொற் களால், (649).

**சிலர்** = சிறு எண்ணிக்கையினர், (649).

**சிறக்கணித்தாள்** = கண்களைச் சுருக்கிக் கொண்டவள் போல, (1092).

**சிறந்த** = மிகுதியாக, (531).

**சிறந்தமைந்த** = சிறந்த பெருமை களைப் பெற்ற பெரியோர்கள், (900).

**சிறந்தான்** = நண்புக்கு நல்லவன், அன்புடையான், (515).

**சிறந்து** = சிறப்பாகத் திகழ்ந்து, (900).

**சிறப்பின்** = உயர்வின், (961).

**சிறப்பீனும்** = மிக செல்வாக்கைத் தரும், உயர்வைக் கொடுக்கும், (311).

**சிறப்பு** = வீடுபேறு, வானுரை தெய்வ நிலை, (31, 358); மதிப்பு, பெருமை, (58, 74, 75); நன்வினைகளது இன்பம், (590, 630, 752); பொதுவல்லாதது, அதாவது பெருமை, சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள், (972); கல்வி, செல்வங்களால் பெற்ற சிறப்புகள், (977); நாணு டைமைச் சிறப்பு, (1012).

**சிறப்பென்னும்** = சிறப்பு என்னும் வீடுபேற்றுக்குக் காரணமாகிய, (358).

**சிறப்பொடு** = கோலாகல விழா வோடு, (18); மதிப்பும், (195).

**சிறிது** = சிறியது, (102); சிறிய தாக, (412, 1075, 1301, 1032).

**சிறிய சுருக்கத்து** = குறைந்த வறுமைக் காலத்து, (963).

**சிறியர்** = கீழானவர், (26).

**சிறியவர்** = கீழ் மக்கள், (815).

**சிறியார்** = சிறிதளவு உடையார், (680); அற்ப குணம் உடையவர், (976).

**சிறு** = இன்னாத, (1097).

**சிறுகாப்பின்** = காக்க வேண்டிய இடம் சிறிதாகிய, (744).

**சிறுகும்** = சுருங்கும், (568).

**சிறுகுவ** = சுருங்குவதற்குக் காரணமான செயல், சிறுமை யுள்ளவை, (798).

**சிறுதுனி** = கொஞ்ச காலமுள்ள வறுமைநிலை, (1010).

**சிறு நோக்கம்** = பாராதபோது பார்க்கும் சிறுபார்வை, (1092).

**சிறு பொருள்** = முயற்சி இல்லாமல் சுலபமாகக் கிடைக்கக் கூடிய சிறு பொருள், (870).

**சிறுமை** = குற்றம், துன்புறுத்தும் தன்மை, (98); காமம், (431);

சிறியவர், (451); படை தேய்ந்து குறைந்து சிறிய தாதல், மன்னன் செய்யும் அவமதிப்பு, (769); துன்பம், (934); சிறுமையுடையார், (978, 980); சிறிய தன்மை, (979); துயர், (1231).

**சிறுமைக்கு** = தீய பண்புகளால் சிறியவனாவதற்கு உண்டாகும் சிறுமைத் தனம், (505).

**சிறுமைத்து** = மிகச் சிறிய அளவை யுடைய, (889).

**சிறுமையுள்** = நோய் செய்யும் தன்மையுள், (98).

**சிறை** = அடைத்து வைக்கும் இடம், (57); அரண், (499, 569).

**சிற்றினஞ்சேராமை** = [திருக் குறளில் வரும் 46-வது அதிகாரம் இது. தீமைகள் பல வகைக் குற்றங் களுக்குக் காரணமாக அமையும். அத்தகையக் குற்றங்களைச் செய்பவர்களோடு, சிந்தனை யாலும், அறிவாலும், பண்பாலும் செயலாலும் சேராதிருத்தலே சிறந்ததாகும். காரணம், இவர்கள் சிற்றினம் என்பவர்களாவர். இழிந்தக் குணங்களும் செயல் களும் உடைய இத்தகையாரைச் சிற்றினம் என்று கூறுவர் சான் றோர்கள். அவர்களோடு சேரா மையே சிறந்தது என்பதற்கான அறிவுரைகள் கூறும் பகுதி இது].

**சிற்றின்பம்** = நிலையற்ற சிறுசிறு இன்பம், (173).

**சினத்தாற்றி** = தவறு நேரும் போது, சினத்தைச் செலுத்தி, (568).

**சினத்தான்** = கோபங் கொண்டவன், (866).

**சினத்தின்** = வெகுளியைவிட, கோபத்தைவிட, (304).

**சினத்து** = வெகுளியாகிய குற்றத் தின், (568).

**சினத்தை** = கோபத்தை, வெகுளியை, (307, 310).

**சினம்** = கோபம், (301, 431).

**சினைப்பது** = உண்டாவது போலத் தோன்றி, (1203).

# சீ

**சீரல்ல** = தம் குடிப்பெருமையைச் சீரழிக்கார், (962).

**சீரல்லவர்** = பெருமைக்குத் தகுதி யற்றக் கீழ் மக்கள் (977).

**சீரழிக்கும்** = புகழைச் சீர் குலைத்து விடும், (934).

**சீரார்** = சிறப்புடையவர், ஆன்மீகப் பெரியோர்கள், (900).

**சீரிடம்** = வாய்ப்பான இடம், தகுந்த இடம், (821).

**சீரினும்** = புகழ் தேடுமிடத்தும், (962).

**சீர்** = அளவு, (118); சிறப்பு, ஆற்றல் பெருமை, (499); வீரம், (778); புகழ், (934, 962, 977).

**சீர் குன்றல் இலர்** = வீரம் குன்றாத இயல்புடையவர்கள், (778).

**சீர் தூக்கும்** = நிறுத்து அளக்கும், (118); அளந்து பார்க்கும், (813).

**சீர்த்தவிடத்து** = காலம் வந்த விடத்தில், (490).

**சீர்மை** = சிறப்பு, (123); மதிப்பு, ஒழுக்கம், (490).

**சீறின்** = சினம் கொண்டு சீறினால், (568, 899).

# சு

**சுடச்சுட** = நெருப்பிலிட்டுச் சுடச் சுட, துன்பம் வருத்த வருத்த, (267)

**சுடரும்** = ஒளிவிசும், மாசுகள் கருகி விடும், (267).

**சுடல்** = சுடுதலை, (1159).

**சுடின்** = சுட்டால், சுடும், (1159).

**சுடும்** = வாட்டி வருத்தும், (293); சுட்டுக் கொல்லும், (306); வெதுப்பும், (799, 1207); கெடுக்கும், (1019).

**சுட்ட** = எரித்த, (129).

**சுதை** = சுண்ணாம்பு, (714).

**சுமக்க** = தலையினால் தாங்குக, பணிக, (488).

**சுருக்கத்து** = வறுமை ஏற்பட்ட போது, (963).

**சுவை** = ருசி, (27, 253, 420).

**சுவைபட** = ருசி உண்டாக, (253).

**சுழலும்** = பூமியைச் சூழ்ந்து நிற்கும், (777).

**சுழன்றும்** = ஒவ்வொரு தொழிலி லும் சுழன்று செய்து அலைந்து திரிந்தும், (1031).

**சுற்றத்தார்** = உறவின் முறையினர், சுற்றத்தார், (521).

**சுற்றப்பட** = சூழ்ந்திருக்கும் சூழல், (524).

**சுற்றப்படும்** = சூழப்படுவான், (525).

**சுற்றம்** = சுற்றத்தார், உறவினர், அக்கம்பக்கம் குடியிருப்பவர், (166, 451, 522, 529, 584, 1025).

**சுற்றம் ஆ** = உறவினராக எண்ணி, (1025).

**சுற்றம் தழாஅல்** = உறவின் முறை களைத் தழுவுக. இது திருக் குறளில் வரும் 53-வது அதி காரம். சுற்றம் தழால் என்றால், ஒருவன் தன்னைச் சுற்றியுள்ள வர்களிடம் அன்பாகவும், அலுவல் காரணமாகவும், உறவுடனும் தழுவி நிற்கின்ற உறவின் முறையார்களை எந்தக் காரணத்தாலும் தன்னை விட்டுப் பிரியாமல் சிறந்திட அவர்களைத் தழுவிக் கொள்வதே சுற்றந் தழாலாகும்.

**சுற்றும்** = சூழ்ந்து கொள்பவர்கள், (1025).

# சூ

**சூடினீர்** = சூடிக் கொண்டிருக்கிறீர், அணிந்துக் கொண்டிருக்கின்றீர், (1313).

**சூதர்க்கும்** = சூதாடிகளுக்கும், (932).

**சூதினை** = சூதாட்டத்தை, (931).

**சூதின்** = பிறர் பொருளை வஞ்ச கத்தால் கவர்ந்து, அறம், பொருள், இன்பங்களை

இழக்கக் காரணமாக விளங்கும் ஒரு வகை பஞ்சமா பாதக விளையாட்டுக்களில் ஒன்றான சூதாட்டத்தை, (934).

**சூது** = சூதாட்டத்தால் உண்டாகும் குற்றங்கள், (94, 936, 938).

இது திருக்குறளில்வரும் 94-வது அதிகாரமாகும். ஒருவன் தன்னு டைய செல்வம், செல்வாக்கு, சொல் வாக்கு, குடிப்பெருமை, அரும் புகழ், நேரம், சிந்தனை, மதிப்பு, மரியாதை, அறம், பொருள், இன்பம், அருமை களை இழக்காமல் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதால் இது பற்றிய தீமைகளை அதன் விளைவுகளை இந்த அதிகாரத் தில் திருவள்ளுவர் பெருமான் கூறுகிறார்.

**சூதே போல்** = சூதாட்டத்தைப் போல, (940).

**சூழ** = நினைக்க, எண்ண, (176).

**சூழற்க** = எண்ணாமல் விடுக, நினைக்கற்க, (204).

**சூழாது** = சிந்திக்காமல், ஆராய்ந்து பார்க்காமல், (465, 554).

**சூழின்** = ஒருவேளை நினைப் பானானால், (204); ஆராய் வானானாலும், (380).

**சூழும்** = எண்ணும், எண்ணிவிடும், (204, 324).

**சூழ்ச்சி** = ஆலோசனை செய் தால், ஆய்வு செய்தால், (671).

**சூழ்ந்தவன்** = நினைத்தவனுக்கு, (204).

**சூழ்ந்து** = எண்ணிய செயலை; தெரிந்து வைத்திருந்தும்; ஆராய்ந்து தனக்குத் துணை யாக, (445); ஆராய்ந்து பார்க் கின்ற, (461, 640).

**சூழ்ந்துவிடும்** = எண்ணித் துணியும், சூழ்ந்து கொள்ளும், (451).

**சூழ்வது** = அவர் கைவிட எண்ணிய குறிப்பை, நினைதல், (1276).

**சூழ்வாரை** = சூழ்ந்துள்ள; அமைச் சரை, (445).

**சூழ்வார்** = கலந்து எண்ணப் போகின்றவர்கள், (445); எண்ணுபவர், (1294).

**சூழ்வான்** = போற்றுகின்றவன், (325).

# செ

**செகுத்து** = கொன்று, (250).

**செத்தாரின்** = மரணமடைந் தவரைக் காட்டிலும், (926).

**செத்தாருள்** = இறந்தவர்களுள், (214).

**செத்தான்** = இறந்தவன், (1001).

**செப்பம்** = நடுவு நிலைமையும், (112, 119); ஒருசேர அமை யும், 951).

**செப்பின் புணர்ச்சி போல்** = கிண்ண மும் மூடியும் ஒன்று சேர்ந் திருப்பது போல, (887).

**செப்பு** = நீரருந்தும் செம்பு அல்லது கிண்ணம், சிமிழ், (*887*).

**செம்பாகம்** = நடுநிலை, சரி பாதி, நேர் பாதி, (*1002*).

**செம்பொருள்** = அறத்தினை, (*91*); உண்மைப் பொருள், கடவுள், (*358*).

**செம்மல்** = அகம்பாவத்தை, செருக்கை, (*880*).

**செம்மாக்கும்** = இறுமாக்கும், செருக்குவான், (*1017*).

**செய** = செய்வதற்கு, (*1021*).

**செயக்கிடந்து** = செய்யக் கூடியது, (*446*); செய்வதற்குரியது, (*1001*).

**செயப்பட்டார்** = உதவி செய்யப் பட்டவர், (*105*).

**செயலின்** = செய்தலைவிட, (*679*).

**செயல்** = செய்யும் செய்கைகள், செய்க, (*33, 333, 461, 471, 489, 516, 518, 637, 668, 673, 675, 676, 948, 949*); செய்தல், (*316, 318*).

**செயல் ஆற்றும்** = செய்து கொள்ளத் திறனுடைய வனாவான், (*835*).

**செயற்கு** = செய்தற்கு, (*26*); உண் டாக்குவதற்கு, (*375*); செய்து கொள்வதற்கு, (*781*).

**செயற்கை** = செய்யத் தகுந்த செயல் கள், செய்கின்ற திறமை, (*637*).

**செயற்பாலது** = செய்யக் கூடியது, (*40*).

**செயன் முறை** = செய்கின்ற முறை, (*677*).

**செயிரில்** = குற்றத்தில் நின்றும், (*258*).

**செயிர்** = நோய், (*330*).

**செயிர்ப்பவர்** = பகைப்பவர், (*880*).

**செயின்** = செய்தால், (*104, 109*).

**செயும்** = செய்யும், (*219*).

**செய்** = செய்யப்படுவதாகிய, (*265*).

**செய்க** = செய்ய வேண்டும், (*36, 512, 669*); தேடிச் சேர்க்க, (*759*); செய்க, (*893*).

**செய்கலாதார்** = செய்ய மாட்டா தவர், (*26*).

**செய்கலான்** = செய்யான், (*848*).

**செய்கிற்பாற்கு** = செய்து முடிக்கும் திறனுடையவனை, (*515*).

**செய்கையும்** = செய்யும் வகையும், (*631*).

**செய்தக்க** = செய்யத்தக்க, (*466*).

**செய்தலின்** = செய்தலைப் பார்க் கிலும், (*182, 192*).

**செய்தற்கரிய** = முன்னே செய்வதற்கு அரியனவாயிருந்த வற்றை, (*489*).

**செய்தாங்கு** = தான் செய்தனவாக, (*803*).

**செய்திறந்த** = செய்துவிட்டுச் சென்ற, செய்து முடித்த, (*1275*).

**செய்து** = சேர்த்து, (*660*); நட் பாடிக் கொண்டாலும், (*815*).

**செய்தொழில்** = செய்கின்ற தொழில் கள், செய்யும் செயல்கள், (*972*).

**செய்ப** = செய்வர், (*1195*).

**செய்யப்படும்** = செய்தல் வேண்டும், (*335*).

**செய்யப்பட்டார்** = பெற்றுக் கொண்டவரது, அல்லது உதவி செய்யப்பட்டாரது, (*105*).

**செய்யல** = செய்யமாட்டா, (*1086*).

**செய்யவள்** = செல்வி - திருமகள் என்றும் கூறுவர், (*167*).

**செய்யற்க** = செய்யாமல் விடுக, (*205, 206, 327, 590, 655, 656*).

**செய்யாக்கால்** = செய்யாமல் போனால், (*987*).

**செய்யாது** = செய்ய முடியாமல், (*219*); வாய் திறவாது, (*255*); செய்யாமல், (*437, 538*).

**செய்யாது அமைகலா ஆறு** = செய்ய முடியாமல் வருந்து வதற்குரிய பண்படையாள மாகும், (219).

**செய்யாமல்** = ஓர் உதவியை முன் கூட்டியே செய்யாமலிருக்க, (101); எந்தவிதமான ஒரு துன்பச் செயலையும் முன்பே செய்யாதிருக்க, (313).

**செய்யாமை** = செய்யாதிருப்பது, (157, 261, 267).

**செய்யார்** = செய்யமாட்டார், (164).

**செய்யாவிடல்** = செய்யாது விட்டு விடல், (203).

**செய்யாள்** = செல்வத்திற்குரிய செல்வி; பெண் தெய்வம் பெயரால் திருமகள் என்பாரும் உண்டு, (84).

**செய்யான்** = செய்ய மாட்டான், (210); செய்யாதவன், (865).

**செய்யின்** = செய்தால், (157).

**செய்யும் நீர** = செய்ய வேண்டிய கடமைகளை, (219).

**செய்வாரின்** = செய்வாரைக் காட்டிலும், (295).

**செய்வானேல்** = தப்பித் தவறி ஒரு வேளை செய்து விடுவானே யானால், (655).

**செய்வினை** = செய்யும் வினை அல்லது செயல், (455); செய் கின்ற வினையை அல்லது செயலை, (677).

**செய்வேன்** = விருந்தளிப்பேன், (1211).

**செரு** = போர், (569).

**செருக்கி** = இறுமாந்து; கள்ளுண் டார் போல் களித்து, (916).

**செருக்கு** = செல்வம், மகிழ்ச்சி, பெருமிதம், மேம்பாடு, (180, 598, 613, 860); ஆணவம், அகம்பாவம், அகங்காரம், அகந்தைத் தினவு, (201, 431); அகந்தை, மயக்கம், (346, 759); ஒரு விதமான மயக்க கிறுகிறுப்பு, (844); கள்ளுண்ட போதைக் களிப்பு, (878, 1193).

**செல** = எளிதாகக் கூறி, (422); மனம் கொள்ளும்படி, (424, 686, 719, 722, 724, 728, 730).

**செலல்** = செல்கின்றது, செல் வதற்குக் காரணம், (1293).

**செலவிடாது** = போக விடாது, செல்ல விடாது, (422).

**செலவு** = செல்லுதல், (766).

**செல் இடத்து** = தனது கோபம் செல்லக்கூடிய, பலிக்கக் கூடிய இடத்தில், (301).

**செல்க** = செல்வானாக, (684).

**செல்கிற்பின்** = விரைந்து செல்லக் கூடியனவாக இருக்குமே யானால், (1170).

**செல்பவர்** = செல்கின்றவர், (1033).

**செல்லா** = செல்லாத, தனது கோபம் பலியாத, (302); உணவு செல்லாத - **மணக்குடவருரை.** வறுமை கூர்ந்த, (330), செய் யாத, (561); நீங்காத, (769); தொடர்ந் துப் போகாத, (1255).

**செல்லாதது** = முடியாதது, (472).

**செல்லாத் துனி** = எதனாலும் முடிவு பெறாத அரசு பிணக்கு; அரசினி டம் நீங்காத வெறுப்பு, (769).

**செல்லாமை** = பிரியாமை, (115).

**செல்லா வாழ்க்கை** = வறுமை மிகுந்த நோயுடல் வாழ்க்கையினர், (330).

**செல்லான் இருப்பின்** = நிலம் சென்று பாராதவனாக இருப்பின், (1039).

**செல்லிடத்து** = கோபம் பலியாத இடத்தில், (250).

**செல்லும் வாய்** = செய்யக்கூடிய இடம், (33); முடியக்கூடிய வழி, முயற்சி, (673).

**செல்வச் செவிலி** = பொருளெனும் செவிலித்தாய், (757).

**செல்வது** = எதிர்த்துப் போரிடப் போவது, (767).

**செல்வத்திற்கு** = மிக அதிகமான பொருளுக்கு, (178).

**செல்வத்துள் செல்வம்** = செல்வங்களிலெல்லாம் மேலான செல்வம், (241, 411).

**செல்வமும்** = செல்வத்தையும், (31).

**செல்வம்** = மிக்கப் பொருள், (31, 125).

**செல்வம் தகைத்து** = மற்றுமொரு தகுதியை பணக்காரர்களுக் குப் பெற்றுத் தரும், (125).

**செல்வரை** = பணமுடையவர்களை, (752).

**செல்வர்** = பொருளுடையவர், (731, 1010).

**செல்வாய்** = பின்னே செல்கின்றாய், (1248).

**செல்வார்** = போவார், (1185).

**செல்வான்** = செல்பவன், (950).

**செல்விருந்து** = உண்டு சென்ற விருந்தினர், (86).

**செவிக்குணவு** = காதுகளுக்கு உணவாகிய கேள்வி பதில், (412).

**செவிச்செல்வம்** = வினா, விடைகளால் கிடைக்கும் கல்விச் செல்வம், (411).

**செவிச் சொல்லும்** = அரசர் முன்பு மற்றவர் காதுகளில் ஏதாவது ஒன்றை மறைத்தும் மறைவாகவும் சொல்லுதல், (694).

**செவியிற்சுவை** = செவிச் சுவை ஒன்பது வகைகள். நவமணிகளை போல சுவைகளும் ஒன்பது. அவை; நகை, வீரம், கோபம், அச்சம், இழிவு, வியப்பு, அமைதி, காமம், அருள் என்பன, (420).

**செவிலி** = வளர்ப்புத் தாய், (757).

**செவ்வி** = காணத்தகுந்த நேரம், காலம், (130); காண வருவோர்க்கு முடியாதபடி, (565); நயத்தோடு நுகரும் இயல்பினை, (1289).

**செவ்விது** = செயலால் நன்மையுடையது, (279).

**செவ்வியராதலும் வேறு** = அறிவுடையாராதலும் வேறு, (374).

**செவ்வியான்** = நல்ல மனமுடையவன், நல்ல உள்ளம் உள்ள நல்லவன், (169).

**செறப்பட்டவர்** = கோபிக்கப்பட்டவர், (895).

**செறா அ** = இனிய, (1097).

**செறா அச்சிறு சொல்** = துன்பம் பயக்காத கடுமையான சிறு சொல்லும், (1097).

**செறா அ அய்** = தூர்க்க முயல்வாயாக, (1200).

**செறா அர்** = சினமடையாதவர், (1096); கோபப்பட மாட்டாதவர், (1292).

**செறிதொடி** = நெருங்கிய வளையல்களை அணிந்த காதலி, (1275).

**செறிதோறும்** = சேரச்சேர, இன்பத்தை நுகரும் தோறும் நுகருந்தோறும், (1110).

**செறிவு** = அடக்கம், (123, 715); கூட்டம், (684).

**செறின்** = கோபப்படுவார்களானல், (778, 897, 900).

**செறு** = அழிக்கின்ற, (734).

**செறுபகை** = தாக்கி அழிவு செய்யும் பகை, (734).

**செறுநர்** = பகைவர், (488, 759).

**செறுப்ப** = அடக்கியபோது, அடக்கிக் கொள்ள, (1318).

**செறுவார்** = பகைவர், (203, 421, 843, 869).

**செறுவார்க்கு** = தம்மை வருத்து கிறவர்களுக்கு, (203); பகைவர், (421, 849, 869).

**செற்றவர்** = என்னை விட்டு அகன்று சென்ற காதலர், (1256).

**செற்றார்** = பகைவர், (446, 1097); வெறுத்தார், (1245).

**செற்றார்க்கும்** = பகை கொண் டாருக்கும், (313).

**செற்றார் பின்** = பிரிந்து சென்ற பகை வருக்குப் பின்னால், (1255).

**செற்று** = கெடுத்து, (168); அடக்கி, (335); வருத்திக் கொண்டு, (1009).

**சென்ற** = சென்ற, (422, 1261).

**சென்று** = சென்றேன்; போனது, (1284).

**சென்று நிலை** = சென்று நிற்கும் நிலை, (966).

**சென்று வந்தற்று** = போவதும் வருவதும் போன்ற தன்மை யைப் பெற்றிருப்பது, (1058).

**சென்றேன்** = போனேன், சென்றேன், (1259, 1284).

# சே

**சே** = அழகிய, சிவந்த, (1110).

**சேண்** = நெடுந்தூரம், (869, 1231, 1269).

**சேண் இகவா இன்பம்** = நீங்காமல் இருக்கும் மேலான இன்பம், (869).

**சேரா** = வந்தடைய மாட்டா, (5).

**சேராதார்** = இடைவிடாது நினை யாதவர், (10).

**சேராது** = சேராமல், (734).

**சேரின்** = சேர்ந்தால், (498).

**சேரும்** = சென்றடையும், (179).

**சேர்** = சேர்ந்த, பற்றி வருகின்ற, (5).

**சேர்ந்த** = செறிந்த, (243); அதிக மாகப் பெருகிய, (492); பொருந்திய, (694, 910).

**சேர்ந்த நகையும்** = சேர்ந்து சிரித் தாலும், தனியாக முகம் பார்த்துச் சிரித்தாலும், (694).

**சேர்ந்தாரைக் கொல்லி** = சேர்ந்தவர் களையும் கொல்லும், கோபம் என்ற நெருப்பு, (306).

**சேர்ந்தார்** = இடைவிடாது இறை வனை நினைப்பவர், (3).

**சேர்ந்தார்க்கு** = இடைவிடாமல் நினைந்துக் கொண்டே இருப் பவர்க்கு, (4, 7, 8).

**சேர்ந்தார்க்கு அல்லால்** = சேராதவர் களுக்கு, (7, 8).

**சேர்ந்து** = இணைந்து, கூடி, (492, 691); மனைவி ஏவல் கேட்டு நடக்கும் நிலை, (910).

**சேர்வது** = சேர்ந்திருப்பது, (731).

**சேயிழை** = சிவந்த இழை, அழகிய அணிமணி நகைகளை அணிந்தவள், (1110).

**சேறல்** = பின் செல்லுதல், (1256).

**சேறி** = செல்வாயாக, (1244); செல் கின்றாய், (1249,1292).

# சொ

**சொரிந்து** = ஊற்றி, (259, 718).

**சொரியினும்** = ஊற்றினாலும், கொட்டினாலும், (376).

**சொலல்** = சொல்லுதல், (139, 291, 647); சொல்லுக, (696).

**சொலவர்க்கு** = சொல்லையுடையவர்க்கு, (94).

**சொலன்** = சொல்லையுடையவன், (95).

**சொலால்** = இனிய சொல்லுடனே, தனது புகழ் வாய்ந்த சொல்லாற்றலாலேயே, (387).

**சொலிசை** = இனிய சொற்களது தன்மை, (93).

**சொலினும்** = சொன்னாலும், (96, 195, 1096).

**சொல்** = வார்த்தை, (65, 66); சொற்களை உண்டாக்குதல், (70); மற்றவர்களுக்கு நன்மை தரும் இனிய சொல், (97); அறிவுரை கூறுபவர்களது சொல், (389); பழிச்சொல், (184, 389); உரையாடிட, (402); அமைச்சரது சொல், (643); சினந்து கூறும் நெருப்புச் சொல், (1147).

**சொல் இழுக்குப்பட்டு** = இழுக்கிழைக்கும் குற்றமான சொற்களைக் கூறி, (127).

**சொல் சோர்வு படும்** = வீணான சொற்களாய், பயன்தரா சொல்லாக முடியும், (1046).

**சொல்ல** = வாழ்க்கையில் மெலிந்தவர் தனது குறைகளைக் கூற, (1078).

**சொல்லல்** = அவை தன்மையறியாமல் சொல்லுதல், (192,); துணிவாகச் சொல்லல், (634); சிலச் சொற்களை, (649); 713, 718).

**சொல்லற்க** = கூறா தொழிக, (184, 200, 719).

**சொல்லன்** = சொல்லையுடையவன், (386, 566).

**சொல்லா** = சொல்லாமல், (697); குற்றங்களைச் சுட்டிச் சொல்லாத, (984).

**சொல்லாட** = கொடு, தா என்று கேட்டு இரக்க, (1070).

**சொல்லாடார்** = அவரறியச் சொல்லார், (818).

**சொல்லாதார்** = சொல்ல மாட்டாதவர், (728).

**சொல்லாது** = உரையாடாது, (403).

**சொல்லாமை** = சொல்லாதிருத்தல், (197).

**சொல்லாய்** = சொல்லாமலேயே, (1241).

**சொல்லார்** = சொல்ல மாட்டார், (198, 199, 417).

**சொல்லான்** = அறிவால் நிறைந்து அமைந்த சொல்லுடையவனாக இருந்து, (635).

**சொல்லி** = அறிவித்து, உரைத்து, (187, 424, 646, 685, 686, 697, 724, 795, 1280).

**சொல்லினால்** = சொல்லால், (825).

**சொல்லினும்** = அறமற்ற சொற்களைச் சொன்னாலும், (197).

**சொல்லின்** = சொன்னால், (*184, 197, 826, 1046*); சொல்ல வேண்டு மாயின், சொற்களில், (200); சொல் லினது, (*711, 712, 713, 721*).

**சொல்லின் தொகை** = சொல்லின் வகை; வகைகளாவன செஞ் சொல், இலக்கணச் சொல், குறிப்புச் சொல், (*711, 721*).

**சொல் ஏர் உழவர்** = சொற்களை ஏராக உடையக் கற்றறிந்த புலவர்கள், (*872*).

**சொல்லுக** = சொல்வாயாக, (*197, 200, 644, 645, 711, 712*).

**சொல்லுதல்** = முறையாகச் சொல் லுதல், (*644*); இனிமையாக *648*).

**சொல்லும்** = பிறர் கூறும், (*160*); புறச்சொல், (*185*); பயனற்றச் சொல், (*193*).

**சொல்லுவ** = சொல்லுவன, (*1232*).

**சொல்லுவார்** = மனதில் பதியு மாறு சொல்லுதற்குரியார், (*719*); ஏற்றுக் கொள்ளுமாறு சொல்லு வார், (*722*).

**சொல்லுவான்** = சொல்லுபவன், (*191*).

**சொல் வணக்கம்** = பணிந்த சொல் அல்லது வணக்கமுடைய சொற்றன்மை, (*827*).

[சொல் வன்மை என்பது ஒருவர் எண்ணிய எண்ணங்கள் ஈடேறு கின்ற வகையிலும், சொல்லு வனவற்றைப் பிறர் தெளிவாக வும், திட்பமாகவும் புரிந்துக் கொள்ளுகின்ற வகையிலும் சொற்களைத் திறம்படச் சொல் லும் ஆற்றலைப் பெற்றிருத்தல் சொல் வன்மை எனப்படும். இது திருக்குறளில் வரும் 65-வது அதிகாரமாகும்.]

**சொல் வன்மை** = சொல்லும் சொற்களின் வலிமை, (*682*); தனது சிந்தனைகள், எண்ணங் கள், செயல்கள் நிறைவேறிடச் சொல்லும் சொற்களை வன்மை யாகச் சொல்ல வேண்டும் - 65-வது அதிகாரம்.

# சோ

**சோகாப்பர்** = சோகத்தை, துன் பத்தை, வருத்தத்தை அனுபவிப் பவர், (*127*).

**சோரவிடல்** = நட்பைத் தளர விட்டு விட வேண்டும், (*818*).

**சோரா** = சோர்ந்தும், (*689*).

**சோரார்** = சோர்வுபட, குற்றம் தொனிக்கச் சொல்லார், (*721*).

**சோரும்** = வெளிவிடுவான், (*847*); கழன்று விழுகின்ற, (*1234*).

**சோர்விலது** = பிறர் தன்னை அறிந்துக் கொள்ள முடி யாதவாறு, விழிப்போடு இருத்தல், (*586*).

**சோர்விலன்** = தளர்ச்சி இல்லாத வனாய், (*647*).

**சோர்வு** = மறதி, அயர்வு, (*56, 531*); தளர்வு, (*586, 642, 930, 1044*); சொல்வதில் தளர்ச்சி, (*647*).

**சோர்வுபடும்** = கெட்டு விடும்; மறைந்தொழியும், (*405*); கேட் போர் இல்லாததால் பயனற்றுப் போகும், (*1046*).

# ஞா

**ஞாட்பினுள்** = போர் முனையில், *(1088).*

**ஞாலங்கருதுபவர்** = உலகம் முழுவதையும் வெற்றி பெற நினைப்பவர், *(485).*

**ஞாலத்திற்கு** = உலகில் வாழும் உயிர்களுக்கு, *(557).*

**ஞாலத்தின்** = மண்ணுலகத்திலும், *(102).*

**ஞாலத்து** = உலகத்திலே, *(141).*

**ஞாலம்** = உலகத்திலே வாழ்பவர், *(245, 1058)*; பூமி, *(485, 648, 1016).*

**ஞான்று** = பொழுது, காலம், *(44, 145).*

# த

**தக** = தக்கபடி, கல்விக்கு ஏற்றவாறு, *(391).*

**தகர்** = ஆட்டுக் கடா, *(486).*

**தகவிலர்** = நடு நிலைமை அற்றவர், *(114).*

**தகுதி** = நடுவு நிலைமை என்ற நெறிமுறை, *(111).*

**தகுதியான்** = பொறுமையெனும் பண்பு, *(158).*

**தகை** = புகழ்த் தகுதி, *(56)*; மனங்கவர் தன்மையை, *(643)*; போர் செய்யும் வீரத் தகுதி, படை வலிமை தகுதி, *(768)*; ஆடல், பாடல், அழகு ஆகியவற்றின் தகுதிகளால், *(916)*; அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நாற்குணத் தகுதிகளால், *(1084)*; நற்பண்புகளால் சிறந்த நலத் தகை, நிகழும் ஊடலின் புலத் தகை சிறப்பு, *(1305).*

**தகைத்து** = சிறப்பினையுடை யது, *(125)*; தன்மையுடையது, *(486)*; பெருமையுடையது, *(1064).*

**தகை மாண்ட** = பெருமைமிக்க, *(897).*

**தகைமை** = பெருமை, *(405)*; உயர்ந்த பண்பு, *(613)*; உரிமை, *(700, 802, 803, 808)*; உயர் குடிப் பிறப்பு, *(968)*; பெருந் தன்மையான மன அடக்கப் பண்பு, *(1255).*

**தகைமைக் கண்** = பெருமையுள், *(874).*

**தகைமையவர்** = பெருமையுடையவர், *(447).*

**தகைய** = தன்மையுடையன, *(418).*

**தகையால்** = தோற்றப் பொலிவால், *(768)*; தன்மையால், உரிமையால், *(804)*; பெண் தன்மையோடு, பெண் உருவத்தோடு, *(1083)*; பசலை பெருமிதக் களிப்பால், *(1182).*

**தகையான்** = தன்மையுடையவன், *(217)*; உரிமையால், *(804).*

**தக்க** = தகுதியுடைய பொருட்கள், *(54, 466, 805).*

**தக்கது** = தகுதியுடையது, *(633, 686, 732, 780, 1018, 1137, 1173).*

**தக்கது உடைத்து** = தகுதி உடைத்து, *(220).*

**தக்கனள்** = தகுதியாயினள், பிணங்கிக் கொண்டாள், *(1316).*

**தக்காங்கு** = தக்க முறையாக, *(561).*

**தக்கார்** = தகுதியுடையவர், *(14, 446, 731)*; தகுதியுடையோர், ஏற்புடையரை, *(1051).*

**தக்கார்க்கு** = தகுதியுடையவர்களுக்கு எல்லாம் உதவி செய்திட, *(212, 1005).*

**தக்காள்** = வருவாய்க்குத் தகுந்த படி செலவு செய்பவள், *(51).*

**தங்கண்** = தம்மிடத்தில், *(107).*

**தங்கா** = தங்காது, உலகில் நடைபெறாது, *(19)*

**தங்கி** = நின்று, *(472).*

**தங்கியான்** = தங்கியவனது, *(117).*

**தங்கிற்று** = நிலை பெற்றது, *(613)*; அடங்கிற்று, *(874).*

**தங்குதல்** = கிடத்தல், நிற்றல், *(671).*

**தங்கும்** = நிலைபெறும், *(389).*

**தஞ்சம்** = மிகவும், இருப்பது எளிது, *(863, 1300).*

**தஞ்சம் எளியன்** = மிக எளியன் (இவை ஒரு பொருட் பன்மொழிகள்).

**தடிந்து** = கடல் நீரை ஆவியால் உண்டு, அதைக் குறைப்பது, *(17).*

**தணந்தமை** = காதலர் பிரிந்தமை, *(1233, 1277).*

**தணிக்கும்** = குறைவிக்கும், தீர்க்கும், *(948).*

**தண்** = தாழ்மையான, *(548)*; குளிர்ச்சியான, *(1104)*; மென்மையான, *(1239).*

**தண்டம்** = தண்டனை, *(567).*

**தண்டா** = தணியாத, *(1171).*

**தண்டா நோய்** = தணியாத நோய், *(1171).*

**தண்ணம் துறைவன்** = குளிர்ந்த துறையையுடையவன், *(1277).*

**தண்ணென்னும்** = குளிரும், *(1104).*

**தண்பதத்தால்** = தாழ்ந்த நிலை யில், தண்பதம், **குறையைச் சொல்லு தற்குத் தாழ்த்தும் காலம் என்கிறார் மணக்குடவர்.**

**தண்மை** = அருள், *(30).*

**தத்தம்** = தங்கள், தங்கள், *(505).*

**தந்த** = சம்பாதித்த, *(212)*; அறிவித்த, *(588).*

**தந்தது** = பெறக்கூடிய பொருள், *(1065).*

**தந்தம்** = தாம், தாம் செய்த, *(63).*

**தந்தார்** = உண்டாக்கினார், *(1182).*

**தந்தாள்** = கொடுத்தாள், *(1135).*

**தந்து** = கொடுத்து, *(1089, 1183).*

**தந்தை** = தந்தையார், *(67).*

**தந்தைக்கு** = தகப்பனாருக்கு, *(70).*

**தப்பா** = தவறாது நோயைக் குணப்படுத்தும், *(217).*

**தம** = தம்முடையவை, *(120, 376).*

**தமக்கு** = தங்களுக்கு, *(72, 319).*

**தமது** = தனது முயற்சியால் வந்த பொருளை, *(1107).*

**தமது குடைக் கீழ்** = தமது மன்னன் அரசின் கீழே, *(1034).*

**தமபோல்** = தம்முடையது போல, *(120).*

**தமரின்** = உற்றார் போலிருந்து செய்யும் நட்பின் தன்மையை விட, *(814).*

**தமர்** = சுற்றத்தார், *(529, 837, 1027, 1300).*

**தமர் ஆ** = தனக்குச் சுற்றத்தினராக, (443).

**தமியர்** = தனியாக இருந்து, (229).

**தமியள்** = கணவன் இல்லாதவளாய், தனித்தே வாழ்பவளாய், (1007).

**தமியனாய்** = தனியனாய், உற்றார் உறவினர் நண்பர், படை முதலியன இல்லாதவனாய், (873).

**தம்** = தமது, (63); தமரை, (6, 237, 829, 1191).

**தம்கண்** = தமக்கு நேர்ந்த, (107).

**தம்நோவார்** = தன்னையே நொந்து கொள்பவர், (237).

**தம்பழி** = இரப்பவர்க்குப் பழி, (1051).

**தம்மிலும்** = தம் மக்களின், (68); அறிவாற்றலில் தம்மைவிட, (444).

**தம்மை** = தங்களை, (151, 237, 843, 1033, 1312).

**தம்மொடு** = தனது தகுதியோடு, (470).

**தரலால்** = கொடுத்தலால், (131).

**தரற்கு** = கொடுத்தலால், தருதலால், (1214).

**தரின்** = தந்தால், கொடுத்தால், (113).

**தருக்கி** = விரும்பி, மேற்கொண்டு, (935).

**தரும்** = தரும், கொடுக்கும், (71, 171, 275); அவனுக்குத் தருவதாக அமையும், தரும் என்பது இட வழுவமைதி, (183); கொடுக்கும், (275).

**தருவது** = கொடுப்பது, (546, 839, 934).

**தருவார்** = விற்பனைக்காக தருவார் இரார், (256).

**தரூஉம்** = தரும், கொடுக்கும், (434, 651).

**தலை** = தலையைச் சுட்டும் உடலுறுப்பு, (9, 16); சிறப்பு, சிறந்தது, (43, 47); நிச்சயமாக, (357).

**தலைக்கூடி** = ஓரிடத்தில் கூடி, (394).

**தலைச் செல்லா வண்ணத்தால்** = அதே காரியத்தை மறுபடியும் செய்யாமலிருக்கும் பொருட்டு, (561).

**தலைப்படாதார்** = விருந்தோம்பலைச் செய்யாதார், (88).

**தலைப்படுவர்** = அடைவர், (356).

**தலைப்படுவார்** = உணர்ந்து செயல் படுவார், (1289).

**தலைப்பட்டார்** = அடைந்தவர், (348).

**தலைப்பிரிதல்** = நற்பண்பினின்று நீங்கார், (955).

**தலைப்பிரிந்த** = நீங்கிய, (258).

**தலைப்பிரியா** = நீங்காத, தலைப் பிரிதல், இடத்தில் நின்று நீங்குதல், (97).

**தலைப்பிரியாதார்** = நீங்காதவர்கள், (810).

**தலைப்பெய்து** = கற்றவர்முன் எதிர் பட்டு, (405).

**தலைமக்கள்** = தலைமை தாங்கும் படைத் தளபதிகள் அல்லது தலைமை வீரர்கள், (770).

**தலையான்** = காதலன்பு ஒரு சார் பாக, (1196).

**தலை வந்த** = தன்னை எதிர்த்து முன்வந்த பகைவரின், (767).

**தவத்தால்** = தவ வலிமையால், (264).

**தவத்திற்கு** = துறவு சக்திக்கு, (261).

**தவமுடையார்க்கு** = தவ ஒழுக்கம் உடையவர்க்கு, (262).

**தவம்** = மன அடக்கம் கொள்ளுதல், புலன்களை வெல்லல்,

உண்டி சுருக்கல் முதலியன, (19, 262, 263, 265, 266); தவ வேடத்தில், (274).

**தவல்** = கேடு, அழிவு, தவறுதல், (853); துன்பப்படுதல், (856).

**தவறிலர்** = தவறு செய்யாதவர், தவறுதல் இல்லாதவர், (1325).

**தவறு** = குற்றம், (469, 1154, 1286, 1321).

**தவா** = கெடாமைக்கு ஏதுவாகிய, (397).

**தவா அ** = கெடாத, வழுவாத, (361).

**தவா அது** = ஒழியாமல், முடிவில்லாமல், (368).

**தாவா வினை** = கெடாமைக்குரிய செயல், (367).

**தவ்வை** = தமக்கை, மூதேவி, (167).

**தழால்** = தழுவுதல். [திருக்குறளில் வருகின்ற 53-வது அதிகாரம். ஒருவன் தன்னைச் சுற்றி அன்புக்காகவும், அலுவல்களுக்காகவும் உறவின் முறைக்காகவும், தழுவி நிற்கும் சுற்றத்தார்கள், எந்த காரணங்களைக் கொண்டும், தன்னை விட்டுப் பிரியாமல் இருக்க, அவர்களை அவன் தழுவிக் கொள்ளும் பழக்க வழக்கப் பண்புகளைப் பற்றிக் கூறுவதே, சுற்றந்தழால் என்பதாகும். தழால் என்றால் தழுவிக் கொள்ளுதல் என்று பொருள்படும்.]

**தழீஇ** = தழுவி, அணைத்து, (544, 913).

**தழீஇயது** = நட்பாக்கிக் கொள்வது, (425).

**தளர்ந்து** = தவறி, (716).

**தளிர்த்து** = தழைத்து, கொழுந்து விட்டு, (78).

**தளிர்ப்ப** = இன்பத்தால் தழைக்க, தளிர்க்குமாறு, (1106).

**தள்ளா** = குறைவில்லாத, (731).

**தள்ளாது** = தவறாது, (290).

**தள்ளாமை** = தவறாமை, (596).

**தள்ளும்** = தவறிப்போகும், (290).

**தறுகண்** = வீரம், மூர்க்கம், (783).

**தற்கொண்டான்** = கணவன், தன்னை மணந்து கொண்டவன், (56).

**தற்று** = இறுகக் கட்டிக் கொண்டு, (1023).

**தனக்கு** = தானே, தன் பொருட்டு, தனக்காக, (847).

**தனித்தொழிய** = தனித்துக் கிடப்ப, (814).

**தனிமை** = தனித்திருக்கும் தன்மை, (814).

**தன்** = தன்னை, (51, 56).

**தன்காத்து** = கற்பிலே இருந்து தவறாமல், தன்னைக் காத்துக் கொண்டு, (56).

**தன்செய்து** = தன்னை வலிமையும், வளமுமாக்கிக் கொண்டு, (878).

**தன்செற்று** = தன்னையும் வருத்திக் கொண்டு, (1009).

**தன் நாளை** = தனக்குச் சென்ற நாளை, (776).

**தன் நோய்** = தன்னாலாகிய நோய்.

**தன்மை** = இயல்பு, (1144).

**தன்மைத்து** = இயல்புடையது, (355).

**தன்மையவர்** = இயல்புடையவர், (855).

**தன்னின்** = தன்னைக் காட்டிலும், (250, 603).

**தன்னை** = தன்னை, (206, 208).

# தா

**தா** = பழுதில்லாத, (853).

**தாஅம்** = தாமும், (1176).

**தாஅயது** = கடந்து, நீங்கிய செல்வம், (610).

**தாக்க** = மோத, (1068).

**தாக்கற்கு** = எதிரியைத் தாக்குதற்கு, பின் வாங்கி முன் வந்து பாயும் பொருட்டு, (486).

**தாக்கு** = தானே தாக்கி வருத்து கின்ற, (1082).

**தாங்காது** = பொறுக்க முடியாது, தாங்க முடியாத, (990).

**தாங்கி** = சுமந்து, பொறுத்து, (733); தடுத்து, (767).

**தாங்கும்** = தாங்கும், சுமக்கும், (151); தடுக்கும், (767).

**தாமரைக் கண்ணான்** = திருமால், தாமரை போன்ற கண்ணுடை யவன், மகா விஷ்ணு, (1103).

**தாமரையினாள்** = திருமகள், (617).

**தாமுடைமை** = தம்முடைமை, (228).

**தாமே** = தாங்களே, தனிமையாக இருந்து, (229).

**தாம்** = தாங்கள், (158, 228, 658); அவைதாம் சாரியை.

**தாம் இன்புறுவது** = தமக்கு இன்பம் தரும் கல்வி, (399).

**தாம் உடைய** = அவருடைய, (1299, 1300).

**தாம் வேண்டின் நல்குவர்** = நாம் வேண்டி விரும்பினால் உடன் போக்கை ஒப்புக் கொள்வர். 'தாய் தந்தையர் விரும்பும் காதலருக்கு கொடுப்பர்' - **மணக்குடவர் உரை**, (1150).

**தாயானும்** = தாயினாலும், (1047).

**தாய்** = பெற்றதாய், (69).

**தார்** = தூசிப்படை, முன்படை, (767).

**தாழாது** = தாமதிக்காமல், (620); விரைந்து, (1024).

**தாழ்** = தாழ்ப்பாள், (71, 125).

**தாழ்ச்சி** = நீடிப்பு, காலம் தாழ்ந்து (671).

**தாழ்ந்த** = தாழ்ந்து பயந்துக் கிடக் கும், (903).

**தாழ்விலா** = குறைவில்லாத, (731).

**தாழ்வீழ்ந்த** = தாள் போடப்பட்ட, (1251).

**தாழ்வு** = வறுமை, (117, 731).

**தாளாண்மை** = முயற்சி, (613).

**தாள்** = பாதம், அடி, (2, 7, 8); முயற்சி, (212, 617, 1065).

**தானம்** = கொடை, (19, 295).

**தானை** = படை, (767, 768, 770, 1082).

**தானை இல்** = படை நில்லாது, (770).

**தான்** = தான், தன்னாலே, (11, 17) இந்தச் சொல்லை உரை யாளர்கள் மழையோடு கூட்டினர். தேற்றப் பொருளில் 515, 785, 977, 1215 ஆகிய வற்றில் வந்துள்ளன. 980-ல் அசைநிலை.

**தான் அறி** = குற்றம் என்றுதான் அறிந்து, (272).

**தான் காணான்** = மன்னனால் அவமதிக்கப்பட்டு, தான் அறி யாதவனாய் முடியும், (849).

# தி

**திகழ்தரும்** = தோன்றும், விளங்கிக் காணப்படுகின்ற, (1273).

**திகழ்வது** = மனக் குறிப்பும் தெரிகின்றது, (1273).

**திங்கள்** = நிலா, சந்திரன், (1146).

**திட்பம்** = உறுதி, (661, 665, 670).

**திண்ணியர்** = செயலுறுதியுடையர், (666).

**திண்மை** = திடமான மன உறுதி நிலை, (54); வலிமையான நிலை, (743, 988).

**திரிந்தற்று** = பாத்திரத்தால் கெட்டு விட்ட பால் போல, (1000).

**திரிந்து** = சுவை மாறுபட்டு, (90, 452).

**திரியாது** = வேறுபடாமல், (124).

**திரு** = செல்வம், (168, 215, 568); திருமகள், (179, 519, 920); அழகு, (1011, 1123); நன்மை, (1072).

**திருநுதல் நல்லார்** = அழகான நெற்றியையுடைய இல்லத் தரசிகள், (1011).

**திருவினை** = செல்வத்தை, (482, 616).

**திருவேறு** = பணக்காரர்களாதற் குரிய ஆகூழ் வேறு, செல்வப் பேறு, (374).

**திறப்பாடு** = திறமை, சாதனை யாண்மை, (640).

**திறம்** = சாமர்த்தியம், கூறு பாடு, வலிமை, (501, 1184, 1298).

**திறனறிந்து** = செயல் முடிக்கும் வலி யறிந்து, (441).

**திறன்** = செய்யத் தகுந்தவை, (157); கூறுபாடு, (179); இழிந் தவை, (441, 635); தகுதி வேறு பாடுகள் கேட்பாரற்று, (644); நெறி - ஆகுபெயர், (754); ஒருவரை ஒருவர் மனக் குழப் பம் மூட்டிப் பழிச் செயல்களைச் செய்பவர்கள், (186).

**திறன் அல்ல** = செய்யத் தகாதவை, (157).

**தினல்** = உண்ணல், தின்னல், (254, 256).

**தினிய** = எனைத் தின்பது போன்ற துன்பங்களை எனது நெஞ்சு செய்கின்றது, (1296).

**தினை** = உணவுப் பொருள் தானி யங்களில் ஒன்று, (104, 144, 433, 1282).

**தின்பவர்க்கு** = உண்பவர்களுக்கு, (252).

**தின்னும்** = என்னைத் தின்பது போல கண்கள் வருந்துகின்றன, (1244).

# தீ

**தீ** = கொடிய, (128, 138, 201, 206, 208, 210, 227, 460); இழி தொழில், (330); நெருப்பு, (674, 691, 947, 1104, 1149); விளக்கு, (929).

**தீ உழி** = நரகம், தீயவற்றின் (168).

**தீ எச்சம்** = நெருப்பின் குறை, (674).

**தீ காய்வார் போல்க** = நெருப்பில் குளிர் காய்பவன் போல, (691).

**தீங்கு** = தீமை, (827).

**தீச்சொல்** = தீய சொல்லாகயிருந்து, (128).

**தீண்டல்** = தொடுதல், (65, 1106); சேர்தல், (227).

**தீண்டா** = வந்தடையா, (62).

**தீது** = கொடிது, (182, 192, 222, 282, 302, 422, 531); துன்பம், (190); கொடுங்கோன்மை, (754).

**தீது இன்றி** = பிறருக்குத் தீமை இல்லாது, (754).

**தீதே** = பாவமாகும், (282).

**தீத்துரீஇயற்று** = விளக்குக் கொண்டு தேடுதல் ஒத்தது, (929).

**தீ நட்பு** = தீய குணமுடையவரின் நட்பு. [திருக்குறளில் இது 82-வது அதிகாரமாகும். தீய பண்பு களையுடைய, கொடிய குற்றங் களைச் செய்யக் கூடிய, தீயோரின் நட்பு வாழ்நாள்வரை தீச்செயல்களாகவே வந்து சேரும் என்பதால், அதற்கான அறிவுரைகளை இந்த அதிகாரத் தில் வள்ளுவர் பெருமான் விளக்கியுள்ளார்] (82).

**தீப்பால** = தீமையுடையவற்றை, (206).

**தீப்பிணி** = பொல்லாத நோய், (227).

**தீமை** = பாவம், கெடுதி, (143, 291, 511); குற்றம், (984).

**தீமைத்து** = தீமையுடையது, (450).

**தீமையிலாத** = மற்றவர்களுக்குத் தீமை தராத சொற்களை, (291).

**தீய** = மற்றவர்களுக்குக் கெடுதி உண்டாகும் சொற்கள், (139); துன்பங்கள், (202); கொடி யவை, (302, 303, 375).

**தீய ஆம்** = தீயவாய்ப் பயன்படா, (375).

**தீயவும்** = தீயவை தானும், (375).

**தீயவை** = துன்பங்கள், (62); கொடிய செயல்கள், (202, 205, 208).

**தீயில்** = நெருப்பில், (1260).

**தீயினால்** = நெருப்பால், (129).

**தீயினும்** = நெருப்பைக் காட்டினும், (202).

**தீயுழி** = தீய வழியில்; நரகத்தின் கண், (168).

**தீர** = முற்றாக, (348).

**தீரா** = நீங்காத, (508, 510, 1201).

**தீராமை** = நீங்காமை, (482).

**திருநுதற்கு** = அழகிய நெற்றியை யுடையவளுக்கு, (1123).

**தீர்க்கும்** = போக்கும், (1241, 1275).

**தீர்த்தல்** = போக்குக, (226).

**தீர்ந்த** = நீங்கியவை, (199); நீங்கிய, (292).

**தீர்ந்தன்று** = விட்டது, தீர்ந்தது, (612).

**தீர்ந்தாரின்** = குறைபாடாக விட்டாரைப் போல, (612).

**தீர்ந்தார்** = நீங்கினவர், (170).

**தீர்ப்பான்** = ஆற்றுபவன், (950).

**தீர்வாம்** = நீக்கக் கடவோம், (1063).

**தீவினை** = மற்றவர்களுக்குத் தீமையை உண்டாக்கும் செயல், (201).

# து

**துகில்** = ஆடை, (1087).

**துச்சில்** = ஒரு பக்கம் ஒதுக்கமாகவே, (340).

**துச்சிலிருந்த** = ஒதுக்கமாகக் குடியிருந்த, (340).

**துஞ்சல்** = தூங்குதல், (1049).

**துஞ்சா** = உறங்கமாட்டா, (1179).

**துஞ்சினார்** = உறங்கினார், (926).

**துஞ்சின்** = உறங்குமாயின், (1212).

**துஞ்சும்** = உறங்கும், (1218).

**துடைத்தவர்** = நீக்கினவர், (107).

**துடைத்து** = போக்கி, (615).

**துணிக** = ஆராய்ந்து தொடங்குக, (467).

**துணிவாற்றி** = துணிந்து, பயன் படுத்திக் கொண்டு (669).

**துணிவு** = முடிவு, (21, 533, 671); ஆண்மை, (383); அஞ்சாமை, (688).

**துணை** = அளவு, (22, 87, 104, 144, 156, 397, 433); உதவி, (36, 41, 42, 51, 76, 87, 132, 1282); துணைவர், (1234).

**துணைத்து** = அளவினது, (87).

**துணைமை** = துணையாயிருக்கும் தன்மை, (688).

**துணையர்** = துணையாகிய தன்மை யுடையவர், (497).

**துப்பார்க்கு** = உண்பவர்க்கு, (12).

**துப்பின்** = வலிமையினையுடைய, (895); பகையானால், (1165).

**துப்பு** = உணவு, (12); உதவி, ஊன்றுகோல், (106); வலிமை, (862).

**துப்புரவு** = நுகர்ச்சி, உணவு வகை உதவிகள், (263, 378, 1050).

**தும்மல்** = தும்முதல், (1203, 1253).

**தும்மல் சினைப்பது** = தும்மல் எழுவது, (1203).

**தும்மினீர்** = தும்பினீர், (1317).

தும்மினேன், (1317).

**தும்மு** = தும்மல், (1318).

**துயரம்** = துன்பம், (792).

**துயர்** = கவலை, (1135, 1165, 1256, 1275).

**துயர் வரவு** = துக்கத்தின் வரவு, (1165).

**துயிலின்** = உறங்குதலைப் போல், (1103).

**துயில்** = தூக்கம், (605).

**துயிற்றி** = உறங்கச் செய்கின்ற; தூங்கச் செய்தலால், (1168).

**துய்க்க** = உண்ணுக, (944).

**துய்த்தல்** = நுகர்தல், அனுபவித் தல், (377).

**துய்ப்பதும்** = அனுபவிப்பதும், (1005).

**துரீஇ** = தேடுவது, (929).

**துலை** = ஒப்பு, (986).

**துலை இலார்** = தமக்கு ஒப்பாகாத தாழ்ந்தவர், ஒப்பாகாரிடத்தும், (986).

**துவர** = மிக, (44); முற்றாக, (1050).

**துவ்வாதவர்** = வறியவர், (42).

**துவ்வாமை** = வறுமை, (94).

**துவ்வாய்** = பிறகு அதன் பயனாய் சேர நினையாய், நுகர எண்ணாய், (1294).

**துவ்வான்** = வலியிலன், (862); நுகர மாட்டான், (1006).

**துளங்கு** = அசைவு, நடுக்கம், (699).

**துளி** = மழைத் துளி, (16); மழை (557).

**துறக்க** = பற்றொழிக, (342).

**துறந்தமை** = பிரிந்து போனமை, (1157).

**துறந்தாரின்** = துறவிகளைப் போல், (159).

**துறந்தாரை** = பிரிந்து போன வரை, (1250).

**துறந்தார்** = பற்றினைத் துறந்தவர், (22, 159, 276); பிரிந்தவர், (310); பற்றுவிட்டவர், (348, 586); பிரிந்து போனவர், (1188).

**துறந்தார்க்கு** = துறவிகளுக்கு, (263).

**துறந்தார்க்கும்** = உறவு முறை களை விடப்பட்டவர்க்கும்; துறவி களுக்கும், (42).

**துறந்தார் துணை** = மரணத்தை ஒழித் தவரோடு ஒத்தவர், (310).

**துறப்பர்** = விட்டு விடுவர், (1017).

**துறப்பார்** = துறக்கும் எண்ண முடையவராக, இஃது ஆரீற்று எதிர்கால முற்றுச் சொல், (378).

**துறவற்க** = விடாதிருக்க, (106).

**துறைவன்** = காதலன், தலைவன், (1157, 1277).

**துனி** = வெறுப்பு, (769, 1233); வறுமை, (1010); புலவி, (1295); சிறிய பிணக்கம், (1306, 1322).

**துனி அரும்பி** = துன்பத்தை உண்டாக்கி, (1221).

**துனித்து** = ஊடி, பிணங்கிய வளாக இருந்து, (1290).

**துன்பங்கள்** = வறுமை துன்பத்துள் பல வகை துன்பம் அடங்கிச் செயல்படும், (1045).

**துன்பத்திற்கு** = துன்பம் ஒரு வனுக்கு வந்தபோது, (1299).

**துன்பத்துள்** = துன்பம் வந்த போது, (106, 369, 629).

**துன்பத்துள் துன்பம்** = மிகப் பெரும் துன்பம், (369).

**துன்பமுறாவரின்** = கொடுப்பவன் தனது மனதில் துன்பமடை யாது கொடுத்தால், (1052).

**துன்பம்** = கவலை, (267, 368, 369, 615, 628, 629, 769, 854, 940, 1052, 1166, 1223, 1307).

**துன்புறூஉம்** = துன்பத்தை உண் டாக்கும், (94).

**துள்ளற்க** = பிறரிடத்தே செய்யா திருப்பனாக, (209).

**துன்னா** = நம்மைச் சேராமல், (1250).

**துன்னாமை** = புரியாமை, அடை யாளம், (316).

**துன்னியார்** = நெருக்கமாகப் பழகிய வர்கள், (188); போர் தொடுத் தவர்கள், (494).

# தூ

**தூ** = பற்றுக்கோடு, பற்று, (455).

**தூஉய்மை** = அழுக்கின்மை, (364).

**தூக்கம்** = தூங்கியிருத்தல், (668).

**தூக்கம் கடிந்து** = காலம் தாழ்த்தாது; காலத் தாழ்வு ஏற்படுதலை நீக்கி, (668).

**தூக்காத** = ஆராயாத, (480).

**தூக்கார்** = ஆய்வு செய்யாதவர், (103).

**தூக்கி** = ஆராய்ந்து, (471, 912).

**தூக்கும்** = அளவு செய்யும், (118, 813).

**தூங்கற்க** = காலம் தாழ்த்தாது செய்க, (672).

**தூங்காது** = விரைந்து, (672).

**தூங்காமை** = செயல்களில் விரைவூட்டும் தன்மை, (383).

**தூங்கி** = காலம் நீடித்து, (672).

**தூங்குக** = காலம் நீடித்துச் செய்க, (672).

**தூங்கும்** = இருமுனைகளில் தொங்கும், (1163).

**தூண்** = கம்பம், (615, 983).

**தூண்டில்** = தூண்டிவிடும் இரும்பு, (931).

**தூண்டில் பொன்** = தூண்டிலிலுள்ள இரும்பு வளையம், (931).

**தூது** = அரசர்களிடத்தில் தூது செல்வோர் பண்புகள், (69); இவை, (681); தூதன், (685, 685, 690); முன் ஓடி, (1228) - [இது திருக்குறளின் 69-வது அதிகாரம். ஒரு வேந்தன் மற்ற அரசனிடம் தனது அரசவை முடிவுகளை தூதர்கள் மூலம் தெரிவிக்கும் பண்புகள், திறமைகள், செயல்கள் ஆகியவற்றைக் கூறும் பகுதி.]

**தூதொடு வந்த** = தூது செய்தி யைக் கொண்டு வந்த, (1211).

**தூயார்** = மனத்தூய்மை; மாசற்ற மனத்தினர், மனக்கோட்டமற்றவர்கள், (456).

**தூய்மை** = மன சுத்தம், புனிதமான மனம் பெற்றவர்கள், (159, 298, 455, 688).

**தூய்மையவர்** = மன அழுக்கற்றவர்கள், மன சுத்தமுற்றவர்கள், (711, 721).

**தூவாத** = கடுமையான சொற்களைக் கூறாத, (685).

**தூவி** = மென்மையான இறகு, (1120).

**தூவேன்** = விடமாட்டேன், முயற்சியை விடேன், (1021).

**தூறு** = போர், சண்டையல்ல, நெற்கதிர்களை இழந்த தாள்களால், போடப்பட்ட வைக்கோல் போர், (435).

**தூற்றா** = (வளையல்கள்) தலைவன் பிரிந்ததை அறிவிக் காவோ, (1157).

**தூற்றார்** = இகழ்ச்சியாகப் பேசார், (1190).

**தூற்றும்** = இகழ்ந்து பேசும், (188).

# தெ

**தெய்வத்தால்** = நல்லூழால், நல் வினைகளால், கடவுளால் என்றும் கூறுவர், (619).

**தெய்வத்துள்** = கடவுள்களுள், சிறு தெய்வங்களுள், தேவதை கள் என்றும் சொல்வர், (50).

**தெய்வத்தோடு** = கடவுளுக்கு, தேவதைகளுக்கு, சமமாக, நல் வினைகளுக்குரிய பலனாக, (702).

**தெய்வம்** = வழிபடும் தேவர், (43); 'கணவனே கண்கண்ட தெய் வம்' என்பர் சான்றோர். கடவுள் என்பர் சிலர். விடாமுயற்சி யெனும் இயற்கை அறிவாற்ற லின் முனைப்பான துடிப்பு, தெய்வம் என்பாருமுண்டு.

**தெரிதல்** = ஆராய்ந்து தெளிதல், (717).

**தெரிந்த** = ஆராய்ந்தெடுத்த, (462); ஆராய்ந்த, (1172).

**தெரிந்து** = ஆராய்ந்து தெளிந்து, (23, 132, 186, 501, 712, 1172).

**தெரிந்து செயல் வகை** = [இது திருக்குறளில் வரும் 47-வது அதிகாரம். தான் செய்யப் போகும் ஒரு செயல் குறித்து, நன்றாக ஆராய்ந்து தெளிந்து, நன்னெறியில் நின்று, செயல்பட வேண்டிய திறமைகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.]

**தெரிந்து வினையாடல்** = [திருக் குறளில் வரும் 52-வது அதி காரம் இது. ஒரு செயலை, யார், எந்த வினைகளை, எப்படி தமது அறிவாற்றலால், சிறப்பாக, அறிவாளர் போற்றும் வகையில் வெற்றிகரமாகச் செய்து முடிப் பார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்ட பிறகே, அவரவர்களிடம் அந்தந்தச் செயல்களை ஒப்படைத்துச் செய்யச் செய்ய வேண்டும் என் பதற்கான அறிவுரைகள் கூறப் பட்ட அதிகாரம் ஆகும்.]

**தெரியா** = ஆராயாத, (583).

**தெரியான்** = அவரவர் உடற் தன்மைகளையும், அதற்கேற்ற உணவு வகைகளையும் காலத் தையும் ஆராயத் தெரியாதவன், (947).

**தெரியுங்கால்** = குறிப்பால் கருத் தறிய வேண்டி, ஆராயும் நேரத்தில், (503).

**தெரிவார்** = அறிவார், உணர்வார், (104, 329).

**தெரிவான்** = சிந்தித்து ஆய்பவன், (27).

**தெருளாதான்** = மந்தப் புத்திக் காரன், தெளிவான அறிவில்லாத வன், (249).

**தெவ்** = பகைவர், (639).

**தெவ்விர்** = பகைவர்கள், (771).

**தெளித்த** = அவர் அன்போடு தெளி வித்த, (1154).

**தெளிந்தார்** = தம்மைச் சந்தேகப் படாதவர், (143).

**தெளிந்தார்க்கு** = உண்மை மெய்ப் பொருளை உணர்ந்தவர்க்கு, (353).

**தெளிந்தான்** = நம்பினவன், ஐய மகற்றிக் கொண்டவன், சந் தேகம் நீங்கியவன், *(508, 510)*.

**தெளிவு** = அறிவான நம்பிக்கை, ஆராய்ந்து காணும் அறிவின் உண்மை, *(464, 502, 510, 513)*.

**தெள்ளியர்** = அறிவுடையார், *(374)*.

**தெறல்** = அழித்தல், *(264)*.

**தெறும்** = தெரியாமல் வளர்ந்து அழிக்கும், அல்லது கெடுக்கும், *(674, 883)*.

**தெறூஉம்** = சுடுகின்றது, *(1104)*.

**தெற்றென்க** = அறிந்து கொள்ள வேண்டும், *(584)*.

**தென்புலத்தார்** = நமக்கு முன் இறந்தோர், பிதிரர், குடும்பத்தில் இறந்த முதாதையர், *(43)*.

# தே

**தேய** = போக, குறைய, அகல, *(96)*.

**தேயத்து** = இடத்திற்கு, *(753)*.

**தேயும்** = குறையும், இழந்து விடும், *(888)*.

**தேய்க்கும்** = அழித்துவிடும், *(555)*; குறைக்கும், *(567)*.

**தேராது** = ஆய்ந்து பார்க்காமல், *(509)*.

**தேரான்** = ஆராய்ந்து, அறியாத வனாகி, *(144, 508, 510)*.

**தேரினும்** = ஆராய்ந்து தெளிந் தாலும், *(132)*.

**தேரின்** = ஆராய்ந்து சொல்லும் போது, *(249)*.

**தேர்** = தேர் எனப்படும் வலிய வண்டி, *(496)*.

**தேர்க்கு** = ரதம் போன்ற வண்டிக்கு, *(667)*.

**தேர்ச்சி** = மன்னனுக்கு ஆராய்ந்து கூறக்கூடிய ஆலோசனை, *(635)*.

**தேர்ந்தபின்** = ஆராய்ந்த பின்பு, *(509)*.

**தேர்ந்து** = ஆராய்ந்து பார்த்து, *(441, 462, 541, 634)*.

**தேவர்** = வானுறைபவர், *(1073)*.

**தேறப்படும்** = நம்பப்படும், *(501)*; தெளியப்படும், *(589)*.

**தேறல்** = தெளிவு பெறல், *(825)*.

**தேறற்க** = நம்பக்கூடாது, *(509)*.

**தேறற்பாற்றன்று** = தேர்ந்து தெளிவு பெறுவது முறையானது ஆகா, நம்புதல் கூடாது, *(825)*.

**தேறாவிடினும்** = நம்பாவிட்டா லும், தெளிவு பெற்றிராவிடினும், *(876)*.

**தேறான்** = அறிய மாட்டான், *(848)*; சேராதவனாக, நட்பு செய்து கூடாமலும், *(876)*.

**தேறிய** = தெளிந்த, *(514)*.

**தேறியார்** = நம்பித் தெளிவடைந் தவர், *(1154)*.

**தேறின்** = பகைவனைப் பற்றி ஆராய்ந்து தெளிந்திருப்பினும், *(876)*.

**தேறுக** = சந்தேகப்படாமலிருக்க, நம்புக, *(509)*.

**தேறும் பொருள்** = அவரவர் ஆற்ற லுக்கேற்ற செயற்பாடுகளை, நம்பத் தக்கவைகளை, *(509)*.

**தேற்றம்** = மனங்கலங்காத தன்மை, *(513)*; நம்பப்படுதல், *(766)*;

நம்புவதற்கு, உறுதி செய்வதற்கு, *(1153)*.

**தேற்றாதவர்** = நன்மை தரும் என்பதனை அறியாதவர், *(187, 289, 626, 649)*.

**தேற்றாதார்** = அறியாதவர்களிடத்தில், *(1054)*.

**தேற்றுதல்** = தெளிவித்தல், *(693)*.

**தேன்** = சுவை தரும் தேன், *(1121)*.

# தொ

**தொகச் சொல்லி** = தொகுத்துச் சொல்லி, சுருங்கச் சொல்லி, *(685)*.

**தொகுத்தவற்றுள்** = தொகுத்த அறங்களுள், *(322)*.

**தொகுத்தார்க்கு** = திரட்டியவர்க்கு, *(377)*.

**தொகை** = தொகுத்துரைப்பதனால் உண்டாகும் பயனை; செஞ்சொல், இலக்கணச் சொல், இலக்கியச் சொல், குறிப்புச் சொல் போன்ற தொகை விவரக் குறிப்புகளை, *(711, 721)*; ஒருங்கே, *(1043)*.

**தொக்க** = ஒத்திருக்குமேயானால், *(589)*.

**தொக்கு** = ஒருங்கு கூடி, *(545)*.

**தொடங்கற்க** = தொடங்கா திருக்க வேண்டும், *(491)*.

**தொடங்கார்** = செய்யத் தொடங்கார், *(464)*.

**தொடரார்** = மறைவாகப் பேசுவதைத் தொடர்ந்து அணுகிக் கேளாமல், *(695)*.

**தொடர்** = தொடர்பு, நட்பு, *(450)*.

**தொடர்பு** = சம்பந்தம், *(73)*; நட்பு, *(783, 806, 819, 820, 882, 920)*.

**தொடர்ப்பாடு** = தொடர்பு, *(345)*.

**தொடலை** = மணிக் கோவைகளால் தொடுக்கப்பட்ட மேகலை, *(1135)*.

**தொடலைக் குறுந்தொடியாள்** = மணிக் கோவைகளால் தொகுக்கப்பட்ட, சிறிய வளையல்களை அணிந்த அந்த அழகிய பெண், *(1135)*.

**தொடி** = ஓர் அளவை, அளவில் ஒரு பலம், *(1037)*; வளையல் அணிந்தவள், *(1101, 1135, 1275)*; வளையல், *(1234, 1238)*.

**தொடியார்** = பெண்கள், *(911)*.

**தொடியொடு தோள் நெகிழ** = வளையல்கள் கழலவும், தோள்கள் மெலிவடைந்து வாடவும், *(1236)*.

**தொடின்** = தொட்டால், *(1154)*.

**தொட்டனைத்து** = தோண்டிய அளவுக்கு, *(396)*.

**தொலைவிடத்தும்** = தனக்கு வலிமை குறைந்த போதும், *(762)*.

**தொலைவு** = அழிதல், கேடு, *(806)*.

**தொல்** = பழமை, பழைய, *(1043, 1234, 1235)*.

**தொல்கவின்** = பழைய இயற்கை அழகு, *(1235)*.

**தொல்படை** = மூலப்படை, *(762)*.

**தொல்லை** = பழமை, *(806)*.

**தொல்வரவும்** = குடிப்பிறப்பின் வரவையும், *(1043)*.

**தொழாஅர்** = வணங்காவிட்டால், *(2)*.

**தொழா அள்** = வணங்காதவளாயினும், தொழாதவளானாலும், (55).

**தொழிலோர்** = தொழிலைச் செய்பவர், (560).

**தொழில்** = செயல், (394, 428, 549, 582, 648, 833, 972, 1252).

**தொழிற்றாம்** = அவர்களிடம் செயல் நிலையை உண்டாக்கி விடும், (977).

**தொழுத** = வணங்குவதற்காக, (828).

**தொழுது** = வழிபட்டு, (55, 970, 1033).

**தொழும்** = வணங்கும், (260, 268).

**தொறும்** = போதெல்லாம், (553, 783, 1145).

**தொறூஉம்** = போதெல்லாம், தொறு - தான் சார்ந்த இடத்தைப் பல வாக்கி, யாண்டாண்டு என்பது பட நிற்பதோர் இடைச் சொல், (940).

# தோ

**தோட்க** = துளைக்க, (418).

**தோட்டி** = அங்குசம், (24).

**தோட்டு** = பூவினை, தோடு, பூவிதழ், (1105).

**தோணி** = மரக்கலம், படகு, (1068).

**தோயாதார்** = தோளைத் தீண்டாதவர், சேராதவர், (149).

**தோயார்** = தீண்டார், (914, 915, 916).

**தோய்வர்** = தீண்டுவர், (917).

**தோய்வன்ன** = நெருப்பில் தோய்ந்தாற் போன்ற, (308).

**தோல்** = உடம்பின்தோல், (80, 273); பிறந்த குடி பற்றிய புகழ்ச் சொற்களை, (1043).

**தோல் கெடுக்கும்** = புகழ் சொற்களைக் கெடுத்து, இகழ் சொற்களைப் பெற நேரிடும், (1043).

**தோல்வி** = தன்னைவிட உயர்ந்தாரிடமிருந்து பெறும் தோல்வியை, (986).

**தோழி** = சினேகிதியே, (1284).

**தோளவள்** = தோளையுடையவள், (1113).

**தோள்** = தோள்கள், (146, 906).

**தோறு** = போதெல்லாம், (1106, 1110).

**தோறும்** = தினமும், (520, 1110, 1145).

**தோற்றத்தான்** = தோற்றத்துடனே, (1084).

**தோற்றம்** = உயர்வு, (124); தவ வேடம், (272); பிறப்பு, (1003); புகழ், (1059).

**தோற்றவர்** = எதிர்ப்பைத் தாங்காமல் வீழ்ச்சி கண்டவர், (1327).

**தோற்றவர் வென்றார்** = ஊடலில் தோல்வி கண்டவர் வெற்றி பெற்றவரே, (1327).

**தோன்றல்** = தோன்றாதிருப்பாயாக, (1119).

**தோன்றலின்** = தோன்றுவதிலும், (263).

**தோன்றா** = தோற்றமும் இல்லாமல், (479).

**தோன்றாமை** = பிறவாமை, (236).

**தோன்றிவிடும்** = வெளிபட்டுத் தோன்றி விடுகின்றது, (1253).

**தோன்றிய** = உண்டான, உருவான, பெறுகின்ற, (1328).

**தோன்றின்** = தோன்றிவிடு மானால், (884, 885, 958).

**தோன்றும்** = தோன்றும், உண்டாகும், (371); தோன்றுகின்ற, (1322, 1324).

# ந

**நக** = மகிழ்வுறுமாறு, (187, 685, 829); மலர, (786); நகைத்து இகழத் தக்க, (1173).

**நகச் செய்து** = உற்சாகமடையும் படி, (829).

**நகச்சொல்லி** = மகிழ்வதற்கான இனிய சொற்களைக் கூறி, (187).

**நகப்படுவர்** = சிரித்து இகழப் படுவர், (927).

**நகலான்** = நட்பினால், (800).

**நகல்** = சிரித்து மனம் மகிழ்தல், (999).

**நகா அ** = சிரித்து, (824).

**நகுக** = இலேசான உள்சிரிப்பு சிரித்து மெதுவாக மகிழ்தல், (621).

**நகுதல்** = சிரித்து மகிழ்தல், (784).

**நகுப** = நகைக்கின்றார், (1140).

**நகும்** = இகழ்ந்து சிரித்தல், (271); மகிழும், (774); இகழ்ந்து தன்னுள் சிரிக்கும், (1040); மகிழும், (1094, 1095); புன் சிரிப்புச் சிரிக்கின்றான், (1095).

**நகை** = பொய் சிரிப்பு, (182); முகத்தால் வெளிப்படும் சிரிப்பு, (304); மறைவாகச் சிரித்தல், (694); வீணாகச் சிரித்துப் பேசும் இயல்பினர், (817); முகமலர்ச்சி, (878, 953); உதடுகள் விரியாமல் சிரிக்கும் முகிழ்ப்பு, (1274).

**நகையுள்** = விளையாட்டு இகழ் வோடு சிரிப்பதும், (995).

**நகையேயும்** = பகை பயக்கின்ற சிரிப்பை விளையாட்டுக்காகக் கூட, (871).

**நகை வகையும்** = கோமாளித் தனமாக, கழைக்கூத்தாடி போல, விகடர் போல சிரிப் பவர்கள் நட்புச் சிரிப்பு, (817).

**நசை** = விருப்பம், ஆசை, (1043, 1156).

**நசைஇ** = விரும்பி, (1263).

**நசை இயார்** = என்னால் விரும்பப் பட்ட காதலர், (1199).

**நச்சப்படாதவன்** = விரும்பப்படா தவன், (1004, 1008).

**நச்சு** = விஷம், நஞ்சு, (1008).

**நடு** = நடுவு நிலைமை, (171).

**நடு ஊருள்** = ஊருக்கு நடுவே, ஊர் மத்தியில், (1008).

**நடுக்கு** = அசைவு, (654).

**நடுங்கல்** = அஞ்சுதல், (680).

**நடுங்கு அஞர்** = நடுங்குவதற் கான துன்பம், (1086).

**நடுவு** = நடு நிலைமை, (113, 116, 117, 171, 172).

**நடை** = நடத்தல், (59, 1014); வெளிப்படைக் குறிப்பு போன்ற போக்கு, நடை முறைப் போக்கினை, (712).

**நட்ட** = நட்பு கொண்ட, (791).

**நட்டல்** = நட்புக் கொள்ளுதல், (784).

**நட்டார்** = நண்பர், (804, 805, 808, 826, 908, 1293).

**நட்டு** = நட்புக் கொண்டு, (812, 830).

**நட்பது** = நட்பு வைப்பது, (786).

**நட்பினுள்** = தோழமையாய் உள்ளபோதே, (1165).

**நட்பு** = உறவு, தோழமை, (187, 338).

**நட்பு ஆடல்** = தோழமை கொள்ளல், (187).

**நட்பு ஆய்தல்** = [இது திருக் குறளில் வரும் 80-வது அதி காரம். நட்பாகச் சேரும் போது, அவரின் பண்பு, சிறப்பு, அன்பு, திறமை ஆகியவற்றை நன்றாக ஆராய்ந்து உணர்ந்த பின்பே, நட்பு கொள்ளல் வேண்டும் என்பதற்கான அறிவுரைப் பகுதி இது.

**நணித்து** = அண்மையில் உள்ளது, (851).

**நணியது** = அருகாமையிலுள்ளது, (353).

**நண்ணார்** = பகைவர், (1088).

**நண்ணேன்** = தழுவ மாட்டேன், (1311).

**நண்பு** = தோழமை, நட்பு, (998).

**நண்பென்னும்** = எல்லாருமே நண்பர்களென்று, (74).

**நத்தம்** = ஆக்கம், (235); நத்து, தொழிற்பெயர், விகாரத்தால் நத்து என்று ஆனாது. 'அம்' என்ற பகுதிப் பொருள் விகுதி பெற்று நத்தம் என்றாயிற்று.

**நமக்கு எவன்** = என்ன இன்பத்தை இவர் நமக்குச் செய்வார், (1195).

**நமக்கொழிய** = நம்மிடம் விட்டு விட்டு, (1231).

**நம்** = நமது, (1220, 1258).

**நமக்கு** = எங்களுக்கு, (1195); எங்களிடத்தே, (1231).

**நம்மின்** = நான் உணர்வதற்கு முன்னமேயே, (1277).

**நயத் தக்க** = விரும்பத் தக்க, (580).

**நயந்த** = விரும்பிய, (1181).

**நயந்தவர்** = நம்மால் விரும்பப் பட்டவர், (1232).

**நயப்பித்தார்** = பிரிவுக்கு என்னை உடன்படுத்திய காதலர், (1189).

**நயப்பித்தவர்** = பிரிவுக்கு என்னை உடன்படுத்திச் சென்றவர், (1190).

**நயம்** = நீதி, (860); மகிழ்ச்சி, (314); அருள், (998).

**நயம்போலும்** = இன்பம் செய்தல் போலும், (783, 860).

**நயவற்க** = விரும்பாதொழிக, (439).

**நயவா** = விரும்பாத, (143).

**நயவாமை** = விரும்பாமை, (150).

**நயனில** = விருப்பமில்லாத செயல்கள், (192).

**நயனுடையான்** = உதவி செய் பவன், (216).

**நயன்** = நன்மை, நீதி, (97); விருப்பம், (103, 193, 194, 197); ஒப்பரவு, (216, 219); நடக்கை, (912).

**நரி** = காட்டு விலங்கான நரி, (500).

**நலக்கு** = விருப்பத்துக்கு, நன் மைக்கு, (149).

**நலத்தது** = அறத்தது, நலத்தின் பாற்பட்ட குணமுடைய செயல், (984).

**நலத்தார்** = ஆசையுடைய பெண்கள், பொது மகளிர், விலை மகளிர், (915).

**நலத்தின்** = நன்மையால், (459, 915).

**நலத்தின் கண்** = நல்ல செயல் களிடத்தில் உயர்ந்த குண நலமுடையவனாக வருகின்ற வனிடத்தில், (958).

**நலத்து** = நன்மையுள், (641, 982).

**நலம்** = அழகு, (407, 914, 915, 916, 982); நன்மை, (457, 458, 641, 651, 1007); நற்குணம், (1019, 1305).

**நலனழிதல்** = அழகு கெடுதல். [திருக்குறளில், இது 'உறுப்பு நலன் அழிதல்' என்ற 124-வது அதிகாரமாகும். காதல் பிரிவுத் துன்பத்தால், தலைவியின் கண், தோள், நெற்றி போன்றி உறுப்புகள் அழகு இழந்து போவதைப் பற்றிக் கூறப்படும் பகுதி இது.]

**நலன்** = நன்மை, *(499, 641, 682)*; சிறப்பு, *(982)*.

**நல்** = நல்ல, *(60)*; மிகுந்த காதல் வெள்ளம், *(1133)*.

**நல் ஆண்** = நல்ல ஆண் மகனை, *(1030)*.

**நல்ஆறு** = நல்ல வழி, நல்ல ஒழுக்கம், *(324)*.

**நல்கா** = என்னிடம் அன்பு காட்டாது, *(1217)*.

**நல்காது** = பெய்யாது, மீண்டும் கொடாது, *(17)*.

**நல்காமை** = பிரிந்து செல்வ தற்கு, *(1181)*; கருணை காட் டாமை; அருளாமை, *(1190)*.

**நல்காரை** = வந்து எனக்குக் கருணை காட்டாதவரை, *(1214, 1219)*.

**நல்கார்** = கருணை செய்யார், *(1199, 1219)*.

**நல்குரவு** = வறுமை. [திருக்குற ளில் வரும் 105-வது அதி காரம். எந்த ஒரு தொழி லையும், சரிவரச் செய்யா மலும், வயிராற உண்பதற் கான உணவு கிடைக்காமை யா லும் உண்டாகும் வறுமை நிலைகளைப் பற்றி கூறும் அதிகாரம் இது, *(105)*.]

**நல்குவர்** = உடன்போதற்கு உடன் படுவர், உடன் போக்குக்கு ஒப்புவர், *(1150)*; மீண்டும் வந்து அன்பு காட்டுவர், *(1156)*.

**நல் கூர்ந்தார்** = வறுமையுற்றவர், *(219)*.

**நல்நீரை** = நற்பண்புடைய, *(1111)*.

**நல்நுதலாள்** = அழகிய நெற்றியை யுடைய மனைவியாள், *(908)*.

**நல் நயம்** = நல்ல நன்மைகள், *(314)*.

**நல்ல** = நல்ல செயல்களை, *(213, 300, 375, 379, 679, 823, 905)*.

**நல்ல ஆக** = நல்லனவென்று பொருந்தி, *(379)*.

**நல்ல ஆள்** = நல்ல போர் வீரர், *(746)*.

**நல்ல ஆறு** = நல்ல ஒழுக்க வழி, *(41)*.

**நல்லது** = நன்மையுடையது, *(323)*.

**நல்ல பறை** = சாவுப் பறை யில்லாத மகிழ்ச்சிக்குரிய பறை, *(1115)*.

**நல்ல பறை படா** = அவள் இடை ஒடிந்து போகுமாதலால், மகிழ்ச்சிப் பறை ஒலியாமல் துயரப் பறை ஒலிக்கும், *(1115)*.

**நல்லர்** = நன்மையுடைவர், *(823)*.

**நல்லவர்** = நல்ல குலப் பெண்கள், *(1011)*.

**நல்லவை** = நன்மை தரும் சொற் கள், *(96)*; நல்ல செயல்கள், *(375)*; அறிவு தருகின்றவை, *(416)*; நல்ல சிறப்பான குணங்கள், *(981)*.

**நல்லவை ஆம்** = ஆ கூழ் காரண மாக நல்லவை ஆகும், *(375)*.

**நல்லாருள்** = கற்ற சான்றோர் கள் இடையில், *(903)*.

**நல்லார்** = கற்றார், பெரியோர், *(408, 450, 729, 905)*.

**நல்லாள்** = நல்ல பெண், *(924)*; நல்ல பெண்ணாவாள், *(1040)*.

**நல்லாறு** = நல்ல வழி, *(222)*.

**நல்லாற்றான்** = நல்வழிகளிலே, (242).

**நவில்** = படிக்கும், (783).

**நள்ளா** = அவர்களோடு பொருந் தாமல், (912).

**நறா** = போதையூட்டும் கள், (1090).

**நறு** = நல்ல மணமுள்ள, (1231).

**நறுமலர்** = நல்ல மணமுள்ள பூ, செங்கழு நீர் குவளை மலர், (1231).

**நற்பொருள்** = நல்ல நூற்களின் நல்ல பொருள், (1046).

**நனவினான்** = விழிப்புக் காலத் தில் வந்து, (1213); நனவு காலத்தில் என்னிடம் வந்து, (1214); பிரிவதற்கு முன்பு நன வின் கண், (1215); நனவு என்ற ஒன்று, (1216); நனவு காலத் தில் வந்து, (1217); விழிப்புக் காலத்தில் வந்து அன்பு காட் டாத காதலரை, (1219); விழிப்புக் காலத்தில், (1220).

**நனவு** = விழிப்பு நிலை, (1216).

**நனி** = மிக, (403).

**நனை** = வெறி நீரால் கன்னம் நனைகின்ற யானை, (678).

**நன்** = நல்ல, (60, 171, 1000).

**நன்கு** = செம்மையுடையான், நிலை பெற்றவனிடம், (513); செல்வம், (534); ஏற்கும் நல்ல கருத்துக்கள், (728); மனம் விரும்ப, (919); தெளிவாக அறிந்த, (1046).

**நன்குடையர்** = நற்செயல் களால் தாமே உடையர், (458).

**நன்குணர்ந்து** = குற்றமேதுமில்லா மல் நன்றாக உணர்ந்து, (712).

**நன்பால்** = நல்ல பால், (1000).

**நன்மை** = நல்ல தன்மை, (103, 292); நற்குணம், (1013).

**நன்மையவர்** = திறமையுடையவர், (712).

**நன்மையின்** = நற்குணங்களினின்று, (194).

**நன்றாகும்** = இன்பம் அதிகமாவ தற்குத் துணையாகும், (328).

**நன்றி** = நன்மை, (67, 108); அறம், (97, 652, 994); உதவி, (102, 104, 110).

**நன்றியில் செல்வம்** = தனக்கும் மற்றவர்களுக்கும் உதவாத செல்வம், (101). [திருக்குறளில் வரும் 101-வது அதிகாரம் 'நன்றியில் செல்வம்'. பணம் சம்பாதித்துவிட்ட ஒருவன், அந்தப் பணத்தைத் தனக்கும் பயன்படுத்திக் கொள்ளாமல், மற்றவர்களுக்கும் பயன்படுத்தா மல் இருக்கின்றானே அவனுக் காகக் கூறப்பட்ட விளக்கம் இந்த அதிகாரம்.]

**நன்றிக் கண்** = அறத்தினிடத்து, (117).

**நன்றிக்கு** = அறத்துக்கு, (128).

**நன்றின்பால்** = நல்லவற்றினிடத்து, (422).

**நன்று** = நன்மை அல்லது நல்லறம், (38, 113, 128); நன்மையுடையது, (111, 125, 150, 152, 157, 197, 222, 226, 259, 297, 308, 323, 404, 456, 655, 673, 715, 815, 967, 1038, 1190); அருள், (253); நல்வினை, (379); நல்ல வழி, (469); உதவி, (1225).

**நன்று அல்லது** = தீமை, (108).

**நன்று ஊக்காது** = அருளை நோக்காது, நல்லவற்றைச் செய்ய நாடாது, (253).

**நன்றே** = நன்மையே, (113).

# நா

**நா** = நாக்கு, *(127, 335, 641).*

**நாகம்** = பாம்பு, *(763).*

**நாகரிகம்** = கண்ணோட்டம், *(580).*

**நாட** = வருந்தித் தேடினால், *(734).*

**நாடா** = அளவற்ற, *(74)*; வருந்தித் தேட வேண்டாத, *(739).*

**நாடாது** = ஆராயாது, *(791).*

**நாடாமை** = செய்வன, தவிர்வன வற்றை - ஆராயாமை, *(833).*

**நாடாம் ஊராம்** = நாடும் தனது ஊராகும், *(397).*

**நாடி** = ஆராய்ந்து, *(96)*; விரும்பி, *(242)*; ஆராய்ந்து, *(504, 511, 516, 553, 561, 948)*; தேடி, *(1214).*

**நாடிய** = ஆராய்ந்த, *(518).*

**நாடு** = வாழும் பூமி, *(397, 553)*; உலகம், *(1323)*; நாட்டின் சிறப்புத் தன்மை, *(74)*. [ஒரு நல்ல நாடு எப்படி இருக்க வேண்டும் என்ற இயல்பு களையும், அதன் சிறப்பு களையும் விளக்கிக் கூறப் பட்டுள்ளது. இது திருக்குறளில் உள்ள 74-வது அதி காரமாகும்.]

**நாடுக** = ஆராய்க, *(520).*

**நாண** = வெட்கப்பட, *(314, 1149).*

**நாணத் தக்கது** = நாணத்தக்க பழி, நாணத் தக்கக் குற்றம், *(1018).*

**நாணுடைமை** = நாண வேண்டிய பழி பாவங்களுக்கு அஞ்சாமை, *(833).*

**நாணால்** = நாணம் இழக்க நேர்ந்தால், *(1017)*; கயிற்றால் உண்டாக்கிய தனது அசைவினால், *(1020).*

**நாணன்** = வெட்கப்பட மாட்டான், *(1018).*

**நாணினை** = வெட்கத்தை, *(1132).*

**நாணு** = நாணம், *(902, 903, 1011, 1162, 1251).*

**நாணுடைமை** = உயர்ந்தோர் தமக்கு ஒத்துவராத செயல் களைச் செய்ய நாணும் பண்பு, *(102)*. [திருக்குறளில் (இது 102-வது அதிகாரம். பெயர் நாண் உடைமை. பார்ப்பவர், கேட்பவர் பழிக் கும் செயல்களையும், அறத் திற்கு மாறான செயல்களை யும், இழிவான செயல்களை யும் செய்வதற்கு ஒருவன் வெட்கப்பட வேண்டும் என் பதே 'நாண் உடைமை' ஆகும்.]

**நாணுபவர்** = அஞ்சுகின்றவர், *(172).*

**நாணுவார்** = பயப்படுவார், *(433, 1015).*

**நாண்** = வெட்கம், நாணம், இழிவான செயல்கள் மூலம் வருவது, *(502, 902, 907, 924, 951, 952, 960).*

**நாண் ஆள்பவர்** = நாணத்தின் முக்கியத்துவத்தையும் சிறப் பையும் அறிந்தவர், அதனை எக்காரணம் கொண்டும் கை விடாமல் ஒழுகுவார்கள், *(1017).*

**நாண்விடு** = நாணத்தை விடு, (1247).

**நாண்வேலி கொள்ளாது** = நாணை வேலியாகக் கொள்ளாது, (1016).

**நாமம்** = அச்சம், (149); பெயர், (360).

**நாம்** = நாங்கள், (1195).

**நாரின்மை** = ஈரமின்மை, (958).

**நால்** = நான்கு, (950).

**நார்** = இரக்கம், அன்பு, (833, 958).

**நாவாய்** = மரக்கலம், (496).

**நாவினாற் சுட்டபுண்** = கொடுமையான, துடுக்கான சொற்களால் சுட்ட புண், (129).

**நாளென** = நாள் என்கிற சிறு கால அளவு போல, (334).

**நாளேம்** = நாளையுடையோம், (1278).

**நாளை** = நாட்களை, (776).

**நாளொற்றி** = சுவற்றில் நகத்தால் கீறிக்கிறி, அவற்றைக் கொண்டு நாட்களை எண்ணிடும் குறி, (126).

**நாறாமலர்** = மணம் கமழாத மலர், (650).

**நாற்றம்** = மூக்கால் முகர்ந்து அறிவது, (27); மணம், (1113, 1274).

**நான்கின்** = நான்கினது, (501, 743).

**நான்கு** = நாலு, (35, 146, 382, 390, 513, 605, 766, 953).

# நி

**நிகழ்பவை** = நடப்பவை, (582).

**நிச்ச** = நித்திய, (532).

**நிணம்** = கொழுப்பு, (1260).

**நிரந்தவர்** = கூடி நடப்பவர், (821).

**நிரந்து** = ஒழுங்காகக் கோத்து, (640).

**நிரப்பிடும்பை** = வறுமை நோய், சுரத்தலாகிய வறுமைத் துன்பங்கள், (1056).

**நிரப்பிய** = தேடி நிரப்பிய உணவை; பொருட் குறை நிரப்ப வேண்டி, (229).

**நிரப்பு** = வறுமை, (532, 1048, 1056, 1060).

**நிரம்பிய** = நிறைவான அறிவைப் பெறுவதற்கேதுவாகிய, (401).

**நில** = நிலத்தினது, (234); நிலத்தையுடைய, (544).

**நிலக்கு** = நிலத்திற்கு, (570, 572, 1003).

**நிலத்தில் கிடந்தமை** = விதை நிலத்தின் இயல்பை; நிலத்தின் தன்மையை, (959).

**நிலத்து** = பூமியில், (28, 68, 307, 413, 496, 526, 898).

**நிலத்தோடு** = நிலத்துடன், (499).

**நிலமிசை** = வீட்டுலகின் கண், (3).

**நிலம்** = பூமி, (151, 239, 990, 1040); நாடு, (386); தரை, (1039).

**நிலவரை** = நிலத்தின் எல்லையை, (234).

**நிலன்** = நாடு, (383); தரை, (1094, 1114).

**நிலை** = நிற்றல், (255); துன்ப நிலை, (325).

**நிலை இல்லை** = அந்த துறவறத்தில் நிற்குமாறும் இல்லை, (1036).

**நிலை தளர்ந்தற்று** = நிலை குலைந்தது போலாகும், (716).

**நிலை மக்கள்** = பின் வாங்காத போர் வீரர், (770).

**நிலைமையான்** = நிலைமையினையுடையவன், இயல்பினையுடையவன், (273).

**நிலையாமை** = பிறப்பு - இறப்புடைய நிலையாத தன்மை, (349).

**நிலையில்** = ஒழுக்கத்தில், (124).

**நிலையின** = நிலையுள்ளன, (331).

**நில்லன்மின்** = நில்லாதீர்கள், (771).

**நில்லாத** = நிலையில்லாத, (331).

**நில்லாது** = நிலைக்காமல், (392).

**நிழலது** = நிழலிலிருப்பது, (1309).

**நிழலவர்** = கருணையுடையவர், (1034).

**நிழல்** = சாயை, (108); நிழலின் கீழுள்ள மண், தண்ணளி, (1034).

**நிழல் நீரும்** = நிழலிடத்து நீரும், நிழலும் நீரும், (881).

**நிறுத்து** = நிறுத்தி விட்டு, (1132); உண்டாக்கி விட்டு, (1174).

**நிறை** = நிரம்பிய, (28, 782, 1315); கற்பு, (57); சால்பு, (154); மறை பொருளை மறைத்து வைக்க வேண்டிய, (864, 917, 1138, 1251, 1254).

**நிறை அழிதல்** = மனத்தில் இருப்பவற்றைத் தலைவி அடக்கி வைத்திருக்க முடியாமல் வாய் விட்டுச் சொல்லுதல், (126). [இது திருக்குறளில் உள்ள 126- வது அதிகாரம். பெயர் 'நிறை அழிதல்'. தனது மனத்தில் மறைத்து வைத்திருக்க வேண்டியவற்றை மறைத்து வைக்காமல் வேட்கைக் கொந்தளிப்பால் வெளியிடும் தலைவி நிலையை எடுத்துரைக்கும் பகுதி இது.]

**நிறைந்த** = நிரம்பிய, (1117, 1272).

**நிறைந்தற்று** = நிரம்பினாற் போன்றது, (215, 523).

**நிறைமொழி** = கருணையோடு கூறுறுதலும், கடுஞ்சினக் கடுப்போடு கூறுதலும், அந்தந்தப் பயன்களைப் பயக்கும் மொழி, (28).

**நிறைமொழி மாந்தர்** = முற்றும் துறந்த முனிவர், கல்வியும் ஒழுக்கமும் நிறைந்தவர், (28).

**நிறைய** = மிகுதியாகவே, (1282).

**நிறையுடைமை** = நிரம்பிய நற்குணங்கள், (154).

**நிற்க** = ஒழுகுக, (391); முகம் நோக்கி நிற்க, (708).

**நிற்பேம்** = இருப்போம், (1260).

**நினைக்க** = சிந்தனை செய்க, எண்ணுக, (250).

**நினைக்கப்படும்** = ஆராயப்படும், சிந்திக்கப்படும், (169).

**நினைத்தக்கால்** = அவரது கொடுமைகளை நினைந்தால், (1296).

**நினைத்து** = நெஞ்சே நீ நினைத்துப் பார்த்து, (1241); நான் காதலியின் உறுப்புக்கள் அழகையே நினைத்து, (1320).

**நினைந்து** = எண்ணியெண்ணி, *(1209).*

**நினைப்ப** = நினைத்தால், *(1202).*

**நினையார் கொல்** = நினைக்காமல் இருக்கின்றாரோ, *(1203).*

**நின்றக்கடை** = நீங்காதபோது, *(1019).*

**நின்றவர்** = நின்ற வீரர், *(771).*

**நின்றன்னார்** = நிலை பெற்றார் போன்ற பணம் பெற்றவரும், *(898).*

**நின்றாரின்** = பிறர் மனைவி விரும்பி அவர் வாயிலில் சென்று நின்றவர் போன்றே, *(142).*

**நின்று** = இடையில் நீங்காத, *(11).* இது அய்ந்தாம் வேற்றுமைச் சொல்லுருபு. (இங்கே நிற்ப என்ற சொல், நின்று என்று திரிந்து நின்றது. இது **பரிமேலழகர்** கூறும் இலக்கண விளக்கம்.)

# நீ

**நீ** = நீ, *(1123, 1242).*

**நீக்கப்பட்டார்** = கைவிடப்பட் டார், *(920).*

**நீக்கி நிறுத்து** = நீக்கி நிறுத்தி விட்டு, *(1132).*

**நீக்கியார்** = போக்கினவர், பல உயிர்களைப் பல உடல்களி லிருந்து நீக்கியவர்கள், *(330).*

**நீங்க** = கெட, *(358).*

**நீங்கலர்** = நீங்க மாட்டாத, பிரிய மாட்டாத, *(1216).*

**நீங்கா** = ஒருபோதும் நீங்க மாட்டா, *(383).*

**நீங்கி** = தவிர்த்து, *(246)*; நீக்கி, நீங்கி, *(252).*

**நீங்கியவன்** = பற்று நீக்கியவன், துறந்தவன், *(341).*

**நீங்கின்** = பிரியன், *(495, 1104, 1155).*

**நீடு** = நீண்ட காலம், நெடுங் காலம், *(3, 6)*; நீட்டித்தல், *(566)*; நெடிது, *(1312).*

**நீடு இன்றி** = நீடிக்காது, *(566).*

**நீடுக** = நீளுக, நீட்டிப்பதாக, *(1329).*

**நீடு வாழ்க** = நெடுங்காலம் வாழ்க, *(1312).*

**நீடு வாழ்வார்** = இம்மை, மறுமை இரண்டிலும் நீண்ட காலம் வாழ்வார், *(6).*

**நீட்டம்** = நீளம், *(525).*

**நீட்டலும்** = மயிரை வளர்த்த லும், *(280).*

**நீட்டி** = நீளமாக, குறைக்காமல், *(706).*

**நீத்தக்கடை** = என்னை விட்டுப் பிரிந்த பின்பு, *(1149).*

**நீத்தார்** = துறவிகள், *(21)*; நீங்கினார், *(1220).*

**நீத்து** = நீங்க - நீப்ப என்பது நீத்து எனத் திரிந்து வந்தது, *(1262).*

**நீந்தல்** = தண்ணீரில் நீந்தி கொண் டிருக்க மாட்டார், *(1170).*

**நீந்தார்** = தண்ணீரில் மூழ்குவார், நீந்தமாட்டார், *(10)*.

**நீந்தி** = காதல் வெள்ளத்தில் நீந்தியும், *(1167)*.

**நீந்தும்** = கடக்கும், *(1164)*.

**நீப்பர்** = நீங்குவார்கள், *(969)*.

**நீப்பினும்** = உடலை விட்டு நீங்கிப் போவதேயானாலும், *(327)*.

**நீப்பின்** = பிரிந்தால், *(1154)*.

**நீர** = தன்மையுடையன, *(34, 219, 782)*.

**நீரது** = தன்மையுடையது, *(221, 745)*.

**நீரர்** = பணிந்து நடக்கும் தன்மை யுடையவர், *(1319)*.

**நீரவர்** = அறிவுடையோர், *(782)*.

**நீரள்** = இயல்புடையவள், *(1111)*.

**நீராடி** = நீரில் மூழ்கியாடி, *(278)*.

**நீரான்** = தண்ணீரால், *(298)*.

**நீரான் அமையும்** = நீரால் உண்டாகும், *(298)*.

**நீரினும்** = பயிருக்கு நீர்ப் பாய்ச்சு வதைக் காட்டிலும், *(1038)*.

**நீரென்று** = நீர் கொடு என்று, *(1066)*.

**நீரை** = நல்ல மென்மையான தன்மை, *(1111)*.

**நீர்** = கடல், *(13)*; தண்ணீர், *(20, 215)*; கண்ணீர், *(71, 1174)*; குணம், *(605)*.

**நீர்அறும்** = நீர் வற்றிப் போகட் டும், *(1177)*.

**நீர்த்தது** = தன்மையினை உடையது, *(431, 596, 777, 1143)*.

**நீர்மை** = தன்னியல்பு, செல்வம், *(17)*; தன்மை, *(195)*; மடம் என்ற பெண் பண்புகளுள் ஒன்று, *(1272)*.

**நீழலவர்** = ஈகைப் பண்புடையவர், *(1034)*.

**நீழல்** = கொற்றக் கொடை நிழலில், *(1034)*.

**நீளவிடல்** = தேவைக்கு மேல் விடுதல், *(1302)*.

**நீளும்** = உயரும், *(1022, 1147)*.

**நீள்** = நீண்ட, பரந்த, *(234)*; இடையறாத, *(1022)*.

**நீள்வினை** = ஓய்வில்லாமல் செய்யும் செயலால், *(1022)*.

# நு

**நுசும்பு** = இடை, *(1115)*.

**நுட்பம்** = நுண்மையான, கூர்மை யான, *(636)*.

**நுணங்கிய** = நுணுகிய, நுட்ப மான, *(419)*.

**நுணுக்கம்** = நுட்பம், *(132)*. [இந்த அதிகாரம் திருக் குறளில் 132-வது அதிகார மாக ‘புலவி நுணுக்கம்’ என்ற பெயரிலே அமைந்துள்ளது. தலைவனும், தலைவியும் இணைபிரியாது இருக்கும் போது, தலைவனிடத்திலே பிணங்கிக் கொள்வதற்கு காரணம் எதுவும் இல்லாதிருந் தும், ஏதோ ஒரு நுட்பமான காரணம் இருப்ப தாகக் காட்டித் தலைவி, தலைவனோடு புலத்தல் விவரத்தை விளக்குகின்றது.]

**நுண்** = நுட்பமான கூரிய (407, 424).

**நுண்ணிய** = நுட்பமான பொருள்களையுடைய, *(373)*.

**நுண்ணியம்** = நுட்பமான அறிவுடையேம், *(710)*.

**நுண்ணியர்** = நுட்பமானவர், *(1120)*.

**நுண்மாண் நுழைபுலம்** = நூல்களில் புகுந்து நுணித்தகன்று அறியும் கூரிய அறிவு, *(407)*.

**நுதல்** = நெற்றி, *(1011, 1238, 1328)*.

**நுதற்கு** = நெற்றிக்கு, *(1088)*; பெண்களுக்கு, *(1123)*.

**நுதுப்பேம்** = அவிப்போம், *(1148)*.

**நுமர்** = உமக்கு வேண்டியவர், *(1318)*.

**நுழை** = ஆராய்ச்சியுடைய; நுணுகிச் சென்ற, கூரிய, *(407)*.

**நுழைந்து** = புகுந்து, *(130)*.

**நுனி** = முனை, *(476)*.

# நூ

**நூலர்** = அரசு நீதியை அறிந் தவர், *(683)*.

**நூலாருள்** = நூலறிவுடைய அமைச்சரிடையில், *(683)*.

**நூலும்** = அரசியல் நூலும், *(581)*.

**நூலொடு** = அறிவு நூல்களோடு, *(726)*.

**நூலோடு** = நூலறிவோடு, *(636)*.

**நூலோர்** = அற நூலார், *(322)*; மருத்துவ நூலார், *(941)*.

**நூலோர்க்கு** = நீதி நூலுடையவர்களுக்கு, *(533)*.

**நூல்** = புத்தகம், *(373, 401)*; ஆலோசனை, *(440)*; மறை நூல், *(543)*; நூற் பொருள், *(783)*; பஞ்சு நார் முதலிய வற்றால் முறுக்கிய நூல், *(1273)*.

**நூல் இன்றி** = புத்தகங்களைப் படிக்காமல்; படித்து உரிய அறிவு நிரம்பாமல், *(401)*.

**நூல் வல்லானை** = அரசு நீதியில் வல்லவனை, *(683)*.

**நூறு** = நூறு என்ற எண், *(932)*.

**நூற்கும்** = வேத நூல்களுக்கு, அற நூல்களுக்கு, *(543)*.

# நெ

**நெகிழ** = மெலிவடைந்து வாடவும், *(1236)*.

**நெஞ்சத்தர்** = நெஞ்சில் உள்ளவராக, *(1218)*.

**நெஞ்சத்தார்** = நெஞ்சில் உள்ளார், *(1128)*.

**நெஞ்சத்தான்** = உள்ளமுடையவன், *(169, 185)*.

**நெஞ்சத்து** = அன்பால், *(786)*; உள்ளத்துடன், *(910)*.

**நெஞ்சத்தை** = உள்ளத்தை, *(1252)*.

**நெஞ்சம்** = மனம், உள்ளம், (116, 253, 272, 706, 917, 1259, 1299).

**நெஞ்சின்** = உள்ளத்தால், (276, 917); உள்ளத்துடன், (1297); நெஞ்சினையுடைய, (1053).

**நெஞ்சு** = உள்ளம், (281, 293, 842, 1081, 1264, 1284, 1291, 1295, 1296, 1298); உள்ளமே, (1200, 1242, 1246, 1248, 1249, 1291, 1292).

**நெடிது** = நெடு நாட்களாக, (562, 943).

**நெடிய** = நீண்டனவாய், (1169).

**நெடும்** = ஆழமான, (495); நீண்ட, (496); பெரிய, (566).

**நெய்யால்** = நெய்யினால், (1148).

**நெருஞ்சிப் பழம்** = நெருஞ்சி முள் போல துன்பம் செய்யும், (1120).

**நெருநல்** = நேற்று, (336, 1048).

**நெருநற்று** = நேற்று, (1278).

**நெருப்பினுள்** = தீயுனுள், (1049).

**நெறி** = நூல் முறை, (324, 356, 477).

# நே

**நேரா** = கூடாமலிருந்து, (821).

**நேர்** = ஒத்தவர், (813).

**நேர்ந்தேன்** = உடன்பட்டேன், (1181).

**நேர்வது** = உடன்பட்டுக் கொடுப்பது, (733).

# நொ

**நொந்தது** = வருந்தியது, (877).

**நொந்தார்** = வருந்தினார், (1308).

**நொந்து** = வருந்தி, (157, 1236).

# நோ

**நோ** = துன்பம், (157).

**நோக்க** = பார்க்கும்போது, (90, 1098).

**நோக்கப்படும்** = பார்க்கப்படும், (1047).

**நோக்கம்** = பார்வை, (1085, 1092).

**நோக்கா** = ஆராயாத, (184).

**நோக்காக்கால்** = பார்க்காத நேரத்தில், (1094).

**நோக்காத** = பார்க்காத, உட்கொள்ளாத, (148).

**நோக்காது** = நினைப்பதும், செய்யாது, (1009).

**நோக்காமை** = பாராமை, (1095).

**நோக்கான்** = அற நூலை படிக்க மாட்டான், பாரான், (865).

**நோக்கி** = பார்த்து, (93, 189, 528, 673, 701, 708, 1093, 1094, 1173, 1297); கருதி, (189); எதிர்பாராது, (542); குறிப்பாலறிந்து, (708).

**நோக்கினாள்** = என்னைப் பார்த்த அந்த அழகுடைய பெண், (1082); பார்த்தாள், (1093).

**நோக்கு** = பார்வை, (1082, 1089, 1091, 1097, 1099, 1109).

**நோக்கும்** = பார்க்கின்ற, (1094).

**நோதக்க** = வெறுக்கத்தக்க வற்றை, (805).

**நோதல்** = வருந்துதல், (341, 1308).

**நோய்** = துன்பம், (261, 315, 359, 429, 442, 1160, 1162, 1174, 1200, 1226, 1241, 1243, 1266, 1303); தீதானவை, (320); குற்றம், (851); உடல் நோய், (848, 853, 941, 946, 947, 948); காமநோய், (1091, 1147, 1159, 1171, 1175, 1176, 1183, 1227, 1255, 1280, 1301); வினைப் பயன்கள், (360).

**நோய்க்கு** = துன்ப நீக்கத்திற்கு, (1102).

**நோய்ப் பால** = துன்பங்களைத் தரும் தீய செயல்கள், நோய் செய்து உயிர்கொல்லும் தீ வினைகள், (206).

**நோவாதவர்** = நோன்பு செய்யாதவர், தவம் செய்யாதவர், (270).

**நோவது** = வருந்துதல், (237, 1242).

**நோவல்** = வருந்தித் துன்புறுகிறேன், (1236).

**நோவற்க** = துன்பத்தைச் சொல்லாதே, (877).

**நோவார்** = நொந்து கொள்ளாதவராய், (287).

**நோற்கிற்பவர்** = பொறுத்துக் கொள்பவர், (159). நோன் - பகுதி, இல் - சாரியை, இடைச் சொல், பகர ஒற்று, எதிர் கால இடைநிலை, அர் - விகுதி, அ - சாரியை, வகர ஒற்று உடம்படுமெய். இது எதிர் கால வினையாலணையும் பெயர்.

**நோற்கிற்பவர்க்கு** = நோன்பு செய்யும் வலிவுடையார்க்கு, (267).

**நோற்பார்** = நோன்பு செய்பவர்கள், (270); நோயைப் பொறுப்பவர்கள், (160).

**நோற்பாரின்** = தவம் செய்வார் நிலையைவிட, (48); பொறுப் பவரைவிட, (160).

**நோற்றலின்** = தவம் காரணமாக வருகின்ற, (169).

**நோனா** = காதலியின் பிரிவால் ஏற்பட்ட வருத்தத்தைப் பொறுக்க முடியாத, (1131); காதலரின் பிரிவைத் தாங்க முடியாத, (1163).

**நோன்பிற்கு** = தவம் செய்வார்க்கு, (344).

**நோன்மை** = தவம் செய்தலென்பது, (984); வலிமை, (48).

**நோன்றல்** = பொறுத்தல், (261).

# ப

**பகச் சொல்லி** = பிளவு உண்டாகு மாறு புறங்கூறி, (187).

**பகடு** = எருது, (624).

**பகலும் இருளின் பால** = பகலிலும் இருளில் இருப்பதாகவே ஒருணர்வு தோன்றும், (999).

**பகல்** = கூற்றில், காலத்தில், (319); பகற்பொழுது, (481, 1227); கூடாமை, வேறுபடு தல், மாறுபடுதல், (58, 852).

**பகவன்** = கடவுள், (1); பகவன் என்ற வடசொல்லின் வேறு பாடெனக் கூறுவர் சிலர். பகவன் என்பது பகலவன் திரிபு என்பர் வேறு சிலர். பழங்காலத் தமிழர்கள் பகலவனையே முதன் முதல் கண் கண்ட கடவுள் எனக் கொண்டதாக ஆய்வாளர் கள் அறிவிக்கின்றனர்.

பாவேந்தர் பாரதிதாசன், இப் பகவனை பகவு + அன் என்று சொல் பிரித்து ஆண்பால் இறுதி நிலை பெற்றது. பகல் - அறிவு ஆகு பெயர். பகவன் ஆண் பாலாற் சொல்லப்படினும், பகவு அஃதாவது உணர்வு என்றே கொள்க என்கிறார். அதாவது, பகலவன் என்றே பொருள் கொண்டார்.

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரும், தனது தமிழ் மரபுரை சுருக்கத்தில் பகவனை, 'முதற்பகவன்' என்றே சுட்டுகின்றார்.

வித்தியா ரத்தினம் டாக்டர் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி, தனது திருக்குறள் பாலருரையில், பகவன் என்பதற்கு 'கடவுள்' என்று கூறுகிறார்.

டாக்டர் நாவலர் நெடுஞ்செழி யன் தனது திருக்குறள் தெளி வுரையில், 'பகவன்' எனில் 'அறிவன்' என்று உரை கூறி, பகவு + அன் = பகவன் என்று சொல் பிரித்து, பகவனை, பகுத்தறிபவன். அதாவது அறிவிற் சிறந்தோன் என்று ஆய் பொருள் அறிவித் துள்ளார். ஆதிபகவன் இரு பெயரொட்டுப் பண்புத் தொகை அன்று என்று அவர் மறுத்துள்ளார்.

'உலகம்' ஆதிபகவன் என்ற கடவுளை முதலாக உடையது என்று திருக்குறளார் முனிசாமி, தனது கடவுள் வாழ்த்து அதி காரத்தில் குறிப்பிடுகிறார்.

எனவே, பகவன் என்ற சொல் லுக்குரிய சரியான உரையைக் கூறிட அறிஞர்கள் திணறுகிறார் கள். அவரவர் மதத்திற்கேற்ற வாறு உரை கூறுவது இன்றும் ஒரு தீராதச் சிக்கலையே பகவன் உருவாக் கிக் கொண்டிருக்கிறார்! எதிர்கால 'அறிவு' எப்படிக் கூறுமோ தீர்ப்பு?

**பகவு** = பிளவு, பாதி, (889).

**பகா எண்** = பகைத்து நீங்காமல், (876).

**பகுதியால்** = நண்பர், பகைவ ரென்ற பல்வேறுபட்ட பகுதி யினர், (111).

**பகுத்து** = பங்கிட்டு, பிரித்துக் கொடுத்து, (322).

**பகை** = மாறுபடும் பண்பு, எதிரி யாகுந் தன்மை, (146, 207).

**பகைமை** = பகையாகும் குணம், (707).

**பகையின்** = அறுக்கும் கருவி போல, (883).

**பகையுள்** = பகையுள்ளவிடத்தும், பகைவருள்ளும் - **பரிதியாருரை,** (995).

**பக்கு** = பிளவு, (1068).

**பக்குவிடும்** = பிளந்து போகும், (1008).

**பசக்க** = பசப்பதாக, பசப்பு - மேனியின் நிறம் வேறு படுதல், (1089).

**பசந்த** = உடல் நிறம் வேறு பட்ட, (1181).

**பசந்து** = வெளுத்து, (1232, 1238).

**பசப்பு** = தலைவனின் பிரிவாற்றா மையால், தலைவிக்கு வருவ தோர் நிறவேறுபாடு, (1182).

[இந்த அதிகாரத்தின் பெயர் பசப்புறு பருவரல். திருக்குற ளில் 119-வது அதிகாரமாக உள்ளது. தலைவன் பிரிவாற்றாமை காரணமாக, தலைவியின் உடலின் கண் பசுமை கலந்த பசலை நிற வேறுபாடு ஏற்பட்டு அதனால் தலைவி வருந்தி தோழிக்குக் கூறும் பகுதி].

**பசப்பு என** = பசந்தாளென, (1190).

**பசப்புக் கள்ளம்** = பசப்பு கள்ள மாக வந்து நின்றது, (1184).

**பசலை** = பசலை நிறமானது, (1183).

**பசி** = உணவு இல்லாமையால் தோன்று பசிப்பிணி, (13, 225).

**பசி ஆற்றல்** = பசியைப் பொறுத். தல், பசி தணித்தல் (225).

**பசித்து** = பசி கொண்டு, (944).

**பசிப்பர்** = பசித்திருப்பர், (837).

**பசும்** = பச்சை, பச்சென்றிருக்கும், (16); சுடாத சூளையிலே வேகாத கல், (660).

**பசையினள்** = அவள் என்மீது அன்பும், இரக்கமும் கொண்ட இளகினவளாகி, (1098).

**பட** = உண்டாக, (201, 237); படும் வகை, (524); படுதலை, (922).

**படர்** = பிரிவினால் உண்டாகிய வருத்தம், (120).

[இது, திருக்குறளில் வரும் 'தனிப்படர் மிகுதி' எனும் 120-வது அதிகாரம். தலை வன் அன்பு செலுத்தாமல் இருப்பதாகவும், தலைவி மட்டுமே அவனிடம் காதலாடுவ தாகவும் எண்ணி, தனது தனிமைத் துன்பத்தைச் சொல்லி வருந்துகிறாள்.]

**படர்தரும்** = பரவி வரும், (1229).

**படல்** = துயிலுதல், (1136, 1175).

**படல் ஆற்றா** = கண்கள் தூங்க முடியாதனவாக, (1175).

**படா** = ஒலியா, ஒலிக்க மாட் டாத, (1115); படாமையால், (1140); நிமிர்ந்த, சாயாத, (1087).

**படாஅதவர்** = அனுபவியாதவர், (623).

**படாஅதி** = என்றும் நீ மறையா திருப்பாயாக, (1210).

**படாஅமை** = உண்டாகாமல், (38).

**படாஅறு** = படாமையால், (1140).

**படாம்** = வேழத்தின் முகத்தி லிடும் ஆடை, அதாவது கண்களை மறைக்கும் முகபடாம் என்றும் கூறுவர், (1087).

**படி** = பூமி, (606).

**படிவத்தர்** = தவவேடத்தர், (586).

**படிறு** = வஞ்சனை, (91).

**படிற்று** = குற்றமுடைய, மறைந்த, (271, 275).

**படின்** = உண்டாகுமானால், (216, 217); தாழுமாயின், (272); வாழின், குடியிருப்பின், அகப் படின், (558); உற்றால், (654); பிறக்குமாயின், உளதாயின், (886); இருக்குமாயின், போய் தங்கிவிடுமானால், (977).

**படு** = வரும், உண்டாகின்ற, (172); படுக்கின்ற, (279); பெரும், பெறும், (676).

**படுக்கும்** = ஆக்கும், உண்டாக் கும், (372).

**படுத்து** = வளர்த்து, (512).

**படும்** = படுவர், (30).

**படுபவோ** = உறுவரோ, (512).

**படுபக்கு** = உண்டாவதை, வருவதை, (136, 164).

**படுப்பது** = படுத்துவது, உறுவிப் பது, (460); நிலை நிறுத்து வது, (465).

**படும்** = படுவன், (50, 214); படுதல் வேண்டும், (265, 335, 698); தரும், (412); தங் கும், (933); வளரும், (947); படுவான், (1047); படுவர், (1078); வெளிப்படும், படரா நிற்கும், (1138, 1254).

**படுவ** = உண்டாவன, (172).

**படை** = கொலைக் கருவி, (253); வீரர்கள் குழு, (381, 764, 768, 769); கருவி, ஆயுதம், (555, 985, 1258); படைக்கலம், கொலைக் கருவி, (828, 1324).

**படையான்** = படையையுடை யவன், (478).

**பட்ட** = உண்டாகிய, நின்ற, (408, 878); உற்ற நோய்கள், (1140).

**பட்டடை** = நகை செய்யும் தட்டார், தறிப்பதற்காக அடியில் வைத்திருக்கும் கட்டை, (821).

**பட்டன்று** = கிடந்தது, (999).

**பட்டாங்கு** = உண்மையாக, நிலை யாக உள்ளபடி, (1180).

**பட்டி** = மனம் போனபடி அலைபவன், (1074).

**பட்டு** = தொடர்பு படுதலால், (996).

**பணி** = மெல்லிய, (1121) பணிவான, (1258).

**பணிதல்** = அடங்கி நடத்தல், (125); தாழ்ந்து அல்லது பணி வாக ஒழுகுதல், (963, 985).

**பணிமொழி** = பணிவுள்ள இனிய சொற்கள். அதாவது நம்மை விட அன்பு மிகுதியுடையவர் கள் சொல்லும் சொற்கள், (1258).

**பணியும்** = பணிந்து ஒழுகும், (978).

**பணிவு** = வணக்கம், தாழ்மை, (95, 978).

**பணை** = பெருமை, பருத்த உடல் மெலிந்து போய், (1234).

**பணை நீங்கி** = திண்ணுடல் வாடி, மெலிந்து, (1234).

**பண்** = இசை, (573).

**பண்டம்** = பொருள், (475).

**பண்டு** = முன்பு, (1083, 1133).

**பண்பு** = இயல்பு, குணம், (45, 62).

**பண்புடை** = நல்ல குணங் களைப் பெற்ற, (62).

**பதடி** = பதர், (196).

**பதத்தால்** = எளிமையாகப் பழகு பவராதல், செவ்வியராதலால், காலத்தையுடையராதலால், (991).

**பதத்தான்** = முறைவேண்டி வந்த வர்கள் எளிமையாகப் பார்க்க முடியாதபடி, (548).

**பதி** = இடம், (1015); வாழிடம், (1229).

**பதியில்** = தமது இடங்களில் நிலையாக நின்று, (1116).

**பத்து** = பத்து என்ற எண், (450, 817).

**பயக்கும்** = தரும், கொடுக்கும், (97, 123).

**பயத்த** = பயனைச் செய்வன, பயனைத் தருவன, (705).

**பயந்தற்று** = பருவ கால மழை போலும், (1192).

**பயப்பது** = அறம் புரிவான்; வினைவிப்பவன், (685, 690).

**பயம்** = பயன், (354, 740, 758).

**பயவா** = ஒன்றுக்கும் பயனிலாத, (406); நன்மை பயக்காத செயல்கள், (439, 652).

**பயனில** = நமக்கும், மற்றவர் களுக்கும் பயன்தராதவற்றை, (191).

**பயனுண்டாயின்** = கெட்ட பயனுண்டாகுமானால், (128).

**பயன்** = நன்மை, (2); பதிலுதவி, (103); பயன்படுகின்ற; (216); விளைவு, விளைச்சல், (239); பால், (560); அறம், (901); பொருள், (912).

**பயன் சாரா** = அறனோடு பொருந்தி வராத, (194).

**பயன் மரம்** = மக்களுக்குப் பயன் படும் பழங்கள் தரும் மரம், (216).

**பயன்படுவர்** = உள்ளதைக் கொடுப்பர், (1078).

**பயில்தோறும்** = பழகுந்தோறும், (783).

**பரத்த** = பரத்தையரோடு செல் கின்றவர், (1311).

**பரிதல்** = வருந்துதல், (1243).

**பரந்து** = அலைந்து, (1062).

**பரிந்து** = வருந்தி, (88, 132, 1243); கூறுபடுத்து, (1172); இரங்கி, (1248).

**பரிந்தோம்பி** = வருந்திப் பாது காத்து, (88).

**பரியது** = உடல் பெருத்தது, பருமனுடையது, (599).

**பரியினும்** = வருந்திக் காப் பாற்றினாலும், (376).

**பரியும்** = பழி தரும் செயல்களைச் செய்ய அஞ்சியும் என்ற இந்தச் சொல் 502-ம் குறளின் 'வடுப்பரியும்' என்ற குறளில் உள்ளது. வடு = குற்றம், பழி என்பர் நூலோர். 862-வது குறளில் 'என்பரியும்' என்றொரு சொல் வருகிறது. அந்தச் சொல்லை என்பு, அரியும் எனப் பிரித்த உரையாசிரியர் **காளிங்கர்** எலும்பையும் அரியும் எனப் பொருள் கண்டார் என்பது சிந்தனைக்குரியது.

**பருகுவன்** = எல்லா புலன் களாலும், முழு இன்பத்தையும் அனுபவிப் பேன், (1266).

**பருகுவார்** = குடிப்பார், (811).

**பருவத்து** = காலத்து, (218, 490).

**பருவந்து** = வறுமையால் வருந்தி, (83).

**பருவம்** = காலவரையறை, (1028).

**பருவரல்** = வருத்தம், (1197, 1240). [திருக்குறளில் 119- வது அதிகாரமாகப் 'பசப்புறு பருவரல்' என்ற ஒன்றுள்ளது. தலைவன் பிரிவு தாங்காமை யால் தலைவியின் உடலில் பசுமை கலந்த பசலை என்ற நிறவேறுபாடு உண்டாகி, அதனால், தலைவி வருந்தி,

அது பற்றித் தோழியிடம் கூறி வருந்துவது இது].

**பருவரார்** = வருத்தப்பட மாட்டார், (1126).

**பல** = ஒன்றுக்கு மேற்பட்ட, அநேகம், (140).

**பலர் நாண** = பலர் முன் நான் வெட்கப்படும்படி, (1149).

**பல்** = பல, ஒன்றுக்கு மேற்பட்ட, (242).

**பல்கு உரைத் துன்பம்** = பல வகைப்பட்ட துன்பம், (1045). [இரப்பார்க்கு காரணம் உரைப்பதே துன்பம் என்கிறார் **மணக்குடவர்**.]

**பல்லவை** = பல நூற்களை, (728).

**பல்லார்** = பலர், (191).

**பலவாற்றால்** = பல வகைகளால், (242).

**பல் மாயக்கள்ளன்** = பற்பல சூது பொய்யுரைகளைப் பேசும் என் மனம் கவர் கள்வன், (1258).

**பழகிய** = பழைய பழக்க வழக்கப் பண்புகளோடு, (803, 937).

**பழகுதல்** = நெருங்கிப் பழகுதல், (785).

**பழம்** = தொன்று தொட்டு வருகின்ற, காலா காலமாய் இருந்து வருகின்ற, (955).

**பழி** = தீச் செயல், (40, 44); பிறர் பழிப்பதற்குரியது, (62, 137); குடும்பப் பழி, (145, 146, 172, 186, 433); குற்றம், தவறு, (1285).

**பழி அஞ்சி** = பாவத்துக்குப் பயந்து, பணம் சேர்த்து, (44).

**பழிக்கும்** = இகழப்படும், (656).

**பழித்தது** = ஆகாது என்று கூறிய ஒழுக்கத்தை, (280).

**பழியுள்** = பழித்துச் சொல்லப் படுபவற்றுள், (186).

**பழுதெண்ணும்** = தீங்கு செய்ய நினைக்கும், (639).

**பழுத்து** = கனிந்து, (216, 1008).

**பழைமை** = [திருக்குறளில் இது 81-வது அதிகாரம். பழகிய நண்பர்களுடைய உரிமை களைப் போற்றி, அவர் களது நண்பு அறுபடாமல் காத்து, தொடர்புகளால் உண்டான பழைமைகளைப் பாராட்டி மகிழ்தலே பழைமை எனும் பண்பு.]

**பழைமை** = செல்வமுள்ள காலத்தில் தமக்குச் செய்த உதவிகள், (521); உரிமையை அறுத்து விடாத நட்பு, (801).

**பழையம்** = நீண்ட காலம் முதல் தொடர்புடையோம் என்ற உரிமை, (700).

**பழையார்** = பழைய நண்பர்கள், (810).

**பளிங்கு** = கண்ணாடி போன்ற கல், (706).

**பள்ளி** = படுக்கை, (840).

**பறந்தற்று** = பறந்து சென்ற தன்மை, (338).

**பறியா** = பறித்து, பிடுங்கி, (744).

**பறை** = மேளம், (1076, 1115, 1180).

**பற்றற்கு** = கைப்பற்றுவதற்கு, (747).

**பற்றற்றேம்** = ஆதரவற்றவர் களானோம், (88).

**பற்றா** = வெறுப்பன, தீயன, (852).

**பற்றி** = பிடித்து, (347); சார்ந்து, (956).

**பற்றியார்** = பற்றிய அகத்தோர், (748).

**பற்று** = விருப்பு, (275); பிடித்தல், (438); தொடர்பு, (506);

பொருள், (521, 606); பற்றிய இடம், (748).

**பற்றுக** = மனத்தில் பற்றிக் கொள், (350).

**பற்றும்** = செய்க, (350).

**பனி** = நீர், (1232).

**பனி** = நீர் சொரியும், (1232).

**பனுவல்** = நூல், அறநூற்கள், (21).

**பனை** = பனை மரம், (104, 433, 1282).

# பா

**பாகம்** = பாதி, (1092).

**பாக்கியத்தால்** = நல்வினையால், புண்ணியத்தால், (1141).

**பாடற்கு** = பாடுவதற்கு; [பாடல் தொழிலோடு, பாடலோடு - **மணக்குடவர்** உரை], (573).

**பாடு** = பெருமை, (409, 597, 768, 1322) **ஆண்மை, பெருமை என்கிறார் மணக்குடவர்**, (906, 1237); நெறிப்பாடு, (995).

**பாத்தி** = பயிர் விளைந்திட வரப்பிட்டுக் கட்டும் இடம், (465, 718).

**பாத்து** = பகுத்து, (44, 227, 1167).

**பாம்பு** = நாகம், (890, 1146).

**பாய்பவர்** = குதிப்பவர், (1287).

**பாராட்டுதல்** = கொண்டாடுதல், (521).

**பாராட்டும்** = புகழ்பாடும், (994).

**பாராட்டுவானை** = பலகாலும், அடிக்கடி கூறுவானை, (196).

**பாரிக்கும்** = வளர்க்கும், (851).

**பாரித்து** = விரித்து, (193).

**பாரிப்பார்** = பரப்புவார், (916).

**பார்** = கற்பாறை, (1068).

**பார்த்து** = நோக்கி, (86, 487); சீர்தூக்கி, கண்டு, எண்ணி, (676).

**பார்ப்பார்** = காண்பார், (916).

**பார்ப்பான்** = வேதம் படித்தவன், கோயிலில் மந்திரம் ஓதி தூப, தீபம் காட்டுபவன், (134).

**பார்வல்** = பார்வை, (1152).

**பால** = தன்மையுடையவை, கூறுடையவை, பகுதியின, (342, 378, 437, 672).

**பாலவை** = பொருள்கள், (659).

**பாலால்** = கூறுபாட்டால், (279).

**பாலொடு** = பாலுடன், (1121).

**பால்** = பகுதி, (111, 533); பக்கமாக, (118); இடத்தில், (376); வகை, (422, 950); கூட, (999); பசுவின் பால், (1000).

**பாவம்** = கெட்ட செயல், தீ வினை, (186).

**பாவாய்** = பெண்ணே, (1123).

**பாவி** = கொடியவன், கொடியது, (1042).

**பாவை** = பொம்மை, பதுமை, சிற்பம், (407, 1020, 1058).

**பாழ்** = கெடுதலாக, (735).

**பாழ்படுதல்** = கெடுதல், (83).

**பாற்கண்** = பால் +கண் -, (வன்) நிலத்தில், (78).

**பாற்று** = பகுதியது, (11); தன்மையது, (82, 515, 871).

# பி

**பிடித்து** = பிடியளவு, (1037).

**பிணம்** = சவம், (913).

**பிணி** = நோய், (227, 730, 734, 949, 1014).

**பிணி அன்றோ** = பார்ப்பவர் களுக்கு நோய் போல; பொறுத்தற்கு அரியதாம், (1014).

**பிணிக்கு** = நோயைக் குணப் படுத்துவதற்கு, (1102).

**பிணிக்கும்** = கூட்டாகச் சேர்த்துக் கொள்ளும், (570); கவரச் செய்யும், (643).

**பிணை** = பெண்மான், (1085, 1089).

**பிரிதல்** = நீங்குதல், (394, 955).

**பிரிப்பர்** = பிரிப்பார்கள், (187).

**பிரியலம்** = பிரியமாட்டோம், (1315).

**பிரிவாற்றி** = பிரிவுக்குப் பொறுத்து, (1160).

**பிரிவு** = நீங்குதல், (1152); செலவு, (1155).

**பிழை** = குற்றம், (535).

**பிழைத்த** = தவறிய, (772).

**பிழைத்தது** = தப்பியது, (779).

**பிழைத்து** = தவறு செய்து, (896).

**பிழையாது** = தவறாது, (307).

**பிற** = வேறு, (34, 61, 95, 213, 300); மற்றொன்று, மாறான, இயல்புடையவை, (1102); அசை நிலை, (1181, 1184).

**பிற ஆழி** = அறமற்ற, பாவம் சூழ்ந்தக் கடல், பிறவிக் கடல், (8).

**பிறக்கும்** = பிறத்தற்குக் காரணமாக, (1044).

**பிறங்கா** = உண்டாகாத, அதிக மாகாத, (62);

**பிறங்கிற்று** = உயர்ந்தது, விளங் கும், (23).

**பிறப்பின்** = பிறப்பில், (1315).

**பிறப்பு** = பிறவி, (351); தோற்றம், (62, 107, 369); குடிப் பிறப்பு, (133, 134).

**பிறப்பென்னும்** = பிறப்புக்கு காரணம் என்று எண்ணக் கூடிய, (358).

**பிறர்பழி** = மற்றவர்க்கு வரும் பழிக்கு, (1015).

**பிறவாமை** = பிறவாதிருத்தல், (362).

**பிறவி** = பிறத்தல், (10).

**பிறவினை** = பாவச் செயல்கள், (321).

**பிறவும்** = பிறர் பொருளையும், (120).

**பிறற்கு** = மற்றவர்க்கு, (149).

**பிறனியலாள்** = பிறருக்குரியவள், (147).

**பிறன்** = மற்றவன், (49, 141).

**பிறன்கடை** = வேறொருவனது வாயிலில், (142).

**பிறிதின்** = பிற உயிர்களின், (315).

**பிறிது** = வேறொன்றின், மற்றது, (251, 257, 327, 645, 841, 842).

**பிறை** = வளர்மதி, உவா, (782).

**பிற்பகல்** = பகலின் பின் கூறு பொழுது, (319).

**பின்** = பின்வரும் குற்றம் - ஆகு பெயர், (184); பின் செல்கின்ற நீ, (1248).

**பின் சார** = பின்னே நிற்க, (323).

**பின் செல்லா** = பின்னே போகாத, நிலைக்காத, (1255).

**பின் செல்வர்** = அவர்கள் பின்னே செல்கின்றவர்கள் ஆவர், (1033).

**பின் நோக்கா** = பின்வரும் குற்றத்தைப் போக்காத, பின்பு அவனை முகம் ஏறெடுத்துப் பார்க்க விரும் பாத, (184).

**பின்றை** = பின்பு, (518).

**பின்னது** = பின்னாலேதான் நிற்க வேண்டி இருக்கிறது, (1031).

# பீ

**பீடு** = மேம்பாடு, பெருமிதம், (59, 1014); மானம், (968); வலிமை, (1088).

**பீடுநடை** = கம்பீரமான தோற்ற முடைய நடை, (1014).

**பீழிக்கும்** = வருத்தும், (843).

**பீழிப்பது** = வருத்துவது, (1217).

**பீழை** = வருத்தம், (843).

# பு

**புகல்** = நுழைதல், புகுதல், (144, 243, 840).

**புகழ்** = பெருமை, கீர்த்தி, (5, 39, 59, 156, 232, 233, 234, 237, 296, 457).

**புகழ்ந்தவை** = புகழ்ந்து கூறப் பட்ட செயல்கள், (538).

**புகழ்மை** = புகழுடைமை, (533).

**புகுத்தி விடும்** = அடைவித்துவிடும், (608, 616).

**புகும்** = எய்தும், செல்லும், (346).

**புக்கில்** = இருக்கும் வீடு, (340).

**புக்கு** = புகுந்து, (835, 996).

**புடை** = பக்கம், (1187).

**புணரின்** = குற்றமுணர்ந்து வருத்தி உறவு கொள்ள வந்தால், (308).

**புணர்ச்சி** = ஒரே நாட்டுக் காரராதல், நட்பாதல், (785); செம்பும் அதன் மூடியும் சேர்க்கைபோல, (887).

**புணர்தல்** = சேர்க்கை, கூடல், (1109).

**புணர்வு** = சேர்தல், (1155).

**புணை** = தெப்பம், (306, 1134, 1164).

**புதல்** = சிறுசெடி, புதர், (274).

**புதல்வர்** = புத்திரர், அதிகாரம், (7).

[இது, திருக்குறளில் வரும் 7-வது அதிகாரம். இதனைப் புதல்வரைப் பெறுதல் என்பர் சிலர். மறுசிலர் மக்கட் பேறு என்று கூறுகின்றனர்.

புதல்வரைப் பெறுதல் என் றால், ஆண்-பெண் மக்களைப் பெறுதல் என்பது பொருள். மனைவி போல; குழந்தை களும், குடும்ப வாழ்விய லுக்கு இலக்கணம் என்பதால், வாழ்க்கைத் துணை நலத்திற்குப் பின்னர் புதல்வரைப் பெறுதல் என்ற அதிகாரத்தைத் திருவள்ளு வர் பெருமான் எழுதினார் என்று வாதாடுகின்றார்கள் - புதல்வ ரைப் பெறுதல் என்ற உரை அணியினர்.

இதற்கு **பரிமேலழகர்** கூறும் விளக்கம் இது. ''புதல்வனை யும், புதல்வியையும் பொது வாய்க் குறிக்கும் சொல் புதல்வர் என்பதே ஆகும்.

புதல்வர் என்பது புதல்வன் என்ற சொல்லின் பன்மை யெனக் கொண்டு, ''மக்க ளென்னும் பெயர் பெண் ணொழித்து நின்றது என்பது தன் **பரிமேலழகர்** கூறும் ஆய்வு.

திருக்குறள் 67, 69, 70 என்ற மூன்று குறட்பாக்களிலும் கூறப்பட்ட மகன் என்ற சொல்லும், ஆண்-பெண் இரு வரையும் குறித்தல் தகும்.

ஆசிரியர் **தொல்காப்பியனார்; ஆண் மகன், பெண் மகன் எனத் தொல்காப்பிய இலக்கண நூலில் வழங்குகின்றமையின் ஆகலின், புதல்வரைப் பெறுதல் என்பதற்கும் 'மக்கட்பேறு' என்பதற்கும் பொருள் ஒன்றே யாம் - என்று.** 'புதல்வரைப் பெறுதல் - மக்கட்பேறு' என்ற ஓர் அதிகாரத் திற்கு இடப்பட்ட இருவிதத் தலைப்பு ஆய்வணிகள், வாதாட்டங்களுக்கு சமரசம் செய்து வைத்துள்ளார் - **வித்தியா ரத்தினம் டாக்டர் பி.எஸ். சுப்பிர மணிய சாஸ்திரியார்.** எனவே சொல்லாய்வாளர்கள் சிந்திக்க....

**புதை** = அம்புக் கட்டு, (597).

**புத்தேளிர்** = தேவர், (58).

[வான் புகழ் கொண்டோர் இடம் பெறும் புகழ் உலகம் புத்தேள் என்பது. புத்தேள் என்பது, 'புத்தாள்' என்பதன் திரிபுச் சொல்லாகும். புத்தாடை, புத்தாண்டு, புதுப்பானை என்ற சொற்களைப் போன்று வருவது.

நிலவுலகத்தை விட்டு மறைந்த பிறகு, 'சிலர் புகழ் உலகத்தில் நிலைத்து நிற்கும் புகழுடை யோர் ஆகின்றனர். அவர்கள் புதிய புகழ் வாழ்வு எய்தி, புதுமை பெறுகின்றனர்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ் பவர் வானுறையும் தெய்வத் துள் வைக்கப்படும்' என்ற குறளின் கருத்து நோக்கத் தக்கது. வானுறையும் தெய்வம் என்பது புகழுடைய பெரியோரைக் குறிக்கும். புகழ் உலகத்தில் என்றும் நின்று நிலவும் மேலோர் 'புத்தேளிர்' எனக் கருதப்படுவர் - என்று, **நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தனது திருக்குறள் தெளிவுரையில், 'புத்தேளிர்' என்ற சொல்லுக்கு ஆய்வுரை வழங்கியுள்ளார்.** பிற, வாசகர் சிந்தனைக்கே உரிமை.]

**புத்தேளுலகு** = தேவருலகு, (213, 234, 290).

**புத்தேள்** = தேவர், (213, 234).

**புயல்** = மழை, (14).

**புரந்தார்** = தம்மைக் காக்கும் அரசன் கண்களில், (780).

**புரளவிடல்** = நீக்கிவிட வேண்டும், (755).

**புரிந்த** = விரும்பிய, (59, 511, 994); மிக்க, (977).

**புரிந்தார்** = விரும்பினார், (287).

**புரிந்தார் மாட்டு** = அவாவுற்ற வரிடத்து, செய்கின்றவரிடத்து, (5).

**புரிந்து** = விரும்பி, (143); பொருந்தி, (541); மிகச் செய்து, (607).

**புருவம்** = கண் புருவங்கள், (1086).

**புரை** = குற்றம், (292); அறிவு, உயர்வு, (919).

**புலத்தகை** = நிகழும் ஊடலின் சிறப்பேயாகும், (1305).

**புலத்தக்கனள்** = பிணங்கிக் கொண் டாள், புலக்கத் தக்கவளா னாள், புலந்தாள், (1316).

**புலந்தார்** = உலகத்தார், இடத் தின் கண்ணுள்ளவர், (43).

**புலப்பை** = புலன்களை, (343); புலப்பாய், (1301).

**புலந்து** = அவளிடம் வெறுப்புக் கொண்டு, (1039); பிணங்கி, (1246, 1287).

**புலந்துரையாய்** = புலந்து கூடாது கண்ட மாத்திரத்தே கூடுவாய், (1246).

**புலப்பல்** = பிணங்குவேன், (1259).

**புலப்பேன்** = பிணங்குவேன், (1267).

**புலம்** = விளை நிலம், (86); புலன்கள், (174); அறிவு, (407); நூற்பொருள், (716).

**புலம்பல்** = தனிமையுறல். [இது திருக்குறளில் வரும் 121-வது அதிகாரம். பெயர் 'நினைந்தவர் புலம்பல்'. தலைவன் பிரிந்திருக் கும் நிலையில் தலைவனும், தலைவியும் முன்பு பெற்ற இன்பத்தினை நினைந்து, தனித்திருந்து புலம்பும் பகுதி இது.]

**புலவரை** = அறிவிற் சிறந்த வரை, (234); சிலர் தேவர் என் றும் கூறுவர் [புலவர் என்றார் தேவரை; அவர் புலனுடைய ராதலால், **மணக்குடவர்** உரை.]

**புலவி** = பெரிய பிணக்கம், (1306, 1309).

**புலவி நுணுக்கம்** = புலத்தற்குரிய காரணம் இல்லாவிட்டாலும், ஏதோ ஓர் நுட்பமான காரணம் இருப்பதாக நினைத்து, தலைவி தலைவனோடு புலத்தல். இது திருக்குறளில் வரும் 132-வது அதிகாரம்.

**புலன்** = புலன்களால் நுகரப் படுவன, (1101).

**புலால்** = ஊன், இறைச்சி, (257, 260).

**புலி** = வேங்கை, (273, 599).

**புலை** = ஊன் உண்ணும் தொழில், (329).

**புல்** = புன்மை, கீழ்மை, (331, 719, 846, 914, 915, 916).

**புல்சொல்**= இகழ்ச்சிச் சொல், (189).

**புல்லாது** = தழுவாது, (1301).

**புல்லார்** = பொருந்தாத வராய், (755).

**புல்லாள்** = தழுவாதவளாய், (1316).

**புல்லி** = தழுவி, (1187, 1324).

**புல்லினேன்** = தழுவிக் கொண்டேன், (1259).

**புழுதி** = மண், தூசி, (1037).

**புள்** = பறவைகள், புள் என்னும் பறவை, (274).

**புறத்த** = இன்பத்துக்குப் புறம்பானவை, துன்பங்கள், (39).

**புறத்ததாக** = வெளியே இருக்க, (82).

**புறத்தாற்றின்** = புற வழிகளில் - துறவறத்தின், (46).

**புறப்படுத்தான்** = வெளிப்படுத்தினவன், (590).

**புறம்** = காணத பிற இடம், (181, 183, 185); வெளியிடம், (277); உடம்பு, (298); வெளிப்பட, (487); பிறர், (549); எதிர் முகம், (924); பகைவரிடத்து, (933).

**புறன்** = காணதவிடத்து, (182); பிறர் நீங்கின அளவு, (189).

**புற்கென்ற** = மங்கிப் போயின; புன்மையடைந்து விட்டன, (1261).

**புற்கை** = நீர், (737, 1134, 1287); கடல், (1167).

**புனை** = அணிந்த, (107); விலங்கு, (836).

**புற்கை** = கூழ், கஞ்சி, (1065).

**புனைந்துரைத்தல்** = தலை மகளது அலங்கார வகையாற் கூறுதல். [இந்த அதிகாரம் திருக்குறளில் உள்ள 112-வது 'நலம் புனைந்து உரைத்தலாகும்' அதாவது தலைமகனானவன் தலை மகளது சிறப்புக்களை எல்லாம் புனைந்துரையால் சிறப்பித்துக் கூறுவதாகும்.]

**புன்கண்** = துன்பம், (152).

**புன்கணீர்** = புற்கென்ற மென்மையின் விளைவாகிய கண்ணீர், (71).

**புன் கண்ணை** = ஒளியை இழந்திருக்கின்றாய், (1222).

**புன்மை** = குற்றம், (174); கீழ்மை, (185, 329).

# பூ

**பூ** = மலர், (1313).

**பூசல்** = ஊரில் எழுந்த ஆரவாரம், (1237).

**பூசல் தரும்** = வெளிப்படுத்தி விடும், (71).

**பூசனை** = பூசனை, வழிபாடு, (18).

**பூணும்** = மாட்டிக் கொள்ளும், (836).

**பூண்டார்** = மேற்கொண்டவர், (23).

**பூண்டு** = நோன்பாகக் கொண்டு, (30).

**பூதங்கள்** = நிலம், தீ, காற்று, தண்ணீர், வான் என்ற அய்ம் பூதங்கள், (271).

**பூப்பர்** = செல்வராவர், பொலிவடைவர், (248).

**பூரியர்கள்** = கீழ் மக்கள், கயவர், (919).

**பூரியார்** = கயவர்கள், கீழ்மக்கள், (241).

# பெ

**பெட்டாங்கு** = பெட் (PET) என்ற ஆங்கிலச் சொல்லுக்குக் கூறுகின்ற விருப்பம் என்ற பொருள். இங்கு பெட், விரும்பியவாறு, *(1293).*

**பெட்டார்** = விரும்பியவர், *(1178).*

**பெட்டு** = காதலித்து, *(141).*

**பெட்ப** = விரும்புவன, மகிழ, *(1257, 1283).*

**பெண்** = மனையாள், *(56).*

**பெண்ணியலார்** = பெண் தன்மை யுடையவர், பரத்தையர், *(1311).*

**பெண்டிர்** = பெண்கள், *(913, 920).*

**பெண்ணினால், பெண் தன்மை உடைத்து** = பெண் தன்மை யிலும் சிறந்த பெண் தன்மை உடைய தென்று, *(1280).*

**பெண்தகை** = அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய குணங்கள், *(1083).*

**பெண் நிறைந்த நீர்மை** = பெண் களுக்குள்ள நல்ல தன்மைகள், *(1272).*

**பெண்மை** = பெண்ணின் தன்மை, *(147, 150)*; மன அடக்கம், நிறை, *1258).*

**பெய** = இட, *(580).*

**பெயரார்** = மாறுபட மாட்டார், *(989).*

**பெயரின்** = மாறுபட்டால், *(989).*

**பெயர்த்து** = தவத்தை பெயர்த்து, குழப்பி, *(344).*

**பெயர்த்தும்** = திரும்பவும், மறுபடியும், *(205).*

**பெயர்த்தேன்** = விலகினேன், *(1187).*

**பெயல்** = பருவ மழை, மழை பெய்தல், *(545, 559, 1174).*

**பெயலாற்றா** = அழுது கண்ணீர்விட முடியாமல், *(1174).*

**பெயின்** = சுமத்தினால், *(475).*

**பெய்** = பொழி வாய், *(55)*; ஏற்றிய, *(475).*

**பெய்தாள்** = சூடினாள், *(1115).*

**பெய்து** = கண்டு, *(405)*; சொரிந்து, *(666).*

**பெரிது** = பெரியது, *(102, 1092).*

**பெரியர்** = பெருமையுடையவர், *(26, 160).*

**பெரியார்** = பெருமையுடையவர், *(444, 680, 694, 896).*

**பெரு** = மிக்கு, *(380).*

**பெருகலின்** = வளர்த்தலின், *(811).*

**பெருகும்** = வளரும், *(96)*; பெருகும், *(604).*

**பெருக்கத்தின்** = செல்வத்தின், *(170).*

**பெருக்கத்து** = ஏராளமான செல்வம் உள்ளதாக வழி, *(963).*

**பெருக்கம்** = செல்வம், *(115, 431).*

**பெருக்கி** = அதிகப்படுத்தி, *(512).*

**பெருக்கற்கு** = வளர்ப்பதற்கு, *(251).*

**பெருந்தகைமை** = பெருஞ்சிறப்பு, *(1255).*

**பெருந்தகையான்** = பெருந்தன்மை யுடையவன், *(217)*.

**பெருந்தக்க** = மேம்பட்ட பொருள், *(54)*.

**பெருந்தக்கது** = பெருகும் தகுதி யையுடைய பிறப்பு, *(1137)*.

**பெருமழைக் கண்** = குளிர்ந்த பெரிய கண்கள், *(1239)*.

**பெருமித** = மேம்பாட்டின, *(431)*.

**பெருமிதம்** = செருக்கு, *(979)*.

**பெருமை** = உயர்வு, *(21)*; நிலையாமை மிகுதி, *(336)*; பெருந்தன்மை, *(979)*.

**பெரும்** = மிக்க, *(10)*.

**பெருவலி** = மிக்க வலிமையுடை யவை, *(380)*.

**பெறின்** = அடைந்தால், *(54)*; தருகின்றது, *(1330)*; பெற்றால், *(61, 111)*; திகழ் வானானால், *(91)*.

**பெறுகுவம்** = அடைவோம், *(1328)*.

**பெறுதி** = அடைவாய், *(1237)*.

**பெறும்** = அடையும், *(61, 788, 1322)*.

**பெறுவது** = அன்பைக் கொள்ளா மல் கிடைக்கும் பொருளைக் கொள்ளும் விலைமகளிர், *(813)*.

**பெற்ற** = பெற்ற, *(324, 1000, 1109)*.

**பெற்றக்கால்** = பெற்றாலும், *(1270)*.

**பெற்றம்** = பசு, *(273)*.

**பெற்றன்ன** = பெற்றதைப் போல, *(1143)*.

**பெற்றான்** = கணவன், *(58)*.

**பெற்றியார்** = தன்மையுடையார், *(442)*.

**பெற்றேம்** = செல்வம் பெற்றுள் ளோம், *(626)*.

# பே

**பேஎய்** = பேய், *(565)*.

**பேடி** = அரவாணி, அலி, *(614, 727)*.

**பேணப்படும்** = விரும்பிக் கொள்ளப் படும், *(866)*.

**பேணலர்** = விரும்பார், *(1016)*.

**பேணா** = இகழும், விரும்பப் படாத, *(924)*.

**பேணாது** = உதவாது, *(163)*; தனது ஆண்மையைப் பேணிக் காப்பாற்றாமல், *(902)*; நன்கு போற்றி மதிக்காமல், *(892)*; உள்ளத்தால் என்னை விரும்பாமல், *(1178)*.

**பேணாமை** = விருப்பப்படாமை, *(893)*.

**பேணி** = உணவு முதலியவற்றால் உபசரித்துப் பாதுகாத்து, *(120)*; போற்றி, *(443, 976)*; பிரிந்து போகாமல் காத்துக் கொள்வது, *(633)*.

**பேணியார்** = காதலர், *(1257)*.

**பேதை** = அறியாமை, *(372)*; அறிவில்லாதவன், *(603, 810, 833, 836, 837, 838, 840)*; சூதுவாது கபடமில்லாதவள், பெண், *(1238, 1239)*; அறி வில்லாதது, *(1248, 1272)*.

**பேதைக்கு** = பெண்ணுக்காக, (1136, 1172).

**பேதைப் படுக்கும்** = அறியாமையை உண்டாக்கும், (372).

**பேதைமை** = அறியாமை, (141).

**பேதையார்** = அறிவிலார், (142, 782, 797, 834, 839).

**பேதையின்** = அறிவில்லாதவன் போல, (834).

**பேரறிவு** = சிறந்த அறிவு, (215).

**பேரா** = மாறுபடாத, (378); நீங்காத, (892).

**பேரும்** = பெயர்ந்து செல்லுதல், (486).

**பேர்** = பெருமை, (148); மிக்க, (773); பெயர், (1190).

**பேர்த்து** = மாறி, (357).

**பேறு** = பெறுதல், (60, 61).

**பேற்றின்** = பெறுமாயின், பெறுவானாயின், (162).

# பை

**பைதலும்** = துன்பமும், (1197).

**பைதல்** = துன்பம், (1172, 1175, 1197, 1223, 1226).

**பைதல் கொள்** = மயங்கி வரும், இருளடைந்து வரும், (1223).

**பைதல் நோய்** = எனக்குத் துன்பம் தருகின்ற நோய், (1266).

**பைந்தொடி** = பசிய பசும் பொன் வளையல்கள்-மரகதத்தாலான வளையல் (மணக்குடவருரை), (1234, 1238).

# பொ

**பொச்சந்தார்** = மறந்தவர், (246).

**பொச்சாந்தும்** = மறந்தும், இகழ்ச்சியுற்ற இடத்தும் - பழைய உரை, (199).

**பொச்சாப்பு** = சோர்வு, (285); மறதி, (532, 534).

**பொதிந்து** = உள்ளத்தில் வைத்து, (155).

**பொது** = பொதுவான, (528, 915); எல்லாரிடத்தும் ஒரே தன்மையது போல, பொதுவாக, (1099).

**பொது உண்பர்** = பொதுவான பொருளாக உனை நினைந்து நுகர்வர், (1311).

**பொது நோக்கு** = எல்லாரிடமும் ஒரே மாதிரியாக நோக்கும் பார்வை, (1099).

**பொத்துப்படும்** = தவறிவிடும், (468).

**பொய்** = உண்மையல்லதாது, (938, 1246).

**பொய்தீர்** = பொய்மை தீர்ந்த, உண்மையான, (6).

**பொய்த்தபின்** = பொய்யைக் கூறிய பின்பு, (293).

**பொய்த்தல்** = பிணங்குவது பயன் படாது என்பதை, (1287).

**பொய்த்து** = பொய்யாகி, (182); பொய்யைக் கூறிய பின்பு, (183).

**பொய்ப்பின்** = தனது தொழிலை மறுப்பின், பெய்யாமல் தவறினால், (13).

**பொய்மை** = பொய்யான அன்பின் தன்மை, (913).

**பொய்மையும்** = பொய்யான சொற்களும், (292).

**பொய்யற்க** = உண்மை போல உரைக்காதிருக்க, (293).

**பொய்யா** = அணையாத, தணி யாத, (753).

**பொய்யாமை** = பொய் பேசாமை, (296, 297, 323).

**பொய்யா விளக்கு** = உண்மையாகிய விளக்கு, (299).

**பொரு** = தாக்கு, (486).

**பொருட்டு** = பயனுடையன, (212); காரணம், (256, 1017).

**பொருத** = அரத்தினால் தேய்க்கப் பட்ட, (486, 888).

**பொருது** = தாக்கப்பட்டு, (888).

**பொருத்தல்** = சேர்த்தல், (633).

**பொருள** = பொருளையுடை யனவாய், (424).

**பொருளல்லவரை** = ஒரு பொருளாக மதிக்கப்படாத வரை, (751).

**பொருளல்லவற்றை** = மெய்ப் பொருளல்லாதவற்றை, (351).

**பொருளற்றார்** = வறுமையானவர், (248).

**பொருளாக்கம்** = பொருட் செல்வம், (755).

**பொருளாட்சி** = பொருளாற் பயன் பெறுதல், (252).

**பொருளாள்** = பொருளாக உள்ள வள், உரிமையாக உள்ளவள், (141).

**பொருளான்** = பொருளொன்று உண்டாக, அதனால், (1002).

**பொருளென்று** = தனது திறமை யைக் காட்டும் குணமென்று, (307).

**பொருள்** = மெய்ப் பொருள், உண்மை, (5); அறம், (91, 254); உறுதிப் பொருள், (122, 128); உரை, நூல், (141); குணம், (307); செல்வம், (63, 171, 176, 212); பொருள் தேடுவதையே, (1230).

**பொருள் அல்லது** = புண்ணிய மல்லாததாகும்; அருளற்ற தன்மையால் உயிரீனுதாலகும், (254).

**பொருள்-ஆ** = பொருளாக, (122).

**பொருள் செயல் வகை** = பொருள் செய்யும் சிறப்பான வகை. [இது திருக்குறளில் 76-வது அதிகாரம். பெயர் - பொருள் செயல் வகை. பொருளின் தன்மையையும், அதன் திறத்தையும், சிறப்பை யும் அதனைச் சம்பாதிக்கும் முறையையும் கூறும் அதிகாரம்.]

**பொருள் தீர்ந்த** = பயனில்லாத வற்றை, (199).

**பொல்லாத** = தீமையானவை, (176).

**பொழுதின்** = காலத்திற் காட்டி லும், (69); நேரத்தின் கண், விரும்பிய பொழுது, (1105).

**பொழுது** = நேரம், (337, 481, 1215); பொழுதே, (1221); மாலைப்பொழுது.

[இது திருக்குறள் அதிகாரம். பெயர். 123-வது 'பொழுது கண்டு இரங்கல். மாலைப் பொழுது நேரம் வரும்போது, தலைவி இரங்கி வருந்துதல் சம்பவங்களைப் பற்றி கூறுகின்ற பகுதி.]

**பொழுதும்** = உம்மை, இழிவு சிறப்பும்மை, (337).

**பொள்ளென** = விரைவாக, சடுதியில், (487).

**பொறி** = மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற அய்ம் பொறிகள்; வினை, அறம், (6).

**பொறுத்த** = சுமந்த, (239).

**பொறுத்தல்** = தாங்குதல், மன்னித் தல், (151); மன்னிக்க, (152).

**பொறுத்தாரை** = பொறுமையுடை யவரை, மற்றவர் செய்த கெடுதிகளைப் பொறுத்துக் கொண்டவரை, (155).

**பொறுத்தான்** = சுமந்தவன், (37).

**பொறுத்தும்** = பொறுத்துக் கொள்ளும், (579); தாங்க வேண்டியிருப்பதால், (1032).

**பொறேன்** = பொறுத்துக் கொண் டிருக்க முடியாது, (1247).

**பொறை** = பிழை பொறுத்தல், (153); பாரம், சுமை, (189, 570).

**பொறை ஆற்றுவார்** = சுமையைத் தாங்குவார், (1027).

**பொன்** = தங்கம், (155, 267); இரும்பு, (888, 931).

**பொன்றா** = அழிவில்லாத, (36).

**பொன்றாது** = இறவாமல், (233).

**பொன்றி** = கெடுத்து, (171).

**பொன்றும்** = அழியும், (156).

**பொன்றுங்கால்** = இறக்கும் போது, (36).

**பொன்றும் துணையும்** = உலகம் அழியும் வரையும், (156).

# போ

**போஒம்** = போய்விடும், (1070).

**போஒய்** = சென்று, (46); அவனை விட்டு நீங்கி, (933).

**போகவிடல்** = கைவிடல், (831).

**போகா** = தம்மை விட்டுப் பிரிந்து போகா, (376).

**போகாது** = எதிரிகளால் வஞ்சித் துப் பிரிக்க முடியாததாக, (764).

**போகு ஊழால்** = போவதற்குரிய ஊழினால். ('தீமை பயக்கும் வகையில் இயற்கை முறை யாக அமையும் இயற்கைப் பண்பறிவு' என்கிறார் நாவலர் தனது திருக்குறள் தெளிவு உரையில்.

**போக்கி** = எறிந்துவிட்டு, (774).

**போக்கும்** = அந்தச் செல்வமும் போய்விடுதலும், (332); உம்மை எச்சவும்மை

**போதாய்** = அந்த இடத்தை விட்டு அகன்று சென்று விடுவாயாக, (1123).

**போது** = மொட்டு, பெரிய அரும்பு, *(1227)*.

**போம்** = அழவிட்டுப் போய் விடும், *(659)*.

**போர்** = அமர், சமர், *(758, 767)*.

**போர்த்த** = மூடப்பட்ட, *(80)*.

**போர்த்து** = மூடு மேலே மூடி, *(273)*.

**போல** = நிகர்த்த, ஒப்ப, *(75, 151)*.

**போலும்** = போன்ற, போல, *(1228)*; முதல் போலும் போல ஆகும், இரண்டாவது போலும் உரை அசை, போல நின்றன, *(1232)*.

**போல்** = ஒப்ப, *(59, 118)*.

**போல்க** = ஒத்திருக்க, *(693)*.

**போழ** = நுழையவே, நுழைந்ததாக, *(1239)*.

**போழப்படா** = நுழையா, ஊடுருவிப் போகாத, *(1108)*.

**போழ்து** = பொழுது, நேரம், சமயம், *(412, 539, 1229)*.

**போற்றல்** = காக்க, *(693)*; காவல், *(801)*.

**போற்றாக்கடை** = காவாத விடத்து, *(315)*.

**போற்றாதார்க்கு** = பொருளைக் காவாதவருக்கு, *(252)*.

**போற்றி** = எண்ணி, *(537, 538)*; தெளிய அறிந்து, *(942)*.

**போற்றுபவர்க்கு** = அடைபவர்களுக்கு, *(741)*.

**போன்று** = ஒத்து, *(135, 137, 822)*.

**போன்றி** = கெடுத்து, அழிந்து, *(171)*.

# ம

**மகளிர்** = பெண்கள், *(57, 822, 912, 918, 974)*.

**மகற்கு** = மகனுக்கு, புதல் வனுக்கு, *(67)*; ஒருவனுக்கு, *(110)*.

**மகன்** = புதல்வன், *(70)*; மனிதன், *(196)*.

**மகிழ்செய்தல்** = உற்சாகப்படுத்துதல், *(1090)*.

**மகிழ்ச்சி** = உவகை, ஆனந்தம், களிப்பு, *(531, 539)*.

**மகிழ்தல்** = அதிக, ஆழ்ந்த, மகிழ்ச்சி அடைதலும், *(1281)*.

**மக்கட்பேறு** = மக்களைப் பெற்றிருத்தல், *(60)*.

**மக்களாதலே** = மக்கள் உருவமாக இருத்தலே, *(600)*.

**மக்கள்** = பிள்ளைகள், புதல்வர்கள், *(60, 66, 68)*; மாந்தர், *(196, 410, 600, 993, 997, 1071)*; வீரர், *(770)*.

**மங்கலம்** = அழகு, நன்மை, *(60)*.

**மட** = பேதை, காணாத வழி, தவற்றை நினைந்து, கண்ட வழி மறக்கும், மட நெஞ்சம், *(1297)*.

**மடங்கின்** = சும்மா இருந்தால், உழவுத் தொழில் செய்ய முடியாத நிலை வருமானால்

**மட நோக்கு** = வெருவுதலுடைய நோக்கு, மருட்சியுடைய பார்வை, *(1089)*.

**மடந்தை** = பெண், (1116, 1122).

**மடமை** = அறியாமை, மூடத் தன்மை, (89).

**மடலொடு** = மடலேறுதலுடன், (1135).

**மடல்** = பண்டையக் காலத்தில், காதல் இன்பத்தை நுகர்ந்த பின்பு, அந்தக் காதல் வெற்றி பெறாது போனால், அதனால் வருந்துகின்ற ஆண் களுக்குப் பாதுகாப்பாக இருந்த ஒன்றுதான், மடல்மா ஏறுதல் என்ற மாநிகழ்வு. மடல் ஏறுதல் என்பதன் குறுக்கமே, **'மடலேறுதல்' என்ற பண்பாடு.** மட லேறுதல் என்றால் என்ன?

தலைவியை அடைய முடியாத படி தோழி மறுத்தால், தலைவன் "மடல்மா ஏறுவேன்" என்று சூளுரைப்பான். இதை, **'மடன் மாக் கூறும் இடனுமா ருண்டே' ஹ்ள தொல்காப்பியம்** கூறுகின்றது.

தலைவியை தலைவன் அடைய முடியாவிட்டால், தனது வாழூரில் அலர் எழுப்புவதற் காகத் தலைவியின் சித்திர உருவத்தோடுப் பனங்கருக் கால் செய்த குதிரைமேல் ஏறிக் கொண்டு, பலரும் பார்க்கும் படி யாகத் தலைவியின் தெரு வழியே செல்வான்.

ஊரார் அதைப் பார்த்துக் கூடிக் கூடி அந்த காதல் சம்பவத்தை அலர் எழுப்பி இகழ்ந்துப் பழிக்குமாறு பேசுவார்கள். அந்த ஊராரின் பழித்தூற்றல் அலருக்கு அஞ்சிய தலைவியின் பெற்றோர் அவனுக்கே தம் பெண்ணைத் திருமணம் செய்து வைப்பார்கள்.

**இதனைத் தான் சங்க இலக்கியம், தொல்காப்பியம் களவு இலக் கணம் மடன் மா ஏறுதல் என்று கூறுகின்றன. மடல் = பனை ஓலை, மா = குதிரை, அலர் = பலர் பழித் தூற்றல் என்ற சம்பவமாகும்.**

[இந்தக் காதலர் வரலாற் றைத்தான் திருக்குறளிலுள்ள 1131, 1132, 1133, 1136, 1137 குறட்பாக்கள் கூறுகின்றன. இதை வாசகர்கள் முழுமையாக அறிய வேண்டும் என்பதற் காகவே இங்கே சுருக்கமாகக் குறித்துள்ளோம்.

**மடல்வரல்** = பெண், (1085).

**மடவார்** = அறியாதார், அறி வில்லாதார், (89, 153).

**மடன் மா** = கருக்கு மட்டைக் குதிரை. மடல் மா என்றால் பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரை என்பது. இது நடை முறைக்கும், உலகியலுக்கும் பொருந்தி வராது என்கிறது **நாவலருரை.** (1132).

**மடி** = சோம்பல், (371, 601, 607, 609, 610, 617); தன்னுள்ளே, (603); ஆடை, (1023).

**மடி செய்து** = சோம்பலை ஏற்றுக் கொண்டு, (1028).

**மடி தற்று** = ஆடையை இறுக இழுத்துக் கட்டிக் கொண்டு, (1023).

**மடிந்து** = வீழ்ந்து, அழிந்து, (604).

**மடிமடி** = விடதக்க சோம்பல், (603).

**மடிமை** = சோம்பலினது தன்மை, காரியக் கேடு, (608).

**மடியா** = கெடுத்து, கீழடக்கக் கூடிய தாக, (602).

**மடியாண்மை** = சோம்பலை ஆட் கொண்டு நடத்தல், (609).

**மடியும்** = அழியும், (603).

**மடி உள்ளான்** = சோம்பலேறி யுள்ளவன், (617).

**மடுத்த** = தடைப்பட்ட, விலகிய, (624).

**மடுத்தவாய்** = தடைப்பட்ட இடம், (624).

**மட்பகை** = குயவன் செய்யும் மண்பானைகளை அறுக்கப் பயன்படும் கருவி, (883).

**மணந்தார்** = திருமணம் செய்து கொண்டவரின், (1221); கணவர், (1226).

**மணல்** = மணல், (396).

**மணற்கேணி** = மணலிடத்துள்ள ஊற்று, (396).

**மணி நீர்** = நீலமணி நிற நீரும் - ஆழமான நீரையுடைய அகழ் நீர். ஆழமான அந்த நீர் மணி போல நீல நிறமாகக் காட்சி தரும், (742).

**மணியில்** = கோர்க்கப்பட்ட கண்ணாடி போன்ற மணியில், (1273).

**மணியின்** = கருவிழி இடத்தில், (1123).

**மண்** = மண்ணினால், (407); மண், (576).

**மண்ணும்** = போர்ப் படைகள் தங்கு வதற்குரிய வெட்ட வெளியான நிலம், (742).

**மண்புக்கு** = மண்ணிற்குள் புகுந்து, (996).

**மண் புனைபாவை** = மண்ணினால் நன்றாகச் செய்யப்பட்ட பாவை எனவும், பல நிற மண் களாற் பூசி அலங்கரிக்கப் பட்ட பாவை எனவும் பொருள் கொள்ளலாம், (407).

**மதலை** = தூண், (449).

**மதி** = அறிவு, (636, 915, 1229); சந்திரன், (782, 1116, 1117); திங்களிடம் இருப்பதைப் போல, திங்களுக்கும், சந்திரனே, (1118); தோன்றாதிருப்பாயாக, (1119); வாழ்வாயாக, (1210).

**மதிக்கு** = நிலவிடத்து, (1117).

**மதிப்பின்** = நினைத்தால், (898).

**மந்திரி** = அமைச்சன், (639).

**மயக்கம்** = அறியாமை, (360).

**மயங்கி** = மயக்கமடைந்து, அறிவிழந்து, (348).

**மயலாகும்** = மயக்கத்திற்கு ஏதுவாகும், (344).

**மயல்** = மயக்கம், (344).

**மயிர்** = சிகை, முடி, (964, 969).

**மயில்** = மயில் எனும் பறவை, (1081).

**மர** = மரத்தாலான, (1020, 1058).

**மரத்து அற்று** = மரம் போல்வது, (217).

**மரபினார்** = இயல்புடைய இயல் பினார், (188).

**மரம்** = மரம், (78, 216, 600, 879, 997, 1008).

**மரீஇயவனை** = பழகியவனை, (227).

**மருங்கு** = கிளை, சுற்றம், (526).

**மருங்கு ஓடி** = தீய வழியிற் சென்று, (210).

**மருட்டி** = மயக்கி, (1020).

**மருண்டு** = மயங்கி, (1139, 1229).

**மருந்தாகி** = மரத்தின் முழு உறுப்பு களும் மருந்தாக ஆகி, (217).

**மருந்து** = மருந்து, (217, 942, 950, 958, 1091, 1102, 1241, 1275);

ஒவ்வா உணவு முறைகளால் வரும் நோய்களை தீர்த்துக் குணப்படுத்தும் மருந்து, (95).

[நோய் ஏன் வருகிறது என்பதற்கான காரணம், அந்த நோய்களைத் தடுத்துக் காப்பாற்றும் முறை, அதற்கான மருத்துவ முறைகள் பற்றிக் கூறும் 'மருந்து' எனும் பகுதி. திருக்குறளின் 95-வது அதிகாரம் இது.]

**மருந்து ஒன்று** = ஒரு மருந்தைச் சாப்பிடுவோர்க்கு, (1275).

**மருவுக** = பழகுதல், (800).

**மருளான்** = மயக்கத்தால், (1002).

**மருள்** = மயக்கம், (199, 351, 352); மயங்கிய இரவும் பகலும் தம்முள் கலக்கின்ற மாலைப் பொழுதுதே, (1222); மயக்கம் தரும் மாலைப் பொழுதில், (1230).

**மலரின்** = மலரைவிட, (1289).

**மலரும்** = இதழ் விரியும், (1227).

**மலர்** = அன்பர் நெஞ்சாகிய தாமரை மலர், (3); பூ, (395, 650, 1119, 1142, 1152, 1231).

**மலர்தல்** = மகிழ்தல், விரிதல், (425).

**மலை** = மலை, (62, 737, 742).

**மலையின்** = மலையைவிட, (124).

**மலைந்து** = சுமந்து கொண்டு, (657).

**மல்க** = பெருகி நிரம்ப, (780).

**மல்லல்** = வளம், செழிப்பு, (245).

**மழலை** = குதலை, பொருள் நிரம்பாச் சொல், (66).

**மழித்தல்** = தலையை மொட்டை அடித்தல், (280).

**மழை** = குளிர்ந்த, கண்ணீர், (1239).

**மறக்கலா** = மறக்க முடியாத, (1297).

**மறத்தல்** = மறந்து விடுதல், (32); ஒழிக, (303); நினைவொழித்தல், (303).

**மறத்திற்கு** = தீமையை ஒழிப் பதற்கு, (76).

**மறந்தார்** = மறந்து போனவர்கள், (263).

**மறந்தீர்** = ஏன் என்னை மறந்தீரோ, (1316).

**மறப்பது** = மறத்தல், (108).

**மறப்பின்** = மறந்தேனானால், (1125).

**மறப்பின் எவனாவன்?** = முன்பு அனுபவித்த இன்பத்தை நான் மறந்தால், எவ்வாறு உயிர் வாழ்வேன்!, (1207).

**மறப்பு** = மறத்தல், (1125, 1207).

**மறம்** = வீரம், (766).

**மறவர்** = வீரர், (778).

**மறவற்க** = மறவாதிருக்க, (106).

**மறவி** = மறதி, (605).

**மறன்** = வீரம், (384).

**மறு** = கறை, களங்கம், (1117).

**மறுகு** = வீதி, தெரு, (1139).

**மறுகும்** = சுழலுகிறது, (1139).

**மறுத்தானை** = நீக்கியவனை, தவிர்த்தவனை, (260).

**மறுத்து** = மீண்டும், திரும்பவும், (312); ஒழித்து, (945).

**மறுத்து உண்ணின்** = போதுமான அளவை மீறி உண்ணாமல், செரிமானமளவுக்கு மட்டுமே உணவை உண்டால், (945).

**மறுமை** = மறுபிறப்பு, வானுலகப் பேறு, (98, 459, 904, 1042).

**மறுமை இலாளன்** = மறுமைப் பயனில்லாதவன், (904).

**மறை** = மந்திரம், (28); இரகசியம், (590 695); உபதேசம், (847); மறைத்தல், ஒழித்தல், (1076, 1138, 1180).

**மறை இறந்து** = மறைவாயில்லாமல், (1138, 1254).

**மறைக்கும்** = மூடி வைக்கும், (980).

**மறைத்தீர்** = மறைக்கலுற்றீர், (1338).

**மறைத்தவை** = மறைவான செயல்கள், (587).

**மறைந்து** = மறைவாகவிருந்து, (274, 278).

**மறைப்பான்** = வராமல் காக்க முயல்பவன், (1029).

**மறைப்பேன்** = மறைத்து வைத்துக் கொள்கிறேன், மறைத்துக் கொள்வேன், (1161, 1253).

**மறைமொழி** = மந்திரம், (28).

**மறையா** = குற்றங்குறைகளை நீக்காமல், (846).

**மற்றையவை** = இவையல்லாத மற்றைய செல்வங்கள், (400).

**மற்ற** = பிற, (39).

**மற்றின்பம்** = பேரின்பம், மறுமை, இன்பம், (173).

**மற்று** = வேறு, (173, 221, 380, 588, 591, 1033); மீண்டு, (356); பின்னும், (344, 354, 373, 540); அசை நிலை, (30, 36, 60, 95, 205, 323, 596, 773, 802, 905, 1122). மற்றவை செயல் மாறும் நிலைமைக் கேற்ப, ஆனால், பின் அப்படியில்லாமல் என்னும் என்ற பொருள்களில் வந்துள்ளது.

**மற்றுமருந்தோ** = இறவாமைக்கு மருந்து ஆகுமோ, ஒரு போதும் ஆகாது, இறக்கத் தான் வேண்டும், (968).

**மற்றும்** = பின்னும், (373).

**மற்று என்** = என் மற்று? அவ்வாறு சென்று மானங் கெடுவதோ? எதற்காக, (966).

**மற்றையவர்** = பிறர், (348).

**மற்றையவர்கள்** = பிறர், முற்றும் துறந்தவர்கள், (263).

**மற்றயவை** = மற்றல்லாத பிற, (400).

**மற்றையார்** = பிறர், (365).

**மற்றையான்** = அவ்வாறு செய்யாத மற்றவன், (214).

**மற்றொன்று** = ஊழை விலக்குவதற்கு ஒரு மாற்று வழியை, (380).

**மனக்கவலை** = மனத் துன்பம், (7).

**மனத்தது ஆக** = உள்ளத்திலிருக்க, (278).

**மனத்தான் ஆம்** = மனத்தினின்று வரும், (93).

**மனம்** = உள்ளம், (453, 455, 456, 822, 823, 884).

**மனை** = இல்லறம், (51, 52); மனைவி, (60, 148, 901, 1268).

**மனைக்கெழீஇ** = இல்லத்தில், தனிமையாக நெருங்கிப் பழகி உறவோடு பொருந்தியிருந்த பின்பு, (820).

**மனைத்தக்க** = இல்லற வாழ்க்கைக்குத் தகுந்த, (51).

**மனைமாட்சி** = இல்லறத்துக்குரிய நற்செயல்கள், (52).

**மனை விழைவார்** = தனது மனைவியின் விருப்பத்திற்கு

ஏற்றவாறு நடந்து அவள் சொற்படி நடப்பவர், (901).

**மன்** = ஆக்கம், (1329); மிகுதி, (1138); நிலைபேறு, (68, 244, 268, 318,, 457, 1168); அசை நிலை, (819, 1016, 1064, 1327); மற்றும் வருபவை ஒழி பிசைகள். சொல்லாது விட்ட சொற்களால் பொருளை இசைப்பது ஒழிபிசை ஆகும்.

**மன்ற** = உறுதியாக, திண்ணமாக, (143, 229, 649, 867, 880, 1136).

**மன்றில்** = சபையில், (820).

**மன்னர்** = அரசர், (692).

**மன்னவன்** = வேந்தன், (388, 445 542, 546, 548).

**மன்னன்** = அரசன், (386, 448, 520, 544).

**மன்னா** = நிலைபெற மாட்டா, (556).

**மன்னுதல்** = நிலைபெறுதல், (556).

**மன்னும்** = நிலைபெறும், (190).

**மன்னுயிர்** = நிலைபெற்ற உயிர் கள், (268).

**மன்னோ** = மன், ஓ இரண்டும் அசைகள், (819).

# மா

**மா** = பெரிய, (68, 245, 526, 544, 999, 1058); குதிரை, (811); மான், (969); மான் நிறம், (1107); கரிய, (617).

**மா இரு** = மிகப் பெரிய, (999).

**மாக்கள்** = மக்கள், (529, 420).

**மாசறு காட்சி** = குற்றமற்ற அறிவு, (352).

**மாசு** = குற்றம், மன அழுக்கு, (34, 106, 199, 278, 311, 312, 352, 601, 646, 649, 800); வசை, (956).

**மாஞாலம்** = பெரிய உலகத்தி லுள்ளவர்கள், (1058).

**மாடு** = செல்வம், (400).

**மாட்சி** = சிறப்பு, நற்குண, நற் செய்கைகள், (52, 60, 750).

**மாட்டு** = இடத்தில், (5, 118, 211).

**மாண** = மிக, (102, 125); தப் பாமல், (883).

**மாணா** = சிறப்பில்லாத, (351); துன்பம் தருவனவற்றை, (317); சிறப்பற்ற, (1002, 1297); நன்மை தராத, (432).

**மாணாக்கடை** = பெருந்தன்மை யோடு இல்லாதிருந்தால், (53).

**மாணாதன** = வெல்ல முடியாதவை எல்லாம் செய்யும் எதிரியினை, (867).

**மாணாப் பிறப்பு** = சிறப்பான வாழ்க்கையற்ற பிறப்பு, (351).

**மாணார்க்கு** = தீய பகைவர்க்கு, (823).

**மாண்** = பெரிய, மாட்சிமைப்பட்ட, (3, 407, 606, 901, 919, 1114).

**மாண் இழை** = அழகிய ஆபரண வகைகள், (919); அழகான, சிறந்த நகை வகைகளை அணிந் தவள், (1114).

**மாண்ட** = சிறந்த, (604); இறந்த, (766, 897); புகழடைந்த, (915).

**மாண்டது** = பெருமை பெற்றவன், மாட்சிமைபட்டவன், (632).

**மாண்டற்கு** = சிறப்பு பெறுவதற்கு, (177).

**மாண்டார்** = பெருமை பெற்றவராய், (278); புகழ்மை பெற்ற அமைச்சர், (665).

**மாண்பானால்** = நல்ல பண்புகளும், அதற்கேற்ற செயல்களும் உடையவனானால், (53).

**மாண்பு** = நல்ல குணம், நல்ல செயல்களுடைய, (51).

**மாதர்** = பெண்கள், காதலிக்கப் பட்ட பெண், (1081, 1087, 1117, 1118, 1120).

**மாத்திரை** = அளவு, (406).

**மாந்தர்** = மக்கள், (278, 499, 514, 595, 961, 1012).

**மாந்தர் சிறப்பு** = மக்களுக்குச் சிறப்பு, (1012).

**மாமுகடி** = கரிய மூதேவி - வறுமை, சோம்பல் உடையவர் களைக் கரிய மூதேவி என்பது நூல் மரபு என்கிறது நாவலருரை; (617).

**மாய** = வஞ்சக, (918); சூழ்ச்சிகளில் வல்ல, (1258).

**மாயா** = இறவாத, (1230).

**மாயும்** = கெடும், இறக்கும், (878, 1230).

**மாய்வது** = அழிவது, (996).

**மாரி** = மேகம், மழை, (211, 1010).

**மார்பு** = நெஞ்சு, (1288, 1311).

**மாலும்** = மயங்கும், (1081).

**மாலை** = குணம், இயல்பு, (1035); மாலைக் காலம், (1135, 1211, 1223, 1224, 1226).

**மாலை ஓ** = மாலைப் பொழுதோ, (1221).

**மாலையவர்** = இயல்பாக இருப் பவர், (1035).

**மாலையவரை** = தமக்கு இயல் பாக உடையவரை, (1230).

**மாழ்கும்** = கெடுவதற்கு காரண மாகிய, (653).

**மாறல்ல** = மாறுபடில்லாத, ஏற்கத்தக்க, (944).

**மாறா** = வற்றாத, (701).

**மாறு** = உதவி, (211); வேறாதல், (944); தலை மாறுதல், (1183); பகை, (861).

**மாறுபாடில்லாத** = ஏற்றுக் கொள்ளத் தக்க, (945).

**மாற்ற** = நீக்க, (609).

**மாற்றம்** = மறுமொழி, (725).

**மாற்றலர்** = பகைவர், (749).

**மாற்றாரை மாற்றும்** = பகைவரை நண்பராக்கும், (985).

**மாற்றான்** = பகைவன், (471).

**மாற்றும்** = பகையிலிருந்து மாற்றும், (985).

**மாற்றுவார்** = ஒழிப்பவர், (225).

**மானம்** = நிலை தவறாதிருக்கும் பேராண்மை, (384); வணங் காமை, தாழ்வின்மை, (969, 970, 1028); தன்நிலை தாழ்வு வந்தால் உயிர் வாழாமை, (அதிகாரம் 97).

[மானம் என்றால், தன் நிலை யில் தாழாமை ஒருவேளை தாழ்வுற்றால் உயிர் வாழாமை. இந்தப் பண்புடையவன் தனது நிலைமையில் மாறுபாடில்லாமல் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பது பற்றிக் கூறும் திருக்குறள் பகுதி இது.]

**மானம் கருத** = மானத்தை நினைப்பவரானால், (1028).

**மானம் வரின்** = மானம் அழியும் நிலை ஏற்பட்டால், (969).

# மி

**மிக** = அதிகமாக, (829, 1007).

**மிகச் செய்து** = நட்பை அதிகமாக வளர்த்து, (829).

**மிக நலம்** = மிக்க அழகு, (1007).

**மிகப்பட்டு** = மேம்பட்டவனாக எண்ணி, (1074).

**மிகல்** = வெல்லுதல், (856).

**மிகல் ஊக்கும்** = வெல்ல முயலும், (855).

**மிகல் காணும்** = மிகுதியாக எண்ணி னால், (859).

**மிகுதி** = மிகையாயின, குற்றம், வேண்டப்படாதன, (784).

**மிகுதியான்** = மன கர்வத்தால், (158).

**மிகுந்து** = பெருக்கி, (475).

**மிகும்** = மேற்படும், (373); வெளிப்படும், (928, 1161).

**மிகை** = அதிகம், தேவையற்றது, (345); மிகுதியானவை, (504).

**மிக்க** = அதிகமானவை, (504, 724).

**மிக்கவை** = தீயவற்றை, (158).

**மிக்கற்றால்** = உணவில் உப்பு அதி கரித்தது போன்றது, (1302).

**மிக்கார்** = தன்னைவிட மேம்பட்ட கல்வியாளர், (724).

**மிசை** = மேலுலகம், வானோரு லகப்பேறு, (3).

**மிசைவான்** = உண்பவனாது, (85).

**மிச்சில்** = எஞ்சியது, (85).

**மிதம்** = செருக்கு, (979).

**மிறை** = பெருந்துயர், துன்பம், (847).

# மீ

**மீ** = உயர்வு, (386).

**மீக் கூறும்** = உயர்வாகக் கூறும், (386).

**மீன்** = விண்மீன், (1116).

# மு

**முகடி** = மூதேவி, (617, 936).

**முகடியான்** = மூதேவியால், (936).

**முகத்த** = கொம்பிடத்தே கோத்த, (500).

**முகத்தான்** = முகத்தினால், (93); முகத்தையுடையவன், (500).

**முகத்தின்** = முகம் போல, (707); முகத்தால், (824).

**முகத்து** = முன்பு, (393, 574); எதிரில், (623); முறைப்படி எண்ணிப் பார்த்து, (949); பெண்ணின் முகத்தில், (1117).

**முகத்தேயும்** = முகத்தின் முன் பாயினும், (923).

**முகம் ஒத்தி** = முகத்தை ஒத் திருக்க விரும்பினால், (1119).

**முகம்** = முகம், (90,, 224, 706, 708, 786, 830, 1118, 1119).

**முகன்** = முகம், (84, 92); முகத் திற்கு, (1116).

**முகை** = இதழ் பிரியா அரும்பு, (1274).

**முடிந்தாலும்** = முடிந்து விட்டாலும், (658).

**முடியார்** = நிறைவேற்ற முடியாதவர் கள், (908).

**முடிவு** = முற்றுப் பெறுதல், (640); எல்லை, (671); முடிவுறுதல், (1024).

**முடிவும்** = முடிப்பதற்கேற்ற முயற்சி யும், (676).

**முட்டா** = குற்றமில்லாமல், முட்டாது, (547).

**முதல** = முதலையுடையர், (1).

**முதலை** = முதலை எனும் நீர்வாழ் பிராணி, (495).

**முதல்** = முதலீடு, (449, 463); காரணம், (948); வளரும் கொடி யின் அடிப்பாகப் பகுதி, (1304).

**முதல் ஆ** = முதலாக, (941).

**முதற்று** = முதலையுடையது, (1).

**முதுக் குறைந்தது** = அறிவு அதிக மாவது, (707).

**முதுவருள்** = அறிவுடையாரிடை யில், (715).

**முத்தம்** = முத்துக்கள் போன்றவை, (1113).

**முந்தி இருப்ப** = முன்னிடத்தில் இருக்க, (67).

**முந்து** = முன்னே வந்து, (380); முன்னமே, (603); முன்னே சென்று, (715, 1023).

**முந்து கிளவாச் செறிவு** = முன்னே இருந்து கொண்டு பேசாத அடக்கம், (715).

**முந்துறும்** = முன்னே வந்து நிற்கும், (380, 707, 1023).

**முயக்கம்** = தழுவுதல், (913).

**முயக்கு** = தழுவும் நிலை, சேர்க்கை, கூடலுவகை, (918, 1107, 1108, 1185, 1239).

**முயங்கிய** = காதலியை இறுகத் தழுவிய, (1238).

**முயலப்படும்** = முயற்சிக்க வேண்டும், (265).

**முயல்வாருள்** = புலன்களைவிட முயல்பவர்களுள், (47).

**முயற்சி** = ஊக்கம், முயற்சித்தல், (611, 616, 619).

**முயற்று** = முயலுதல், (616).

**முரண்** = முரண்பாடு, பகை, (492, 567).

**முரிந்தார்** = தீயவர், கெட்டவர்கள், அழிந்தோர், (473).

**முரிந்து** = ஒடிந்து, நிலை குலைந்து, இழந்து, (899).

**முலை** = தாய்மைச் சின்னம், கொங்கை, (108).

**முள்மரம்** = முட்களையுடை மரம், (879).

**முறி** = தளிர் நிறம், (1113).

**முறுவல்** = பற்கள், (1113).

**முறை** = நீதி, (388, 547, 548, 553, 558, 559).

**முறைபடச் சூழ்ந்தும்** = செயல்களை ஒழுங்காக யோசித்தும், (640).

**முறைப்பட** = நெறிக்கேற்றபடி, ஒழுங்காக, (640).

**முறையர்** = உறவினர், (698).

**முற்பகல்** = உச்சி சூரியனுள்ள முற்பகல் நேரத்தில், (819).

**முற்றியவரை** = சூழ்ந்தவரை, (748).

**முற்றி** = சூழ்ந்து, முற்றுகையிட்டு, (747).

**முற்றியாங்கு** = முடிவடைந்தால், (676).

**முற்று ஆற்றி** = முற்றுகையிட வலி யராகி, (748).

**முற்றும்** = பகைவரைச் சூழ்ந்து விடுவதற்கேற்ற, (491).

**முனிய** = வெறுக்க, (191).

**முனை** = போர் முனை, (749).

**முன் இன்று** = முன்னே இல்லாத போது, (184).

**முன்கை இறை** = கையின் மணிக் கட்டு மூட்டுவாய், (1157).

**முன்** = முன்னால், முன்பு, (59, 184).

**முன்னம்** = முன்னமேயே, (1277).

**முன்னர்** = முன்னதாக, 'முன்னிலை யில், (435, 716).

# மூ

**மூக்கு** = முகத்தின் வெளியே நீண்ட பகுதி, (277).

**மூடப்பட்டார்** = விழுங்கப் பட்டார், (936).

**மூத்த** = முதிராத, (441).

**மூத்தற்று** = முதுமையடைந்தது போல, (1007).

**மூவர்** = திருமணமாகாதவர், துறவி, இறந்தார் மூவர் [பெற்றோர், மனைவி, மக்கள் என்பது நாவலர் உரை], (41); ஒற்றர் மூன்று பேர், (589).

**மூன்றன்** = மூன்றினுடைய, (360, 384).

**மூன்றின்** = மூன்றினோடு கூடி, (688).

**மூன்று** = தூங்காமை, கல்வி யுடைமை, துணிவுடைமை இவ் அரசனின் மூன்று பண்புகள், (383).

# மெ

**மெய்** = உடம்பு, (65, 619, 925); உண்மை, (249, 300, 354, 355, 356, 423); நீதி, (857).

**மெய்மை** = மெய் கூறுதல், (952).

**மெய்யறியாமை** = மெய் மறத்தல், தன்னை மறத்தல், மயங்குதல், (925).

**மெய்வேல்** = மார்பில் பாய்ந்து கிடந்த வேல், (774).

**மெலிந்து** = நினைந்து, இளைத்து, (அதிகாரம் 117).

[இது திருக்குறளில் வரும் 117-வது அதிகாரம். பெயர் படர்மெலிந்து இரங்கல். பிரிவு

ஆற்றாளாதவளாகிய தலைவி, தலைவனை எண்ணி யெண்ணித் தான் பெறுகின்ற துன்பத்தினை எப்பொழுதும் நினைத்துக் கொண்டே இருத்தலால், உடம்பானது இளைத்து, வருந்திக் கூறும் பகுதி.]

**மெலியார்** = வலி குறைந்தவர், (*250, 861*).

**மெல்** = மெல்லிய, (*1103, 1265*).

**மெல் நீரள்** = மெல்லிய குண முடையள், (*1111*).

**மெல்ல** = அளவு கடவாமல், (*562*); வெளிப்படாமல், (*1004*).

**மெல்லிது** = மென்மையானது, (*1289*).

**மென்** = மென்மையான, (*919*).

**மென்மை** = மெலிவு, (*877*).

**மென்மை பகைவர்** = மெலிவைப் பார்க்கும் பகைவர், (*877*).

# மே

**மேக** = விரும்புக, மேவுக, (*861*).

**மேய்ந்தற்று** = மேய்ந்தது போன்றது, (*273*).

**மேல** = இடத்தன, (*320*).

**மேலர்** = மேலேயிருப்பவராக, (*1218*).

**மேலாயவர்** = உயர்ந்தவர், (*1016*).

**மேலுலகம்** = வானவர் உலகம், (*222*).

**மேல்** = உயர்ந்த, (*222*); உயர்ந்த குடி, (*409*); அறிவுடையார், (*627*); மென்மேலும், (*1262*).

**மேல் அல்லார்** = மேன்மையான பண்பு நலம் இல்லாதவர்கள், (*972*).

**மேல் இருந்தும்** = மேலிடத் திலிருந்தும், செல்வம் அதி காரங்கள் இருக்கும் இடத் திலிருந்தும், (*973*).

**மேவல்** = பொருந்துதல், பொருந் தும், (*857*).

**மேவன** = விரும்பியன, (*1073*).

**மேவார்** = விரும்புவார், (*1059*).

**மேற்கொண்டு** = கடைப்பிடித்து, வருத்தும் தொழிலை மேற் கொண்டு, (*551*).

**மேற்கொண்டொழுகல்** = படிக் காததையும் படித்ததாக மேற் கொண்டு நடப்பதானது, (*845*).

**மேற்கொளின்** = தொடங்குவானே யானால், (*836*).

**மேற்கொள்வது** = இரத்தலை வழக்க மாக மேற்கொள்வது, (*1055*).

**மேற்கொள்வர்** = தொடங்குவர், (*712*).

**மேற்சென்று** = விரைந்து மேற் சென்று, (*335*)

**மேற்றே** = மேலதே, (*1027*).

**மேனி** = உடல், (*1182, 1185, 1189, 1279*).

**மேன்மேல்** மேலும் மேலும் இடைவிடாமல், (*308*).

**மேன்மை** = உயர்வு, மேம்பாடு, (*137*).

# மை

**மைந்து** = வலிமை, *(539)*.

**மையல்** = மயக்கம், இயல்பாகவே பித்து பிடித்து, *(838)*.

**மையலொருவன்** = பித்தனான ஒருவன், *(838)*.

**மையாத்தி** = மடநெஞ்சே, நீ மயங்குகின்றாய், *(112)*

# மொ

**மொக்குள்** = இதழ் விரியா குமிழ்ப்பூ, *(1274)*.

**மொய்ம்பு** = வலிமை, *(492)*.

**மொழி** = சொல், *(28, 567, 1258)*; மொழியினையுடையாள், *(1121)*.

**மொழிவது** = சொல்லப்படுவது, *(643)*.

# மோ

**மோப்ப = முகர, மணக்க, (90).**

# யா

**யா** = எவை, யாவை, *(54, 127, 380, 636,, 781)*.

**யாக்க** = நட்பு கொள்ள வேண்டும், *(793)*.

**யாக்கை** = உடம்பு, *(79, 239, 942)*.

**யாங்கணும்** = எங்கும், *(864)*.

**யாங்கு** = எங்கு? எந்த இடத்து, *(1070)*.

**யாண்டு** = எந்தக் காலத்தும், *(4)*; எவ்விடத்து, *(895)*.

**யாண்டும்** = எந்த இடத்திலும், சந்தேகப்பட்டவிடத்தும்; கைப்பற்றியவிடத்தும், சிறை பிடிக்கப் பட்டவிடத்தும், சித்ரவதை செய்யப்பட்டு வருந்து மிடத்தும், *(585)*.

**யாதனின்** = எதனின்றும், *(341)*.

**யாது** = எது?, *(178, 254)*.

**யாத்தற்று** = பிணித்தாற்போன்றது, *(678)*.

**யாப்பினுள்** = அன்பெனும் தளையுள், *(1093)*.

**யாப்பு** = கட்டுதல், *(777)*.

**யாமத்து** = எல்லாரும் தூங்கிக் கொண்டிருக்கும் இடை யாமத்தில், (1136); தொழிலை ஒழித்துத் தூங்கும் யாமத்துள், (1252); பாதியிருள் வேளை யில், யாமம் என்பது ஏழரை நாழிகை கொண்ட நேரமாகும்.

**யாம்** = நாங்கள், (61, 300).

**யாரின்** = யாரைக் காட்டிலும், (1314).

**யார்** = எவர், (256, 447).

**யார்மாட்டும்** = எல்லாரிடத்தும், (94, 162).

**யார் யார்க்கும்** = எப்படிப்பட்ட உயர்ந்தவர்க்கும், (20).

**யாழ்** = வீணை, (66, 279).

**யானை** = வேழம், யானை, (599, 678, 758, 772).

**யானையால்** = வேழத்தைக் கொண்டு, (678).

**யான்** = நான், (116).

# வ

**வகுத்த** = விதித்த, (377).

**வகுத்தலும்** = பகுத்தலும், பிரித்துச் செலவு செய்தலும், (385).

**வகுத்தான்** = ஊழ், தெய்வம், (377).

**வகை** = தன்மை, கூறுபாடு, (23, 27, 377, 465, 514, 709); கூரிய, (953).

**வகை மாண்ட** = அவனுடைய பல வகையாலும் மாட்சிமை பெற்ற, வாழ்க்கையும், (897).

**வசை** = பழிப்பு, (238, 239, 240).

**வஞ்ச** = கள்ளம், கபடம் சூழ்ந்த உள்ளம், (271).

**வஞ்சிப்பது** = வஞ்சகத்தால் கெடுப்பது, (366).

**வடு** = தழும்பு, (120); பழி, (549, 1079); தாழ்வு, (689).

**வட்டாடுதல்** = சூதாட்டக் கட்டை உருட்டுதல், (401).

**வணக்கம்** = வளைவு, (827).

**வணங்கா** = தொழாத, (9).

**வணங்கிய** = பணிந்த, (419).

**வண்** = வளப்பமான, (239).

**வண்ணம்** = நிறம், (714).

**வந்த** = தொன்றுதொட்டு வந்த, நேர்ந்த, (569, 609, 754, 764); கேடுகளுக்கு காரணமாக வந்த வற்றை, (807).

**வந்தது**= இழிவானது, (1066).

**வந்தவிடத்து** = வந்தவேளையில், (968).

**வந்தானை** = வந்த உறவினனை, சுற்றத்தவனை, (530).

**வயிற்றுக்கு** = வயிற்றுக்கு, (412).

**வயின்** = தம்மிடத்திலுள்ள, (846).

**வரல்** = வருதல், (1205, 1263).

**வல்** = வலிய, (273, 721); அழி யாத, (737) விரைவான, (582, 1151).

**வல் அவை** = வல்லமையுள்ள கல்வி மான்கள் அவை, (721).

**வல் உருவம்** = வலிதாகிய தவ வேடம், (273).

**வல்லது** = வல்லவன், செய்ய வல்ல தாக இருக்கின்றது, (385, 585, 633, 634); கற்ற வல்ல கல்வி, கலை, (713); விளைக்க வல்ல தாகின்றது, (1321).

**வல்லர்** = *திறமையாளர், (999).*

**வல்லையேல்** = *திறமையுடையை யானால், (1118).*

**வழக்கு** = பழக்கமாகிவிட்ட ஒழுக்கத்தின் பயன், (73); உலக வழக்கு, (795); நல்ல வழி, (992).

**வழங்காது** = பொழியாது, பெய் யாது, (19).

**வழங்கும்** = நடக்கும், ஒழுகும், இயலும், (477); இயங்குகின்ற, (245).

**வழங்குவது** = கூறுதல், சொல்லு தல், (99); கொடுக்கும் பொருள், (955).

**வழிச் செலவு** = வழியில் செல்லுதல், (766).

**வழி பயக்கும்** = பிறபொழுது அது தரும், (461).

**வழிமுறை** = பின்னால் வரும் இளைய தலைமுறை, (508).

**வழியது** = ஒத்து நின்றது, (80).

**வழியுரைப்பான்** = மன்னன் கட்டளைகளை அல்லது கலந்துரைகளைச் சொல் லியபடி சொல்பவன், (688).

**வழிவந்த** = பழமையாக வந்த, (807).

**வழுக்காமை** = தவறாது, (536).

**வழுக்கி** = மறந்து, உரை தவறி, (139); தவிர, (165).

**வழுக்கினான்** = பயன்படாமல் போய்விட்ட நாட்கள், (776).

**வழுத்தினாள்** = எப்போதும் போல என்னை வாழ்த் தினாள், (1317).

**வள** = வருவாய்க்கு, (51); செல்வத்தினது, (480).

**வளத்தக்கால் வாழ்க்கை** = வரவுக்குத் தக்க செலவு செய்து வாழ் கின்றவர்களுடைய வாழ்க்கை, (51).

**வளம்** = பயன், (141); செல்வம், (512, 736, 739).

**வளர** = மிக, முதிர, (1223).

**வளர்வதன்** = வளர்கின்றதன், (718).

**வளர** = பரப்பு, (523).

**வளி** = காற்று, (245); வாதம், (941); காற்று, (1108, 1239).

**வளை** = சங்கு வளையல், (1157, 1277).

**வள்ளி** = கொடி, (1304).

**வள்ளியம்** = கொடையுடையேம், (598).

**வறக்குமேல்** = வறண்டு போனால், பெய்யாதாயின், (18).

**வறங்கூர்ந்து** = வறட்சியடைந்து, (1010).

**வறம்** = வறுமை, (1010).

**வறியார்க்கு** = ஒரு பொருளுமில்லா தவருக்கு, (221).

**வறுமை** = தரித்திரம், பொரு ளின்மை, (759, 934).

**வற்றல்** = உலர்ந்தது, (78).

**வற்று** = வல்லது, (587, 1079).

**வன்கணவர்** = கொடியவர், துட்டர்கள், (228).

**வன்கணவன்** = வலிமையுடை யவன், (689).

**வன்கணார்** = நெஞ்சுரம் பெற்றவர், (1198).

**வன்கண்** = உறுதிப்பாடு, (632, 762).

**வன்கண்ணர்** = வலிமையுடைய வீரர்கள், (1027).

**வன்சொல்** = கடுமையான சொல், (99).

**வன்பாட்டது** = முரட்டுத் தன்மை யுடையது, (1063).

**வன்பால்** = வன்னிலம், பாலை நிலத்தில், (78).

**வன்மை** = வலிமை, (153, 444, 682); துணிபு, (1063)

# வா

**வாஅய்மை** = மெய்மை, (364).

**வாடிய** = சோர்ந்த, (1234, 1235); நீரின்று முன்பே உலர்ந்த, (1304).

**வாடினும்** = குறைவுபடினும், (1322).

**வாடுதோள் பூசல்** = தோள்கள் வாடுதலால் ஊரில் எழுப் பிய ஆரவார அலர், (1237).

**வாணிகம்** = வியாபாரம், (120).

**வாயில்** = வாயிலாகவுடைய வழி, (6).

**வாயினர்** = சொல்வினையுடைவர்,, (149).

**வாயின்** = வாய்த்திருப்பின், கிடைக்குமாயின், (536).

**வாயுணர்வு** = கைப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, இனிப்பு முதலியன, (420).

**வாய்** = வழி, (948); வாய், (91, 159, 415, 420, 423).

**வாய்சோரா** = வாய் தடுமாறியும், (689).

**வாய் சோரார்** = தவறாக ஏதும் பேசார், (721).

**வாய்ச் சொல்** = வாயினின்று வரும் வார்த்தைகள், (97).

**வாய்ந்த** = வாய்ப்புடைத்தாகிய, (737).

**வாய்ப்ப** = தவறு ஏற்படாமல், (948).

**வாய்ப்பன** = நூல்களில் கூறப் பட்ட நெறிமுறைகள், (865).

**வாய்மை** = உண்மை, மெய் பேசுதல், மெய்மை, (291,292, 295, 688, 952, 983).

**வாய்மை இடத்த** = உண்மைச் சொற்களுக்குரிய இடத்தில் வைத்து எண்ணப்படும், (202).

**வாரா** = வருவதற்கு, (335); மீண்டும் வாராத, (356); வாராத, (755).

**வாராநெறி** = வாராத வழி, (356).

**வாரி** = மழை நீர் வளம் குன்றி விட்டால், (14); பொருள் வரக்கூடிய வழிகளை, (512).

**வாரும்** = நீர் சொரிகின்ற, (1232).

**வாலறிவன்** = தூய்மையான அறி வாற்றலில் சிறந்தோர் - **நாவலருரை;** தூய அறி வுடைய இறைவன் - பாவாணர் மரபுரை; கடவுள் - பாலருரை; மெய்யுணர்வினை உடைய வனது - திருக்குறளார் முனிசாமி உரை விளக்கம்; கடவுள் விளக்கிய அறிவினையுடை யவன் - பழைய உரை, (2).

**வால்** = தூய்மை, (2); தூய வெண்மையான, (1121).

**வாழா** = இறந்துபோகும், உயிரை வைத்துக் கொண்டிராத, (969).

**வாழாத** = வாழாமல் அதனை விட்ட, உயிர் வாழ விரும்பாத, (970).

**வாழாதவர்** = வாழ முடியாதவர்கள், (237).

**வாழி** = வாழ்வாயாக, (1111, 1118, 1210, 1221, 1222, 1242).

**வாழிய** = வாழ்க, (1200).

**வாழின்** = உயிரோடு இருந்தால், (420, 906).

**வாழுநம்** = வாழ்வோம், (1193).

**வாழும்** = வாழ்கின்ற, (58); சிறப்புடைய, (392); குடி மக்கள் வாழ்வார்கள், (542).

**வாழ்க** = வாழ்ந்திடுக, (1312).

**வாழ்க்கை** = வாழ்வு, (44); இல் வாழ்க்கை, (52, 83).

**வாழ்க்கையவர்** = வாழ்க்கையுடையவர், (330).

**வாழ்தல் அன்னள்** = உயிரும் உடம்புபோல கூடி வாழும் இன்பம் போன்றவள், (1124).

**வாழ்த்தும்** = வாழ்வோம், (956, 971).

**வாழ்பவன்** = வாழ்க்கை நடத்துபவன், (47, 50).

**வாழ்வது** = வாழ்தல், (2, 932).

**வாழ்வது அறியார்** = உயிர் நிலை நிற்கும் என்பதை அறியாதவர், வாழ்க்கையின் தன்மைகளை அறியார், (337).

**வாழ்வாங்கு** = வாழ்கின்ற முறைப் படி, (50).

**வாழ்வாரின்** = பிரிவின் கொடுமையோடு வாழ்கின்ற பெண்களைப் போல, (1189).

**வாழ்வார்க்கு** = தன்னையே எதிர் பார்த்து வாழ்வார்க்கு, (1192).

**வாழ்வு** = வாழ்க்கை, (50).

**வாளது** = வாளின் இடத்தில் உள்ளது, (334).

**வாளொடென்** = வாளால் பயன் என்ன?, (726).

**வாள்** = போர் வாள், (727, 882); ஒளி, (1261).

**வாள் ஆண்மை** = வாள் வீரம், (614).

**வாள்போல் பகைவர்** = கொல்லுவோம் என்று வெளிப்படையாகக் கூறும் பகைவர் பகையினை, (882).

**வானத்தவர்க்கு** = வானுறைபவர்களுக்கு - தேவர் என்றும் கூறுவர், (86).

**வானம்** = முகில், (18, 19, 559, 1192); வீடுபேறு, (353).

**வானோர்க்கு உயர்ந்த** = வான் புகழ் கொண்டோர்க்கு, வானோர்க்கும் செல்வதற்கரிய, (346).

**வான்** = மழை, (11, 20, 542); வானுலகம், (50, 101); விசும்பு, (272); வெண்மை, (714); மிக்க, பெரிய, (897).

**வான் அகமும்** = மேலுலகமும், வீட்டுப்பேறும், (101).

**வான் உயர்** = வானம் போல மிக உயர்ந்த, (272).

# வி

**விக்குள்** = நாவை மடக்கி, அடக்கிப் பேச முடியாதது விக்கல், (335).

**விசும்பின்** = மேகத்தினின்றும், (16); வானிடத்து, (957).

**விசும்புளார்** = தேவர், வானுறைவர், (25).

**விடல்** = விடுக, (113, 158, 517, 697, 785, 818, 830, 876, 912, 961); நீங்குதல், விடுதல், (203,

*314, 343, 450, 797, 831, 979, 1245, 1302, 1303).*

**விடாஅதவர்க்கு** = அவற்றை விடாதவர்க்கு, *(347).*

**விடாஅது** = தொடர்ந்திருந்து, *(1210).*

**விடில்** = அதனை விட்டு நீங்கினால், *(1159).*

**விடுக** = ஒழிக, *(928).*

**விடுமாற்றம்** = தன் அரசன் சொல்லி அனுப்பிய சொல்லை, செய்தியை, *(689).*

**விடும்** = அதிகமாகும், *(267)*; நீங்கும், *(167).*

**விடுவார்** = விட்டு நீங்குபவர், *(799).*

**விட்டக்கால்** = அடங்காது சொன்னால், அவனே கூறினால் மட்டுமே, *(695).*

**விட்டேம்** = துறந்தேம், விட்டு விட்டோம், *(1036).*

**விண்** = மழை, *(13).*

**விண்ணின்று பொய்ப்பின்** = விண் நின்று பொய்ப்பின்; விண் இன்று பொய்ப்பின் என்றும் கூறுவர், *(13).*

**விதிரர்** = உதற மாட்டார், *(1077).*

**விதுப்பு** = விரைதல், *(1200)*; அதிகாரம் *(118).*

[இது திருக்குறளில் வரும் *118*-வது அதிகாரம். பெயர் 'கண் விதுப்பு அழிதல்'. தலைவனை உடனே காண வேண்டும் என்று ஆசைப்பட்டு, வருத்தப்படும் தலைவி, தனது கண்கள், தன்னுடைய காதலரை விரைந்து பார்க்கவேண்டும்' என்று வருந்துவதாகக் கூறுகின்ற பகுதி.]

**விதுப்புற்று** = விரும்பி விரைந்து, *(1290).*

**விதும்பல்** = விரைதல், *(127, 129)* [இந்த அதிகாரம் திருக் குறளின் *127*வது அதிகாரம். பெயர் அவர் வயின் விதும்பல். அதாவது, பிரிந்திருக்கும் தலைவனும், தலைவியும் காதல் வேட்கை மிகுதியால், தங்களுக்குள் ஒருவரையொருவர் காண்பதற் காக விரும்புதலாகும்.]

**வித்தகர்** = அறிஞர், வல்லவர், *(235).*

**வித்து** = விதை, *(24, 85, 361)*; காரணம், *(138).*

**வியந்தான்** = புகழ்ந்து கொண்டவன், *(474).*

**வியவற்க** = வியந்து புகழ்ந்து பேசாதிருந்திடுக, *(439).*

**வியன்** = அகன்ற, *(13, 19, 716, 1016).*

**விரல்** = கைவிரல், *(1261).*

**விரித்து** = அகலம் கூறி, *(650).*

**விரிநீர்** = கடல் சூழ்ந்த நீர், *(13).*

**விருந்தின்** = புதியதாக நம்மிடம் வந்தவர், *(87).*

**விருந்து** = விருந்தினர், புதிதாக வந்தோர், *(43, 81, 82, 83, 84, 85, 86, 88, 89, 90, 153)*; விருந்தினர்க்குப் பரிமாறும் உணவு, *(1211, 1268).*

**விருப்பு** = அன்பு, *(522).*

**விரைந்து** = விரைவாக, வேகமாக, *(648, 1080, 1218).*

**விலங்கு** = மிருகம், *(410).*

**விலைப்பொருட்டு** = விற்பதற்காக, பொருளுக்காக, *(256).*

**வில்** = பகைக் களப் போர்க் கருவி களுள் ஒன்று, *(827, 872).*

**விழிக்கும்** = கண் திறக்கும், *(1218).*

**விழித்த கண்** = எதிரியை அல்லது பகையைச் சினந்து நோக்கும் கண், *(775).*

**விழிப்பது** = தூக்கம் கலைந்து எழுவது, (*339*).

**விழு** = சிறந்த, மேலான, (*162, 363, 400, 776*).

**விழுங்கி** = இரையென விழுங்குவது, (*931*).

**விழுப்பத்து** = சிறந்தவற்றுள், (*21*).

**விழுப்பம்** = சிறப்பு, (*131*).

**விழுப்புண்** = மேன்மையான, புகழுக்குரிய புண் - மார்ப்பு, முகம் மீது போர்க்களத் தில் பெற்ற புண், (*776*).

**விழுமம்** = துன்பம், (*107, 284, 313, 663*).

**விழுமியார்** = மேன்மை மிக்கவர், உயர்ந்தவர், (*201*).

**விழை** = விரும்பப்படும் தன்மை, (*804*).

**விழைத் தகைமையான்** = செயல் செய்யும் உரிமையை விரும்பப் படும் தன்மை பற்றி, (*804*).

**விழைந்து** = விரும்பி, (*1177*).

**விழைப** = விரும்புவன, (*592*).

**விழையும்** = விரும்பும், (*630, 809, 911*).

**விழையார்** = விரும்பார், (*911*).

**விழைவதூஉம்** = விரும்புவதும், விரும்பும் உணவும், (*1036*).

**விழைவான்** = ஆசை வைப்பவன், (*615, 902*).

**விளக்கம்** = எரியும் தீபம், (*601, 753*); புகழ், (*853*).

**விளங்கும்** = வெளிப்படையாகத் தோன்றும், (*717*); உயர்ந்து தோன்றும், (*957*).

**விளித்து** = அழைத்து, (*894*).

**விளிந்தற்று** = கூத்து, நாடகம், சினிமா முடிந்ததும் கலைந்து போனாற் போன்றது, (*332*).

**விளிந்தார்** = இறந்தவர், (*143*).

**விளியாது** = நீங்காது, (*145*).

**விளியும்** = கொஞ்சம் கொஞ்சமாக அழிகின்றது, (*1209*).

**விளையுள்** = விளை பொருள், வயல் விளைச்சல், (*545, 731*).

**விளைவது** = விளைச்சல் தருவது, (*732*).

**விளைவயின்** = அனுபவிக்கும் போது, (*177*).

**விளைவின்கண்** = பலன் கொடுக்கும்போது, (*284*).

**விளைவு** = விவசாயம், விளைச்சல், (*738*).

**விறல்** = வெற்றி, (*180*).

**விற்றற்கு** = தம்மையே விலை பேசி விரைவாக விற்பதற்கு, (*1080*).

**விற்றுக்கோள்** = விற்றாயினும், கொள்ளுதல், (*220*).

**வினாய்** = கேட்டு, வினவிக் கொண்டு, (*594*).

**வினை** = செயல், (*5, 33*); பாவம், (*244*); பகைவர் செய்யும் செயல், (*781*); ஆண்மை, முயற்சித் திறமை, (*904*).

**வினைகெடல்** = செய்யும் தொழிலில் முயற்சியில்லாமல் அரைகுறையாகக் கைவிட்டவரை, (*612*).

**வினைத்திட்பம்** = செயலாற்றிடுவதற்குரிய மனோதிடம், (அதிகாரம் *67*).
[இது, திருக்குறளில் வரும் 67-வது அதிகாரம். ஒருவர் ஆற்ற வேண்டிய நற்செயல்களைச் செய்து முடித்தற்குரிய மன உறுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்று இந்த அதிகாரம் விளக்குகின்றது.]

**வினைத் தூய்மை** = [வினைத் திட்பம் அதிகாரத்திற்கு முன்பு

கூறப்பட்டுள்ள 66-வது அதிகாரம் வினைத் தூய்மை. ஒரு செயலைச் செய்ய முற்படுவதற்கு முன்பு, மனஉறுதி மட்டும் இருந்தால் போதாது. செய்யப்படும் அந்தச் செயல்கள் பொருளையும், அறத்தையும், புகழையும் தரக்கூடிய நல்ல செயல்களாகவும், எந்தவிதக் குற்றம் குறைகள் அற்றவனவாகவும், தூய்மையானவை தானா என்பதையும் யோசித்துச் செய்ய வேண்டும் என்ற அறிவுரைகளையும் கூறும் பகுதி இது.]

**வினை நலம்** = செய்யப்படும் செயல்களின் நன்மைகள், (65).

**வினைபடும் பாலால்** = செய்யும் செயல்களின் நன்மை, தன்மைகளால், (279).

**வினைப் பகை** = தீ வினைகளைச் செய்தால் அதனால் உருவா கும் பகைத் தன்மைகள், (207).

**வினை மாட்சி** = செய்கின்ற தொழிலின் பெருமைகள் அல்லது சிறப்புகள், (750).

**வினையான்** = செய்யப்படும் செயல்களது நல்வினை, தீவினைகளால், (63).

**வினையில** = பயனில்லாதவற்றை, (697).

**வினையுடையான்** = எப்பொழு தும் முயற்சி உடையவனது, (519).

**வினையோடு** = தொடர்ந்த விடா முயற்சிகளோடு, (632).

# வீ

**வீங்கிய** = இன்பத்தால் பூரித்த, (1233).

**வீடில்லை** = விடுதல் என்பது இயலாது, (791).

**வீயா** = தீராத, நீங்காத, (284).

**வீயாது** = நீங்காது, விடாமல் தொடர்ந்து வந்து, (207, 208).

**வீவர்** = கெடுவர், சீரழிந்து அழிவர், (289).

**வீழ்** = விரும்பப்படுகின்ற, காதலித்த, (1191).

**வீழப்படாஅர்** = பின்னால் விரும்பப்படாதவர், (1194).

**வீழப்படுவார்க்கு** = விரும்பப்படும் காதலியருக்கு, (1193).

**வீழுநர்** = தம்மால் காதலிக்கப் படுகின்ற காதலரால், (1193); அன்புடையாரால், (1309).

**வீழும்** = வீழ்ந்துவிடும், (1030); விரும்பும், (1108, 1123).

**வீழ்** = விரும்ப, காதலிக்க, (1191).

**வீழ்த்த** = கோர்த்த, பொருந்திய, (1251).

**வீழ்த்தக் கண்** = முன்பு இருந்த வளத்தைவிட வறுமையால் குறைந்துவிட்ட போதிலும், (955).

**வீழ்பவள்** = விரும்பப்படுமவள், (1111).

**வீழ்வார்** = விரும்பப்பட்டவர், (1103, 1191, 1192, 1194); ஊடி விரும்பப் படும் மகளிருடன், (1325).

**வீறு** = உயர்வு, சிறப்பு, (749); பெருமை, புகழ், (904).

**வீற்றிருக்கை** = சிறந்த இருப் பிடம், புகழிருக்கை, அரசிருக்கை, (789).

# வெ

**வெஃகா** = விரும்பாத, (179).

**வெஃகாமை** = விரும்பாமை, (178) [இது, திருக்குறளில் வரும் 18-வது அதிகாரம். பிறருடைய பொருளை வஞ்சித்துக் கவர்ந்து கொள்ளாமலிருக்கக் கூறப் பட்டப் பகுதி.]

**வெஃகி** = ஆசைப்பட்டு, விரும்பி, (172, 173, 175, 176, 177).

**வெஃகி ஆம்** = மற்றவர்களுடைய பொருளை வஞ்சித்துக் கவர ஆசைப்படுவதால் உண்டாகும், (177).

**வெஃகின்** = ஆசைப்பட்டால், (171, 180).

**வெகுளாமை** = கோபப்படாமை, (308, 1060).

[திருக்குறளில் வரும் 31-வது அதிகாரம். ஒருவர் கோபப்படு வதற்குக் காரணம் இருக்கலாம். இருந்தாலும், அவர் அந்தக் காரணத்திற்கு அடிமையாகாமல், அதைப் பொறுத்துக் கொண்டு, சினத்தை வெல்லும் உயர்ந்த பண்புடயவராக் விளங்க வேண்டும் என்பதற்கான அறிவுரைப் பகுதி இது.]

**வெகுளி** = கோபம், சினம், (29, 35, 309); வெறுப்பு, (360, 526, 531, 864).

**வெண்மை** = புல்லறிவாண்மை, அற்பப் புத்தி, (844).

[அற்பப் புத்தியை ஆளும் தன்மையுடைய சிற்றறிவினர், தங்களைப் பேரறிவாளர்களாக எண்ணிக் கொண்டு, கல்விமான்கள், அனுபவசாலிகள், மூதறிவாளர்கள், சான்றோர்கள் கூறும் அறிவுரைகளைக் கேளாமல் ஆர்ப்பாட்டப் புகழ்த் தேடிகளாக இருப்பவர்களான புல்லறிவாண்மையாளர்களைத் திருத்தும் அறிவுரைப் பகுதி இது.]

**வெம்** = கொடிய, (895).

**வெம்கோல்** = கொடுங்கோல், (563).

**வெயர்ப்ப** = வேர்வை உண்டாக, காதலியின் நெற்றி வேர்வை உண்டாகுமாறு, (1328).

**வெயில்** = சூரிய ஒளி, (77).

**வெய்து** = விரைவில், (569); சூடான உணவு, (1128).

**வெருவந்த** = அஞ்சிய, அஞ்சத் தக்க; (563)

[இது, திருக்குறளில் வரும் 57-வது அதிகாரம். பெயர் 'வெரு வந்த செய்யாமை'. மன்னன் என்பவன் அவனை நம்பி வாழ்கின்ற குடிமக்கள் பயந்து வாழக்கூடிய கொடுமையான செயல்களை மக்கள், மன்னனுக்கே அச்சம் தரக்கூடிய செயல்களை மக்கள் செய்யா திருக்க வேண்டும் என்பதற்கான அறிவுரைப் பகுதி.]

**வெருவந்து** = அஞ்சி, பயப் படத்தக்க, (563).

**வெரூஉம்** = பயப்படும், (599).

**வெல்படை** = எதிரிப் படைகளை வெற்றி பெறும் போர்ப் படை, *(761)*.

**வெல்லும்** = வெற்றிக் கொள்ளும், *(481, 495, 769)*; வெல்லத் தகுந்த, *(645)*.

**வெல்வது** = வெற்றி பெறுவது, *(748)*.

**வெளிப்படும்** = ஊரார் தூற்றப் பட்ட அலர் மொழிகளால், எனது காதலின்பமும் வெளிப் பட்டு, *(1145)*.

**வெளியார்** = அறிவில்லாதவர்கள், *(714)*.

**வெளிறு** = அறியாமை, *(503)*.

**வெள்ள** = நீர்ப் பெருக்கு மிகுந்த வெள்ளமாகிய, *(1170)*.

**வெள்ளத்தனைய** = அதிகமான வெள்ளம், அளவற்ற நீர் பெருக்கு *(622)*.

**வெள்ள நீர்** = வெள்ளம் போல வழியும் எனது கண்ணீரில் புகுந்து, *(1170)*.

**வெறி** = நல்ல மணம், *(1113)*.

**வெறிய** = அறிவற்ற செயல், *(175)*.

**வெறுக்கை** = மிகுதி, அதிகமான, *(600, 971)*; செல்வம், *(761)*.

**வெறுத்தக்க** = பொருந்தத்தக்க, செறியத்தக்க, *(993)*.

**வெறுப்பு** = விருப்பில்லாத, *(696)*.

**வென்ற** = வெற்றி பெற்ற, *(174)*.

**வென்றதூஉம்** = வென்று அவன் பெற்ற பொருளும், *(931)*.

**வென்றி** = வெற்றி தேடித் தருவது, *(546)*; தனது மன்னனுக்கு வெற்றிச் செய்தியைக் கூறவல்ல தூதன், *(683)*.

**வென்றிடினும்** = வெற்றி பெற்றா லும், *(931)*.

**வென்றீக** = விரைவில் வெற்றி பெறுவானாக, *(1268)*.

**வென்றுவிடல்** = வெற்றி பெற்று விடுக, *(158)*.

# வே

**வேட்ட** = விருப்பம் அதிகமான, *(1105)*.

**வேட்டலின்** = யாகங்களைச் செய் வதைக் காட்டிலும், *(259)*.

**வேட்டற்றால்** = விரும்பினாற் போல, *(1145)*.

**வேட்டுவன்** = வேட்டை ஆடு பவன், *(274)*.

**வேட்ப** = மேலும் விரும்ப, விரும் பும் தன்மையில், *(643, 646, 696)*.

**வேட்பன** = விரும்புகின்றவை, விரும்பும் செயல்கள், *(362, 364)*.

**வேண்ட** = விரும்புவதன் மூலம், *(362, 364)*.

**வேண்டல்** = விரும்பத் தக்கதல்ல, *(82, 871)*.

**வேண்டற்க** = விரும்பாது விடுக, (171); விரும்பாதே, (931).

**வேண்டா உயிரார்** = உயிர் வாழ் வதை விரும்பாத வீரர்கள், (777).

**வேண்டா** = வேண்டுவதில்லை, (37); நோக்க மாட்டார், (211); வேண்டியதில்லை, (942); விரும்பாத, (777, 901, 1003).

**வேண்டாதார்** = பகைவர்கள், (584).

**வேண்டாப் பொருள்** = மனைவி ஏவல் செய்தொழுகுதல், (901).

**வேண்டாமை** = விரும்பாமை, (180, 362, 363).

**வேண்டாமை வேண்ட** = அவாவின் மையை விரும்பல், (362).

**வேண்டாரை** = வினைத் திண்மையை விரும்பி மேற் கொள்ளா அமைச்சரை, (670).

**வேண்டி** = விரும்பி, (263, 777, 1177, 1255).

**வேண்டிய** = விரும்பியவை, (265, 651).

**வேண்டிய எல்லாம்** = அய்ம் புலன் நுகர்ச்சிக்கு வேண்டியவை எல்லாம், (343).

**வேண்டின்** = விரும்பினால், (154, 342, 893, 960, 1062, 1150); வேண்டியவிடத்து, (893).

**வேண்டுக** = விரும்புக, (960).

**வேண்டுங்கால்** = ஒன்றை விரும்ப வேண்டும்போது, (362).

**வேண்டுதல்** = விரும்புதல், (4).

**வேண்டுபவ** = விரும்பி நினைக் கின்ற செல்வங்கள், (696).

**வேண்டும்** = விரும்பும், (21, 367); விரும்ப வேண்டும், (696); தகும், (85, 257, 315, 343, 470, 538, 611, 652, 653, 667, 867, 963, 1060).

**வேந்தர்** = அரசர், (691).

**வேந்தற்கு** = அரசனுக்கு, (382).

**வேந்தனும்** = அரசனும் : [பரி மேலழகரும், மணக்குடவரும் தத்தமது உரையில், இந்திரனா யினும் என்று பொருள் கொண்டனர்], (899).

**வேந்து** = அரச பதவியை இழந்து, (899).

**வேம்பாக்கு** = எனது நெஞ் சிலேயே எப்போதும் இருக் கும் சூடான வெப்பத்தால் அவர் சுடப்பட்டு விடுவாரோ என்று எண்ணி, (1128).

**வேய்** = மூங்கில், (1113).

**வேரார்** = கோபம் கொள்ளமாட்டார், (487).

**வேர்ப்பர்** = கோபம் கொள்வர், (487).

**வேலாருள்** = வேற் படையைப் பெற்றிருக்கும் வேற்றரசனிடம் சென்று, (683).

**வேலி** = நாணம் என்ற வேலிப் பாதுகாப்பு, (1016).

**வேலை** = உயிரை உண்ணும் வேலை என்ற தொழிலை செய்து கொண்டிருந்தாலே, (1221).

**வேல்** = எறியீட்டி, வேல் போன்ற போர் ஆயுதங்கள், (500); படைக்கலம், (546).

**வேள்** = உதவி, (81); உதவிகள் செய்தல், செய்யும் தன்மை, (613, 614); ஒப்பரவு, (212).

**வேள்வி** = யாகம், (87, 88).

**வேறு** = வேறுபட்டவர், (143, 926); வேறுவேறு அல்லர், இரு வேறு, (1209); கூறு, (374); வேறுபாடு, (514, 600); வேறு பாடாக, (519); உள்ளொன்று, புறமொன்றான வேறுபாடு, (822); அறிவால் வேறுபட்டவர், (704); வேறல்ல, பொது, (1012); வேறுபட்டே இருக்கும், (822); சொல்வேறு செயல் வேறாக இருப்பவர், (819).

**வேற்றுமையான்** = தொழிலில் உயர்வு தாழ்வு என்று வேறுபாடுகளால், (972).

# ஐ

**வை** = வைக்கோல் போர், (435).

**வைகல்** = நாடோறும், (83).

**வைக்க** = வைத்து, (50); கருதப் படும், (214, 880); மதிக்கப் படும், (388).

**வைக்கும்** = எடுத்து வைப்பான், (776).

**வைத்தான்** = சேர்த்து வைத்த ஒருவன், (1001).

**வைத்து** = ஈயாமல் சேர்த்து வைத்து, (228) மனத்தில் நினைத்துப் பார்த்து, (1269); வைத்தாற் போன்றது, (840).

**வைப்பர்** = வைத்துக் கொள்வர், (155).

**வைப்பிற்கு** = நிலத்திற்கு, (24).

**வைப்பின்** = உலகத்தின், (149).

**வைப்பு** = வைத்தல், வைத்தற்குரிய இடம், (226).

**வையகத்து** = உலகத்து, (75, 1055).

**வையகம்** = மண்ணுலகம், (101); உலகம், (547).

**வையக்கு** = உலகுக்கு, வைய கத்துக்கு, (70).

**வையத்தின்** = பூமியிலிருந்து, (353).

**வையத்து** = உலகத்தில், (22, 850).

**வையம்** = நிலம், (189).

**வையாது** = கருத மாட்டார்கள், (841).

**வையார்** = உலகத்தார் வைக்க மாட்டார்கள், (155).

# அறிஞர்கள் பார்வையில்

# திருக்குறளின்

# அருமை - பெருமைகள்!



# வள்ளல் பெருமானின் திருக்குறள் ஆய்வு

திருக்குறள், நாலடியார், தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்ற தமிழ் ஞான நூற்களைப் போற்றியவர் வள்ளல் பெருமான். இந்த நூல்களில் உள்ள விழுமியக் கருத்துக்களை வள்ளலார் தமது அருட் பாக்களிலும், தாம் எழுதிய புத்தகங்களிலும் எடுத்தாண்டிருக்கிறார்.

இவ்வாறு பயன்படுத்துவது, அவற்றைப் பார்த்து மேற்கோள்களாகச் சுட்டிக் காட்டுவதற்குப் பெயர் காப்பி அடித்தல் என்பதன்று. தனக்கு முன்னே வாழ்ந்த ஞானாசிரியர்கள் எண்ணங்களை உலகுக்கு உரைத்து, மக்கள் அந்த அறிவுரைகளைப் பின்பற்றல் நல்லது என்பதனால் மட்டுமன்று, முன்னாசிரியர்களைப் போற்றிச் சிறப்பிக்கும் பேரின்ப வழக்கும் ஆகும்.

அவ்வாறு, வடலூர் வள்ளல் பெருமான் போற்றிய நூல்களுள் திருவள்ளுவர் பெருமானுடைய திருக்குறளும் ஒன்று. எவ்வாறு வள்ளலார் திருக்குறளை நோக்கினார் என்பதை இங்கே காண்போம்.

**''திருக்குறள் ஒரு ஞான நூல். திருவள்ளுவர் ஒரு ஞானி என்பது எம் கொள்கை. ஞான நூல்கள் பலவற்றுள் சொல்லப் பெறாத உண்மைகள் திருக்குறளிலே காணப்படும்''.**

''ஞான நூல்களில் சுற்றி வளைத்தும், இலை மறை காயாகவும் கூறப்படும் உண்மைகள், **திருக்குறளில் நேரிடையாகவும், வெளிப்படையாகவும், அழுத்தந் திருத்தமாகவும் கூறப்படும்''.**

''திருக்குறள் ஞானச் சிறப்பில், திருமந்திரம், திருவாசகம் முதலியவற்றை ஒப்பது. **பதினாயிரம் பகவத் கீதையினும் உயர்ந்தது.** திருக்குறளில் கடவுள் வாழ்த்து, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல், தவம், நிலையாமை ஆகிய அதிகாரங்களில் காணப்படும் கருத்துக்கள் ஞான நூலுணர்வுடையாரை இறும்பூதெய்தச் செய்வன''.

''பின்வந்த புலவர்கள் மிகப் பலர் திருக்குறளைத் தத்தம் நூல்களுள் எடுத்தாண்டுள்ளனர். திருக்குறளை எடுத்தாள்வதும், மேற்கோள் காட்டுவதும் தமக்கும் தம் நூலுக்கும் ஒரு சிறப்பெனவே அவர்கள் கருதினர்''.

''புலவர்கள் மட்டுமன்றி, ஞானிகளும் திருக்குறளை எடுத்தாண்டும், மேற்கோள் காட்டியும் உள்ளனர். பின்னூலாசிரியர் ஒருவர் முன்னூலொன்றை எடுத்தாள்வதும், மேற்கோள் காட்டுவதும் ஒரு

வியப்பன்று. அது கவி மரபும், இலக்கிய வழக்கும் ஆகும். ஆயினும் ஞான நூல் செய்யப் புகுந்த ஞானிகள் தாம் சொல்லும் ஞானக் கருத்துக்களுக்கு அரணாகத் திருக்குறளை எடுத்துக்காட்டுகின்றன ரெனின், திருக்குறளின் ஞானச் சிறப்பை என்னென்பது''!

''இலக்கியங்களிற் சிந்தை செலுத்தாத ஞானிகளும்; உள்ளத்தைத் திருக்குறளிடத்துப் பறிகொடுத்தனரெனின், திருக்குறளினை தெய்வச் சிறப்பை, அருட்சிறப்பை, ஞானச் சிறப்பை என்னென்போம்''.

**''திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், சேரமான் பெருமான், திருமூலர், உய்யவந்தேவ நாயனார், உமாபதி சிவாசாரியார், கண்ணுடைய வள்ளலார், சிவப்பிரகாச சுவாமிகள் ஆகிய பெரியோர்கள் தமது அருளிச் செயல்களுள் திருக்குறட் பாக்களையும், தொடர்களையும், கருத்துக்களையும் எடுத்தாண்டுள்ளனர்''.**

**''திருவள்ளுவர் ஞானி என்றும், திருக்குறள் ஞான நூல்களுக்கு ஞான நூல் என்று யாம் கூறின், அது மிகையாமோ''?**

''திருவள்ளுவர்க்கு வழங்கும் வேறு பெயர்களாகிய தெய்வப் புலவர், தேவர், நாயனார் என்பவையே அவர் ஒரு ஞானி, அருளாளர் என்பதைக் காட்டும், அவருக்குக் கோயிலெடுக்கப் பட்டதூஉம் இது கருதியே''.

**''இஃதுணராது, புறநானூற்றுப் புலவரோ டொருவராய், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு முதலியவற்றை பாடிய பல நூறு புலவர்களுடன் திருவள்ளுவரையும் ஒரு சேர வைத்து எண்ணுதல் அபசாரம்''.**

**''ஞானியாகிய திருவள்ளுவரைச் சமய ஞானியாகக் கொள்ளாது, சமரச ஞானியாகவே கொள்ள வேண்டும்''.**

**''அவர் சமயங் கடந்தவர். சமயக் கணக்கர் மதிவழி கூறா துலகியல் கூறிப் பொருளிதுவென்ற வள்ளுவர்'' என்னும் கல்லாடனார் கருத்துரை காண்க''.**

***- வடலூர் வள்ளல் பெருமான்***

*('இராமலிங்கரும் - தமிழும்' என்ற நூலிலிருந்து)*

# தொல்காப்பியமும் - சங்க நூற்களும்; - திருவள்ளுவர் பெருமானும்

தொல்காப்பியனார், தாம் எழுதிய தொல்காப்பியம் என்ற இலக்கண நூலில்; மூன்றாம் வேற்றுமையில் **'ஆல்' உருபைக் கூறவில்லை.**

ஆனால், திருவள்ளுவர் தாம் எழுதிய 'திருக்குறள்' நூலில் **கற்றதனால்** (2); **உள்ளத்தால்** (282, 307); **களவினால்** (283); **இதனால்** (517); **அதனால்** (642); **நாணால்** (1017); **பாக்கியத்தால்** (1141) என்ற குறட்பாக்களில் **'ஆல்' உருபைக் கூறியுள்ளார்.**

**அஃறிணைப் பெயரில் பன்மையைக் குறிக்க உறழ்ச்சியாய்க் கள் விகுதி** வருமெனத் தொல்காப்பியனார் கூறியுள்ளார். ஆனால், வள்ளுவர் பெருமான் திருக்குறளில், **மற்றையவர்கள்** (263); **கீழ்கள்** (1075) என **உயர்திணைப் பெயரில்** அவற்றை எழுதியுள்ளார்.

**எல்லார்தமக்கும், எல்லார் தம்மையும்** என்று வழங்க வேண்டும் என்று தொல்காப்பியனார் கூறியிருக்க, **எல்லார்க்கும்** (582); **உயிர்க்கெல்லாம்** (1012); **எழுவாரை யெல்லாம்** (1032) என்று வள்ளுவனார் எழுதியுள்ளார்.

**நீயிர்** என்பதை முன்னிலைப் பன்மைப் பெயராகத் தொல்காப்பியனார் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், **நீர்** (1319, 1320) என்று அதனைத் திருவள்ளுவர் சுட்டவில்லை.

**அன்னீற்றுத் தன்மை யொருமை வினையை,** தொல்காப்பியனார் கூற வில்லை. **பருகுவன்** (1266); **இலன்** (205): **இரப்பன்** (1067) என்ற வினைகளை திருவள்ளுவர் எழுதியுள்ளார்.

வியங்கோள் வினை : 'தன்மை முன்னிலையுள் வராது' என்று தொல் காப்பியனார் கூறுகிறார். ஆனால், திருவள்ளுவர்; **காண்க, யானோ** (1265); **நீ வாழி** (1242) ஆகியவற்றைக் கூறியுள்ளார்.

குறிப்பு :- ஆலுருபும், கள்விகுதியும், நீர் என்ற சொல்லும், பருகுவன் போன்ற மற்றவையும், **புறநானூறு, அகநானூறு, பத்துப்பாட்டு, குறுந்தொகை** போன்ற நூல்களிற் காணப்படவில்லை.

**கலித்தொகையில் கோட்டால்** (42); **ஐவர்கள்** (26); **அரசர்கள்** (215); **வாழிய நீ** (96) என்ற வழக்குகளோடு அவை வந்துள்ளன. **நுமக்கு** என்பதன் திரிபாகிய **உமக்கு** என்பது 139-வது 'கலி' செய்யுளில் வந்துள்ளது.

புதல்வனையும், புதல்வியையும் பொதுவாய்க் குறிக்கும் சொல் - புதல்வர் என்பது. அதனை புதல்வன் என்ற சொல்லின் பன்மையெனக் கொண்டு 'மக்களென்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது என்று பரிமேலழகர் கூறுகிறார். திருக்குறள் 67, 69, 70 என்ற மூன்று குறள்களிலும் கூறப்பட்ட **மகன்** என்ற சொல்லும் ஆண்பெண் இருவரையும் குறிப்பதற்குச் சான்று.

ஆனால், தொல்காப்பியனார் **ஆண்மகன், பெண் மகன்** என்று தொல் காப்பியத்தில் குறிப்பிடுகிறார். எனவே, புதல்வரைப் பெறுதல் என்பதற்கும் மக்கட்பேறு என்ற திருக்குறள் அதிகாரத்திற்கும் பொருள் ஒன்று தானோ?

இவ்வாறு ஒன்றுக்கொன்று வழக்குகளோ என்று ஐயங்களை எழுப்பி, சங்க நூற்களில் வந்துள்ளதால், இவற்றுள் எதெது திருக்குறள் நூலுக்கு முற்பட்டது, பிற்பட்டது என்ற வினா எழுவதால், புலவர்கள் ஆராய்ச்சிக்காக இங்கே இதனை எடுத்துக் காட்டியுள்ளோம்.

# கீதை, மனு, அர்த்த சாத்திரம் கலப்புள்ள நூலா திருக்குறள்?

திருக்குறளில் ஏறக்குறைய 49 வடசொற்கள் கலந்துள்ளதாக மொழி ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள். அவை இவை :

''அலி, அந்தம், அமரர், அமிர்தம், அங்கணம், ஆகுலம், ஆசாரம், ஆதி, ஆயம், இந்திரன், இலக்கம், கருமம், கனம், காமம், காரணம், குணம், குலம், கோடி, சலம், சாதி, ஞானம், தண்டம், தவம், தானம், துலை, தெய்வம், தேயம், தேவர், நாகம், நாகரிகம், நாமம், பருவம், பாக்கியம், பாகம், பாவம், புரந்தரன், புருவம், பூதம், மங்கலம், மந்திரி, மதி, மணி, மாத்திரை, மானம், மாயம், முகம், முத்தம், யாமம், வித்தகர் என்பவையே அவை.

இந்த வடச் சொற்களில் பல தமிழ்ச் சொற்களே என்று, தமிழ்க் கடல் மறைமலையடிகள், மொழி ஞாயிறு தேவநேயப் பாவணர், பாவேந்தர் பாரதிதாசன் போன்ற பலர் மொழியாய்வு செய்து நிரூபித்திருக்கிறார்கள்.

பல தமிழ்ச் சொற்களுக்கும், ஆரியச் சொற்களுக்கும், வேர்ச் சொற்கள் (Roots) ஒன்றாக இருக்கின்றன என்பதையும் சில மொழியாய்வு அறிஞர்கள் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். அதனால், சமத்கிருதம் என்று கூறப்படும் தமிழ்ச் சொற்களை - சமத்கிருதமா என்று எண்ணுவதற்குக் கடிணமாக உள்ளது.

### வடமொழிக் கலப்பு திருக்குறளில் உள்ளதா?

**அர்த்த சாத்திரம், மனுமிருதி, பகவத் கீதை போன்ற சமத்கிருத நூல்களிலே இருந்து, கருத்துக்களை திருக்குறள் எடுத்துள்ளது என்று சமத்கிருதப் பற்றாளர் பறையறைகின்றார்கள்.**

அர்த்தசாஸ்திரம் என்ற நூல் சாணக்கியர் எனப்படும் கௌடல்யர் என்பவரால் எழுதப்பட்டதென்று சிலர் கூறுகிறார்கள். அக் கூற்று உண்மையன்று. அது கௌடல்யரால் எழுதப்பட்ட நூல் அன்று என்று அறிஞர்கள் அறைகிறார்கள்.

கௌடல்யரின் நூலைத் தழுவிப் பிற்காலத்தவர் ஒருவரால் அந்த நூல் தீட்டப்பட்டது என்ற கருத்தும் மொழி ஆய்வு உலகில் உள்ளது.

"According to this view, therefore, the "ARTHASASTRA' was composed much later than the time of Chandragupta Maurya and many even be as late as A.D. 300.

*[— The History and Culture of Indian People, Vol. II, P.275.]*

அர்த்த சாத்திரம் கி.பி. 300-ஆம் ஆண்டு காலக் கட்டத்தில் எழுதப்பட்டது என்றும், அவ் வப்போது காலநிலைக் கேற்றவாறு எழுதி எழுதி அதில் பின் சேர்ப்புகள் நடந்துள்ளது என்றும் ஆய்வாளர் கூறுகிறார்கள்.

இதை நோக்குங்கால், திருக்குறளுக்குப் பிறகு எழுதப்பட்ட நூல் அர்த்த சாத்திரம். உண்மை நிலை இவ்வாறிருக்க; திருவள்ளுவர் சில கருத்துக்களை அர்த்த சாத்திரத்திலிருந்து எடுத்துக் கையாண்டார் என்பது எவ்வகையில் நியாயமானது?

மனுமிருதி கி.மு. 200-ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி.200-க்கும் இடையில் எழுதப்பட்டது என்றும், பலமுறை எழுதியெழுதி இந்த நூலில் சேர்த்துக் கலப்பு செய்யப்பட்டுள்ளதென்றும் ஆராய்ச்சி நூற்கள் கூறுகின்றன.

It is now generally agreed that the text MANU SMIRITI was formulated sometime between 200 B.C., and A.D. 200. It was possibly revised several times.

*[— The History and Culture of Indian People, Vol. II, P. 256.]*

எனவே, மனுஸ்மிருதி நூலிலிருந்து திருவள்ளுவர் சில கருத்துக்களை எடுக்கவில்லை. திருக்குறளிலிருந்து எடுத்துத்தான் சில பகுதிகள் மனு நூலில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறதல்லவா?

பாரதப் போரில் பார்த்திபனுக்குக் கிருஷ்ணன் போருபதேசம் செய்த நூல் பகவத் கீதை. இன்றுள்ள கீதை, கி.மு. 200க்கும் கி.பி. 200க்கும் இடையில் உபதேசம் செய்யப்பட்டது என்பர் சில வரலாற்றாய்வாளர்கள். நாளடைவில், பிற்காலத்தில் சில பழைய ஆசிரியர்கள் பெயரால் புதிய நூல்கள் பல எழுதப்பட்டன. எடுத்துக்காட்டாக :

யாக்ஞ வல்கியம், நாரதம், பிரகஸ்பதி, காத்தியாயனம் போன்ற மிருதிகள், கி.பி. 4-ம் நூற்றாண்டிற்கும் 7-ம் நூற்றாண்டிற்கும் இடையில் எழுந்த நூல்கள் அவை. வடமொழி நூல்களை அந்தக் காலத்தில் இயற்றியவர்கள், திருத்தம் செய்தவர்கள் தென்னாட்டவராகவே உள்ளனர் என்று நூலாய்வு கூறுகின்றது. அத்தகைய அவர்களே திருக்குறள் கருத்துக்களை வடமொழி நூற்களில் புகுத்தியிருக்கக் கூடுமல்லவா?

Katayayana, the Grammardian, Baudhayana, the Simiriti writer, and possibly Apastamba also were south Indians. But, we do not know to which part of South India they belonged.

*[— Malayalam and Other Languages, P. 1249.]*

எனவே, சமத்கிருதப் பற்றாளர்கள் கூறுவது போல திருக்குறள் வடமொழி நூல்களில் இருந்து எந்தக் கருத்துக்களையும் இரவல் பெறவில்லை என்பதற்கு மேற்கண்ட ஆய்வுகள் சான்றாகாவா?

# ஸூத்திர பாஷ்யத்தில் சங்கராச்சாரியர் கூறுகிறார்

'திருக்குறளை இயற்றிய ஆசிரியர் தெய்வப் புலவர் ஆவர். அவருடைய தகப்பனார் அகஸ்தியர் மகனான பெருஞ் சாகரனுக்கும், திருவாரூர் **புலைச்சிக்கும் பிறந்த பகவன் என்றும்**, அவருடைய **தாயார் பிரம வமிசத்திற் பிறந்த தவமுனி** என்பவருக்கும் **ஒரு பிராமண மாதிற்கும் பிறந்த ஆதி** என்றுங் கூறுவர்'.

''இவ்வாறு கூறுவதற்குப் பழமையான சான்று ஒன்றும் இருப்பதாகத் தோன்றவில்லை. **அஃது உண்மையாயிருப்பினும், அப் பிறப்பால் ஆசிரியர் திருவள்ளுவனார் போன்ற முனிவர்க்குக் குற்றமொன்றுமில்லை** என மகாபாரதங் கூறுவது இங்கு நோக்கத் தக்கது. அஃதாவது......''

வேதங்களில் தேர்ச்சி பெற்ற முனிவர்கள் கர்ம சேஷத்தால் மானிடத்திலும், பக்ஷிகளிடத்திலும், தேவப் பொது மகளிரிடத்திலும், நாலாவது வருணத்தாரிடத்திலும் பிறக்கின்றனர்.''

**'ருஷ்ய சிருங்கர் மானிடத்திலும், கண்வர் மயிலினிடத்திலும், அகஸ்தியரும், வஸிஷ்டரும், ஊர்வசியிடத்திலும், ஸோமேச்வரர் பாம்பினிடத்திலும், அச்வினி தேவதைகள் குதிரையினிடத்திலும், விதுரர் நாலாவது வருணத்தாரிடத்திலும் பிறந்தனர்'**

'அவர்களுடைய பிறப்பினால் அவருக்குள்ள சிறப்புக் குன்றாது என்பதே. அவர்கள் முற் பிறப்பிலுள்ள ஸம்ஸ்காரத்தால் இப் பிறப்பில் ஞானத்தையடைந்து முத்தி பெறலாம் என்பதைப் பெரியார் **சங்கராச்சாரியார்** தங்கள் **ஸூத்திர பாஷ்யத்திற்** கூறியதும் நோக்கத் தக்கது'

**'ஆசிரியர் திருவள்ளுவனாரும், அப் பிறப்பில் ஞானத்தை யடைந்து ஜீவன் முத்தி பெற்ற பெரியாருள் ஒருவராயிருக்கக் கூடும் என்பதை அவரது நூல் காட்டுக்கின்றது'**

***– டாக்டர் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி***

*(திருக்குறள் அறத்துப்பால் பாலருரையில் கூறியுள்ளார், திருவையாறு, 15.6.1939)*

**குறிப்பு :-** மேற்கண்ட உரையாளர், திருவள்ளுவர் பெருமான் பறைச்சிக்குப் பிறந்த பகவனுக்கும், பிராமண பெண்ணிற்கும் பிறந்தவர் என்பதைத் தனது உரையின் முகவுரையில் கூறுகிறார். இந்தப் பகவன், ஆதி என்ற குலவேறு பாட்டிழிவைக் **கபிலரகவல் என்ற நூலில் தான்** முதன் முதல் எழுதப்பட்டுள்ளது. **அதை எழுதியவர்கள் திருத்தணிகை விசாகப் பெருமாள் ஐயரும், சரவணப் பெருமாள் ஐயரும் ஆவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.**

# 'கபிலரகவல்'
# திரு.வி.க. கருத்து

திருவள்ளுவர் தமிழ்நாட்டில் பிறந்தவர். தாய் மொழியை நன்கு பயின்றவர். அவர் அந்த நாளில் தமிழ் நாட்டிற் புகுந்த பிராகிருதம், பாலி, சமஸ்கிருதம் முதலிய மொழிகளிலுள்ள நூல்களையும் பயின்றிருப்பர்.

திருக்குறளை ஆய்ந்து பார்த்தால், அது கலைப் புலமை கடந்த இயற்கைப் புலமையால் முகிழ்த்த தெள்ளறிவினின்றும் பிறந்ததென்பது விளங்கும். **ஆராய்ச்சியாளர், சாதி வெறி, மதவெறி, மொழி வெறி முதலிய வெறிகளற்றவராய் இருத்தல் வேண்டும்.**

நாடு தனது பழங்கொள்கையினின்றும் வீழ்ந்து, சாதிவெறி, மதவெறி, மொழி வெறி முதலிய சிறுமைகட்கு இரையானபோது, அவ் வவ்வெறியர்கள் திருவள்ளுவரைப் பற்றிப் பலப் பலவாறு **கீறலாயினர்.** வெறி ஏறிய மதியில் உண்மை விளக்குங் கொல்?

வெறியற்ற மதிகொண்டு திருக்குறளை ஆராய்க. ஆராய்ந்தால், திருக்குறள் மரபு கடந்த ஒரு நூலாகவே விளங்கும்.

**குறிப்பு :-** இப்பொழுது வழங்கப்படும் திருவள்ளுவர் வரலாறு, **'கபிலரகவ'லை** அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.

இக் கபிலரகவல், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த **திருத்தணிகை வீர சைவப் புலவர் சரவணப் பெருமாள் ஐயராலும், விசாகப் பெருமாள் ஐயராலும் செப்பஞ் செய்யப்பட்டதென்று சொல்லப் படுகின்றது.**

இதை முதல் முதல் எனக்குச் சொன்னவர் **பாம்பன் குமர குருதாச சுவாமிகள்** அருளிய 'செவியறிவு றூஉ' என்னும் நூலில் 67-ஆம் பக்கத்தில், இதைப் பற்றிய குறிப்புச் சுருங்கிய முறையில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

பத்திரகிரியாரால் குறிக்கப் பெற்ற, 'கபில காவியம்' வேறு; இங்கே குறிக்கப் பெற்ற 'கபிலரகவல்' வேறு.

***- தமிழ்த் தென்றல் திரு.வி.க.***

*(குறளமுதம், தமிழ் வளர்ச்சி இயக்ககம் வெளியீடு, 1.1.2000)*

# திருக்குறள் ஞான மரம்; அறமரம்; வாழை மரம்!

அறம் - பொருள் - இன்பம் - வீடு என்பன நூல்களின் உள்ளுறை; மறைகளின் உட்பொருள் என்பன மட்டுமல்ல; நூல்களும் மறைகளுமெல்லாம் உலகியற்கையின் வடிப்புகளே யாதலின், உலகிற் காணப்படும் எல்லாப் பொருள்களின் உள்ளுறையாகவும், பாடம் புகட்டி அறிவு தெருட்டும் வழி வகைகளாகவும், அவை விளங்குகின்றன.

வாழை மரம் இங்கே எடுத்துக் கொள்ளலாம்; உலகப் பொருள்களுள் அதுவும் ஒன்று என்பதோடு, முக் கனிகளிலும் சிறந்த முதன்மைக் கனிவளம் உடைய தகுதியான மரம் அது!

அதனை 'ஞான மரம்' என்றும், 'ஞானத்திலும் ஞான சன்மார்க்க மரம்' என்றும்; அறத்துக்கு ஒரு மரம் என்றும் கூறுவதுண்டு.

வாழை மரம் தல மரமாக இருக்கும் பதிகளில் எல்லாம், ஞானத் தொடர்பு அமைந்திருப்பது கண்கூடு; திருக்கழுக்குன்றத்தின் தலமரம் வாழைதான்.

ஞான சன்மார்க்கப் பெரியாராகிய மாணிக்க வாசகர்; இறைவனுடைய ஞானத் திருவடிகளை வைக்குமிடமாகத் தேர்ந்து, அதனால் கழுகு பதி திருவடித் தலமாகத் திகழ்கின்றது.

வடலூர் வள்ளலார், அடியார் மரபுக்கு இதனை உவமமாகக் கொண்டு, ''வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம்'' என்று அருளிச் செய்வார்.

வாழை; ஏனை எல்லா உயிர்களையும்விட, ஆறறிவும், அறவுணர்வும் மிக உடைய மக்களினத்துக்குப் பேருதவியாகவும், அடியார் திருக் கூட்டத்துக்கு இணையாகவும் இருத்தலால், உயர்ந்த இனத்தோடு சேரும் அதன் உயர்ந்த திறம் ஊன்றி நினைந்து உளத்தற் குரியது!

இத்தகைய பெருந் தகுதிகளையுடைய வாழை மரத்தில், உறுதிப் பொருள் நான்கும் உள்ளுரையா யிருத்தலும் நன்கு தோற்றுகின்றது.

வாழை மரத்தின் தோற்றம் வழு வழுப்பாய், ஒழுங்காய்; நீண்டு; பசிய இலைகள் உடையதாய், மிக அழகாய் காட்சியளிக்கின்றது.

அதன் அழகு, கண்டார் கண்களைக் கவ்வுந் திறத்தது. 'தகையணங்கு உறுத்தல்' என்றே இதனைச் சொல்லி விடலாம். கை புனைந்தியற்றாத இக் கவின் காட்சியை என்னென்பது! வீடுகளிலுந் - தோட்டங்களிலும் மங்கலக்

களங்களிலும் இதனால் உண்டாகும் இன்ப நிலையைத்தான் என்னென்பது. வாழையின் **இன்பத் திறம்** அது.

வாழையும், வாழையிற் கிடைக்கும் தண்டு, இலை, காய் முதலியனவும் வாழையின் **பொருளதிகாரம்.**

வாழையின் எல்லாப் பொருள்களும் 'மக்களுக்குத் தேவைப்படு கின்றன. அதனால் உலர்ந்த சருகும்கூட உண்கலனாகவும், தொன்னை களாகவும் உதவுகிறது.

வாழையின் **அறத்திறமோ** உள்ளத்தை ஒருங்கே கொள்ளை கொள்கின்றது. **அறத்திறம் என்பது இங்கே ஒழுங்கு முறை. அதுவும் கரவற்ற ஒழுங்கு முறை.**

சில மரங்கள் முடிச்சுகளும் - மொக்கைகளும், மலடுகளும் உடையன. வாழை பெரும்பாலும் அக் கரவுகள் உடையதன்று.

வளத்துக்கு ஏற்றபடி வஞ்சனையில்லாமல் வளர்ந்து குழந்தைகள் போல் இல்லங்களில் ஆடி அசைந்து குழைவாய் விளங்குவன.

வாழையின் ஒவ்வொரு பகுதியிலும் அவ் வொழுங்குச் சிறப்பு மேம்பட்டிருக்கிறது.

அடியில் தோன்றும் கன்றுகள், தன் தாய் வாழையைச் சுற்றி வளைத்துக் கொண்டு, அதன் ஆதரவிலும் அணைப்பிலும் அதன் மடியிலேயே அவ் வளைவு ஒழுங்கில் வளர்ந்தெழுகின்றன.

மட்டைகளும் அப்படியே; உரிக்க உரிக்க மட்டையாய் வளைந்து கவ்விப் பற்றிய அடுக்கு ஒழுங்கில் அமைந்திருக்கின்றன.

'மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம்' (65) என்ற பொய்யா மொழிக்கு ஏற்ப, தொட்டுணர்வுக்கு இதமாக வழு வழுப்பிலும் மென்மை யிலும் மேம்பட்டவை அல்லவா அவை?

இந்தியத் தென்பகுதியின் கடற்கரை ஓரம்போலப் - பக்க வளைவுகள் இல்லாமல்; வாழையின் இலைகள் வளைவு - ஒழுங்கும், அடுக்கு ஒழுங்கும் மிக்கு; மரத்தைச் சுற்றி ஒவ்வொன்றாகவும், ஒன்றன்பின் ஒன்றாகவும், முதலில் வெண் குருத்தாய்ச் சுருண்டு தோன்றிப் - பின்பு பசிய மடல் விரித்து அவ்வொழுங்கிலேயே எல்லாம் எழுகின்றன.

வாழைப் பூ, மரத்துக்கு ஒரே பூ. **அந்த ஒன்றை, திருக்குறள் நூல் ஒன்றை மட்டும் திருவள்ளுவர் நன்றாய் செய்தளித்ததுபோல,** வாழையும் நன்றாய்ச் செய்து வழங்குகின்றது.

பூவின் மட்டையும், அடுக்கடுக்காய் - ஒவ்வொன்றாய்ச் சுற்றிலும், பெட்டித் திறப்பதுபோல் திறந்து விரித்து - உள்ளுள்ள இதழ் வரிசைகளை வெளிப்படுத்துகின்றது.

ஒவ்வோர் இதழும் ஒவ்வொரு காய். இதழும் - காய்களும் வரிசை வரிசையாய் வரிசை யொழுங்கில் திகழ்கின்றன.

கடைசியில் வாழைத் தண்டை உரித்தெடுத்து விட்டால்; வெள்ளித் தண்டே என்னும்படி **நேர்மையொழுங்கில்** எவ்வளவு சிறந்து காட்சியளிக்கின்றது!

இந்த நேர்மையை வேறு எந்த மரத்தில் நாம் காண முடியும்? இயற்கையான வாழைத் தண்டை வைத்துக் கொண்டு நேர்க்கோடுகள் போடலாம்.

வாழை இங்ஙனமெல்லாம் - வளைவு ஒழுங்கு, அடுக்கு ஒழுங்கு, வரிசையொழுங்குகளோடு நேர்மையொழுங்கிலும் மேம்பட்டு, அறத்திறமென்னும் ஒழுங்கு முறையில் தன்னிகரற்று விளங்குகின்றது.

**ஒரு பேரறிவின் பதிவு** வாழையின் பொருள்களில் பதிந்திருந்தாலல்லாமல்; இத்தனை யொழுங்குகளை அதனிடத்திற் காண முடியுமா? அந்தப் பேரறிவு எது? அதனை நன்றியறிதலுடன் நினைவு கூர்தல் எவ்வளவு இன்றியமையாதது!

சிறந்த மரங்களெனப்படும் வாழை, மா, பலா என்னும் முக்கனி மரங்களை எடுத்துக் கொண்டால், அவற்றில் ஏனை இரண்டும் இவ்வொழுங்குத் திறத்தில் வாழை போல்வன அல்ல?

பட்டைகளோ, கிளை களோ, இலைகளோ, காய்களோ எவையும் இவ்வொழுங்கில் எழுவதில்லை.

பலாப் பழம் மேலெல்லாம் முள்ளிருப்பதோடு - அவையும் வரிசைப்பட இல்லை. சில பலாப் பழங்கள் ஒரு பகுதி ஒடுங்கியும் ஒரு பகுதி பருத்துங்கூட இருக்கும். முள்ளோடு பிசினும் உடையது.

வாழையின் காய்களிலோ - பழங்களிலோ இத்தகைய முடக்குகளை, இடர்களைக் காண்பதரிது.

முக்கனி மரங்களில் பலாவைவிட மாவும், மாவைவிட வாழையும் சிறந்தன.

வேறு மர வகைகளிலும் செடி வகைகளிலும் இவ்வொழுங்கு முறைகளிற் சிற்சில ஏறக்குறையவாவது காணப்பட்டாலும், வாழையின் ஒழுங்குமுறை அத்தனையும் நிறைவாகக் காண்பது கடினம்.

அப்படியே, பொதுவாக மக்கள் வாழும் இடங்களில், இல்லங்களில் சென்று பார்த்தால் அவர்கள் பேரறிஞர்களாக இருந்தால்கூட, அவர்கள் தெருக்கள், இல்ல வரிசைகள், இல்லத்திற்குப் புழங்கு பொருள்கள், புத்தகங்கள் முதலியன பெரும்பாலும் ஒழுங்காக இருப்பதில்லை.

அறவொழுங்கு அவர்களிடையே வீறு பெறவில்லை. யாரோ சான்றோர் சிலரிடம் அரிதில் அதனைக் காண முடிகிறது. **மனிதரில் ஞானிகள் இருப்பது போல, மரங்களில் ஞான மரம் வாழை.**

இனி, வாழை மரத்தில் வீட்டுத் தன்மை அமைந்திருப்பது எண்ணுந்தோறும் வியப்பினை விளைக்கின்றது.

'வீடு' என்பது விடுதலை; பற்று விடுதலை; பற்று என்பதை ஒரே சொல்லாற் சொல்லப்போனால், 'தன்னலம்' என்று சொல்லி விடலாம். இவ் விடுதலை வாழையில் மிக நன்றாகத் தெரிகிறது.

வாழை மரம் குலை விடுகிற வரையில் வாழ்கிறது. அப்புறம் அது வீழ்கிறது. அதனால் குலை விடுவதற்காகவே அது அடுக்கடுக்காய் இலை விட்டு வளர்ந்து வந்ததாகத் தெரிகிறது.

அந்த நோக்கம் நிறைவேறியவுடன் தன் கடமை தீர்ந்ததாகவும், தான் தோன்றி வளர்ந்த முயற்சி வெற்றியுற்றதாகவும் துணிந்து, தன் உயிர் வாழ்க்கையை முடித்துக் கொள்ள - அது, ஏற்பாடாய் இருக்கிறது.

அப்படி வாழ்வின் ஒரே நோக்கமாய், ஒரே தடவையாய், ஒரே குலையை வழங்கிவிட்டு உயிர் விடுகிற அந் நிகழ்ச்சியில் மிகவும் உருக்கம் தருகிற உண்மை, அத்தகைய ஒரே குலையையும் தனக்காகவோ, தன் கன்றுகளுக்காகவோ ஒரு சிறிதும் வைக்காமல், முழுதும் பிறர்க்காகவே, அதாவது உலகுக்காகவே வழங்கி விடுவதுதான்!

**முழு விடுதலைக்கு இதைவிட வேறு என்ன எடுத்துக்காட்டு உள்ளது?**

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் - அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (72)

- என்னும் பற்றற்ற வாழ்க்கைப் பண்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் தன் உடலின் நடுத் தண்டையும் பிறர்க்கே உரிதாக்கிவிட்டு மறைந்து விடுகிறது.

'என்பும் உரியர் பிறர்க்கு' என்னும் பண்புக்கு, மனிதரில் எல்லாரும் அப்படியிருக்கின்றனரா? ஆனால், வாழைகள் எல்லாமே அப்படிச் சார்பு நிறைந்தனவாய் இருக்கின்றனவே.

மக்கள் தேடும் தேட்டங்கள் வாழையைப்போல, முற்றிலும், பிறர்க்குப் பயன்படுவதில்லை. பிறர் நலங்களுக்கென்றே தேடப்படுவதுமில்லை.

பக்கங்களிலேயே சூழ்ந்திருந்து, குலை வரையில் கன்றுகள் தாவி வளர்ந்து, காலமெல்லாம் காத்திருந்தாலும், தாய் கடைசியாகத் தள்ளும் ஒரே ஒரு குலைகூடத் தமக்குப் பயன்படாமல் பிறர்க்குப் போய் விடுகிறதே என்று சிறிதும் வஞ்சினம் கொள்ளாமல், தாய் வாழையைப் போலவே கன்று களும் அவ்வழியை, அவ் விடுதலையை வழிவழிக் கடைப்பிடிக்கின்றன.

'தாளாற்றித் தந்த பொருளெல்லாம், தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு' (212)

- என்று தமிழ் மறை கூறும் பற்றற்ற பாண்மையை, முற்றுந் துறந்த முனிபுங்கவர் சிலரிடமல்லது ஆறறிவு படைத்த மக்கட் பிறப்பினர் அனைவரிடமும் காண முடிகிறதா?

'தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர் ' (348)

என்றபடி; வாழையைத் தவிர மற்றையவர் மயங்கி வலைப்பட்டவராகவே பெரும்பாலும் காணப்படுகின்றனர்.

'பொருளெல்லாம் வேளாண்மை செய்தற் பொருட்டு' என்பதில் வரும் எல்லாம் என்னும் எஞ்சாமைக் குறிப்புக்கு வாழையைத் தவிர வேறு எடுத்துக்காட்டு ஏது?

வீட்டுணர்ச்சி என்பது, பற்று முற்றும் அற்ற உணர்ச்சியாதலின், வீட்டுணர்வு உடையாரே, பயன்படும் உணர்வு முற்றும் உடையவர். **பயன்படுதலே வீட்டு நிலை.**

வாழையின் பொருளெல்லாம் வேளாண்மையில், அதாவது பயன்படுதலில் சற்றும் இழுக்கில்லாதவை,

அடியிலுள்ள வேர்க் கிழங்கு, வாழைப்பட்டை, நார், வாழைத் தண்டு, வாழை இலை, சருகு, பூ, காய், கனி முதலிய அனைத்தும் தலைசிறந்த நிலைகளிற் பயன்படுகின்றன. பட்டையின் சாறுகூட மருந்துக்குப் பயன்படுகிறது. வாழையில் பயன்படாத பொருள் எதுவுமில்லை. முற்றிலும் பயன்பட்டு வாழை இங்ஙனம் முற்றிலும் **வீட்டுணர்ச்சி'** மிக்கிருக்கின்றது.

இதனால், வாடாத மங்கலமுடையதாய், நிலைத்த இல்லறப் புகழும், அந் நிலையே பேராத இயற்கையுமுடையதாய்ச் சென்றே புகுங்கதி' யின்றித் தான் நின்று புகழும் பெற்றுச் சிறந்து, அடியார் மரமாய் வாழை வீடு பேறுடையதாகின்றது.

வீட்டுணர்ச்சி வாழையிற் காணப்படுவதுபோல் வேறு எங்கும் எதனிடத்தும் காணப்படுவதில்லை.

இவ்வாற்றால், **வாழ்வதென்பது வாழை ஒன்றே! வாழ் என்னும் முதனிலையிலிருந்து 'வாழை' என்னும் அழகிய பெயரை வேறு எது பெற்றிருக்கிறது?**

**வாழ்வது வாழை என்பதனாலன்றோ, குலை தள்ளிய வாழை மரங்களை, வாழும் வகைக்குத் திருமணங் கூட்டும் இல்வாழ்க்கை மண விழாக்களிலும், திருவருள் கூட்டும் ஞான வாழ்க்கைக் கடவுள் விழாக்களிலும் மங்கலமாக நிறுத்தி அணி செய்விக்கும் மரபு தமிழ்நாட்டில் எங்கும் காணப்படுகின்றது.**

எனவே, அற மரம்; ஞான மரம் வாழை மரம்! அந்த வாழ்க்கை தியாக வாழ்க்கை. திருக்குறள் வாழ்வியல்படி மக்கள் நடந்தால், நாமும் தியாக வாழ்க்கை வாழ முடியும். அதற்குச் சான்று வாழை மரம்!

***திருக்குறள் பீடம், குருகுலம் அழகரடிகள்***

காவலன் காவான் எனின்..?

தமிழர்கள் ஆண்ட நாளில் அரசியல் ஆறு துறையாய் வகுத்து ஆட்சி நடத்தப்பட்டது. அவை, **உழவு, தொழில், வாணிகம், கல்வி, தச்சு, வரைவு** என்பன.

உழவும் தொழில் என்னும் துறையில் அடங்குமேனும், சிறப்புக் கருதி உழவுத் தொழிலைத் தனித்தனியாக வைத்துக் கருத்தூன்றிக் காத்து வந்தார்கள். உழவும் தச்சும் (சிற்பம்) நீங்கிய பிற வேலை அனைத்தும் தொழில் துறையில் அடங்கியவை.

எழுத்து, சொல், பொருள் என்பனவும், கோள் நிலையறிதல், மருத்துவம் முதலியனவும், போர்ப் பயிற்சியும் - கல்வி என்ற துறையில் அடங்கும்.

வரைவு என்னும் துறையாவது யாது? எல்லைப் பிரிவை உறுதி செய்தல், கோட்டை கட்டுதல் முதல் குளம் வெட்டுதல் வரைக்குமுள்ள இடங்களை வரையறுத்தலும் அளவு செய்தலும் முதலியவை.

இந்த ஆறு துறைக்கும் அக்காலத்தில் ஆறு அமைச்சர்களை அமைத்துத் திறம்பட நாட்டைக் காத்து வந்தான் தமிழரசன்!!

ஆறு துறையே அன்றிப் போர்த்துறை ஒன்று தனியே இருந்த வந்ததோ எனில் அவ்வாறில்லை. **கல்வி எனும் துறையில் போர்ப் பயிற்சியும் அடங்கியது** என்று முன்னமே சொன்னேன். ஒரு துறைக்கு ஓர் அமைச்சனே அன்றிப் பல அமைச்சரை அமைத்தலும் உண்டு.

இந்த ஆறு துறையின் ஆறு அமைச்சர்களுக்கும் அலுவலகம் ஒன்றே; அது இந்நாளைய 'செக்ரடேரியேட்' போன்றது. **அந்த அலுவலகத்தில் கருமத் தலைவன் ஒருவனிருப்பான். அவன் எல்லாத் துறையிலும் வல்லவன். அவனுடைய அலுவற் பெயர் 'வள்ளுவன்' என்பது.**

வள்ளுவன் சாக்கை எனும் பெயர் மன்னற்கு
உள்படு கருமத் தலைவற்கு ஒன்றும்

என்னும் **பிங்கலந்தைச் செய்யுள் இங்குக் கருதத்தக்கது. உள்படு கருமத் தலைமை என்பது வள்ளுவன் என்ற அலுவற் பெயரையே குறித்து நின்றது காண்க.**

**பின் நாளில் வள்ளுவன் என்ற சொல் சாதியைக் குறிப்பதாக கருதும் நிலை உண்டாயிற்று. இப்படிப் பல. அகம்பட்டன் என்ற சொல்**

**அரசனின் அகச் சுற்றம் ஆறில் - மருத்துவப் புலவன் பெயர். இதைப் பண்டிதச் சொல்லாலும் வழங்கி வந்ததுண்டு. இந்நாளில் இழிந்த சாதிக்காரர் என்று எண்ணும்படி ஆக்கப்பட்டிருக்கிறது.**

வள்ளுவன் என்ற சொல், வண்மையினடியாகப் பிறந்தது. **வண்மை என்றது அறிவு வளத்தை** (நம் திருவள்ளுவர் இயற்பெயர் தேவர் என்பதும், அவரின் அலுவற் பெயரே வள்ளுவர் என்பதும் இங்கு நாம் அறிந்து இன்புறுவோமாக).

அந்நாளில், அரசியல் பொறி என்ன அழகாக, எவ்வளவு திட்டவட்டமாக இயங்கி வந்தது என்பதை நாம் உற்று நோக்க வேண்டும். இதை விவரிக்க இங்கு இடம் போதவில்லை. **கோனாட்சி, குடியாட்சி, குடிக்கோனாட்சி என்ற அரசியல் முறைகளில் அந்நாளைய ஆட்சியைக் குடிக்கோனாட்சி எனல் வேண்டும்.**

இந்நாள் சில நாடுகள் நல்லதோர் ஆட்சி முறையில் நடந்து வருவன என்று நாம் எண்ணுகிறோம். இருக்கலாம், அதுமட்டுமல்ல, இன்னும் சில சிறந்த வகையில் ஆட்சி முறை வகுக்கப் படலாம். அவை அனைத்தும் பண்டைய தமிழ் வகுத்த **குடிக்கோனாட்சி யில்தான்** வந்து முடியும் என்பது மறுக்க முடியாது.

குடிக்கோனாட்சி ஒன்றுதான் **சனநாயகம் - குடியாட்சி** என்பதெல் லாம். மக்களின் நன்மையை - அவர்களின் முழுதுரிமையை முன்னின்று நடத்த என்றைக்கும், எங்கும் ஓர் ஆள் வேண்டும். மக்களே நேரிலிருந்து தமக்கு வேண்டியவற்றைச் செய்து கொள்வதென்பது முடியாதது.

முடுக்கி விட்டால், அரசியற் பொறி (எந்திரம்) தன்னிலையில் சுழன்று கொண்டு போகுமே, அதற்கு அரசன் எதற்கு என்று கேட்கலாம். இது அறிவற்ற கேள்வி. **பொறி இயக்குவோனின் அன்புள்ளம், அப்பொறி இயங்க இன்றியமையாத ஓர் மின்னாற்றல்.**

அரசன் தன் காத்தற் தொழிலைச் செவ்வனம் செய்யான் எனில் ஆறு துறையும் நடவா. நாட்டுக்கு ஆகிக் கொண்டு வந்த பயன் ஆகாமலே அளவிற் குன்றிவிடும். இவற்றை எல்லாம் வள்ளுவர் நமக்கு ஒரே குறளில் காட்டுகின்றார். பழந்தமிழ் நாட்டின் படப்பிடிப்பை நாம் அறிந்து கூத்தாட வேண்டும் என்ன?

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்

**'கொடுங்கோன்மை'** அதிகாரத்தில் 10-ஆம் செய்யுள் இது. 'காவலன் காவான் எனின் ஆபயன் குன்றும். அறு தொழிலோர் நூல் மறப்பர்' என்று **மொழி மாற்றிப் பொருள் கொள்க.**

**ஆபயன்** என்பதற்குப் **பரிமேலழகர் பசுவின் பயன் (பால்) குறையில் என்று பொருள் கொண்டார். அவர் ஆபயன் என்றதை ஆவினது பயன் என ஆறாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டார்.** அவ்வாறு கொண்டால் **ஆபயன்** என ஒற்று மிகவேண்டும். 'ஆகாத் தோம்பி **ஆப்பயன்** அளிக்கும் கோவலர்' என்ற **சிலப்பதிகாரத்திற்** போல!

எனவே, **ஆபயன் வினைத்தொகை நிலைத் தொடர் என்க. காலங்கரந்த பெயரெச்சம் வினைக்குறை என்பது வினைத் தொகை இலக்கணம்.**

"ஆபயன் என்பது **ஆனபயன், ஆகின்ற பயன், ஆகும் பயன் என முக்காலத்துக்கும் விரியும். இங்கு ஆனபயன் என்ற இறந்த காலத்துக்கு விரிக்க ஆபயன் (ஆனபயன்) என்றால் அரசன் நல்லபடி ஆண்டு வந்தபோது ஆனபயன் என்பது பொருள்.** அவையாவன : **பகையரசர் அஞ்சிக் கப்பம் கட்டுதல், வரி வரவு** முதலியவை.

இனி, அறுதொழிலோர் என்பது உழவு, தொழில், வாணிகம், கல்வி, தச்சு, வரைவு ஆகிய ஆறு தொழிலுக்குரியோர். அவர் தாம் ஆறு அமைச்சர்.

நூல் மறப்பர் - தம் கொள்கையை விடுவர்
நூல் - கொள்கை மறத்தல் - கைவிடுதல்.

இனிப் **பரிமேலழகர் அறுதொழில் என்பது ஆரிய மறையோதுதல், ஓதுவித்தல், வேட்டல் (கொலை, வேள்வி முதலியவை), வேட்பித்தல், அறிவு தரல், பிச்சை புகல் ஆகிய ஆறு தொழில் என்றார்.** பொருந்துமா? ஆரியர், தீயொழுக்கம் தமிழர்பால் தலைநீட்டத் தொடங்கக் கண்டருளிய வள்ளுவர் **அவற்றை மறுத்துத் தமிழரை தமிழர் நெறியில் நிறுத்த அருளிய திருக்குறளில், ஆரிய் அறுதொழில் இந்நாட்டில் நடவாது ஒழிந்து விடுமே என்றா அழுவார்?** எனவே, பரிமேலழகர் கொண்ட பொருள் பொய்ப் பொருள் என விடுக்க.

- தென்றல் : மலர் : இதழ் 21 (5.11.55)

## வள்ளுவர் உள்ளம்
### உரைப் பாயிரம்

சீரோங்கி வாழ்ந்த திருவள்ளுவர் இப் பாரோங்கி வாழச் செந்தமிழால் திருக்குறள் என்னும் செய்யுள் செய்யத் திருவுளங் கொண்டார்.

**செய்யுள் என்பது செவ்விய உள்ளம்.** அஃது நூலுக்காயிற்று. ஆகுபெயர். இனி எப்பொருள் கொண்டு செய்யுள் செய்தார் என்பது கேள்வி, நிலம், நீர், நெருப்பு, உயிர், விசும்பு ஆகியவையும், அவற்றின் பகுதியாகிய உலகம், மக்கள், விலங்கு, பறவை முதலியனவும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியனவும் அறிவு, முனைப்பு, மனம் ஆதி (மூலப் பகுதி) இறைவன் (பகவன்) ஆகியவையும், அறம், பொருள், இன்பம் ஆகியவையும் அவற்றின் நிலையின்மையும் பிறவுமாகக் கூறப்பட்ட பருப்பொருள் நுண்பொருள் அனைத்தும் பொருள்களே.

இப் பொருள்கள் அனைத்தும் **அகப்பொருள் புறப்பொருள் என இரும் பெரும் பிரிவாக்கப்படும்.** செய்யுள் செய்வார் அகப் பொருளையும் புறப்பொருளையும் வைத்தேனும், இவ்விரண்டில் ஒன்றை வைத்தேனும் செய்யுள் செய்வர். அந்நெறியே பற்றி **அகம், புறமாகிய இருதிணையையும் வைத்துச் செய்யுள் செய்தருளினார் திருவள்ளுவர் என்பது விடை.**

இனி, அகம் புறம் எனும் இருபொருளும் பற்றிச் செய்யுள் செய்தார் ஆயின்; அவற்றால் எய்தும் பயன்கள் எவை எனின், இவ்வாறு நூற்பயன் நான்காகக் கொள்வது வடவர் முறை அன்றோ எனின், அன்று. கடல் கொண்ட குமரி நாட்டு முதற் கழகத்தார். உலகுக்கு முதற்கண் அருளிய தமிழ் நான்மறை என்பது அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கும் பற்றியதன்றோ?

அந் நான்கனுள் அறமாவது தமிழ்ச் சான்றோர்களால் தமிழ் நான்மறை முதலிய நூற்களில் செய்க என்றவற்றைச் செய்தலும், மனு முதலிய நூற்கள் கூறியவற்றை விலக்கலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும். அவற்றுள் ஒழுக்கமாவது, அறம் எனச் சொல்லியவற்றினின்று வழுவாது ஒழுகுதல்.

வழக்காவது ஒரு பொருள் மேல் 'என்னுடையது' 'என்னுடையது' என இருவருக்கு ஏற்படும் மாறுபாடு காரணமாகத் தொடர்வது. அது கடன்படல் முதல் பதினெட்டுப் பிரிவுகளையுடையது.

தண்டமாவது அக ஒழுகக நெறியினும் வழக்கு நெறியினும் வழுவினோரை அந்நெறி நிறுத்தற் பொருட்டு ஒப்ப நாடித் தக்கவாறு தண்டித்தல். தண்டு - கோல், தடி அதனடியாகப் பிறந்தவை. தண்டம் - தண்டனை - தண்டித்தல், தூய தமிழ்ச் சொற்கள்.

அறமும் வழக்கும் தண்டமும் அறமேயாயினும் அறநூற் செய்த தமிழ்ச் சான்றோர் பின்னிரண்டையும் மன்னன்பால் அளித்து முறை செய்யச் சொல்லியருளுவார். மற்றயை அறமேயும் இல்லறம், துறவறம் என்னும் இருவகைத்தாதலின் அவற்றுள் இல்லறத்தை முதற்கண் கூறுவான் தொடங்கி அனைத்தும் நிகழ்தற்குரிய உலகின் தோற்றத்தை ஈண்டுக் கூறுகின்றார்.

## அறத்துப்பால்

அதாவது அறத்தைக் கூறும் பகுதி. இரண்டனுருபும் பயனும் உடன் தொக்க தொகை.

## அதிகாரம் 1. உலகின் தோற்றம்

அதாவது உலகாகிய இடம், உலகத்து உயிர்கள், அவற்றின் நிலை ஆகியவை தோன்றும் முறையாம்.

> அகர முதல வெழுத்தெல்லா மாதி
> பகவன் முதற்றே யுலகு

என்பது பாட்டு.

> "அகரம் முதல எழுத்து எல்லாம் ஆதி
> பகவன் முதற்று ஏ உலகு"

என்பது அப்பாட்டின் சொற்களைப் பிரித்துரைத்து.

அகரம் முதல் எழுத்து எல்லாம் ஆதி
உலகு பகவன் முதற்று ஏ

என்பது சொற்களைப் பிரித்து மொழி மாற்றியமைத்தது. மேற் செய்யுட்களுக்கெல்லாம் சொற் பிரித்தலை மட்டும் குறிக்க "ப" என்பதையும், அதனோடு மொழி மாற்றையும் குறிக்க 'பி. மா' என்பதையும் குறிக்கப்படும்.

பொருள் :- அகரம் முதல் - அகரத்தை முதலாக உடைய எழுத்து - எழுத்துக்களும், எல்லாம் - அவ்வெழுத்துகளாலாகிய சொற்களும், அச்சொற்களால் பெறப்படும் பொருள்களுமாகிய எல்லாம். **ஆதி - முதன்மையினின் தோன்றியவை. உலகு பகவன் முதற்று - மக்கள் பகவனை முதல்வனாகக் கொள்ளத் தக்கவர்.**

கருத்து : உலகும், உயிர்களும், மற்றுள்ளவைகளும் ஆதி என்பதினின்று தோன்றியவை. ஆயினும் உலக மக்கள் பெறத்தக்க பேறு மெய்யுணர்வு ஒன்றே.

ஏ - ஈற்றசை. முதல் குறிப்புப் பெயரெச்சம். மலா, காய (அகம்) என வந்தன. காண்க. **ஆதி - வட சொல்லன்று. தூய தமிழ்ச் சொல்லே. அஃது ஆதல் எனப் பொருள்படும் தொழற் பெயர். ஆ - முதல் நிலை, தி - இறுதி நிலை.** செய்தி, உய்தி என்பவற்றிற் போல. **ஆதி - முதன்மை ஒரு பொருள் சொற்கள். இதை வடவர் மூலப் பிரகிருதி என்பர்.**

ஆதியாவது எல்லாப் பொருளும் தோன்றுதற்கிடமாவது. இதை

தனையறிவரிதாய்த் தாமுக் குணமாய்
மனநிகழ் வின்றி மாண்பமைப் பொருளாய்
எல்லாப் பொருளும் தோன்றுதுற் கிடமெனச்
சொல்லுதல் மூலப் பகுதி. (மணி - சமய 203 - 206)

**என்பதாலும் அறிக. காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று பண்புகளும் ஒன்றுபட்ட நிலை ஆதி என்று உணரப்படும். அவற்றின் கலங்கிய நிலையே இவ்வுலக மெல்லாம் என்க. எல்லாம் ஆதி என்றதால், உலகம் ஆதி அல்லது முதன்மையினின்று தோன்றியது என்றவாறாயிற்று. எல்லாம் ஆதியினின்று தோன்றின என்னாது எல்லாம் ஆதி என்றது என்னையெனில் காரணத்தில் உள்ளதே காரியத்திலும் உள்ளது என்னும் உள்ளது சிறத்தல் (சற்காரியவாதம்) ஆனதோர் முறை கொண்டு மகனறிவு, தந்தையறிவு (நாலடி) என்பதுபோல, எல்லாம் எழுவாய் ஆதி - பயனிலை.**

**பகவன் வடசொல் அன்று. பகல் எனப் பொருள்படும் பகவு ஆண்பால் இறுதிநிலை. பெற்றது. பகல் - அறிவு ஆகுபெயர். உணர்வு எனலும் அஃது பகவன் ஆண்பாலாற் சொல்லப்படினும், பகவு அஃதாவது உணர்வு என்றே கொள்க.** மேலைச் செய்யுட்களிலும் இவ்வாறே.

அறிதற் கெளிதாய் முக்குண மன்றிப்
பொறியுணர் விக்கும் பொதுவு மன்றி
அப்பொருள் எல்லாம் அறிந்திடற் குணர்வாய்
ஒன்றாய் எங்கும் பரந்து நித்திய மாய்
நின்றுள உணர்வாய் நிகழ்தரும் புருடல் (மணி, சமய. 227-232)

என்பதால் பகவன் இலக்கணம் அறியப்படும்.

**எண்ணூலை வடவர் சாங்கியம் என்பர். எண்ணூல் என்பது அனைத்தும் இருபத்தைந்து தத்துவமென எண்ணப்படுதலின் வந்த காரணப் பெயர். சாங்கியம் என்பது சங்கியையை உடையது. சாங்கியம் ஆனது.** வடமொழித் தத்திதப் பெயர். இவ்வாறு மொழி பெயர்த்துக் கொண்டனர் வடவர்.

**எண்ணூல் திருவாரூர்க் கபிலரால் முதற்கண் ஆக்கி இவ்வுலகுக்கு அளிக்கப்பட்ட தத்துவ நூல்.** தலைக் கழக நாளினின்று சென்ற 2500 ஆண்டு முன் வரை இஃது எழுதாக்கிளவியாய் இருந்தது. **பின்னர் கபிலர் நூலாக்கினார் என்பர் ஆராய்ச்சியாளர். மேல் நாட்டில் எழுந்த தத்துவ நூல்களுக்கும் எண்ணூலே அடிப்படை என அறிதல் வேண்டும்.**

எந்நாளில் நூல் தோன்றுகின்றதோ அந்நாளில் மக்களிடம் பரவியிருந்த பண்பாட்டின் அடிப்படையில்தான் நூற்கருத்துக்களும் அமையும் என்பது இயற்கைச் சட்டம். **(திருவள்ளுவர் திருக்குறளும் பெரும்பாலும் எண்ணூற் கொள்கையின் அடிப்படையில்தான் எழுந் துள்ளது என்பது மறுக்கக் கூடியதன்று)** இஃது மேல் வரும் செய்யுட்களின் உரைகளில் எடுத்துக்காட்டப் பெறும். மற்றும் **நீத்தார் பெருமை ஏழாம் செய்யுள் உரையில் எண்ணூற் கொள்கை விரிக்கப்படும் அங்குக் காண்க.**

இக் குறட்பாவுக்குப் பலரெல்லாம் பலவாறு பொருள் கூறினார். அவையனைத்தும் தத்தம் சமயத்தை அடிப்படையாகக் கொண்டவை. **திருவள்ளுவர் சமயக் கணக்கர் மதி வழியே நூல் செய்தாரிலர்.**

வள்ளுவர் உள்ளம் என்னும் இவ்வுரையின் மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் விடையும் வருமாறு :

ஆத்திகன் : பகவன் என்பதற்கு **மெய்யுணர்வு.** அதாவது **அறிவு என்று பொருள் கூறிக் கடவுள் என ஒருவர் இல்லை என்று ஆக்க எண்ணுகின்றீரா?**

உரை ஆசிரியர் : **ஆமாம்.** 'அறிவான **தெய்வமே'** என்று தாயுமானாரும், அறிவை அறிவது பொருளென **அருளிய குருநாதர என்று அருணகிரி நாதரும், ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர்வில்லாதவர்க்கு என்று இந் நூலாசிரியரும் போல.**

நாத்திகன் :- **அறிவு ஒன்றே பெறத்தக்கது என்று கூறிக் கடவுள் ஒருவர் உண்டு என்பதை உறுதி செய்கின்றீர்களா?**

உரை ஆசிரியர் :- **பெறத்தக்கது அறிவு என்று நான் உண்மை உரை கூறினேன். அதனால் கடவுள் ஒருவர் உண்டு என்று ஆய்விடாது. அப்படி ஆய்விடுமானால் ஆய்விடட்டும். அதனால் உமக்கென்ன முழுகிப் போகும்?**

ஆத்திகன் :- மக்கள் பெறத்தக்கது அறிவு என்று மட்டும் கூறிய நீவிர் **அறிவாகிய கடவுள் என்று ஏன் கூறவில்லை?**

உரை ஆசிரியர் :- கடவுள் என்ற சொல் மக்கள் அறிவு பெறாத காலத்தில் ஏற்பட்டதாய் இருக்கலாம். கடவுள் - கடந்தது; அறிவுக்கு எட்டாதது என்று அதன் பொருளையும் நோக்குக. எட்டாத ஒன்றுக்குப் பெயர் எப்படி எட்டியிருக்கும்? **இவைகளைக் கருதியன்றோ வள்ளுவர் தம் நூலில் கடவுள் என்ற பெயரையே எடுத்தாளாது விட்டார்.**

நாத்திகன் :- சாங்கியம் என்பது ஒரு மதமா?

உரை ஆசிரியர் :- **இல்லை. தமிழர்பால் தொன்று தொட்டு இருந்து வரும் பண்பாடு. இடையில் திருவாரூர் கபிலர் எண்ணூல் என்ற பெயரால் நூலாக இயற்றியருளினார்.**

நாத்திகன் :- அந்தப் பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே அக்கால நூல்கள் உண்டாகும் என்பதை விளக்க முடியுமா?

உரை ஆசிரியர் :- மேல் என்றால் வானத்தை நோக்கி அண்ணாந்து பார்ப்பது இந்நாள் வழக்கம். இந்நாளில் ஏற்படும் நூற்களும் அதை அடிப்படையாகக் கொண்டுதான் உண்டாகும். கீழ்ப் புறத்திற்கும் மேல் என்பது பொருந்தும் என்று கொண்டு கீழ்நோக்கார். அதுபோலவே அக்காலத் தமிழர்கள் இந்த உலகம் என்றைக்கு உண்டானது என்று ஆராய்வது பயனற்ற வேலை என்பார்.

**உலகம் ஆதியினின்று முதன்மையினின்று தோன்றிற்று என்றார்? அந்தக் கருத்தின், பண்பாட்டின் அடிப்படையில்தான் அக்கால நூற்களும் அமைந்தன.** உலகம் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்பதை அடிப்படையாகக் கொண்டு **நூல் அமையாது. இதுதான் சாங்கியத்தின் அடிப்படையில் குறள் உண்டாயிற்று எனப்பட்டது.** சாங்கியம் மதமன்று. அது எவராலும் உண்டாக்கப்பட்டது அன்று. அக் கருத்துக்களின் தொகுதியே எழுத்தாக்கிளவி எனப்பட்டது. **எழுதிய பின் எண்ணூல்** என்றார்கள்.

எண்ணூல் பல மொழியில் பெயர்க்கப்பட்டது. ஆரியர் - திபேத்தியர் முதலியவர்களால் பலவாறு திரித்து எழுதப்பட்டது. **சாங்கிய கருத்துக்கள் இயற்கையோடு இயைந்தவை. பகுத்தறிவுக்கு ஒத்தவை. ஆதலால்தான் அக்கருத்துக்கள் தத்துவ நூற்கள் என எழுந்த அனைத்திற்கும் அடிப்படையாகி மிளிர்கின்றன.**

மதம், சமையம் என்று சொலலப்படுவன அனைத்தும் ஒருவனால் **ஒரு கொள்கையை நோக்கி மக்களை இழுக்க உண்டாக்கப்படுவன.** சாங்கியம் - கருத்துக்கள் - பண்பாடுகள் எவராலும் - எவரை தம் பக்கம்

இழுக்கவும் ஆக்கப்பட்டன அல்ல என்பதை உணர்வார். அதை மதம் என்றார் என்பதை நீவிர் இங்கு நினைவிற் கொள்க.

ஆத்திகன் :- எழுத்தெல்லாம் அகரத்தை முதலாகக் காரணமாகக் கொண்டவை. அதாவது அகரத்தனன்றே மற்ற எழுத்துக்கள் உண்டாயின. இது பெரியோர் கொள்கையல்லவா?

உரையாசிரியர் : **எழுத்துக்கள் அனைத்தும் ஓம் என்றதினின்று தோன்றியவை என்று விளக்கிய மாணிக்க நாயக்கர் சிறியோரா?** அன்றியும், அ முதல் ஔ வரைக்குமுள்ள உயிர்கள் பன்னிரண்டு. **அவற்றில் ஓர் எழுத்திலிருந்து மற்றவை தோன்றின என்பது எப்படிப் பொருந்தும்?** காலில் விலங்கும் கையில் விலங்கும் உடல் மறைய ஒரே வகைச் சட்டையுமாய்ச் சிறையில் இருக்கும் பன்னிரண்டு குற்றவாளிகளில் ஒருவன் மற்றவரை ஆக்கினான் எனில் அதற்கு என்ன அடையாளம்? என்ன ஆதாரம்? சொல்லத்தான் வேண்டும் என்று மதமக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் ஊற்றுக்கு நிற்காது.

ஆத்திகன் :- எழுத்துகளில் நான் அகரமாய் இருக்கிறேன் என்று கண்ணபிரானே சொல்லவில்லையா?

உரை ஆசிரியர் :- ஆமாம், கண்ணபிரான் மக்களை இருட்டில் வருக என்று அழைக்கிறான். நாம் ஏன் போக வேண்டும்? **வள்ளுவரைப் பின்பற்ற வேண்டுவது வையத்தின் கடனன்றோ?**

ஆத்திகன் : இந்த அதிகாரத்திற்கு கடவுள் வாழ்த்து என்று இருந்ததை நீவிர் உலகின் தோற்றம் என்றது என்ன?

உரை ஆசிரியர் :- இதுதான் வள்ளுவர் உள்ளம். கடவுள் வாழ்த்து இடையில் ஏற்பட்ட வேலை.

நாத்திகன் :- முதல் நான்கு அதிகாரங்கள் வள்ளுவர் அருளிச் செய்தனவா?

உரை ஆசிரியர் :- இல்லை என்று வ.உ.சிதம்பரனார் எண்ணுகின்றார். நான் அவ்வாறு எண்ணவில்லை. உரை முழுவதும் நீர் படித்தபின் நான் சொல்லுவது உண்மை என்று உமக்கே தோன்றலாம். (குயில் 1.12.59)

ஆத்திகன் :- உலகு பகவன் முதற்று என்பதன் பொருளைத் தெளிவுப்படுத்த முடியுமா?

உரை ஆசிரியர் :- **உலகு - உலகினர்;** பகவன் **முதற்று - பகவனை முதன்மையாகக் கொள்ளத்தக்கவர். இங்கு முதன்மை என்பது காரண முதன்மையன்று. இடமுதன்மை. எனவே அறிவை உலக மக்கள் முதலிடத்ததாக கொள்ளத் தக்கவர். மக்கள் பெறத்தக்கது அறிவே ஆகும் என்றாம். அறிவு ஒன்றை ஆக்கத்தக்கதன்று. எவற்றிற்கும் மேலானது; சிறந்தது; பெறத்தக்கது என்க.** (குயில் 8.12.59)

***- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்***

# திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மர் யார்?

உலகத் தமிழ் மறையாக விளங்கி வரும் வாழ்வியல் நூல் திருக்குறளுக்குப் பழைய உரைகாரர்கள் பதின்மர் இருந்தார்கள். அவர்கள் : **தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பருதியார், திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர்** என்று கூறுவர்.

இந்தப் பத்து உரைகளுள், தற்போது மக்களிடையே உரை பவனியாக மனவலம் வருவது பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர், பரிப்பெருமாள் ஆகியோரது உரைகளே! மற்ற உரைகள் நிலை தெரியவில்லை.

பரிமேலழகர் என்பவர், காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயில் பூசாரியாக இருந்த பார்ப்பனர் என்பர். இவரது உரைதான் இன்று சிறந்த உரையாகக் கற்றோரால் போற்றப்படுகின்றது. அவருடைய வர்ணாசிரம வெறியை உரையினின்றும் நீக்கி விட்டால், திருக்குறளுக்கு அந்த உரைதான் மிகச் சிறந்த உரையாகும். இவர் 'பரிபாடல் பாக்களுக்கும் உரை கண்டுள்ளார்!

மணக்குடவர் உரை, கற்றார்க்கு ஐயம் நீக்கும் உரையாக வாழ்கின்றது. எனவே, அந்த உரையையும் நாம் படித்தால் சில உண்மை நிலைகள் நமக்குப் புரியும்.

தற்காலத்தில் பல உரைகள் வெளிவந்துள்ளன. அவை அவரவர் கொள்கைகளின் சார்புரைகளாக சரணம் பாடுகின்றன. இவைகட்கெல்லாம் பரிமேலழகர், மணக்குடவர், காளிங்கர், பரிதியார் போன்றவர்களே உரை வழிகாட்டிகளாக உள்ளார்கள்.

மேற்கண்ட உரைகளில் எது வள்ளுவர் பெருமானுடைய உள்ளம், சிந்தனை என்பதைக் காண முடியவில்லை. இலக்கியங்களில் தடுக்கி விழுந்தவன் எல்லாம் குறளுக்கு உரை எழுத முன்வந்ததே காரணம்.

நாவல் எழுதிக் கும்பி வளர்ப்போனெல்லாம், திருக்குறளுக்கு எளிய உரை எழுத வந்ததால்தான், **அழுக்காறு** என்ற சொல்லுக்குப் **'பெருமை'** என்று உரை கூறி பணம் தேடுகிறான். இதற்கு அந்த ஆள் எழுதிய உரை முதற்பதிப்பே சான்று! தமிழ் படியாதவனெல்லாம் பதிப்பகம் நடத்த வந்த அறிவுக்கேடு! என்ன செய்வது தமிழ் வளரும காலவினை! அதைத் தமிழ் அனுபவித்து வருகின்றது! வாழ்க 'காலமறிதல்!.

## திருக்குறளுக்குரிய காரணப் பெயர்கள்

1. முப்பால், 2. பொய்யாமொழி, 3. வாயுறை வாழ்த்து, 4. உத்தரவேதம், 4. தெய்வ நூல், 5. திருவள்ளுவர், 6. தமிழ்மறை, 7. பொதுமறை, 9. திருவள்ளுவப் பயன், 10. பொருளுரை, 11. பொதுமொழி, 12. அறம்

## திருவள்ளுவருக்கு வழங்கும் பெயர்கள்

1. தேவர், 2. தெய்வப் புலவர், 3. பொய்யில் புலவர், 4. முதற்பாவலர், 5. பெருநாவலர், 6. மாதாநுபங்கி, 7 செந்நாப் போதார், 8. நாயனார், 9. நான்முகனார், 10. புலவர், 11. திருக்குறளார்.

## திருவள்ளுவருக்கு வடமொழி சூட்டிய பெயர்

தஞ்சை நகரிலுள்ள சரசுவதி பண்டாரத்தில், திருக்குறட் மொழி பெயர்ப்பாய் அமைந்த வடநூல் ஒன்று உள்ளதெனவும், இது நூறு வருஷங்களுக்கு முன்பிருந்த ஸமஸ்கிருத பண்டிதர் ஒருவர் இயற்றியது என்றும், இவர் குறளாசிரியரை வல்லபாசாரியார் என்ற பெயரால் வழங்கியுள்ளார் என்றும் கூறுபவர் யார் தெரியுமா?

இதைக் கூறியவர் டாக்டர் ஸ்ரீமாந். பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரிகள் என்னிடம் ஒருகால் அறிவித்த செய்தி இங்கே குறிப்பிடத்தக்கது.

— மு. இராகவையங்கார்

[சேது சமஸ்தானம் புலவர், வரலாற்றாசிரியர், பெரும்புலவர், 'செந்தமிழ்' இதழ், தொகுதி 8, 1910-ஆம் ஆண்டு பதிப்பு].

# மலேசியா, உலகத் தமிழ்மறை ஆராய்ச்சி மாநாடு — 2005

## திருக்குறள் போட்டியில் முதல் பரிசு பெற்றக் கட்டுரை

மலேசியா நாட்டிலுள்ள கோலாலம்பூர் நகரில், 2005-ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் 17,18,19-ஆம் நாட்களில், உலகத் தமிழ் மறை ஆராய்ச்சி மாநாடு நடத்தியக் கட்டுரைப் போட்டியில், ''திருக்குறள் சொற்பொருள் சுரபி'' என்ற இந்த நூலின் ஆசிரியரான புலவர் என்.வி. கலைமணி எம்.ஏ. அவர்கள் எழுதிய **'உலக பார்வையில் தமிழ்மறை'** என்ற கட்டுரை முதற்பரிசு பெற்றது. அந்தக் கட்டுரை. அந்த மாநாடு வெளியிட்டுள்ள மலரில் ''எனது பார்வையில் தமிழ் மறை'' என்ற தலைப்பில், எனது பெயாரல் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டுரை இது :

''எழுத்தின் வடிவத்தையும், எழுத்தின் ஒலி வடிவத்தையும் தமிழ்ச் சான்றோர் உருவாக்கியபோது, எண்ணற்ற மேதைகள் அதற்காக உழைத்தார்கள்.

ஞாலம், ஞானத் திரட்சிக்காக கையேந்தி நிற்கும் காலத்தில் கோலத் தமிழ் எழுத்து ஓவியக் கூட்டங்களை, அவர்கள் உருவாக்கினார்கள்.

ஓங்காரத் தமிழ் மொழியின் பயனை ஓர்ந்து, ஆங்கார ஆதவனின் எரி நெருப்பை அலட்சியப்படுத்தி, பாங்கான தங்களின் பண்புகளுக்கு வாழ்த்துக் கூறியவர்கள் - அந்தத் தமிழ் அறிஞர்கள்.

தீங்கு உளம் நடுங்கும் தீந்தமிழ் மனமுடைய அவர்கள், பரன்பரை பரம்பரையாகத் தமிழ் இலக்கிய, இலக்கணங்களை - ஓவியமாய்-காவியமாய், வாழ்க்கைத் தத்துவமாய் இயற்றி மறைந்தார்கள்.

அழுதுகொண்டே பிறக்கின்ற மனிதப் பிஞ்சு; சிரித்துக் கொண்டே சாகும்வரை - வாழ்க்கைக்குரிய மனித நெறித் தத்துவங்களை, 'அகம்-புறம்' என்று தமிழிலே வடித்துத் தந்தார்கள்.

காலம்; அவர்களைக் களவாடிச் சென்றாலும், அந்தக் கன்னித் தமிழ் சிந்தனையாளர்கள் தேடித் தந்த சிந்தனைச் செல்வங்கள் - இன்றும் நம்மிடையே நடமாடுகின்றன.

குடல் விழுங்கும் உணவைப்போல, கபாடபுரத்து பைந்தமிழ்க் கருவூலங்களை, தென் மதுரைத் தமிழ்ப் புதையல்களை, கடல் விழுங்கிய போதும், கண்டு கலங்காத அறிவேறுகளாக - அவர்கள் திகழ்ந்தார்கள்.

உலகமே சிந்திக்கத் திராணியற்றுக் காலச் சிதைவுக்கு ஆட்பட்டுக் கலங்கிக் கிடந்த நேரத்தில் - 'யாதும் ஊரே - யாவரும் கேளிர்' என்ற ஒருலகச் சமுதாயத் தத்துவத்தைத் தமிழ்ப் பண்பாட்டின் வாயிலாகக், கொஞ்சு தமிழால் உலகுக்கு விளக்கிக் கொண்டிருந்த இனம் - தமிழினம்.

காலக் கரையான்களால் அழிக்கப்படாத அந்தத் தமிழ் இனத்திலே தான், பரன்பரை பரம்பரையாகத் தமிழ்மேதைகள் தோன்றித் தெள்ளு தமிழை வளர்ப்பதற்காகச் சீரியத் தொண்டாற்றி வந்தார்கள்!

நெடுங்குன்றம் நிமிர்ந்து நின்ற உச்சிக்கு மேல் நின்ற தமிழ் நிலவாய், ஞானச் செந்தாமரை எழிலையும் தோற்கடிக்கும் திருக்குறள் தோற்றமாய், தமிழ்ப் பண்பாட்டிற்குத் தடம் புரளா அறிவூட்டும் சிந்தனையாளர்களாகத் திகழ்ந்து, அவர்களிலே ஒருவராக இன்றும் நிலைத்து நிற்பவர்தான் திருவள்ளுவர் பெம்மான்.

நெசவுத் தொழிலைச் செய்து கொண்டே, அவர் வாழ்க்கையையும் நெய்து வந்தார்! மனித வாழ்க்கை; தறியின் பாவைவிட மிக வேகமாக ஓடுவதையும் கண்டார்.

அதனால்தான், வாழ்க்கையை நெய்ய ஆரம்பித்தார். இல்லையென்றால், உண்மையைப் பெய்ய ஆரம்பித்தார் என்று காலம் அவரைக் கணிக்கின்றது.

திருவள்ளுவர் காலத்தை கி.மு. 31- என்று தமிழகப் புலவர் குழு வரம்பு கட்டியுள்ளது. அதாவது இன்றைக்கு 2036-ஆம் ஆண்டுக் காலக் கட்டத்திலே அவர் வாழ்ந்ததாகக் கால வட்டம் அறிவிக்கின்றது.

தமிழ்ப் பெரும் புலவர், ஆராய்ச்சி வித்தகரான ஞா. தேவநேயப் பாவணர் அவர்கள், திருவள்ளுவர் காலத்தை கி.மு. 3-ஆம் நூற்றாண்டு என்று வரையறுத்து, திருக்குறளுக்கு மரபுரையும் எழுதியுள்ளார்.

எனவே, திருவள்ளுவர் வாழ்ந்தபோது, 'இயேசு நாதர்' என்ற மழையே பெய்யவில்லை. அதனால், கிறித்துவம் முளைவிடாத நேரம். 'இசுலாம்' என்ற புல் பூண்டுகள் அரேபியப் பாலைவனச் சோலையிலே அரும்பாத காலம். அத்தகைய கால வட்டம் வள்ளுவப் பெருந்தகை வாழ்ந்த காலக் கட்டம்.

யூதம், கன்பூசியிசம், பார்சியம் போன்ற மதநெறிகள் வள்ளுவர் காலத்துக்குச் சிறிது முற்பட்டவை. என்றாலும், அவை தமிழ்நாட்டில் காற்சுவடுகளைப் பதித்தில.

சைவம், வைணவம், வைதீகம், பௌத்தம், சமணம் மதக் கொள்கைகள் அப்போது பரவியிருந்தாலும், தமிழ்நாட்டில் தற்காலம் போல் அவை பரவியிராத சூழ்நிலை.

எனவே, திருவள்ளுவர் முதன் முதலாக எழுத முற்பட்டபோது, அவருடைய எழுத்தின் கழுத்தின் மேல் மதங்களின் கூரிய வாட்கள் விழ

ஆரம்பித்தன. அந்த அற்புத மாயங்களை எல்லாம் மீறி நின்று திருவள்ளுவர் சிந்தித்தார்.

கி.மு. 427க்கும் - 347க்கும் இடையே உள்ள காலக் கட்டத்தில் வாழ்ந்ததாக உலக வரலாறு கூறும் கிரேக்க பேரறிஞர் பிளாட்டோ.

"Knowledge has its seat in the head; it is the eye of desire and can become the pilot of the soul' - Plato.

'அறிவு தலைமையாய் நின்று மனித விருப்பத்தை விழுமியதாய் நிறைவேற்றும் விழிபோல உள்ளது. உயிர் வாழ்வு துன்புறாதபடி நல்ல வழிகாட்டியாய் அது அமைந்து நிற்கிறது' என்ற கருத்துக்கேற்ப, திருவள்ளுவரது சிந்தனை நிழலாடி இருக்கலாம்!

"The people need the guidance of philosophers; as desires need the enlightenments of knowledge'

- என்ற அவரது எண்ணத்திற்கேற்ப, 'உலகில் தோன்றிய ஒவ்வொருவனும் தான் பிறந்த மண்ணுக்குரிய தத்துவக் கடமைகளைச் செய்திட வழிகாட்டும் உரிமையுடை யவனாவான். வீணாகக் காலத்தைக் கழிப்பவன் கடையனாவான்' என்பதால், திருவள்ளுவர், 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்' என்ற குறட்பாவை எழுதித் தமிழ் பண்பாட்டிற்கு மட்டுமன்று - உலக மக்களது வாழ்வியலுக்குரிய இலக்கணமாய், இலக்கியமாய் இன்றும் இயங்கி வருகின்றார்.

ஏனென்றால், "There is nothing great in the world, but man and inman there is nothing great - but mind''.

''மனிதனைவிடச் சிறந்த ஒரு பொருள் இல்லை; மனிதனுக்குள் இருப்பவற்றில் சீரிய அறிவைவிட அரிய பொருள் ஒன்றும் இல்லை'' என்ற சாக்ரடீசின் ஞானத்தை அவர் பெற்றிருந்ததே காரணமாகும்.

இத்தகைய உலக மக்கள் வாழ்கின்ற இந்த உலகத்தை; இன்று நான்கு மதங்கள் ஆட்சி செய்கின்றன. அவை - பவுத்தம், கிறித்துவம், இசுலாம், அன்றைய வைதீக மதம் என்று அழைக்கப்பட்ட இன்றைய இந்து மதம் என்பவை ஆகும்.

இந்த மதங்கள் எந்தெந்த உலக நாடுகளை மதத்தின் பெயரால் ஆதிக்கம் செய்கின்றன; ஆள்கின்றன என்பதை உலக அறிஞர்கள் நன்கு உணர்வார்கள்.

மதம் என்றாலே - கடவுள், உயிர், ஆன்மா, வழிபாடுகள் ஆகிய அந்தந்த மதக் கோட்பாடுகளை அமல்படுத்தும் நெறிகளைக் கொண்டவை. அவற்றை உலகப் பார்வையில் இங்கே சுருக்கமாகப் பார்ப்போம்.

திருவள்ளுவர் தனது திருக்குறள் நூலை - வெண்பா பாவின இலக்கணத்திலுள்ள இறுதி ஈற்றடிகளின் முதலடியில் நாற்சீர்களாலும், இரண்டாம் இறுதி அடியில் முச்சீர்களையும் அமைத்து, ஏழுசீர்களில் ஏன் எழுதினார்?

இறைவனை அடைதற்குரிய படிமுறைகள் நான்கு. அவை : சீலம், நோன்பு, செறிவு (யோகம்) அறிவு என்பவை.

இறைவன் உயிர்களிடத்திலே ஒன்றாய், வேறாய், உடனாய், புணரும் முப்புணர்ப்பால் புணர்ந்து - தனது அருளை, இன்பத்தை உயிர்கட்கு வழங்குபவன் என்பதால், திருக்குறள், 'பா' அமைப்பை ஏழு சீர்களால் உருவாக்கினார். ஏன் அவ்வாறு திருவள்ளுவர் எழுதினார்?

அவர் காலத்தில் ஓரளவு பரவியிருந்த சாங்கியம், மீமாஞ்சம், வைதீகம், சமணம், பவுத்தம், சார்வாகம் போன்ற சமயங்கள், 'கடவுள் என்ற ஒன்று தேவையில்லை' என்று கூறி, இறை கொள்கை இல்லாதவையாக இருந்தன. அறவாழ்வு, அல்லது ஒழுக்கம் மட்டுமே இருந்தால் போதும் மக்கள் வாழ்க்கை சிறக்கும்' என்று பிரச்சாரம் செய்திருந்தன.

இந்தச் சமைய நெறியைத் திருவள்ளுவர் மிக எச்சரிக்கையோடு எதிர்த்து, 'அறவாழ்வு, ஒழுக்கம் அமைந்து நிலை பெறுவதற்குக்கூட, இறை யுணர்வும், வழிபாடும் தேவை' என்று வலியுறுத்தி - வற்புறுத்தியதால் தான்:

'அறவாழி அந்தணர் தாள் சேர்ந்தார்க்குஅல்லால்
பிறஆழி நீந்தல் அரிது (8)

'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர்; ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ் வார்' (6)

- என்ற இறை ஒழுக்க நெறிகளைக் கூறினார். திருவள்ளுவர் தான் எழுதிய கடவுள் வாழ்த்து அதிகாரத்தின் பத்துப் பாடல்களோடு நில்லாமல், 'உல கியற்றியான்', வகுத்தான் வகுத்த வகையல்லால், 'உலகத்தார் உண்டென்பது இல்லென்பான்', 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை' என்ற குறட்பாக்களில் இறையுண்மையை, இறை வலிமையை வற்புறுத்தினார்.

திருக்குறளில் கடவுள் உண்மையை, வழிபாடுகளைத் திருவள்ளுவர் வலியுறுத்திக் கூறிய பிறகே, தமிழ் நூல்களில் கடவுள் வணக்கம் என்ற பாக்களைப் பிற்காலத்தில் சேர்த்து நூலுடன் எழுதப்பட்டன.

உலக மக்களும், இந்தியாவில் வாழ்ந்த வேத கால மக்களும் 'கடவுள் பலர்' என்று கூறி வந்தார்கள். இந்திரன், சோமன், மித்திரன், வருணன் என்ற **Polytheism** கொள்கையைப் புகுத்தி வழிபாடு செய்து வந்தார்கள்.

திருவள்ளுவர், அந்த பல கடவுள் தத்துவத்தை மறுத்தார். 'ஒன்றே தேவன்', 'இறைவன் ஒருவனே' என்ற **Monotheism** கொள்கையை வெளியிட்டார். அந்த ஒரே இறை, 'ஆதி-பகவன்' என்றார். அவரை முதலாக உடையதே உலகு' என்றார்.

கடவுள் உலகமாகப் பரவியுள்ளார் என்ற **Panthesim** தத்துவத்தைத் திருவள்ளுவர் கண்டித்தார். 'ஆதி - பகவன் முதற்றே உலகு' என்றார்.

கடவுள் வேறு, உலகம் வேறு. கடவுள் உலகத்திற்கு, 'நிமித்த காரணன்' என்றும் திருவள்ளுவர் அறிவித்தார்.

என்றும் இருப்பது உலகம் - எவராலும் அது உருவாக்கப்பட்டது அன்று'. அது தோன்றுவதும் இல்லை; அழிவதும் இல்லை என்ற சமணர் கொள்கையை மறுத்தார்.

'உலகம் கடவுளை முதலாக உடையது; அதற்குத் தோற்றம், நிலை இறுதி என்ற மூன்று தொழில்கள் உண்டு என்பதற்குச் சான்றாக, 'உலகியற்றியான், ஆதி-பகவன் முதற்றே உலகு' என்றார்.

'உயிர் என்ற ஒன்று இல்லை' எந்தப் பொருளுக்கும் 'ஆன்மா' என்பது ஒன்றும் இல்லை என்று வாதிட்ட பௌத்தர், உலகாயதர் வாதங்களைத் திருவள்ளுவர் மறுத்தார்.

'மன்னுயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ', 'மன்னுயிர்', 'ஓம்பி அருளாள்வர்', 'உடம்பொடு உயிரிடை நட்பு' என்று தனது குறட்பாக்களில் திருவள்ளுவர் முழக்கமிட்டார்.

ஒரே ஓர் உயிர் தான் பல உடல்களிலும் இருந்து வருகின்றது என்ற Monism கொள்கையைப் போதித்தவர்களைத் திருவள்ளுவர் மறுத்தார், 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்ற குறளைத் தீட்டினார். எனவே, பல்லுயிர் உண்டு என்பதற்குப் பற்றுக்கோடாக கடவுட் கொள்கையை சான்றாக்கினார்.

கடவுள் நிறை குணங்களின் உருவம். உயிர் இயல்பாகவே அறியாமை உடையது. அது முயன்று அறிவினைப் பெற்று உயரலாம் என்பது திருவள்ளுவரது கோட்பாடு. அந்த முயற்சியில் ஈடுபடும்போது உருவாகும் வினைச் சார்புகளே வாழ்க்கை நிலைகள் என்றார்.

இதற்குச் சான்றாக, கடவுள் வாழ்த்துப் பாவில், 'இருள்சேர் இருவினையும் சேரா' என்றார். 'இருள் நீங்கி இன்பம் பயக்கும்', 'மருள் நீங்கி - மாசறு காட்சியவர்க்கு' என்று 65-ஆம் குறளில் குறிப்பிடுகின்றார்.

இருள் ஒரு பொருளின் உண்மைத் தன்மையை மறைப்பதைக் காட்டுகிறது. அதாவது, இறைவனை இருள் மறைத்துள்ளது. ஞானிகளின் அறிவுரைகளை ஏற்றுப் பின்பற்றி நடந்தால், இருளை - அந்த மருளை அழிக்க முடியும் என்கிறார் திருவள்ளுவர்.

ஞானியர் அறிவுரைகள் என்றால், சங்கராச்சாரியர் போன்றவர்களது இன அறிவுரைகள் கூறுவோரல்லர், திருவள்ளுவரே எங்களைத் தான் சுட்டுகிறார் என்று, மறப்பினும் ஓத்துக் கொளலாகும்' என்ற 134-வது குறளையும், 'அறுதொழிலோர் நூன்மறப்பர்' என்ற 560-வது கொடுங் கோன்மை அதிகாரச் சொற்களையும் அவர்கள் சான்றுக்கு இழுப்பார்கள்.

'அந்தணர்' என்பர் அறவோர் என்ற குறட் கருத்தால் மேற்கண்ட இனவெறியை எதிர்க்கின்றார் திருவள்ளுவர். காரணம், 'மற்றெவ்வுயிர்க்கும் குளிர்ந்த அருளைச் செலுத்தும் 'செந்தண்மை அந்த இனத்திற்கு இல்லையே' என்பது தான்

கடவுள் என்ற பெயரை - 'இறை' என்று சுட்டுகிறோம். கடவுள் காப்பவர்! அதனால் இறை எனப்படுகிறார். அதே காக்கும் தொழில் மன்னனிடமும் அமைந்திருப்பதால், நாட்டின் காவலனும் 'இறை' என்று கூறப்படுகிறான். அதைத்தான் 'இறைமாட்சி' என்ற அதிகாரத்தால் திருவள்ளுவர் விளக்குகிறார்.

நாட்டைக் காப்பவன் 'இறை' என்று அழைப்பதைப் போல; வீட்டைக் காக்கும் இல்லறக் காவலன் 'கொழுநன்' என்ற சிறு தெய்வமாகின்றான். அதனால் தான், 'தெய்வம் தொழா அள்' என்ற குறளில் அந்தக் கருத்தைச் சுட்டுகிறார் திருவள்ளுவர்.

தெய்வம் தொழுதற்குரிய எண்வகைப் பொருட்களான நிலம், நீர், தீ, உயிர், காற்று, நிலா, சூரியன், புலனாய மைந்தன் என்ற படிமுறைகளில், மண் முதல் விண் வரையுள்ள ஐந்தும் பஞ்சபூத சக்திகளாகும். நிலா, சூரியன் இரண்டும் ஒளி வழங்கும் பொருட்களாக, தனிப்பட எங்கும் தோன்றுவன. இவற்றுக்கெல்லாம் மேம்படும் 'இறை' - வானுறை தெய்வமாகும்.

கணவன் மனைவி இருவரும் ஞான மெய்யடியார்களைத் தொழுபவர் கள். மனைவிக்கு கணவன் உடனுறையும் தெய்வமாவான். பிற தெய்வங் களாகிய சூரியன், நிலா, வானுறை தெய்வம் ஆகியவற்றைத் தொழாமல், கணவனைத் தெய்வமாகத் தொழல் வேண்டும். தெய்வமாக எண்ணி வழிப்படல் வேண்டும். இது பாவனை. பாவனைப் பயன், பாவிப்போர்க்கும், பாவிக்கப்படும் பொருளுக்கும் வந்து சேருமாதலால், தெய்வம் தொழாள் கொழுநனைத் தொழுவாள் என்ற பாவனை கூறப்பட்டது.

தொல்காப்பியர், 'இன்பமும் - பொருளும் - அறனும் - என்றாங்கு, அன்பொடு புணர்ந்து ஐந்திணை மருங்கின்' என்றார்.

திருவள்ளுவர் பெருமான், தொல்காப்பியரால் மூன்றாவதாக எண்ணப்பட்ட 'அறத்தை', திருக்குறளின் முதலாவது பால் ஆக வைத்தார். அறமே வாழ்க்கைக்கு முதன்மையானது என்பதால், அவர் எழுதிய குறட்பாவில் அறத்தை முன்னிறுத்தி, தொல்காப்பியரின் இன்பமே, முதன்மை என்ற குறிக்கோளை மறுத்தார்.

அதற்குச் சான்றாக, 'அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம் புறத்த புகழும் இல' என்றார். தனி மனித வாழ்வுக்கு இன்பமே; சமுதாய வாழ்க்கைக்கு 'அறமே' முதன்மை - என்பதை நிலை நாட்டியவர் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் ஏற்றிய இந்தத் தமிழர் பண்பாட்டு, நாகரீகப் புரட்சிக் கொடியை; அவருக்குப் பின்வந்த 'புறநானூறு' சிறப்புடைய மரபிற் பொருளும் இன்பமும், அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல' என்று வீரப்பண் பாடி - வீறுகொண்டு பறந்து கொண்டிருக்கின்றது.

இவ்வாறு, இன்றைய உலக நாடுகளில் ஆதிக்கம் செலுத்துகின்ற மதக்கோட்பாடுகளை, தத்துவக் குறிக்கோள்களை, ஏறக்குறைய 2300

ஆண்டுகட்கு முன்பே மறுத்து, தமிழர் பண்பாடுகளை நிலைநாட்டிய மதச் சீர்த்திருத்த ஞானப் புரட்சியாளரான திருவள்ளுவர் பெருமானுக்கு 1972, மே, 3-4-ஆம் நாட்களில் ஒரு மாபெரும் சோதனை ஏற்பட்டது.

தமிழ் மறைச் சிற்பியான திருவள்ளுவருக்கு உலகில் இத்தகைய ஒரு மத ஆய்வுப் போர்க்களம் அவர் வாழ்ந்திருந்த காலம் முதல் அன்று வரை வேற்று மதச் சவாலால் உண்டானதில்லை, உருவானதில்லை. அந்த விவரம் கீழே உள்ளது.

சென்னையில் இன்றும் நடமாடும் நண்பர் புலவர் தெய்வநாயகம் என்பவர், 'திருவள்ளுவர் கிறித்தவரா'?, ஐந்தவித்தான் யார்? வான் எது? நீத்தார் யார், எழு பிறப்பு! சான்றோர் யார்? என்ற ஆறு ஆய்வு நூல்களை எழுதி, திருவள்ளுவர் பெருமானைக் கிறித்துவராக்கிட அரும்பாடுபட்டார்.

இதில் உள்ள கிறித்துவப் பிரிவுகளின் ஒற்றுமை என்ன தெரியுமா? நூல்களை எழுதியவர் CSI கிறித்துவர். அந்த நூல்களைப் புத்தகங்களாக்க உதவியர் - அப்போது சென்னை நகர ரோமன் கத்தோலிக்கர் ஆர்ச் பிஷப்பாக இருந்த அருளப்பா என்பவர், திருவள்ளுவரைக் கிறித்துவராக்க பணம் செலவு செய்தது, சென்னை எல்டாம்சு சாலையில் இயங்கும் கிறித்துவக் கலைத் தொடர்பு நிலையம் இயக்குநர் அருட்திரு சா. சுவிசேஷ முத்து, பி.டி., எம்.டி.எச்., அவர்கள். இவர் ப்ராட்டஸ்டண்டு கிறித்தவர்.

திருவள்ளுவர் கிறித்துவரா? என்ற வினாவுக்கு விடை கண்டிட, இரண்டு நாட்கள் மாநாடு சென்னை எல்டாம்ஸ் சாலையிலுள்ள கிறித்துவக் கலையரங்கில் மே மாதம் 3,4 நாட்களில் 1972-ஆம் ஆண்டில் நடைபெற்றது.

திராடவிட மொழி நூல் புலமையில் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்ந்தவரும், தனித்தமிழ் இயக்கத் தலைவராக விளங்கியவரும், திருக்குறளுக்கு மரபுரை எழுதியவரும், கிறித்துவ மூதறிஞருமான பண்டித ஞா. தேவநேயப் பாவணர். இந்த இரண்டு நாள் மாநாட்டுக்குச் சிறப்புத் தலைவராக அமர்ந்தார்.

இந்த மாநாட்டிற்கு வரவேற்புக் குழு தலைவராக, இந்தக் கட்டுரை ஆசிரியரான புலவர் என்.வி. கலைமணி, எம்.ஏ., பணியாற்றினார்.

புலவர் தெய்வநாயகம் எழுதிய ஒவ்வொரு நூலுக்கும், அறுவரைக் கொண்ட ஒவ்வோர் அணியாக, ஆறு நூற்களுக்கும், தமிழகம் முழுவதிலுமுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 36 பேரறிஞர்கள் இந்த வாதப்போரில் கலந்து கொண்டார்கள்.

இரு நாட்கள் மாநாட்டிலும் நடைபெற்றத் திருக்குறள் அறுவை சிகிச்சையால் விளைந்த அனுபவத்தைக் கேட்டிட, அறிஞர்களது ஆய்வுகளின் ஆழமறிந்திட, ஆயிரக்கணக்கான அறிஞர் பெருமக்கள் வருகை தந்தார்கள். காரணம், இதற்கான விளம்பரங்கள் 'தினமணி', 'முரசொலி' நாளேடுகளில் வந்ததால்தான்.

**ஐந்தவித்தான் யார்?**

திருக்குறள் பீடம் அழகரடிகள் **அணித்தலைவர் :** டாக்டர் ச. பால சுப்பிரமணியம், எம்.ஏ., எம்.லிட்., பண்ணாராய்ச்சி வித்தகர் பேராசிரியர் பி. சுந்தரேசனார், சமண மதத் தலைவர், ஜீவபந்து டி.எஸ். ஸ்ரீபால், பேராசிரியர் வி.பா.கா. சுந்தரம், எம்.ஏ., பேராசிரியை ப. தமிழ்ச்செல்வி, எம்.ஏ., ஆகியோர் ஐந்தவித்தான் யார்? **அணி உறுப்பினர்** அறிஞர்களாவர்.

**வான் எது?**

**அணித் தலைவர் :** பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், எம்.ஏ., எல்.டி., விசாரத் (இந்தி), **அணி உறுப்பினர்கள் :** டாக்டர் என். சுப்பு ரெட்டியார், எம்.ஏ., பி.எச்.டி., டாக்டர் ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எச்.டி., பேராசிரியர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், பேராசிரியர் கே. எஸ். மகாதேவன், எம்.ஏ., தத்துவக் கவிஞர் குடியரசு.

**நீத்தார் யார்?**

**அணித் தலைவர் :** டாக்டர் வ.சு.ப. மாணிக்கம், எம்.ஏ., எம்.ஓ.எல். பி.எச்.டி., **அணி உறுப்பினர்கள் :** டாக்டர் மு. கோவிந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி., புலவர் மு. சண்முகம் பிள்ளை, பேராசிரியர் பொன்.ஆ. சத்தியசாட்சி, எம்.ஏ., எம்.ஓ.எல்., பேராசிரியை சரஸ்வதி இராமநாதன், எம்.ஏ., பேராசிரியர் இ.சு. முத்துசாமி எம்.ஏ.பி.டி.,

**எழு பிறப்பு!**

**அணித் தலைவர் :** தவத்திரு. குன்றக்குடி அடிகளார், எம்.எல்.சி., **அணி உறுப்பினர்கள் :** டாக்டர் இரா. சாரங்கபாணி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி., வித்வான் வை. இரத்தின சபாபதி, பி.ஓ.எல்.,எம்.ஏ., மகாவித்வான் ச. தண்டபாணி தேசிகர், ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி, வித்வான் வி.பி. நடராசன்.

**சான்றோர் யார்?**

**அணித் தலைவர் :** இராவண காவியம் ஆசிரியர் புலவர் குழந்தை, **அணி உறுப்பினர்கள் :** பேராசிரியர் டாக்டர் புலவர் மா. நன்னன், எம்.ஏ., பேராசிரியர் மோசசு பொன்னையா, எம்.ஏ., தமிழ்நாடு காவல்துறை சு.மி. டயஸ், ஐ.பி.எஸ்., டி.ஐ.ஜி., (சமணர்), பேராசிரியை சாரதா நம்பியாரூரான், எம்.ஏ., சோம. இளவரசு.

**திருவள்ளுவர் கிறித்துவரா?**

**அணித் தலைவர் :** டாக்டர் மெ. சுந்தரம், எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி., **அணி உறுப்பினர்கள் :** க.த. திருநாவுக்கரசு, எம்.ஏ., (தமிழ்), எம்.ஏ (வரலாறு), எம்.லிட்., டாக்டர் இராம. பெரிய கருப்பன், எம்.ஏ., (வரலாறு), எம்.லிட்., டாக்டர் இஸ்ரவேல் எம்.ஏ., பி.எச்.டி, புலவர் க. வெள்ளை வாரணனார், பேராசிரியர் எழில் முதல்வன், எம்.ஏ.

இறுதியாக மாநாட்டின் இரண்டு நாட்களிலும் திருக்குறளார் வி. முனுசாமி, பி.ஏ., பி.எல். சிறப்புரை ஆற்றினார்.

இரண்டு நாள் திருக்குறள் ஆய்வு மாநாட்டிற்கும் தலைமை வகித்த தலைவர் தேவநேயப் பாவாணர், அவர் ஒரு கிறித்துவராக இருந்தாலும் தமிழ் மக்களுக்கு நியாயமான, நேர்மையான, கடமையான நீதியை, தீர்ப்பை வழங்கினார். என்ன அந்தத் தீர்ப்பு?

திருவள்ளுவர், செயிண்ட் தாமஸ் என்ற பாதிரியார் மத உரையை சென்னை மாநகரிலே கேட்டுத் திருக்குறள் நெறிகளை எழுதியவரல்லர். அவரது வணிக நண்பரான ஏலேலசிங்கர் மூலமாகவும், கிறித்துவக் கருத்துக்களை அறிந்து திருக்குறளை எழுதியவரல்லர்.

நவநீத கிருஷ்ணன்தான் இயேசுநாதர் என்று சிலர் கூறுவதைப் போல இருக்கின்றது. மேற்கண்ட ஆராய்ச்சிகள். நான் எழுதிய திருக்குறள் மரபுரையில் திருவள்ளுவரது காலம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு என்று கூறியுள்ளேன்.

உலகத்தை உய்விக்க வந்த தீர்க்க தரிசிகளது வாக்குகள், நெறிமுறைகள், ஒவ்வொரு நாட்டு ஞானியர்கள் இடையே தோன்றுவதும், கூறுவதும் அந்தந்தக் காலக் கட்டத்துச் சிந்தனையில் மலர்வதுமுண்டு. அதனால், அவரிடமிருந்து இவர் சிந்தனைகளைப் பெற்றார் என்றோ, இவரிடமிருந்து அவர் பெற்றார் என்றோ நினைப்பது இயல்பு. அதற்காக, அந்த ஞானியர்களுக்குக் களங்கம் கற்பிக்க மாட்டார்கள் தேர்ந்த சிந்தனையாளர்கள்.

எனவே, திருவள்ளுவர் காலத்திற்கும் - இயேசு நாதர் காலத்திற்கும் உள்ள இடைவெளியில் நடைபெற்ற மதக்கோட்பாட்டு நெறிகளது வளர்ச்சிகளை நினைத்துக் கொண்டு திருவள்ளுவர் கிறித்துவரா? என்ற வினாவை எழுப்புவதில் எனக்கு உடன்பாடன்று என்று தேவநேயப் பாவாணர் தனது முடிவுரைத் தீர்ப்பைக் கூறி முடித்தார்.

இந்த மாநாட்டின் வரவேற்பாளராக இருந்த புலவர் என்.வி. கலைமணி, எம்.ஏ., அவர்கள், மாநாட்டுக்கு வருகை தந்திருந்த புலவரேறுகளை எல்லாம் வரவேற்றுத் தனது வரவேற்புரையில் பேசும்போது :

'திருக்குறளை யாத்த திருவள்ளுவர் பெருமானுக்கு ஈராயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுக் காலத்தில், இத்தகைய ஒரு வேற்று மதச் சவால், இன்று வரை ஏற்பட்டதில்லை.

வாழ்க்கையில் ஏற்படும் சலனங்கள் அத்தனைக்கும் எப்படி வளைத்துப் பொருள் காண்பது என்பதற்குரிய ஓர் அகராதி திருக்குறள்!

குறள் பிறந்த நாள் முதல் இன்று வரை, அதன் உள்ளே சென்றவன், தன் கருத்து, தன் தெய்வம், தன் மதம் இருக்கின்றாதா என்று பார்க்கிறானே தவிர, அதன் உண்மையை உணர்ந்து பார்த்தது இல்லை.

எந்த உரையாசிரியருடைய நூலை எடுத்துப் பார்த்தாலும், அதில் அவரவர் விருப்பு, வெறுப்பு, தன்னலம், தன் மதம் தாண்டவமாடுகின்றதே

அன்றி, எந்நாட்டவருக்கும், எம் மதத்தினருக்கும், எக்காலத்தவருக்கும் பொருந்துமாறு எழுதப்பட்டதாகப் புலப்படவில்லை.

கடவுளாலேயே நேரிடையாகச் சொல்லப்பட்டு, இரண்டாவது ஆட்களாலே 'Second hand person' னால் எழுதப் பெற்ற பகவத் கீதை, பைபிள், திருக்குரான் போன்றவைகூட, நேரிடையான பொருளை ஓர் இனத்திற்கோ, ஒரு மதத்திற்கோ கொடுத்து விடுகின்றது.

ஆனால், திருக்குறள் தமிழ்தான்! அதிலுள்ள எழுத்துக்களும், தமிழ் எழுத்துக்கள் தான். உலகத்திலுள்ள தத்துவங்கள் அத்தனையும், மதத் தத்துவங்கள் அனைத்தும், தங்களுடைய அடிப்படைகளுக்கு ஏதாவது கிடைக்காதா என்று, குறளை மட்டும் தூண்டில் போட்டுக் கொண்டிருக்கின்றன என்றால் திருக்குறள் பெருமை என்னே!

தமிழ்நாட்டில் ஒவ்வொரு காலக் கட்டத்தில் தோன்றிய உரையாசிரியர்கள் அத்தனைபேரும், அவரவர் மதக் கண்ணோட்டத்தோடு குறளைப் பார்த்தப் பிறகும், இதற்குள்ளே இன்னும் வேறு ஏதோ பொருள் பொதிந்திருக்க வேண்டுமென்று, மேல் நாட்டுத் தத்துவவாதிகளும், பேராசிரியர்களும், அறிவு வெறி கொண்டு தமிழ் மண்ணுக்குப் பறந்து வருகிறார்கள் என்றால், குறளை ஒருவன் எழுதினான் என்பதற்குப் பதில் குறள் இயற்கையாகவே தோன்றிய ஒன்று என்று கூடச் சொல்லி விடலாம்.

காலத்தைக் கடந்த ஒரு மத நூல் இதுவரையில் இல்லை. ஏனென்றால், அந்த மதத் தலைவரின் பிறப்பும் இறப்பும் காலண்டரில் தெரிகின்றது.

குறளாசிரியர் எப்போது பிறந்தார்? எப்போது இறந்தார் என்றுகூட இதுவரைத் தெரியவில்லை.

அதன் உரையாசிரியர்களும், ஆய்வாளர்களும் அவரவர் முடிவுக்குக் கிட்டிய மதிப்பீட்டை வைத்துக் கொண்டுதான் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இப்படி, உட்பொருளைக் கொண்டு, புதைபொருள் ஆராய்ச்சிக்கு இலக்கான நூல் உலகத்திலேயே ஒன்றுகூட இல்லை - திருக்குறளைத் தவிர!

இந்தக் குறளுக்கு இதுதான் பொருள் என்று வாய் மூடுமுன், ஏன், இதுவாக இருக்கக்கூடாது என்ற கேள்வியே எழுகின்றது.

வியப்பிற்குரிய பிறப்பை எடுக்காமல், சாதாரண அரச குடும்பத்திலே பிறந்த புத்தர் பெருமான் கூறிய தத்துவத்தை ஏற்றுக் கொண்ட பௌத்தர்கள்கூட, அதற்கு முன்னாலே இருந்த சமணர்கள்கூட, திருக்குறளைப் பார்த்து, இதில் எங்கள் கருத்தும் இருக்கின்றது என்று வாதிடுவதைப் பார்க்கும்போது,

திருக்குறள், சமண, பௌத்த மதக் காலங்களையும் தாண்டி ஓடுகின்றது என்பதை வியப்போடு கவனிக்க வேண்டியதாக இருக்கின்றது.

அந்தந்தக் காலத்திலே உரை எழுதிய ஆசிரியர்கள், அவரவர் மதக்

காலத்தை வைத்தே திருக்குறளின் காலத்தை நிர்ணயித்தார்கள். அதனால் தான், குறளுக்கு உரையாசிரியர்கள் இவ்வளவு வேகமாகப் பெருகலானார்கள்.

திருக்குறளின் காலம் இதுவரை தெரியவில்லை என்றே வைத்துக் கொள்வோம். அப்போது அது எந்த மதத்துக்குச் சொந்தம்?

உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ள காலம் தானா - திருவள்ளுவர் காலம்? அந்த அறிவுக்குத் திட்டவட்டமான கால வரம்பு கண்டதுண்டா?

திருக்குறளைப் பொறுத்தவரை காலம் கடந்த ஒன்றாக இருக்கும்போது, காலச் சக்கரத்தில் மதங்கள் அடிபடுகின்றபோது, தமிழன் என்ற முறையில் - எனக்கு மகிழ்ச்சி. என்றாலும், ஆராய்ச்சி என்ற முறையிலே அது வெறுப்பைத்தான் அளிக்கின்றது.

எனது திருக்குறளை யாரும் பாராட்டலாம் என்பது வேறு! எவனும் என்னுடையது என்று உரிமை கொண்டாடுவது வேறு!

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் கூறினார். ஆனால், ஒரு மதத்திற்கே தந்து என்று அவர் கூறவில்லை என்பதைக் கவனத்திலிருத்த வேண்டுகின்றேன்.

இந்தக் காலத்தில் ஒரு பூஞ்செடியைக்கூட, ஒருவன் தனி உரிமை கொண்டாட முடியாது. ஏனென்றால், இயற்கை முன்னே அது பொதுச் சொத்து.

எவனுடைய விரல்களிலிருந்து எழுத்தாணி அசைந்தாலும் சரி, அவன் எழுதுகின்ற எழுத்து அவனது அடுக்களைக்குச் சொந்தமல்ல என்பதை நீங்கள் உணர வேண்டும்.

அது, கட்டளையில்லாமல் வருகின்ற, காற்றில் கலக்க வேண்டிய பொதுச் சொத்தாகும்.

நேரிடையாகவே நான் கேட்கிறேன். உங்களுடைய மதங்கள் கடவுளால் நேரிடையாகப் படைத்ததுதானே!

அதே கடவுளுடைய பொதுத் தன்மையில் ஓர் அணுகூட இருக்காதா மனிதனுக்கு?

ஆகவே, இங்கே ஆய்வுக்காக வந்திருக்கின்ற முப்பத்தெட்டுப் புலமையாளர்களையும் நான் தாள் பணிந்துக் கேட்கின்றேன்.

உங்களுடைய மதத்தைக் கடந்து, இனத்தைக் கடந்து, வெளி வருகின்ற ஆற்றல் படைத்த சிறகுகள், உங்களுக்கு முளைக்க வேண்டுமென்று நான் நினைக்கின்றேன்.

அப்படி முளைக்காவிட்டால், உங்களுடைய முட்டைகளை நீங்கள் சோதனையிடுங்கள். மனிதன் சரி பார்க்க முடியாத மிருகமல்ல. அத்தகைய நிலையிருந்தால், அவனைக் கடவுள் படைக்கவில்லை!

சிந்தனைகள் மிருகத்திற்கு இல்லாதபோது, மனிதனுக்கு மட்டும் இருக்கும்போது, உரிமைகள், வேட்கைகள் இவற்றைத் தாண்டிச்

சிந்திக்கின்ற அவனுக்கு, அந்த ஆற்றல் இல்லையென்றால், நீங்கள் வருத்தப்படக் கூடாது. அவனைக் கடவுள் படைக்கவில்லை.

திருக்குறள் என்பது, கையில் கிடைத்த பலகாரமல்ல. உங்களது விருப்பம் போல பங்கிடு செய்து உண்பதற்கு.

மாந்தரின் வாழ்க்கைக்கு அது ஒரு மா மருந்து! நோய்க்கு ஏற்றபடி நீங்கள் அதை உட்கொள்ள வேண்டும்.

திருக்குறள் தொடங்கிய காலத்திலிருந்து, விளம்பரத்திற்காக உரையெழுதுகின்ற ஆசிரியர்கள் வரை, அதன் நுணுக்கம், முடியாத மர்மக் கதையாகவே இருக்கின்றது. நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?

சூழ்நிலையின் காரணமாக நீங்கள் மாறிவிட்டால், பிறக்கப் போகும் தொட்டில்கள், உங்களை மறந்து விடும்! எனவே, எச்சரிக்கையாக இருங்கள்.

ஏனென்றால், இனிமேல் பிறப்பவர்கள் உங்களைத் தூக்கி எறிபவர்களாகக்கூட இருக்கலாம் அல்லவா?

எனவே, காலம் கடந்து சிந்தியுங்கள் (without time) தொட்டில் குழந்தைகள் உங்களைத் தொடர்வதற்கேற்ப சிந்தியுங்கள்.

உங்களுடைய விவாதங்கள் அனைத்தையும், அய்யன் திருவள்ளுவரது உயிர்ச் சொல்லோட்டக் குறள் நாதங்கள் காற்றிலிருந்து கவனித்துக் கொண்டு இருக்கின்றன.

அய்யன் திருவள்ளுவர் முன்னாலே நீங்கள் சிறுபிள்ளைத்தனமாக இருக்கக் கூடாது. அவர் எதிர்பார்த்த, முதிர்ச்சியடைந்த முழு மனிதனை உங்களுடைய ஆய்விலே உருவாக்கிக் காட்டுங்கள்.

திருக்குறளாராய்ச்சியைப் பொறுத்தவரை, இந்த ஆய்வு மாநாடு, அண்ட அளவில் வைத்து மறைந்த சிறு புள்ளியாகக் கருதுகின்றேன்.

ஏனென்றால், அய்யன் திருவள்ளுவன் அண்டத்தைவிட விரிந்தவன் என்பது பொது மக்கள் கருத்து.

இதுவரையில் எழுதிய குறள் உரையாசிரியர்கள், தங்களது பாடையைப் பார்த்துக் கொண்டு எழுதினார்கள். அவர்களுக்குப் பின் யார் வருவார்கள் என்று அவர்களுக்கே தெரியாது.

தன் கருத்தே எதிர்காலக் கருத்தென்று நினைப்பது, பொருள் மாற்ற விஞ்ஞானத்தை அறியாதவர்களின் செயல்.

பொருள் பீறிட்டு வேகமாக மாறுகின்றபோது - மனிதன் மட்டும் மாற மாட்டானா? காலச் சுழற்சி அல்லவா அது?

நேற்றைய கருத்தே - இன்றையே கருத்து என்று கூறுவதற்குப் புது வருடம் எதற்காக? காலண்டர் ஏன்?

'யாதும் ஊரே யாவரும் கேளிர்! என்ற பரந்த நோக்கின் தத்துவத்தில் நாம் வளர்ந்தவர்கள்.

நமது திருக்குறள், எல்லோருக்கும் சொந்தமாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் ஒருவருக்கே அது உரிமையாகாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

சைவத்தின் கருத்து, வைணவத்தின் கருத்து, சமணத்தின் கருத்து, பௌத்தத்தின் கருத்து, இசுலாமியத்தின் கருத்து, கிறித்தவர்களின் கருத்து, திருக்குறளிலே இருக்கின்றதா என்று பார்த்து கொள்ளலாமே தவிர, ஒவ்வொரு மதத்திற்கும் அது சொந்தம் என்று கூறும் துணிவுடையோர் இன்னும் பிறக்கவில்லை என்பதை உணர வேண்டும்.

ஏனென்றால், திருவள்ளுவரது சிந்தனை, கருத்து வண்ணங்கள் இதுவரையில் ஆய்வு நிறக் கலையிலே தேர்ந்தவனுக்கே தடுமாற்றத்தைத் தருகின்றது.

திருக்குறள் என்பது ஒரு வண்ண ஜாலம்! நாத மர்மம்! கருத்துச் சூழல்! சிந்தனை மயக்கம்! அறிவின் சோதனை! தேர்வு பெற முடியாத தேர்தல்! குறி பார்த்தடிக்க முடியாத குறி!

விஞ்ஞான ஆய்வுக்கே ஏற்பட்ட பெரலட்டிக் - அதாவது பாரிச வாய்வு!

மேலும், ஒரு படி தாண்டிச் சொல்லப் போனால், மனிதன் உரை எழுதித் தெளிவு பெற வேண்டிய நூலல்ல - திருக்குறள்.

மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒருவன் இனி பிறந்தால் பரவாயில்லை என்று நினைக்கின்றேன்! ஏனென்றால், உரைகள் கலவரத்தில் முடிகின்ற காரணத்தை வைத்து.

அய்யன் திருவள்ளுவருக்குப் பின் வந்த ஆராய்ச்சி நூல்கள், பொருள் விசாரணை நூல்கள், மனோதத்துவ நூல்கள், விஞ்ஞான நூல்கள் அனைத்தையும் கரைத்துக் குடித்த ஒருவன்கூட - திருக்குறளுக்கு நேரிடையாகப் பொருள் கூற முடியவில்லையே - ஏன்?

ஏனென்றால், தமிழுக்கு உயிர் நூல்களை எழுதிய. தன்னேரிலா அறிவு அரிமாக்கள் அனைவரும், சூத்திர வடிவில், யாப்பு செய்யுள் வடிவில், நுட்பம் செறிந்த செஞ் சொற்களைப் பெய்து, மந்திரம் - மறை போன்ற பொருளாட்சிகளைப் புதையல் போல் வைத்துள்ளார்கள்.

திருவள்ளுவம் என்றால் என்ன என்பதை நீங்கள் கூற வேண்டும். உங்களது எல்லையிலே இருந்து அது வராமல், உலக எல்லையிலே இருந்து வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

எனவே, மனிதன் என்பவன், எந்த நூலை எழுதினாலும், படித்தாலும், கேட்டாலும், மாசிலா மனமுடையவனாக இருந்தால்தான், எதை அவன் கேட்கிறானோ, அதன் உண்மைப் பொருளைக் காண முடியும்.

இவ்வாறான மறை பொருட்கள் திருக்குறளிலும் உண்டு!

அவற்றை ஆழ்ந்து, கூர்ந்து, ஓர்ந்து படிக்க வேண்டிய பொறுப்பு தமிழறிவுடையார் கடமை அல்ல - உரிமை!

தமிழ் மொழியில் அத்தகைய சங்க கால நான்மறைகளும், தமிழ் மறைகளும், திருமந்திரங்களும், பாசுரங்களும், அறச்சொற்களும் ஏராளமாக உள்ளன. அவற்றின் உண்மைப் பொருளை அறிய வேண்டுமானால், அதாவது மனிதன் மனம், முழு முழுக்க ஒன்றும் இல்லாமல் மாறினாலொழிய, தன் நெஞ்சில் ஒரு துளியும் மதக் கருத்து, சாதிக் கருத்து, நாகரிகக் கருத்து, பண்பாட்டுக் கருத்து இல்லாமல் மாறினாலொழிய, திருக்குறளுக்கு உண்மைப் பொருளைக் காண முடியாது.

ஏனென்றால், திருவள்ளுவர் மனம் ஒரு திறந்தவெளி! ஒன்றுமில்லாத நிலையில் (""status of nothingness and total negation without identification, secured by full freedom based on emptyness'') இருந்து எழுதியவர் அவர்.

எழுதிய அய்யன் திருவள்ளுவன் - இல்லாத நிலையிலிருந்தால், உரையாசிரியன் இருக்கின்ற நிலையிலிருந்தால் குறள் உரை தெளிவாக இருக்க முடியுமா?

மதமே இல்லாத மனிதனால் எழுதப்பட்ட ஒரு நூலை, சக்தி வாய்ந்த ஒரு மதத்தின் முப்பிரிவுகள், அய்யன் திருவள்ளுவரைக் குறிப்பிட்ட ஒரு மதவாதியாக்க, அதுவும் இயேசு பெருமானுக்குச் சீடராக்கி மகிழ்ந்திட அமெரிக்கப் பணமழையின் ஒருமைப்பாட்டோடு பணிகளாற்றுமா?

திருக்குறளுக்கு உரை கண்ட தொல்லாசிரியர்களான காளிங்கருக்கோ, மணக்குடவருக்கோ, பரிமேலழகருக்கோ, பிறருக்கோ இப்படிப்பட்ட விவாத மன்றங்கள் இன்றுவரை கூடினவா?

பன்மொழிப் புலவர் அப்பாதுரையார், மொழி நூலறிஞர் பண்டித தேவநேயப் பாவாணர், திருக்குறள் பீடம் அழகரடிகள், திருக்குறளார் வி. முனுசாமி, கப்பலோட்டிய வ.உ.சிதம்பரம்பிள்ளை, தமிழ்த்தென்றல் திரு.வி.க., பாவேந்தர் பாரதிதாசனார், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, புலவர் குழந்தை, சாமி சிதம்பரனார், டாக்டர் மு. வரதராசனார் ஆகியோரது குறட் புலமைக்குக்கூட இத்தகைய ஆய்வரங்கம் இன்றுவரை ஏற்பட்டதில்லையே!

இருந்தாலும், இந்த நேரத்தில் இதே கிறிஸ்துவ அன்பர்களும் தமிழ் அடிமைகளே - கால்டுவெல்லைப் போல, ஜி.யூ. போப்பைப் போல, வீரமா முனிவரைப் போல!

கிறித்துவக் கண்ணோட்டம் திருக்குறளைப் பார்ப்பதினால், வேறொரு கோணத்தில் நோக்கும்போது, தமிழுக்கு உயர்வே கிட்டுகின்றது - அதை நாம் மறக்க முடியாது.

திருக்குறள் மத நூல் அல்ல. வாழ்க்கைக்குரிய சட்ட நூல்! வள்ளுவம் கூறும் நீதி நூல்!

வேண்டுமானால் இவ்வாறு கூறலாம். அய்யன் திருவள்ளுவர் காலத்திலே ஆதிக்கம் பெற்றிருந்த வைதீக மதக் கருத்துக்களை ஏற்று,

அவற்றை மறுத்து, மதச் சார்பற்ற தமிழர் நெறிகட்குத் தனித்துவம் தந்துள்ளார் என்று! நீங்கள் தான் அதற்கு கட்ட வேண்டும் நியாய வரம்பு!

மதநூல் என்றால் அதிலே மாயம் இருக்கும்! அற்புதம் கூத்தாடும்! அறிவு நம்பாத ஆச்சரியங்கள் இருக்கும்! விஞ்ஞான வளர்ச்சிகள் அதைக் கண்டு விலா நோகச் சிரிக்கும்! திருக்குறள் அத்தகைய ஒரு நூலல்லவே!

மதமே கூடாது என்பவனும், மதமே தேவை என்பவனும் திருவள்ளுவன் அல்லன். இவன் இரண்டுக்கும் இடையே. மலைக்கு நடுவே ஓடுகின்ற அருவி.

பொதுவாகப் பார்ப்பவன் மனிதனானான். குறிப்பாகப் பார்ப்பவன் மதவாதியானான்!

'செரிக்காத ஆசைகளை வைத்திருந்தவன் சொர்க்கத்தை நாடுவது வாடிக்கை' என்றான் - கார்ல் மார்க்சு!

தேவையான ஆசைகளைப் பூர்த்திச் செய்து கொள்பவன் திராணியுள்ள மனிதன் என்றான் - ஏஞ்சல்சு. ஆனால், அய்யன் திருவள்ளுவர், மனக் கலவரத்திலே ஈடுபட்டுத் தன்னைத் தாக்குப் பிடிக்காதவர்களுக்கே திருக்குறள் செய்தார்.

மனம், என்ன என்பதை விளக்குவதற்குப் பதில், திருவள்ளுவர், அதிலிருந்து தப்பிப்பதற்குரிய வழிகளைச் சொன்னார். 'மனத்தின் கண் மாசிலனாதல்' என்ற நிலையை உருவாக்க நினைத்தார்!

மனம் என்றால் என்ன என்பதைக் கூறிய பிரான்சு நாட்டுத் தத்துவவாதிகளான ஆல்பிரைட் கேமு-வைவிட, ஜீன்பால் சாத்தேயைவிட, தப்பிக்க முடியா மனத்திலிருந்து தப்பிக்க வழி கூறிய ஒரே ஒரு உலகத் தத்துவ ஞானி திருவள்ளுவரே!

வெறும் டைலக்டிகல் அனாலிசஸ் என்று சொல்வார்களே, அதைத் திருவள்ளுவர் செய்யவில்லை.

அப்படிச் செய்திருந்தால், அவர் பாமர மக்களிடையே வந்து சேர்ந்திருக்க மாட்டார் - படித்தவர்களிடையே சென்று சேர்ந்திருப்பார்.

மனம் உள்ளவரை மாச்சர்யங்கள் உண்டு. அதன் அடிப்படையில் ஒழுக்கங்களை கற்பிப்பது இமாலயப் பிரச்சனை.

'நீங்கள் வெறுமனே இருங்கள்' ("Be in nothingness') என்று கூறுவதற்குப் ஃபிரெஞ்சு நாடு காத்திருக்கிறது.

ஆனால், எண்ணங்கள் உள்ளவரைதான் மனிதன்' என்ற தத்துவத்தை 1972-ஆம் ஆண்டுக்கு முன்பே சிந்தித்துவிட்டான் திருவள்ளுவன்.

இவனுக்கு வால் நட்சத்திரம் முளைக்கவில்லை - மாட்டுக் கொட்டகை ஏதும் இல்லை. என்ன இருந்தாலும், நம் நாட்டவர்கள் ஒரு மனிதனை தெய்வமாக்குவது இல்லை. அறிவிலே நுட்ப ஞானத்தைப் பாராட்டினர். அதற்கு வைதீகன் ஆன்மீக சாயம் பூசிவிட்டான் அவ்வளவுதான்.

இப்படிப்பட்ட ஒப்பற்ற ஒரு தத்துவ விதையிலே இருந்து, உலக மூலச் சக்தியிலே பிறந்து, விளக்க முடியாத ஒருவராகி, தமிழ் எழுத்துக்களால் வாழ்வறிவு வண்ண மாயங்களைச் செய்த ஒரு மனிதரை - புலவர் தெய்வநாயகம் மத விசாரணை விசாரிக்க வந்திருக்கிறார்.

இந்த விசாரணையில், நீங்கள் பெற்ற பட்டங்களை அடகு வைப்பீர்களோ! - மீட்டுக் கொள்வீர்களோ! - அது எனக்குத் தெரியாது.

மனித இனம் இருக்கின்றதே, இந்தியாவைப் பொறுத்தவரை - அது ஏழாயிரம் - எண்ணாயிரம் ஆண்டுகளின் சரக்கு!

அதற்குமேல் சரித்திரமில்லை - அதனால், இவனுக்குப் புரிந்து கொள்ள முடியவில்லை.

திருக்குறளின் எழுத்துக்கள் - வைதீக அடிப்படையில், வானத்தி லிருந்து வந்தவையென்று புளுக எனக்கு விருப்பமில்லை - என்னால் முடியாது.

மிருகத்தைவிட - ஒரு மனிதன், மனிதத்தில் ஒரு மனிதன், இவ்வளவு தான் சிந்திருத்திருப்பான் என்பது எனக்குத் தெரியும். ஆனால், திருக்குறளின் எழுத்துக்களில், நீண்ட காலச் சரித்திரமோ, குறுகிய கால இலக்கியமோ, தெரிவதற்கு பதில், இனி முட்டைக்குள் முட்டையாக இருந்து முகிழ்ப்பதற்கு காலம் பார்த்துக் கொண்டிருக்கின்ற மனித வர்க்கத்தை, நீ இப்படித்தான், இருப்பாயென்று, அறுதியிட்டு உறுதியாகச் சொல்லுகின்ற இறுதி ஆற்றல் - அந்த நெசவாளிக்கு மட்டும் எப்படி முடிந்தது!

அவருக்கென்று ஒரு மதம் இல்லை, அவ்வளவு தானே ஒழிய, வேறு என்னவாக இருக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்?

இத்தகைய திருவள்ளுவரை இந்த ஆய்வு மாநாடு என்ற போர்க் களத் தில் நீங்களும் சந்திக்கின்றீர்கள் - புலவர் தெய்வநாயகமும் சந்திக்கின்றார்.

நீங்கள் இருவரும், காலமாகிக் காணாமல், காற்றிலே கலந்த திருவள்ளுவரைத் தேடுவதற்காக முனைகின்றீர்கள்.

'பார்வை ஒழுங்காக இருப்பவர்களுக்கே பாதாளம் தெரியும்' என்றான் அரிஸ்டாட்டில்.

திருக்குறள் ஆழத்தை நோக்கி இறங்குவதற்கு வந்திருக்கின்ற தண்டமிழ்ச் சான்றோர்களே!

உங்கள் முன்னாலே விரிக்கப்பட்ட ஆறு கிறித்துவப் புத்தகங்கள் வழியாக, நீங்கள் உதிர்க்கின்ற கருத்துக்கள், இருபதாம் நூற்றாண்டுத் திருவள்ளுவரைக் காட்டுவதற்காகவாவது அமைய வேண்டும் என்பது என் போன்றோரின் ஆசையாகும்.

பல நூற்றாண்டுகட்கு ஒரு வள்ளுவராகப் பிறப்பவர் தான் திருவள்ளுவர்!

இதுவரையில், கடவுள்தான் நினைவில் நிற்பவன் என்று தத்துவங்கள் கூறுகின்றன.

வேதங்களையும், அதற்குச் சாட்சியாகக் கோயிலையும், பூசையையும் காட்டுகின்றனர் வேதாந்திகள்!

அருள் கூர்ந்து, நீங்கள் அய்யன் திருவள்ளுவரைக் கோயிலில் இல்லா இறைவனாக, பூசையில்லா இறைவனாக, மனிதநேய மனிதத்தில் மணக்கும் மனமாகக் காட்ட வேண்டுமென்று விரும்புகின்றேன்.

திருவள்ளுவர் கிறித்துவரா? என்ற வினாவை எழுப்பி; அதற்காகப் பொருட் செலவு செய்து தோல்வி பெறுவதைவிட, அருட்திரு. டாக்டர். ஜி.யூ. போப் அவர்கள், "Humility, Charity and forgiveness of injuries being christian qualities are not described by aristle.... Now these three are fcorcibly inculcated by the Tamil moralist! these are the themes of his finest verses. So far, then we may call this Tamil poet a christian''

'அடக்கம், அறம், பாவமன்னிப்பு' என்பன கிறித்துவ இலட்சியங்களாக இருந்தும்கூட, அவற்றை அரிஸ்டாட்டில் தமது நூலில் குறிப்பிடவில்லை.

தமிழ் அறநெறியாளரான திருவள்ளுவர், இந்த மூன்றையும் மிக வலிமையாக மக்கள் மனத்தில் பதிய வைத்துள்ளார். அவருடைய அருமையான செய்யுட்களுக்கு - இவைதாம் ஆய்வுப் பொருட்களாக உள்ளன. எனவே, நாம் அந்தத் தமிழ்க் கவிஞரை ஒரு கிறித்துவர் என்றே அழைக்கலாம்'' என்று குறிப்பிட்டார்.

திரு. டாக்டர். போப் அவர்கள் கிறித்துவத் திருமறைக் காவலராக இருந்ததினால்தான், May Call என்ற வார்த்தையை ஆட்சி செய்துள்ளார். திருக்குறள் ஆய்வு மாநாட்டினர்களைப் போல, திருவள்ளுவரைக் கிறித்துவராக ஆக்கிட விரும்பவில்லை. காரணம், அவர் ஒரு மத எல்லையின் காவலராக இருந்ததால், தன்னை உயர்த்திக் கொண்டார்.

'உலக பார்வையில் தமிழ் மறை' என்ற தலைப்பில், இக்கட்டுரையை எழுதும்போது, சென்னையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டுச் சம்பவத்தை ஏன் குறிப்பிட்டேன் என்றால், இந்த மாநாட்டில் திருவள்ளுவர் கிறித்துவரல்லர் என்ற இந்த மாநாட்டின் முடிவை, சென்னை மாநாட்டார் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுக்கு வெளியிட வழங்காமல் இரும்புத் திரையிட்டு மறைத்து விட்டார்கள்.

எனவே, திருவள்ளுவர் பெருமானுடைய பாதை - மக்கள் வாழ்வியலின் எல்லாத் துறைகளிலும் தனி ஒரு பாதை; பொதுவான பாதை; - யாரையும், எவரையும் நல்வாழ்க்கைப் பயணத்திற்கு அழைத்துச் செல்லும் அறம் சார்ந்த பாதை! நம்பி ஏற்கத் தகுந்த துணிந்த உலகத் தமிழ்மறைப் பாதையாகும்.

***- புலவர் என்.வி. கலைமணி, எம்.ஏ.,***

# இயற்கையோடு விஞ்ஞானம் இணைந்த நூல் திருக்குறள்

அறிவால் உய்த்துணர்ந்து ஒப்புக் கொள்ளக் கூடியனவும், இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்பு இயைந்திருக்கக் கூடியனவும், ஆன கருத்துக்களையே கொண்டு இயங்குகிறது வள்ளுவர் திருக்குறள்.

குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லாரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய சகலமும் அதில் அடங்கியுள்ளது.

மனித சமுதாயத்திற்கே நல்வழி காட்டி, நன்னெறியூட்டி, நற்பண்புகளையும், ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள்.

எனவேதான், **எல்லா மக்களும், எல்லா மதத்தவரும் எங்கள் குறள், எங்கள் மதக் கருத்தை ஒப்புக் கொள்ளும் குறள் என்றெல்லாம் அதைப் போற்றி வருகிறார்கள்.**

ஆரியக் கலை, பண்பு, ஒழுக்கம், நெறிகள் முதலியவைகளுக்குத் தலைகீழ் மாறுபட்டதென்பதும், அம் மாறுபாடுகளைக் காட்டவே சிறப்பாகக் குறள் உண்டாக்கப்பட்டது என்பதும் எனது உறுதியான கருத்தாகும்.

வள்ளுவரையும், நாம் ஒரு மனிதராக மதித்தே, மக்களிடையே காணப்படும் இழிவு நீங்கி மனிதத் தன்மை வளர்ந்தோங்க வேண்டும் என்ற கருத்தோடு பாடுப்பட்ட ஒரு பெரியாராக மதித்தே - நாம் குறளை ஒப்புக் கொள்கிறோமே ஒழிய; அதை நாம் கடவுள் வாக்காகவோ, அசரீரி வாக்காகவோ ஏற்றுக் கொள்ளவில்லை.

நீங்கள் என்ன சமயத்தார் என்று கேட்டால் - வள்ளுவர் சமயம் என்று சொல்லுங்கள்; உங்கள் நெறி என்னவென்றால் குறள் நெறி என்று கூறுங்கள். அப்படிச் சொன்னால் எந்தப் பிற்போக்குவாதியும் எப்படிப்பட்ட சூழ்ச்சிக்காரரும் எதிர்நிற்க மாட்டான்; **யாரும் குறளை மறுக்க முடியாததே இதற்குக் காரணம்.**

ஆரியப் பித்தலாட்டத்திற்குச் சரியான மருந்து - மறுப்பு திருக்குறள்தான். திருவள்ளுவ மாலையில் பல புலவர்களே இதைக் கூறியுள்ளனர்.

ஆரியப் புரட்டை வெளியாக்கி மடமையைப் போக்கும் நூலே திருக்குறள். ஆதலால், குறள் வழி நின்று பகுத்தறிவு பெற்றுப் புது மனிதனாகுங்கள்.

புராணக் கருத்துக்களிலும், மூட நம்பிக்கைகளிலும் மூழ்கிக் கிடக்கும் நம் மக்களுக்குப் பகுத்தறிவு வளர்ந்த பின், மூடக் கருத்துக்கள் ஆட்டங்கண்ட பின்தான், **குறளின் பொருளை உணரும் அறிவு மக்களுக்கு உண்டாகும் என்று கருதி, முதலில் வந்தேன்.**

**இன்று மக்களுக்குக் கொஞ்சம் அறிவுத் தெளிவு - பகுத்தறிவுத் தன்மை வளர்ந்து இருக்கிறதால் இன்று குறளைப் பற்றிப் பேசுகின்றேன்.**

அறிவு பெற்றவன், அறிவையே முதன்மையாகக் கொண்டவன், ஆலோசித்துப் பார்க்கும் ஆராய்ச்சித் தன்மை கொண்டவன் எவனும் குறளை மதித்தே தீருவான். குறளைப் பாராட்டியே தீருவான்; சிறிதாவது பின்பற்றிக் குறளை வழிகாட்டியாய்க் கொண்டே தீருவான்.

குறள் வெறும் ஒழுக்கத்தையும், வாழ்க்கைக்கு வேண்டிய அனுபவப் பூர்வமான பிரத்தியட்ச வழியையும் கொண்டதாகும்.

குறள் ஒரு அறிவுக் களஞ்சியம். பகுத்தறிவு மணிகளால் கோர்க்கப்பட்ட நூல் திருக்குறள். பார்ப்பனர்களின் பித்தலாட்டங்களை வெளியாக்குவதற்கென்றே எழுதப்பட்ட நூல்.

ஆகவே, திருவள்ளுவர் ஒரு பகுத்தறிவாளியாக இருந்திருக்க வேண்டும். அதன் ஒவ்வொரு செய்யுளும் பார்ப்பனர்களின் அயோக்கியத் தன்மைகளை விளக்குகிறது.

***- தந்தை பெரியார்***

[1934-ஆம் ஆண்டுகளின், எழுதிய
இதழ்களிலிருந்து சில குறிப்புகள்]

# உலக அற நூல்; திருக்குறள்

அறிஞர் அண்ணா, சென்னை மீர்சாகிப்பேட்டையிலுள்ள வள்ளுவர் வாசகச் சாலையின் 9-வது ஆண்டு விழாவில் 26.10.1958-ல் ஓர் அரிய உரையை ஆற்றினார். அந்த உரையை அப்படியே இங்கே தருகிறோம்.

"இதுவரை திருக்குறளைப் பற்றியும், வள்ளுவரைப் பற்றியும் இங்கு பலர் பேசினார்கள். நான் திருவள்ளுவரின் திருக்குறளிலே செலுத்தும் நோக்கம் அவர்கள் பேசியதிலிருந்து வேறுபட்டது; முரண்பட்டதல்ல.

அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு கோணத்திலிருந்து திருக்குறள ஆராய்ந்தார்கள். நான் இன்னொரு கோணத்திலிருந்து நோக்குகிறேன் என்க்கு முன் பேசியவர்கள், உலகத்தில் உள்ள பல்வேறு நூல்களைய திருக்குறளுடன் ஒப்பிட்டு, 'திருக்குறள் சிறப்பு வேறு எந்த நூலிலு இல்லை' என்பதை எடுத்துக் காட்டினார்கள்.

திருக்குறளை, 'உலக அறநூல்' என்றார்கள். 'தத்துவஞானி சாக்ரடீ சீனநாட்டுப் பேரறிஞன் கன்பூஷியஸ் போன்ற மேதைகளை எல்லாம்வி சிறந்தவர் வள்ளுவர்' என்று சொன்னார்கள். எதிலும் காணக் கிடைக்க கருத்துகள் வள்ளுவரின் குறளிலே காணக் கிடைக்கின்றன என்பதை எடுத்துக் காட்டினார்கள்.

வேத, புராண இதிகாசங்களுக்குக் கிடைக்காத சிறப்பு உலகத்தி திருக்குறளுக்குக் கிடைத்துள்ளது. இவ்வளவு பெருமைக்குரிய குறளை இடைக்காலத்தில் நாம் மறந்தோம். இதனை நாம் ஆராய்ந்தால், தமிழர் மேற்கொள்ள வேண்டிய நல்ல பொறுப்பு நமக்குத் தெரியும்.

கண்ணகியுடன் முதலில் கொஞ்சி, குலவி, இடைக்காலத்தி மாதவியுடன் வாழ்ந்து, பிறகு ஊடல் காரணமாக மாதவியை விட்( பிரிந்து, மீண்டும் கண்ணகியைப் பார்க்க வந்த கோவலனைக் கொஞ் உங்கள் மனக்கண் முன்னே நிறுத்திப் பாருங்கள்.

வலிவும், பொலிவும் இழந்து, பொருளிழந்து, பிறகு வாழ வ தெரியாமல் திண்டாடிய நிலையில் கோவலன் கண்ணகியைக் கண்டான். கண்ணகியோ தன்னிடமுள்ள பொருள்களையெல்லாம் இழந்து, மையிழந்த கண்ணோடு, தைலமிழந்த கூந்தலோடு, மேனி மெருகு குலைந்து இருந்த நிலையைப் பார்த்த கோவலன்

'நான் இனி உன்னோடுதான் வாழ வேண்டும். ஆனால், இந்த ஊரிலே இனி நாம் வாழலாகாது. எனவே, மதுரையம்பதிக்குச் சென்று ஏதேனும் வாணிபம் நடத்திப் பிழைக்கலாம்' என்று அழைத்த நேரத்தில், வாணிபத்துக்கு மூலப் பொருளாகக் காலிலே இருந்த காற்சிலம்பைக் கழற்றிக் கொடுத்து விற்றுவரச் சொன்னாள் கண்ணகி. இந்தக் கதையை உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

மாதவியிடம் சிக்கி மீண்ட கோவலனிடம், கடைசிக் காலத்தில், 'இதோ காற்சிலம்பு' என்று கூறி, கண்ணகி கழற்றிக் கொடுத்த கடைசிக் கருவூலத் தைப் போல; தமிழர்கள் வலிவிழந்து, வாழ்விழந்து, தத்தளித்த நேரத்தில் தமிழ்த் தாயின் கடைசிப் பொக்கிஷமாக நமக்குக் கிடைத்து திருக்குறள்!

இதை விற்க வேண்டிய இடத்தில் விற்றால் கிடைக்க வேண்டிய விலை கிடைக்கும்! இடம் தவறி விற்றால் தலை போகும் - கோவலனைப் போலச் சாக நேரிடும்! இதை எதற்குப் பயன்படுத்த வேண்டுமோ அதற்குப் பயன்படுத்தினால் வாழ்வு கிடைக்கும்! இல்லையேல் தாழ்வுதான் கிட்டும்!

திருக்குறளை ஒவ்வொருவரும் அவரவர் கருத்துகளுக்குத் தக்கவாறு ஆராய்கிறார்கள். உதாரணமாக, அன்பர் ஆச்சாரியார் அவர்கள், 'கல்கி' இதழிலே திருக்குறள் விளக்கம் எழுதுகிறார்; திருவாவடுதுறை மடாதிபதியும் திருக்குறளைப் போற்றுகிறார்கள்; ஜீவானந்தமும் மாதம் ஒரு முறையாவது திருக்குறளைப் பற்றிப் பேசுகிறார் - எழுதுகிறார்; காங்கிரஸ்காரர்களும் குறளைப் பயன்படுத்துகிறார்கள்; நாமும் பயன்படுத்துகிறோம். நாம் குறளைப் பயன்படுத்துவதற்கும் மற்றவர்கள் பயன்படுத்துவதற்கும் வேறுபாடு உண்டு.

அவர்கள் குறளை எப்படிப் போதிக்கிறார்கள் என்றால், அறம் - பொருள் - இன்பம் என்று குறளில் வகுக்கப்பட்டுள்ளது. அறம் என்றால் தர்மம்; தர்மத்தை நிலைநாட்டுவதற்குப் போதனர்களான வசிஷ்டர், வியாசர் முதலானோர் பாரதம் போன்ற தர்ம நூல்களை எழுதினார்கள். ஆகையினாலே, பாரதத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற தர்மோபதசேங்களை அனைவரும் படித்துணர வேண்டும். என்று ஆச்சாரியார் அவர்கள் சொல்லக் கூடும்.

'அறம் என்றால் தர்மம்; தர்மம் செழிக்க சமத்துவம் வேண்டும்; சமத்துவத்துக்குப் பொதுவுடைமையே அடிப்படை; அந்தப் பொதுவுடைமை பூத்துக்குலுங்கும் இரஷ்யாவைப் பாருங்கள்; இரஷ்யாவைப் போல இந்நாட்டிலே ஏற்பட வேண்டுமானால் எங்களை ஆதரியுங்கள் என்று ஜீவானந்தம் சொல்லாம்!

'அறம் என்றால் தர்மம்; தர்மம் நிலைக்க சர்க்கார் சரிவர இயங்க வேண்டும்; அதற்கு அனைவரும் நிறைய வரி செலுத்த வேண்டும்' என்று ஆளும் கட்சியினர் சொல்லலாம்.

'அறம் என்றால் தர்மம். தர்மம் செழிக்க சகோதரத்துவம் ஏற்பட வேண்டும். அந்தச் சகோதரத்துவம் வளர வேண்டுமானால் மதம் செழிக்க

வேண்டும்; மதம் வளரக் காணிக்கைகளைக் கொண்டு வந்து குவியுங்கள்' என்று மடாதிபதிகள் சொல்லக்கூடும்.

இப்படி, ஒவ்வொருவரும் அவரவர் போக்குக்குச் சாதகமாகக் குறளை வியாக்கியானம் செய்யலாம்.

பதினைந்து ஆண்டுகட்கு முன்பு, நான் பேசுவதற்காகச் சென்றிருந்த ஒரு பள்ளிக்கூடத்தில், அந்தப் பள்ளிக்கூடத்துத் தமிழாசிரியர் ஒருவர் மாணவர்களைப் பார்த்து ஒரு குறளுக்குப் பொருள் கூறினார். அவர் ஒரு வைணவர்; திருநாமம் சாத்திக் கொண்டிருந்தார்.

'கற்றதனா லாயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின்'

என்ற குறளுக்கு, 'ஆண்டவனின் திருவடிகளைத் தொழாவிட்டால் என்ன படித்துத்தான் என்ன பயன்?' என்று அவர் பொருள் சொல்லியிருப்பா ரேயானால் தவறு ஒன்றுமில்லை. ஆனால், அவர் அப்படிச் சொல்லவில்லை; 'எம் பெருமானான ஸ்ரீமன் இராமச்சந்திர மூர்த்தியைத் தொழா விட்டால் படித்தும் என்ன பயன்?' என்று பொருள் கூறினார்.

எனக்கு எதிரிலேயே இப்படி அவர் கூறியதைக் கேட்டு நான் திகைப்பும் வியப்பும் அடைந்தேன். 'வாலறிவன்' என்றால் இராமச்சந்திரன் என்று பொருள் சொல்வதற்கு அவர் கூறும் காரணம் என்னவென்றால், 'வால்' என்பது அனுமான் வாலைக் குறிக்கும்; அந்த அனுமானை அறிந்தவன் இராமன்; அதனாலே, ஸ்ரீஇராமச்சந்திர மூர்த்தியைத்தான் வாலறிவன் என்பது குறிக்கிறது என்றார். அவர் சொன்ன கருத்தைத்தான் பிள்ளைகளும் ஒப்புக் கொள்ள வேண்டும்; ஏனென்றால் அவர் ஒரு புலவர்; பள்ளியாசிரியர்.

குறளிலே நாம் பார்க்கின்ற பொருள் வேறு. குறளில் இல்லாத பெருமையை நான் ஆராய விரும்பவில்லை. அதை அறிய எனக்கு எந்த அளவுக்கு அறிவு ஆற்றல் இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது.

இந்தக் கூட்டம் முடிந்ததும் நீங்களெல்லாம் வீடு திரும்பும்போது மவுண்ட்ரோடு பஸ் நிற்குமிடத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருப்பீர்கள். பஸ் வரும் வரை, அருகே இருக்கின்ற மோட்டார் கம்பெனி ஒன்றில் கண்ணாடி அறைக்குள்ளே அழகான புதிய மோட்டார் வண்டிகள் பார்வைக்காக வைக்கப்பட்டிருப்பதை உங்களில் சிலர் பார்த்துக் கொண்டிருக்கக் கூடும்.

அந்த மோட்டார் காரில் உள்ள வெள்ளி போன்ற மெருகையும், தங்க நிறப் பூச்சுகளையும், வெல்வெட்டு மெத்தையையும் இன்னும் விதவிதமான ஜோடனைகளையும் காண்பீர்கள். கண்ணாடிக்குப் பின்னாலே உள்ள அந்த மோட்டார்களை நீங்கள் ஏறிச்செல்லும் பஸ் வரும் வரைதான் பார்த்துக் கொண்டிருப்பீர்கள். பஸ் வந்ததும், பக்கத்திலே உள்ளவர்கள், 'பார்த்தது போதும் பஸ் வந்துவிட்டது; வாருங்கள் போகலாம்' என்று அழைப்பார்கள். நீங்கள் எல்லோரும் பஸ்ஸிலேயே ஏறிப் போய்விடுவீர்கள். பார்த்து ரசித்துக் கொண்டிருந்த மோட்டார்களிலே உங்களால் ஏறிச் செல்ல முடியாது.

அதைப்போல, இப்படிப்பட்ட திருக்குறள் விழாக்களையும் கொண்டாடி விட்டு, அடுத்து வரும் தீபாவளியையும் கொண்டாடி பட்டாசு கொளுத்துவீர்களேயானால் பயனில்லை.

தமிழ்நாட்டிலே நடக்கும் பல்வேறு விழாக்களும் - பஸ்ஸூக்காகக் காத்திருப்பவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் கண்ணாடிக்குள்ளிருக்கும் மோட்டார்களைப் பார்ப்பது போலக் கொண்டாடப்படுகிறது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

நீங்களெல்லாம் பஸ் வரும் வரை உங்கள் ஓய்வு நேரத்தில் கண்ணாடி அறையிலுள்ள மோட்டார்களைப் பார்ப்பீர்கள் எனச் சொன்னேன். இன்னொரு கனவான், தன் மோட்டாரிலே வந்திறங்கி, தன்னிடமில்லாத வேறொரு வகை மோட்டார் இருக்கிறதா 'போர்டு' வாங்கலாமா - எனக் கருதி, கடைக்குச் செல்வார். அவர் பார்ப்பதற்கும் நீங்கள் பார்ப்பதற்கும் வித்தியாசம் உண்டு.

இன்னும் சிலர், 'இன்ன நடிகை இன்ன காரில்தான் செல்வார்; இன்ன அதிகாரியின் கார் இன்ன மாடல்' என்றெல்லாம் கூறி, கார்களைப் பார்ப்பார்கள். இப்படிப் பார்ப்பதிலே பயனில்லை.

வாலிபர்களாகிய உங்களுக்கு என்ன தேவை என்பதைத்தான் நீங்கள் பார்க்க வேண்டும். நீங்கள் விரும்புவது கடையிலே இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

நாட்டை காக்க - வாழ்வுக்கேற்ற வழிவகைகள் - நாட்டிலுள்ள அத்தனை பேரும் வாழ வேண்டும் என்கிற எண்ணம் ஏற்பட, 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதற்கொப்ப, எல்லோரும் இன்புற்றிருக்க குறளிலே வழி இருக்கிறதா என்று பார்த்தால் தெள்ளத் தெளிவாக - வேறு எந்த நூலிலும் இல்லாத - யாரும் இதுவரை எடுத்துக்காட்டாத அறம் நிறைய இருக்கின்றது.

சாதியைப் பற்றி சொல்லி இருக்கிறதா என்றால், 'பிறப்பொக்கும் எல்லாம் உயிர்க்கும்' - சந்தேகமற. 'சாதி கூடாது' எனக் கூறப்பட்டிருக்கிறது. கல்வியைப் பற்றி என்னச் சொல்லப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் - 'கற்கக் கசடற கற்பவை, கற்றபின் நிற்க அதற்குத் தக' என் வலியுறுத்தப்பட்டிருக்கிறது

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'

என்று அறிவைப் பற்றி வரையறுக்கப் பட்டிருக்கிறது.

மனித உள்ளத்தில் எதற்கெடுத்தாலும் சந்தேகங்கள் அடிக்கடி ஏற்படுவது இயல்பாக இருக்கிறது. எத்தகைய சந்தேகங்களையும் போக்க வல்லது திருக்குறள்.

'எல்லோரும் வாழ வேண்டும்' என்ற ஓர் இலட்சியத்தை வகுத்துக் கொண்டவர்களாக மனிதர்கள் இருக்க வேண்டும். அந்த இலட்சியத்தைத்தான் நாம் வகுத்துக் கொண்டிருக்கிறோம்.

வள்ளுவரின் குறளைப் படித்து ஆராய்வதற்கு முன்பு, வாலிபர்கள் - இளந் தமிழ்த் தோழர்களாகிய நீங்கள் உங்கள் இலட்சியம் என்ன என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அதை அடைய வழிமுறைகள் குறளிலே இருக்குமா என்றால், தாராளமாக இருக்குமென உறுதியிட்டுச் சொல்வேன். அதற்கான நல்ல வழி, சிறந்த நெறி அதிலே உண்டு. இலட்சியத்தைத் தீர்மானித்துக் கொண்டு வள்ளுவரை நாடினால் நல்ல பலன் கிட்டும்.

கடைக்குப் போவதற்கு முன்பு கடையிலே இன்னின்ன சாமான்கள் வாங்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டுதான் பணப்பெட்டியைத் திறக்க வேண்டுமே தவிர, பணப்பெட்டிக்குள் கையை விட்டு, கிடைக்கிற பணத்தைக் கொண்டுபோய்க் கொடுத்து கடைக்காரன் கொடுக்கிற சாமான்களை எல்லாம் வாங்கி வருவது நல்லதல்ல.

அதைப்போல, ஒரு பழைய நூலை ஆராய வேண்டுமானால், அந்த நூலை ஒரு பலசரக்குக் கடையாக நினைக்க வேண்டும். நமக்கு என்ன பண்டம் வேண்டுமென்பதை முதலில் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

நமக்கு என்ன தேவை? அடிமைப்பட்டு அடித்தளத்திலே கிடந்துழலும் நம் சமுதாயத்துக்கு இன்னின்ன தேவை என்பதை முடிவு செய்ய வேண்டும். ஒற்றுமை, அன்பு நெறி வளர வேண்டும்.

சமுதாயத்தில் ஒருவனை ஒருவன் கெடுக்க நினைப்பது ஒருவனை ஒருவன் சுரண்டுவது. ஆண்டவனின் பேரால், அநீதிகள் புரிவது - இவைகளை ஒழிக்க வேண்டும் என்ற இந்தப் பட்டியலைத் தயார் செய்து கொண்டு, தம் பெட்டியைத் திறந்து குறளைப் புரட்டினால் நமக்குத் தேவையான பண்டங்கள் கிடைக்கும். ஆச்சாரியார் சொல்வதை வைத்துக் கொண்டு பார்த்தால் அதுவும் கிடைக்கும்.

பூட்டுக் கடையிலே போய், அங்கிருக்கின்ற பூட்டுக்களைப் பார்க்கின்றபோது, 'எந்தப் பூட்டு உடையாமல் நன்றாக இருக்கும்; அலிகார் பூட்டு வாங்கலாமா அல்லது வேறு எது நல்லது' என்று உடைமைக்கு உடையவன் யோசிப்பான்.

அதே கடைக்கு வரும் இன்னொரு பூட்டு உடைக்கும் திருடன் என்ன நினைப்பான் - 'எந்த ஆணியைப் போட்டு நெம்பினால் இந்த பூட்டு உடையும்' என்பதை ஆராய்வான். அதைப்போல திருவள்ளுவர் தந்த நல்ல பூட்டை சிலர் கள்ளச் சாவிப் போட்டுத் திறக்க முயலுகிறார்கள்.

எனவே, வள்ளுவர் விழாவிலே தமிழருக்கு எந்த இலட்சியம் தேவை என்பதை நாம் மதிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

எது நமக்கு இல்லை? தன மனைவியைப் பார்த்து ஒரு கணவன். 'என்ன சாமான் வேண்டும்?' என்று கேட்டால், அந்த மனைவி உடனே தன் வாயில் வந்தவற்றை எல்லாம் சொல்ல மாட்டாள்; அடுக்களைக்குச் சென்று அங்குள்ள பழங்கலத்திலே கையை விட்டுத் துழாவி, என்னென்ன சாமான இல்லையோ அவற்றைத்தான் சொல்லுவாள். அதைப்போலச்

சமுதாயத்துக்குத் தேவையானது எது குறைவாக இருக்கிறதோ அதை அறிந்து, அந்தக் குறைப்போக்கும் பண்டத்தைப் பெற வேண்டும்.

இன்றைய சமுதாயம் பல சாதிப் பிரிவுகளாகப் பிரிந்து கிடப்பதைப் பார்க்கிறோம். இன்று காலை என்னைப் பார்க்க வேண்டுமென்று பீகாரைச் சேர்ந்த ஒருவர் என் வீட்டுக்கு வந்தார்; அவர் பீகார் அரசியலில் நீண்ட நாளாகப் பங்கேற்றிருப்பவர். அவர் என்னைப் பார்த்ததும் கேட்ட முதல் கேள்வி, 'நீங்கள் என்ன சாதி?' என்பதுதான்.

'நான் திராவிடன்' என்றேன். உடனே அவர், 'நான் அதைக் கேட்கவில்லை. என்ன சாதி?' என்று மீண்டும் கேட்டார். நான் மீண்டும், திராவிட இனத்தைச் சேர்ந்தவன்' என்றேன். அவர், கொஞ்சம் தயங்கி, 'இங்குள்ள எல்லோரும் திராவிடர்தான்; இருந்தாலும் நீங்கள் பிற்பட்ட (Backward) சமுகத்தைச் சேர்ந்தவரா? முன்னணி (Forward) சமூகத்தைச் சேர்ந்தவரா? என அறிய விரும்புகிறேன். நான்கூட எங்கள் மாநிலத்திலுள்ள பிற்பட்ட சமுகத்தைச் சேர்ந்தவன்' என்றார். அதன்பிறகு, 'நானும் பிற்பட்ட சமூகத்தவன்தான்' என்றேன்.

இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால், நமக்குள்ளே ஒருவரை யொருவர் பார்த்து, 'நீ என்ன சாதி?' என்று கேட்டுக் கொள்வது அவமானமாகும்.

தெருவிலே போகின்ற ஒரு பெண்ணைப் பார்த்து, 'நீ அழகா, அவலட்சணமா?' என்று கேட்டால், என்ன அர்த்தம்? அந்தப் பெண்ணுக்கு ஆத்திரம் வராதா? மேல் நாட்டில், ஒரு வெள்ளைக்காரப் பெண்ணைப் பார்த்து, 'உன் வயது என்ன?' என்று கேட்பதும், அந்த நாட்டு ஆடவரைப் பார்த்து, 'உன் சம்பாத்தியம் என்ன?' என்று கேட்பதும் கூடாது; அப்படிக் கேட்பது ஓர் அவமானமாக அங்கு கருதப்படுகிறது; இது மேல்நாட்டு நாகரிகம்.

நம் நாட்டில் ஒருவரைப் பார்த்து மற்றொருவர். நீ என்ன சாதி?' என்று கேட்கும்போது, நமது ஊனும், உள்ளமும் குன்றிப் போகிறது. அமெரிக்காவிலே உள்ளவர்கள், இப்படி 'உன் சாதி என்ன? அவன் சாதி என்ன?' என்று கேட்க மாட்டார்கள்.

கல்யாணத்துக்குப் பெண் பார்க்கிற நேரம் வரை ஒருவரும் சாதி கேட்பதில்லை. கல்யாணப் பேச்சு பேசுகிற நேரத்தில் மட்டும் சாதி குறுக் கிடுகிறது. 'பையன் யார்?' என்று பெண் வீட்டார் கேட்பார்கள்; என்ன சாதி என்று கேட்பது அநாகரிகம் என்று கருதி, பொதுப்படையாக பையன் யார்? என்பார்கள்.

உடனே, பையன் இன்னாருக்குச் சொந்தம்; இன்னாரின் மகன்' என்று சொல்லும்போது, 'இன்ன நாடாருக்குச் சொந்தம், அல்லது இன்ன ரெட்டியாருக்கு உறவு' என்று மறைமுகமாகச் சாதியைச் சொல்லுவார்கள். இப்படி ஒருவர் சாதியை ஒருவர் புரிந்து கொண்டுதான் திருமணங்கள் நடைபெறுகின்றன.

இந்தச் சாதிப்பற்று அவ்வளவு சுலபத்தில் போய்விடாது. நம்முடைய பிள்ளைகளிடத்தில் - பேரன்மார்களிடத்தில், 'நாமெல்லாம் செட்டியார்' என்றால், அவர்கள் கேட்பார்கள் - செட்டியார் என்றால் யார்? -என்று!

ஆனால், இந்தத் தலைமுறையில் அது அடியோடு போய்விடும் என்று சொல்லிவிட முடியாது. இருப்பினும் சாதியைச் சொல்ல வெட்கப்படக்கூடிய அளவுக்கு சாதி ஒழிப்புப் பிரச்சாரம் தீவிரமாக நடைபெற வேண்டும்.

**வள்ளுவர் குறளில், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று கூறியிருக்கிறார். உலகம் பார்த்து, 'பேரறிவாளர்' என்று ஒப்புக் கொண்டிருக்கிற ஒரு பெரியார் அப்படிச் சொல்லியிருக்கிறார் என்பதனால்தான் அது வெற்றி பெற்றது.**

'என் பேச்சை நம்ப வேண்டாம்; வள்ளுவர் இப்படிச் சொல்லியிருக்கிறார்' என்று சொன்னால் - வள்ளுவரை நீதிமன்றத்துக்கு அழைத்தால் - நம் வழக்கு வெற்றி பெறும்; 'குற்றமற்றவர்கள்' என நாம் விடுவிக்கப்படுவோம்.

குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் - நியாயம் தேடுபவர்கள் ஒரு வழக்கறிஞரை நாடுவது போல, சமுதாய மன்றத்திலே வள்ளுவரைக் கொண்டு வந்து நிறுத்தி நாம் வாதாடலாம்.

நாமெல்லாம் 'சூத்திரர்கள்' என்று சொல்லுகிறார்கள்; 'சூரியனைத் தொழுதால் சொர்க்க லோகம் கிட்டும்; விநாயகரைத் தொழுதால் கைலாசப் பதவி கிடைக்கும்' என்று ஏமாற்றுப் பிரச்சாரம் செய்பவர்களை நாம் கண்டித்தால் 'நாத்திகர்கள்' என்று நம் மீது குற்றஞ் சாட்டுகிறார்கள்.

இப்படிப்பட்ட தமிழ் விழாக்களிலே, மக்கள் மன்றங்களிலே வள்ளுவர் குறளைச் சொல்லி 'இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்? என்று கேட்கலாம். வள்ளுவர் என்ன சொல்கிறார் என்பதை எடுத்துச் சொல்லி வழக்காடினால் வழக்குத் தீர்ப்பில் நமக்கு வெற்றி கிடைக்கும். வழக்குத் தொடுத்தவர்கள் முக்காடிட்டுச் செல்வார்கள். எனவே, நீதிமன்றத்திற்கு நல்ல நெறியை தந்திருப்பவர் திருவள்ளுவர்.

எனவே, இப்படிப்பட்ட மன்றங்கள் கிழமைக்கு ஒருமுறை தவறாமல் கூடி, குறளின் நுட்பத்தை ஆராய்ந்து, சமுதாயத்தைச் சீராக்கிச் செம்மைப் படுத்த அறநெறியைப் பரப்ப வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மேலே வள்ளுவர் வாசக சாலையில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசிய பேச்சைப் படித்திருப்பீர்கள். திருக்குறள் ஒவ்வொருவரின் பார்வையில் ஒவ்வொரு விதமான பொருளை வழங்குவதை அண்ணா அவருக்கே உரிய பாணியில் எடுத்துக் காட்டியிருந்தார். அண்ணா ஏன் குறளின் பன்முகப் பொருளைக் காட்டுகின்றார் என்றால் திருக்குறளுக்கு உலகம் தழுவிய ஒரே மாதிரியான பொருள் வழங்கப்பட வேண்டும் என்பதினால்தான்!

ஆகையினாலேதான் அறிஞர் அண்ணா பேச்சை முடிக்கிறபோது, 'கிழமைக்கு ஒருமுறை தவறாமல் கூடி, குறளின் நுட்பத்தை ஆராய்ந்து, சமுதாயத்தைச் சீராக்கிச் செம்மைப்படுத்த அறநெறியைப் பரப்ப வேண்டும்' என்றார்.

- ***அறிஞர் அண்ணா***

1812-ஆம் ஆண்டு வரை ஓலைச் சுவடியிலே இருந்த

# திருக்குறளை அச்சேற்றிப் பதிப்பித்த ஞானப்பிரகாசர், அம்பலவாணர் வாழ்க!

இருபதாம் நூற்றாண்டு நிறைவுற்று, புதிய நூற்றாண்டின் புதிய ஆயிரத்தாம் ஆண்டின் புத்தாண்டுத் தொடக்க நாளில் - வான்புகழ் பெற்ற வள்ளுவருக்கு வானளாவிய சிலை இந்திய நாட்டின் தென் கோடியில் - கன்னியா குமரியில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரிய முயற்சியால் நிறுவப் பெற்றுள்ளது. இமயத்தின் இமயமென உயர்ந்து நிற்கிறார்.

திருவள்ளுவர், ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே ஏற்றத் தாழ்வற்ற சமனிலைச் சமுதாயத்தை உருவாக்க விழைந்தவர். 'மேலிருந்தவரும் மேலல்லர், கீழிருந்தவரும் கீழல்லர்' என்ற உரத்த சிந்தனையின் மூலம் உலகறத்தை உணர்த்திய பெருந்தகையாளர்.

பண்பையும் அறிவையும் முதன்மைப்படுத்திச் சமுதாயச் சிக்கல்களுக்குத் தீர்வு காண விழைந்தவர். 'மானுடம்' அவர் தம் பாடுபொருளாக விளங்கியதால் தான் ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் அவரை நினைந்து போற்றுகின்றோம்.

இந்திய மொழிகளிலும், உலக மொழிகளிலும் திருவள்ளுவரின் எண்ணங்கள் காலந்தோறும் ஏற்றம் பெற்று விளங்குகின்றன.

தமிழரின் பண்பாட்டுக் கூறுகளைத் தனித்தன்மையாகக் கொண்டு தன்னையும், தன் மொழியையும், தம் மக்களையும் தன் நாட்டையும் அடையாளப் படுத்திக் காட்டுகின்ற அறிவுச்சுடராகத் திருவள்ளுவம் விளங்குகின்றது.

திருக்குறள் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை அதன் பாடுபொருளைப் பன்முகப் பார்வை கொண்டு ஆய்ந்தோர் பலர் திருக்குறளுக்குப்பின் எழுந்த பல்வேறு இலக்கியங்களும் அதன் கருத்துச் செறிவையும், சொல்லாட்சித் திறத்தையும் பயன்படுத்திக் கொண்டன.

திருக்குறளின் விளக்கங்களாக, உரை மரபின் முன்னோடிகளாக, பழந்தமிழ்ச் செய்யுள் இலக்கியங்களாக அவை விளங்கின.

அவற்றிற்குப் பின்னர் இலக்கியங்களின் நுட்பத்தை அறிய விழைந்த உரையாசிரியர்கள் திருக்குறளில் மூழ்கி அவற்றின் தொடரிலும், சொற்புதுமையிலும், எளிமையிலும் நுட்பம் கண்டு மகிழ்ந்தனர்.

திருக்குறளுக்கு உரை விளக்கம் தந்த பழைய உரையாசிரியர்களும், புத்துரையாசிரியர்களும் திருக்குறளைத் தம் விளக்கத்திற்கு விளக்காகப் பயன்படுத்தினர்.

காப்பியங்களும், சிற்றிலக்கியங்களும் திருக்குறளின் கருத்தைப் போற்றின; வளர்த்தன. 'சமயந்தொறும் நின்ற தனி நூலாக'த் திருக்குறள் விளங்கியது.

சைவமும், வைணவமும் சமணமும் பௌத்தமும் கிறித்தவமும் பிற சமயங்களும் திருவள்ளுவரைத் தம்மவராகவே ஏற்றிப் போற்றின. திருவள்ளுவரின் குறள் ஈரடிகளைத் தாம் ஏத்தும் இறையாகவே போற்றினார் சிவப்பிரகாசர்.

மேலை நாட்டு வரவின் பயனாகத் திருக்குறள் ஓலையினின்றும் அச்சுருவிற்குப் பெருமாற்றம் கொள்கின்றது. 1812-ஆம் ஆண்டில் முதன் முதல் திருக்குறள் அச்சேற்றப் பெறுகின்றது.

தஞ்சை ஞானப்பிரகாசரும், அம்பலவாணத் தம்பிரானும் இந்த முதல் பதிப்பைத் தமிழில் அச்சேற்றி இலக்கிய உலகில் பெருமை பெறுகின்றனர்.

அச்சுருவம் பெற்ற பின்னர், கடந்த இரு நூற்றாண்டுகளாகத் திருக்குறளுக்கு எழுந்த நூல்கள் பல ஆயிரம், பதிப்புகளாகவும், பல்பொருள் ஆய்வுகளாகவும் நாள்தோறும் இன்றும் தோன்றிக் கொண்டேயுள்ளன. கணினி யுகத்திலும் குறள் குறுந்தகடுகளாக உருப்பெற்றுப் புதிய பொலிவில் கோலம் கொள்கிறது.

திருக்குறள் எழுந்த காலச் சூழலின் பின்னணியை ஆராய்ந்த அறிஞர் பெருமக்கள், தமிழின் பண்பாட்டை நிலை நிறுத்தத் திருவள்ளுவர் மீட்டெடுத்த புதிய மரபுகளை ஆய்ந்து வெளியிட்டனர்.

தமிழ் அகமரபிலும் புதிய சிந்தனையைக் கண்ட புத்திலக்கியச் சிற்பியாகப் போற்றினர். அறத்தின் பல்வேறு வீறுகளையும் மானுட வாழ்க்கைக்குப் பொருத்திக் கண்ட வள்ளுவரின் சிந்தனைப் போக்கை விவரித்தனர்.

உலகியலும் உளவியலும் சார்ந்த வள்ளுவ நெஞ்சம் மானுட மேம்பாட்டையே போற்றி வலியுறுத்தியது என்பதை ஆய்வாளர் திறம்படச் சுட்டினர்.

பல்வேறு சமய, அரசியல், பண்பாட்டு இயக்கங்களும், வள்ளுவத்தின் பொதுமையை உணர்ந்து தழுவிச் சிறப்புப் பெற்றன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்த தமிழ் இதழ்கள் பலவும் திருக்குறளையே 'குறிக்கோள் தொடராக'க் கொண்டு வரலாற்றில் இடம் பெற்றன. தங்கள் இயக்கத்திற்கு வலிமை சேர்க்கும் கருத்துக் களஞ்சியமாகவும் திருக்குறளை மேற்கோள் காட்டி மகிழ்ந்தனர்.

விடுதலைக்கு முன்னும் பின்னும் தேசிய இயக்கங்களும் பகுத்தறிவு இயக்கங்களும் வான்புகழ் வள்ளுவரின் கருத்தைப் பரப்புவதில் பெருமுயற்சி எடுத்துக் கொண்டன. இந்திய வரலாற்றின் நிகழ்வுகளிலும் தலைவர்களும், அறிஞர்களும் திருக்குறளின் கருத்துகளைப் பரப்பினர்.

விடுதலைக்கு முன்னரே **தந்தை பெரியார்** குறட்பாவைத் தமிழர்தம் அடையாளச் சின்னமாக எடுத்துக் காட்டினார்.

விடுதலைக்குப் பின்னர் **அறிஞர் அண்ணா** 'திருக்குறளைத் திருப்பணியாகவே கொண்டு எழுச்சியுறச் செய்தார்.

குறளோவியம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்லிலும் கல்லிலும் திருவள்ளுவரை வடித்துக் காட்டி திருவள்ளுவருக்கு என்றும் அழியாத சின்னத்தை உருவாக்கியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருவள்ளுவரின் சிலையை வியந்து பாடிய (1904) **திருமணம் செல்வக்கேசவராயரின்** எண்ணத்தை எதிரொலிக்கும் வண்ணம் முக்கடல்கள் இணையும் தமிழ் மண்ணில் மனித சிந்தனையின் தூய உருவமாகத் திகழும் திருவள்ளுவரின் திருவுருவம் கம்பீரமாக எழுந்து நின்று புதிய ஆயிரத்தா மாண்டிற்கு நல்வரவு கூறுகின்றது.

***- முனைவர் இ. சுந்தரமூர்த்தி***
*தமிழ் பேராசிரியர்,*
*சென்னைப் பல்கலைக்கழகம்.*

# மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடமை

**வள்ளுவர் கூட்டுடமை**

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் இல்வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல் (குறள்:44)

பொருளீட்டும்போது தீவினைக்கு அஞ்சி நல்வழியில் ஈட்டியும், பிறருக்குதவாவிடின் ஈயாத புல்லன் கன்னெஞ்சன் தன்னலக்காரன் மக்கட்டன்மை யில்லாதவன் என்று பலவாறு பிறர் தன்னைப் பழித்தற் கஞ்சியும், தன் பொருளை அஃதில்லாத பலரொடும் பகிர்ந்துண்ணும் இயல்புடைய இல்வாணனது குடிவழி, எதிர்காலமெல்லாம் தொடர்ந்தியங்கும்.

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது (குறள் 227)

எப்போதுந் தன்பொருளைப் பலரொடு பகிர்ந்துண்டலை இயல்பாகக் கொண்டவனை, பசியென்னும் கொடிய நோய் ஒருபோதுந் தாக்காது.

இறைக்க வூறும் மணற்கேணி, ஈயப்
பெருகும் பெருஞ்செல்வம் (பழ)

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை. (பழ 322)

ஒருவன் தன்பொருளை அல்லது உணவைப் பலரொடும் பகிர்ந்துண்டு பலவகை யுயிர்களையும் பாதுகாத்தல், அறநூலார் இரு வகையறத்தார்க்குந் தொகுத்த அறங்களெல்லாவற்றுள்ளும் தலையாயதாம்.

பொருள் ஒருவர் துறக்குமுன் கொண்டிருந்ததாகவோ, துறந்தபின் பெற்ற நன்கொடையாகவோ இருக்கலாம். இனி, மடத்துச் செல்வம் போன்று ஒருவர் ஆட்சிக்குட்பட்டதாகவுமிருக்கலாம்.

துறவறவியலிற் கூறப்பட்டுள்ள அறங்களுட் சில இல்லறத்தார்க்கும் பொதுவென்பதை, கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னாசெய்யாமை என்னும் அதிகாரங்கள் தெரிவிக்கும். ஓரறம் ஈரறத்திற்கும் பொதுவாயினும், இல்லறத்தில் எளியதாகவும் செயல் பற்றியதாகவும், துறவறத்தில் அரியதாகவும் கருத்துப்பற்றியதாகவும் இருக்கும் எ-டு; களவு செய்யாமை இல்லறம்; களவு செய்யக் கருதாமை துறவறம்.

தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு (மேற்படி 107)

என் அழகிய காதலியின் தழுவின்பம், ஒருவர் தம் சொந்த வீட்டிற் குடியிருந்து தாம் தேடிய பொருளைப் பலரொடும் பகிர்ந்துண்ணும் இன்பத்தை ஒத்தாகும்.

இந்நாற் குறளாலும், திருவள்ளுவர் உடையவா தம் பொருளை இல்லாரொடு பகிர்ந்துண்ணும் கூட்டுடமையைத் தெரிவித்தார். அவர் காலத்தில் மக்கட்டொகை மிகமிகக் குறைவு. நிலப்பரப்பில் முக்காற்பங்கு மரமடர்ந்த காடு; காற்பங்கு மக்கள் வாழும் நாடு. முத்தமிழ் நாட்டிலும் மக்கள் முக்கோடிக்கு மேல் இருந்திருக்க முடியாது. நெட்டிடையிட்டு அரிதாக நேரும் பஞ்சந்தவிர, ஆண்டுதோறும் கோடை மழையும் கால மழையும் அடைமழையும் தப்பாது பெய்யும். நில வளமும் நீர்வளமும் மிக்கிருந்தது. ஆகவே, உணவுத் தட்டும் வேலையில்லாத் திண்டாட்டமும் நலக்குறைவும் ஒரு சிறிதுமில்லை. ஆதலால், வறுமை வருந்தும் சோம்பேறியை நோக்கி :

இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும் (குறள் 1040)

என்று கண்டித்தார் திருவள்ளுவர்.

இனி, உழவதிகாரத்தை அடுத்து, நல்குரவு, இரவு, இரவச்சம், கயமை என்னும் நாலதிகாரங்களை வரிசையாக வைத்திருப்பதால், உழவை மேற்கொள்ளாவிடின் வறுமையும், வறுமையால் இரப்பும், இரப்பால் அஞ்சத் தக்க துன்பமும், அத்துன்ப மிகுதியால் கயமையும் (போக்கிரித்தனமும்) ஏற்படுமென்று குறிப்பாற் பெற வைத்தாரேனும்

இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது (குறள் 1041)

இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும் (குறள் 1042)

தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குர வென்னும் நசை (குறள் 1043)

என வறுமையைக் கடுமையாகக் கண்டித்தும்,

இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி அன்று (குறள் 1051)

என்று ஒருசார் வறியரை ஒரு சார் நன்மக்களிடம் இரக்க ஏவியும் இருப்பதால், தனிப்பட்டவன் தவற்றாலன்றி வேறு வழிகளாலும் வறுமை நேருமென்றும்; அத்தகைய வறுமையை நன்மக்களும் அரசனுமே நீக்கவேண்டுமென்றும் அறிந்து அவ்வறத்தைச் செய்யுமாறு ஆங்காங்குத்

தனிக்குறள்களால் ஏவியது மட்டுமன்றி, ஒப்புரவறிதல், ஈகை என்னும் ஈரதிகாரங்களையும் அமைத்தார் திருவள்ளுவர் என்று தெரிகின்றது.

**வறுமையடையும் வகைகள்**

**இயற்கை :-** களைகண் (ஆதரவு) இன்மை, உறுப்பின்மை, தீராநோய், சேதநேர்ச்சி (வெள்ளம், கடல்கோள், தீப்பிடிப்பு, நில நடுக்கம்).

**செயற்கை :-** சோம்பல், கல்லாமை அல்லது தொழில் பயிலாமை, குடி, விலைமகள் கூட்டு, சூது, களவு, கொள்ளை, போர், கடன்படல், கடன் கொடுத்தல், வீண் செலவு, பன்மக்கட்பேறு, பகைவர் செயல், வழக்கீடு, அரசு கவர்வு, வணிக இழப்பு, போட்டி, கூலி அல்லது சம்பளக்குறைவு, செய்பொருள் விலையாகாமை, நேர்மைக் கொள்கை, தாய்மொழி தாழ்த்தப் படுகை, வைப்பக (Bank) நொடிப்பு, தொழில் தாழ்வு தீண்டாமை, ஒழுக்க மின்மை, வேலையின்மை, அழி பொருளாக மாற்றிய உடைமையைப் பேணாமை.

இவற்றுட் சில இடைக் காலத்தன. சில இக்காலத்தன. அழி பொருளாக மாற்றிய உடைமையைப் பேணாமை என்பது முழுச் செம்மையும் (சொத்தையும்) தாட்காசாக (Currency Notes) மாற்றிக் கறையான் (செதில்) அரிக்கவிடுதல் போல்வது.

இன்மை, எளிமை என வறுமை இருதிறப்படும்; முன்னது ஒன்றுமின்மை, பின்னது சிறுவீட்டிற் குடியிருந்து குறைவாக உண்டுடுத்து வருந்தி வாழ்தல்.

இன்மை உழைக்க வியலாமையால் ஏற்படுவது அது உறுப்புக் குறைவு. நோய், முதுமை களைகணில்லாச் சிறுபருவம் துறவு ஆகிய ஐந்நிலைமைகளில் நேரக்கூடும். அந்நிலைமையர் களைகணில்லாக்கால் உயிர்வாழ வேண்டின், இரப்பெடுத்தல் இன்றியமையாததாகும்.

இக்காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் பல தொழிலாளர், சிறப்பாக நெசவாளர், செல்வரையும் பெருஞ் சம்பளக்காரரையும் இரக்க நேர்கின்றது. இரப்பு உயர்திணை மகனின் மதிப்பையும் மானத்தையும் கெடுத்தலால்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக வுலகியற்றி யான் (குறள் 1062)

என்று, உலகத்தைப் படைத்த இறைவன் மேலும் தம் சினத்தைக் காட்டினார் திருவள்ளுவர்.

இரத்தலைத் தவிர்க்க வேண்டுமென்றே, இக்கால நன்மக்களும், அரசும் களைகண் இல்லம் (Orphanages) தொழுநோயர் விடுதி (Leper Home), முதியோர் மனை (House for the Old) முதலியன ஆங்காங்குக் கட்டியும் அமைத்தும் உள்ளனர்.

ஆயினும், அளவிற்கு மிஞ்சி இருமடங்கும் மும்மடங்கும் மக்கட்டொகை பெருத்தும் ஆயிரக்கணக்கானவரும் இலக்கணக்கானவரும்

வேலையின்றியும் இருக்கும் இக்காலத்தில், திருவள்ளுவர் வகுத்த பாத்துண்டலே எல்லா மக்களும் பண்பாட்டுடன் வாழ்தற்கு இன்றியமை யாத தாகின்றது.

**மக்கட் பண்பாடு**

ஆறறிவு படைத்த மாந்தன் உயிரினங்கள் எல்லாவற்றுள்ளும் தான் உயர்திணை அல்லது உயர்குலம் என்று அறிவதால், பாத்துண்ணும் இயல்புடைய காக்கை போல சில அஃறிணையினங்களினும் பண்பாட்டில் தாழாவாறு, பாத்தூணறத்தைச் சிறப்பாகக் கடைபிடிக்கக் கடமைப்பட்டுள்ளான்.

**1. மன்பதை முழுதும் ஓரினம்**

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றார் பூங்குன்றனார், 'ஒன்றே குலம் ஒருவனே தேவனும்' என்றார் திருமூலர். ஆதலால் ஒவ்வொருவனும் தன்னுயிர் போல் மன்னுயிரைக் கருதல் வேண்டும்.

**2. அடிப்படைத் தேவை அனைவர்க்கும் பொது**

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே (புறநானூறு 189)

உடுப்பவை யிரண்டே என்றது கீழாடை மேலாடைகளை
உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்

**3. செல்வத்தின் பயன் அஃதில்லார்க் கீதல்**

**4. இறக்கும்போது செல்வம் உடன் வராது**

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லைபிறந்துமண்மேல்
இறக்கும்பொழுது கொடுபோவ தில்லை (திருவேகம்ப 7)

காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே (திருத்தில்லை 10)

அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே (திருத்தில்லை 13)

**5. அகக்கரண புறக்காரண ஆற்றல்கள் இயற்கையில் வேறு பட்டுள்ளமையால் ஒருவரைப் புகழ்தலும் இகழ்தலும் கூடாது**

நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பத றிவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆதலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே (புறநானூறு 192)

முறையென்பதை இங்கு இறைவன் ஏற்பாடு அல்லது இயற்கை யென்று கொள்க.

உயர்நிலைக் கல்விக்கு வேண்டும் மதிநுட்பம். இல்லாமையால் ஒருவன் உழைப்பாளியாகின்றான். அது அவன் தவறன்று. ஆதலால் அவனை இகழக்கூடாது. அவன் தன் உடல் வலிமையால் அஃதில்லாத உயர்கல்வியாளனுக்கு உதவுவதைப் பாராட்டல் வேண்டும்.

**6. மக்கட் பிறப்பு பண்பாட்டையே பெரிதுந் தழுவியது**

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யு யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு (குறள் 79)

உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு (குறள் 923)

அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர் (குறள் 997)

ஆதலால், பாத்துண்டலை அடிப்படையாகக் கொண்ட கூட்டுடமை யாட்சியே, இந்தியா போன்ற மக்கட் பெருக்க வறுமை நாட்டிற்கு ஏற்றதாம்.

**வள்ளுவர் கூட்டுடமையின் தனிச்சிறப்பு**

1. **எல்லார்க்கும் ஏற்றது** :- காரல் மார்க்கசு கூட்டுடமைக் கொள்கையைத் தொழிலாளர்க்கென்றே வகுத்தார். இரசிய சீன நாடுகளின் கூட்டுடமையாட்சியிற் கைத்தொழிலருங் கல்வித் தொழிலருமான எல்லா வகுப்பினரும் வாழினும், தொழிலாளர் கையிலேயே அதிகாரம் அமைந் துள்ளது. அவ்விருநாடுகளையும் தழுவியுள்ள இந்தியக் கூட்டுடமைக் கட்சிகளும் தொழிலாளர் ஒன்றியங்களாகவே இயங்கி வருகின்றன.

இன்று இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டத்தால் தாக்குண்ட வர் தொழிலாளர் மட்டுமல்லர்; பல்லாயிரக்கணக்கான பொறிவினைஞரும் மருத்துவரும் ஆசிரியரும் பிறரும் ஆவர். ஆதலால், கூட்டுடமையாட்சி கற்றோரும் மற்றோருமான அனைவர்க்கும் பொதுவானதே.

2. **ஈகையாளர்க்கும் புதுப்புனை வாளர்க்கும் தமிழ்ப் புரவலர்க்கும் கல்வி வள்ளலர்க்கும் செல்வ வரம்பிடாதது** :- சிலர்க்குப் புதுப்புனவாற்றலோ புதுச் செய்முறை கண்டுபிடிப்பாற்றலோ இருக்கலாம். அவர் விருப்பப்படி விட்டுவிடின், அவ் வாற்றலை மேன்மேலும் வளர்த்துப் பெரும் பொருளீட்ட வழியுண்டாகும்; பெரும் பயன்விளையும். அதனால் "ஆடு கொழுத்தால் ஆயனுக்கு ஊதியம்" என்பதை உணர்தல் வேண்டும்.

மேனாடுகளில் சிறப்பாக வட அமெரிக்காவில், பல்வேறு சூழ்ச்சிப் பொறிகளைப் புதுப்புனைந்தவர்க்கு அரசு உரிமையளித்து ஊக்கியதனால், அவரும் செல்வத்திற் சிறந்ததோங்கினர்; அவர் நாடுகளும் செழித்துப் பொருள் வளங்கொழித்தன; கொழிக்கின்றன.

இங்கே இந்தியாவில் அதற்கு நேர்மாறாக நேர்ந்துள்ளது. கோவைக் கோ. துரைசாமி நாயக்கரை (G.D. Naidu) நடுவணரகம் ஊக்கவில்லை; நாட்டரசும் ஊக்கவில்லை. அவரை ஊக்கியிருந்தால் உலக முழுவதற்கும் பயன்படும் ஒரு எடிசனாகி இருப்பார். நடுவணரசு, அவரை ஊக்குவதற்கு மாறாக, அன்முறையான அளவிறந்த வருமானவரி சுமத்தி அவர் உள்ளந் தளரவும் நெஞ்சம் புண்படவும் செய்தது. அதனால், அவர் தம் மன நோவின் கடுமையை தம் புதுப்புனைவுகளையுங் கண்டுபிடிப்புகளையும் வெளிப் படையாகச் சுட்டெரித்துக் காட்டினார்.

இக் காலத்திற் பொன்னும் எண்ணெயும் போன்ற கனியப் பொருள்கள் இல்லா நாடுகளெல்லாம், புதுப்புனைவுகளாலும், கண்டுபிடிப்புகளாலுமே தழைத்தோங்க முடியும். ஆதலால், அவ் வாற்றலுள்ளாரை வரியும் செல்வ வரம்பும் இடாது அரசு ஊக்குதல் வேண்டும். புதுப்புனைவுகளால் மக்கள் வாழ்க்கை ஏந்தும் (வசதியும்) இன்பமும் பெறுவதால் புதுப்புனைவாளரை யெல்லாம் குல மத கட்சி வேறுபாடின்றி நாட்டு வளம் பெருக்கியவராகவும் உலகப் பொது நலத் தொண்டராகவும் போற்றுதல் வேண்டும்.

இனி, தன்னலமின்றி மன்னலமே பேணி தம் பொருளையெல்லாம் வரையா தீயும் வள்ளல்கட்கும் செல்வ வரம்பிருத்தல் கூடாது.

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு (குறள் 215)

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின் (குறள் 216)

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின் (குறள் 217)

வள்ளன்மார் நாட்டு வறுமையைப் போக்குவதால் அரசின் கடமையை ஆற்றுபவரும் அதன் சுமையைக் குறைப்பவரும் ஆவர்.

ஈகையாளர்க்கு ஈதலே இன்பம். ஈயாமை அவர்க்கு இறப்பினுங் கொடிய துன்பம்

ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்தாமுடமை
வைத்திழக்கும் வன்க ணவர் (குறள் 228)

சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதன் இயையாக் கடை (குறள் 230)

முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே (புறநானூறு 110)

ஈகை யரிய யிழையணி மகளிரொடு
சாயின் றெனப ஆஅய் கோயில்

சுவைக்கினி தாகிய குய்யுடை யடிசில்
பிறர்க்கீ வின்றி தம்வயி றருத்தி
யுரைசா லோங்குபுகழ் ஒரீஇய
முரைகெழு செல்வர் நகர்போ லாதே (புறநானூறு 127)

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து (குறள் 220)

இந் நூற்றாண்டிலும், தம் செல்வம் முழுவதையும் இரப்போர்க்கீந்த செண்டத்தூர் வள்ளல் ஐயாத்துரை முதலியாரும், கல்விக்கீந்த காரைக்குடி வள்ளல் அழகப்பச் செட்டியாரும் இருந்தனர்.

**3. மதத்தில் தலையிடாதது** :-மதம் மக்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையென்றும், கூட்டுடமை கொள்கைக்கு முரணானதென்றும், தவறான கருத்து இருந்து வருகின்றது. அதற்கு மாறாக, மதமே மக்கள் பண்பாட்டிற்கு அடிப்படையானது என்பதையும் கூட்டுடமைக்கு ஏதுவானது என்பதையும் பலர் அறிந்திலர்.

அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது (குறள் 1075)

ஒரு நாட்டில் அல்லது ஊரில் கொலை, களவு, கொள்ளை, கற்பழிப்பு முதலியன பெரும்பாலும் இல்லாதிருத்தற்கு அரசன் அல்லது அரசு தண்டிக்கும் என்னும் அச்சமேயன்றி வேறொன்றும் கரணயமன்று. அங்ஙனமே பலர் தீயொழுக்கத்தை விட்டு நல்லொழுக்கத்தை மேற் கொண்டிருத்தற்கும் மறுமையில் இறைவன் எரிநரகிலிட்டுத் தண்டிப்பான் என்னும் அச்சமே கரணியமாகும். பண்பாடின்றி மக்கள் முன்னேற முடியாது. ஆதலால் மதம் மக்கள் முன்னேற்றத்திற்கு அடிப்படையாகும்.

இறைவன் எல்லாவுயிர்கட்கும் தந்தையென்பதும், அறவாழி யந்தணன் என்பதும் மதத்தின் அடிப்படைக் கொள்கை. அறிவும் அன்பும் நிரம்பாத உலகத் தந்தைக்குத் தன் மக்கள் எல்லாரும் வயிறார வுண்டு வாழ வேண்டுமென்பதே பெரு விருப்பம். அங்ஙனமாயின், முற்றிவனும், அன்பே வடிவானவனுமான பரம தந்தைக்கு மக்களெல்லாம் கவலையின்றி உண்டுடுத்து வாழ்வதையே குறிக்கோளாகக் கொண்ட கூட்டுடமை யாட்சியே. மகிழ்ச்சித் தரும் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

கூட்டுடமையாட்சியில், கல்வித் தொழிலரும், கைத்தொழிலரும் சமமாகக் கூடி வாழும் உடன்பிறப்புணர்ச்சிக்கு மதக்கொள்கையே பெரிதும் துணை செய்யும்.

கிறித்தவர் நம்பும் எதிர்கால ஆயிரவாண்டுலகவர சாட்சிக்குக் கூட்டுடமைக் கொள்கையே தோதாகும்.

மதம் என்பதும், இம்மை மறுமை கடவுள் என்னும் மூன்றையும் பற்றி ஒருவன் மதித்துக் கொள்ளுங் கருத்தேயன்றி வேறன்று. அதற்கென்று

தனியாகப் பொருட்செலவுங் காலச் செலவும் வினை முயற்சியும் இடவொதுக்கீடும் அரசு மேற்கொள்ள வேண்டியதில்லை. ஒருவன் காலையில் எழுந்தவுடனும், பின்னர் உண்ணு முன்னும், ஓரிடத்திற்குப் புறப்படு முன்னும், ஒரு வினையைத் தொடங்கு முன்னும், ஒரு நன்மை கிட்டியபோதும், தீங்கு நேர்ந்த போதும், உறங்கப் புகுமுன்னும் இறைவனை நன்றியறிவோடு அல்லது முறையீட்டுணர்ச்சியோடு கைதொழுது ஒரு நிமையம் எண்ணினாலும் இறை வழிபாடு செய்ததாகும். இங்ஙனம் மன நிலையிலேயே இருத்தக்கூடிய மதத்தை எவரும் அழிக்க முடியாது. இனி, கூட்டு வழிபாடும், ஓய்வு நாளில் அல்லது நேரத்தில் பொதுவிடத்தில் அல்லது ஒருவர் இல்லத்தில், பலர் கூடிச் செய்யலாம். இங்ஙனம் எளிய முறையில், அரசிற்கு எவ்வகை இடர்பாடும் விளைக்காது இயங்கக்கூடியது மதம்.

படிமை மேற்படிக் கணக்காய்ப் பாலைக் கொட்டுவதும், பெருங்கலத்திற் கலக்கணக்காய் நெய்யை வார்த்து விளக்கெரிப்பதும் போன்ற வினைகளே பொருளழிப்பும் வீண் செயலுமாகும்.

கடவுளை கட்புலனாகக் காண முடியாமை பற்றியே கடவுளுண் மையை மறுத்துவிட முடியாது. உயிரில்லாத, அதனால் அறிவுமில்லாத நாள்களும் கோள்களும் தத்தம் நிலையில் நின்றும் நெறியிற் சென்றும் ஒழுங்காகத் தத்தம் தொழிலைச் செய்து வருகின்றன. இத்தகைய நிகழ்ச்சி அவற்றை இயக்குவான் ஒருவனின்றி நிகழ இயலாது. மாந்தனறிவு அளவிலும், ஆற்றலிலும் மிக மட்டுற்றிருப்பதால் எல்லா இயற்கை நிலைமைகளையும் உணர்ந்து கொள்ளவியலாது.

கடவுளுண்மையை எல்லாரும் நம்புமாறு நாட்டிற்குப் போதிய சான்றுகள் இல்லையெனின், அதை மறுத்தற்கும் போதிய சான்றுகள் இல்லையென்பதை உணர்தல் வேண்டும்.

இனி, எங்ஙனமிருப்பினும் மதமே கூடாதெனின், கடவுள் இல்லையென்பதும், உலகியம் (லோகாயதம் அல்லது சார்வாகம்) என்னும் மதமாதலின், மதத்தைப் பற்றி ஒருவரையொருவர் தாக்காதிருத்தலே மதியுடைச் செய்தியாம்.

திருவள்ளுவரும், ஞா. தேவ நேயப்பாவாணர் தம் நூலைக் கடவுள் வாழ்த்தொடு தொடங்குதலின், வள்ளுவர் கூட்டுடைமை மதத்தை விலக்குவதன்று என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இரசிய சீன நாடுகளிலும், கிறித்தவர், சிறுபான்மையரேனும் இடர்பாடின்றி இருந்துவருவதும் கவனிக்கத் தக்கதாகும்.

ஆகவே, வள்ளுவர் கூட்டுடைமையே தலைசிறந்ததும் எல்லார்க்கும் எக் காலத்திற்கும் ஏற்றதுமாகும்.

***திராவிடப் புலவர் : ஞா. தேவநேயப் பாவாணர்***

# குறள் தமிழ் முதனூலா; தரும சாத்திர சாரத்திரட்டா?

குறள் தமிழ் நூலன்று. வடமொழி நூல்வழி வந்தது என்பதற்குக் கூறப்படும் இரண்டோரே துவைச் சிறிதாராய்வோம்.

குறள் வடமொழி கலவாத் தனித்தமிழ் நூலென்பார் ஒரு சாரார்; அது வைதீக தரும சாத்திர வடிவே என்பார் பிறிதொரு வகுப்பார். இவ் விருவர் கூற்றும் மெய்ம்மையின் இருதலை மலைவார் பொருள் கருதாமல் தருமுறை வகையாம். வடமொழி சொற்களும் வடநூற் கருத்தும் ஒரு சில குறளில் வருதலினாலது தமிழ் நூலாகாதென்னும் வாதம். மொழி பெயர்ப் பொன்றைப் பெயர்த்த மொழியில் முதனூலென்பது போல, முழு மெய் தழுவாக் கிளவியாகும். வள்ளுவர் குறளில் வடசொல் ஒரு சில வருவது மெய்யே; அதன் ஆழ்ந்த பொருட் பெருங்கடலில் சில சிற்றலையின் எதுரொலி வடநூலில் கேட்பது முண்மை. இவை குறள் தமிழ் நூலின்றெனக் காட்டுமேதுவாமா? வேறுபட்ட நாகரிக வகுப்பார்தம் கூட்டுறவால் நாளடைவில் சில சொல்லும் கொள்கைகளும் இரு திறத்தார் மொழிகளிலும் கைம்மாறிக் கலப்பதியல்பு; கலப்பல் ஒரு சில புகுந்து வழங்கக் காண்போம். அதுபோல, தமிழ்ச் சொற்கள் வடமொழியிடம் பெற்று வழங்குவதும் மறுக்கவொண்ணா உண்மையாகும். **சமய மதச் சார்புகளில் தமிழரிடையமையாத சாதிபேத மாயவாத வடசொற்கள் தமிழிலேறில், ஆணி, முத்தம், பிரவாளம், நீரம், மீனம்** போல பலச் சொற்கள் தமிழ் ஆரியத்திற் களித்த கொடை அறியாதார் அறியாதாரே?

பல்வேறு மக்கள் வாழ்வில் பொதுவான வழக்கங்கள் கொள்கையோடு கருத்துக்கள் ஒத்திருத்தல் இயல்பாகும். சிறப்பியல்கள் பற்றிய சிற்சிலத் துறையில் மட்டுமல்ல வேறுபட நேரக்கூடும். **அறம் பலவும் அனைவருக்கும் மக்களியலொற்றுமையால் ஒத்திருக்கும் எண்ணரிய பல்வேறு உயிரினத்துள் மாந்தரெல்லாம் ஓரினமே. உருவத்திற்போல, உள்ள உணர்ச்சி எண்ணம், விருப்பமொடு பசி காம வினைமைகளில் மக்கட்டன்மை என்னுமொரு பொதுவியல்பை மாந்தரிடை எங்கும் காண்போம். ஒத்த இயலுடைமையினால் வாழ்க்கை முறை ஒழுக்க வகை பெரும்பாலும் ஒத்திருக்கும். அதனாலே, பொதுவாகப் பல்வேறு மொழிகளிலும் நூல் கூறு மறம் பலவும் பெரும்பாலும் ஒத்திருக்கும். பொய்யாமை, கொல்லாமை, வெஃகாமை,**

**கள்ளாமை போல்வ பல ஒழுக்கறங்கள் எல்லார்க்கும் எஞ்ஞான்றும் எந்நிலத்தும் பொதுவாகும். அதனாலே பல்வேறு மொழிகளிலும் அற நூல்கள் ஒத்திருப்பது இயற்கையாகும். அது கொண்டவ் வற நூல்கள் ஒன்றிலிருந் தொன்றிரவல் கொண்டதென்றும், அவற்றிடையே தொடர்பிருத்தல் வேண்டுமென்றும் கூறுவது தவறாகும். எல்லார்க்கும் பொதுவின்றி சில வகுப்பார் சிறப்பொழுக்க வழக்கத்தால் அமையு மறவகை கூறுமிரு நூலும் சான்றின்றி ஒன்று பிறிதொன்றற்கு முதலென்று கொள்ளுவதும் குற்றமாகும். சிறப்பொழுக்கம் பற்றியெழும் அடி அறங்கள் ஒத்தமையக் கூறும் நூல்கல் காணுங்கால், அவற்றினிடைத் தொடர்புண்மை ஆராய்தற் கிடலொருங்கால் இருக்கு மென எண்ணல் கூடும். அதற்கெதிராய் அடிப்படையாம் ஒழுக்கறமும் வாழ்க்கை முறை மரபுகளும் மாறுபட வகுக்கும் நூல்கள். வேறுபடும் நாகரிகம் விளக்கும் தனி நூல்களெனக் கொண்டவற்றை உறழாமல் ஆய்வதுமே அறிவறமாம்.**

இவ் வுண்மை மறவாமல் உளத்திற்கொண்டு, தமிழ்க் குறளை வட **தரும நூல்களொடு** ஒத்து நோக்கி, இயைபு முரண்பாடுகளை நடுநிலையில் ஆராய்வோம். வள்ளுவர் நூல், வேதசாரம், பல தரும சாத்திரத்தின் தெளித்தவடி என்பவரின் ஏதுவொடு சான்றுகளைத் தகவோடு நிறுத்துண்மை தேர்ந்து தெளிவோம்.

இவ்வுண்மை மறவாமல் உளத்திற்கொண்டு தமிழ்க் குறளை வடதரும நூல்களொடு ஒத்து நோக்கி, இயைபு முரண்பாடுகளை நடுநிலையில் ஆராய்வோம். வள்ளுவர் நூல், வேதசாரம்; பலதரும சாத்திரத்தின் தெளித்தவடி என்பவரின் ஏதுவொடு சான்றுகளைத் தகவோடு நிறுத்துண்மை தேர்ந்து தெளிவோம்.

அகம் புறமென்றிரு வகையாய்ப் பொருளொன்றைத் திணை துறைகள் வகுத்துரைத்தல் தமிழ் மரபு. அதற்கு மாறாய், வள்ளுவர் நூல். **அறமுதலாப் பால் வகுத்து வடவழக்குத் தொடர்புடைமை காட்டுதலால், தமிழ் முதனூலாகா தேன்ப.** அதன் உண்மை இனி விரித்திங் காராய்வோம்.

அறங்கூறக் காஞ்சி வாகை பாடாணின் துறைவகைகள் தமிழ் வழக்கி லென்று முண்டு. அறமெல்லாம் புறத்திணையிலடங்கி விழுப்பொருள் வகையாம்; பொருளின் பத்துறையிலாய்த் துரைப்பதறம். பொருளொன்றே. வாழ்வொழுக்க முறை பற்றி அகம் புறமென் றிருவகையாய். அறமுதல் நாற்பொருளடங்க அமையுமுண்மை தமிழர் கண்ட முடிபாகும். அது குறையென் றிகழ்ந்து நாற்பால் நெறி கூறின், முப்பாலென் றுரைப்பாரோ?

தமிழ்க் குறளை முப்பாலாய் வகுத்தவர் வள்ளுவர்தாம் என்பதற்குச் சான்றில்லை. ''முப்பால்'' என்றிறவாத குறளுக்கு வள்ளுவர் பெயரிடவில்லை.

பண்டைச் சான்றோர் பாக்களைத் தொகுத்த பிற்காலத்தவர், தாமியற்றிய குறட் சிறப்புப் பாயிரத்தால் அப்பொருணூலை அறனூலாக்கி,

முப்பாலாய்ப் பாராட்டி, ஆரியரின் நாற்பொருளும் அதாவது பொருளைக் கூறாமல், குறள் அரச நீதியே உரைப்பதாயும், அரச நீதி பொருளுக்குத் துணைக்காரணமென்றும் அது கூறப் பொருளடங்கும் என்றும் கூறினார்.

முப்பால் வகுக்க முயன்ற வள்ளுவர், பொருளைத் தெருளவுரையாமல், அதன் முதற் காரணத்தையு முற்றிலும் மறந்து, துணைக்காரண மொன்றே சொல்லி விடுவானேன்? பொய்யா விளக்காம் பொருளை விளக்க இயலாதியம்ப முயன்றிலார்? அன்றிப் பொருளைப் பொருட்படுத்தாமல் அரசநீதி விரிப்பதே அவர் கருத்தாயின், "ராசநீசாரம்" என்று பொருந்தப் பெயரிட்டிருக்கலாமே. இயற்றியோ ரெண்ண மெதுவேயாயினும் பொருளைக் கூறாக் குறளற நூலில் முப்பாலென்பது தப்பேயாகும். அரச நீதியும் காம முரைக்கும் "இருபா' லென்றேனும், வருணாச்சிரம நீதிச்சார காமரசங்களை வடித்துக் கூறும் "ஒரு பால்" என்றேனும் கூறுதலன்றோ முறையாகும். அதைவிட்டு, "தருமமுதன் நான் கும்", "முப்பாலின் நாற்பால் மொழிந்தவர்" என்று தப்பைக் கூறித் தடுமாறுவதேன்? உண்மையாதெனின் வள்ளுவர் நல்ல தமிழர். தமிழ் நூல் மரபிற் புலநெறி வழக்கினலம் நன்கறிந்தவர். அதனால் வடநூல் வழியில் அறமுதல் நாற்பால் வகுத்து நூலியற்றுங் கருத்தவற் கில்லை. அகமும் புறமுமா யிருவகைப்படும் பொருளை விரித்துத் தமிழ் நூல் செய்தார்.

அதன் தனிப் பெருமையறிந்து அதைப் பின்னோர் நாற்பாற் பொருளும் வடநூல் முறையில் வகுக்கும் வழி நூலாக்க முயன்றோர் தங்கள் வழிக்கமையாத் தடைகளை விலக்க இல்லவும் பொல்லவும் பல்லாறாக விரித்தும் விலக்கியும் திரித்தும் உரைத்தார்.

இனி, முப்பாலாக வள்ளுவர் வகுத்தால், பொருளும் காமமும் பெரிதுடை நூலை, அவை குறியாமல் அறநூலென்பது தவறாமன்றோ? ஆகவே, வள்ளுவர் வாய்மொழி ஆரிய தரும சாத்திரமன்று, தமிழர் பொருணூல் என்பதே பொருந்தும்.

வள்ளுவர் குறளின் தனிமுதற் பெருமையை மறுப்பரெவரும், அது வடநூலென்றன் மொழிபெயர்ப் பென்றோ, இன்னநூலின் வழிவரு மென்றோ கூறுகின்றிலர். பொருட்டொகையாலும், முறைவகை யாலும் வடமொழிப் பரப்பில் குறள் போலெரு நூல் கூறுதற்கில்லை. பொருளிலும், வகையிலும் போக்கிலும், நோக்கிலும் ஒப்புக்கூறுதற்குரிய நூலொன்றும் இல்லா நிலையில் குறளை வழி நூலென்பவர் துணிவா? அதையப் படியே சொல்லித் திரியும் புலவரின் அறிவா? பெரிதென வியப்பரிதாகின்றது.

திருக்குறளில் ஒரு நூற்றுமுப்பத்து மூன்றியல்கள் உள்ளன. ஓரியற் பத்துக் குறள்களையேனும் ஒத்தொரு வடநூல் உரைக்கக் காணோம். ஒரொரு குறட் கருத்தொத்து வருதொடரை ஒவ்வொரு நூலிடைக் கிளைத்துப் பொறுக்கி விழுக்குறள் மணிக்களுக்கது முழுமுதல் விதையெனச் சழக்குரை கூறி வழக்கும் தொடுப்பார். வியக்கும் காவியம் பயக்கும் கருத்தை முற்றிலுமொத்த சொற்சொடரமைந்து மேல்புலக் கவி

களில் மிளிரக் காண்குவம். அதனாலவற்றுள் ஒன்று மற்றதன் விதை முதலென்பது நகைக்கிடமன்றோ? குறட்கருத்தொத்துள வடமொழிக் கவிகள் குறளெழு முன்னே வழங்கியதுண்டோ? முந்திய வெனினும், வள்ளுவர் அவற்றைக் கண்டு தந்நூலிற் கொண்டாரென்னக் காட்டும் சான்றுகள் கேட்டதுண்டோ? இடமும் காலமும் தொடர்பிலப் புலவர் ஒத்த கருத்தைப் பல்வேறு மொழிகளில் உரைத்தோரிலரோ? அன்றியும், ஒழுக்கறமெல்லாம் என்றும் யாண்டும் ஒத்திருப்பது உலகியலன்றோ? ஓரளவொப்பவை ஒரு சிலவன்றிக் குறளறமனைத்தும் பிறமொழி நூல்கள் கூறக் கேட்பினும், அதனாலவைகள் ஒருமத வகுப்பார் பொது வழக்குரைப்பவை என்பது சாலாது. அறநெறி மக்களனைவரிடத்தும் ஒத்தமைந்திருப்பது உறவு சுட்டாது. அதற்கெதிராக, வாழ்வற மரபுகள் மாறுபடு நூல்கள், வேறின வகுப்பார் வழக்குரைப் பனவாய்க் கொள்வதே முறையாம். அகப்புற வாழ்க்கையில் மக்கள் மனையறம், தொழிற்றுறை, உரிமை, கடமைகள், வழக்கொடு கொள்கை வகைகளில் குறளும் தரும சாத்திரங்களும் கூறுமரபியல் நெறிகளை நிரலே ஒப்ப நோக்கி உண்மை காணுவம். ஆனால், உரைகள் புகுத்தும் புதுமைகளொழித்து, 'வள்ளுவர் சொல்'லால் வருபொருள் மட்டே குறட்கருத்தாகக் கொள்ளல் வேண்டும்.

முதலில், தமிழறமும், ஆரிய தருமமும் ஒரு பொருள் குறிக்கும் இரு சொல்லன்றென அறிதல் வேண்டும். (i) தருமமும் என்பது, ஆரியர் நூல்கள் கூறிய நெறியியல் குறிக்கும் சொல்லாம். அதனால், ஆரிய தருமம், என்றும் யாவருக்கும் ஒத்தியலாமல் பிறப்பு, நிலை, பதவி, உத்தியோகம், அவசியம், ஆபத்து, இடம் காலம் இவைகளுக்கேற்ப வேறுபடும்.

தமிழறம், எல்லோர்க்கும் எஞ்ஞான்றும் மாறாதமையும், இயல்முறை சுட்டும் அறத்தை நூல்கள் ஆக்குவதில்லை; ஆராய்ந்துரைப்பதே நூலோர் மேற்கோள்.

(ii) நூல்கள் விதிப்பதே தருமமாகையால், அது நூலோர் மதப்படி வெவ்வேறாகும். ஆதலால் குறைந்தது மநுதரும முதல் பராசரர் தருமம் வரை பதினெண் வகையில் ஒரு வகுப்பார்க்கே தருமம் பல திறப்படும். நூலோர் ஒப்பினும் ஒவ்வாவிடினும் அறத்துறை அனைத்தும் மாறாவியல.

(iii) இன்னும், தருமம், செய்யவும் தவிரவும் நூல் விதிக்கும் ஆணைகளாகும். அதனாலவைகள் அரசியலாரால் ஒறுப்பொடு வற்புறுத்தப்பெறும். 'அறம் வழக்கும் தண்டமுமான அரச நீதிகள் வேறுபட்ட பொது இயல் குறிக்கும். அறம் திறம் பல்பழிக்கன்றித் துண்டத்துக் காளாக்காது....... எனவே, வள்ளுவர் குறளும், வடநூல் தருமமா மாறில்லை.

இனி, பிறப்பாலுயர்வும் பீடிலாத் தாழ்வும் மக்களுக்கென்றும் மாறா நிலையில் சாதிகள் விதிக்கும் தரும சாத்திரம், 'சாதி' என்னும் சொல்லும் கருத்தும் ஆரியர் மொழியும் மரபும் படைத்த அரும்பயிர் விளைவே.

அதை அறவே மறுத்துப் 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்று முழங்கும் வள்ளுவர் தமிழ்க் குறள் பிறப்பாலுரிமையும், சாதி நீதியும் பேசாது மட்டுமல்ல; "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" என்று தமிழர் கொள்கையையும் வரையறுக்கிறது. இரு பிறப்பாளர் மூவகை மக்களும் ஒரு பிறப்புடைய இருகாற் பொதி விலங்கொரு வகையாக்கலும் தரும நூல் விதிக்கும் மாந்தர் வகை, முறை. இவ்வருண் தருமம் குறளறமறியாக் கொள்கையாகும். நிற்க.

மேலோர் மூவர்க்கும் நால்வேறு நிலையில் வாழ்க்கையுரிமை வகுத்துக் கொடுக்கும் ஆரிய தருமம். இதை ஆச்சிரம தருமம் என்னும் வடநூல். ஆச்சிரம உரிமை சூத்திரர்க்கில்லை. அதனால், கல்வி, இல்லற இன்பம், புலமைச் சிந்தனை, விடுதலை வாழ்வு என்னும் நானிலையுரிமையும் நுகர்வும், பெரும்பாலோர்க்கு விரும்பினும் பிழையாம். வீட்டை விரும்பித் தவ மேற்கொண்ட சூத்திரன் பிழைக்க, அவனை, தளர்ந்த தருமத்தை வளர்க்க வந்த கடவுள் இராமனே கொன்று நிறுத்திய கதையால் ஆச்சிரம தருமத்தின் இயல்பும் வலியும் இனிது விளங்கும்.

கல்வி, மனைமாட்சி, தவம், துறவு என்னும் நானிலை வாழ்வும் எல்லா மாந்தர்க்கும் ஒத்துரிமையாக்கும் குறளறம். எனவே, நிறமொத்த வெண்ணெயும் கந்தையும் வேறாவது போலக் குறள் அறமும் ஆரிய தருமமும் இயல் மாறுபடும்.

தரும சாத்திரப்படி ஓதல், மேலோர் சிறப்புரிமையாகும். பெரும்பாலோர்க்கது விலக்கப்பட்டது. எல்லார்க்கும் கல்வியை இன்றியமையாத பொது உடைமையாக்கும், குறள் கூறும் தமிழறம்.

இரு பிறப்பாளரல்லா ரெல்லார்க்கும் பொருளுரிமை மறுக்கும் தரும நூலனைத்தும்; இன்பமும் அறனும் எல்லா மீயும் பொருளாக்கம், மக்களுக்கெல்லாம் பொதுவுரிமை யென்னும் குறள்.

பிறப்பால் குலமுறை பேணி, அதன் வழி உணவும் மணமும் அறமும் விதிக்கும் தரும நூல்; சிறப்பால் குடி செய்து வாழும் பெருமை எல்லார்க்கு மியல்பென்னும் தமிழ்க்குறள்.

தொழில்களை மாந்தர்க்கு வருண முறையால் வகுத்து விதிக்கும் தரும நூல்; செய்திறனும் வாய்ப்பும் உளதாயின், எவ்வினையும் எல்லார்க்கும் நன்றென்னும் குறள், பொருள், கருவி, காலம், இடம், திறனொடைந்தும் எண்ணி விரும்பு வினை மேற்கொள்ளும் நெறி குறிப்பதல்லல், பிறப்பும் பிறவும் எத்தொழிற்கும் விலக்கென மறுப்பதைக் குறள் கொள்ளாது.

உழவை இழிவாக்கி, ஆரியர்க்குப் பழியாய் விலக்கி, கீழோர்க்கும் விதிக்கும் தரும நூல்; தொழிற்கெல்லாம் 'உழவேதலை' என்றும் கோவேந்தர் கொற்றக் குடையும் தங்குடைக்கீழ் காண்பவராய உழவர் அரசரினுமயர்வுடைய பெரியாரென்றும் கோழைபடா மேழிச் செல்வம் எல்லார்க்கும் நல்லதெனவும் பாராட்டும் குறள்.

மேலோர் மூவருள் முதல்வரான வேதியர்க்கு இரத்தலை உரிதாக்கி உழையா உஞற்றா உயர் தொழிலாக்கும் தரும நூல்.

**தமக்கன்றி, 'ஆவிற்கு நீ ரென்றிரப்பினும் (மக்கள்) நாவிற்கிரவின் இளி வந்ததில்' என்றெல்லார்க்கும் இரவிழிவாவதைக் குறள் கூறும். மேலும் இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், அச் சிறுமையுடைய உலகியற்றியான் (படைத்த கடவுள்) பரந்து கெடுக' என்றிரப்பிற்றமிழர் வெறுப்பை விளக்கும்.**

உயிரும் மானமும் உடனோம்ப இடனில்லாக் காலை, மானத்தை விட்டு தம்முயிற் பேண விதிக்கும் தரும சாத்திரங்கள். **'உயிர் நீப்பர், மானம், கெடவரின்' என்ற இளிவரின் வாழத் தமழரியல்புரைக்கும் குறள்.**

குதினை ஆட்சியுரிமை மாட்சியுடைய இரண்டாம் வகுப்பார்க்கு மறுக்கொணாத்தரும மென்றும், மற்றவர்க்குப் பொருட்கேடல்லால் பழி பயக்கும் இழிவன்றென்றும் விதிக்கும் தரும நூல். **செல்வமொடு பண்பும் கெடுத்து, அல்ல லுழப்பிக்கும் சூதை, எல்லார்க்கும் நல்வாழ்வின் வரியடைக்கும் தீதென்றதன் இழிதகவை வலியுறுத்தும் குறள்.**

மெலியாரை நலிந்தவர் உரிமை பறிப்பது அரசர் சால்பென்று பாராட்டும் தரும சாத்திரம். **'இகல் மேவும் இன்னா அறிவு', 'எவ்வுயிர்க்கும் பகலென்னும் பண்பின்மை பாரிக்கும் நோய்' என்னும் குறள் இவ்வேறு பாடுகள் ஆழாது மேலளக்கும் அனைவருக்கும் புலனாகும். இன்னும் பல ஆழ்ந்து துருவி ஆராய்வார் சொல்லக் கூடும். ஆனாலும் தமிழ்க் குறள், ஆரியர் சாத்திர வரி நூலாகாமை காட்டுதற் கிவைசாலும். வடநூல் வழக்குகட் கெதிராகத் துறை தொறும் வேறாம் தமிழ் மரபு தெளிக்கும். 'வள்ளுவர் நூல் தனி முதலாவதை மறுப்பாரறிவை என்னென்பது?'**

'ஆரியர்க்குரிய வேத வேள்வியை நிந்தனை செய்யும்' சமண நூல் போலாது, தமிழ்க் குறள் ஆளாது வாளா அகல விடும் பெற்றிமை அறிந்து பாராட்டத்தக்கது. வள்ளுவர் பிறர் பழியும் தம்பழி போல் நாணும் தமிழ்ச் சான்றோராதலின், தமிழர் விரும்பா ஆரிய வழக்குகளைப் பழியா தொழிப்பர், புகழவுமாட்டார் சாற்றிற்றம் மாற்றலழிந் தொழியும் நான்மறையை, 'அந்தணர் நூல்' என்றகற்றிப் பேசும் வள்ளுவர் 'ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று' என்று வேள்வியை விலக்கும் தமிழ் மரபுரைப்பர். வெட்டென விளங்குமிவ்வுண்மை உணராமல் முட்டிமடியுமறிவின் முடவர். வைதிக தருமமும், பொது மறை யறமும் ஒன்றென நினைப்பர். தனித் தமிழ் மரபை நுனித்தறிந் துரைக்கும் முழுமுதற்றமிழ் நூல் வள்ளுவர் குறளெனக் கொள்ளுவர் வாய்மை வகையுணர் சான்றோர். வாழ்க தமிழ்க்குறள், வாழிய மாந்தர்!

***- நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்***

# திருவள்ளுவர் தமிழகத்தின் முதல் புரட்சியாளர்

உலக மக்கள் உயர்ந்த நெறியில் வாழ்ந்து இன்பம் பெறுவதற்காக வழி வகைகளை வகுத்துக் கூறியவர் திருவள்ளுவர். அவர் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. அவருடைய ஈராயிரம் ஆண்டு நிறைவு விழா இன்று தமிழகமெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. தமிழ் மக்கள் அவரை என்றும் போற்றிப் புகழக் கடமைப்பட்டுள்ளனர். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் பெற்றுள்ளோம் அன்றோ!

**கி.மு. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய தொல்காப்பியர் பிற மொழித் தாக்குதலால் தமிழ் அழிந்து போவதைத் தடுத்து நிறுத்தினார். திருவள்ளுவர், அயல் மக்கள் செல்வாக்கால் தமிழ்ப் பண்பாடு அழிந்து போவதைத் தடுத்து நிறுத்தினார். தமிழ் மக்களின் பழைய பண்பாட்டில் காணப்பட்ட நல்வாழ்வுக்குப் பொருந்தாதவைகளையும் களைந்தெளிய அறிவுரை கூறியுள்ளார்.**

**புரட்சி என்பது மக்கள் வாழ்வில் காணப்படும் பொருந்தாத மூட நம்பிக்கைக் கொள்கைகளை எதிர்த்துப் போர் முழக்கம் செய்து மாற்றி அமைக்க முயல்வதே ஆகும். பழமையைப் புரட்டி விட்டு அகற்றிவிட்டு, புதுமையைப் புகுத்துவதுதான் புரட்சி. புரட்சி என்றால் பூசலும் போரும், கொள்ளையும், கொலையும் தோன்றுமென்று கருதலாம். மேல்நாடுகளில் அவ்வாறுதான் புரட்சிகள் நடந்துள்ளன. ஆனால், திருவள்ளுவர் செய்துள்ளது எண்ணப் புரட்சியாகும். எண்ணமே செயலின் அடிப்படை யாகும். அதனால் செயலின் தாய், எண்ணம் என்பர் மேனாட்டார்.**

எண்ணம் திண்ணியதாக உருவானால் செயல் தானே தோன்றிவிடும். எண்ணம் தோன்றுமிடம் மனம். அம்மனம் தூய்மையாக இருக்க வேண்டுமென்று திருவள்ளுவர் கூறுவதே ஒரு புரட்சியாகும். மனம் தூய்மையாக இருத்தலே அறம் என்கின்றார். மனம் தூய்மையற்று என்ன நற்செயல்கள் செய்தாலும் அவை பயன்படா. வெறும் ஆர்ப்பரவ வேட்கைக்கு உரியனவாகி விடும். மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்; ஆகுல்நீர பிற என்பன நோக்குமின்.

எவ் வகையிலும் சாதியாலோ நிறத்தாலோ பொருளாலோ, வேறுபாடு அற்று வாழ்ந்த தமிழ் மக்களிடையே **சாதி வேறுபாடுகள் புகத்**

**தொடங்கின. அச் சாதி வேறுபாடுகள் இன்றும் அகன்றுவிட வில்லை. மக்களை அலைக்கழித்து வருகின்றன. வள்ளுவர் அன்றே பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றார்.**

தமிழ்நாட்டில் இரக்கத்திற் சிறந்து அருள் உளம் கொண்டு மக்களுக்கும் பிற உயிர்களுக்கும் தொண்டாற்று கின்றவர்களை அந்தணர் என்று அழைத்து வந்தனர். அவர்களே மக்களில் தலைவர்களாகவும் மதிக்கப்பட்டனர். வெளிநாட்டிலிருந்து வந்த சிலர் தம்மைப் பிறப்பான் உயர்ந்தவராகக் கூறிக் கொண்டு அந்தணர் என்றும், ஐயர் என்றும் அழைத்துக் கொண்டனர். ஆனால், செயலில் வன்கண்மை பூண்டு தம் கூட்டத்தினர் அல்லாதவரை ஒடுக்கியும், இழித்தும் விலங்கினும் கீழாக நடத்தி வந்தனர். அதனால் வள்ளுவர் அந்தணர் யார் என்று விளக்கம் கொடுத்துப் போலி அந்தணர்களைப் புறக்கணிக்க வழி கோலினார். அந்தணர் என்போர் அறவோர், மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான் என்று முழக்கம் விடுத்துள்ளமை காண்க.

பிறப்பால் உயர்வு தாழ்வு பேசுதல் பேதமை. ஒழுக்கத்தால் உயர்ந்தோரே நல்ல குடியில் பிறந்தோர் ஆவார். ஒழுக்கக் கேடர்களே இழிந்த பிறப்பினர் ஆவார்கள். ஆதலின் ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும் என்று இடித்துரைத்தார். ஒழுக்கத்தால் உயர்வு படுத்தும் நெறி வெற்றி பெற்றிருக்கு மேல். இன்று நாட்டில் பூசல்கள் தோன்றுமா? ஒழுக்கம் உடையாரை ஒதுக்கிப் புறக்கணிப்பதனால் அன்றோ இன்று எங்கு நோக்கினும் பூசற் களமாகக் காணப்படுகின்றது. மக்களாட்சி வெற்றி பெற வேண்டுமென்றால் ஒழுக்கமுடையோர் உயர்ந்தோராக கருதப்பட்டு உயர்வாகப் போற்றப்படுதல் வேண்டும்.

மக்களில் கல்விப் பேறு அடைதற்குரியவர் சிலரே என்றனர். சில நாடுகளில் படிப்பவர் வேறு; உழைப்பவர் வேறு என்று வகைப்படுத்தினர். உயர்ந்தோரே படித்தல் வேண்டும். உழைப்பவர் படித்தல் வேண்டாம் என்றும் விதியாக்கினர். **ஆனால் வள்ளுவர் கூறியது என்ன? கல்வி அனைவர்க்கும் பொது; கண்கள் அனைவர்க்கும் இயல்பாக உரியன; அதுபோலக் கல்வியும் எல்லார்க்கும் உரியதாகும். கண்களோடு பிறத்தல் போலக் கல்வியோடு வளர்தல் வேண்டும் . கண்ணில்லாது வாழ முடியாதது போல கல்வியில்லாதும் வாழ முடியாது. கல்வி பெறாதிருத்தல் பெருங்குற்றம். பெற முடியாது தடுத்தல் அதனினும் பெருங்குற்றம். கல்வியைப் பறிப்பது கண்ணைப் பறிப்பது போலாகும் என்று கல்வி, கல்லாமை என்னும் இயல்களில் தெறிவுறக் கூறியுள்ளார். எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ் விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு** என்று கூறுவதில் ஒரு **புரட்சியையும் செய்துள்ளார்.** கல்வி என்றால் வெறும் காப்பியங்களை மட்டுமோ இலக்கண நூல்களை மட்டுமோ கற்றல் அன்று. அறிவியலை (எண்)யும் கலை (எழுத்து)களையும் ஒருவர் கற்றால்தான் முழுமைக் கல்வியாகும் என்கிறார்.

இரு பகுதிகளையும் கற்பவர்தாம் மக்களாக வாழ்வர். பிறர் மாக்களாகி விடுவர் என முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார். இன்று **கல்லூரிகளில் வள்ளுவர் கருத்துக்கேற்ப கலையும் (Arts) அறிவியிலும் (Science) சேர்த்துக் கற்பிக்கத் திட்டம் வைத்திருப்பினும் செம்மையான முறையில் செயல்படவில்லை.**

ஒருவனுடைய ஏற்றத்தாழ்வு அவன் போன பிறவியில் செய்துள்ள புண்ணிய பாவங்களுக்கேற்பவே உண்டாகும். சிலர் பல்லகில் (அக் காலத்தில் மகிழ் உந்து இல்லை) ஏறிச் செல்லுகின்றனர் என்றால் அவர்கள் போன பிறவியில் புண்ணியம் செய்தவர்கள் ஆவார்கள். அதனைச் சுமந்து செல்பவர்கள் போன பிறவியில் பாவம் செய்தவர்கள் ஆவார்கள் என்று கூறி வந்தனர். **இக் கூற்று மிகமிகக் கொடியது? உண்மைக்கு மாறுப்பட்டது.** இன்று காண்கின்றோம். அறஞ்சாரா நெறியில் அளவு கடந்து பொருளீட்டியவர் அழகார்ந்த வியன் உந்தில் ஆர்ப்பரவுடன் செல்கின்றார். அறநெறி கோடாது வாழ்கின்றவர் அடக்கமாக நடக்கின்றார். **வியன் உந்தில் வீறு தோன்றச் செல்லுகின்றவர் புண்ணியம் செய்தவர் என்றும், கால் நோவ நடந்து செல்லுகின்றவர் கடும் பாவம் செய்தவர் என்றும் கழறுதல் பொருந்துமா? பொருந்தாது அன்றோ?** ஆகவே திருவள்ளுவர் அறத்தாறு இதுவென வேண்டா; சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை எனச் சினந்து உரைத்தார். இதன் உண்மைப் பொருள்; பல்லக்கில் ஏறியிருப்பவரையும் அதனைச் சுமந்து செல்பவரையும் காட்டி இதுதான் அறவழியென்று கூறற்க என்பதாகும். பிற்காலத்தார் அவ்வுண்மைப் பொருளை மறைத்து வேறு வகையாகக் கூறி விட்டனர். ஏனெனில் உண்மைப் பொருளை அறிந்த மாந்தர் பல்லக்கில் செல்லுபவரை வாளா விட்டுவிட மாட்டார் என்று அஞ்சியே ஆகும். உண்மைப் பொருளுணரின் பல்லக்கில் செல்லுபவரைக் கீழே இறக்கிப் பல்லக்கைச் சுக்கு நூறாக உடைத்துத் தள்ளி விடுவரன்றோ.

கொடுத்தல் நன்றுதான். ஆனால், ஆளறிந்து கொடுக்க வேண்டும். சிலருக்குக் கொடுத்தால்தான் **வீடுபேறு கிட்டும்.** வேறு சிலருக்குக் கொடுத்தால்· **நரகம் கிட்டும் என்றனர். கொடுத்தலால் வீடு அடைதல் போன்றே பெறுதலாலும் வீடு அடையலாம் என்ற கொள்கைப் பரப்பப்பட்டு வந்தது. ஆனால்,** பழந்தமிழர் **கொள்கையோ இதனின்றும் வேறுபட்டது.** ஈயென **இரத்தல் இழிந்தது;** ஈயேன் **என்றால் அதனினும் இழிந்ததாகும்; கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தது; கொள்ளேன் என்றால் அதனினும் உயர்ந்ததாகும். இவ்வாறு கூறி ஒழுகி வந்தனர் பழந்தமிழர்.** திருவள்ளுவர் இத் தமிழ்க் கொள்கையில் ஊறி முதிர்ந்தவர். ஆகவே அவர் கூறினார். **நல்லாறு எனினும் கொளல் தீது; மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று.** பிறரிடம் ஒன்றைப் பெறுவது சிறந்த வாழ்வு நெறியாகும். (யாசகம் புருட இலட்சணம்) என்று சிலர் கூறினாலும் **பிறரிடம் ஒன்றைக் கொள்ளுதல் கொடுங்குற்றமே. கொடுப்பதனால் வீடு கிட்டாது எனத் தெரிந்தாலும் கொடுத்தலே நல்ல செயலாகும்.**

வீடு (மோட்சம்) கிட்டாது என்றாலும் கொடு; வீடு கிட்டுமென்றாலும் வாங்காதே என்பது எத்தகைய புரட்சிக் கொள்கையாகும் என்பதை எண்ணுமின்!

வேள்விகளைச் செய்து ஆற்றலைப் பெறலாம்; அடைதற்கரியன வற்றை அடையலாம் என்ற கூற்றில் மயங்கி வேள்வியை அறியாத் தமிழ்நாட்டில் வேள்வி செய்தலைப் பெருங்கடனாகச் செய்தனர் சிலர். தமிழரசர்களில் சிலர் எளிதல் எதையும் பெறலாம் என்று எண்ணி வேள்விகளைச் செய்வதற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தனர்; பல வேள்விகளைச் செய்த அரசர்க்குப் பல்வேள்வி செய்தோன் என்ற பட்டமும் கொடுக்கப்பட்டது. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பதே சான்றாகும்.

அவ் வேள்விகளில் ஆடு மாடு குதிரைகளைக் கொன்றனர். மக்கள் நலன் அடைய மாக்களைக் கொல்லுதல் அறமாகுமா? பேரருளாளர் வள்ளுவர் தம் எதிர்ப்புக் குரலை எழுப்பினார். அரச சீற்றத்திற்கு ஆளாவோமே என்று அஞ்சினார் இலர். அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை நன்று என ஒங்கி முழங்கினார். வேள்விகளைச் செய்யாதே; வீணில் உயிரைக் கொல்லாதே என்பது வியத்தகுப் புரட்சி அன்றோ? வேந்தரை எதிர்ப்பது அக் காலத்தில் சாகும் தண்டனைக்கு ஆட்படுத்துமே!

மாந்தர்களில் பலர் மனத்தின்கண் மாசு கொண்டு புறத்தில் மாண்புடையார் போன்று நடித்துப் பொய்க் கோலம் பூண்டு வாழ்ந்து வருகின்றனர். வள்ளுவர் காலத்திலும் வாழ்ந்தனர். இவர்கள் பொது மக்களை ஏமாற்றித் தம் வலைக்குள் சிக்க வைத்துத் தாம் எண்ணியபடி ஆட்டி வைத்தனர். அவர்களால் பூசனையும் பொருளும் பூவையரும் பெற்றனர். அணிந்திருந்த வேடத்திற்கும் துணிந்திடும் செயலுக்கும் பொருத்தமின்றி ஒழுகி வந்தனர். வஞ்ச மனத்தினராய் கரவொழுக்கம் பூண்டு வாழ்வதைக் கண்டு அவர்களின் ஐம்பூதங்களும்கூட அகத்தே நகா நிற்கும். அக் காலத்தில் துறவிகட்கு மக்களிடையே நல்ல செல்வாக்கு இருந்தது. துறவிகள் கடவுளைவிட உயர்ந்தவராகக் கருதப்பட்டனர். உண்மைத் துறவிகள் மக்களுக்காக உயிர் வாழ்ந்ததனால் அத்தகைய மதிப்பை அவர்கள் பெற முடிந்தது. எங்கு மதிப்பும் மாண்பும் கிட்டுகின்றவோ அங்குக் கயவர்கள் புகுவர் அன்றோ? ஆதலின் துறவிகளின் கூட்டத்திலும் கயவர்கள் புகுந்தனர். துறவிகள் போல் உருக்கொண்டனர். அக்காலத் துறவிகளில் சிலர் தலைமயிரை நீளமாக வளர்த்துச் சடையாகப் பின்னி, முடியாகக் கொண்டிருந்தனர். சிலர் தலைமயிரைப் போக்கி மொட்டையாக இருந்தனர். உண்மைத் துறவிகள் தலைமயிரால் அழகு செய்து கொள்ள விரும்பிலர். தலைமயிரைப் பேணாது விடின் சடையாய் பின்னலுறுவது இயல்பு. இதனைப் பொருட்படுத்தாது வாழ்ந்தனர் சிலர். சடைமுடித் தொல்லையைத் தாங்க

இயலாதவர்கள் தலைமயிரைக் களைந்து கொண்டனர். இவர்களே மொட்டையாகக் காட்சி அளித்தவர்கள்.

கரந்துறை மாந்தர்கள் - துறவிகள் இவ்வாறு இருப்பதனால்தான் மதிப்புப் பெறுகின்றனர் என்று கருதினர். அவர்களில் சிலர் தலைமயிரைச் சடையாக வளர்த்தனர். சிலர் மழித்துக் கொண்டு மொட்டையாயினர். துறவிகள் போல் தோற்றம் கொண்டு நடித்தனால் பொது மக்கள் மயங்கி அவர்களைப் பூசித்துப் பொன்னும் பொருளும் அளித்துப் போற்றினர். அவர்களோ போலித் துறவிகள்; தவம் மறைந்து அல்லவை செய்தனர். பெற்றம் புலித்தோல் போர்த்திப் பசும் பயிரை மேய்வதுபோல் அஞ்சத்தகும் வடிவம் பெற்றுத் துறவிப் போல் காட்சி அளித்து நெஞ்சில் துறவாது படிற்றொழுக்கம் கொண்டிருந்தனர். திருவள்ளுவர் அவர்கள் வாழும் முறையைக் கண்டு வெறுப்புற்றார். இத் துறவிகளை அவர்களுடைய செல்வாக்கினைக் கண்டு அஞ்சாது எதிர்க்கத் தொடங்கினர். மன்னரினும் வலிமை வாய்ந்த அவர்களைக் கண்டு வள்ளுவர் அஞ்சினார் இலர். உலகம் - உயர்ந்தோர் - பழிக்கும் குற்றங்களை நீக்கி வாழ்ந்தால் அஃதே உயர்ந்தோர் ஆக்கும்; சடையை வளர்த்தலும் மொட்டையடித்தலும் எற்றுக்கு? என்று அவர்களை நோக்கி அறைகூவல் விடுத்தார். மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்துவிடின்.

மகளிர் உயர்வுக்காகப் போராட்டம் தொடங்கிய முதல் புரட்சியாளரும் வள்ளுவரே. பெண்களின் சமநிலைக்காக அவர் கூறியுள்ள கருத்துக்கள் இன்றும் என்றும் பொன்போலப் போற்றத் தக்கன. மனைவியை வாழ்க்கைத் துணை என முதல் முதலாக அழைத்தவரும் அவரே. கணவனும் மனைவியும் நண்பர் போன்று வாழ்தல் வேண்டும் என்று கட்டுரைத்தவரும் அவரே. ஆண்மகனுடைய ஒழுக்கத்திற்குப் பெண் மகளை எடுத்துக்காட்டாகக் கூறியவரும் இப்பெரியாரே. ஒருமை மகளிரே போல் பெருமையும் தன்மைத்தான் கொண்டொழுகின் உண்டு என்பதை நோக்குக. இல்லவள் மாண்பானால் இல்லது என் என்று எல்லாம் மனைவி யால் தான் என மகளிரை உயர்த்திக் கூறினார். இவ்வாறு மகளிரை உயர்வுப் படுத்தும் வள்ளுவர் மகளிரைச் சிறுமைப்படுத்தினால் வாளாயிருப்பாரா?

சிலர் தம் மனைவியின்பால் ஐயங்கொண்டு தாம் இல்லாத காலத்தில் கெட்டுவிடுவாள் என்று அஞ்சி, தம் இனிய நல்வாழ்வுத் துணையைக் காவலுக்கு ஆட்படுத்தினர். வீட்டினுள் பூட்டி வைத்தனர். மகளிர் விரும்பின் எக் காவலையும் கடந்து எதனையும் செய்யும் ஆற்றலுடையவர். இதனை அறியாது ஏன் அவர்களைச் சிறுமைப் படுத்திச் சிறையிட வேண்டும்? அவர்கள் உள்ளத்தை அறிந்து உள்ளம் ஒன்றுபட வாழ முற்படின் அவர்களே தம்மைக் காத்துக் கொள்வர். ஆதலின் திருவள்ளுவர் ஆடவரை நோக்கிச் சிறைகாக்கும் காப்பு என்ன செய்யும்? மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை என்று கழறினார்.

மக்கட் பேறு எற்றுக்கு என்ற வினாவுக்கு விடையாகப் பரிமேலழகர் கூறுகின்றார்; புதல்வரைப் பெறுதல். அஃதாவது இரு பிறப்பாளர் மூவராலும் இயல்பாக இறுக்கப்படும். கடன் மூன்றனுள் முனிவர் கடன் கேள்வியானும், தேவர் கடன் வேள்வியானும் தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லாது இறுக்கப்படாமையின், அக் கடன் இறுத்தற்பொருட்டு நன்மக்களைப் பெறுதல். ஆகவே மக்களின் கடன் தென்புலத்தார்க்குக் கடன் செலுத்துதல் ஆகும் என்று நம்பி வந்தனர் என்று தெரிகின்றது. தென்புலத்தார் என்பவர் பிதிரர் ஆவார். படைப்புக் காலத்து அயனால் படைக்கப்பட்டது கடவுட் சாதி. அவர்க்கிடம் தென்திசை யாதலின் தென்புலத்தார் என்றார். இவ்வாறு கூறுபவர் பரிமேலழகர் பிதிரர் என்பார் இறந்து போன முன்னோர் அல்லர் என்பது அவர் கருத்து. ஆனால் இன்று பெற்றோர் இறந்து போனால் அவரை நினைந்து அவர்தாம் பிதிரர் என்று கருதி அவர்தம் மக்கள் அவர் இறந்த நாளில் புரோகிதரை அழைத்துப் பொன்னும் பொருளும் கொடுக்கின்றனர். இதனை, திதி, திவசம், சிரார்த்தம் என்றெல்லாம் அழைப்பர். மக்கள் தம் தந்தைக்குச் செய்யும் கடன் இதுதான் என்று இன்றும் பலர் கருதுகின்றனர்.

ஆனால், வள்ளுவரோ இதனை ஏற்றுக் கொண்டார் இலர். வெளிப்படையாகவே மறுத்துள்ளார். மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னும் சொல் என்று முழங்கினார். மகன் தந்தைக்குச் செய்யும் கடனாவது எல்லா வகையாலும் சிறந்து விளங்கும் இவனைப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன தவம் செய்தானோ? என்று உலகத்தார் சொல்லும் சொல்லை உண்டாக்குதல் ஆகும் என்பது இக் காலத்திற்கும் எக் காலத்திற்கும் பொருந்துமன்றோ?

இவ்வாறு பல புரட்சிகளை திருவள்ளுவர் ஆற்றியுள்ளார். ஊன் உண்ணுதலை எதிர்த்தார். கள் உண்ணுதலைக் கடிந்தார். கவறாடுதலை இகழ்ந்தார். இவர் செய்துள்ள புரட்சிகளை விரிப்பின் பெருகும். இவரைத் தமிழகத்தின் - ஏன் உலகத்தின் முதற் புரட்சியாளர் என்று வாயார வாழ்த்தி நெஞ்சார நினைந்து அவர் வழி முறைகளில் வாழ்ந்து அவருக்கு நன்றி செலுத்துவோமாக!

- *முனைவர் சி. இலக்குவனார்*



## புலவர். என். வி. கலைமணி எம். ஏ

## தமிழ்ப்பணியை பாராட்டி

## பெருங்கவிக்கோ. வா. மு. சேதுராமன்

## வழங்கிய வாழ்த்துப்பா



நக்கீரன் வாழ்கின்றான் நம்காலம் என்னுவகை
தக்க கலைமணி தாய்த்தமிழ் – மிக்கபுகழ்
வீரன், விவேகன், வினைமாட்சி மேலோன்நம்
தீரனை வாழ்த்துதமிழ்ச் சீர் !

அந்தநாள் தொட்டிந்த நாள்வரையும் தளரா
செந்தமிழ்த் தொண்டைத்தான் சிங்கம்போல் – எந்த ஒரு
பந்தசொந்தத் திற்கும் பணியாமல் செய்துவரும்
விந்தைக்கலை மணிவேந்து வாழி ! வாழி ! வாழி !

– வா. மு. சேதுராமன்
20. 03. 2006